

3

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்



கி.வா.ஜ.

கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

பாகம் – 3

கி.வா. ஜகந்நாதன்



அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிவு
அல்லயன்ஸ்
முதற் பதிப்பு : 2003

மொத்த பக்கங்கள் (10+362) = 372

விலை: ரூ. 120.00

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி: 2494 1314

Laser Typeset by – **Print Point Graphics**, Chennai – 20.
Printed at – **Kay Em Packaging Industries**, Chennai – 14.

பதிப்புரை

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய எழுத்தாளர்களுள் ஒருவர். எங்கள் நிறுவனர் வி. குப்புஸ்வாமி ஐயருக்கு, மூத்த குமாரர் போல் பழகி வந்தவர். அவருடைய நூல்கள் நமது நிறுவனத்தின் மூலம் மூன்று தலைமுறையினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இவர் தமிழ் இலக்கியத்தில் கரை கடந்தவர்; ஆன்மிகத்தில் பரம்பொருளைக் கண்ட ஞானி. எனவே இவரை 'ஞானப் புலவர்' என்று கூறினால், அது மிகையாகாது. இப்புவியில் அவ்வப்போது இப்படிப் பல 'ஞானப்புலவர்'கள் தோன்றிக் கொண்டே இருப்பதால்தான், நமது மொழிச் செல்வமும், ஞானச் செல்வமும், இறைவனது கட்டளைப்படி காப்பாற்றப்பட்டு வருகின்றது எனலாம். இப்போதும் நம்மிடையே திரு. சுகி சிவம், திரு. பி.என். பரசுராமன் போன்ற பல 'ஞானப்புலவர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் சாதாரண மனித சக்தியை மீறி, இறைவன் திருவருளால், ஏராளமான சொற்பொழிவுகளையும்; நூல் களையும் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்த நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். இவர்களுடைய பேச்சுக் களையும், எழுத்துக்களையும் நாம் பின்பற்றி வந்தாலே போதும். அதுதான் அவர்கள் எல்லாம் பாமரராகிய நமக்குக் காட்டும் வழி.

சற்றேறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு 'ஞானப் புலவர்' இருந்தார். அவர்தான் அருணகிரிநாதர். இறைவனை நேரில் தரிசித்து அருளைப் பெற்றவர். இவர் அருளிய நூல்கள் எல்லாம் நமக்கு, பரப்பிரம்மத்தை உணரவைக்கும் வழிகாட்டிகள். இப்படி இவர் அருளிய நூல்களுள் 'கந்தர் அலங்கார'த்திற்கு விரிவான, அழகான, தெளிவான – தொடர் சொற்பொழிவை, ஒரு சமயம் கி.வா.ஜ. அவர்கள் நிகழ்த்தி னார்கள். அந்தச் சொற்பொழிவின் தொகுப்புதான் இந்நூல். இதைப் பற்றி அவரே, தனது முன்னுரையில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

1986 வாக்கில் ஒரு நாள், அடியேன், கி.வா.ஜ. அவர்களுடன் 'புரூஃப்' பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னிடம், ''நீ

என்னுடைய அலங்காரப் புத்தகங்களைப் போடுகிறாயா?'' என்று கேட்டார். ஒரு தெய்வப் புலவர் எழுதியதை மற்றொரு தெய்வப் புலவர் விளக்கமாகக் கூறிய நூலை 'வெளியிடுகிறாயா?' என்று கேட்கப்பட்ட வுடன் அதிர்ச்சி அடைந்தேன்; இவ்வளவு பெரிய பாக்கியம் நமக்கு உள்ளதா? என்று எண்ணி வியந்தேன். அன்று அவர் போட்ட பிள்ளையார் சுழி இன்றும் தொடர்ந்துகொண்டே போகிறது. எல்லாம் அவன் அருள்! 2005-ம் வருடம் கி.வா.ஜ. அவர்களின் நூற்றாண்டு வருகிறது. இந்தச் சமயத்தில் அவருடைய அனைத்து நூல்களையும், ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட, இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நல்லதையே எண்ணி னால், நல்லவைகளே நடைபெறும் என்பது ஞான வாக்கு. அதேபோல, இப்படிப்பட்ட நல்ல நூல்களை வெளியிட எண்ணி, அதன்படி நாங்கள் நடந்து வருவதால், இதைப் படிக்கும் வாசகர்களுக்கும் நல்லவைகளே சித்தி பெறும்.

இந்நூல் இப்போது நமது நிறுவனத்தின் மூலம் ஒரே தொகுப்பாக (6 பாகங்களாக) முதல் பதிப்பாக வெளிவந்தாலும், 1956 வாக்கிலிருந்து சிறுசிறு நூல்களாக, அவ்வப்போது வெளியிடப்பட்டதுதான்.

வாசகர்களே! கி.வா.ஜ. அவர்களின் ஞானப் பெருக்கையும், அவர் கையாண்ட தமிழ் அழகையும் நீங்களே படித்து ரஸியுங்கள்; சுவையுங்கள்; போற்றிப் பாதுகாத்து பயன்பெறுங்கள்.

– 'அல்லயன்ஸ்' **ஸ்ரீநிவாஸன்**

உள்ளுறை

1. அடியார்க்கு நல்ல பெருமாள்

இரண்டு ஆறுகள் (66 – 81)

'வேல் மறவேன்' (82 – 98)

நாளும் கோளும் (99 – 116)

2. மயில் ஏறிய மாணிக்கம்

மயில் ஏறிய மாணிக்கம் (125 – 146)

அழிந்த எழுத்து (147 – 163)

அறமும் இன்பமும் (164 – 175)

வணங்காத் தலை (176 – 195)

குவியாக் கரங்கள் (196 – 216)

இந்த வீடும் அந்த வீடும் (217 – 233)

3. தனி வீடு

தனி வீடு (241 – 255)

இருவகை விளையாட்டு (256 - 276)

ஆறுமுக அமுதம் (277 - 310)

வண்டும் மலரும் (311 - 332)

தொண்டர் பெருமை (333 – 360)

முகவுரை

கந்தர் அலங்கார விரிவுரை நூல் வரிசையில் இது ஏழாவது. இதில் 33–ஆம் பாடல் முதல் 38–ஆம் பாடல் வரையில் உள்ள ஆறு பாடல்கள் விளக்கம் பெறுகின்றன. முதற் பாடல் முருகனுடைய அடியார்கள் இம்மை மறுமைப் பயனை அடைவார்கள் என்பதைச் சொல்கிறது. இரண்டாவது பாடல் காம நோயின் வன்மையைத் தெரிவிக்கிறது. மூன்றாவது பக்தித் துறையைப் பற்றிக் கூறுகிறது. அடுத்தது செல்வம் நிலை யாமையையும் இன்ப துன்பங்களின் இயல்பையும் அறிவிக்கிறது. ஐந்தாவது பாடல் எந்த நிலையிலும் முருகனுடைய வேலை நினைக்கும் ஆற்றலைப்பற்றிக் கூறுகிறது. ஆறாவது பாடல் முருகன் அருள் இருந்தால் நாளாலும் கோளாலும் வினையினாலும் கூற்றுவனாலும் வரும் துன்பங்கள் இல்லை என்று தைரியம் அளிக்கிறது.

வெற்றிவேற் பெருமாளும், அடியார்க்கு நல்ல பெருமாளும், அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாளும், பொட்டாக வெற்பைப் பொருத கந்தனும், வெஞ்சூரனைக் குத்தியவனும், அமராவதி கொண்ட கொற்றவனும், காவிரிச் செங்கோடனும், குன்றம் எட்டும் கிழித்தோடும் வேலுடையவனும், சூரனைக் கொன்ற ராவுத்தனும், குமரேசனும், தாளில் சிலம்பும் சதங்கையும் தண்டையும் அணிந்தவனும், சண்முகனும், தோளில் கடம்பு புனைந்தவனும் ஆகிய முருகனை இப்பாடல்களிலே காணுகிறோம்.

பிறவி இறுதி இல்லாமல் தொடர்ந்து வருவதையும், வறுமையானது வாழ்வு முழுவதையும் கெடுப்பதையும், மனம் கட்டுக்கு அடங்காமல் செல்வதையும், அதற்கு ஞானம் தட்டுப்படாமல் இருப்பதையும், வேல் போன்ற விழியையுடைய மகளிரால் மயல் உண்டாவதையும், அந்த மயலில் மனம்

கட்டுண்டு அல்லற்படுவதையும் அருணகிரியார் சொல்கிறார். பக்தித் துறை வழியே ஆனந்த வாரியில் இழிந்தால் புத்தி தெளியும் என்றும், செல்வம் ஆற்றில் வரும் பெருக்குப் போன்றது என்றும், வாழ்க்கைக்கு இன்ப துன்பங்கள் இரு கரைகள் போல் உள்ளன என்றும், காவிரி கரிக்கோட்டு முத்தைச் சுழித்து ஓடு கிறது என்றும், இறைவனுடைய கோலத்தையும் விளையாடலை யும் சொல்லாதவர்களுக்கு முத்தியின் பலன் கிட்டாது என்றும் அறிவுறுத்துகிறார். மகளிர் கண்டுண்ட சொல்லியர் என்பதும், அவர் மயலாகிய கள் தன்னை உண்டவரை மயங்கச் செய்யும் என்பதும், இறைவனுடைய தரிசனம் பெற்றவர்களுக்கு நாளாலும் வினையாலும் கோளாலும் கூற்றுவனாலும் வரும் துன்பங்களால் அச்சம் உண்டாகாது என்பதும் இப் பாடல்களில் வருகின்றன.

படர்க்கையாக இரண்டு பாடல்களும் (1, 6), முருகனை முன்னிலைப் படுத்திய பாடல்கள் மூன்றும் (2, 3, 5), நெஞ்சை விளித்துக் கூறும் பாடல் ஒன்றும் (4) இப்புத்தகத்தில் உள்ளன.


இவற்றுக்கு விளக்கம் கூறும்போது இடையிடையே வரும் கருத்தைத் தெளிவிக்கப் பிற நூல் மேற்கோள்களைச் சொல் கிறேன். அவற்றையும் ஓரளவு விளக்க வேண்டி நேர்கிறது. அந்த முறையில் பாரதி பாடல், திருவாசகம், தாயுமானவர் பாடல், சுந்தரர் தேவாரம், திருக்குறள், பெரிய புராணம், கம்ப ராமாயணம் முதலிய நூல்களிலிருந்து சில செய்யுட்களின் விளக்கங்களும் இதில் இடம் பெறுகின்றன. பழங் கதைகள், கற்பனைக் கதைகள், உவமைகள் ஆகியவை கருத்தை விளக்கச் சிறந்த கருவிகளாக இருக்கின்றன. நுட்பமான கருத்தையும் ஏற்புடைய உவமையை எடுத்துக் கூறித் தெளிவாக்கி விடலாமென்பது அநுபவத்தில் யான் கண்ட உண்மை. ஆதலின் இச்சொற்பொழிவுகளில் பல பல உவமைகள் இடையிடையே விரவியிருக்கும்.

இதற்கு முன் வெளியான புத்தகங்களைப் படித்த சில அன்பர்கள் அவற்றைப் பாராட்டி எழுதி வருகிறார்கள். என் நூல்களை நன்கு படித்து அவற்றிலுள்ள நுட்பமான பகுதிகளைப் பாராட்டி அடிக்கடி எழுதும் ஒரு பேரன்பர் அணிமையில்

இறைவன் திருவடியை அடைந்தார். **கஜாரணியத் திராவிடக் கவிமணி வே. முத்துசாமி ஐயர், எம்.ஏ., எல்.டி.,** என்னும் பெரியார் என்னிடம் பேரன்பு பூண்டு யான் எழுதுவதையெல்லாம் படித்து இன்புற்றுத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து வந்தார். அவர் சென்ற ஆகஸ்டு மாதம் 11ஆம் தேதி புகழுடம்பு பெற்றார். இந்தப் புத்தகம் வெளிவந்து அவர் பார்ப்பதற்கில்லையே என்ற துயரால் இதனை எழுதலானேன்.

இந்த நூல் வரிசை உருவாவதற்குத் துணை நிற்கும் யாவருக்கும் என் நன்றி உரியது.

கி.வா. ஜகந்நாதன்
20.09.1957




'தமிழ் அறிஞர்'

பி.ஸ்ரீ.

எழுதிய வேறு நூல்கள்

1. ஆறுபடை வீடுகள் (6 தொகுதிகள்)
2. ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்)
3. திவ்யப் பிரபந்த ஸாரம்
4. அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு
5. கந்தபுராணக் கதைகள்
6. வேதப் பொருளில் பூதக் கண்ணாடி
7. நவராத்திரியின் கதைகள்
8. ராஜரிஷி விசுவாமித்திரர்
9. தசாவதாரக் கதைகள்
10. துள்ளித் திரிகின்ற காலத்திலே
11. மஹாபாரதக் கதைகள்
12. ஔவையார்
13. மூன்று தீபங்கள்
14. லக்ஷ்மி வரலாறும் வழிபாடும்
15. திருப்பாவை
16. திருவெம்பாவை
17. கண்ணன் கதை
18. காதம்பரி
19. சிவநேசச் செல்வர்கள் I & II
20. தாயுமானவர்
21. சுவையான சம்பவங்கள் 129
22. நாரதர் கதை
23. இந்து சமயக் கதைகள் I & II

இன்னும் சில





அடியார்க்கு நல்ல பெருமாள்

கோயில் என்றும் குளம் என்றும் அலைந்து, ருத்திராட்சம் என்றும் திருநீறு என்றும் அணிந்து, பஞ்சாட்சரம் என்றும் ஷடாட்சரம் என்றும் ஜபம் செய்து பக்தி பண்ணி வாழும் மக்களைப் பார்த்து எள்ளி நகையாடும் அறிவாளிகள் பலர் இப்பொழுது மலிந்துவிட்டார்கள். கலைஞர்களாக இருந்தவர்கள் மாறித் தொழிலாளர்களாகி வருகிறார்கள். கலைஞன் தான் செய்யும் காரியத்தில் ஈடுபட்டு, தன்னை மறந்து, அக்காரியத்தால் கிடைக்கும் கூலியை வேலைசெய்யும்போது மறந்து நிற்கிறான். தொழிலாளி தன் தொழிலைச் செய்யும்போது பின்பு அதனால் கிடைக்கின்ற பயனில் எப்போதும் நினைவு வைத்தே ஈடுபடு கிறான். இந்தத் தொழிலாளி மனப்பான்மை வளர்ந்து விட்ட தனால் நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் அப்போதைக்கப் போது பலன் தரக்கூடியனவாக இருக்க வேண்டுமென்று நினைக் கிறோம்.

வையமும் வானமும்

தெய்வம் இருக்கிறதென்று யாராவது சொன்னால் அதை நம்ப மாட்டோம் என்று சொல்கிறோம். ''அது கைமேல் பலன் தருகிறது அல்லவே!'' என்று நினைப்பு. மாணவர்கள் இந்த முறையில் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ''வையத்தைப் பாராமல் வானத்தைப் பார்க்கிறீர்களே!'' என்று பக்தர்களைப் பார்த்துச் சொல்ல அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பெரு மக்களும் இருக்கிறார்கள். ஆண்டவனை நினைக்கிறவர்கள், ''வையம் இன்னது, வானம் இன்னது'' என்று தெரியாமல் வாழ்பவர்களென்று இவர்கள் நையாண்டி செய்கிறார்கள். வையத்தையும் வானத்தையும் ஒருங்கே நினைக்கின்ற சமயம் நம்முடையது என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள். வையத்தை நன்றாக உணர்ந்து கொண்டு வானத்தையும் எட்டிப் பிடிக்க முயன்றவர்கள் நம் நாட்டுப் பெருமக்கள். வையம்

இன்னது என்றே தெரியாமல், வையத்தில் வாழ்வது எப்படி என்பதும் தெரியாமல் வாழ்கின்ற இக்கால மக்களுக்கு வானத்தைப் பற்றி எங்கே நினைப்பு வரும்?

வையத்தில் வாழும் வகை இன்னது என்றே தெரியாமல் இவர்கள் என்ன என்னவோ காரியங்களைச் செய்து துன்பப் படுகிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கட்சி; ஒவ்வொரு நாளும் ஒரு கட்சி; ஓர் ஊரில் நூறு கட்சிகள்! பிளவும் வேற்றுமை யும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன. எந்த கொள்கையை யும் பத்து ஆண்டுக்குச் சேர்ந்தால் போலக் கடைப்பிடித்த அரசியல் தலைவர்கள் மிக அருமை. அரசியல் உணர்வு மலிந்து வருகின்ற இக்காலத்தில் சமயநெறிக் கொள்கைகளைப் பலர் எள்ளுகிறார்கள். வான வாழ்வை நினைப்பவர்கள் வைய வாழ்வைத் தாழ்வாகக் கருதுகிறார்களென்றும், வான வாழ்வை மறந்தவனே வையத்தில் நன்றாக வாழ முடியுமென்றும் எண்ணும் தவறான மனப்பான்மை அதிகமாக இருக்கிறது.

வேற்றுமையில் ஒற்றுமை

வையகம் என்பது ஒரு தனி மனிதன் மாத்திரம் வாழும் இடம் அன்று. ஒரு தனி மனுதனுடைய வள வாழ்வு உலகத்தின் வள வாழ்வு என்று கருத முடியாது. தனி மனிதனும் உடம்பை வைத்துக் கொண்டுதான் வாழ்கிறான். அந்த உடம்பிலும் பல உறுப்புக்கள் இருக்கின்றன. பூமியை நோக்கியிருக்கின்ற காலும், வானை நோக்கி இருக்கின்ற தலையும், பின்னோக்கி இருக்கின்ற முதுகும், முன்நோக்கி இருக்கின்ற மார்பும் அவன் உடம்பி லேயே உள்ளன. ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதாகவும், ஒவ்வொரு திசையை நோக்குவதாகவும் இருக் கின்றன. "எல்லாக் காரியத்தையும் நான்தானே செய்கிறேன்?" என்று கை, அவன் உடம்பிலுள்ள காலை ஒடித்துவிட்டால் அவன் நன்றாக வாழ்வானா? உலகத்தில் பல கோடி மக்கள் இருக்கிறார்கள். அவரவர்களுடைய செயல்கள் வேறுபடுகின்றன. வைய வாழ்வு நன்றாக இருக்க வேண்டுமென்றால் அத்தனை கோடி மக்களின் வாழ்வும் நன்றாக இருக்க வேண்டும். ஒரு சமுதாயத்தில் பத்திரிகை ஆசிரியன் இருக்கிறான்; பள்ளி ஆசிரியன் இருக்கிறான்; தொழிலாளி இருக்கிறான்; முதலாளி இருக்கிறான்;

பலவகைப்பட்ட தொழில், பலவகைப்பட்ட ஆசாரங்கள், பலவகைப் பட்ட பழக்கங்கள் உடைய மக்கள் சேர்ந்ததே சமுதாயம். உடம்பிலுள்ள உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருக்கின்றன என்றாலும், அவை அவை அவ்வவற்றுக்குரிய செயலைத் திறம்படச் செய்து நன்றாக இருந்தால்தான் அவ்வுறுப்புக்களை உடைய மனிதன் நன்றாக வாழ்வான். அதைப்போல ஒருவருக்கொருவர் வேறுபடும் மக்கள் ஒரு சமுதாயத்தில் இருந்தாலும், அந்தச் சமுதாயம் நன்றாக வாழ அவரவர்கள் அவரவர்களுக்கு உரிய காரியங்களைத் திறம்படச் செய்ய வேண்டும். ''வேற்றுமையில் ஒற்றுமை'' (Unity in diversity) என்பது இதுதான். வேறுபட்ட இவர்கள் எல்லோருடைய காரியங்களிலும் கட்டுப்பாடும் ஒற்றுமையும் நிலவினால்தான் சமுதாயம் நன்றாக இருக்கும்; வைய வாழ்வு இனிக்கும்.

வைய வாழ்வு நன்றாக அமைய வேண்டுமானால் நம் உடம்பு நன்றாக இருப்பது போதுமா? நம்மைச் சார்ந்தவர்களும் நன்றாக இருக்கவேண்டும். ''குழந்தைக்கு உடம்பு சரியில்லை; மனைவிக்கு நோய் வந்திருக்கிறது'' என்றால் நம்மால் மகிழ்ச்சியாக வாழ முடியாது. ஆகவே நம்மைச் சுற்றிச் சூழ இருக்கிறவர்களும் நன்றாக வாழ்ந்தால்தான் நாமும் இன்பமாக இருக்க முடியும். இதுவரையில் நாம் ஒருவாறு உணர்கிறோம். இந்த முறையில் மேலும் அன்புடன் சிந்திப்போமானால் நாம் வாழ்கின்ற ஊர் நன்றாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் வரும். பிறகு அந்த ஊர் உள்ள நாடு, அந்த நாடு திகழ்கின்ற தேசம், அந்தத் தேசம் அடங்கிய உலகம் எல்லாம் நன்றாக வாழவேண்டுமென்ற எண்ணம் வரும்; இவ்வுலகத்தில் வசிக்கும் உயிர்கள் எல்லாம் நன்றாக வாழவேண்டுமென்ற எண்ணமும் வரும். இப்படித் தன்னில் இருந்து ஆரம்பித்து, விரிந்து பரந்த உலகம் முழுவதும் நன்றாக வாழ வேண்டுமென்ற எண்ணம் வரவேண்டுமானால், நம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று முதலில் தோன்றிய அன்பு வளர்ந்து வளர்ந்து முதிரவேண்டும்.

வேறுபாடற்ற காட்சி

அகன்ற உலகத்தை ஒரே சமுதாயமாக, வேறுபாடு இல்லாத சமுதாயமாகக் கண்ட ஞானிகள் பலர் இருந்திருக்கிறார்கள் நம்

நாட்டில். ''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே'' என்று அன்பினால் குழைந்து பாடியிருக்கிறார் தாயுமானவர். அவருக்கு எல்லாம் இறை மயமாகத் தோன்றின.

''காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெ லாம்நாம் அன்றி – வேறில்லை
நோக்க நோக்கக்களி யாட்டம்''

என்று பாடுகிறார் பாரதியார். பாரதியார் கண்ட வேறுபாடற்ற சமுதாயத்தில் காக்கை குருவி ஆகிய சிற்றுயிர்கள் மாத்திரம் இடம் பெறவில்லை. உயிர் அற்ற ஜடப் பொருள்களான மலையும், கடலும்கூட அவரது கூட்டத்தோடு சேர்ந்துவிடுகின்றன. ஒன்றுக்கு ஒன்று வேறுபடுத்திப் பார்த்துத் துன்புறுத்தி, தாமும் துன்புற்று வாழ்கின்ற மக்களுக்கு அத்தகைய மனப்பான்மை வரவேண்டுமானால் கடவுள் உணர்வு வரவேண்டும்.

உயிருக்கு உயிர்

உடம்பில் உறுப்புக்கள் எல்லாம் சேர்ந்திருந்தால் அது பயன் உடையதாகும் என்று சொல்ல முடியாது. அந்த உறுப்புக்கள் எல்லாம் கட்டுப்பட்டு, ஒற்றுமையாக ஒரு காரியத்தைச் செய்யும் படி செய்யும் உயிர் அந்த உடம்பில் இருக்கவேண்டும். உயிர் இல்லாத உடம்பிலும் உறுப்புக்கள் இருக்கின்றன; ஆனால் அவற்றால் பயன் இல்லை. உறுப்புக்களை இயக்க உடம்பில் உயிர் இருக்க வேண்டும். அதுபோலவே, உயிர் இயங்குவதற்கும், உயிருக்கு உயிராக ஒன்று இருக்க வேண்டும் அல்லவா? அதைத் தான் பரமாத்மா, கடவுள் என்று சொல்கிறார்கள். கடவுள் என்ற புள்ளியை மையமாகக் கொண்டு விரிகின்ற சமுதாய வட்டத்தில் எல்லா உயிர்களும் உள்ளன. எல்லா உயிர்களையும் அடக்கும் வட்டத்தின் மையப் புள்ளியாகிய ஆண்டவனை நோக்கிச் செல் கின்ற உயிர்கள் வேறுபாடு அற்று ஓர் இடத்தில் வந்து நிற்கும்.

சூழ்நிலையும் கோயிலும்

இப்படி எல்லா உயிர்களுக்கும் மையமாக இருக்கிற ஆண்ட வனைப் புராணங்கள், சிவலோகவாசி என்றும், வைகுண்டவாசி என்றும் உரைக்கின்றன. நமக்கு எட்டாத இடங்கள் அவை.

அவ்விடங்களில் மட்டும் இருக்கிறான் என்று சொல்வதில்லை. அவன் எங்கும் இருக்கிறான் என்றும் சொல்கின்றன.

நமக்குச் சிவலோகத்தில் அவன் இருப்பதும் தெரியாது; எங்கும் பரந்திருப்பதும் தெரியாது. ஆயினும் அவன் நினைவு வரவேண்டும் என்பதற்காகக் கோயிலை அமைத்திருக்கிறார்கள். கோயிலிலேதான் அவனை நினைக்க வேண்டும் என்பது இல்லை. மடைப்பள்ளி என்றால் உணவு நினைவு வருகிறது. மடைப்பள்ளி அல்லாத இடங்களில் உணவு நினைவு வருவதில்லையா? படிப்பு அறைக்குள் நுழைகிறவன் அங்கே படுத்துத் தூங்க முடியாதா? முடியும். இருந்தாலும் படிப்பு அறைக்குள் படிப்பதற்கு வேண்டிய புத்தகம், விளக்கு, மேஜை, நாற்காலி முதலிய எல்லா வசதிகளும் இருப்பதாலும் அவ்வறைக்குள் பெரும்பாலான நேரம் படிப்பி லேயே கழிவதாலும் அவ்வறைக்குப் படிப்பறை எனப் பெயர் வைத்தார்கள். அவ்வறையிலுள்ள சூழ்நிலையே நம்மைப் படிக்கத் தூண்டுகிறது. கோயில்கள் அத்தகையவை. கோயில்களில் யாரும் அக்கிரமங்கள் செய்வதில்லை என்று சொல்ல இயலாது. கோயி லுக்குப் போகின்ற பெரும்பாலனவர்களுக்கு அங்கே ஆண்டவனை நினைக்கத்தக்க சூழ்நிலை இருக்கிறது. ஆலயத்திற்கு போகும் போதே அகண்ட வியாபியாய் இருக்கும் இறைவனுடைய நினைப்பு உண்டாகிறது.

உள்ளும் புறம்பும்

துன்பத்தில் தவிப்பவனுக்கு, துன்பத்தில் ஆழ்ந்த வேறு ஒருவன் எப்படி உதவி செய்ய முடியும்? சிறையில் அடை பட்டிருக்கிறவனை, அவனைப் போலவே சிறையில் அடை பட்டிருக்கிற வேறு ஒருவன் எப்படி விடுதலை செய்ய முடியும்? சிறையில் அடைபடாது தனித்து வெளியில் இருக்கும் ஒருவன் தான் பூட்டைத் திறந்து வெளிவிட முடியும். பிரபஞ்சச் சேற்றுக்குள் அகப்பட்டிருக்கும் உயிர்களைக் காப்பாற்ற, பிரபஞ்சச் சேற்றுக் குள்ளேயே கிடக்கும் மற்றோர் உயிரால் முடியாது.

ஆதலால், ''நம்மைக் காப்பாற்றும் ஆண்டவன் நம்மிலும் அப்பாற்பட்டு இருக்கிறான். இந்த பிரபஞ்ச எல்லையைக் கடந்தவனாக இருக்கிறான்'' எனச் சொன்னார்கள், நம் பெரி யோர்கள். அப்பாற்பட்ட நிலையில் இருக்கும். ஆண்டவனைப்

பக்தி பண்ணி அன்பு செய்து, பக்தி முறுகிய நிலையில் உலகி லுள்ள எல்லாப் பொருளையும் ஆண்டவனாகவே கண்டார்கள். தங்களுக்குள்ளேயே அந்தர்யாமியாய் இருக்கும் நிலையையும் உணர்ந்தார்கள்.

நமக்குள் இறைவன் இருக்கிறான் என்றாலும், நமக்கு அதில் நம்பிக்கை இல்லை. இறைவன் நமக்குப் புறம்பாக இருக்கிறான் என்றால், ''இருக்கலாம்'' என்ற நம்பிக்கை ஓரளவு வருகிறது. கைலையங்கிரியில் இறைவன் இருக்கிறான் என்றனர் பெரியோர். அவன் சர்வ வியாபியாய் இருக்கிறான், அந்தர்யாமியாய் இருக் கிறான் என்றும் கூறினார்கள்.

''எல்லாப் பொருளினூடும் அவன் இருக்கிறான். அவனுள் எல்லாப் பொருளும் அடங்கியிருக்கின்றன'' என்றால் அது எப்படி என்ற ஐயம் உண்டாகிறது.

''இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய.''

இது நற்றிணையின் கடவுள் வாழ்த்தில் வருகிறது. உலகிலுள்ள பலபல உருவங்களினூடே இறைவன் உறைந்து, ''இயன்ற எல்லாம் பயின்று'' நிற்கிறான். இந்த நிலையை அந்தர்யாமித்துவம் என்பர். அதுமாத்திரம் அல்ல;

''அகத்து அடக்கி.''

அவற்றை எல்லாம் அவன் தனக்குள் அடக்கியிருக்கிறானாம். அந்த நிலை சர்வ வியாபக நிலை. இந்த இரண்டு நிலையும் எப்படி ஒருவனிடத்தில் அமையும்?

ஒரு பெண் குடத்தைக் குளத்திற்குள் போடுகிறாள். குடம் முழுவதும் நீர் நிரம்புகிறது. குடம் நீருக்குள் இருப்பதனால் குடத்திற்குள்ளும் நீர் இருக்கிறது; அந்த நீர் குடத்தைத் தனக்குள்ளே அடக்கியும் இருக்கிறது. இறைவனும் அவ்வாறே இயன்ற எல்லா வற்றிலும் பயின்று உறைகிறான்; எல்லாவற்றையும் தன் அகத்தே அடக்கியும் வைத்திருக்கிறான்.

எம்பெருமானைச் சிவலோகத்தில் இருக்கும் நிலையிலும், வையம் முழுவதும் வியாபித்து இருக்கிற நிலையிலும், தன் அகத்தே உறையும் நிலையிலும் ஞானிகள் கண்டு ஆனந்தப் பட்டார்கள்.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!"

என்று பொருள் அத்தனையும் இறைவனாகவே பார்த்தனர்.

நாம் ஒரு பொருளைப் பார்க்கிறோம். அதைப் பொருளாகவே பார்க்கிறோமே யொழிய இறைவனாகப் பார்க்கும் ஆற்றல் நமக்கும் இல்லை. நமக்குள்ளேயே அந்தர்யாமியாய் இருக்கும் இறைவனைப் பார்க்கும் ஆற்றலும் நமக்கு இல்லை. இறைவனைப் பார்ப்பது இருக்கட்டும். நம் உடம்புக்குள்ளே ஏதாவது நோய் வந்தால் அதைப் பார்க்கக்கூடிய ஆற்றலும் நமக்கு இல்லை. உள்ளத்துக்குள்ளே உள்ள கருத்தைக் காட்ட அமெரிக்காவில் கருவி கண்டுபிடித்திருக்கிறார்களாம். அங்கே உறையும் இறைவனைக் காண ஏதேனும் கண்டுபிடித்தால் நன்றாக இருக்கும். ஆனால் அது விஞ்ஞானத்தினால் முடியாது; மெய்ஞ்ஞானத்தால் தான் முடியும்.

தாயுமானவர் கண்ட முறை

தாயுமானவர் இறைவனை மூன்று நிலைகளிலே கண்டு இன்புற்றவர். அண்டத்திற்கு அப்பாற்பட்ட நிலையிலும், அண்டத்திலுள்ள எல்லாப் பொருளாக உள்ள நிலையிலும் தம்முள்ளே உறைகின்ற நிலையிலும் கண்டு அநுபவ இன்பம் துய்த்தவர்.

இறைவனை அவர் ஒரு வடிவத்தில் முதலில் வழிபட்டார். உலகத்துக்கு அப்பால் உள்ளவனை ஒரு பிம்பத்தில் அடையாளமாக நிறுவினார். அவன்பால் காதல் கொண்டு உள்ளம் நெக்கு நெக்கு உருகி வழிபட்டார். இது முதல் நிலை. வடிவத்தில் உள்ள இறைவனுக்கு வழிபாடு நடத்த ஒரு நாள் பூக் கொய்துவர நந்தவனம் சென்றார், குடலையை எடுத்துக்கொண்டு. தோட்டத்திலே வெள்ளைவெளேர் என்று நந்தியாவட்டை மலர்கள் மலர்ந்திருந்தன. இறைவனை ஒரு வடிவிலே பாவித்து இறைஞ்ச அன்பு கொண்டு மலரைப் பறிக்கக் கையைக் கொண்டுபோன அவர் உள்ளத்திலே பக்குவம் முதிர, இரண்டாம் நிலை அப்போது வந்தது. இதுவரையிலும் இறைவனை அவர் ஒரு வடிவிலே கண்டு வழிபட்டவர். இப்போதோ தாம் பறிக்கப்போன

மலரூடும் அவன் இருப்பதைக் கண்டார். உலகிலே பார்க்கின்ற பொருள்களிலெல்லாம் அவனைக் காணும் நிலை அது. அந் நிலையை அடைந்துவிட்ட தாயுமானவர், **"ஆங்கே பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி"** என்று பரவசம் எய்தினார். ஆண்டவனை மலரூடு பார்த்தவுடனே அவனைக் கும்பிட எண்ணி இரண்டு கையையும் எடுக்கப் போனார். கும்பிடப்போன அவர் கைகள் தளர்ந்துவிட்டன. காரணம் என்ன?

உலகத்திற்கு அப்பாற்பட்ட பொருளாக இறைவனைக் கருதி அவனை ஒரு சிறு வடிவத்தில் ஆவாகனம் செய்து வழிபட்ட நிலையில் இருந்த அவருக்குப் பார்க்கின்ற பொருள்களில் எல்லாம் அவனைக் காணும் நிலை வந்தது; பறிக்கப் போன மலரூடே அவனைக் கண்டு கும்பிடப் போனார். அப்போது அவருக்கு மூன்றாவது நிலை வந்து விட்டது. **"அப் பனிமலர் எடுக்கமனமும் நண்ணேன்"** என்று, தூக்கிய கையைத் தளரவிட்டுவிட்டார். அப்பனி மலரிடையே இருந்த இறைவனை அவர் தம் அகமலரிலும் கண்டார். அந்தர்யாமியாய் இருக்கும் இறைவனைக் காணும் மூன்றாவது நிலைக்கு உயர்ந்துவிட்டார். பனி மலரில் இருக்கும் இறைவனை வழிபடக் கையைக் குவிக்கும்போது அந்தக் கும்பிடு குவித்த கைகளுக்குப் பின்னே அகமலரில் இருக்கும் இறைவனையும் கும்பிட்டதாக ஆகாதே! முன்னும் பின்னும் உள்ள ஈசனை ஒரே சமயத்தில் கும்பிட்டால் அது முழுக் கும்பிடு ஆகும். அகமலரில் உள்ள ஈசனைக் கும்பிடாமல், புற மலரில் உள்ள ஈசனை மாத்திரம் கும்பிட்டால் அரைக்கும்பிடுதானே ஆகும்? இதனை எண்ணி நாணமுற்று, ''எப்படி அப்பா உன்னைக் கும்பிடுவேன்?'' என ஏங்கிச் செயலற்று அப்படியே நின்று விட்டார்.

''பண்ணேன் உனக்கான பூசைஒரு வடிவிலே
பாவித்து, இறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி; அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன்; அலாமல்இரு கைதான் குவிக்களனில்
நாணும்என் உளம்நிற்றிநீ;
நான்கும்பி டும்போது அரைக்கும்பிடு ஆதலால்
நான்பூசை செய்தல் முறையோ?''

என்று பாடுகிறார்.

அடையாளம்

அவரைப்போல நாமும் இறைவனை உள்ளும் புறமும் கண்டு இன்ப அநுபவப் பேற்றை அடைய வேண்டுமென்றால் அவனிடத்தில் முறுகிய பக்தி வரவேண்டும். பக்தி ஏற்படுவதற்கு முதல் நிலை அவன் வடிவைப் பார்த்து, அவன் மேனியைத் தொட்டு அருச்சித்து வழிபட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அவனை நினைவுபடுத்தும் சின்னமாக, அவனுக்கு உருவங்களை அமைத்து வைத்தனர் நம் பெரியோர்.

அவனை நமக்கு நினைப்பூட்டும் அடையாளங்கள் பல. கோயில் ஓர் அடையாளம். திருநீறு ஓர் அடையாளம். அவை எல்லாம் இறைவனை நினைவுபடுத்தும் சின்னங்கள். அவனது அருள் தத்துவங்களை நினைப்பூட்டுவன புராணங்கள். அவற்றின் உண்மைத் தத்துவங்களைப் புரிந்து கொள்ள முடியாமல், அவை யாவும் பொய், சரடு எனப் பேசுகின்ற அவல நிலை நம்மிடையே பரவுகின்றது. அடையாளமாகக் காண்கின்ற நிலையே, அநுபவ மாகக் காண்கின்ற நிலைக்கு வாசல். அநுபவமாகக் கண்டு இன்பப்பேற்றை எல்லா உயிர்களும் துய்க்க வேண்டு மென்ற பெருங்கருணையோடுதான் கோயில்கள் என்றும், மூர்த்திகள் என்றும் ஏற்பட்டன. ஒரு வடிவிலே இறைவனைப் பாவித்து, வழிபட்டு, மலரெடுத்து அருச்சித்துப் பக்தி செய்து வந்தால், பின்னர் அவனை அருச்சிப்பதற்காக எடுக்கும் மலரிலும் அவனைக் காணலாம்; பார்க்கின்ற பொருள்களில் எல்லாம் அவனைக் காண லாம். அது மாத்திரம் அல்ல. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற அப்பரம்பொருளை நமது உள்ளமாகிய அகமலரிலும் கண்டு இன்புறலாம். தாயுமானவர் காட்டிய வழி இது.

பல்வகை நெறி

இவ்வுலகத்தில் யாவரும் உண்டு பசி தீர்கிறார்கள். ஆயினும் ஒருவன் அரிசி சாப்பிடுகிறான். வேறு ஒருவன் கோதுமை சாப்பிடுகிறான். மற்றொருவன் கம்பு சாப்பிடுகிறான். இப்படி உணவு வகையிலும் ஆசார வகைகளிலும் மாறுபாடு இருப்பது போலவே இறைவனுடைய அருளைப் பெறுவதற்கான மார்க்கங்களிலும் பலவகை உண்டு. ஒரே மாதிரியாக எல்லாரும் பின்பற்ற வேண்டுமென்பது இல்லாமல், அவரவர்களுக்கு ஏற்ற

வகையில் முயற்சி செய்யப் பலபல வழிகள் நம்முடைய சமயத்தில் இருக்கின்றன. அவரவர்களுடைய மனப்பக்குவத்திற்கு ஏற்பக் கோயில் சென்று இறைவனைக் கும்பிடுவாரும் உண்டு; தம் வீட்டில் அவனது வடிவத்திற்கு மலரிட்டு அருச்சித்து வழிபடுவாரும் உண்டு; யோக மார்க்கத்திலே அவன் தியானத்தில் ஈடுபட்டிருப்பாரும் உண்டு; வீடு வாசலைத் துறந்து, மனைவி மக்களைத் துறந்து, சந்நியாச ஆசிரமத்தைப் பின்பற்றித் தவநெறியில் நிற்பாரும் உண்டு. சந்நியாசம் பெறுவது ஒன்றே இறைவனை அடைய மார்க்கம் என்றிருக்குமானால் இல்லறத்தானுக்கு வழியே இல்லாமல் போகும் அல்லவா? ஆகவே இல்லறத்தானுக்கு அறம் செய்து அடியார்க்கு அமுதிட்டுத் தொண்டு செய்வதன் மூலம் இறைவனுடைய அருளைப் பெறலாம் எனவும் வகுத்திருக்கிறார்கள்.

எந்த வேலையைச் செய்தாலும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் கடைசியில் கூலியாகக் கிடைப்பது பணம். அதுபோல எந்த எந்த நெறியில் சென்றாலும் கடைசியில் பக்தர்களுக்குக் கிடைப்பது இறைவனுடைய அருள்தான். அந்த அருளைப் பெறுவதற்கான வழிகள் பலவாக இருப்பதனால் அவை ஒன்றோடொன்று முரண்பட்டது ஆகுமா? அவரவர்கள் அவரவர்களுக்குப் பிடித்த பண்டங்களை உண்டாலும், உண்போர்களுக்கு முடிவில் கிடைக்கும் பயன் என்ன? பசி அடங்குகிறது. ஓர் ஊருக்குப் போகப் பல வழிகள் இருக்கின்றன என்றாலும் போய்ச் சேருகிற இடம் ஒன்றாக இருப்பது போல, இறைவன் அருளைப் பெறுவதற்காக மார்க்கங்கள் பல இருப்பினும் முடிவில் அவை யாவும் போய்ச் சேருகின்ற இடம், முடிவாகப் பெறுகின்ற பயன், ஒன்றுதான். பல வழிகள் ஓர் ஊருக்குப் போக இருப்பது அவ்வூரின் சிறப்பை அதிகப்படுத்துமே அன்றிக் குறைக்குமா? நமது சமய நெறியில் பல வழிகள் இருப்பது இதற்குச் சிறப்புத்தான். அருள் நெறியிலே சாதனம் செய்யப் புகுகின்றவர்கள் படிப்படியாக மூன்று நிலையிலும் நின்று இறைவனை வழிபட்டு அநுபவப் பேற்றை எய்துகிறார்கள்.

உருவமும் நாமமும்

ரோடிலே ஒருவன் கார் ஓட்டிப் போகிறான். நாற்சந்தியில் இருக்கிற போலீஸ்காரன் கையை நீட்டிக் காட்டுகிறான். அவன்

காட்டும் குறிப்பை உணர்ந்து கார் செலுத்திப் போகிறவர்கள் பத்திரமாகப் போகிறார்கள். ''வேறு ஒரு வண்டி போகிறது; சற்று நில்'' என உணர்த்தக் குறிப்பாகக் கையைக் காட்டும்போது அதை உணராமல் காரை ஓட்டிக்கொண்டு ஒருவன் போனால் அந்தக் காரோடு மோதி உயிருக்கே ஆபத்தைத் தேடிக் கொள்ள நேரும். சமய நெறியிலே செல்பவர்களுக்குக் குறிப்பாக வழியை உணர்த்தும் அடையாளங்களாகக் கோயில்களும், விக்கிரகங்களும், நாமங்களும் அமைகின்றன. அவற்றை உணர்ந்து தெளிந்து சென்றால் நம் முயற்சியின் முற்றிய பயனாக அருளைப் பெற முடியும்.

நம்பிக்கை

உணவு சாப்பிட்டால் பசி தீரும் என்றால் யாராவது நம்ப மாட்டேன் என்று சொல்வார்களா? பிறந்து பிறந்து துன்புற்றுக் கடைசியில் இறக்கின்ற ஆருயிர்களின் துன்பம் இறைவனை நம்பி வழிபட்டு அவன் அருள் கிடைத்த மாத்திரத்தில் ஒழியும் என்று அநுபவம் பெற்றவர்கள் சொன்னால் அதை நம்ப மாட்டோம் என்று சொல்கிறோம். ''இறைவனை நம்புகிறோம்'' எனச் சொல்பவர்களும்கூட எப்படி நம்புகிறார்கள்? ''கடன் தருகிறேன்'' என்று சொல்பவர்களை நம்புவது போல, ''வேலை வாங்கித் தருகிறேன்'' என்று சொல்பவர்களை நம்புவது போல நம்புகிறார்களே தவிர, ஒரு குழந்தை தன் தாயை நம்புவது போல நம்புவதில்லை. அடித்தாலும் ''அம்மா'' என்று அழுதுகொண்டு தன் தாயினிடம் ஓடுகிறது குழந்தை. அப்பா தின்பண்டம் வாங்கி வந்தாலும் அதை வாங்கிக்கொண்டு, ''அம்மா'' என்றுதான் ஓடுகிறது. அடிக்கும்போது, ''சீ! நீ என் அம்மா அல்ல'' எனச் சொல்லிவிட்டு எந்தக் குழந்தையாவது வீட்டை விட்டு ஓடுகிறதா? அப்படி ஓடினால் அந்தத் தாய் அக்குழந்தையைத் தன்னுடையது என்பாளா? குழந்தை தன் தாயை நம்புவது போலப் பக்தன் இறைவனை நம்பினால் அவன் அருள் செய்வான்.

திரௌபதியின் கதை

கொடுங்கோலன் துரியோதனன் சபையில் வீற்றிருந்தான். கௌரவர்கள் கொம்மாளமிட்டுக்கொண்டு அம்மண்டபத்தில் கூடியிருந்தார்கள். ஞானிகளும், மோனிகளும் அமர்ந்திருந்தார்கள்.

பாண்டவர்களும் இருந்தார்கள். துரோணர், கிருபாசாரியார் முதலியவர்கள் இருந்தார்கள். பாஞ்சாலியின் துகிலைத் துச்சாதனன் உரிந்தான். தன் கணவன்மார்கள் தன்னைக் காப்பாற்ற மாட்டார்களா என்று அவர்களைப் பார்த்து, ''ஐயகோ!'' என்று அலறினாள். அவர்களால் காப்பாற்ற முடிந்ததா? வாயடைத்துத் தலை குனிந்திருந்தார்கள். நேர்மை தவறாத ஞானிகள் ஓர் அபலைப் பெண்ணுக்கு அநீதி இழைப்பதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா என்ற நம்பிக்கையில் அவர்கள் பக்கம் பார்த்து அலறினாள் திரௌபதி. அவர்களும் தலை குனிந்து விட்டார்கள். பெண்ணுக்கு அநீதி இழைப்பதைப் பார்த்துக் கொண்டு ஆண்கள் வாளா இருப்பார்களா என்று எண்ணி வீரமிக்க ஆண்களை எல்லாம் பார்த்தாள். அவர்கள் கோழை களைப் போலத் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியிலே தன் கையே தனக்கு உதவி என்று கைகளால் ஆடையைப் பற்றிக்கொண்டாள். மேலும் துச்சாதனன் ஆடையை உரிய முற்பட்டான். அப்போதுதான் அவள்! ''உன்னை விட்டால் எனக்கு வேறு கதியில்லை கண்ணா! என்னைக் காப்பாற்ற மாட்டாயா?'' என்று அலறிய வண்ணம் தன் இருகைகளையும் தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டு, ''கோவிந்தா! கோவிந்தா!'' என்று கூப்பிட ஆரம்பித்தாள். தன்னைச் சேர்ந்தவர்களும் பிறரும் காப்பாற்ற மாட்டார்களா என முதலில் எண்ணினாள். அவர் களால் பயனில்லை என்று தெரிந்தவுடன் ஆண்டவனே சரணம் என்ற முழு நம்பிக்கையுடன், தன் செயல் ஒழிந்து அலறினாள். அவளைக் கண்ணன் காப்பாற்றினான். அவளுக்கு ஏற்பட்ட முழு நம்பிக்கையைப் போல நமக்கும் இறைவனிடம் நம்பிக்கை ஏற்பட்டால் அவன் திருவருளைப் பெறலாம். அவள் தன் கையை நம்பி அதனால் ஆடையைப் பற்றிக் கொள்ளும் போதுகூட அவன் அருள் செய்யவில்லை. கையையும் விட்டுத் தலைமேல் குவித்தபோது உதவினான்.

இம்மையும் மறுமையும்

இறைவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்தால் இந்த உலகத் திலேயே இன்பம் உண்டாகும்; மறு உலகத்திலும் இன்பம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. இதைச் சொல்ல வருகிறார் அருண

கிரியார். முருகப் பெருமானிடத்தில் உண்மையான நம்பிக்கை வைத்து, தம்முடைய செயல்களை எல்லாம் ஒழித்து, ''கந்தா, முருகா, குமரா, குகா'' என்று வெற்றிவேல் பெருமாளின் நாமம் புகல்கிறவர்கள் என்ன என்ன பயன்களை அடைவார்கள் என்று சொல்கிறார்.

முடியாப் பிறவிக் கடலில்
    புகார்,முழு தும்கெடுக்கும்
மிடியால் படிவில் விதனப்
    படார்,வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
    அவுணர் குலம்அடங்கப்
பொடிஆக் கியபெரு மாள்திரு
    நாமம் புகல்பவரே.

பிறவி நீங்குதல்

நம்முடைய பிறப்பு, முடியாமல் தொடர்ந்து வருவது. இதற்கு ஆரம்பம் இல்லை; அந்தம் இல்லை. இறைவனை நம்புகிறவர்கள் முடிவு இல்லாத இந்தப் பிறவிக் கடலுக்குள் புக மாட்டார்களாம்.

முடியாப் பிறவிக் கடலில் புகார்.

வைய வாழ்வு

உடம்பு இறந்து போகப்போகிறது. இந்த உடம்பு போய்ப் பின்னாலே பிறவி இல்லாமல் இவ்வுயிரை அவன் ஆண்டுகொள் வது இருக்கட்டும். இறந்த பிறகு அல்லவா அந்தக் கவலை? இறக்கும் காலத்தில் வேண்டுமானால் வேறு பிறவி எடுக்காமல் இருக்க இறைவனை நினைக்கலாம். இப்பொழுது அந்த வான வாழ்வைப்பற்றிக் கவலை இல்லை. வைய வாழ்வைப் பார்ப் போம். அவன் நாமத்தை நினைத்து, வாழ்த்தி, தியானிப்பதால் உடம்பொடு வாழும் காலத்திலே ஏதாவது பயன் உண்டா? இப்படிக் கேட்பவர்கள் அதிகம். அவர்களுக்கு விடை சொல்வதற்கேற்ற வகையில் அடுத்த அடியைச் சொல்கிறார் அருணகிரியார்.

..........................முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார்.

வறுமை நோய்

இன்றைக்குப் பல பல கட்சிகள் உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள்? ''எங்களுக்கு வோட்டுப் போடுங்கள். வறுமை இல்லாமல் நீங்கள் எல்லோரும் வளவாழ்வு வாழ நாங்கள் வழி வகுக்கி றோம்'' என்று சொல்கிறார்கள். அதைப்போலவே அருணகிரியாரும், ''அப்பா, அவன் நாமத்தைச் சொல்வதனால் இம்மையிலே என்ன பயன் என்றுதானே கேட்கிறாய்? எல்லாவற்றையும் கெடுக்கும் வறுமைக்கு ஆளாகாமல் இருக்கலாம்'' என்கிறார்.

மிடி என்பது வறுமை. முழுதும் கெடுக்கும் மிடி என்கிறார். வறுமை வந்தால் போதும்; நல்லவர்கள், கெட்டவர்கள் என்று பாராமல் எல்லோரையும் கெடுத்துவிடும்; அழித்துவிடும். வறுமை யினால் கோபம், சண்டை, கொலை, களவு முதலிய எல்லாத் தீமைகளும் மலிகின்றன. அதனால் மிகக் கோபமாக,

''இன்மை எனஒரு பாவி''

என்கிறார் வள்ளுவர். வறுமை வந்துவிட்டால், நம்மிடமுள்ள எல்லாப் பண்புகளும் கெட்டுவிடும்.

''மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை–தேனின்
கவிசந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்போம் பறந்து''

என்று ஔவைப் பிராட்டி சொல்கிறாள். வறுமையால் பசி ஏற்பட, அந்தப் பசியினால் நற்குணங்கள் எல்லாம் கெட்டுப் போய்விடும்.

நோயின் கொடுமை எப்படி இருக்கிறது என்பதை நோயாளி யும் உணர்கிறான். அந்த நோய் ஏற்பட்டால் என்ன என்ன கொடு மைகள் விளையும் என்பதை டாக்டரும் அறிவார். நோயாளிக்கு நோயின் கொடுமை தெரிகிறது; அதைப் போக்கும் மருந்து தெரியவில்லை. டாக்டருக்கு நோயின் கொடுமையும் தெரியும்; இன்ன மருந்து சாப்பிடுகிறவர்கள் இந்த நோய்க்கு உள்ளாக மாட்டார்கள் என்றும் அவர் சொல்வார்.

நமக்கு வறுமையின் கொடுமை தெரிகிறது. ''ஐயோ! வள வாழ்வு குன்றி நான் துன்புறுகிறேனே!'' என வாய் விட்டும் அலறு

கிறோம். நோயுற்றவன் நோயைப் போக்கும் மருந்து உட்கொள்ளாமல், தற்கொலை செய்து கொள்வது போல, வறுமையின் கொடுமைக்கு ஆளானவன், முழுதும் கெடுக்கும் மிடியைப் போக்கும் வழி தெரியாமல் தவறான செய்கைகளைச் செய்து பின்னும் துன்புறுகிறான். அருணகிரியார் மருந்து சொல்கிறார்.

இருவகை வாழ்வு

வான வாழ்வைப் பார்த்து நின்றவர்கள் யாரும் வைய வாழ்வை மறக்கவில்லை. உடம்பொடு வாழும் வாழ்க்கையில் நோய் இல்லாமல் வாழ வேண்டுமென்பது போலவே, வறுமை இல்லாமல் வாழவேண்டுமென்றும் விரும்பினார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை நோக்கி எனக்குச் சோறு வேண்டும், நல்ல ஆடை அணிகள் வேண்டும் என்று கேட்டார்; அதோடு மாத்திரம் நிற்கவில்லை. உடம்புக்குப் பூசிக்கொள்ள கஸ்தூரிவேண்டும், புனுகு வேண்டும் எனக் கேட்கிறார்.

> **"கத்தூரி கமழ்சாந்தம் புழுகினொடு வேண்டும்**
> **கடல் நாகைக் காரோணம் மேவியிருந் தீரே."**

அவர் வான வாழ்வை நினைந்து வைய வாழ்வை மறந்தவரா? வைய வாழ்வு வாழத் தெரியாதவரா? இறைவனைப் பார்த்துப் பொன்னையும பொருளையும் போகத்தையும் புகழையும் கேட்கிறார். இம்மைக்கு மாத்திரமன்றி மறுமைக்கும் மோட்சத்தை வேண்டுகிறார்.

இறைவனை நம்பினால் இந்த உலகத்திலும் வாழலாம், மறுமை வாழ்வும் ஒருங்கே கிடைக்கும் என்று அவர் சொல்கிறார்.

> **"இம்மை யேதரும் சோறும் கூறையும்;**
> **ஏத்த லாம்;இடர் கெடலுமாம்;**
> **அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்**
> **கியாதும் ஐயுற வில்லையே."**

ஞானப் பாலைக் குடித்த குழந்தையாகிய சம்பந்தர்,

> **"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்"**

என்கிறார். இந்த மண்ணிலேயும் நல்லவண்ணம் வாழலாம்; ஒவ்வொரு நாளும் சுகமாக வாழலாமாம். இறைவனை நம்புகிறவர்கள் இந்த உலகத்தில் அப்படி வாழலாம். இறைவனை

நம்பாதவர்கள் முடியாத பிறவிக் கடலுக்குள் ஆழ்கிறார்கள்; முழுதும் கெடுக்கும் மிடியால் விசனப்படுகிறார்கள்.

வறுமையின் கொடுமை

மிடியின் இயல்பு கொடியது. எல்லா இன்ப நலங்களையும், வள வாழ்வையும் குலைக்கின்ற பாவி அல்லவா அது?

''வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா!
அடிஅந் தம்இலா அயில்வேல் அரசே!
மிடிஎன் றுஒருபா விவெளிப் படினே''

என்று அருணகிரியார் அநுபூதியில் சொல்கிறார். ''இன்மை என ஒரு பாவி'' என்று கூறிய வள்ளுவரைப் போலவே அவருக்கும் கோபம் கொப்புளிக்கிறது; ''மிடி என்று ஒரு பாவி'' என்று சொல்கிறார்.

உய்யும் வழி

அந்தப் பாவியின் கையில் அகப்பட்டு விசனம் அடையாமல் இருக்கவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? இறைவனை நம்பவேண்டும். அவனை நம்பி வழிபடுபவர்கள் யாரும் மிடியால் விசனப்படமாட்டார்கள். இறைவனை நம்பினால் நற்குணங்கள் தாமே வந்து சேரும். யாரைக் கண்டாலும் கோபித்து அருவருக்கின்ற நிலை மாறி அன்போடு நெருங்கிப் பழகும் சுமுகமான குணம் உண்டாகும். உலகத்திலுள்ள மக்கள் எல்லாரிடத்திலும் அன்பு பாலிக்க வேண்டுமானால், ஆருயிர்களுக்கு மூலகாரணமாக இருக்கும் ஆண்டவனிடத்தில் அன்பு பாலிக்க வேண்டும். அவனிடத்தில் அன்பு பாலித்தால் எல்லோரிடமும் அன்புடன் நடந்துகொள்ளும் நற்பண்புகள் உண்டாகிவிடும். ஆண்டவனிடத்தில் தாயிடம் வைப்பது போல அன்பு செய்து நம்பிக்கை கொள்ள வேண்டுமானால் ஆண்டவனுக்கு நாம் குழந்தை என்ற பாவம் வரவேண்டும். குழந்தைப் பண்புகள் வளரக் குழந்தைக் கடவுளைத்தானே வணங்க வேண்டும்? குழந்தைக் கடவுளை வணங்குபவருக்கு உண்டாகும் பயன்கள் இந்த இரண்டும்.

முடியாப் பிறவிக் கடலில்
புகார்; முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார்.

''குழந்தைக் கடவுளை நம்புகிறவர்கள் இந்தப் பிரபஞ்சத் திற்கு வசப்பட மாட்டார்கள். முடிவில்லாத பிறவிக் கடலுக்குள் புகமாட்டார்கள். அவர்களுக்குப் பிறவி இல்லாத முக்தி கிடைக்கும். அது கிடக்கட்டும். மண்ணிலும் அவர்கள் நன்றாக வாழலாம். அவனை நம்புகிறவர்கள் மானம், குலம், கல்வி முதலிய எல்லாவற்றையும் கெடுக்கின்ற வறுமையில் சிக்கி விசனப்பட மாட்டார்கள்'' என்று பேசுகிறார் அருணகிரியார். 'முருகன் திருநாமம் புகல்கின்றவர்கள் பிறவிக் கடலில் புகார், மிடியால் விதனப்படார்' என்றால் என்ன பொருள்? 'இன்ப துன்ப மில்லாத முக்தி நிலை அடைவார்கள்; உடம்போடு வையத்தில் வாழும்போது வளவாழ்வு நிரம்பப் பெற்று ஒவ்வொரு நாளும் சுகமாகவே இருப்பார்கள்' என்பதுதானே? எந்தக் காரியத்தைச் செய்யச் சொன்னாலும் பயன் என்ன என்று கேட்கிற காலம் இது. ஆகவே முடிவாகக் கிடைக்கும் பயனை முன்னாலே சொல்கிறார்.

முடியாப் பிறவிக் கடலில்
புகார்; முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
படார்.

திருநாமம் புகல்பவர்

யார் *முடியாப் பிறவிக் கடலில் புகமாட்டார்கள்? யார் முழுதும் கெடுக்கும் மிடியால் விதனப்பட மாட்டார்கள்?*

அடியார்க்கு நல்ல பெருமாள் திருநாமம் புகல்பவரே!

''சரி சரி, அவன் நாமத்தைப் புகல்பவர் பிறவித் துன்பத்திற்கு உள்ளாக மாட்டார்கள். தரித்திரத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்று சொல்கிறீரே. அதற்கு ஏதாவது அடையாளம் இருக்கிறதா?'' என்று கேட்டால் அருணகிரியார் சொல்கிறார்.

முருகன் பெருமை

வெற்றி வேல்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலம்அடங்கப்
பொடியாக்கிய பெருமாள்.

அவன் ஞானமாகிய வேலையே தன் ஆயுதமாக உடையவன். அது தோல்வியே கண்டு அறியாத வேல். எப்போதும் வெற்றியை உடைய வேல். அந்த வெற்றி வேலைத் தன் திருக்கரத்தில் உடைய பெருமாள் அவன்.

வறுமையால் அல்லலுறுகின்றவர்களிடம் ஒரு புலவர் சொன்னார்; ''அப்பா! நீ ஏன் இங்கே அல்லற்படுகிறாய்? பக்கத்து ஊரில் ஒரு வள்ளல் இருக்கிறான். அவன் வீட்டுக்கு எதிரில் காடு கழனிகள் நிறைய இருக்கின்றன. அவன் வீட்டு வாசலில் நெல் கோட்டை இருக்கிறது. வீட்டுக்குள் மூட்டைக் கணக்கில் அரிசி குத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மடைப்பள்ளிக்குள் போனால் எப்போதும் சோறு இருந்துகொண்டே இருக்கும். இப்பொழுது போனால் மடைப்பள்ளிக்குள் இருக்கும் சோறு கிடைக்கும். மாலையில் போனால் சோறு இராதோ எனக் கவலை வேண்டாம். பானையில் இருக்கும் அரிசியை எடுத்து உணவு சமைத்து வைத்திருப்பான். பத்து நாள் கழித்துப் போனால் பானையில் அரிசி காலியாகி யிருக்குமே என அஞ்சாதே. வீதியில் போட்டிருக்கும் சேரிலிருந்து நெல் எடுத்துக் குத்தி அரிசியாக்கிச் சாதம் படைப்பான். இரண்டு மூன்று மாதம் கழித்துப் போனால் சேர் நெல்லும் காலியாகிப் போயிருக்கலாமே எனக் கவலைப்படாதே. அவன் வீட்டுக்கு எதிரே இருக்கும் நிலம் அவனுடையதுதானே? அந்த நிலத்தில் விளைந்த புது நெல் வந்துவிடும். அப்போதும் இல்லையென்னாது உனக்கு உணவு படைப்பான். எப்போது வேண்டுமானாலும் போ அப்பா!'' என்றார். அதுபோல அருணகிரியார் இங்கே சொல்கிறார்.

வெற்றிவேற் பெருமாள்

''இறைவன் வெற்றிவேல் பெருமாளாக இருக்கிறான். அஞ்ஞானத்தைப் போக்கும் ஞானவேலைத் திருக்கரத்தில் தாங்கிப் பக்தர்கள் வரமாட்டார்களா என்று பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனிடம் நீ போ அப்பா! அவன் இந்தப் பிறவியில் உனக்கு மிகுந்த அல்லல் விளைவிக்கிற தரித்திரத்தை உடனே போக்குவான். அது மாத்திரம் அல்ல. என்றென்றைக்கும் இன்பம் கொடுக்கிற முத்தியையும் வழங்குவான்'' என்று தெரிவிக்கிறார். அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியாதோ எனக் கலங்க வேண்டாம். அவன் வெற்றிவேல் பெருமாள். ஞான சக்தியை

வேலாக ஏந்தி இருக்கிற அவன் திருவுருவத்தைப் பார்த்தே அவனை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

அடியார்க்கு நல்ல பெருமாள்

"சரி, நீங்கள் சொல்கிறதைப் பார்த்தால் அவன் மிகப் பெரியவனாக இருப்பானென்று தோன்றுகிறதே. அவனை அடையாளம் கண்டு கொண்டு நான் போனால் அவன் எனக்கு உதவி செய்வானா? எளிதிலே அவனைப் பார்க்க முடியுமா?" என்று சந்தேகப் பிராணி கேட்கிறான். அருணகிரியார் என்ன சொல்கிறார்?

அடியார்க்கு நல்ல பெருமாள்.

அவனைக் காண முடியுமோ என்று அஞ்ச வேண்டாம். அவன் மிகவும் நல்லவன். அடியார்களுக்கு, தன்னை அண்டியவர்களுக்கு, மிகவும் நல்லவன்; அடியார்க்கு நல்ல பெருமாள், அடியார்களைக் காப்பாற்றுவது ஒன்றையே தன் வேலையாகக் கொண்டு வெற்றிவேலைத் தாங்கி நிற்கிறான். செருக்கை ஒழித்து, தலையைத் தாழ்த்தி, அகங்கார மமகாரம் குறைந்து, அவன் திருவடியில் தொழுது அழுது நின்றால் அவர்களுக்கு அவன் மிகவும் நல்ல பெருமாளாக இருப்பான்.

அவுணரை அழித்தவன்

அகங்கார மமகாரத்தால் தலை தருக்கி நின்று, தம்மைவிட உயர்ந்தவர்கள் இல்லை என்று எண்ணி இறுமாந்து, நல்லவர்களுக்குத் துன்பம் இழைக்கிறவர்களுக்கு அவன் பொல்லாதவனாக இருப்பான். இதை விளக்க ஒரு நிகழ்ச்சியைச் சொன்னால் போதும். சூரபன்மன் முதலிய அசுரர்கள் தம்மைவிட உயர்ந்தவர்கள் இல்லை என்ற செருக்கால் தங்கள் தங்கள் தொழிலை இறைவன் ஆணைவழி நின்று நடத்தி வந்த தேவர்களுக்குச் சொல்லொணாத துன்பங்களை இழைத்தார்கள். ஓர் அசுரனா? இரண்டு அசுரரா? பெரிய அசுரக்கூட்டம். அக்கூட்டத்தை எம்பெருமான் என்ன செய்தான் தெரியுமா?

அவுணர் குலம் அடங்கப்
பொடிஆக்கிய பெருமாள்.

அவுணர் – அசுரர்கள். அவர்களுடைய குலமே அடங்க அழிந்து போகும்படியாக அவர்களை எல்லாம் பொடி பொடியாகச்

சிதைத்த பெருமாள் அவன். அவுணர், உலகத்திற்குத் துன்பத்தைத் தருகின்ற இருட்படைக் கூட்டம். ஞானச் சுடரொளி வீசும் வேலையுடைய பெருமாளிடம் அவர்கள் ஆற்றல் சாயுமா? மாயையின் பிள்ளையாகிய சூரன் ஞானவேல் பட்ட மாத்திரத்தில் அழியாமல் எப்படி இருக்க முடியும்? அவன் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பயலையும் முருகன் விட்டு வைக்கவில்லை; முழுமையும் அழித்துவிட்டான். அவனைத் துணை என்று நாம் நம்பிவிட்டால் உலக மாயையின் வயப்பட்டுத் துன்பப்பட வேண்டாம். முடிவில்லாப் பிறப்பை இனிப் பெற வேண்டாத நிலையை அடையலாம்.

முடிவில்லாப் பிறப்பை ஒழித்து, வைய வாழ்வில் எல்லா விதமான வளத்தையும் அளிக்கின்ற பெருமாளுக்கு மூன்று அடையாளங்களைச் சொன்னார். அவன் வெற்றி வேலை உடைய பெருமாள்; அடியார்க்கு நல்ல பெருமாள்; அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாள் என்றார். முருகன் இயல்பாக இருக்கும் நிலை வெற்றி வேலை உடையவனாக இருப்பது. அவன் சிஷ்ட பரிபாலனம் செய்கின்ற நிலை அடியார்க்கு நல்ல பெருமாளாக இருப்பது. அவன் துஷ்ட நிக்கிரகம் பண்ணுகிற நிலை அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமாளாக இருப்பது.

இறைவன் தன்னுடைய இயல்பான நிலையில் இருந்தபடியே நல்லவர்களுக்கு அருள் செய்கிறான்; அல்லாதவர்களுக்குத் தீங்கு செய்கிறான். அசுரர்களுக்குத் துன்பத்தை விளைவித்து, அடியார் களுக்கு இன்பத்தை அளிக்கிறான். வெற்றிவேல் பெருமாளின் திருக்கோலத்தைப் பார்க்கும் போதே அவனுடைய கருணை புலனாகிறது; வீரம் தெரிகிறது. அடியார்களுக்கு இன்பத்தை அளிக்கவும் அல்லாதார்களுக்குத் துன்பத்தை விளைவிக்கவும் காரணமாக இருப்பவை அவனது கருணையும் வீரமும். வீரச் செயலாலே துன்பத்தை ஒழித்துக் கருணைச் செயலாலே இன்பத்தை ஆக்குபவன் அவன்.

மனிதர்கள் எல்லோரும் துன்பம் நீங்கி இன்பம் அடைய வேண்டுமென்று நினைக்கிறார்கள். நோய் நீங்கி, நலம் பெற வேண்டுமென்றால் நோயை நீக்க மருந்து கொடுக்கின்ற டாக்டரே, உடல் நலம் பெருக 'டானிக்' கொடுக்கிறார். அதைப் போல

முருகன் தன்னுடைய வீரத்தால் துன்பத்தை நீக்கி, கருணையால் அடியார்களுக்கு இன்பத்தை அளிக்கிறான். இன்பத்தை ஆக்கு வதற்கும், துன்பத்தைப் போக்குவதற்கும் அவன் வெவ் வேறு ஆயுதம் வைத்திருக்கவில்லை. துன்பத்தை நீக்குகின்ற ஞான சக்தியாகிய வேலே இன்பத்தையும் ஆக்குகின்றது. அந்த வேலைக் கையில் தாங்கியிருக்கிற வெற்றிவேற் பெருமாள் அவன்.

நாமம் புகலும் முறை

திருநாமம் புகல்பவர் இந்த இருவகைப் பயனைப் பெறு வார்கள். அவனுக்கு ஒரு நாமந்தான் இருக்கிறதா? பக்தர்கள் தங்கள் தங்களுக்குப் பிடித்தபடியே அழைக்கட்டும் என்று ஆயிரத்துக்கு மேற்பட்ட நாமம் உடையவனாக இருக்கிறான். மூன்றெழுத்து நாமம் வேண்டுமானாலும் இருக்கிறது; ஆறெழுத்து வேண்டுமானாலும் இருக்கிறது. அவன் நாமங்களில் எதை வேண்டுமானாலும் புகன்றால் போதும். அவன் தன்னுடைய அடியார்களுக்கு வீரச் செயலினால் துன்பத்தை நீக்கி, கருணைச் செயலினால் இன்பத்தை அளிப்பான்.

''நான் எத்தனையோ தரம் முருகா முருகா என்று கத்து கிறேன். அவன் அருள் செய்யவில்லையே!'' என்று சொல்வோர் நம்மிடையே இருக்கிறார்கள். உள்ளம் கலந்து, கருத்து ஒன்றி உணர்ச்சியோடு சொன்னால் அவன் வருவான். நாடக மேடை யில் நிற்கின்ற ஒருவன், ''அம்மா'' என்று அழைத்தால் உண்மை யான அம்மாவா மேடைக்கு வருவாள்? வெறும் வாயால் உலகமாகிய நாடக மேடையில் ஏறியுள்ள நடிகனைப் போல, ''முருகா முருகா!'' என்று அழைத்தால் அவன் வரமாட்டான். உள்ளத்தோடு கலந்து அழைக்க வேண்டும். வாயிலிருந்து வருகிற சொல் நாவோடு மாத்திரம் நிற்காமல் உள்ளத்தோடும் உணர்ச்சி யோடும் கலந்து வரவேண்டும்.

வாயிலிருந்து வரும் சொல் உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சியின் அறிகுறியாக வந்தால் அதற்குப் பயனுண்டு. பல காலமாகக் காணாமல் இருந்த குழந்தையைக் கண்டவுடன் தாய் எப்படி அழைக்கிறாள், அப்படி முருகனை அழைக்க வேண்டும்; அவன் திருநாமத்தைப் புகல வேண்டும். அதற்கு நிச்சயமாகப்

பயன் உண்டு. மறுமையின்பமாகிய பிறவாதபேறும், இம்மை யின்பமாகிய வறுமையில்லா வளவாழ்வும் கிடைக்கும்.



முடியாப் பிறவிக் கடலில்
 புகார்;முழு தும்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
 படார்;வெற்றி வேற்பெருமாள்,
அடியார்க்கு நல்ல பெருமாள்,
 அவுணர் குலம்அடங்கப்
பொடிஆக் கியபெரு மாள் திரு
 நாமம் புகல்பவரே!

(வெற்றியைத் தரும் வேலைக் கரத்தில் தாங்கும் பெருமாளும், தன்னைப் பணியும் அடியவர்களுக்கு நன்மையைச் செய்யும் நல்ல பெருமாளும், அசுரர் குலம் முற்றும் அழித்துப் பொடி ஆக்கிய பெரு மாளுமாகிய முருகனுடைய திருநாமத்தை விரும்பிச் சொல்கிறவர்கள், என்றும் முடியாமல் தொடர்ந்து வரும் பிறவியாகிய கடலிலே விழமாட்டார்கள். ஒருவரிடம் உள்ள எல்லாவற்றையும் அழியச் செய்யும் வறுமையினால் உலகத்தில் துயரம் அடைய மாட்டார்கள்.

மிடி - வறுமை. படி - உலகம். விதனம் - துயரம். அவுணர் - அசுரர். அடங்க - முழுதும். புகலுதல் - விரும்புதல், சொல்லுதல்; இங்கே, விரும்பிச் சொல்லுதல்.

மறுமை வாழ்வும் இம்மை வாழ்வும் பெறுவர் என்பது கருத்து.)

ஞான கலையும் மையல் வலையும்

1

மனிதனுடைய வாழ்நாளில் இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் மாறி மாறி வருகின்றன. தங்களுக்கே ஆண்டவன் மிகுதியான துன்பங்களை தருகிறான் என்றும், மற்றவர்களுக்கு இத்தகைய துன்பங்கள் உண்டாவது இல்லை என்றும் பலர் நினைக்கிறார்கள். இறைவனுக்கு அப்படிப் பட்சபாதம் இல்லை. அவரவர்கள் செய்த கன்மத்திற்கு ஏற்றபடியே இன்ப துன்பங்களை அவன் கொடுக்கிறானேயன்றி, அவர்கள் அநுபவிக்க வேண்டாதவற்றைக் கொடுக்கவில்லை. சிலர் அதிகமான துன்பங்களை அநுபவிக்கிற வரைப் போல வேதனைப்படுவார்கள்; ஆராய்ந்து பார்த்தால் அது மிகவும் சிறிய துன்பமாக இருக்கும். சன்னி பிறந்தவன் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க, ஜலதோஷம் பிடித்தவன் படுகிற வேதனை மிக அதிகமென்று தோன்றும்.

துன்பத்தின் அளவு

பெரும்பாலும் செல்வம் நிரம்பியவர்கள் சிறிய துன்பம் வந்தாலும் பெரிதாகக் கத்துகிறார்கள். ஒரு வேளை காபி சரியான நேரத்தில் கிடைக்காவிட்டால் அவர்கள் அலறுகின்ற அலறல் மிகுதியாக இருக்கும். பத்து நாளாக உண்ண ஒன்றும் கிடைக்காமல் பசியால் துவண்டும் ''நான் துன்பப்படுகிறேனே!'' என்று அரற்றாதவனும் இருக்கிறான். இந்த இரண்டு வகையான மக்களுக்கும் பொதுவானவை உடம்பு, மனம் ஆகியவை. ஆனால் ஒரு வகையினர் சிறிய துன்பத்தையும் பெரிதுபடுத்தி வேதனைப் படுவதற்கும், மற்றவர்கள் பெரிய துன்பங்களையும் சிறிய துன்பமாகக்கூடப் பாராமல் இருப்பதற்கும் காரணமாக இருப்பது அவர் மனந்தான். துன்பமானாலும் சரி, இன்பமானாலும் சரி நாம் நுகர்கின்ற பொருளில் இல்லை. நுகர்ந்து, அதை உணர்கின்ற மனத்தில் இருக்கிறது. எதைத் துன்பம் என்று நினைக்கிறோமோ

அது வருமே என்று, வருவதற்கு முன்னாலும் மனம் துன்பப்படு கிறது. வந்து அநுபவித்த பிறகும், ''ஐயோ வந்ததே!'' என்று துன்பப் படுகிறது. ஆகவே துன்பத்தினால் உண்மையில் வேதனைப்படுகிற காலம் ஒன்று என்றால், துன்பம் வராததற்கு முன்பே துன்பம் வருமே என எண்ணி வேதனைப்படுகிற காலம் ஒன்றும், வந்த பிற்பாடு வந்ததே என்று வேதனைப்படுகிற காலம் ஒன்றுமாகக் கோழைகளுக்கு வளர்கிறது. ''துன்பம் எப்படியும் வரத்தான் வரும். இந்த உலகத்தில் பிறந்துவிட்டமையால் அத்துன்பங்களுக்கு எப்போதும் ஆயத்தமாக இருப்போம்'' என்று யார் இருப்பார்கள்?

விதியும் மதியும்

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழ துஞற்று பவர்''

என்று வள்ளுவர் சொன்னார்.

பலர் விதி பெரிதா, மதி பெரிதா என்று சந்தேகப்படுகிறார்கள். ''விதியை மாற்ற யாராலும் முடியாது'' என்ற ஒரு சாரார் சொல்ல, மற்றொரு சாரார், ''இல்லை; விதியை மதியால் வென்றுவிட லாம்'' என்று சொல்கிறார்கள். இந்த இரண்டில் எது உண்மை?

விதியை மதி வெல்லுமே யன்றிக் கொல்லாது. விதியைக் கொல்வது வேறு; வெல்வது வேறு. கொல்வதாவது அடியோடு அழித்துவிடுவது. விதியை அடியோடு அழித்து ஒதுக்க யாராலும் முடியாது. விதி என்பது பிராரப்தம். பிராரப்தத்தை யாராலும் கொல்ல முடியாது; ஆனால் தெளிந்த அறிவு இருந்தால் வென்று விடலாம்.

வினையும் விளைவும்

நாம் செய்கிற பாவ புண்ணியம் வேறு; அநுபவிக்கின்ற இன்ப துன்பம் வேறு. இப்பொழுது நுகரும் அநுபவம் முந்திய பிறவி யில் நாம் செய்த வினையின் பயன். இப்பொழுது செய்கின்ற பாவ புண்ணியச் செயல்கள் அடுத்த பிறவியின் அநுபவங்களுக்கு வித்தாகின்றன.

முன்னை வினைகள் காரணமாக அநுபவிக்கின்ற போகங்கள் இன்பமாகவும், துன்பமாகவும் அமைகின்றன. முன்னை வினை

இல்லாமல் பிறவி வராது. இந்தப் பிறவி வந்த பிறகு முன்னை வினைகள் அநுபவமாக இப்பிறவியில் முளைக்காமல் இரா. அவை கப்பும் கிளையுமாகப் படர்ந்து தழைக்காமல் இருக்கச் செய்யலாமேயொழிய முளைக்காமல் இருக்கச் செய்ய முடியாது. மதி இருக்குமானால், முளைக்கின்ற முன்னை வினைகளின் வேகத்தைக் குறைத்துவிடலாம்.

எவ்வளவுதான் மதி உடையவன் ஆனாலும் வீசுகின்ற ஊதல் காற்றையும், பனியையும் அழிக்க முடியாது. ஆனால் கம்பளி உடை அணிந்து கொண்டு அவற்றின் கடுமையைக் குறைத்துக் கொள்ளலாம்.

இதைத்தான் வள்ளுவர் சொல்கிறார். உப்பக்கம் என்பது பின் பக்கம். முன் பிறவியில் செய்த கன்மங்களுக்கு ஏற்ப அமைந்த விதியை அநுபவித்து, அதனால் பெருந்துன்பம் அடையாமல் அதனை முதுகு காட்டச் செய்து வெல்பவர்கள் மனத்திண்மை உடையவர் கள். அவர்களுக்கும் ஊழின் வழியேதான் வாழ்க்கை இருக்கும்; இன்ப துன்ப விளைவுகள் உண்டாகும். ஆனால் அவர்களுக்கு அவை அதிகமாக உறைப்பதில்லை. கம்பளிச் சட்டை போட்டுக் கொள்கிற மாதிரி அவர்கள் இறைவன் திருவருளைப் பக்க பல மாகப் பிடித்திருக்கிறார்கள். அந்தத் திருவருட் பலம் மதியினால் கிடைக்கும். மதி படைத்தவன் தனக்கு வரும் துன்பங்களை மிகச் சுருங்கிய அளவில் காண்கிறான்.

புலி கொல்வதைவிடக் கிலி கொல்வது மிகுதி என்று சொல் வார்கள். புலி கொல்வதற்கும் அஞ்சாமல் இருப்பவர்கள் வீரர்கள். "புலி கொன்றுவிடுமே! கொன்றுவிடுமே!" என்று கிலியினால் செத்துக் கொண்டிருப்பவர்கள் கோழைகள். சிறிய கல்லும் கோழைக்குப் பெரிய மலை போல இருக்கும். பெரிய மலைகளும் வீரர்களுக்குச் சிறிய கற்களாகத் தோற்றும்.

மதியின் ஆற்றல்

நல்ல பருமனாக இருக்கும் ஒருவனிடம் நூறு பவுண்டு கல்லைத் தூக்கிப் போ என்று சொன்னால், "ஐயோ! இதை எப்படி நகர்த்துவது" எனப் பயப்படுவான். மதி உடையவனாக இருந்தால், அக்கல்லைப் புரட்டக்கூட வலிமை இல்லா விட்டா

லும், நான்கு பேர்களை அழைத்து வந்து கல்லைக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவான். தானே தூக்குபவனும், பிறரை விட்டுத் தூக்கச் செய்பவனும் ஒரே ஒரு காரியத்தைச் செய்கிறார்கள்; ஏவல் செய்கிறார்கள். ஒருவன் உடலை ஏவுகிறான்; மற்றவன் மதியை ஏவுகிறான். ஒரு பெரிய பாலத்தை ஓர் என்ஜினியர் கட்டினார் என்று சொல்கிறோம். விஷயம் தெரியாதவன், ''அவரா கட்டினார்? கொத்தர்கள் அல்லவா கட்டினார்கள்?'' என்று நினைப்பான். என்ஜினியர் கட்டினார் என்பதும் உண்மை; கொத்தர்கள் கட்டினார்கள் என்பதும் உண்மை. என்ஜினியர் மதி நுட்பத்தால் ஏவியபடி கொத்தர்கள் நம் உழைப்பால் கட்டினார்கள். இப்படிப் பல கொத்தர்கள் கட்டினாலும் ஒருவன் கட்டினதாகச் சொல்கிறோம். ஒருவன் ஆணைக்குப் பலர் அடங்கி வேலை செய்தார்கள்; அதனால் அப்படிச் சொல்கிறோம்.

அதைப் போலவே உடம்பில் பல உறுப்புக்கள் இருக்கின்றன. நடப்பது கால்; வேலை செய்வது கை; சரி தப்புப் பார்ப்பது கண். இப்படிப் பல உறுப்புக்களும் ஒரு வேலையைச் செய்யும்போது செயல்படுகின்றன. ஆனால் உடம்பிலுள்ள எல்லா உறுப்புக்களையும் இயக்குகின்ற கருவியாக மதி உள்ளது. பல கொத்தர்களிடம் வேலை வாங்குபவராக என்ஜினியர் இருப்பது போல உடம்பிலுள்ள பல உறுப்புக்களிடமும் வேலை வாங்குபவனாக மதி இருக்கிறது. பல கொத்தர்கள் ஒரு பாலத்தைக் கட்டினாலும், பல கொத்தர்களையும் இயக்கிய என்ஜினியர் பாலம் கட்டினார் என்று சொல்வது போல, ஒரு காரியத்தைச் செய்வது உடம்பிலுள்ள பல உறுப்புக்கள் என்றாலும், அந்த உறுப்புக்களை இயக்கிய மதியே அக்காரியத்தைச் செய்வதாகச் சொல்வர். உடம்பின் பலத்தைச் செயற்படுத்துவது அறிவு. நுட்பமாக இருக்கும் ஒன்று செயல்படும்போது பெரிய காரியத்தைச் செய்துவிடுகிறது. ''இதை எப்படி அப்பா செய்தான்!'' என்று பலரும் மதிக்கக் கூடிய காரியத்தைச் செய்துவிடுவது அறிவு, ஞானம். ஞானம் இல்லாதவர்கள் ஒரு சிறு காரியத்தைச் செய்வதற்குக்கூட நடுங்குகிறார்கள்.

ஞானமும் அருளும்

ஞானம் எப்படி வருகின்றது? இறைவன் திருவருளால் வருகின்றது. இறைவன் திருவருளால் ஞானம் பெறாதவர்களுக்கு

உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் எமனாக இருக்கிறது. இறைவன் திருவருட் பலத்தைத் துணையாகக் கொண்டு எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லாதவன், மதி இல்லாதவன், எதைக் கண் டாலும் நடுங்குகிறான்; அஞ்சி அஞ்சிச் சாகிறான். எல்லாவற்றை யும் கிலிபிடித்த தன் மனத்தால் தீங்காகக் கற்பனை செய்து பார்த்துப் பயப்படுகிறான்.

வீண் அச்சம்

எங்கள் ஆசிரியர் ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியார் தம் வீட்டுத் திண்ணையில் பத்துப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவ்வூர்க் கோயில் யானை அவ்வழியே வந்தது. அவர் வீட்டு வாசலுக்கு எதிரே போகும்போது ஒரு மரத்திலிருந்து தேங்காய் தொப்பென்று கீழே விழுந்தது. அந்தத் தேங்காயின் மேல் யானை தன் காலைத் தூக்கி வைத்தது. அவ்வளவுதான்; தேங்காய் அப்படியே மட்டையோடு நசுங்கிப் போய் விட்டது. அதைப் பார்த்த திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் விம்மி விம்மி அழுதார். ''ஏன் ஐயா இப்படி அழுகிறீர்கள்?'' என்று ஒரு மாணவன் கேட்டான். ''இந்த யானையின் காலில் என் தலை அகப்பட்டுக் கொண்டிருந்தால் இப்படித்தானே சட்டினி ஆகப் போயிருக்கும்?'' என்று சொல்லி விட்டு மேலும் அழுதாராம். அவரோ திண்ணையின்மேல் இருந்தார். யானையோ வீதி வழியே போயிற்று. அவர் தலை யானையின் காலில் எப்படி அகப்படும்? ஆனாலும் யானையின் காலில் தம் தலை அகப் பட்டுக்கொண்டால் என்ன ஆகும் என்பதை அவர் மனத்திலே கற்பனை செய்துகொண்டு, இருக்கிற தொல்லை போதாது என்று விலை கொடுத்து வாங்கின மாதிரி அழுதார்.

அவரைப் போலவே நெஞ்சில் பலமில்லாத கோழைகள் பலர் இருக்கிறார்கள். இல்லாத ஒன்றை இருப்பது போலக் கற்பனை செய்துகொண்டு இவர்கள் சாகிறார்கள். நல்லவர்களைப் பொல்லாதவர்கள் என்று எண்ணி அவர்களோடு பழகுவது இல்லை. உலகில் ஒருவன் எப்படி நினைக்கிறானோ அப்படி விளைகிறது. ''யத் பாவம் தத்பவதி'' என்று வடமொழியில் ஒரு வாக்கியம் உண்டு.

கண்ணாடியால் வந்த சண்டை

சீனா தேசத்தில் ஒருவனுக்கு ஓர் அருமையான கண்ணாடி கிடைத்தது. அத்தேசத்தில் அப்போது கண்ணாடி என்பதே இல்லாத காலம். அவன் அதைப் பார்த்தான். அவன் முகம் தெரிந்தது. தன்னுடைய முகந்தான் அதில் தெரிகிறது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ''இதற்குள் ஒரு மனிதன் இருக்கிறானே; இவன்தான் தேவன் போலும்'' என்று எண்ணி அந்தக் கண்ணாடியை மிகவும் பத்திரமாகத் தன் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டான். தினந்தோறும் காலையில் எழுந்திருப்பது, மெள்ள அவ்வறைக்குள் தன் மனைவிக்கும் தெரியாமல் நுழைந்து பெட்டியைத் திறந்து கண்ணாடியைப் பார்ப்பது, மனைவி வந்துவிட்டால் பெட்டியை மூடிக்கொண்டு வந்துவிடுவது - இப்படிச் செய்து கொண்டிருந்தான். அவனுடைய செய்கையைக் கண்டு அவன் மனைவிக்கு ஐயம் உண்டாயிற்று. தன் கணவன் பெட்டியில் எதை ஒளித்து வைத்திருக்கிறான், எதற்காக இப்படி ஒளிந்து ஒளிந்து அறைக்குள் போகிறான் என்று அறிய வேண்டுமென்ற அவா அவளுக்கு உண்டாயிற்று.

ஒரு நாள் அவன் வீட்டில் இல்லாதபோது அவ்வறைக்குள் நுழைந்து பெட்டிக்கு மறு சாவி போட்டுத் திறந்து பார்த்தாள். அதற்குள் பளபள வென்று கண்ணாடி இருந்தது. அது கண்ணாடி என்று அவளுக்கும் தெரியவில்லை. சட்டெனக் குனிந்து பார்த்தாள். அவள் முகம் அதில் தெரிந்து. அவளுக்கு அது தன்னுடைய முகம் என்று உணரக்கூடிய அறிவும் இல்லை. 'நம் கணவன் யாரோ ஒரு பெண்ணை அல்லவா இங்கே நமக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருக்கிறான்?' என்று எண்ணினாள். அவனிடம் அவளுக்கு எல்லையில்லாக் கோபம் வந்துவிட்டது. ''ஒன்று என் சக்களத்தி இந்த வீட்டில் இருக்க வேண்டும்; அல்லது நான் இருக்க வேண்டும். இரண்டில் ஒன்று முடிவு செய்து விடுகிறேன்'' என்று மிக்க ஆங்காரத்தோடு தன் கணவன் வந்ததும் வராதது மாகச் சண்டைக்குப் போய் விட்டாள்.

அன்றைக்கு அவள் கணவன் தன்னுடன் ஒரு புத்தபிட்சுவையும் அழைத்து வந்திருந்தான். அவர் மிக்க பொறுமையாக, ''ஏன் அம்மா இப்படி உன் கணவரிடம் கோபிக்கிறாய்? அவர் என்ன தப்புச் செய்தார்? என்னிடம் சொன்னால் நான் விசாரிக்கிறேன்'' என்றார்.

''நீங்களே சொல்லுங்கள். இது நியாயமா? நான் இருக்கும் போது இவர் வேறு ஒரு பெண்ணை இந்த வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொள்ளலாமா?'' என்று அந்த அம்மாள் கேட்டாள்.

''நிச்சயம் வைத்துக் கொள்ளக் கூடாது. இவர் அப்படிச் செய்யக் கூடியவர் அல்லவே!'' என்று கூறிய பிட்சு அவன் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

''இவளை அன்றி வேறு எந்தப் பெண்ணோடும் நான் பழகி யதே இல்லை. நானாவது! வீட்டில் இவளுக்குத் தெரியாமல் ஒரு பெண்ணைக் கொண்டு வைத்துக் கொள்வதாவது!'' என்று பரிதாபமாகப் பேசினான் அவன்.

இதைக் கேட்டாளோ இல்லையோ அந்த அம்மாள் முன்னை யும்விட அதிகக் கோபம் கொண்டாள்.

''அழைத்துக்கொண்டு வந்து உள்ளே வைத்திருப்பதும் அல்லாமல் பொய்யா சொல்கிறீர்கள்? சுவாமி! நீங்கள் உள்ளே வாருங்கள். நான் காட்டுகிறேன்'' என்று அந்தப் புத்த பிட்சுவை உள்ளே அழைத்துக்கொண்டு போய்க் கண்ணாடியுள்ள பெட்டியைக் காட்டினாள்.

பிட்சு அதைத் திறந்து பார்த்தார். கண்ணாடியில் அவர் முகம் தெரிந்தது. அவர் உடனே ஆச்சரியம் மிக்கவராய்க் கூவினார்; ''அம்மா! அம்மா! இங்கே பாருங்கள். அந்த அம்மாள் நம் எல்லோ ருக்கும் இரகசியம் தெரிந்துவிட்டதே என்று எண்ணி வெட்கித் தன் தலையை மொட்டையடித்துக் கொண்டுவிட்டாள்'' என்றாராம். அவரவர்கள் பார்க்கிறபோது வெவ்வேறு முகம் தோற்றியது. அந்தத் தோற்றத்துக்குக் காரணம் கண்ணாடி யிலா இருக்கிறது? பார்ப்பவர்களிடம் இருக்கிறது.

உள்ளமும் உலகமும்

இப்படி இந்த உலகமாகிய கண்ணாடியைப் பார்க்கிறவர் களில் சிலருக்கு, ''உலகம் முழுவதும் இன்பமாகக் காட்சி அளிக் கிறது'' என்றால் அவர்களே இன்பத்தின் வடிவாக இருக்கிறார்கள். சிலர், ''உலகம் முழுவதும் துன்பம் நிரம்பி இருக்கிறது'' என்றால் அவர்களே துன்பத்தின் சின்னமாக இருக்கிறார்கள். ''உலகில் நல்லவர்களே இல்லை; திருடர்களும், நயவஞ்சகர்களும் நிரம்பி

யிருக்கிறார்கள்'' என்பவர்களே திருடர்கள், நய வஞ்சகர்கள். அதனால்தான் உலகத்திலுள்ளவர்கள் எல்லாரும் அவர்களுக்கு அப்படித் தோற்றுகிறார்கள். ''உலகிலுள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்கள்; ஆண்டவன் குழந்தைகள்'' என்று பார்க்கின்ற மக்கள் இல்லையா? இப்படிப் பல வழியாகக் கூர்ந்து பார்த்தால் அவரவர்களின் உள்ளத்தின் பண்பே உலகத்தில் பிரதிபலிப்பதை உணரலாம்.

ஆகவே, துன்பம் இன்பம் என்பவை அவரவர்களுடைய மனத்தின் பண்பையும், திண்மையையும் பொறுத்து இருக்கின்றன. ஒருவன் மலைபோல இருக்கிற பொருளைப் பொடியைப் போல் இருக்கக் காண்கிறான். அணு அணுவான திவலைகளைக்கூட ஒருவன் மலைபோல எண்ணி மலைத்து நிற்கிறான். எல்லா விதமான இன்ப போகங்களும் நிரம்பப் பெற்ற மாளிகையில் இருப்பவன் நரகத்தில் வாழ்பவனைப் போல அவதியுறுவதும் உண்டு. வறிய நிலையில் இருப்பவனோ வள வாழ்வு நிரம்பப் பெற்ற மாளிகையில் இருப்பதாக மகிழ்வதும் உண்டு. நரகத்தையே நல்லதாகப் பார்க்கிறவர்கள் இருக்கிறார்கள். மாணிக்கவாசகர் அத்தகையவர். ''இறைவனே! உன் திருவருள் துணை எனக்கு இருந்தால் நரகமானாலும் சரி, அங்கே சென்று வாழ்வேன்'' என்று சொல்கிறார்.

"..........................நரகம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின்இறைவா!"

இறைவன் திருவருள் இல்லாவிட்டால் இன்பலோகம் நரக லோகமாகத் தோற்றுகிறது. ஒரு சிறு துரும்பும் கட்டாரியாக இருக்கிறது. இறைவனது நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு நரகம் சுவர்க்கமாக இருக்கிறது. உலகில் உள்ளவர்கள் எல்லாரும் நல்லவர்களாக இருக்கிறார்கள். பெண்டு பிள்ளைகள் எல்லாரும் சொன்னதைக் கேட்பவர்களாக இருக்கிறார்கள்.

கோழைகளின் இயல்பு

''வாழ்விலே எவ்விதத் துன்பமும் இன்றி இவர்களைப் படைத்துவிட்டு என்னை எல்லாவிதமான துன்பங்களையும் அநு பவிக்கும்படியாக இறைவன் செய்து விட்டானே'' என அலறு

கின்ற மக்கள் யார்? அவர்கள் இறைவன் திருவருள் துணை இல்லாதவர்கள். பொழுது விடிந்து பொழுது சாய்வதற்குள் அவர் கள் படுகின்ற வேதனை, அஞ்சுகின்ற அச்சம், கொஞ்ச நஞ்சமா? தொட்டதற்கு எல்லாம் பயம். எல்லோரிடமும் சண்டை. சிறிய சிறிய துன்பங்கள்கூட அவர்களுக்கு மலை மலையாக இருக்கின்றன. இறைவன் திருவருள் இல்லாத இத்தகைய கோழைகளுக்கு எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் நேரம் இராது; ஆற்றல் இராது; மனத் திண்மை இராது. ''எனக்குச் சுதந்தரம் இருந்தால் அப்படிச் செய்வேன், இப்படிச் செய்வேன். அந்தப் பாவிதான் என்னை எதுவும் செய்யவிடாமல் அடிக்கிறானே!'' என்று பழியைப் பிறர்மேல் சுமத்தி ஏமாந்தும் உலகை ஏமாற்றியும் வருபவர்கள் இந்தக் கோழைகள். இக்கோழைகளுக்கு மலை மலையாகத் தோன்றும் துன்பங்கள் இறைவன் திருவருளால் ஞானம் பெற்ற வீரர்களுக்குப் பொடிப் பொடியாகப் போகின்றன.

2

இந்த இரண்டையும் பிணைத்து அருணகிரியார் ஒரு பாட்டைச் சொல்கிறார்.

பொட்டாக வெற்பைப் பொருதகந்
 தா!தப்பிப் போனதுஒன்றற்கு
எட்டாத ஞான கலைதரு
 வாய்;இரும் காமவிடாய்ப்
பட்டார் உயிரைத் திருகிப்
 பருகிப் பசிதணிக்கும்
கட்டாரி வேல்விழி யார்வலைக்
 கேமனம் கட்டுண்டதே.

நுட்பமான பொருளைப் பெரிதாகக் கருதி அஞ்சுகின்றவர் ஒரு சாரார். பெரிய பொருளை அடியோடு பொடியாக்குகின்றவர் ஒரு சாரார்.

மலையைப் பொடியாக்கியது

மனிதனுக்கு இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும் அதற்கு உவமையாக மலையைச் சொல்வது வழக்கம். ''மலை

மலையாகச் செல்வம் அவனிடத்தில் சேருகிறது'' என்பார்கள். அதேபோல, ''மலை போலத் துன்பம் வந்துவிட்டதே!'' என்று தலையின்மேல் கை வைத்துக் கொள்கிறவர் எத்தனை பேர்!

ஞானத்தையே வேலாக உடைய முருகன் தேவர்களுக்கு மலை மலையாக வந்த துன்பங்களை அழிந்து போகும்படி செய் தான். அவர்களுக்குத் துன்பம் அளித்து வந்த அசுர மலைகள் எல்லாம் பொடிப் பொடியாகும்படி செய்தான். தேவர்களை அழிக்க வந்த பெரிய மலை ஒன்று இருந்தது. அதற்குக் கிரவுஞ்சம் என்று பெயர். அதைக் கண்டு முதலில் மலைத்தார்கள் தேவர்கள். இறைவன் அதைப் பொடிப் பொடியாக்கினான். மலைபோல வந்தது பனி போலப் போயிற்று என்பார்களே, அப்படி ஆகிவிட்டது.

கலையும் வலையும்

ஞானத்தையே வேலாக உடைய பெருமானிடத்தில் ஞான கலையைப் பெறவேண்டும். அதனால் மலையையும் பொடிப்படுத்தி விடலாம். அதனைப் பெறாதவர்கள் துன்புறுகிறார்கள். அவர்கள் அகங்காரத்தால் அவன் திருவடி சேராது தலை திரும்பி நிற்பவர்கள். முன்னவர்களுக்கு விளைவது ஞானம். பின்னவர்களுக்கு விளைவது மையல். ஞானம் உடையவர்கள் மலையையும் பொடியாக்குவார் கள். ஞானம் இல்லாதவர்களோ, ஒன்றும் இல்லாத சிறியதையும் பெரிய மலையென்று அஞ்சுவார்கள். ஓரிடத்தில் ஞான கலை இருக்கிறது; மற்றோர் இடத்தில் காம விடாயினால் உண்டாகின்ற மையல் வலை இருக்கிறது. ஞான கலையைத் தரும் தலைவன் கந்தன். மையல் வலையை வீசுபவர்கள் கட்டாரி வேல் விழியார். இரண்டு பேர்களிடமும் வேல் ஆயுதமாக இருக்கிறது. அவன் வேலாயுதன். இவர்கள் வேல் விழியார்கள்.

வேலாயுதன் செய்ததை அருணகிரியார் சொல்கிறார்.

வெற்பைப் பொருதது

பொட்டாக வெற்பைப் பொருத கந்தா!

சாதாரண மலையைக் கண்டாலே நாம் மயங்குகிறோம். நிற்கின்ற மலைகள் இவை. கந்தன் பொடியாக்கியதோ பறந்த மலை; ஆகாயத்தில் பறந்து சென்று எங்கே ஜன நெரிசல்

அதிகமாக இருக்கிறதோ அங்கே அப்படியே உட்கார்ந்து எல்லாச் சீவராசிகளையும் சங்காரம் செய்த மலை. அந்த மலையை அப்படியே கண்களுக்குத் தெரியாதபடி பொட்டுப் பொட்டாக ஆக்கினான் கந்தன். பூச்சி, பொட்டு என்று சொல்வது மரபு. பூச்சி கண்ணுக்குத் தெரிவது; கண்ணுக்கே தெரியாதது பொட்டு.

வெற்பு – மலை. மலை என்ற சொல்லிலிருந்து மலைப்பு என்ற சொல் உண்டாகிறது. மலைப்பை உண்டாக்குவது மலை. பின்னாலே இருக்கும் பொருளை மறைத்து, முன்னால் இருக்கிறவனுக்கு மலைப்பை, அச்சத்தை உண்டு பண்ணும் மலையைக் கண்ணுக்குத் தெரியாத பொட்டுப் பொட்டாகப் போகும்படி பொருதான் கந்தன். அவனுடைய அருள் பெற்றவர்களும் அவனைப்போல இருப்பார்கள். ''அரசன் எப்படி, குடிகளும் அப்படி'' என்பது வழக்கு. அவன் திருவருளைப் பெற்றவர்கள், மலைபோல் இருக்கும் துன்பங்களைக் கண்ணுக்குத் தெரியாத பொட்டாக ஆக்குகின்ற ஆற்றல் அடைவார்கள். நமக்கு அந்த ஆற்றல் வரவில்லை. அதற்குக் காரணம் இன்னதென்பதை அருணகிரியார் சொல்கிறார்.

தப்பிப் போன மனம்

தப்பிப் போனது ஒன்றற்கு
எட்டாத ஞான கலைதருவாய்.

''என் கைக்குள் ஒன்று அகப்படாததனாலே மலையைப் பொட்டாக்கும் ஆற்றல் எனக்கு இல்லை. அதைப் பிடித்து என் ஆணைக்கு அடங்க வைத்து, ஞான கலையை வாங்க வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அது எனக்கு அகப்பட்டால் அல்லவா ஞானத்தை வாங்க முடியும்?''

தப்பிப் போனது ஒன்று.

''அந்த ஒன்று மனம். மனத்தை என் பிடிக்குள் அகப்படுத்தி, உன் திருவடியிலே விழச் செய்து அதற்குக் கொஞ்சம் ஞானம் ஊட்டலாம் என்று எண்ணினேன். அப்படிச் செய்திருந்தால் மலை மலையாக வரும் துன்பங்களைப் பொட்டுப் பொட்டாக ஆக்கியிருப்பேன். ஆனால் அந்த மனம் பிடிக்கு அகப்படாமல் தப்பிப் போய்விட்டதே! அதற்கு எட்டாத ஞான கலையை

வழங்க வேண்டும் அப்பா. என் ஆற்றல் பலிக்கவில்லை. ஆகவே உன்னை வேண்டிக் கொள்கிறேன்'' என்கிறார் அருணகிரியார்.

தாழம்பூவும் மனமும்

தாழம்பூவைப் பார்த்திருக்கிறோம். தனியாக இலை வேறு, பூ வேறு என்று இல்லாமல் இலையே பூவாக இருப்பது தாழம்பூ. இரண்டு இலைக்கும் வேறுபாடு உண்டு. இலையில் முள் இருக்கும்; பூவில் முள் இராது. இலை பச்சையாக இருக்கும்; பூ மஞ்சளாக இருக்கும். இலைக்கு மணம் இல்லை; பூவுக்கு மணம் உண்டு. ஆனால் இலையின் நுனிப் பகுதியே பூ. மேலேயுள்ள பச்சையான மணமற்ற முள் இலைகளை ஒவ்வொன்றாகக் கழித்து விட்டால் கடைசியில் மஞ்சள் நிறமான முள் இல்லாத இலை கிடைக்கும். அதற்கு மணம் உண்டாதலால் அது பூவாகிறது.

அதைப் போலவே மனம் இருக்கிறது. மனத்தைச் சுற்றியுள்ள முரட்டுத்தனம், சோம்பேறித்தனம் ஆகிய படலங்களை அகற்றி விட்டால் குழைவு, சுறுசுறுப்பு ஆகிய முள் இல்லாத படலங்கள் வெளிப்படுகின்றன. அது மாத்திரம் அல்ல. அன்பாகிய நறுமணம் அதில் கமழும். நம் மனம் தாழம்பூ ஆக வேண்டுமானால் மனத்தைச் சுற்றியுள்ள வாசனை அற்ற முள் இலைகளைக் கழிக்க வேண்டும். அது நம் கைக்குள் அகப்படாமல் தப்பிப் போய்விடுகிறது.

கட்டுப்பாடு

நமக்கு நாமே கட்டுப்படுவது இன்பம். பிறருக்குக் கட்டுப் படுவது துன்பம். நாமே நம் வீட்டுக்குள்ளே நுழைந்து கொண்டு தாழ்ப்பாள் போட்டுக்கொள்வது பாதுகாப்பு. நம்மை உள்ளே தள்ளிப் பிறர் வெளியே பூட்டிடுவது சிறை. இரண்டு இடங்களுக்கும் வேறுபாடு பொதுவாகப் பார்த்தால் ஒன்றும் இல்லை. நான்கு பக்கமும் இரண்டு இடங்களிலும் சுவர்கள் உள்ளன. கதவு இருக் கிறது. பூட்டு இருக்கிறது. ஆனால் இங்கே போட்ட பூட்டு, பிறர் போட்டது. அங்கே போட்ட பூட்டு நாமே போட்டுக் கொண்டது. நாமே பூட்டுப் போட்டுக் கொண்டது வெளியில் இருந்து பகைவர்கள் உள்ளே வராமல் இருப்பதற்காக. பிறர் போட்ட பூட்டு நாம் வெளியே தப்பிப் போய்விடாமல் இருப்பதற்காக. ஆகவே முன்னால் நாம் இருக்கும் இடம் பாதுகாப்பான இடம்.

பின்னால் நாம் உள்ள இடம் சிறை. பாதுகாப்பான இடத்தில் இன்பம் உண்டாகிறது. சிறையில் துன்பம் அநுபவிக்கிறோம்.

அதைப் போல மனம் நமக்குக் கட்டுப்பட்டிருந்தால் இன்பம் பெற்றிருக்கும். நம் கைக்குள் அகப்படாமல் தப்பிப் போய்ப் பிறருக்குக் கட்டுப்பட்டுச் சிறைப்படுகிறது. அதனாலே அதற்கு வருகின்றது துன்பம்.

வலைப்பட்ட மனம்

மனத்தை நாமே கட்டலாம், கட்டி முருகனிடத்திலிருந்து ஞான கலை கொஞ்சம் வாங்கி ஊட்டலாம் என்று நாம் நினைக்க, அது நம் பிடிக்கு அகப்படாமல் தப்பிப் போகிறது. தப்பிப் போனது ஒன்று யாருக்கும் கட்டுப்படாமல் இருந்தால் மறுபடியும் அதைக் கட்ட நாம் முயற்சி செய்யலாம். ஆனால் அதுவோ வேறு ஒருவரிடத்தில் கட்டுப்படுகிறது. நமக்குக் கட்டுப்பட்டிருந்தால் ஞான கலையை எட்டிப் பிடித்திருக்கும். தப்பிப் போனதனால் அதற்குக் கலைஞானம் எட்டாது போய்விட்டது. வேல்விழியாருக்குக் கட்டுப்பட்டதனால் கிடைத்தது என்ன? மையல் வலை. அவ் வலையை விரித்து நம் பிடிக்குத் தப்பிப்போன மனத்தைச் சிக்க வைத்துச் சிறைப்படுத்திவிட்டனர் கட்டாரி வேல்விழியார்.

3

இரும்காமவிடாய்ப்
பட்டார் உயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்கும்
கட்டாரி வேல்விழியார்.

இரும் – பெரிய, பரந்த. காம விடாய் – காமத்தினால் எழுகின்ற தாகம். காமம் என்பது மனத்திலே தோற்றுகின்ற உணர்ச்சி. இந்த உணர்ச்சி வசப்பட்டுக் கட்டாரி வேல் விழியார் வலையில் சிக்குண்டு தடுமாறின உயிர்கள் ஒன்றா இரண்டா? சரித்திரங்களும், புராணங்களும் கதைகதையாகச் சொல்கின்றன. காமவிடாய்ப் பட்டாருடைய உயிரைக் கட்டாரி வேல்விழியார் என்ன பாடு படுத்தி விடுகிறார்கள் தெரியுமா?

திருகிப் பருகிப் பசி தணிக்கும்.

உயிரைத் திருகுவதாவது அது போகிற போக்கில் செல்ல விடாமல் தனக்குள் அடக்குவது. காமவிடாய்ப் பட்டாருடைய உயிரை அது போகிற போக்கில் போக விடாமல் தனக்குள் அடக்கிப் பசி தணிகிறது விழி. உலகில் உள்ள எல்லோரையுமே வேல்விழியார் அப்படிச் செய்ய முடியுமா?

உலகில் காமவிடாய்ப்பட்டவர்களும் இருக்கிறார்கள்; ஞான கலை உடையவரும் இருக்கிறார்கள். ஞான கலை உடையவரிடத்தில் கட்டாரி வேல்விழியாரின் ஜபம் ஒன்றும் சாய்வதில்லை. காமவிடாய்ப்பட்டாருடைய உயிரைத்தான் திருகிப் பருகிப் பசி தணியும். காமவிடாய்ப்பட்டவன் கலாசாலையில் படிப்பவனாய் இருந்தால் படிப்பில் அவன் மனம் ஓடாது. உத்தியோகசாலையில் இருந்தால் வேலையில் மனம் ஓடுகிறது இல்லை. அவன் தன் கடமைகளைச் செய்யும் இடங்களிலெல்லாம் குறுக்கிட்டு வழியை மாற்றி, கடமையைச் செய்யவொட்டாமல் முறித்து, வேல் விழியாரின் நினைவாகவே எப்போதும் இருக்கும்படி செய்து விடுகிறது. வாழ வேண்டுமென்று அவன் எண்ணினாலும் கொஞ்சங்கூட வாழவொட்டாமல் சிதைத்துவிடுகிறது காமவிடாய்.

கட்டாரி வேல்விழி யார்வலைக்
கேமனம் கட்டுண்டதே.

''என் கைக்குள் அகப்படாமல் தப்பிப்போன மனம் கட்டாரியைப் போலவும், வேலைப் போலவும் இருக்கும் விழியாருடைய வலைக்குள் கட்டுண்டுவிட்டது'' என்கிறார் அருணகிரியார்.

கண் சிறிய உறுப்பு. இருந்தாலும் காமவிடாய்ப் பட்டாருக்கோ அது பெரிய கட்டாரியைப் போலவும், வேலைப் போலவும் இருக்கிறது. மகளிருடைய கண்கள் பசியோடிருக்கின்றன. யாரைக் குத்தி வலையில் அகப்படுத்தலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. ஆள் அகப்பட்டால் உயிரைத் திருகிப் பருகிப் பசி தணித்துக் கொள்கின்றன.

ஞானமும் வேலும்

பின்னால் இருக்கும் பொருள்களை எல்லாம் மறைத்து, முன்னால் இருப்பவர்களுக்கு மலைப்பை உண்டாக்கிய பெரிய மலையை ஆண்டவன் பொட்டுப் பொட்டாக ஆக்கினான்.

அவன் திருவருளால் ஞான கலை பெற்றவர்களும் அப்படிச் செய்கிறார்கள்.

மையல் வலைக்குக் கட்டுப்படாமல் இருப்பது ஞான கலை உள்ள மனம். யார் ஞான பண்டித சாமியோ, யார் ஞான கலாநாதனோ அவனிடத்திலிருந்து ஞான கலை வர வேண்டும். ஞானமென்னும் கலையையே ஒளி வீசும் கூர்மை உடைய வேலாகத் தன் திருக்கரத்தில் அவன் வைத்திருக்கிறான். அது மலையைப் பொட்டுப் பொட்டாக்கிய வரலாறு நமக்குத் தெரியும். அவன் அருளால் நமக்கும் அவனிடத்திலிருந்து கொஞ்சம் ஞான கலை கிடைத்தால் மலை மலையாக நமக்கு வருகின்ற துன்பங் களைப் பொட்டுப் பொட்டாக ஆக்க முடியும்.

ஞானிகளும் கலைஞர்களும்

ஞானிகளுக்கும், கலைஞர்களுக்கும் வேற்றுமை அதிகம் இல்லை. வால்மீகி முனிவரைப் போன்ற மகாஞானி யாராவது இருக்க முடியுமா? அவரைப்போன்ற கலைஞனும் இல்லை. ஞானி தன் அளவில் அநுபவத்தைப் பெற்றிருக்கிறான். கலைஞன் தான் பெற்ற அறிவைப் பிறருக்கும் பயன்படச் செய்கிறான். ஒரு சாலை வழியே போகும்போது சப்பாத்திப் புதரைப் பார்த்தால் நாம் வெறுக்கிறோம்; ரோஜாச் செடியைக் கண்டால் மகிழ் கிறோம். ஞானிகளுக்கு ரோஜாச் செடியைப் பார்க்கும்போதும், சப்பாத்தி முள்ளைப் பார்க்கும்போது வெறுப்போ மகிழ்வோ உண்டாவதில்லை. கலைஞன் ரோஜாச் செடியையும் மகிழ்வோடு பார்க்கிறான்; சப்பாத்தியையும் மகிழ்வோடு பார்க்கிறான். இரண் டையும் சித்திரமாக எழுதுகிறான். ஆகவே, ஞானியும் கலை ஞனும் ஒரே நிலையில் இருந்து எதையும் பார்க்கிறார்கள். ஞானி விருப்பு வெறுப்பு இல்லாத நிலையில் இருந்து பார்த்தால், கலைஞன் மகிழ்ச்சி என்ற நிலையில் இருந்து பார்க்கிறான்.

ஞானசம்பந்தர்

ஞானசம்பந்தப் பெருமான் ஞான கலையுடையவர்.

"உவமையிலாக் கலைஞானம் ஓதரிய மெய்ஞ்ஞானம்"

ஆகியவற்றைப் பெற்றார் ஞானசம்பந்தர் என்று சொல்கிறார் சேக்கிழார். எம்பெருமாட்டி குழைத்துக் கொடுத்த சிவஞானப்

பாலை உண்டவர் அவர். பாலைக் குடித்த உடனே ஞானம் வெள்ளமாகப் பொங்கியது. அது வெறும் ஞானம் அல்ல; கலை ஞானத்தோடு கலந்த மெய்ஞ்ஞானம். சம்பந்தப் பெருமானுக்கு ஞான கலை கிடைத்ததனாலே அவர் தம் அளவில் இன்பத்தை அநுபவிப்பதோடு நில்லாமல் பிறருக்கும் அதை அளித்தார்; ஞானா சிரியராகத் திகழ்ந்தார். வழிவழியாக வந்துகொண்டே இருக்கும் மனித சமுதாயம் தம் காலத்திற்குப் பிறகும் படித்துப் பயனுற்று ஞானம் எய்துவதற்குத் தக்க தேவாரத் திருப்பதிகங்களைத் தமிழில் வெள்ளமாகப் பொழியும் ஆற்றலும் அவருக்கு உண்டாயிற்று. கலை ஞானம் பெற்றவர் ஆதலால் அது உண்டாயிற்று.

மூன்று வயசு முதலே எம்பெருமான்மீது பல பல திருப் பதிகங்களைப் பாடிக்கொண்டு ஒவ்வொரு தலமாகச் சுற்றிவர ஆரம்பித்தார் சம்பந்தர். அவருக்கு வயசு பதினாறு ஆயிற்று.

அந்தக் காலத்தில் மயிலாப்பூரில் சிவநேசர் என்ற பெயருடைய ஒரு செட்டியார் இருந்தார். சிவபெருமானிடத்தில் உண்மையான அன்பு பூண்டு சிவனடியார்களிடத்தில் மிக்க அன்பு உடையவராக இருந்தார். அவர் ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றைக் கேள்வி யுற்று அவரைக் காணவேண்டும், அவருக்குத் தம்முடைய பெண் ணாகிய பூம்பாவையை மணம் செய்து கொடுக்கவேண்டுமென்ற ஆசை உடையவராக இருந்தார்.

மூன்று வயசிலே புறப்பட்ட சம்பந்தப்பெருமான் ஒவ்வொரு தலமாகச் சென்றுவிட்டுப் பதினாறு ஆண்டு நிரம்பப் பெறும் போது தொண்டை நாட்டுக்கு வந்தார்.

அதற்குள் இங்கே சிவநேசச் செட்டியாரின் புதல்வி பூம்பாவை ஒருநாள் பூக் கொய்யும்போது அரவம் தீண்டியதால் மாண்டு விட்டாள். ''சீகாழிப் பிள்ளையாருக்கு இவளைக் கொடுக்க வேண்டும் என்று நான் முடிவு செய்திருக்க, இப்படி இறந்து போய்விட்டாளே! ஞான சம்பந்தப் பெருமானுக்கு உரிய பொருளை நான் இப்பொழுது எவ்வாறு ஒப்படைப்பேன்!'' என்று செட்டியார் மிகவும் வருந்தினார். ''நாம் ஒன்று நினைக்க இறைவன் திருவருள் வேறாக இருக்கிறது. ஆனாலும் நினைத்த காரியத்தைச் செய்யவேண்டும். நாம் பெற்றெடுத்த இந்த உடம்பில் எஞ்சி இருப்பது எலும்பு. அதையாவது அப்பெருமானிடம்

ஒப்படைக்கத்தான் வேண்டும்'' என்று எண்ணித் தகனம் ஆன மறுநாள் பொறுக்கிய எலும்புகளை எல்லாம் ஒரு பானையில் போட்டு வைத்திருந்தார்.

பூம்பாவை எழுதல்

ஞானசம்பந்தப் பெருமான் திருவொற்றியூர் வந்தார். வந்தவுடனேயே சிவநேசர் அப்பெருமானை எதிர் சென்று மயிலைக்கு அழைத்து வந்து, நடந்த வரலாறுகளைச் சொல்லிப் பூம்பாவையின் எலும்புகளை வைத்திருக்கும் பானையை அவர் முன் கொண்டு வந்து வைத்து, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இறைஞ்சினார். சிவநேசச் செட்டியாரின் அன்பு தம் உள்ளத்தைத் தொட்டு விட்டதால், ஞானசம்பந்தர் அதை ஏற்றுக்கொண்டார். பலரும் அப்பானையைக் காணுமாறு கோயிலுக்குப் புறம்பே ஓரிடத்தில் வைத்து, உள்ளம் உருக, ''மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலை'' என்ற பதிகத்தைத் தொடங்கி, ''போதியோ பூம்பாவாய்'' என்று ஒவ்வொரு பாட்டும் முடியும்படி பாடினார். அப்பாட்டைக் கேட்ட பூம்பாவையின் எலும்புகள் ஒன்றுகூடி அழகான பெண் உருவாயின. திருமயிலையிலே ஆண்டுதோறும் முழுங்கை வழியே நெய் வார அடியார்களுக்கு அன்னமிட்டுக் கொண்டாடும் விழாக்கள் பல நடந்தன. ''அவ்விழாக்களை எல்லாம் கண்டுகளிக்காமல் நீ போகிறாயோ பூம்பாவையே!'' என்று ஞான சம்பந்தப் பெருமான் தம் பாட்டில் பாடியிருந்தார்.

ஞானசம்பந்தர் இறைவனை விளித்துப் பாடியிருக்கிறார். மக்களை நோக்கிப் பொதுவாகப் பாடியதுண்டு. தம் நெஞ்சைப் பார்த்தும் பாடியுள்ளார். தனிப்பட்டவர்களைப் பார்த்துப் பாடியதில்லை. ஆனால் இரண்டு பெண்களின் பெயரைச் சொல்லி அழைத்துப் பாடியிருக்கிறார். சம்பந்தர் பாட்டில் விளித்துப் பாடும் பாக்கியம் பெற்றவர்கள் மங்கையர்க்கரசியாரும் பூம்பாவையுமாவர். ஒவ்வொரு பாட்டிலும் பூம்பாவாய் என்று அவளை விளிக்கிறார்.

அவர் பாடினவுடனே அந்தப் பருவத்திற்கு ஏற்ற வளர்ச்சியோடு முட்டையிலிருந்து குஞ்சு வெளிவருவது போல ஞான சம்பந்தப் பெருமான் முன் நின்றாள் பூம்பாவை. அவளைக் கண்டவுடனே சிவநேசருக்கு ஆனந்தம் பொங்கிற்று. ''இறந்து

போன என் பெண் தங்களுடைய திருவருளினால் உயிர்பெற்று மீண்டும் எழுந்து விட்டாள். இவளைத் தாங்களே திருமணம் செய்து கொண்டருளவேண்டும்'' என்று ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சினார்.

''நீ பெற்ற பெண் அப்பொழுதே பாம்பு கடித்து இறந்து விட்டாள். இந்தப் பெண்ணை நான் இப்பொழுது பெற்றேன். இவளுக்கு நான் தந்தை அல்லவா? நான் எவ்வாறு இவளை மணம் செய்துகொள்ள முடியும்?'' என்று சொன்னார் ஞான சம்பந்தர். அவருக்கு வயசு அப்போது பதினாறு. நல்ல காளைப் பருவம். திருமணம் செய்துகொள்வதற்கு உரிய பருவத்தினர். இந்தக் காலத்தில் இத்தகைய வயசும், புகழும் உடைய எவனாவது நல்ல அழகான பெண்ணைப் பார்த்தால் மணம் வேண்டாம் என்று சொல்வானா? எம்பெருமாட்டியின் திருவருளாலே ஞான கலை பெற்ற பெருமான் அவர். ஆதலால் அழகுப் பிழம்பாய்த் தம் முன் நின்ற பூம்பாவையின் எழில் வண்ணத்தை அவர் காணவில்லை. அவளைக் கண்டபோது காமம் உண்டாகவில்லை. தம் பெண்ணாகக் கண்டார். இதைச் சேக்கிழார் சொல்கிறார்.

பிரமனும் சம்பந்தரும்

இங்கே ஞானசம்பந்தப் பெருமான் பூம்பாவையைப் படைத்தார். எண்ணிலாத ஆண்டுகளாகப் படைப்பதையே தன் தொழிலாகக் கொண்ட முதியவனும் வேதம் உணர்ந்தவனுமாகிய பிரமதேவனும் ஒரு பெண்ணைப் படைத்தான். ஞானசம்பந்தப் பெருமான் பூம் பாவையை உருவாக்கி எழுப்பினார். பிரமதேவன் கலைமகளைப் படைத்தான். படைத்தவுடனே, அவளது எழிலின் வண்ணம் கண் டான். ''அழகாக இருக்கிறாளே; இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட வேண்டும்'' என்று அவன் எண்ணினான். தன்னுடைய பெண் என்று அவன் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் மணந் திருப்பானா? பார்ப்பதற்கு அவனுக்குக் கண் இல்லையா? எட்டுக் கண்கள் உடையவன்; தன்னுடைய நான்கு முகங்களாலும் பார்த்தான். அவனுக்கு வயசு என்ன கொஞ்சமா? பல்லாயிரம் ஆண்டுகள் சென்ற கிழவன்; பிதாமகன். அதோடு வேதம் சொல் கிறவன். உலகமே அவனை வேதா என்று கொண்டாடுகிறது. அவன் என்ன செய்தான்?

''எண்ணிலாண்டு எய்தும் வேதாப்
படைத்தவள் எழிலின் வண்ணம்
நண்ணும்நான் முகத்தால் கண்டான்.''

தான் படைத்த படைப்பைத் தன்னுடைய பெண்ணாகப் பார்க்கும் ஞானம் அவனுக்கு இல்லை. அவள் எழிலின் வண்ணம் கண்டு மணந்தான்.

அவன் பல ஆண்டு சென்ற கிழவன். ஆனால் ஞான சம்பந்தரோ பதினாறு வயசு நிரம்பப்பெற்ற காளை. இவரது படைப்புப் பூம்பாவை. பிரமன் தன் படைப்பை எப்படிக் கண்டான், கலை ஞானம் உண்ட ஞானசம்பந்தர் தமது கட்டிளங் காளைப் பருவத்தில் தம் படைப்பை எப்படிக் கண்டார் என்ற இரண்டையும் இணைத்துச் சேக்கிழார் சுவாமிகள் சொல்கிறார்.

''எண்ணிலாண்டு எய்தும் வேதாப்
படைத்தவள் எழிலின் வண்ணம்
நண்ணுநான் முகத்தால் கண்டான்;
அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு
பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிரம் முகத்தால் கண்டார்.''

எண்ணில் அடங்காத வயசான பிதாமகன், தான் படைத்த சரஸ்வதி தேவியின் எழிலின் வண்ணத்தைக் கண்டான்; தான் படைத்தவளை அழகுப் பிழம்பாகப் பார்த்தான். காமம் உண்டா யிற்று; மணந்து கொண்டான். ஆனால் ஞானசம்பந்தப் பெருமான் பூம்பாவையைப் படைத்தார்.

பூம்பாவை சரஸ்வதியைக் காட்டிலும் நல்லாள். எப்படி நல்லவள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டுமானால் தமிழ் நூல்களைப் பார்க்க வேண்டும். தன்னைப் பார்க்கிறவர்களுக்குத் தீய எண்ணம் உண்டாகாமல் தோன்றுபவள் நல்லவள். கலைமகள் மற்றத் திறத்தில் நல்லவளே. ஆனால் அவள் உருவம் பிரம தேவன் கண்ணிலே பட்ட மாத்திரத்தில் அவளை மணக்க வேண்டு மென்ற ஆசை அவனுக்கு மூண்டது. பூம்பாவையின் உருவமோ

ஞான சம்பந்தப் பெருமான் உள்ளத்தில் காம எழுச்சியை உண்டாக்கவில்லை. பிறர் நெஞ்சு புகாத கற்பு என்று இதைச் சொல்வார்கள். பூம்பாவை எழுந்தாள். அவள் அழகு ஞான சம்பந்தப்பெருமான் உள்ளத்தில் கலக்கத்தை உண்டாக்கவில்லை.

அது மட்டுமா? சரஸ்வதியைப் படைத்தவன் பிரமன். இங்கே ஞானசம்பந்தப் பெருமான் பூம்பாவையைச் சிவபெருமானின் அருளினால் படைத்தார். ஆகவே இது மூலப் படைப்பு. பிரமன் படைப்பாகிய கலைமகளைவிடச் சிவபெருமான் அருளால் படைக்கப்பெற்ற பூம்பாவை பின்னும் நல்லவள் என்பதில் தவறு என்ன?

அவளைப் புண்ணியப் பதினாறு ஆண்டு பேர்பெறும் புகலி வேந்தர் ஆகிய ஞானசம்பந்தர் கண்டார். அவளைப் பார்க்கும் போது அவருக்கு இரண்டு விதமான உணர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். அவள் எழிலைப் பார்ப்பதனாலே காமம் உண்டாகியிருக்கலாம்; அல்லது நாம் படைத்தோம் என்ற நினைப்பினாலே அகங்காரம் முளைத்திருக்கலாம். எம்பெருமாட்டியின் திருக்கரத்தால் கலை ஞானம் ஊட்டப் பெற்றவர் ஞானசம்பந்தர். ஆகவே தம்முன் நின்ற பெருமாட்டியின் எழிலை அவர் காணவில்லை. தாம் படைத்த படைப்பின் ஆற்றலையும் அவர் காணவில்லை. காமமும் இல்லை; ஆணவமும் இல்லை. பின் எதைக் கண்டார்?

''கண்ணுதல் கருணை வெள்ளம்
ஆயிரம் முகத்தால் கண்டார்.''

ஆண்டவனுடைய கருணையினால் எல்லோரும் மகிழும்படியாகப் பூம்பாவை உயிர் பெற்றாள் என்று இன்புற்றார். ஆண்டவன் கண்ணுதல்; ஞானக் கண்ணை நெற்றியில் பெற்றவன். அவன் அருளில் காமத்துக்கு இடம் இல்லை. அந்த நெற்றிக்கண் காமனை எரித்ததல்லவா? ஞானம் காமத்தையும் அகங்காரத்தையும் தோன்றாமல் செய்து விட்டது. புறக்கோலத்தைப் பாராமல் ஞானக் கண்ணால் இறைவன் திருவருளைப் பூம்பாவையின் வடிவத்தில் கண்டார் சம்பந்தர். தன் எட்டுப் புறக் கண்களால் பிரமன் பார்த்துக் காமத்தினாலே மனச் சலிப்புக் கொண்டான். ஆனால் கலை ஞானம் உடைய சம்பந்தரோ ஒரு முகம் உடையவர்தாம் என்றாலும் தமது ஞான உள்ளத்திலே முளைத்த

ஆயிரம் முகம் கொண்டு கண்டார். ''அவள் என் மகள்'' என்று கூறி அப்பெண்ணை மணக்க மறுத்தார்.

ஞான கலை படைத்தவர்களின் கண்களில் படுகின்ற கட்டாரி வேல்விழியார் அவர்களை என்ன செய்ய முடியும்? பெண்களைக் காண்பதால் காமவிடாய்ப் படுகிறவர்கள் ஞானம் இல்லாதவர்கள். அப்பெண்களின் விழி அவர்களது உயிரைத் திருகிப் பருகிப் பசி தணிக்கும். ஞான கலை பெற்ற ஞானிகளோ அவர்களைத் தங்கள் சேய் போலப் பார்த்துவிடுகிறார்கள். காமம் உண்டாக வழி ஏது?

அருணகிரியார் பிரார்த்தனை

இதை உணர்ந்து நமக்கு உணர்த்துபவர் போல அருண கிரியார் இப்பாட்டில் பாடுகிறார். ''பெரிய மலையைப் பொட்டுப் பொட்டாக ஆக்கிய கந்தனே! நான் என் மனத்தைக் கட்டலாம் என்று எண்ணினேன். அது எனக்குத் தப்பிப் போய்விட்டது. தப்பிப் போனது மாத்திரம் அல்ல. காமவிடாய்ப் பட்டாருடைய உயிரைத் திருகிப் பருகிப் பசி தணிக்கும் கட்டாரி வேல்விழியார் வலையில் சிக்குண்டு விட்டது. இப்பொழுது நான் என்ன செய் வேன்! ஞானகலை உடையவனாய் இருந்தால் மலை மலையாகத் துன்பம் வந்தாலும் உன்னைப் போல் பொட்டுப் பொட்டாக ஆக்கிவிடுவேனே! இல்லாததனால் அல்லவா காமவிடாய்ப்பட்டேன்? மாதர்களுடைய சிறிய உறுப்பாகிய கண் என் உயிரைத் திருகிப் பருகிப் பசி தணிக்கும் கட்டாரியாகவும், வேலாகவும் இருக் கிறது. என் கைக்குள் அகப்படாமல் தப்பிப்போன மனமாகிய ஒன்றிற்கு எட்டாத ஞானகலையைத் தருவாய் அப்பா!'' என்று பிரார்த்தித்துக் கொள்கிறார்.

பொட்டாக வெற்பைப் பொருதகந்
 தா!தப்பிப் போனதுஒன்றற்கு
எட்டாத ஞான கலைதரு
 வாய்;இரும் காமவிடாய்ப்
பட்டார் உயிரைத் திருகிப்
 பருகிப் பசிதணிக்கும்
கட்டாரி வேல்விழி யார்வலைக்
 கேமனம் கட்டுண்டதே!

(கண்ணுக்குத் தெரியாத பொடி ஆகும்படி கிரௌஞ்ச மலையோடு போர் செய்து அழித்த கந்தனே! என் ஆற்றலுக்கு அகப்படாமல் மீறிப் போனதாகிய மனத்துக்கு எட்டாமலிருக்கும் ஞானமென்னும் கலையை நீ எனக்கு வழங்க வேண்டும்; பெரிய காமதாகத்தில் அகப்பட்டவர்களின் உயிரை அதன் போக்கிலே விடாமல் திருகிச் செயலிழக்கும்படி பருகித் தம் பசியைத் தணித்துக் கொள்வனவும் கட்டாரி போலவும் வேல் போலவும் இருப்பனவுமாகிய விழிகளைப் படைத்த தீய மங்கையர்களின் மயலாகிய வலையில் என் மனம் கட்டுப்பட்டுவிட்டதே! இனி என் செய வல்லேன்!

பொட்டு - கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய வடிவுள்ள பொருள். வெற்பை - கிரௌஞ்ச மலையை. பொருத - போர் செய்து அழித்த. தப்பிப் போனது - என் பிடிக்குள் அகப்படாமற் போனது. ஒன்று என்றது மனத்தை. விடாய் - தாகம். கட்டாரி - குத்தீட்டி. வலைக்கே - வலையில்.)

பக்தித் துறை

முன் பாட்டில் அருணகிரியார், மனம் இறைவனது திரு வருளில் ஈடுபடாமல் மங்கையர் கண்ணாகிய வலையில் மாட்டிக் கொண்டு அல்லல்படுவதைச் சொன்னார். அடுத்த பாட்டில் வேறு வகையில் நம் அறிவு தெளிவுபட வேண்டுமென்பது பற்றிச் சொல்கிறார்.

இரண்டு கடல்

உலக வாழ்க்கையில் மக்கள் கூட்டத்தில் இரண்டே இரண்டு கட்சிகள் இருக்கின்றன. ஒரு கட்சி ஒளியை நோக்கிப் போகின்ற கூட்டம்; மற்றொன்று இருளை நோக்கிப் போகின்ற கூட்டம். ஓரிடத்தில் கரை காண முடியாத எல்லை கடந்த இன்பக் கடல் பொங்கிக் கொண்டிருக்கிறது; அதற்கு நேர் எதிர்த் திசையில் பிறவிப் பெருங்கடல் இருக்கிறது. இரண்டுக்கும் எல்லை காண முடியாது. இரண்டாவது கடலில் சென்று சேர்ந்து அதனால் உண்டாகிற துன்பத்தை அனுபவிக்கிறது இருட் கூட்டம். பிறவியாகிய பெருங்கடல் சேர்ந்து மூழ்குகிறவர் களுக்குத் துன்பந்தான் உண்டு என்பதை நாம் நம் வாழ்க்கையில் அறிகிறோம். ''பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்'' என்பது மணிமேகலை. அதற்கு நேர் எதிர்த் திசையில் இருக்கிற கடல் இன்னது என்று நாம் அறிய மாட்டோம். இறைவன் திருவருளி னால் இன்ப அநுபவம் பெற்ற பெரியவர்கள் அதனை அறிந்திருக் கிறார்கள். பிறவிப் பெருங் கடலுக்கு நேர் எதிர்த்தட்டில் ஆனந்த வாரி இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள்.

பிறவிப் பெருங்கடலுக்கும், ஆனந்தக் கடலுக்கும் நடுவிலே வாழ்க்கை என்ற மேட்டில் நாம் இருக்கிறோம். இந்த மேடு ஒரே சீரான மேடு அல்ல. பல வகையான குண்டுகுழிகளோடு அமைந்த மேடு; எங்கே பார்த்தாலும் அழுக்கு நிரம்பியிருக்கிறது.

புத்தியென்னும் சிற்றாறு

நம்முடைய புத்தி வேகமாக வேலை செய்கிறது. எதைச் சார்ந்திருக்கிறதோ அதிலுள்ள அழுக்கு அதன் மேல் ஒட்டிக் கொள்கிறது. அறிவு என்பது ஒரு சிற்றாறு. அது மேட்டிலும் பள்ளத்திலும் ஏறி இறங்கிப் போய்க் கொண்டிருக்கிறது. போகிற இடங்களில் உள்ள மலங்களை வாரிக் கொள்கிறது. உயிர்களிடம் மூன்று மலங்கள் இருக்கின்றன. ஆன்மா மலத்தைச் சார்ந்திருப் பதனால்தான் பிறவி வருகிறது. மனிதப் பிறவியில் உடம்பிலும், உடையிலும் ஒட்டிக்கொள்கிற அழுக்குப்போல உள்ளத்தில் ஒட்டிக் கொள்ளும் அழுக்கு எதுவோ அது உயிரைச் சார்ந்திருக் கிறது. மனம் இறந்து போய்விட்டால் மலமும் இறந்து போகும். அப்படிச் சொல்வதைக் காட்டிலும் மலம் என்பது போகுமட்டும் மனம் இருக்கும் என்று சொல்லலாம். மனம் இருப்பதனால்தான் மனிதன் எல்லாக் காரியங்களையும் செய்கிறான்.

அந்தக்கரணம்

மனத்தின் கொழுந்து எதுவோ அதைப் புத்தி என்று சொல் வார்கள். மேல் நாட்டார் மனத்தின் நிலைகள் இன்னவை என்று வகுத்திருக்கிறார்கள். அவற்றையே நம் நாட்டில் மனத்தின் பகுதி களாகிய அந்தக்கரணங்கள் என்பர். வாழ்வதற்கு உரிய கருவிகள் இரண்டு வகை. கை கால்கள் முதலிய உறுப்புக்கள் புறத்தில் உள்ள கரணங்கள். மனம் உள்ளே இருக்கிற கரணம். அந்தக்கரணம் என்றால் உள்ளே இருக்கும் கருவி என்று பொருள். அந்தக் கரணம் நான்கு பகுதிகளாகப் பயன்படுகிறது. ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிச் சிந்திக்கும் போது அதனிடத்தில் ஈடுபட்டுக் கிடக்கிறோம்; அப்படிச் சிந்திப்பது சித்தம். அப்பொருளை எவ்வாறு பெறுவது என்ற அவாவினால் தவிக்கிறோம்; அப்படித் தவிப்பது மனம். ஒன்றைப் பார்த்தால் அது நல்லதா கெட்டதா என்று ஆராய்கிறோம்; அந்த ஆராய்ச்சி பிறக்கும் இடம் புத்தி. நாம் இன்னார், இன்ன ஆசாமி என்பதை எப்பொழுதும் நினைந்து கொண்டிருக்கிறோம்; தூக்கத்தில் தட்டி எழுப்பினாலும் எழுந் திருக்கும்போது நாம் இன்னார் என்ற நினைவோடு எழுந்திருக் கிறோம்; அந்த நினைவுள்ள பகுதி அகங்காரம். இப்படி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று நான்கு பகுதியாக அந்தக்கரணம் இயங்குகிறது.

புத்தியினால் இது நல்லது, இது பொல்லாதது என்று தெரிந்து கொள்கிறோம். மனம் என்னும் பகுதி பலவற்றைப் பற்றிப் பற்றித் தாவிக்கொண்டிருக்கும். அது பொல்லாதது. அதனால் பலவகைத் துன்பங்கள் உண்டாகின்றன. புத்தியால் நல்லது எது என்று தெரிந்துகொண்ட பிறகு அதனிடம் ஒற்றுமைப்பட்டு நிற்கத் தீர்மானிப்பது சித்தம். புத்தியானது கூர்மையாக ஒரு விஷயத்தின் தன்மையை நன்கு ஆராய்ந்து உணர்ந்தால்தான் அதைப் பற்றி நிற்கச் சித்தம் முந்தும்.

அழுக்கைப் போக்கும் வழி

பிறவியாகிய அழுக்குக் கடல் ஒரு பக்கம் இருக்கிறது. அதற்கு நேர் எதிரே ஆனந்தம் என்ற பெரிய வாரி இருக்கிறது. இந்த இரண்டுக்கும் நடுவிலே வளைந்து வளைந்து செல்கிறது புத்தியாகிய சிற்றாறு. அது தான் போகிற வழியில் பல பல அழுக்குகளை மேலும் மேலும் திரட்டிக் கொண்டே போகிறது.

இந்தப் புத்தியாகிய அழுக்கு நீரை உடைய சிற்றாற்றை உடைய வனிடம் ஒரு பெரியவர் வந்தார். ''என்ன அப்பா! இந்த அழகான சிற்றாற்றை உனக்குப் பயன்படாதவாறு ஒரே அழுக்கு நீர் ஓடும்படி வைத்துக்கொண்டிருக்கிறாயே; இப்படி இருக்கலாமே?'' என்று கேட்டார்.

அவனுக்கும் அந்த ஆற்று நீர் ஒரே அழுக்காக இருக்கிறது தெரியும். ஆனால் அதை எப்படிச் சுத்தம் செய்வது என்றுதான் தெரியவில்லை. ஆகவே அப்பெரியவரிடமே, ''இந்த ஆற்றை எப்படிச் சுவாமி சுத்தம் செய்வது? அழுக்குக் கொஞ்சமும் இல்லாமல் செய்ய வேண்டுமானால் என்ன பண்ணுவது?'' என்று கேட்டான்.

''அழுக்கு நீரை வடிகட்டிச் சுத்தம் பண்ணலாம் என்றால் அது உன்னால் முடியாது. அதைத் தெளிய வைத்துச் சுத்தம் செய்யும் பெரிய கடல் ஒன்று இருக்கிறது. அதிலே போய்க் கலக்கச் செய்துவிட்டால் சுத்தமாகி விடும்'' என்று அவர் சொல்லிச் சென்று விட்டார்.

அவன் தன்னுடைய புத்தியாகிய சிறிய ஆற்றைப் பெரிய வாரியோடு கலக்கச் செய்யலாம் என்று எண்ணி, துறை எங்கே இருக்கிறது என்று தேடிக்கொண்டு கிளம்பினான். பிறவியாகிய

பெரிய அழுக்குக் கடலோடு கலக்கின்ற பல அழுக்குத் துறைகள் அவனுக்குத் தெரிந்தன. காமமாகிய துறை ஒரு பக்கம் இருக்கிறது. மோகமாகிய துறை ஒரு பக்கம். இவற்றைப் போல மதம், மாச்சரியம் முதலான துறைகள் பிறவியாகிய அசுத்தக் கடலில் இருப்பது தெரிந்தது.

சென்னையில் உள்ள கூவம் நதியில் எத்தனை சாக்கடைகள் போய்ச் சேருகின்றன! அதனால்மேலும் அது அழுக்கு நிரம்பிய தாகிறதே தவிரத் தெளியக் காணோம். அது போல நமது அறிவாகிய சிறிய ஆற்றைக் கொண்டுபோய்ப் பிறவியாகிய பெரிய அழுக்குக் கடலோடு சேர்ப்பதனால் அது எப்படித் தெளியும் என்னும் சந்தேகம் அந்த ஆற்றை உடையவனுக்கு வந்துவிட்டது.

புத்தித் தரங்கம் தெளியும் துறை அவனுக்குத் தெரியவில்லை. பிறவியாகிய அழுக்குக் கடலோடு சங்கமம் ஆகும் காமம், மோகம் முதலாகிய துறைகளே அவனுக்குத் தெரிந்தன. தன்னுடைய புத்தி யாகிய சிறிய ஆறு, தெளிய வைக்கும் கடலோடு போய்க் கலக்கக் கூடாதா என்று அப்பெரியவர் சொன்னாரே. அந்த வாரியோடு கலக்கும் துறை தெரியவில்லையே என்று அவன் ஏங்கிக் கொண் டிருக்கும் பொழுது அப்பெரியவர் மறுபடியும் வந்தார். வந்தவுடனே, ''சுவாமி! நீர் என் புத்தித் தரங்கம் தெளிய ஆனந்த வாரியின் துறை தேடிப் போகச் சொன்னீர்களே! அதற்குத் துறை எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லையே! பிறவிப் பெருங்கடலோடு கலக்கும் துறைகள்தாமே எனக்குத் தெரிகின்றன? ஆனந்த வாரி யோடு கலப்பதற்கும் பல துறைகள் உண்டா?'' என்று கேட்டான்.

ஞானத்துறை

அந்தப் பெரியவர் சொன்னார். ''அதற்கும் பல துறைகள் உண்டு. முக்கியமாக மூன்று துறைகள் இருக்கின்றன. ஞானம் என்பது ஒரு துறை. அழுக்கு நீர் மணல் நிரம்பிய பாலை வனத்தின் வழியாகப் போகும்போது இயல்பிலேயே அந்நீரின் அழுக்கைப் பாலைவனத்திலுள்ள மணற் பரப்பு வடிகட்டிவிடும். அந்தப் பாலைவனப் பாதையைப் போன்றது ஞானத்துறை. அதன் வழி யாக உன்னுடைய புத்தியாகிய சிறிய ஆறு போனால் வாரியோடு சங்கமம் ஆவதற்குள் அது தெளிந்துவிடும். ஆனால் ஒன்று'' என்று நிறுத்தினார் அப்பெரியவர்.

''ஆனால் ஒன்று என நிறுத்திவிட்டீர்களே சுவாமி! அது என்ன?'' என்று கேட்டான் இவன்.

''பாலைவனத்தின் வழியாகப் போகும்போது ஆற்றில் புதுத் தண்ணீர் வந்து கொண்டே இருந்தால்தான் கடலோடு சங்கமம் ஆகும் வரையில் ஆற்றில் ஓட்டம் இருக்கும். புதுத் தண்ணீர் மேலும் மேலும் வராமல் போனால் ஆற்றின் நீர் அப்பாலை வனத்திடையே சுவறிவிடக் கூடும். ஆனந்தவாரியை அடைய உன்னுடைய புத்தியாகிய ஆறு ஞானமாகிய துறை வழியே போகும் போது ஞான விசாரமாகிய அப்பாலைவனத்திடையே சுவறி விட்டால் ஆனந்தவாரியை நீ போய்ச் சேரமுடியாதே!'' என்றார்.

ஆற்றை உடையவனுக்குப் பயம் உண்டாகிவிட்டது. ''அது மிகவும் கடினமான துறை போலிருக்கிறதே! அது நமக்குப் பலிக்காது. வேறு துறை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்'' என்றான்.

கர்மத்துறை

''ஞானமாகிய துறை உனக்குப் பயன்படாது என்று எனக்குத் தெரியும். அதற்குப் பக்கத்திலேயே கர்மம் என்ற ஒரு துறையும் இருக்கிறது. அந்தத் துறையும் உனக்குக் கொஞ்சம் கடினந்தான். ஆறு பெரிய மேட்டிலே ஏறிச் செல்லவேண்டும். பள்ளத்திலிருந்து மேட்டில் ஏற வேண்டுமென்றால் சாதாரணமான காரியமா?'' என்று அப்பெரியவர் சொல்வதற்குள், ''என்ன சுவாமி, இந்தத் துறையும் எனக்குப் பயன்படாதுபோல் இருக்கிறதே. எனக்குப் பயன்படக்கூடிய வேறு ஏதாவது எளிய துறையாக இருந்தால் சொல்லக் கூடாதா?'' என்று கெஞ்சினான்.

பக்தித்துறை

''உன்னால் ஞானமாகிய துறை வழியாகவோ, கர்மம் என்ற துறை வழியாகவோ போக முடியாது என்றால் அதைப் பற்றிக் கவலை வேண்டாம். வேறு ஒரு துறை இருக்கிறது. அதற்குப் பக்தி என்று பெயர். பக்தித் துறையின் வழியாக எளிதிலே சென்று ஆனந்தவாரியோடு கலந்து புத்தித் தரங்கம் தெளியும் படியாகச் செய்து கொள்ளலாம்'' என்று அந்த உபகாரி சொல்லி விட்டுப் போனார்.

அவனுக்கு ஆனந்தவாரியோடு கலக்கும் பக்தித் துறை எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ''ஆனந்தவாரி என்று பலர் சொல்கிறார்களே, அது இருக்கிறதா?'' என்ற சந்தேகமே அவனுக்குத் தெளியாமல் இருந்தது. தன் கண் எதிரே விரிந்து கிடக்கின்ற உப்புக் கடல் அவனுக்கு நன்றாகத் தெரிந்தது; பிறவிப் பெருங் கடல் தெரிந்தது. இருந்தாலும் யோசித்துப் பார்த்தான்.

ஆராய்ச்சி

'இந்த உலகத்தில் எல்லாப் பொருளும் இரட்டையாக அல்லவா இருக்கின்றன? பள்ளம் என்றால் மேடு இல்லாமல் இராது. இருள் என்றால் ஒளி இல்லாமல் இராது. முள் என்றால் மலர் இல்லாமல் இராது. தளிர் என்றால் சருகு இல்லாமல் இராது. ஆகவே உப்புக் கடல் என்றால் உப்பு இல்லாத நன்னீர்க் கடலும் இருக்கத்தான் வேண்டும். பிறவிப் பெருங்கடல் என்று சொன்னால் அல்லாத ஆனந்தக் கடலும் இருக்கத்தான் வேண்டும்' என்று நினைத்தான்.

இப்படி நினைத்தவுடனேயே அவனுக்குப் பல உண்மைகள் விளங்கின. 'பிறவிக் கடல் எப்படிக் கரை இல்லாமல் எல்லை யின்றி விரிந்து கிடக்கிறதோ, அதைப் போலவே ஆனந்தக் கடலும் இருக்க வேண்டும். பிறவிக் கடல் அழுக்கு நீர் உடையது என்றால் ஆனந்தக் கடல் தூய நன்னீர் உடையதாக இருக்க வேண்டும். பிறவிக் கடலுக்குப் பல துறைகள் இருப்பது போலவே ஆனந்தக் கடலுக்கும் பல துறைகள் இருக்க வேண்டும்' என்று தன் அறிவினால் ஆராய்ந்து தெளிந்தான்.

'நாம் சென்று சேரவேண்டிய லட்சியக் கடல் இருப்பது தெரிந்தும் இன்னும் அங்கே போய்ச் சேராது இருக்கிறோமே!' என்று ஆற்றை உடையவன் தவிக்க ஆரம்பித்துவிட்டான். ''பிறவி யாகிய அழுக்குக் கடலோடு காமம், மோகம் போன்ற பலவித மான அழுக்குகள் படிந்துள்ள என் அறிவாகிய ஆறு கலப்பதனால் பயன் இல்லை. என்னுடைய சொந்த முயற்சியினாலே ஆற்றை வடிகட்டியோ, தெளியவைத்தோ சுத்த நீராக்கலாம் என்றாலும் அந்த முயற்சி பலிக்காது. ஆற்றில் அழுக்கு நீர் ஓடிக்கொண்டு இருக்கும்போதே இதைத் தெளியவைக்க வேண்டும். அதற்கு என்ன வழி?'' என்று அவன் ஏங்கிக் கொண்டிருக்கும்போதுதான் பெரியவர் அவனுக்கு ஒரு நுட்பத்தைச் சொல்லிக் கொடுத்தார்.

தெளிவு பெற வழி

"அலை ஓய்ந்த பின் கடலில் நீராடலாம் என்றால் அலையும் ஓயாது. நீயும் நீராட முடியாது. உன் அறிவாகிய ஆறு தெளிந்தபின்தான் ஆனந்தவாரியோடு கலக்க வேண்டும் என்று நீ எண்ணிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. இப்படியே போய்க் கலக்க வேண்டியதுதான். ஆனந்தவாரியோடு கலக்கப் பல துறைகள் இருக்கின்றன. என்றாலும் ஞானமாகிய பாலை வனத் துறை வழியே செல்லும்போது அறிவாகிய ஆறு சுவறி விடக் கூடும். கர்மமாகிய மேட்டு நிலத் துறையின் வழியாகப் போக வேண்டுமென்றால் பள்ளத்திலிருந்து மேட்டுக்கு ஏறக் கூடிய சக்தி உன் புத்தியாகிய ஆற்றுக்கு இல்லாமற் போனாலும் போக லாம். அவ்வெல்லாத் துறைகளையும்விட மிக எளிய துறை பக்தி. அதன் வழியாக உன் சிற்றாற்றை விட்டுவிடலாம்'' என்று சொன் னார். ''பக்தித் துறை வழியே சென்றால் முன்னால் நன்னீர்க் கடல் தெரியும். அதுவே ஆனந்த வாரி'' என்றும் உணர்த்தினார்.

அவனுக்கு மறுபடியும் ஒரு சந்தேகம் பிறந்தது. ''அந்த நல்ல கடலோடு என்னுடைய புத்தியாகிய அழுக்கு ஆற்றை எப்படிக் கலக்கச் செய்வது? அதனால் அந்த ஆனந்தவாரி அசுத்தமாகி விடாதா? தெளிந்த நீர் ஓடுகின்ற ஆறானால் கலப்பதனால் ஒன்றும் கெடுதி இல்லை. ஆனந்த வாரியோடு கலப்பதற்கு ஏற்ற வகையில் என்னுடைய புத்தியாகிய சிறிய ஆற்று நீரை நான் தெளிய வைத்துக் கொள்ள வேண்டாமா?'' என்று கேட்டான்.

''அதைத்தானே நான் இவ்வளவு நேரமும் சொன்னேன்? அந்த ஆனந்தவாரியோடு கலப்பதனாலேயே உன் அறிவாகிய சிற்றாறு சுத்தமாகிவிடும்'' என்று சொல்லி அதைப் பின்னும் விளக்கினார்.

யமுனையும் சாக்கடையும்

"யமுனை நெடுந்தூரம் ஓடிக் கங்கையோடு கலந்து விடு கிறது. கங்கையோடு கலக்கும் இடம் வரையில் அது யமுனையாகத் தான் இருக்கிறது. கங்கையோடு கலந்த மாத்திரத்திலே அது யமுனை என்ற பெயரையும் இழந்து கங்கையாகவே ஆகிவிடு கிறது. இந்தக் காலமாக இருந்தால் எப்படியோ? திருவாங்கூரோடு

கொச்சி ராஜ்யம் சேர்ந்த பொழுது திருவாங்கூர் – கொச்சி என்று பெயர் வைத்தார்கள். அதைப்போல யமுனை கங்கையோடு கலந்த வுடன் 'யமுனா – கங்கா' எனப் பெயர் வைத்தாலும் வைக்கலாம். ஆனால் பழங்காலத்தில் அப்படி இல்லை. யமுனை கங்கையோடு கலந்தபின் யமுனை என்ற பெயர் மறைந்து அது கங்கையாகவே ஆகிவிடுகிறது. யமுனையின் தூய நீர் கங்கையோடு கலக்கும் போதும் கங்கை கங்கையாகவே இருக்கிறது. அதன் புனிதத் தன்மை யமுனையினால் அதிகமாகவில்லை. காசி நகரத்துச் சாக்கடைகள் கங்கையோடு போய்த்தானே கலக்கின்றன? ஊரினது கழுநீர் எல்லாம் கங்கையோடு போய்க் கலந்தாலும் கங்கையின் பெயர் மாறவில்லை. அதன் புனிதத் தன்மையும் மாசுபடவில்லை. கங்கை கங்கையாகவே தூய நன்னீருடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

''கங்கையின் யமுனை போய்ச் சேருவதனால் கங்கை மாசு படவில்லை என்பதில் ஆச்சரியம் இல்லை; இனம் இனத் தோடு கலந்தது எனச் சொல்லலாம். தூய நீர் தூய நீரோடு கலக்கும் போது மாறுதல் எதுவும் ஏற்படுவதற்கு வழி இல்லை. கங்கை யோடு அதற்கு மாறான சாக்கடைகள் போய்க் கலப்பதனாலும் கங்கை மாறவில்லையே! அதுதான் கங்கையின் பெருமை

'ஊர்அங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பெரிதாகித் தீர்த்தமாம்'

என்பது நாலடி. சாக்கடை என்ற பெயர் மாறித் தீர்த்தம் என்ற பெயர் வந்துவிடுகிறதாம்.

''எல்லா அழுக்கையும் போக்கி, தான் எப்போதும் தெளிந்த நிலையிலேயே இருக்கிறது கங்கை. கங்கையோடு நல்ல நீர்தான் கலக்கவேண்டும், அசுத்தமான அழுக்கு நிரம்பிய நீர் கலந்தால் அதன் புனிதத்தன்மை கெட்டுவிடும் என்பது இல்லை. அதைப் போலவே உன்னுடைய அறிவாகிய ஆறு அழுக்கு நீர் உடையதாக இருக்கிறதே என்று கலங்க வேண்டாம். அது கலப்பதனால் ஆனந்தவாரி கெட்டுப் போகாது.''

ஆனந்தவாரியில் கலத்தல்

''அழுக்கு நிரம்பிய அறிவு நீர் கொஞ்சமாக இருப்பதனால் அலை மோதுகிறது; கொந்தளிக்கிறது. அது பக்தித்துறை வழியாக

ஆனந்தவாரியில் படிந்துவிட்டால் ஆனந்தவாரி கலங்காது. புத்தித் தரங்கம் தெளியும். கங்கை சாக்கடை ஆகாமல் சாக்கடைகள் கங்கை ஆவது போல, ஆனந்தவாரி கலங்காமல் உன் புத்தித் தரங்கம் ஆனந்தவாரியாகிவிடும். அழுக்கு நிரம்பிய உன்னுடைய புத்தித் தரங்கம் தெளியப் பக்தித் துறையிழிந்து, ஆனந்த வாரியோடு கலந்துவிடு. பக்தித் துறை அல்லாமல் வேறு பல துறைகளும் இருக்கின்றனவாயினும் அவற்றின் வழியே புகுவதற்கு நெடுங்காலம் பிடிக்கும். நிச்சயமாகப் போக முடியுமோ என்னவோ தெரியாது. ஆகவே அங்கே போய்ச் சேருவதற்கு மிக எளிதானதும் பக்கத்தில் உள்ளதும் பக்தித் துறைதான். அதன் வழியே சென்றால் மிக எளிதில் ஆனந்தவாரியோடு சிற்றாறு கலந்துவிடும். அப்புறம் அங்கே அறிவாகிய சிற்றாறே இராது. முன்னாலே இருந்த அடையாளம் கொஞ்சங்கூட இல்லாமல் ஆனந்த வாரியாகவே அது ஆகிவிடும். உன் புத்தித் தரங்கத்தின் நாற்றம் இராது. இப்போது அந்தப் புத்தித்தரங்கத்தில் களவு, விபசாரம், கோபம் போன்ற பல பல வாசனைகள் படிந்திருக்கலாம். ஆனால் ஆனந்தவாரியோடு கலந்துவிட்டால் இவ்வெல்லா வாசனையும் போய்விடும். உன்னுடைய ஆற்றைப் போலவே எத்தனையோ ஆறுகள் முன்பே அதில் ஆனந்தவாரியாகவே ஆகியிருக்கின்றன. அதைப் போலவே உன்னுடைய ஆறும் ஆகும். ஆனந்தவாரியோடு கலந்தவுடனே ஆனந்தவாரியின் மணந்தான் அடிக்கும்.

''ஆகவே, ஆனந்தவாரியைச் சென்று சேர்வதற்குப் பக்தித் துறை யிழிந்து செல் அப்பா!'' என்று அப்பெரியவர் சொன்னார்.

மேலே சொன்ன கதையையும், அருணகிரி நாதர் கூறும் பாட்டையும் சேர்த்துப் பார்க்கலாம்.

2

ஆறறிவுடைய மனிதன்

மனிதன் உலகத்தில் வாழ்கிறான். விலங்கினங்களும் வாழ்கின்றன. விலங்கினங்களைவிட மனிதன் உயர்ந்தவன். விலங்கினங்களுக்கு இல்லாத சிறப்பு மனிதனிடத்தில் என்ன இருக்கிறது? ''மனிதனுக்கு மனம் இருக்கிறது; விலங்கினங் களுக்கு அது இல்லை'' என்று சொல்லலாமா? தம் எசமானன்

யார் என்பது அவற்றுக்குத் தெரிகின்றது. எசமானன் அடிக்க வருகிறான், தடவிக்கொடுக்க வருகிறான், உணவு போட வருகிறான், தன்னுடைய குட்டிக்குப் பால் கொடுக்க வேண்டும், என்ற எண்ணங்கள் அவற்றுக்கும் இருக்கும்போது அவற்றுக்கு மனம் இல்லை என்று சொல்லக் கூடாது. ஆனால் புத்திக்கூர்மை, அறிவு நுட்பம் இல்லை என்று சொல்லலாம். இதைச் செய்ய வேண்டும், இன்னதை ஒழிக்க வேண்டும் என்று பகுத்துப் பார்க்கின்ற நுண்ணறிவு, அறிவின் கொழுந்து, அவற்றினிடம் காணப்படவில்லை. மனிதனும் ஆராய்ந்து பார்க்கின்ற அறிவை விட்டுவிட்டால் விலங்காகத்தான் ஆகிறான்.

"தக்க இன்ன தகாதன இன்னவென்
றொக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே"

என்பர் கம்பர்.

விலங்கைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன் என்று சொல்வதற்குக் காரணம், பிராணிகளிடம் இருக்கும் ஐந்து அறிவையும் விடச் சிறந்த ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு அவனிடத்தில் இருக்கிறது.

கலங்கிய புத்தி

புத்தியில் எப்போதும் அலை அடித்துக்கொண்டிருக்கிறது. பல தரங்கங்களை உடையது புத்தி. இது நல்லது, இது கெட்டது என்று எண்ணி எண்ணித் திண்மையில்லாமல் ஐயம் அடைகிறது. அதனால் பிறவிக்குக் காரணமான பல இயல்புகளை மேற்கொண்டு பிறந்து இன்ப துன்ப வாழ்க்கையில் அல்லற்படச் செய்கிறது. எப்போதும் நிரதிசய ஆனந்தமுள்ள வேறோர் இடம் உண்டு. அதுதான் ஆனந்தவாரி. அதைச் சேர்ந்தால் பிறவி இல்லை. இன்பதுன்பம் இல்லை. இன்பதுன்பத்திற்கு அப்பாற்பட்டிருக்கிறது எதுவோ அதைத்தான் ஆனந்தம் என்று சொல்வார்கள். பிறந்து வாழ்ந்தாலும் இந்தப் பிறவிப் பிணியைப் போக்கும் ஆண்டவனது திருவருளைப் புணையாகக் கொண்டு, யார் பக்தித் துறையிழிந்து செல்கிறார்களோ அவர்கள் ஆனந்தவாரியை அடைவார்கள். அதற்கும் துணையாக இருப்பது புத்தி. பிறவிக் கடலைச்

சேர்வதற்கு உரிய காரியங்களைச் செய்யத் தூண்டுகின்ற அறிவு எதுவோ, அதுவே பிறவியைத் தொலைத்து, இன்ப துன்பம் அற்ற ஆனந்த நிலையை எய்துவதற்குத் துணையாகவும் இருக்கிறது. சரியான தண்டவாளத்தின் மேல் தடம் புரளாது செல்கின்ற ரெயில்தான் பல்லாயிரக்கணக்கான மக்களை ஓரிடத்திலிருந்து பல மைல்கள் தாண்டிச் சென்று இறங்கப் பண்ணுகிறது. ரெயில் என்னவோ ஒன்றுதான். அலை மோதுகின்ற புத்தி எல்லாருக்கும் இருக்கிறது. ஆனால் அது செல்கின்ற துறை வேறுபடுவதனால் பிறவி உண்டாகிறது.

நீருக்கு நிறம் இல்லை; சுவை இல்லை என்று சொல்வார்கள். ஆனால் கரிசல் மண்ணில் ஊறுகின்ற நீர் கருமையாகவும், உவர்ப்பு மண்ணில் ஊறுகின்ற நீர் உப்புச் சுவையுடையதாகவும் ஆகின்றன. புத்தியாகிய ஆறு பிறவிக் கடலைச் சேர்வதற்கான துறைகளின் வழியே செல்வதனால்தான் காமம், மோகம், மதம், மாற்சரியம் முதலியவற்றினால் கலங்கி நாற்ற மெடுக்கிறது. பிறவித் துன்பத்தை மாற்ற வேண்டுமானால் புத்தித்தரங்கம் பக்தித் துறை வழியே செல்லும்படி செய்ய வேண்டும்.

நம்முடைய அறிவினால் துன்பம் வருவதால் நமக்கு அறிவே வேண்டாம் என்று சொல்ல முடியுமா? 'ரெயிலில் சென்றதனால் தான் அரியலூர் விபத்துக்கு உள்ளாகும்படி நேரிட்டது; இனி ரெயிலிலேயே ஏறக்கூடாது' என்று யாராவது சொல்வார்களா? அறிவு தவறான வழியில் செல்லும்போதுதான் துன்பம் ஏற்படு கிறது. நேரான வழியில் சென்றால் நன்மை உண்டாகும்.

கற்றல் முதலிய நான்கு

கற்றலைவிடக் கேட்டல் சிறந்தது என்று சொல்வார்கள். பேசுகின்றது ஒரு பங்கு என்றால் கேட்பது இரண்டு பங்காக இருக்க வேண்டும் என்பதற்காகவே ஆண்டவன் பேசுவதற்கு ஒரு வாயைக் கொடுத்துவிட்டுக் கேட்பதற்கு இரண்டு செவிகளை வைத்திருக்கிறான் போலும்! கேட்டதைச் சிந்தித்துப் பயன் அடைகிறவர்களுக்குக் கேள்வி சிறந்தது. மாடு நன்றாக மேய்ந்துவிட்டுத் தனிமையான ஓர் இடத்தில் போய்ப் படுத்து அசை போடுவது போல, நல்ல பொருள்களைக் கேட்டுவிட்டுப் பின்பு எல்லாவற்றையும் ஒன்றாகத் தொகுத்துச் சிந்தித்துப்

பார்க்கும்போதுதான் பயன் உண்டாகிறது. அதைச் சிந்தனை என்று சொல்வர். முதலில் கேட்டல்; கேட்ட பிறகு கேட்டதை எல்லாம் ஒன்றாகத் தொகுத்துச் சிந்தித்தல். கடை வியாபாரி பகலில் கடையில் வியாபாரம் செய்துவிட்டு இரவில் பணத்தை வீட்டில் வைத்துக்கொண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எல்லாம் தனியாகவும், சில்லறைகளைத் தனியாகவும், செல்லாக் காசுகளைத் தனியாகவும் வைத்துவிடுவது போல, கருத்துக்கு ஒவ்வாதன வற்றை ஒதுக்கிவிடுவார்கள் அறிவாளிகள்.

காதினாலே கேட்டவற்றை எல்லாம் ஒன்றாகத் தொகுத்துச் சிந்தித்தால் போதுமா? சிந்திப்பதனால் தெளிவு ஏற்பட வேண்டும். இப்படிக் கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்று நான்கு படிகள் சொல்வார்கள். கேட்டபோதே தெளிவு பிறவாது. கேட்டதை நன்றாகச் சிந்திக்கும்போதுதான் பிறக்கும். அந்தத் தெளிவு ஏற்படா விட்டால் கற்பதாலும் கேட்பதாலும் எவ்விதப் பயனும் இல்லை.

தெளிவு ஏற்பட்ட பிறகு மேற்கொள்வது நிஷ்டை. சத்தியத்தை அடைவதற்குரிய சாதனங்கள் எல்லாமே நிஷ்டை. இறைவன் திருவருளைப் பெறுவதற்கு உரிய முயற்சி அது. தெளிவு வந்த பிறகே அத்தகைய முயற்சியில் ஈடுபட முடியும். கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை, அநுபவம் என்ற வரிசை கற்றலிலிருந்து தொடங்குகிறது. கேட்பதனால் சிந்தனை ஏற்பட்டு, அதனால் தெளிவு ஏற்பட்டு, நிஷ்டை கூடிய பிறகு அநுபவம் சித்திக்கிறது. புத்தி தெளியாமல் இருந்தால் முயற்சி பயன் பெறாது. ஒரு நிமிஷம் ஞானம் தோன்றும். அடுத்த விநாடியே, ''கடவுளாவது! மண்ணாவது! அப்படி ஒன்றும் இல்லை. வயிற்றுப் பிழைப்பை எண்ணிப் பலர் அப்படிப் பேசி வருகிறார்கள்'' என்று சொல்லத் தோன்றும்.

இதற்குக் காரணம் என்ன? புத்தி என்ற ஆறு அத்தனை கலக்கம் உடையதாய் இருக்கிறது. புத்தித் தரங்கம் தெளிந்தால்தான் பிற்பாடு அநுபவம் சித்திக்க வழி ஏற்படும். எப்படித் தெளிவு பெறுவது? ஞானவிசாரத்தாலே பெறலாமா, கர்ம யோகத்தாலே பெறலாமா என்று தவிக்கின்ற மக்களுக்கு, எளிமையான வகையில் தெளிவை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று அருணகிரியார் சொல்கிறார். பக்தித் துறையை அறிந்து அதன் வழியே சென்றால் ஆனந்தவாரியில் கலக்கலாம். அப்போது புத்தித் தரங்கம் தெளிந்து

விடும். கலங்கி இருக்கும் புத்தி தெளிவதற்கு மிகச் சுலபமான வழி அதுதான்.

கண்ணப்பனும் சிவகோசரியாரும்

பக்தித் துறை இழிந்தால் பக்தன் ஆகிவிடுகிறான். பக்தியின் முடிவு ஆனந்தவாரியைச் சேர்வது. அதை அடைந்தபிறகு வேறு பாடு இல்லை. அந்தணராகப் பிறந்து வேதம் ஓதி இறைவனை வழிபட்ட சிவகோசரியாரும் இறைவனை அடைந்தார்; வேடு வனாகிய கண்ணப்பனும் அடைந்தான்.

கண்ணப்பன் ஆவதற்கு முன்னாலே திண்ணனாக இருந் தான். குழந்தைப் பருவத்தில் காட்டுக்கு விளையாடப் போனான். புலிக்குட்டியைக் கொன்று தோளில் போட்டு வந்தான். அது அவனுக்கு விளையாட்டு. பிராயம் முதிர்ந்தவுடன் வேட்டைத் தொழிலை மேற்கொண்டான். பல விலங்குகளைக் கொன்றான். கொல்வதே விளையாட்டாகவும் தொழிலாகவும் அவனுக்கு இருந்தது. அவன் கண்ணில் காளத்திநாதன் பட்டவுடனே அவனுக்குப் பெருமான்பால் அன்பு உண்டாகிவிட்டது. அவனை அருச்சித்து வழிபடும் எண்ணமும் அவனுக்கு உண்டாகியது.

ஆண்டவனுக்கு அருச்சனை செய்யக் குளித்துவிட்டு நந்த வனத்திற்குச் சென்று வாயை மூடிக்கொண்டு தூய்மையோடு வண்டு கிண்டி இதழ்கள் விரிவதற்கு முன்னே மலரைக் கொய்து கூடையில் எடுத்து வருவார்கள். ஆனால் திண்ணன் காளத்தி நாதனுக்கு எப்படி மலர் எடுத்து வந்தான்? மலரைப் பறித்துத் தன் கொண்டை மயிரையே குடலையாக வைத்துக்கொண்டு வந்தான்.

ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்யச் சிவகோசரியார் சுத்த மான நீரைத் தூய பாத்திரத்திலே எடுத்து வந்து, ருத்திரம், சமகம் முதலியவைகளைச் சொல்லி அபிஷேகம் செய்வது வழக்கம். திண்ணனோ அபிஷேகம் செய்யும் நீரைத் தன் வாயிலே எடுத்து வந்தான். ஆண்டவனுக்கு நிவேதனம் செய்யப் பன்றி மாமிசத்தைக் கொணர்ந்தான். அதையும் கடித்துப் பார்த்துச் சுவைமிக்க பகுதி யாக எடுத்து வந்தான். அபிஷேகத்திற்கு எடுத்து வந்த மலர் அழுக்கு. நிவேதனத்திற்கு எடுத்து வந்த பன்றி மாமிசம் ஒரே அழுக்கு. இருந்தாலும் அவை எல்லாம் பக்தித் துறை வழியாகப் புகுந்தன. இறைவனாகிய ஆனந்தவாரியோடு சங்கமம் ஆயின.

ஒரு புலவர் பாடுகிறார்:

"தருமம் தவஞ்சற் றறியாத வேடுவன் தன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலர், அவன் வாய்உதகம்
திருமஞ் சனப்புனல், பல்லால் அவன்மென்று தின்றதசை
அருமந்த போனகம் அன்றோநம் காளத்தி அப்பனுக்கே."*

சிவகோசரியாரும், கண்ணப்பனும் பக்தித் துறையில் இழிந்து ஆனந்தவாரி படிந்தவர்கள். அந்தத் துறையில் இழிவதற்கு முன் அவர்கள் இயல்பிலும் பழக்க வழக்கங்களிலும் வேறுபாடு இருந்தாலும் அதன்பின் அவர்களுள் வேறுபாடு இல்லை.

அறிவு கலங்கியிருக்கிறதே இது தெளிவடைந்த பின் பக்தி செய்ய லாம் என்று இராமல், புத்தித்தரங்கம் தெளியாமல் இருந்தாலும் அத்துறையில் இறங்கினால் ஆனந்த வாரியோடு கலக்கலாம். அக்கணமே தெளிவு உண்டாகும். "நான் இந்தத் தெளிவை அடைவது எப்போது?" என்று வேசாறுகிறார் அருணகிரியார்.

பத்தித் துறைஇழிந் தானந்த வாரி படிவதனால்
புத்தித் தரங்கம் தெளிவதென்றோ?

சூர சங்காரம்

இந்தக் கேள்வியை முருகனைப் பார்த்துக் கேட்கிறார்.

பொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள, வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரம்கொண்டு அமரா வதிகொண்ட கொற்றவனே

முருகன் சுட்டி என்ற ஆயுதத்தை ஒரு முறை விட்டான். அது சூரனைக் குத்தியது. வெம்மையான குருதி பொங்கியது; அது வெள்ளமாக மிக்குக் குதிகொண்டது. இப்படி மேன்மையை அடைந்தான் முருகன்; சுட்டி என்பது குத்தீட்டிக்குப் பெயர்.

---

*இல்லறத்துக்குரிய தருமமும் துறவறத்திற்குரிய தவமும் சிறிதேனும் அறியாத வேடுவனுடைய செருப்பு மணம் நிரம்பிய திருமுடிக்கு அணியும் பெரிய மலர்; அவன் வாயில் கொண்டு வந்த நிர் திருமஞ்சனத்துக்குரிய நீர்; பல்லால் அவன் மென்று தின்ற ஊன் அருமையான நிவேதனம் அல்லவோ நம்முடைய காளத்தி அப்பனுக்கு?

இந்திரனுக்குச் சொந்தமாக இருந்த தேவலோகத்தைச் சூர பன்மன் கைக்கொண்டு ஆண்டான். அவனைச் சங்காரம் செய்து அமராவதியைக் கைப்பற்றினான் முருகன். தாம் இழந்த நாட்டைச் சூரனோடு பொருது மீட்கும் வழி தெரியாமல் திண்டாடினர் தேவர். இந்திரன் தன் சிங்காதனத்தையும் இராசதானியையும் இழந்து தவித்தான். முருகனிடம் யாவரும் சரண் அடைந்தனர். அப்பெருமான் அவர்களுக்காகச் சூரனை அழித்து அமராவதி யாகிய இந்திரனது இராசதானியை மீட்டான். இந்திரனுக்கு வழங்குவதற்காகவே அதைக் கைக்கொண்டான். அசுரராட்சிக்குட் பட்ட அமராவதியை மீட்டும் சுரர் ஆட்சிக்கு உட்படுத்தினான். அவன் அழுக்குக் கடலிலே கலக்கச் செல்கிற புத்தியை ஆனந்த வாரியில் கலக்க வழி காட்டுவான் என்ற நம்பிக்கையோடு இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறார்.

★

பத்தித் துறைஇழிந்து ஆனந்த
வாரி படிவதனால்
புத்தித் தரங்கம் தெளிவதுஎன்
றோ?பொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ
ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண்டு அமரா
வதிகொண்ட கொற்றவனே!

(பொங்கிய வெம்மையான இரத்தம் மிகுதியாகக் குதிக்க, வெவ்விய சூரனை, தான் ஏவிய சுட்டியென்னும் படைக்கலத்தால் குத்தி, அதனால் உண்டான சிறப்பை மேற்கொண்டு அமராவதியைக் கைக்கொண்ட வெற்றி மிடுக்குடைய பெருமானே! பத்தி என்னும் துறையில் இறங்கி ஆனந்தமென்னும் கடலில் படியும் முறையினால் என்னுடைய புத்தியாகிய சிற்றாற்றிலுள்ள அலைகள் தெளிவது என்றைக்கோ?

இழிந்து - இறங்கி. வாரி - கடல். தரங்கம் - அலை. மெத்தி - மிகுதியாகி. சுட்டி - குத்தீட்டி. தரம் - மேன்மை; சிறப்பு. அமராவதி - இந்திரனது இராசதானி. கொற்றம் - வெற்றி. கொற்றவன் - வெற்றியை உடையவன்)

இரண்டு ஆறுகள்

முன் பாட்டிலே அருணை முனிவர் புத்தித் தரங்கம் தெளி வதற்குப் பக்தித் துறை இழிந்து ஆனந்தவாரி படியவேண்டும் என்றார். ஒரு பொருளைச் சொன்னால் அதைச் சார்ந்துள்ள பொருள்களின் நினைவும் உடன்வரும். அதைப் போலவே முன் பாட்டில் ஆனந்தவாரியைச் சொன்னவர் அடுத்த பாட்டில் இரண்டு ஆறுகளைப் பற்றிச் சொல்கிறார். ஒன்று நம்முடைய வாழ்க்கையாகிய ஆறு; மற்றொன்று காவிரியாறு.

மனிதன் தன் வாழ்நாளில் காமத்தினால் அடைகின்ற துன்பம் கொஞ்ச நஞ்சம் அல்ல. உலகத்து மக்கள் எல்லாம் பெரும்பாலும் காமத்திற்கும், செல்வத்திற்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். மக்கள் இறைவன் திருவருளைப் பெறாமல் இருப்பதற்குத் தடையாக உள்ளவை அவை இரண்டும். காமினீ காஞ்சனம் என்று அடிக்கடி சொல்வார் இராமகிருஷ்ண பரமஹம்சர். ''அவை இரண்டுமே உலகத்தை இருள் உலகம் ஆக்குபவை. இந்த காமினீ காஞ்சனம் ஆகிய இரண்டையும் யார் வென்று விடுகிறார்களோ அவர்களுக்கு ஆண்டவன் திருவருள் கைமேல் கிடைக்கும்'' என்பதற்குப் பலவகையான உதாரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

செல்வப் பற்று

மனிதனுக்குப் பருவத்திலே துன்பம் தருவது காமம். எல்லாப் பருவத்திலும் மக்களை மாயையின் பிரதிநிதியாக இருந்து ஆட்டி வைப்பது செல்வம். செல்வத்தினிடம் மக்களுக்கு அவ்வளவு பற்று இருப்பதற்குக் காரணம் என்ன? இந்திரியங்களால் பெறு கின்ற இன்பங்களுக்குக் காரணமாகிய பண்டங்களை மிகுதியாக ஒருவன் சேர்த்து வைத்துக்கொள்ள முடியாது. பாதாம் ஹல்வா வும் இட்டிலியும் நாக்குக்குச் சுவையாக இருக்கின்றன என்று ஓர் ஆண்டிற்கோ, ஒரு மாதத்திற்கோ வேண்டிய அளவு யாராவது

சேர்த்து வைத்துக்கொள்ள முடியுமா? மூக்குக்கு நல்ல மணத்தைத் தருகின்றது மலர் என்று கொண்டு வந்து சேர்த்து வைத்துக்கொண்டால் எவ்வளவு நாளைக்கு வாடாமல் இருக்கும்? இந்திரியங்களின் நுகர்ச்சிக்கு உரிய பண்டங்களை வேண்டும்போது வேண்டிய அளவில் பெறுவதற்கு உரிய கருவியாக இருப்பது செல்வம். செல்வம் இருந்தால் எந்தக் காலத்திலும் இந்திரிய நுகர்ச்சிக்கு உரிய பொருளாக அதை மாற்றிக் கொள்ளலாம். எந்தச் சமயத் திலும் எந்தப் பொருளையும் வாங்கிக் கொள்ளலாம். அதனால் தான் செல்வத்தைச் சேர்ப்பதில் அத்தனை ஆர்வம் மக்களுக்கு இருக்கிறது.

மனிதன் தனக்கு வேண்டிய அத்தனை பண்டங்களையும் பணத்தாலே பெற்றுவிடலாம். பழங்காலத்தில் பெண்மை நலம் போன்ற சிலவற்றைப் பணத்தால் பெற முடியாது. நினைத்த பெண்களை நினைத்தபொழுது பணத்தால் மணக்க முடியாது. ஆண்டவனிடத்தில் அடிமை செய்கிற மனசைப் பணத்தால் மாற்ற முடியாது. அந்தக் காலத்திலேயே செல்வத்திற்கு எத்தனையோ ஆற்றல் இருந்தது என்று சொல்கிறார்கள். எல்லாவற்றையும் பணத்திற்கு விற்றுவிடும் காலம் இது. 'நமக்கு என்று ஒரு கொள்கை இல்லாமல், ஒரு கட்டுப்பாடு இல்லாமல் பணத்தால் யாரும் எதையும் சாதித்துவிடலாம். பணம் இருந்தால் போதும்; இந்திரியங்களின் நுகர்ச்சிக்குத் தேவையான எல்லாப் பொருளையும் பெற்றுவிடலாம்' என்ற செருக்கேறியிருக்கிற காலம் இது.

"அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்று வள்ளுவர் சொல்கிறார். நிச்சயமாகச் செல்வந்தான் இவ் வுலகத்தை ஆளுகிறது. ஆகவே மலை மலையாகக் குவிக்க வேண்டுமென்ற வேட்கையினாலே பலர் பொருளை ஈட்டுகிறார்கள். அருளை அடைய இறைவனை வழிபட வேண்டுமானாலும், இறைவனுக்கு உற்சவங்கள் செய்வதானாலும் பணம் இல்லை என்றால் முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டு வருகிறது. இறைவனுக்கு அருச்சனை செய்ய வேண்டும்; நம் வீட்டுத் தோட்டத்திலே பூச்செடிகள் வைக்கவில்லை; கடைக்குச் சென்று காசு கொடுத்துப் பூ வாங்கி வரவேண்டி இருக்கிறது. இறை

வனுக்குப் பால் அபிஷேகம் செய்ய வேண்டும்; நம் வீட்டிலே பசுமாடு வைத்திருக்கவில்லை; மாட்டுக்காரனிடம் பணம் கொடுத்துப் பால் வாங்கி அபிஷேகம் செய்கிறோம். இப்படி விலை கொடுத்து எல்லாப் பொருளையும் வாங்குகிற உலகத்தில் நினைத்தால் பொம்மை வாங்கலாம்; பெண்களை வாங்கலாம்; கோயிலை வாங்கலாம்; கடவுளையும் வாங்கிவிடலாம் என்கிற செருக்கு ஏறிக்கொண்டிருக்கிறது.

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்"

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

அருளியல் வியாபாரம்

அந்தக் காலத்தில் கடவுளை வாங்கிய மனிதர்கள் இருந்தார்கள். அவர்கள் தம்மைக் கடவுளுக்கு விற்றுவிட்டுக் கடவுளைத் தாம் பெற்றார்கள்.

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை"

என்று இந்த வியாபாரத்தைப்பற்றி மாணிக்கவாசகர் சொல்வார்.

சகாதேவன் கடவுளை வாங்கினான்; பிரகலாதன் வாங்கினான்; அப்பர் சுவாமிகள் வாங்கினார்.

அவர்கள் செய்த வியாபாரம் எத்தகையது? இந்த உலக இயலிலே ஒரு பண்டத்தைக் காசு வாங்கிக் கொண்டு ஒருவனுக்கு விற்றுவிட்டால் இவனிடம் காசுதான் இருக்கும். பண்டம் வாங்கினவனிடத்தில் போய்ச் சேர்ந்துவிடும். ஒருவனிடம் ஒரு டார்ச்சு விளக்கு இருக்கிறது. இருளில் போய்க்கொண்டிருக் கிறான். எதிரே வருகிறவன் ஒருவனிடம் இருந்த டார்ச் எரிய வில்லை. "அப்பா! உன் விளக்கைக் கொடு" என்று இவனிடம் இருப்பதை அவன் வாங்கிப் போய்விட்டால் இவனிடம் வேறு விளக்கு இல்லாமல் இவன் இருளில் தடுமாறவேண்டியதுதான். உலகியல் வியாபாரம் இதைப் போன்றது. அருளியல் வியாபாரம் இத்தகையதன்று; அது உலகியலுக்கு மாறானது.

ஒருவனிடம் எரிந்து கொண்டிருக்கும் அகல் விளக்கு இருக் கிறது. எத்தனை விளக்கைக் கொண்டுவந்து வேண்டுமானாலும் அந்த அகல் விளக்கில் ஏற்றிக் கொள்ளலாம். அதே சமயம்

இங்கேயும் விளக்கு இருக்கும். மற்றவர்களிடத்திலும் இந்த விளக்கிலே ஏற்றிய விளக்குகள் இருக்கும். அதைப் போலவே அருளியல் உலகில் வியாபாரம் செய்கிறவர்கள் தங்களிடத்தி லுள்ள பொருளைத் தங்களிடத்தில் இருக்கும்போதே பிறருக்கும் கொடுப்பார்கள். இது மிக அற்புதமான வியாபாரம். வியாபாரி தம்மிடத்தில் உள்ள பொருளைச் செலவழிக்காமலேயே அதை விற்று லாபம் அடைவதென்றால் ஆச்சரியமாக இல்லையா? பிர பஞ்சத்திலே இதைப்போன்ற வியாபாரம் வேறு எதுவும் இல்லை. இத்தகைய அருள் வியாபாரிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர் அருண கிரியார். அவர்களுக்குப் பொருளினிடம் மோகம் இல்லை.

காந்தியடிகளின் பெருமை

வாழ்க்கையின் ரூபாய், அணா, பைசாதான் எல்லாம் என்று நாம் நினைக்கிறோம். பணம் இல்லாவிட்டால் வாழ்வே இல்லை, மதிப்பே இல்லை என எண்ணிப் பணத்திற்காகவே பேயாகப் பறக்கிறோம். இது பொய் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். மகாத்மா காந்தி இறக்கும்போது அவரிடம் ஆறு ஏழு சாமான் களே சொந்தமாக இருந்தன என்பதை நாம் பார்த்தோம். அவர் செல்வத்தை வைத்துக்கொண்டு வாழவில்லை. ஆனால் செல்வம் அவர் காலடியில் வந்து விழுந்து கிடந்தது. அவர் பரமேசுவரனைப் போல வாழ்ந்தார். பரமேசுவரன் கையில் கபாலம் ஏந்தி, இடை யில் புலித்தோல் உடுத்து, மேனியெல்லாம் சுடலைப் பொடி பூசி ஆண்டியாகத் திரிகிறான். அவனுடைய நண்பன் குபேரன். எத்தனை பணம் வேண்டுமானாலும் பரமேசுவரனுக்குக் கொண்டு போய்க் கொட்ட ஆயத்தமாகத் தன் கருவூலத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறான். யாராவது குபேரனுக்குப் பரமேசுவரன் நண்பன் என்று சொல்கிறார்களா? குபேரனால் பரமேசுவரனுக்குப் பெருமை உண்டா? இல்லை. குபேரன் தன்னைப் பரமேசு வரனுடைய நண்பன் எனச் சொல்லிப் பெருமைப்படுகிறான்.

நம்முடைய வாழ்நாளில் பிர்லா என்ற குபேரனைப் பார்த்தோம்; காந்தியடிகள் என்ற பரமேசுவரனையும் பார்த்தோம். யாராவது பிர்லாவுக்குக் காந்தியடிகள் நண்பர் என்று சொன்னது உண்டா? பிர்லாவைச் சொல்லும் போது காந்தியடிகளின் சிஷ்யர் என்று சொன்னார்கள். செல்வம் மதிப்பை உண்டாக்காது என்பதை

நமக்குப் பிரத்தியட்சமாகக் காட்டியவர் காந்தியடிகள். அதை நாம் பார்த்த பிறகாவது நமக்குச் செல்வத்தினிடத்தில் மதிப்பு இல்லாமல் இருக்கிறதா?

செல்வத்தை அவமதிக்கவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. அதை அளவுக்கு மிஞ்சி மதிக்கக் கூடாது. மதிப்பு வைப்பதற்குரிய பிற பொருள் இருக்கும்போது அதை மறந்து செல்வத்தையே மதித்து வாழ்கிறோம். அவ்வாறு மதிப்பதற்கும் ஓர் அளவு இருக்க வேண்டாமா? அந்த அளவை மீறும்போது தீங்கு உண்டாகிறது.

கருத்தில் செல்வம்

எந்தப் பொருளை எந்த இடத்தில் வைத்துப் பார்க்கிறோமோ அதற்கு ஏற்பத்தான் அதற்கு மதிப்பு. நமது கருத்தில் வைக்க வேண்டிய பொருளைக் கையில் வைத்துக் கொள்கிறோம். கையில் இருக்கவேண்டிய பொருளைக் கருத்துப் பொருளாக்கிக் கொண்டு திண்டாடுகிறோம். இதனால் ஏற்படும் துன்பந்தான் உலக வாழ்க்கையில் மிக அதிகம்.

கப்பல் போகும்போது கடல் கொந்தளிக்கிறது. அலை எத்தனைதான் நான்கு தென்னை மரம் உயரம் எழும்பிக் கொந்தளித்தாலும் கப்பலில் ஓட்டை இல்லாத வரைக்கும் பயம் இல்லை. ஆனால் கடல் மிக அமைதியாக இருக்கிறது என்றாலும் கப்பலில் சிறிய ஓட்டை இருக்குமானால் கடல் நீர் உள்ளே வந்துவிடும். தண்ணீர் வெளியே எத்தனைதான் கொந்தளித்துக் கொண்டிரந்தாலும் கவலை இல்லை. தண்ணீர் கப்பலுக்குள் வரத் தொடங்கினால் கப்பலுக்கே ஆபத்து.

வாழ்க்கைக்குத் தேவையானது செல்வம். செல்வம் நம் கையில் இருக்கிற வரைக்கும் ஆபத்து இல்லை. செல்வம் கை அளவிலே இருப்பதோடன்றி, உள்ளே கருத்திலே புகுந்துவிட்டால் கப்பலுக்குள் தண்ணீர் புகுந்ததுபோலத்தான். கைப்பொருளாக வைக்க வேண்டியதைக் கருத்துப் பொருளாக வைக்கக் கூடாது. கருத்துப் பொருளாக ஏறிவிட்டால் அது கருத்திற்குரிய மற்றப் பொருளை எல்லாம் அழித்துவிடும். ஆகவே அதைச் செய்யக் கூடாது என்று நமக்குச் சொல்ல வருகிறார் அருணை முனிவர். அதை அலங்காரமாகச் சொல்கிறார்.

வாழ்க்கையாறு

நமது வாழ்க்கை ஒரு பேராறு. இது சென்று கொண்டே இருக்கும்பொழுது மரணம் என்கின்ற பெரிய ஏரிகளில் புகுந்து புகுந்து மறுபடி வெளிப்பட்டு வந்து கொண்டே இருக்கும்.

பெரும்பாலும் காட்டாறுகள் வறண்டு கிடக்கும். வெள்ளம் வந்தால் மேடு பள்ளமாகிவிடும். கரைகளை உடைத்துக்கொண்டு பல ஊர்களையே அழித்துவிடும். வயல்கள் மணல் மேடாகி விடும். இப்படிக் காட்டாற்றில் வெள்ளம் வருவது போலவே செல்வம் வருகிறது. எவ்வளவுதான் பொருளாதாரத் தத்துவம் படித்தாலும் யாராலும் நினைத்தபொழுது நினைத்த அளவு செல்வத்தைப் பெற முடிவதில்லை. திடீரென்று வெள்ளத்தைப் போலவே அது வருகிறது. வந்த இடம் தெரியாமல் வடிந்தும் போகிறது. 'செல்வம்' என்ற சொல்லுக்கே, 'போவோம்' என்று பொருள்.

"நிறைசெல்வம், நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்"

என்று குமரகுருபர முனிவர் சொல்கிறார். அவர் பாடுவதற்கு முன்பே பாடியிருக்கிறார் அருணகிரியார்.

சுழித்தோடும் ஆற்றில் பெருக்கா னதுசெல்வம்.

இரண்டு ஆறுகள். ஒன்று நாம் காணாத ஆறு. ஆனால் அந்த ஆற்றில்தான் நாம் அமிழ்ந்திருக்கிறோம். அதுதான் நமது வாழ்க்கை ஆறு. நல்ல ஆறு என்பது இரண்டு கரையும் சரியாக இருந்து, எந்த இடத்திலும் தங்காமல், குழம்பித் தேங்கி நிற்காமல் நேராகச் சென்று கடலில் போய் விழும். அப்படி இல்லாவிட்டால் கொந்தளிப்பு நிரம்பிய கடலில் போய் விழுவதற்குள் தனக்குள் பலரை விழப்பண்ணும். நமது வாழ்க்கையாகிய ஆறு பெரிய காட்டாறாக இருக்கிறது அதில் திடீர் திடீரென்று செல்வமாகிய வெள்ளம் வருவதும், வந்த சுவடு தெரியாமல் வடிவதுமாக இருக்கிறது.

''எனக்கு அவனைத் தெரியும் அப்பா! எங்கள் தகப்பனாரிடத்தில் கடன் வாங்கி அந்தக் கடையைத் திறந்தான். இன்று லட்சாதிபதி ஆகிவிட்டான்'' என்று ஒருவனுடைய வாழ்க்கையாற்றில் வெள்ளம் வந்ததைப் பற்றிப் பேசுவதைக் கேட்கிறோம்.

''அடேயப்பா! உட்கார்ந்து சாப்பிட்டாலும் மூன்று தலைமுறைகளுக்குச் சாப்பிடலாமே! அத்தனை சொத்து அல்லவா அவனிடம் இருந்தது? எப்படி அவன் இந்தக் கதிக்கு வந்தான்? மாடமாளிகையில் வாழ்ந்தவன் நடுச்சந்தியில் நிற்கிறானே!'' என்று ஒருவனுடைய வாழ்க்கை ஆற்றில் வெள்ளம் வடிந்ததைப் பற்றிப் பேசுவதையும் கேட்கிறோம்.

கடலில் சேரும் ஆறு

செல்வம் என்பது திடீரென்று வருகின்ற பெருக்கு. பெருக்கு வரும்போது செருக்கும் வருகின்றது. வாழ்க்கையாற்றில் அந்தப் பெருக்கு வருகிறது. அந்த ஆற்றுக்கு இன்பம் துன்பம் என்று இரண்டு கரைகள். ஆற்றிலே போகின்ற வெள்ளம் கரைகளை நோக்கிப் பாய்ந்தால் அவை உடைத்துக் கொள்ளும். கரைகளை அடுத்துள்ள கிராமங்கள் அழிந்துவிடும். ஆனால் நல்ல ஆறு, எத்தனை வெள்ளம் வந்தாலும் கரைகளைப் பார்க்காமல் தான் போய்ச் சேரவேண்டிய கடலையே பார்க்கும். வாழ்க்கையாகிய ஆற்றிலே செல்வமாகிய வெள்ளம் வரும்போது இன்பம், துன்பமாகிய இரு கரைகளையும் பார்க்காமல், சென்று சேருகின்ற கடலைப் பார்த்து, லட்சியத்தைப் பார்த்துச் சென்றால் அந்த ஆறு நிச்சயமாகக் கடலைப் போய்ச் சேரும். அது நல்ல ஆறு ஆகும்.

வாழ்க்கையாறு கடவுள் என்ற கருணைக்கடலைப் போய்ச் சேரவேண்டும். கடலைப் போய்ச் சேருகின்ற ஆற்றிலே எத்தனை வெள்ளம் வந்தாலும் பயம் இல்லை. அலை மோதினாலும் பயமில்லை. கடலைப் போய்ச் சேரவேண்டுமென்ற நினைப்பு இல்லாத ஆறு வெள்ளம் வரும்போது கரைகளைத் தாக்கி உடைத்துக் கொண்டு பல விதமான நாசத்தை உண்டாக்குகிறது. வாழ்க்கை என்னும் பெரிய காட்டாற்றில் செல்வம் என்ற வெள்ளம் வரும்போது அது இன்பம் என்ற கரையையும், துன்பம் என்ற மற்றொரு கரையையும் மோதுகிறது.

முன்னை வினைப்பயன்

ஒரே நிலையில் இருக்கின்ற இரண்டு பேரைப் பாருங்கள். ''இன்பத்தை அடைவதற்குக் காரணமான செயல் ஒன்றும் அவன்

செய்யவில்லையே! இருந்தாலும் அவன் இன்பத்தை அநுபவிக்கிறானே! நான் துன்பத்தை அடைவதற்கு உரிய காரியம் எதையும் செய்யவில்லையே! நான் துன்பப்படுகிறேனே!'' என்று சொல்பவர்கள் உண்டு. துன்பத்தை அடைவதற்குரிய காரியங்கள் எதையும் அவன் இப்பொழுது செய்யவில்லை என்பது உண்மை. முற்பிறவியில் செய்திருக்கிறான். செய்யும்போது நாம் தீய செயல்களைச் செய்கிறோம் என்று எண்ணுவதில்லை. செய்ததைச் செய்துவிட்டு அடுத்த பிறவியில் அதன் பயனை அநுபவிக்கும் போது அழுகிறோம். முன் செய்த வினை என்று உணர்ந்து, இப்போதாவது நல்லது செய்வோம் என்று இருப்பதில்லை.

பட்டினத்தார் வரலாறு

பட்டினத்தார் கதையில் ஒரு நிகழ்ச்சி வருகிறது. அவர் கப்பல் கப்பலாகச் செல்வத்தை ஈட்டி வாழ்ந்தவர். அவரிடம் இருந்த செல்வம் அவ்வூர் அரசனிடம் இருந்ததில்லை. சில சமயங்களில் கடன் வேண்டுமானால் அவ்வரசன் பட்டினத்துப் பிள்ளையை நாடுவான். அத்தனை செல்வத்தையும் உடையவராகிய பட்டினத்தார், ''சுழித்தோடும் ஆற்றில் பெருக்கானது செல்வம்'' என்பதை உணர்ந்து அதை விட்டவர். எல்லாச் செல்வத்தையும் விட்டுவிட்டு அவர் மரத்தடியில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் துறவியானது தெரிந்து வருந்திய அரசன் அவரை அழைத்து வரும்படி ஒருவனை அனுப்பினான். ''செட்டியார் ஐயாவைக் கூப்பிட்டு வரச் சொல்கிறார் அரசர்'' என்று சொல்லிக்கொண்டு அரண்மனை சேவகன் வந்தான். அவன் கூறியது எதுவும் தியானத்தில் இருந்த அவர் காதில் விழவில்லை. அடுத்தாற்போல ஓர் அதிகாரியை அனுப்பி வைத்தான் அரசன். பின்பு அமைச்சர் ஓடிவந்தார். பட்டினத்தார் எழுந்திருக்கவில்லை. அவர் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

பிறகு அரசனே வந்துவிட்டான். அவர் பக்கத்தில் மெல்லச் சென்று நின்றான். அவருடைய தியானம் கலைந்த நேரத்தில், ''தாங்கள் இந்தக் கோலம் கொண்டுவிட்டீர்களே! இதில் என்ன லாபத்தைக் கண்டீர்கள்?'' என்று கேட்டான். அவர் உடனே, ''நாம் இருக்க, நீர் நிற்க'' என்றாராம். அரசன் அவரிடம் கடனாகப் பொருளை வாங்கினாலும் அவர் அவனுக்குப் பணிந்து நின்றார்

முன்பு. இப்போது அரசன் அருகில் நிற்க, அவர் எழாமல் கால் மேல் கால் போட்டுக்கொண்டு வீற்றிருந்தார்.

அவருக்கு உண்மையான பகுத்தறிவு இருந்தது. யார் கடவுளை நிச்சயமாக நம்புகிறானோ, யார் இன்ப துன்பத்திற்கு மூலகாரணம் உண்டென்று நம்புகிறானே அவன்தான் பகுத்தறிவாளி. பட்டினத் தடிகள் வாழ்க்கையில் எவ்விதத் தவறும் செய்யவில்லை. ஒரு முறை அவர்மேல் திருட்டுக்குற்றம் சாற்றித் தூக்கிலிடக் கொண்டு போனார்கள். தூக்கு மேடைக்கு முன்னால் நின்றார். அவர் செய்யாத திருட்டுக்கு அவருக்குத் தண்டனை கொடுக்கத் தூக்கு மரம் நின்றது. தம் வாழ்க்கை ஏட்டைப் புரட்டிப் பார்த்தார். அந்தத் துன்பத்தை அநுபவிப்பதற்குரிய காரியம் எதையும் அவர் செய்ததாகத் தெரியவில்லை. தமக்குத் தெரியாத பழங் கணக்கில் இதற்குக் காரணமான வினை இருக்கவேண்டும் என்று தெளிந்தார்.

''என்செய லாவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செய லேயென்று உணரப்பெற் றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை; பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யேஇங்ங னேவந்து மூண்டதுவே.''

''இறைவனே! எனக்கென்று செயல் ஒன்று இருப்பதாக இப்போது எண்ணவில்லை. எல்லாம் உன் செயல் என்று உணர்கிறேன். இந்த உடம்பை எடுத்த பிற்பாடு நான் செய்த தீவினை ஒன்றும் இல்லையே. நான் முன் பிறவியில் செய்த தீவினை இப்படி வந்து மூண்டதுபோலும்'' என்று பாடினார். உடனே தூக்குமரம் எரிந்துவிட்டது என்று கதை சொல்வார்கள்.

இன்பமும் துன்பமும்

இன்பம் துன்பம் ஆகிய இரண்டு விளைவுகளும் இப் பொழுது செய்கின்ற காரியங்களின் பலன் அல்ல. முந்திய பிறவி களில் செய்திருக்கும் செயல்களின் பயன். அப்படி விளையும் இன்ப துன்பம் ஆகிய இரண்டு கரைகளுக்கும் உட்பட்டு வாழ்க்கை யென்றும் ஆறு செல்லும்போது இவ்விரண்டு கரை களையும் லட்சியம் செய்யாமல் இவற்றோடு மோதாமல் நேராகச் சென்றால் இறைவனாகிய கருணைக் கடலுடன் எளிதில் கலந்துவிடலாம்.

மிச்ர கர்மங்களின் பயனாக மனிதப் பிறவி வருகிறது. பாவத்தை மாத்திரம் செய்தவனாக இருந்தால் விலங்காகப் பிறப்பான்.

புண்ணியத்தை மாத்திரம் செய்தவனாக இருந்தால் தேவனாகப் பிறப்பான். புண்ணியம், பாவம் ஆகிய இரண்டையும் கலந்து கலந்து செய்ததனால் மனிதனாகப் பிறந்து, ஒரு பக்கம் இன்பம், ஒரு பக்கம் துன்பம் ஆகிய கரைகளை உடைய வாழ்க்கை ஆற்றில் செல்கிறான். இரண்டு பக்கமும் கரை உடையதுதான் ஆறு.

இன்பம் அடையும்போது நம்முடைய பெருமையால் இதனை அடைந்தோம் என்று செருக்கு அடைவதும், துன்பம் வரும்போது அதற்குக் காரணம் பிறரென்று எண்ணிக் கோபம் கொள்வதும் மனிதன் இயல்பு. இரண்டு நிலைகளிலும் முன்னை ஊழ்வினையே காரணம் என்று உணர்ந்து இறைவனை நினைக்க வேண்டும். இறைவன் தன்னை நினைப்பதற்காகவே துன்பத்தைக் கொடுக்கிறா னென்று பெரியவர்கள் எண்ணுவார்கள். துன்பம் வரும்போது, துன்பத்தைத் தந்த ஆண்டவனை மனத்தில் நினைக்கிறவனுக்குக் கோபம் வராது.

துன்பத்திற்கு உண்மையான காரணம் யாரோ, அவனைக் கோபிக்கலாம். துன்பத்திற்குக் காரணம் யார்? ஆண்டவன் அல்ல. வலக்கை இடக்கையை அடித்தது. வலக்கை முன் பிறவி; இடக்கை அடி வாங்குகிற இந்தப் பிறவி. முன் பிறவியில் நாம் செய்த தீவினைகளே இப்பிறவியில் நமக்குத் துன்பமாக விளை கின்றன என்பதை உணர்ந்தால் நம்மை நாமே கோபித்துக் கொள்ளவேண்டும்.

இரண்டு கரைகள்

வாழ்க்கையாகிய ஜீவநதிக்கு ஆண்டவன் இன்பம் துன்பம் என்ற இரண்டு கரைகளை வைத்திருக்கிறான். இந்தக் கரைகளை மீதூர்ந்து வருவது செல்வம் என்ற பெருக்கு. இந்தப் பெருக் கானது கரைகளை மோதினால் வாழ்க்கை அலங்கோலமாகிவிடும். இந்த வெள்ளப் பெருக்கைப் பார்த்து மயங்காது, பக்கத்திலுள்ள கரைகளைப் பார்த்துத் தேங்கிக் கிடக்காது, இவற்றை எல்லாம் கழித்து ஓடவிட்டால் ஆண்டவனாகிய கருணைக்கடலோடு கலக்கலாம்.

சுழித்தோடும் ஆற்றில் பெருக்கா
    னதுசெல்வம்; துன்பம்இன்பம்
கழித்தோடு கின்றது எக்காலம் நெஞ்சே?

அருணை முனிவர் தம் நெஞ்சைப் பார்த்து உபதேசம் செய்கிறார். ஆயினும் நம் நெஞ்சங்களுக்குச் செய்த உபதேசம் அது.

கருணைக்கடல்

செல்வத்தைக் கண்டு மயங்கலாகாது. அது இன்று வரும்; நாளை மறையும். ஆற்றில் சுழித்தோடும் வெள்ளப் பெருக்கு வருவதுபோல வரும்; வெள்ளம் வடிவதுபோல வடிந்தும் விடும். இந்த ஆற்றுக்கு இன்பம், துன்பம் ஆகிய இரு கரைகள் உண்டு. இந்த இரண்டையும் கழித்துவிட்டு வேகமாக நேரே போகவேண்டும். கடலில் கலக்கும்போது ஆறு கரைகளினின்றும் இழிந்துபோய்க் கலக்கும். கரை இல்லையே என்று அப்போது நினைக்கக் கூடாது. இங்கே கரைகள் இருக்கின்றனவே என்றும் நினைக்கக் கூடாது. இந்தக் கரைகளுக்கு அடங்கி, இவற்றை மோதாமல் போனால் கரையற்ற கருணைக்கடலில் கலந்து விடலாம்.

வேகமாக எங்கும் நிற்காமல் நேராகப் போவதற்குத்தான் ஆறு என்று பெயர். தேங்கி இருந்தால் குட்டை. அதில் பாசி படரும். ஓடும் ஆற்றில் பாசி படியாது. அதைப்போல வாழ்க்கையாகிய ஆறு செல்வப் பெருக்கால் குலையாமல் இன்ப துன்பமாகிய கரைகளை மோதிக் கொண்டு தேங்காமல் அவற்றை எல்லாம் கழித்துவிட்டு நேராகச் சென்றால் அதில் பாசம் தங்காது.

அந்த ஆறு எங்கே ஓடிப்போய்ச் சேரவேண்டுமென்பதைப் பின்னே பாடுகிறார்.

காவிரிச் செங்கோடன்

அவரைப் பார்த்து, ''செல்வத்தைக் கண்டு மயங்காமல், இன்ப துன்பங்களைக் கண்டு அஞ்சாமல் என்ன செய்யவேண்டும்? எங்கே போகவேண்டும்? கொஞ்சம் சொல்லுங்கள் சுவாமி!'' என நாம் கேட்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் சொல்கிறார்.

கரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன்
என்கிலை.

''நமக்கு இன்ப துன்பமற்ற நிலையைக் கொடுத்து ரட்சிக்கின்ற தந்தை ஒருவர் இருக்கிறார். அவர் எங்கே இருக்கிறார் தெரியுமா? ஓர் ஆற்றின் கரையில்தான் இருக்கிறார். காவிரி ஆற்றின் கரையில் திருச்செங்கோட்டில் இருக்கிறார்'' என்று ஆரம்பிக்கிறார். ''மனமே! நீ திருச்செங்கோட்டில் உள்ளவன் என்று தியானிக்கவில்லையே!'' என்று சொல்கிறார்.

காவேரிக்கும் திருச்செங்கோட்டுக்கும் பத்து மைல் தூரம் உண்டு. இந்தக் காலத்தவர்கள், ''திருச்செங்கோடு காவேரி ஆற்றின் கரையில் இருக்கிறதா? அருணகிரியார் அந்த ஊருக்கே போகாமல் இந்தப் பாட்டை எழுதியிருக்கிறார் போலிருக்கிறது'' என்று சொல்வார்கள். ஆனால் அந்தக் காலத்தில் யாரும் கால்நடைக்கு அஞ்சினவர்கள் அல்ல. அருணகிரிநாத சுவாமி கால்நடையாகவே பல தலங்களுக்குச் சென்றிருக்கிறார். அவருக்குத் திருச்செங்கோட்டு வேலனிடத்தில் அதிக ஈடுபாடு உண்டு. அக்காலத்துப் பெரியவர்கள் நடையில் சிறந்தவர்கள்; அவர்கள் நாள்தோறும் காலையில் காவிரியில் நீராடிவிட்டு ஆறெழுத்தைச் சொல்லிக்கொண்டே பத்து மைலையும் கால் நடையாகவே கடந்து வந்து, திருச்செங்கோட்டு வேலவனைத் தரிசிப்பார்கள். நமக்கு ஆண்டவன் காவிரியிலிருந்து பத்து மைல் தூரத்தில் இருப்பவனாகத் தோன்றுவான். ஆனால் முயற்சி உள்ளவருக்கு, பக்தி உள்ளவருக்கு, கால் பலத்தைப் பெற்றவருக்கு, அவன் காவிரியிலிருந்து காலடியில் தான் இருக்கிறான். ஆகையால் காவிரிச் செங்கோடன் என்றார்.

காவிரியின் பெருமை

அந்தக் காவிரி எப்படி வருகிறது? நாம் போகின்ற வழியில் ஒரு சின்ன பொத்தான் கிடந்தால் அதை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொள்கிறோம். அது தங்கப் பொத்தானும் அல்ல; தந்தப் பொத்தானும் இல்லை; பிளாஸ்டிக் பொத்தான். காவிரியிலோ தந்தம், முத்து முதலியன வருகின்றன. அவற்றை எடுத்துப் பெட்டிக்குள் போட்டு வைத்துக்கொள்ள அது நிற்கின்றதா? இல்லை. தான் சென்று சேரவேண்டிய லட்சியத்தைக் குறிக்கொண்டு போய்க்கொண்டே இருக்கிறது.

காவிரியின் பெருமை கங்கைக்குக்கூட வராது என்று சொல்லலாம். அதனால் கங்கை தாழ்ந்தது என்று பொருள்

அன்று. காவிரிக்கு அடியார்களுடைய சம்பந்தம் அதிகம். காவிரி ஆற்றின் இரு மருங்கிலும் எங்கே பார்த்தாலும் தலங்கள். கங்கைக் கரையில் காசி முதலிய சில தலங்களே இருக்கின்றன. ஆனால் காவிரி பிறக்கும் இடம் முதற்கொண்டு கடலில் புகுகின்ற புகார் நகரம் வரையிலும் பல பல புண்ணிய தலங்கள் இருக்கின்றன. அந்தத் தலங்களுக்கு அடியார்கள் வருவார்கள். அவர்கள் நாள்தோறும் கும்பிடுவதனால் தலங்களுக்குப் பெருமை உண்டாகிறது. காவிரி நதியில் பல பல அடியார்களும், முனிவர் களும், சமயாசாரியர்களும் வந்து வந்து நீராடி இறைவனை வழிபட்டிருக்கிறார்கள். அந்நீரெடுத்துச் சென்று இறைவனுக்கு அபிஷேகம் செய்திருக்கிறார்கள். ஆண்டவன் சம்பந்தமும், அடியார்களின் சம்பந்தமும் எப்போதும் இருப்பதனால் காவிரி மிகவும் சிறப்புடையது. அந்தக் காவிரி பெருமித நடை போட்டுக் கொண்டு வருகிறது.

காவிரியின் இயல்பு

கரிக்கோட்டு முத்தைக் கொழித்தோடு காவிரி.

கரிக்கோடு – யானையின் தந்தம். முதிர்ந்த யானைத் தந்தத்திலே முத்து விளையும் என்பார்கள். காவிரி நதி உற்பத்தி யாகின்ற மலைக் காடுகளில் யானைகள் பிறந்து வாழ்ந்து இறந்து படுகின்றன. அவற்றின் தந்தங்கள் இந்த ஆற்றிலே உருண்டு உருண்டு வருகின்றன. அதனால் அவை உடைந்து அவற்றில் இருக்கும் முத்துக்கள் அவ்வாற்றிலே சிதறுகின்றன. யானைத் தந்தத்திலே பிறக்கும் முத்துக்களைக் கொழித்து அரித்துக் கொண்டே காவிரி ஆறு போய்க்கொண்டிருக்கிறது. அம்முத்துக்களை அது சேமித்து வைப்பதில்லை.

அப்பர் செய்தது

அப்பர் சுவாமிகள் உலகத்து ஆசைகளைத் துறந்து உழவாரத் திருப்பணி செய்து கொண்டிருந்தார். அவருக்கு எந்தப் பொருளின் மேலும் ஆசை இல்லை என்பது இறைவனுக்குத் தெரியும். இருந் தாலும் உலகத்தாருக்குத் தெரிய வேண்டாமா? அதற்காக ஒரு பரீட்சை நடத்தினான். கல்லையும், முள்ளையும் செதுக்கி அடியார்கள் நடக்கும் பாதையைச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்

அப்பர் சுவாமிகள். அவர் வெட்டுகின்ற இடங்களில் பொன்னும் மணியும் கிடக்கும்படி செய்தான் இறைவன். 'இது மணி யாயிற்றே; இது பொன் ஆயிற்றே' என்று அப்பர் சுவாமிகள் எண்ணி அவற்றை வாரித் திரட்டிக் கொள்ளவில்லை. அடி யார்கள் நடக்கும் இடத்தில் வெறும் கல் குத்துவது போலத்தானே மாணிக்கக் கல்லும் பொன் கட்டியும் குத்தும் என்று எண்ணிக் கல்லோடும் மண்ணோடும் சேர்த்து அவற்றையும் ஒன்றாகவே குவித்து அப்பால் கொண்டு போய்க் கொட்டினார். இப்படித்தான் அடியார்கள் இன்பத்தையும் துன்பத்தையும், செல்வத்தையும் கழித்துக்கொண்டே இருப்பார்கள்.

காவிரி கடலாகிய தன் தலைவனோடு கலப்பதற்காக நில்லாமல் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. கரிக்கோட்டு முத்தை நின்று எடுக்காமல், அவற்றை அப்படியே கொழித்துக்கொண்டு ஓடுகிறது. மலரையும், தந்தத்தையும், முத்தையும், மணியையும் லட்சியம் செய்யாமல் ஓடுகிறது. அந்த ஆற்றின் கரையில் இருக்கிறான் நம்முடைய தலைவன். தான் இருக்கும் இடம் எல்லோருக்கும் தெரிவதற்காகத் திருச்செங்கோட்டு மலைமேல் இருக்கிறான்.

வேல்

செங்கோட்டில் இருப்பவன் யார்? செங்கோட்டு வேலன். எம்பெருமான் திருவுருவத்தில் வேலும் இருப்பதனால் செங் கோட்டு வேலன் என்றே சிறப்பாகச் சொல்வார்கள். ''நாகாசல வேலன்'' என்றும்,

> **''தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே**
> **வைவைத்த வேற்படை வானவனே''**

என்றும் அருணகிரியார் கூறுவர்.

செங்கோட்டைப் பார்த்தால் போதாது. செங்கோடனிடத்தில் புகுகின்ற துறை ஒன்று இருக்கிறது. காவிரி ஆறு கடலோடு சங்கமம் ஆகும் துறை ஒன்று இருப்பது போலச் செங்கோடன் என்ற கருணைக்கடலோடு நம் உள்ளம் சங்கமம் ஆவதற்கு இங்கேயும் ஒரு துறை இருக்கிறது. அதுவே நம்முடைய அவித்தை யாகிய இருளைப் போக்கி ஞான ஒளியைக் கொடுக்கக் கூடிய

வேல். அந்த வேலை அவன் தன் திருக்கரத்தில் வைத்திருக் கிறான். செங்கோடனைத் தியானம் பண்ண அந்த வேல் உதவியாக இருக்கும். வேலின் பெருமை என்ன?

குன்றம் எட்டும் கிழித்தோடு வேல்.

சூரபன்மன் அரசாட்சிக் காலத்தில் அவனுக்கு எல்லைக் கற்களாக நின்ற அஷ்ட குலாசலங்களையும் அந்த வேல் கிழித் தோடிற்று; பொடி பொடியாக்கியது.

வாழ்க்கையாகிய ஆற்றில் மூழ்கிக் கிடக்கும் நாம் காவிரி ஆற்றை நினைக்க வேண்டும். அது ஒரு கணம்கூட எங்கேயும் நிற்பது இல்லை. எந்தப் பள்ளத்திலும் தேங்கிக் கிடப்பது இல்லை. யானைத் தந்தத்தின் முத்துக் கிடைத்தாலும், பொன் கிடைத்தாலும் அவற்றை அது லட்சியம் செய்வதே இல்லை. அவற்றைக் கொழித்துக்கொண்டு வேகமாகக் கடலோடு சேரப் போய்க் கொண்டே இருக்கிறது. அதைப் பார்க்கும்போதாவது நாம் சென்று சேரவேண்டிய கருணைக்கடலாகிய செங்கோடன் நினைவு வருகிறதா? அவனோடு சங்கமம் ஆவதற்கு உரிய துறையாகிய வேல் நினைவுக்கு வருகிறதா?

''வாழ்க்கையாகிய சுழித்தோடும் ஆற்றில் பெருக்குப் போல வருகின்ற செல்வத்தை மதித்து மயங்கி நிற்கக் கூடாது. அவ்வாற்றின் கரைகள் போலுள்ள இன்ப துன்பத்தைக் கண்டு அஞ்சி நிற்கலாகாது. நடுவிலே தேங்கினால் பாசியாகிய பாசம் பிடிக்கும். வேகமாக ஓடுகின்ற ஆற்றில் பாசி படராது. பெருக் காகிய செல்வத்தையும், இன்ப துன்பமாகிய கரைகளையும் கழித்துவிட்டுக் கொண்டு நேராகச் செங்கோடனாகிய கடலோடு கலக்க அவன் திருக்கை வேலாகிய துறையைச் சென்று அடை வது எக்காலம்? செங்கோடனை நினையாமல், அவன் திருக்கை வேலை நினையாமல், செல்வத்தில் மயங்கி, இன்ப துன்பக் கரைகளை மோதிக்கொண்டு வாழ்க்கையில் பாசம் படரத் தேங்கிக் கிடக்கிறாயே! நமக்கு முத்தி எப்படிக் கிட்டும் மனமே!'' என்று அருணகிரியார் இப்பாட்டில் பாடுகிறார்.

சுழித்தோடும் ஆற்றில் பெருக்கா
னதுசெல்வம்; துன்பம்இன்பம்
கழித்தோடு கின்றதுஎக் காலம்?நெஞ்
சே!கரிக் கோட்டுமுத்தைக்

கொழித்தோடு காவிரிச் செங்கோடன்
என்கிலை; குன்றம்எட்டும்
கிழித்தோடு வேல்என் கிலை;எங்ங
னேமுத்தி கிட்டுவதே?



(சுழிகளைச் சுழித்து ஓடுகின்ற வாழ்க்கை ஆற்றிலே வெள்ளம் போல வந்து போவது செல்வம்; அந்த ஆற்றின் கரைகளைப் போன்ற துன்பம் இன்பம் என்னும் இரண்டையும் கடந்து ஓடுகிறது எந்தக் காலம்? நெஞ்சமே! யானையின் கொம்பிலே விளைந்த முத்துக்களை அரித்துக் கொண்டு ஓடும் காவிரியாற்றுக்கு அருகில் உள்ள திருச்செங்கோட்டில் வாழும் முருகன் என்று சொல்லவும் எண்ணவும் இல்லை; எட்டுக் குன்றுகளையும் கிழித்து ஓடிய வேல் என்று சொல்லவில்லை. நமக்கு முத்தி எவ்வாறு கிட்டும்?

பெருக்கு - வெள்ளம். கரிக்கோடு – யானையின் கொம்பு. என்கிலை – என்று எண்ணவில்லை; என்று துதிக்கவில்லை.)

'வேல் மறவேன்'

1

ஞானம் பெறுவதற்குப் பெரும் தடையாக இருப்பது காமம். இறைவனுடைய திருவருளை அடைவதற்குரிய முயற்சிகளைச் செய்யவொட்டாமல் தடுக்கும் உணர்ச்சிகள் பல உண்டு. அவை எல்லாவற்றிலும் மிக வலிமை உடையது காமம். அது அறிவை மறைத்துவிடுகிறது. ''காமத்திற்குக் கண் இல்லை'' என்ற பழமொழி அதைத்தான் குறிக்கிறது. காமத்தினால் பெண்களோடு கலந்து இன்பம் நுகர்கிறான் மனிதன். அதனால் மயக்கத்தை அடைகிறான். மயக்கம் அடைகிற காரணத்தினால் காமத்திற்குக் கள்ளை உவமையாகச் சொல்வது உண்டு.

கள்ளால் உண்டாகும் மயக்கம்

கள்ளைக் குடித்தால் அது மூளையைப் போய்த் தாக்குகிறது. மூளைக்கும் கண்களுக்கும் தொடர்பாக உள்ள நரம்பைப் போய்த் தாக்குகிறது. அதனால் கள் குடித்தவனுடைய கண்கள் திறந்திருந்தாலும் லாந்தல் கம்பம் அவனுக்கு மனிதனைப் போலத் தோன்றுகிறது. மனிதனைக் கண்டால் மாடு என்று வெருண்டோடுகிறான். தன் மனத்தின் அடித்தளத்தில் மறைந்திருக்கிற விஷயங்களை வெளிப்படுத்துகிறான். மானம், மதிப்பு, கௌரவம், அந்தஸ்து என்று இதுவரையிலும் எண்ணியிருந்தவற்றைத் துறந்து மனம் போனபடி திரிகிறான். ஒருபுறம் பார்த்தால் உள்ளொன்று வைத்துப் புறம்பு ஒன்று பேசும் மனிதனைப் போல் அல்லாமல் உள்ளத்தில் இருப்பவற்றைப் புறத்தில் கொட்டிவிடுகிறான்.

இன்ப நாட்டம்

கள்ளை உண்பவன் அதனாலே இன்பத்தை நாடுகிறான். ''உலகமெல்லாம் பழி கூறுகிறதே! மனத்தில் வைத்துள்ள விஷயங்களை வெளியிட்டு விடுகிறோமே!'' என்று அவனுக்குத்

தெரியாமல் இருக்குமா? கள் குடித்த மயக்கம் போய்த் தெளிவு பிறந்தவுடன் இவைகள் எல்லாம் தெரிந்து விடுகின்றன. தேள் கொட்டுமென்று ஒருவனுக்குத் தெரியாது. அவன் விளையாட்டாகக் கொடுக்கில் கை வைத்தான்; கொட்டிவிட்டது. மறுபடியும் அவன் தேளைக் கண்டால் கை வைப்பானா? ஒன்றால் ஒருவன் துன்பத்தை அடைந்தால் மீட்டும் அதை நாட மாட்டான். ஒரு முறை கள்ளைக் குடித்துவிட்டு ஆடியவன் அதனால் தனக்கு உண்டான பழியையும், அவமானத்தையும் நன்றாக உணர்ந்த பின்பும், குடிக்கக் கூடாதென்ற சட்டம் இருந்தும், திருட்டுத் தனமாக மீண்டும் மீண்டும் குடிக்கிறான் என்றால் அதற்கு ஏதேனும் தக்க காரணம் இருக்க வேண்டும். மானம் மரியாதை பாவம் பழி ஆகியவற்றை எல்லாம் மிஞ்சுகிற இன்பம் அதில் இருக்கிறது. அந்த இன்பம் இல்லாவிட்டால் கள்ளை அவன் நாடமாட்டான். அதனிடம் அவன் பெறும்படியான இன்பம் ஏதோ ஒன்று இருக்கிறது. அந்த இன்பம் எது?

தன்னை மறத்தல்

கள்ளைக் குடித்தவன் தன்னை மறந்து பேசுகிறான்; தான் இன்ன இன்ன காரியங்கள் செய்ய வேண்டும். இன்னாரிடத்தில் இன்ன மாதிரியாகப் பேசவேண்டும் என்று முன்பு திட்டங்கள் போட்டிருந்தால், அந்தத் திட்டங்களை எல்லாம் மறந்த நிலையை அடைகிறான்.

தன்னை மறப்பது இன்பம். 'நன்றாகத் தூங்கினேன்' என்று ஒருவன் சொல்கிறான். தூங்கும்போது ஆசாபாசங்களை மறந்து, கவலையை மறந்து, கடமையை மறந்து கட்டை போலக் கிடப்பதால் இன்பத்தை அடைகிறான். கள்ளைக் குடிப்பவனும் கட்டுக்களை உடைத்து எறிந்து விட்டுக் கவலைகளை எல்லாம் மறந்து, தன்னையும் மறந்து விருப்பப்படி பேசுவதனால் இன்பத்தை அடைகிறான்.

கவலைகளை மறந்து, உலகத்திலுள்ள பற்றுக்களை விட்டு விட்டு நிற்பதுதான் இன்பம். ஞானிகள் அப்படி இருக்கிறார்கள். அவர்கள் கிணறு முழுவதையும் தாண்டியவர்கள். கள்ளைக் குடித்தவன் பாதிக் கிணற்றைத் தாண்டியவன். அதனால்தான் அதைக் குடித்திருக்கும் நேரத்தில் தன்னை மறந்து நின்றாலும் திரும்பத் தெளிவு ஏற்பட்டவுடன் அந்த இன்பம் போய்விடு

கிறது. 'உலகம் நம்மைக் கண்டு பழிக்கிறதே! சிரிக்கிறதே!' என்று தெளிவுள்ள சமயத்தில் நினைத்துத் துன்பப்படுகிறான். முதலில் உண்டான போலி இன்பம் நிலைகொள்வது இல்லை. மெய்ஞ் ஞானிகள் தம்மை எப்பொழுதும் மறந்து இருக்கிறார்கள். கள்ளைக் குடிப்பவன் சில நேரத்திற்கு ஒருவாறு தன்னை மறந்து இருக்கிறான். அவன் பெறுவது உண்மையான இன்பம் அன்று.

உணர்ச்சி மிகுந்தால்

காமம் மாத்திரம் அன்று. உள்ளத்தில் எந்த உணர்ச்சி மிகுந்து இருந்தாலும் உலகத்தைப் பாராத நிலை உண்டாகும். பக்தர்களுக்கு அத்தகைய நிலை வருவது உண்டு. மாணிக்க வாசகப்பெருமாள் அரசன் பணத்தை வாங்கிக் கொண்டு குதிரை வாங்கப் போனார். போனவர் அப்பணத்தைக் கொண்டு சிவ பெருமானுக்குக் கோயில் எழுப்பினார். இது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிற மாதிரிதான். அரசன் ஏதோ ஒரு காரியத்துக்காகப் பணம் கொடுக்க, அவர் அந்தக் காரியத்தைச் செய்யாமல் பிறிதொரு வகையில் செலவிட்டார். அது தவறுதான். ஆனால் நாம் மாணிக்கவாசகரைக் கொண்டாடு கிறோம். அதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். அவர் கொண்டு போன பணத்திற்குக் குதிரை வாங்கியிருந்தால் குதிரைகளின் உதவி கொண்டு போரை நடத்தலாம். அதனால் பல்லாயிரக் கணக்கான பேர்கள் இறந்து போவார்கள். அவரோ எல்லா மக்களும் இறைவன் அருளைப் பெறுவதற்குத் தக்கபடி செய்தார். அதனால் அவரைக் கொண்டாடுகிறோம். செய்த தொழிலின் பெருமை அதன் பயனால் தெரிய வருகிறது. அரசன் கொடுத்த பணத்தை வேறு யாராக இருந்தாலும் கோயில் கட்டத் தைரியம் கொள்ளமாட்டார்கள். மாணிக்கவாசகரின் உள்ளத்தில் பக்தி உணர்ச்சி மீதூர்ந்து இருந்தது. அதனால் உலகத்தார் என்ன சொல்வார்களோ என்று அஞ்சாமல், பற்றுக்களையும் கடமை களையும் மறந்த நிலையில் அந்தக் காரியத்தைச் செய்தார்.

அவர் பக்திப் பித்துப் பிடித்தவர். பக்திப் பித்துக் கொண்ட பக்தர்கள் உலகம் தம்மைப் பழிக்கிறதே என்று நினைக்க மாட்டார்கள்.

''நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப''

என்று பாடுகிறார். ''ஏதோ பைத்தியம்'' என்று அவரைப் பார்த்து எல்லாரும் கூறினார்கள். அவரோ, ''உலகத்திலுள்ள பைத்தியம் எல்லாம் நம்மைப் பார்த்துக் கை தட்டி ஆரவாரிக்கின்றன; நாம் அவர்களைப் பார்த்து கைதட்டி ஆரவாரிக்கிறோம்'' என்றார். அவரைப் பார்த்து யார் யார் கைதட்டி நகைத்தார்களோ அவர்களே அவரைப் பின்பு கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

இப்படியே, உள்ளத்தில் கோபமோ துக்கமோ மிகுந்து, குறிப்பிட்ட ஓர் எல்லையைக் கடக்கும்போது மற்றவைகள் எல்லாம் கீழே தாழும். இரண்டு பேர் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். ஒருவனை மற்றவன் கத்தியால் குத்தப் போகிறான். அவ்வழியில் செல்லும் யாரோ ஒருவன் அவர்களுக்குள் சமாதானம் செய்து வைக்க இடையே புகுந்தால் அவனைக் குத்தி விடுகிறான். அவனா எதிரி? இவன் கோபம் தடுத்தவனைப் போய்ச் சாரக் காரணம் என்ன? கோபம் என்ற உணர்ச்சி மீதூர்ந்து நிற்கும்போது கடமை, தர்மம், ஞாபகம், ஞானம் ஆகிய எல்லாமே அழிந்து விடுகின்றன. அதுபோலவே காமம் என்னும் உணர்ச்சி மிகும் போது எல்லாம் கீழே போய்விடுகின்றன.

அருணகிரியார், ''நான் காமத்தினால் கலவி என்னும் கள்ளை உண்ணுகிறேன்'' என்று சொன்னார். ஆனால் அப்படி உண் டாலும் அவர் முற்றும் மயங்கவில்லை. அவருடைய மயக்கத்தில் ஒரு விஷயத்தில் மாத்திரம் நினைவு போகவில்லையாம்.

நிதானம் தவறாமை

ஆங்கிலேயர் அரசாட்சி செய்த காலத்தில் கள்ளின் தீமை பற்றிச் சொல்ல ஒரு சபை இருந்தது. அதில் இருந்தவர்கள் 'குடிக்காதே' என்று பிரசாரம் செய்வது இல்லை. ''மிதமாய்க் குடி'' என்று உபதேசம் செய்தார்கள். அந்தச் சபைக்கு மிதக்குடிப் பிரசார சங்கம் (Temperance League) என்று பெயர். மிதமாகக் குடிக்க வேண்டுமென்பதற்கு என்ன கணக்குச் சொல்வது? இரண்டு கிண்ணமா, ஐந்து கிண்ணமா? ஒரு புட்டியா, இரண்டு புட்டியா? ''உன்னை மறக்காத நிலை வரைக்கும் சாப்பிடு. அதாவது, காபி சாப்பிடுகிறதுபோல உற்சாகம் வருவதற்குச் சாப்பிடு. புத்தி பேதலிக்கும்படி சாப்பிடாதே'' என்று அந்தச் சங்கத்தார் சொன்னார்கள். ஆனால் சாப்பிடுகிறவன் அப்படி ஒரு

திட்டத்தோடு நிற்பானா? நிதானம் இழந்துவிடுகிற வரைக்கும் குடிப்பான்.

லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கிறவர்களில் சிலர் பெருமையாகப் பேசிக்கொள்வார்கள். ''கள் சாப்பிட்டாலும் அதை ஒரு நிதானத்தில் வைத்திருக்கிறேன்'' என்று சொல்வார்கள். சிலரைப் பற்றி, ''அவன் குடித்திருந்தாலும் நிதானம் இழப்பதில்லை. மரியாதை தவறிப் பேசுவதில்லை'' என்று சொல்வதை நாம் கேட்கிறோம். அப்படிச் சொல்வதைப்போல அருணகிரியார் இந்தப் பாட்டில் பேசுகிறார்.

மறவா நிலை

இறைவனை நோக்கி, ''நான் மாதரார் காமக் கலவிக் கள்ளை மொண்டு உண்டு மயங்கினாலும் உன் வேலாயுதத்தை மறக்க மாட்டேன்'' என்று சொல்கிறார்.

கண்டுஉண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை மொண்டுஉண்டு அயர்கினும் வேல்மறவேன்.

பெண்களைப்பற்றிச் சொல்லும்போது அவர்களுடைய சொல்லின் தன்மையை முதலில் பேசுகிறார். அவர்கள் கற்கண்டை உண்டு அதைச் சொல்லாகவே வெளியிடுவாரைப் போல பேசுகிறார்கள்.

கண்டுஉண்ட சொல்லியர்.

அந்தச் சொல்லைக் கேட்டுக் காம உணர்ச்சி உண்டாகிறது. அதனாலே மயங்கி அவர்களை அணைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் மிக மென்மையான உருவத்தை உடையவர்கள்.

மெல்லியர்.

அவர்களிடத்தில் விளைகின்ற கலவிக் கள்ளை மொண்டு உண்டு மயங்கி நிற்கிறார்கள் காமிகள். கள்ளைத் தன்னுடைய விருப்பப் படியே எந்த வரையறையும் இல்லாமல் மொண்டு உண்டால் அயர்வுதான் வரும். வரையறையாக உண்டால் அயர்வு ஓரளவு நிற்கும். இங்கே தம்முடைய மனப்படியே கலவிக் கள்ளை மொண்டு உண்டு அயர்ந்தாலும், எல்லாவற்றையும் மறந்தாலும், ஒன்றை மாத்திரம் மறக்கவில்லை என்று அருணகிரியார் சொல்கிறார். இந்த நிலை சாமானிய மக்களுக்கு வருவது இல்லை.

இதற்குப் பல காலமாகப் பழக்கம் செய்திருக்க வேண்டும். இதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்க்கலாம்.

எப்போதும் நினைத்தல்

மனிதன் எதில் பற்றுக் கொண்டு வாழ்ந்திருந்தாலும் அந்தப் பற்றுக்கு மூல காரணமாக இருப்பது அவனுடைய பழக்க வழக்கங்கள். ஏதேனும் ஒரு பொருளிடத்தில் அதிகப் பற்று இருக்குமானால் அதைப் பற்றிப் பேசியும், அதைப்பற்றி நினைந் தும், அது சம்பந்தமாகவே காரியங்களைச் செய்தும் வருவான். அருணகிரிநாதப் பெருமான் எப்பொழுதும் இறைவனைப் பற்றிப் பேசியும், இறைவனையே தியானம் செய்தும், இறைவனோடு சம்பந்தப்பட்ட காரியங்களைச் செய்தும் வாழ்ந்தவர். இந்த நிலையால் எப்பொழுதுமே இறைவனை மறக்காமல் இருக்கும் உணர்ச்சி அவருக்குக் கிடைத்தது.

மறப்பதும் நினைப்பதும் மனத்தினுடைய செயல்கள். இறை வனை வழிபடுவதும் துதிப்பதும் மற்றக் கரணங்களின் செயல் கள். எப்போதும் அவனை நினைத்துக் கொண்டிருப் பதற்குப் பழக்கம் வேண்டும். பழக்கத்தால் அது கை கூடும்.

அருணகிரியார், ''நான் சிற்றின்பத்தை நுகரும்போதும் வேலை மறக்கமாட்டேன்'' என்று சொன்னாலும் நம் போன்றவர்களுக்கு ஓர் அரிய உண்மையை அதன் வாயிலாகச் சொல்லித் தருகிறார். எம்பெருமானுடைய திருவடிகளை, அவனுடைய வேலாயுதத்தை, நெஞ்சிலே நினைக்க வேண்டும். உலகத்தில் வாழும்போது பல பல இன்னல்கள் அதைக் குலைக்க வரும். ஆனாலும் திருப்பித் திருப்பி அவனுடைய திருவுருவ நினைவு நமக்கு வரவேண்டும். அப்படி வந்து பழகினால் எந்தச் சமயத்திலும் அவனுடைய நினைப்பு நமக்கு உண்டாகும். எந்த விதமான செயல்களைச் செய்தாலும், மனம் இயங்கும் வரைக்கும் அந்த மனத்தில் இறை வனுடைய வேலை நினைக்கலாம்.

தொழுது எழுதல்

''தொழுதெழுவார் வினைவளம் நீறெழ''

என்று திருக்கோவையாரில் வருகிறது. பக்தர்கள் படுக்கையை விட்டு எழும்போதே, இறைவனைத் தொழுகிறார்கள். வள்ளுவர் மனைமாட்சி என்ற அதிகாரத்தில்,

"கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"

என்கிறார். "தொழுது கொண்டே எழுந்திருப்பதாவது? எழுந் திருந்த பின்தானே தொழ வேண்டும்?" என்று தோன்றலாம்.

தூங்கும்போது நம்மை மறந்து தூங்குகிறோம். விழிப்பு ஏற்படும்போதே உணர்ச்சி ஏற்படுகிறது. அந்த உணர்ச்சி தோன் றியவுடனே தொழுது கொண்டே எழுந்திருக்கிறார்கள் அன்பர்கள். எழுந்திருப்பதற்கு முன் தோன்றுகிற முதல் உணர்ச்சியிலேயே இறைவனின் நினைவு அவர்களுக்குத் தெளிவாக உண்டாகி விடு கிறது; இறைவனைத் தொழுது கொண்டே எழுந்திருக்கிறார்கள். 'தொழுதெழுவாள்" என்பதற்கு உரையெழுதிய பரிமேலழகரும், 'தெய்வம் தொழுதற்கு மனம் தெளிவது துயிலெழும் காலத்தாக லின் தொழுதெழுவாள் என்றார்' என்கிறார்.

நினைப்பது எளிது

மனம் எப்பொழுதெல்லாம் வேலை செய்கிறதோ அப்பொழு தெல்லாம் இறைவனை நினைக்க வேண்டும். "இன்னும் நான் பல் தேய்க்கவில்லையே! நீராடித் திருநீறு அணியவில்லையே! இப்போது எப்படிக் கடவுளை நினைப்பது?" என்று சிலர் சொல்லலாம். பல் தேய்த்துநீராடா விட்டாலும் மூச்சுவிடுவது இல்லையா? மூச்சுவிடுவதைப் போலவே இறைவனை மனத் தால் நினைக்க வேண்டும்.

திருக்கோயில் செல்லவேண்டுமானால் சுறுசுறுப்பு இருக்க வேண்டும். இறைவனுக்கு அருச்சனை செய்ய வேண்டுமானால் மலர் முதலாயின இருக்க வேண்டும். அவனைப் பாட வேண்டு மானால் இசை வேண்டும்; தொண்டையும் நன்றாக இருக்க வேண்டும். இவற்றுக்கு எல்லாம் வேறு கருவிகளின் துணை அவசியமாக இருக்கிறது. ஆனால் இறைவனை நினைப்பது மிக எளிது. மனம் நினைக்க வேண்டும்.

நாம் உணர்ச்சியுடன் இருக்கும்போதெல்லாம் மனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மனத்திற்கு இறைவனது திருக்கோலத்தை நினைப்பதைக் காட்டிலும் அவன் திருக்கரத்திலுள்ள வேலை

நினைப்பது மிக எளிது. அந்த நினைவு எந்தச் சமயத்தில் இருக்க வேண்டும், எந்தச் சமயத்தில் இருக்கக் கூடாது என்ற வரையறை இல்லை. ''நாம் உடம்பெல்லாம் அழுக்காக நீராடாமல் இருக் கிறோம். அப்போது இறைவனை நினைக்கலாமா?'' என்று சிலர் கேட்பது உண்டு. உடம்பில் தூய ஆடை அணிவதற்கு அழுக்கான உடம்பு கூடாது. உண்ணுவதற்கு அழுக்கான வாய் கூடாது. ஆனால் இறைவனை நினைப்பதற்கு உடம்பு எப்படி இருந் தாலும், வாய் எப்படி இருந்தாலும் மனம் தெளிவாக இருந்தால் போதும்.

மனத்தால் இறைவனை நினைப்பதற்கு, உடம்பு என்ன காரியம் செய்து கொண்டிருந்தாலும், வாக்கு வேறு காரியத்தைச் செய்தாலும் தடை இல்லை. உடம்பு மகளிருடைய கலவி இன்பத்தை அடைந்து கொண்டிருக்கும்போது மனம் வடிவேலை நினைக்கலாம். இது சாத்தியமான செயலே.

சுந்தரர் இயல்பு

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தகைய பழக்கத்தைச் செய்து கொண்டவர்.

''நற்ற வாவுனை நான்ம றக்கினும்
சொல்லு நாநமச்சி வாயவே''

என்று அவர் பாடுகிறார். ஒரு சமயம் அவர் திருவொற்றியூருக்குச் சென்றார். அங்கே சங்கிலி நாச்சியாரை மணந்து கொண்டார். அவருக்கு, 'நான் இந்த ஊரை விட்டு வெளியில் செல்ல மாட்டேன்' என்ற உறுதியைச் செய்துகொடுத்திருந்தார். ஆனால் திருவாரூரின் நினைவு வந்தமையினால் திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்டுவிட்டார். சத்தியத்தை மீறிய குற்றத்திற்காக இறைவன் அவருடைய கண் ஒளியை மறைத்தான். அப்போது சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை நினைத்துக் கதறுகிறார். ''இறைவனே! நான் உன்னை மறக்கவில்லையே! என் நா உன் நாமத்தை மறக்கவில்லையே! இப்போது நான் குருடனாக இருக்கிறேன். எவ்வளவோ சமயங்களில் தடுக்கி விழுகிறேன். அப்படி வழுக்கி விழும்போது ஐயோ அப்பா என்று அலறுவது இல்லையே! எப்போதும் உன் திருப்பெயரையே சொல்கிறேன். இது எப்போதும் நான் உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதற்கு அடையாளம் அல்லவா?'' என்கிறார்.

"வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே!"

பழக்கமும் தியானமும்

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இருந்த பழக்கம் நமக்கும் இருந்தால் துன்பப் படும்போதும், இன்பம் அடையும்போதும் முருகா முருகா என்று சொல்ல வரும். இந்தப் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக முதிர்ந்துவிட்டால் மனம் இறைவனுடைய தியானத்தில் ஒன்றிவிடும். பல காரியங்களைச் செய்து துன்பப்படும் போதும், இந்திரியங்கள் வாயிலாக இன்பத்தை அடையும் போதும், காம நுகர்ச்சியில் ஈடுபடும்போதும் இறைவனைப்பற்றிய நினைப்பு மாறாது. அருணகிரியார் இத்தகைய அநுபவத்தை இந்தப் பாட்டில் சொல்கிறார்.

இறைவன் படத்தை வைத்துப் பலர் தியானம் செய்கிறார்கள். கோயிலுக்குச் சென்று இறைவன் திருவுருவத்தைக் கண்டு பலர் ஆனந்தம் அடைகிறார்கள். அந்தச் செயல்களால் இறைவனுடைய திருவுருவத்தை மனத்தில் அமைத்துக் கொள்ளப் பார்ப்பது நல்லதுதான். ஆனால் இறைவனுடைய திருக்கோலம் முழுவதும் அப்படியே நம்முடைய நெஞ்சில் நிலைத்து நிற்பது அரிது. அப்படி நின்றாலும் நெடுநேரம் இராது. எளிதில் நினைப்பதற்கு ஒன்று இருந்தால் அது அநுகூலம் அல்லவா? அருணகிரிநாதப் பெருமான் இதில் அத்தகைய எளிய தியானப் பொருளைச் சொல்லித் தருகிறார். ஆண்டவன் கையில் இருக்கிற வேலாயுதத்தை மிக எளிதில் நினைந்து தியானிக்கலாம். அதனால் அருணகிரியார், "வேல் மறவேன்" என்கிறார்.

எளிய முறை

நாம் முருகனைப் பற்றி எத்தனை கேட்டாலும் எத்தனை படித்தாலும் நம்முடைய வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் தினமும் சாதனை செய்தே தீரவேண்டும். எந்தக் காரியமும் பழக்கம் இல்லாமல் அநுபவத்தை உண்டாக்காது. இறைவனைப் பற்றிப் பலகாலம் பேசி, பலகாலம் கேட்டு, பலகாலம் படித்திருந்தாலும் அவற்றினால் சிறிதேனும் அநுபவம் இல்லா

விட்டால் அத்தனையும் பயன் இல்லை. நாம் தவம் செய்ய முடியாது. இந்திரிய நிக்கிரகம் செய்ய இயலாது. விரதங்கள் அநுசரிப்பதற்கான நிலையும் நம்மிடம் இல்லை. ஆனால் மனம் உள்ள வரை இறைவனைத் தியானிக்க வழி உண்டு.

ஆண்டவன் திருக்கரத்தில் உள்ள வேலை நாள்தோறும் ஐந்து நிமிஷமாவது பார்த்து அதை மனத்தில் நிறுத்தித் தியானம் செய்யலாம். அது முடியாத காரியம் அன்று. இந்தப் பழக்கத்தை நாம் நடைமுறையில் செய்துகொண்டு வரவேண்டும்.

விளக்கை ஏற்றி வைத்து வேலைப் பார்க்க வேண்டும். உடனே கண்ணை மூடிக்கொண்டு அந்த வேலை உள்ளே பார்த்துப் பழகவேண்டும். அப்படியே கொஞ்சம் கொஞ்சமாகப் பார்த்து வேலை மனத்தில் நினைக்கப் பழகினால் பின்பு அந்த வேலே சோதிப் பிழம்பாக உள்ளத்தில் நிற்கும். இப்பொழுதெல்லாம் கண்ணை மூடினால் நமக்கு இருட்டுத் தோற்றும். வேலைத் தியானம் பண்ணிப் பண்ணிப் பழகிவிட்டால் மின்கீற்றுப் போல அந்த வேல் உள்ளத்தில் ஒளிவிடும். அந்தப் பழக்கம் முறுகினால் வேலே பெரிய சோதியாக நமக்குத் தோன்றும்.

''வேலே ஒளிப்பிழம்பாக உள்ளத்திலே தோன்றுகிறது. அதனால் என்ன பயன்?'' என்ற கேள்வி எழலாம். வேல் மறைந்து ஒளிப் பிழம்பு தோன்றும்போது தன்னை மறக்கிற நிலை வந்துவிடும். கவலை, கடமை, கட்டு என்பன எல்லாம் மறைந்து போகும்; இன்பம் உண்டாகும்.

இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு ஒளிமயமான தோற்றத்தைப் பார்ப்பதென்பது எளிதான செயல் அல்ல. எப்போதும் புறத் திலும் அகத்திலும் இருட்டு நிரம்பிய வாழ்க்கையில் நாம் போராடு கிறோம். கண்ணை மூடிக்கொண்டு உள் ஒளி நிரம்பப் பார்த் தோமானால் நம்முடைய புலன்கள் அடங்கி இன்பம் உண்டாகும். அப்போது நம்மை மறக்கும் நிலை வரும்.

இத்தகைய சிறந்த இன்பத்தை அடைவதற்கு மிக எளிதான வகையை அருணகிரிநாத சுவாமி இந்தப் பாட்டில் சொல்லித் தருகிறார்.

''வடிவேற் பெருமானுடைய திருக்கரத்திலுள்ள வேலை ஒளி மயமான வேலை, தியானம் பண்ண வேண்டும். அதை

எந்தச் சமயத்திலும் மறவாமல் இருக்கவேண்டும். ஞானத்திற்கு மாறுபாடான காம நுகர்ச்சியில் ஈடுபடும்போதும் அதை மறவாமல் நினைத்தால் நல்ல இன்பத்தைப் பெறலாம்; பேரின்பத்தை அடையலாம்'' என்று உபதேசம் செய்கிறார். உபதேசமாகச் சொல்லாமல், தாம் அப்படி நினைப்பதாக இந்தப் பாட்டில் அருளியிருக்கிறார்.

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண்டு அயர்கினும் வேல்மறவேன்.

2

இந்தச் செய்தியை அவர் முருகனைப் பார்த்துச் சொல்கிறார். ''அவன் எப்படிப் பட்டவன்? அவன் பெருமை என்ன'' என்பதை அடுத்த அடிகளில் சொல்கிறார்.

முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆடவெஞ்சூர்க்கொன்ற
ராவுத்தனே!

பேய்களின் உவகை

முருகன் சூரபன்மனைக் கொன்றவன். கந்தபுராணத்திலுள்ள பலவகையான காட்சிகளில் எம்பெருமான் செய்த வீரத் திருவிளையாடல்களைப் பார்க்கிறோம். அருணகிரிநாதப் பெருமானின் திருப்புகழிலும் மற்ற நூல்களிலும் கந்தபுராணத்தில் காணாத பலவகையான கற்பனைக் காட்சிகளைக் காணலாம். இங்கே பழைய பேய்க் கூட்டங்கள் போர்க்களத்தில் வந்து ஆடுகின்றன. அதற்குக் காரணம் எம்பெருமான் சூரபன்மனைக் கொன்றிருக்கிறான். சூரன் தனியாக வந்து இறைவனை எதிர்க்கவில்லை. கணக்கற்ற அசுரர்களையும் படைகளையும் திரட்டிக் கொண்டு வந்து முருகனை எதிர்த்தான். அந்தப் போர்க்களம் மிகப் பெரியது. போர் நடந்த காலம் பதினெட்டு ஆண்டுகள் என்று சொல்வார்கள். எத்தனையோ அசுரர்கள் இறந்தார்கள். போர்க் களத்தில் இறந்து கிடக்கும் பிணத்தை உண்ணுவது பேய்களின் வழக்கம். பல காலமாகப் பசித்திருக்கும் பேய்களுக்குப் போர்க் களத்தில்

விருந்து கிடைக்கிறது. அந்தப் பேய்கள் எல்லாம் பல காலமாகக் காத்திருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு,

முது கூளித் திரள்

என்று சொன்னர். உடம்பு தளர்ந்து போய் தம்முடைய முதுமைப் பருவத்தைப் புலப்படுத்திக் கொண்டு இருக்கின்றன அவை. இப்போது போர்க்களத்தில் நல்ல விருந்தை உண்டு ஆடுகின்றன. நன்றாகச் சாப்பிட்டவர்களுக்கு ஆனந்தம் உண்டாகும். விருந்து உண்ட பிற்பாடு நடனம் ஆடுவது நாகரிகச் செயல்.

இங்கே பேய்களுக்கு நன்றாக உண்ட ஆனந்தக் களிப்பினால் ஆடவேண்டுமென்ற ஆசை தோன்றுகிறது. போர்க்களத்தில் முரசுகள் அங்கங்கே கிடக்கின்றன. பேய்கள் அவற்றை எடுத்துக் கொட்டுகின்றன.

அநுகரண ஒலி

அருணகிரிநாதப் பெருமானுக்கு அநுகரண சத்தங்களைப் பாட்டுக்கு நடுவில் வைத்துச் சொல்வது ஒரு வழக்கம். அவருடைய திருப்புகழைப் பார்த்தால் எத்தனையோ வகையான அநுகரண ஒலிகளைச் சந்தத்தில் அமைத்திருப்பது தெரியும். அந்த முறையைக் கந்தர் அலங்காரத்திலும் காணலாம்.

முது கூளித் திரள் – முதிய பேய்க் கூட்டங்கள். அவை முரசுகள் கொட்டிக்கொண்டு ஆடுகின்றன. அந்த முரசுகளை அவை எப்படி முழக்குகின்றன என்பதை ஒலிக் குறிப்போடு பாட்டில் வைத்திருக்கிறார்.

டுண்டுண் டுடுடுடு டூடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்

கொட்டி ஆடுகின்றனவாம். 'இப்படிப் பேய்க் கூட்டங்கள் எல்லாம் பிணங்களை உண்டு, அதனால் இன்பமுற்று முரசுகளைக் கொட்டி ஆடும்படியாகச் சூரனை சங்கரித்த பெருமானே!' என்று துதிக் கிறார்.

முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டியாடவெஞ் சூர்க்கொன்ற
ராவுத்தனே!

ராவுத்தன்

ராவுத்தன் என்ற சொல் முஸ்லிம்களை நினைப்பூட்டுகிறது. அருணகிரியார் காலத்திற்கு முன்பே இந்த நாட்டுக்கு முஸ்லிம்கள் வந்து விட்டார்கள். பழைய திருப்பெருந்துறைப் புராணத்தில், மாணிக்கவாசகருக்காகக் குதிரை ராவுத்தராக வந்த ஆண்டவனது திருக் கோலத்தை முஸ்லிம்கள் போலவே வருணித்திருக்கிறார் அதைப் பாடிய புலவர்.

பழங்காலத்தில் அரபு நாட்டிலிருந்து இந்த நாட்டுக்குக் குதிரைகள் வருவது வழக்கம். அந்தக் குதிரைகளோடு முஸ்லிம் களும் வந்தார்கள். ராவுத்தன் என்ற சொல்லுக்குக் குதிரை வீரன் என்று பொருள். மாவுத்தன் என்பது யானை வீரனையும், ராவுத்தன் என்பது குதிரை வீரனையும் குறிக்கும் சொற்கள். மேற்கு நாட்டி லிருந்து வந்த முஸ்லிம்கள் பெரும்பாலோர் குதிரைகளைக் கொண்டு வந்தவர்கள். ஆகையால் முஸ்லிம்கள் என்றால் குதிரைக்காரர்கள் என்கிற நினைப்பு இந்த நாட்டவருக்கு உண்டாயிற்று. அதனால் முஸ்லிம்களை ராவுத்தர்கள் என்று அழைக்கலானார்கள். இந்தச் சொல் தமிழ் நாட்டில் அதிகமாக வழங்குகிறது.

எம்பெருமான் மயிலாகிய குதிரைகளை நடத்துகின்றவன். அதனால் அவன் ஒருவகையான குதிரை வீரன். அது கருதியே இப்பாட்டில் ராவுத்தனே என்று விளிக்கிறார். பின்னாலே வருகிற ஒரு பாட்டிலும்,

"தனிமயில் ஏறும் இராவுத்தனே"

என்று பாடுவார்.

குதிரை ராவுத்தர்

ஆத்மநாத சுவாமி எழுந்தருளியிருக்கிற தலம் திருப்பெருந் துறை. அங்கேதான் மாணிக்கவாசகர் உபதேசம் பெற்றார். அந்த ஊர்த் திருக்கோயிலில் ஒரு மண்டபம் இருக்கிறது. அந்த மண்ட பத்தில் ஒரு தூணில் குதிரைச் சேவகராக எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தில் இறைவனுடைய உருவம் இருக்கிறது. அந்த உருவத்திற்கு இப்பொழுதும் பூசை செய்து வருகிறார்கள். அவரைக் குதிரை ராவுத்தர் என்றும், அந்த மண்டபத்தைக் குதிரை ராவுத்தர் மண்டபம் என்றும் வழங்குகிறார்கள். அங்கே மற்றோர் ஆச்சரியச் செயல் நிகழ்கிறது. குதிரை ராவுத்தர் எழுந்தருளியிருக்கும் இடம்

மட்டும் வந்து முஸ்லிம்கள் தொழு கிறார்கள். நான் அந்தத் தலத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே தொழுகை நடத்திக் கொண்டிருந்த ஒரு முஸ்லிமைக் கண்டு பேசினேன்.

முஸ்லிம்களும் முருகனும்

முஸ்லிம்கள் முருகனைத் தொழுகின்ற தலங்கள் சில இருக்கின்றன. பழனியில் முருகப்பெருமானைப் பின் பகுதி வழியாக வந்து முஸ்லிம்கள் வணங்குகிறார்கள். திருப்பரங் குன்றத்தின் அடிவாரத்தில் நாம் தொழும் கந்தப்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். மலை மேலே முஸ்லிம்கள் தொழும் சிக்கந்தர் எழுந்தருளியிருக்கிறார். சில நண்பர்கள் சிக்கந்தர் என்ற சொல் ஸ்ரீஸ்கந்தர் என்ற சொல்லின் திரிபு என்று சொல்வது உண்டு. கதிர்காமத்தில் இன்றும் முருகப்பெருமான் கோயிலுக்குப் பின்னால் இஸ்லாமியர்கள் வந்து தொழுகிறார்கள்.

இப்படி இஸ்லாமியருக்கும் முருகப்பெருமானுக்கும் தமிழ் வழங்கும் நிலத்தில் ஒரு வகையான தொடர்பு இருப்பதை நாம் உணர்கிறோம். எனக்குத் தெரிந்த சில முஸ்லிம் நண்பர்கள் முருகப் பெருமானை உபாசனை செய்கிறார்கள். திருவையாற்றில் உள்ள முஸ்லிம் கவிஞர் ஒருவர் முருகன் மேல் பல அழகான சந்தக் கவிகளை இயற்றியிருக்கிறார்.

ராவுத்தர் என்ற பட்டம்

ராவுத்தன் என்று முருகப் பெருமானை அருணகிரியார் இங்கே விளித்த வகை இந்த நினைப்புக்களை உண்டாக்கியது. குதிரை வீரர்களாக இருப்பவர்களை ரவுத், ராவுத்தர் என்று கூறுவது மரபு. ராணுவத்தில் குதிரை வீரர்களாக இருந்து ஊழியம் செய்தவர்களுக்கு ரவுத், ராவுத் என்ற பட்டங்களை அரசன் வழங்கியது உண்டு. சில தலங்களில் சிவபெருமானுக்கு ராவுத்தேசுவரர் என்ற திருநாமம் இருப்பதைச் சிலாசாஸனங்கள் மூலமாக உணரலாம்.

முருகப் பெருமான் மயிலாகிய குதிரையின்மேல் ஏறி வந்து போரில் சூரனை அழித்தமையினால் ராவுத்தன் என்ற பட்டப் பெயரைப் பெற்றான்.

"இவுளிமுகி யைப்பொருத ராவுத்த னானவனும்"

என்ற திருவகுப்பிலும் இந்தச் சொல்லை அருணகிரியார் வழங்கு கிறார்.

அருணகிரிநாதப் பெருமான் இந்தப் பாட்டில், நம்மைப் போன்று உலக இன்பங்களுள் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு மிகவும் எளிதான சாதனம் ஒன்றைச் சொல்கிறார். இறைவனைத் தியானம் செய்வதற்கு நமக்கு ஆற்றல் இல்லாவிட்டாலும் அவன் திருக் கரத்திலுள்ள வேலை மெல்ல மெல்லக் கண்டு நெஞ்சில் கொண்டு பலமுறை தியானித்துப் பழக வேண்டும். அந்தத் தியானம் கோயி லுக்குப் போகும்போது மாத்திரம் செய்வது என்பது அல்ல; வீட்டில் இருக்கும் அமைதியான நேரத்தில் செய்வது என்பதும் அல்ல; எல்லாக் காலத்திலும் செய்வதற்கு உரியது. நாம் நம் முடைய மனையாட்டியோடு காம நுகர்ச்சி பெறும் போதும் வேலை மறக்காமல் இருக்கலாம்.

திருப்புகழில்

இத்தகைய நிலையைத் திருப்புகழிலும் உணர்த்துகிறார்.

"முருகுகமழ் மலரமளி மீதினிற்புகுந்து
முகவனச மலர்குவிய மோகமுற்றழிந்து
மொழிபதற வசமழிய ஆசையிற் கவிழ்ந்து விடுபோதும்

முழுதுணர வுடையமுது மாதவத்துயர்ந்த
பழுதில்மறை பயிலுவள னாதரித்துநின்று
முனிவரர்சுரர் தொழுதுருகு பாதபத்ம மென்றும்
மறவேனே."

தாயுமானவர் வாக்கு

இதே கருத்தைத் தாயுமானவர் ஒரு பாட்டில் அழகாகச் சொல்கிறார்.

உடலுக்கு இன்பம் தரும் எந்த நிலையில் இருந்தாலும் இறைவன் அருளை மறவாமல் இருக்கவேண்டும் என்று அவர் வேண்டிக் கொள்கிறார்.

"கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்,
குளிர்தீம் புனல்கை அள்ளிக்
கொள்ளுகினும், அந்நீ ரிடைத்திளைத் தாடினும்,
குளிர்சந்த வாடைமடவார்

வந்துலவு கின்றதென முன்றிலிடை உலவவே
வசதிபெறு போதும், வெள்ளை
வட்டமதி பட்டப்பகற்போல நிலவுதர
மகிழ்போதும், வேலையமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்
வேளையிலும், மாலைகந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினும்
சந்ததமும் நின்அருளை மறவா வரம்தந்து
தமியேனை ரட்சைபுரிவாய்!
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே!''

தாயுமானவர் மகளிருடன் இன்பம் புணர்வதை வெளிப் படையாகச் சொல்லவில்லை. கலவி இன்பத்தை, ''நிலவுப் பயன் கொள்ளுதல்'' என்று குறிப்பாகச் சொல்வது புலவர் மரபு. இந்தப் பாட்டில், ''வெள்ளை வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர மகிழ்போதும்'' என்பது மகளிர் இன்பத்தையே குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

வரதுங்க ராம பாண்டியர் பாடல்

வரதுங்கராமபாண்டியர் என்னும் மன்னர் சிறந்த சிவபக்தர். அவரும் இதே கருத்துடன் **திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி** என்னும் நூலில் ஒரு பாடலைப் பாடியிருக்கிறார்.

''இருக்கினும் நிற்கும் போதும்
இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும்
பொருந்திஊண் துய்க்கும் போதும்
முருக்கிதழ் கனிவா யாரை
முயங்கிநெஞ் சழியும் போதும்
திருக்களா வுடைய நம்பா
சிந்தைஉன் பால தாமே.''

'முருக்கிதழ் கனி வாயாரை முயங்கி நெஞ்சழியும் போதும் சிந்தை உன் பாலதாமே' என்று மகளிர் இன்பத்தை நுகரும் போதும் மனம் இறைவனை நினைக்கும் என்று இவர் சொல்

கிறார். ஆதலின் இத்தகைய மனநிலை சாத்தியமானதே என்பதை உணரலாம்.



கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
　　காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற
　　வேன்;முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு
　　டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆடவெஞ்
　　சூர்க்கொன்ற ராவுத்தனே!

(கற்கண்டை உண்டாற் போன்ற இனிய சொல்லை உடையவர்களும் மென்மையை உடையவர்களுமாகிய மகளிர்பால் காம உணர்ச்சியினால் பெறும் கலவியின்பமாகிய கள்ளை எல்லையின்றி மேற்கொண்டு நுகர்ந்து யான் செய்ய வேண்டிய கடமைகளை மறந்தாலும், உன் வேலை மட்டும் மறக்கமாட்டேன்; முதிய பேய்க் கூட்டங்கள் தமக்கு விருந்துணவு கிடைத்த மகிழ்ச்சியினால், டுண்டுண் டுடுடுடு டூடு டுடுடுடு டுண்டு டுண்டு டிண் டிண்டு என்ற ஒலி எழும்படியாக முரசுகளைக் கொட்டிக் கொண்டு கூத்தாடும்படி கொடிய சூரனைப் போர்க்களத்தில் சங்காரம் செய்த, மயிலாகிய குதிரையை நடத்தும் வீரனே!

கண்டு உண்ட சொல் - கண்டைப் போன்ற சொல் என்பதும் பொருந்தும்; உண்ட: உவம உருபு. மெல்லியரால் வரும் காமம். காமத்தின் விளைவாகிய கலவி. கலவி - மகளிரோடு கூடுதல். இங்கே அதனால் வரும் இன்பத்துக்கு ஆயிற்று; ஆகுபெயர். மொண்டு உண்ணுதலாவது வரையறையின்றி மனம்போனபடி நுகர்தல். அயர்கினும் - மறந்தாலும். கூளி - பேய். டுண்டுண் எனவரும் ஒலிக் குறிப்பால் கொட்டியது முரசம் என்று கொள்க. சூர் - சூரனை. ராவுத்தன் - குதிரை வீரன்)

நாளும் கோளும்

1

மனிதன் வாழ்கிறான்; சாகிறான். சாவது மிகப் பெரிய துன்பம். வாழும்போதும் ஒவ்வொரு நாளும் துன்பத்தை அநுபவிக்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். எத்தனை துன்பத்தை அநுபவித்தாலும் வாழ்க்கையில் சலிப்பு உண்டாவதில்லை. 'தினந்தோறும் நம் உடம்பில் இருக்கிற நோய்களால் துன்புறு கிறோமே! இந்த நோய்க்கு இடமாக உள்ள உடம்பை ஒழித்து விடலாம்' என்று யாரும் நினைப்பதும் இல்லை. நாகரிக வசதிகள் வளர்ந்து வருகிற இக்காலத்தில் துன்பத்திற்குக் காரண மாகவுள்ள உடம்பைப் போக்குவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஆனாலும் இதனைப் போக்க மனம் வருவது இல்லை. காரணம்; துன்பத்தை அவர்கள் விரும்புகிறார்கள் என்று சொல்ல முடியாது. நாளைக்கு ஒருகால் இந்தத் துன்பம் நீங்கி இன்பம் வருமோ என்ற நம்பிக்கையினால் அவர்கள் வாழ்கிறார்கள்.

நம்பிக்கை

நம்பிக்கைதான் வாழ்க்கைக்கு அடிப்படையானது. நம்பி நம்பி இன்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனிதனுக்கு முன் முடிவில் கூற்றுவன் வந்து நிற்கிறான். கூற்றுவனால் வருகிற துன்பத்தைக் காட்டிலும் பெரிது வேறு ஒன்றும் இல்லை. இறப்பைக் கண்டு அஞ்சுபவர்கள் பலர். மாணிக்கவாசகப் பெருமான் இறைவன் அருளால் இன்பநலம் பெற்றவர். ஆனாலும் கூற்றுவன் வருங்கால் மனம் எப்படி அஞ்சுமோ என்று அவர் நடுங்குகிறார்.

''இறப்பதனுக் கென்கடவேன்!''

இதற்குக் காரணம் அவர் பலவீனம் அல்ல; தமக்குக் கிடைத்துள்ள இன்பத்தின் மீதுள்ள தீவிரமான பற்றே. இந்த ஆத்மாநுபவம் கூற்றுவன் வருங்கால் தளர்ந்து விடுமோ என்ற பயம் உண்டாகிறது. மிகவும் அருமையான பொருள் ஒன்றைப் பற்றிக் கொண்டவன், காற்று அசைந்தாலும் அது போய்விடுமோ என்று அஞ்சுவான். குழந்தை சற்றே வெளியில் போனாலும் அதற்கு ஏதேனும் ஊறுபாடு உண்டாகுமோ எனத் தாய் அஞ்சுவது, அவளுக்கு அக்குழந்தையிடத்தில் உள்ள பற்றுக்கு அறிகுறி. இதுபோலவே இறைவன் திருவருளைப் பெற்றாலும் கூற்றுவன் வருங்கால் துன்பம் உண்டாகுமோ என்று அஞ்சுவதற்குக் காரணம் தாம் பெற்ற அநுபவத்திலுள்ள பெரும் பற்று.

இன்பமும் துன்பமும்

கூற்றுவனைக் கண்டு துன்பப்படுவது கிடக்கட்டும். ஒவ்வொரு நாளும் மனிதன் படுகிற துன்பங்கள் பல. மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்தே வருகின்றன. ஆனால் பொதுவாக மனிதர்களைக் கேட்டால் துன்பம் அடைவதாகவே சொல்கிறார்கள். தனியாக இன்பத்தை அநுபவிப்பவர்களும் இல்லை; தனியாகத் துன்பத்தை அநுபவிப்பவர்களும் இல்லை. இன்ப துன்பங்கள் கலந்து கலந்து வருகின்றன.

குழந்தை இறந்துவிட்டது என்று துன்பப்படுகிறார்கள். அதை அடக்கம் செய்துவிட்டு வந்து சாப்பிடுகிறார்கள். சாப்பிடும்போது பசி தீருகிறது. பசி தீருவதும் ஒருவகை இன்பந் தான். குழந்தை இறந்துவிட்ட துன்பத்திற்கு இடையே பசி தீருகிற இன்பம் வருகிறது. துன்பம் மிகுதியாக இருப்பதனால் பசி தீருகிற இன்பம் மறைந்து விடுகிறது.

துன்பம் மிகுதியாக இருப்பதனால் மனித வாழ்க்கையே துன்பம் தருவது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த வாழ்வில் எப்போதும் இன்பமாக உள்ள நிலை ஒன்றைப் பெறலாம் என்று அப்பர் சுவாமிகள் முதலிய பெரியவர்கள் சொல்கிறார்கள். இறைவன் திருவருளைப் பெற்றால் சுகத்திற்கும் துக்கத்திற்கும் அப்பாலுள்ள, இருளுக்கும் ஒளிக்கும் அப்பாலுள்ள, நினைப்பு மறப்புக்கு அப்பாலுள்ள ஒருவகை இன்பம்

உண்டாகும். அந்த இன்பம் இந்திரிய நுகர்ச்சிக்கு அப்பாற் பட்டது.

நாம் நினைக்கிற இன்பங்கள் எல்லாம் ஐந்து இந்திரியங் களின் வாயிலாக வருகின்றவை. ஐந்து பொறிகளின் வாயிலாக மனத்தில் இன்ப துன்பங்கள் சாருகின்றன. நாம் பெறுகின்ற துன்பங்களுக்கு அளவு கருவி ஐந்து இந்திரியங்கள். இறைவன் திருவருளால் கிடைக்கிற இன்பம் பொறி புலன்களுக்கு அப்பால் இருப்பதனால் அந்த இன்பத்தை நமக்குத் தெரிந்த அளவை களால் அளக்க முடியாது.

வாழ்க்கையில் இன்பம் கிடைக்கும்போது நாம் பல நல்ல காரியங்கள் செய்ததனால் கிடைத்தது என்று தருக்குகிறோம். துன்பம் வந்தால் அதற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்கிறோம். பெரும்பாலும் பிறரைக் காரணமாகச் சொல்லத் துணிகிறோம். இந்த இரண்டு வகையான நினைவுகளும் கூடா வென்று கருதியே, எல்லாம் ஊழ்வினையால் நிகழ்கின்றன என்று சொன்னார்கள் பெரியோர்கள். உண்மையும் அதுதான்.

ஊழ்வினை

ஒருவன் நம்மைத் தன் கையால் அடிக்கிறான். நம்மை அடிப்பது கை என்றா சொல்கிறோம்? அவன் அடித்தான் என்று சொல்கிறோம். அவன் தன் கையைக் கருவியாகக் கொண்டு அடிக் கிறான். அவன் கை அடிப்பதை மாத்திரம் தெரிந்து கொண்டு அந்தக் கையைக் கொண்டவனைத் தெரியாமல் இருப்பது அறியாமை. அவன் கை அடிக்கவில்லை, அவனே கையாகிய கருவியால் அடிக்கிறான் என்று தெரிந்து கொள்வது போலவே, அவனைக் கருவியாகக் கொண்டு நம்மை அடிப்பது வேறு ஒன்று என்று உணரவேண்டும். அதுதான் நாம் பண்டு செய்த தீவினை.

பகுத்தறிவு உடையவர்கள் என்று சொல்லிக் கொள்கிற நமக்கு நாய்க்கு இருக்கும் அறிவுகூட இல்லை. நாய் ஓடும்போது ஒருவன் கல்லை எடுத்து அடிக்கிறான். கல் நாயின்மேல் பட்டு அதற்குத் துன்பத்தை விளைக்கிறது. அதற்காக நாய் கல்லைக் கடிக்கப் போவதில்லை. கல்லை வீசி எறிந்தவனைப் போய்க் கடிக்கிறது. அந்த அறிவு நமக்கு இல்லையே! அரிவாள் கருவி.

அதை உபயோகிப்பவன் கர்த்தா. ''எய்தவன் இருக்க அம்பின் மேல் நோகலாமா?'' என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோம். அரிவாளாகிய கருவியைக் கொண்டவன் வெட்டினால் அவனைத் தான் கோபித்துக் கொள்ள வேண்டும். அவனைக் கருவியாகக் கொண்டு வெட்டச் செய்கிற வேறு ஒன்று இருக்கிறது. அதுதான் பண்டை வினை. அதனையே விதி என்றும், ஊழ்வினை என்றும் பெரியவர்கள் சொன்னார்கள்.

கடமையும் விதியும்

பெரியவர்கள் விதி என்று சொன்னதற்கும் நாம் இப்போது விதி என்று சொல்வதற்கும் எத்தனையோ வேறுபாடு உண்டு. முயற்சி எதுவும் இன்றிச் சோம்பலில் மூழ்கி எதையும் விதியின் தலையில் போட்டுவிட்டுத் தப்பப் பார்க்கிறோம் நாம். நன்மை ஏற்படும்போது யாரும் விதி என்று சொல்வது இல்லை. நமக்கு லாபம் கிடைத்தது; ''என் தலை விதி'' என்று சொல்வது இல்லை. தீமை ஏற்படும்போது, ''ஐயோ! இது என் தலைவிதி!'' என்று நொந்து கொள்கிறோம்; அல்லது அந்தப் பழியைப் பிறன் தலையில் சுமத்தி விடுகிறோம்.

மனிதன் துன்பம் அடைவது இயற்கை. அதை அடைவதற்குக் காரணமாக வேறு ஒருவனைச் சுட்டிக் காட்டிக்கொண்டு போனால் போகப் போக அவன் வாழ்க்கையே கசப்பாக முடியும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வதாக முடியும். ஒரு சமூகமும் மற்றொரு சமூகமும், ஒரு நாடும் மற்றொரு நாடும் சண்டை போட்டுக் கொள்வதாக விளைந்து, கடைசியில் உலகம் முழுவதும் போர்க்களம் ஆகிவிடும். அதற்குப் போக்கு என்ன? 'நம்மை அவனா அடித்தான்? அவனைக் கருவியாகக் கொண்டு நம் விதி அல்லவா அவனை அடிக்கத் தூண்டிற்று? நம்முடைய விதி கர்த்தா. அவன் கருவி' என்னும் மனோபாவம் வந்தால் அவன்மேல் கோபம் வராது. நமக்குத் துன்பம் வரும்போதும் நன்மை வரும்போதும் விதியால் ஏற்ட்டவை என்று நினைக்கச் சொல்லிக் கொடுத்தார்கள் நம் நாட்டுப் பெரியவர்கள். கடமையைச் செய்யாமல் விதியைக் காரணமாகச் சொல்கிறவன் சமுதாயத்துக்கும் இறைவனுக்கும் துரோகம் செய்கிறவன் ஆகிறான். அவன் தான் அடைந்த துன்பத்திற்குக் காரணமென்று பிறரிடம் வெறுப்புக்

கொள்ளாமல், தன்னுடைய விதியினால் ஏற்பட்டது என்று நினைந்தால், இனி நல்ல காரியங்களைச் செய்ய முயல்வான் நல்ல எண்ணத்துடன்தான் பெரியவர்கள் விதி என்ற உண்மையைத் தெரிவித்தார்கள்.

சோதிடம் கேட்டல்

முந்திய பிறவியின் பயனாகவே நல்லதும் தீயதும் உண்டா கின்றன என்பதை உணர்பவர்கள், பின்னால் என்ன நேரிடும் என்பதை உணர இயலாது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்ற ஆசை உந்த மரத்தடியிலோ, பாலத்தடியிலோ உட்கார்ந் திருக்கும் சோதிடனிடம் போகிறார்கள். மூடியிருக்கும் எதிர்காலப் புத்தகத்தைத் திறந்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் தூண்டச் சோதிடம் கேட்கிறார்கள். நன்மையோ, தீமையோ முந்திய ஊழ்வினையினால் விளையும் எனக் கருதி இறைவன் திரு வருளைப் பெற முயலவேண்டும். இறைவன் திருவருள் பலம் இருந்தால் விதியினால் உண்டாகின்ற துன்பத்தின் உறைப்பு நமக்கு இராது. அப்படி இல்லாமல், இனி என்ன நடக்கும் என்று சோதிடம் பார்த்துத் துன்பமாக இருந்தால் முன்னால் இருந்தே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இன்பமாக இருந்தால் கர்வப்படுகிறோம். பின்னாலே இன்பம் வரும்போது அதன் இனிமை குறைந்து விடுகிறது.

சோதிடத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்றை அஸ்ட்ரானமி (Astronomy) என்றும், மற்றொன்றை அஸ்ட்ராலஜி (Astrology) என்றும் சொல்வார்கள். காலத்தைக் காண்பதற்குரிய பகுதி வான சாஸ்திரம். வாழ்க்கையில் உண்டாகின்ற இன்ப துன்பங்களைச் சொல்வது சோதிடம். கடமையிலிருந்து சிறிதளவும் வழுவாத மக்கள் இன்ன இன்ன காரியங்களை இன்ன இன்ன காலங்களில் செய்ய வேண்டுமென்று வரையறுத்திருந்தார்கள். அந்தக் கால நியதியைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக வான நூலாகிய சோதிடத்தை எழுதி வைத்தார்கள். வேதத்திற்கு அங்கங்கள் ஆறு. சோதிடம் வேதத்தின் கண் என்பார்கள்.

வேதத்தில் விதித்த கர்மாக்களை நன்கு செய்வதற்குரிய காலத்தைத் தெரிந்து கொள்வதற்குப் பஞ்சாங்கத்தைக் கணித்தார்கள்.

காலக் கணக்கைத் தெரிந்து கொண்டு காரியங்களை வழுவாமல் செய்த மக்கள் மிகுதியாக இருந்தபோது காலத்தை நிர்ணயிக்கும் பஞ்சாங்கத்துக்கு மதிப்பு இருந்தது. வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டு மென்ற ஆசை பிற்காலத்தில் வளர ஆரம்பித்தது.

நாளும் கோளும்

சோதிடம் சொல்பவர்கள் நாளையும் கோளையும் பார்க் கிறார்கள். 'நாளும் கோளும்' என்று சேர்த்துச் சொல்வது ஒரு மரபு. நாள் என்பது இருபத்தேழு நட்சத்திரங்களைக் குறிக்கும். மற்ற நட்சத்திரங்களுக்கு மீன் என்று பெயர். கோள் என்பது கிரகம். இருபத்தேழு நட்சத்திரங்களும் பன்னிரண்டு ராசிகளில் அடங்கும். ஒன்பது கிரகங்கள் இந்தப் பன்னிரண்டு ராசிகளில் சஞ்சாரம் செய்கின்றன. அப்படிச் செய்வதனால் அந்த அந்த நட்சத்திரங்கள் அந்த அந்தக் காலங்களில் உரியவர்களுக்குச் சிலவகையான பலன்களை உண்டாக்கும் என்று கூறுகிறார்கள். கிரகங்கள் ராசிகளில் சஞ்சாரம் செய்வதைக் கிரக சாரம் என்று சொல்வார்கள். ஒருவருக்கு ஏதேனும் துன்பம் வந்தால், ''என்னுடைய கிரகசாரம்'' என்று சொல்வதை இக்காலத்தில் கேட்கிறோம்.

நாம் செய்த பண்டை வினையின் பயனாக இந்தப் பிறவியில் இன்ப துன்பங்கள் விளைகின்றன. நம்முடைய பழைய வினைக்கு ஏற்ப நாளும் கோளும் அமைகின்றன என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. அதனாலே தமக்கு வருகிற இன்ப துன்பங்களை முன்கூட்டியே நாளைக் கொண்டும் கோளைக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம் என்று மக்கள் நம்புகிறார்கள்.

கடவுள் நம்பிக்கையும் சோதிடமும்

இறைவனிடத்தில் நம்பிக்கை உடையவன் சோதிடம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ''நவக்கிரகங்களின் போக்கை முன்னால் தெரிந்து கொண்டால் அவற்றால் நமக்கு வருகின்ற துன்பத்தைப் போக்கிக் கொள்ளக் கிரக சாந்தி செய்யலாம். அதனால் துன்பம் குறையாதா?'' என்று சிலர் நினைக்கிறார்கள். போலீஸ்காரனுக்குப் பயந்து அவனிடம் போய்ப் பேசுவதைக் காட்டிலும் போலீஸ்காரர்களை ஆட்டி வைக்கிற அதிகாரியிடத்தில்

நட்பாக இருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. கிரகங்களுக்குச் சாந்தி பண்ணுவதைவிடக் கிரகங்களுக்கு எல்லாம் தலைவனாக இருக்கிற பெருமானையே சரணாகதி அடைந்துவிட்டால் அந்தக் கிரகங்களால் நமக்கு என்ன தொல்லை விளையும்? இன்ன கிரகத்திற்கு இன்னபடி சாந்தி செய்ய வேண்டுமென்பதை நூலி லிருந்து நன்கு அறிந்து நமக்கு யாராவது சொல்ல வேண்டும். நூலில் நுட்பமாகச் சொல்லியிருக்கிறபடி நடந்தால் நமக்கு ஒருகால் கிரகத்தினால் விளையும் துன்பங்கள் குறையலாம். ஆனால் அவ்வளவு நுட்பமாகக் கணித்துச் சொல்பவர்கள் மிகவும் அரியர். எல்லாவற்றுக்கும் பரிகாரமாக இறைவனுடைய துணை நமக்கு இருக்குமானால் எந்தக் கிரகம் எப்படி வந்தாலும் அதனால் விளையும் துன்பம் நமக்குக் குறைந்துவிடும்.

என் செயும்?

அருணகிரிநாதப் பெருமான் வினையாலும் அந்த வினையின் விளைவைத் தருவனவாக நினைக்கின்ற நாளினாலும் கோளி னாலும் வருகின்ற துன்பங்களுக்கு நல்ல பரிகாரம் சொல்கிறார். முருகனுடைய திருவருள் இருந்தால் அவற்றால் அச்சம் கொள்ள வேண்டாம் என்று உறுதி கூறுகிறார். ''முருகப் பெருமான் தன்னுடைய திருக்கோலத்தை எனக்குக் காட்டினால் நாள் என் செயும்? வினை தான் என் செய்யும்? கோள் என் செயும்? கொடும் கூற்றுவன் என் செய்வான்?'' என்று கேட்கிறார்.

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

நால்வகைத் துன்பங்கள்

உலகில் பிறந்து வாழ்கிற மக்களுக்கு நாள், கோள், வினை, கொடுங்கூற்று ஆகிய நான்கின் வாயிலாகத் துன்பம் உண்டா கின்றன. முதல் மூன்றும் மனிதன் வாழ்கிற காலத்தில் துன்பத்தை உண்டாக்குகின்றன. வாழ்க்கையின் முடிவில் ஒன்று துன்புறுத்து கிறது. அது கொடுங்கூற்று, நாளும் கோளும் வினையும் கருவி களாக நின்று மனிதனுடைய வாழ்க்கையைப் பலவகையாக

உருக்குலைக்கின்றன. வாழ்வு முற்றும்போது உயிரைக் கொண்டு போவதற்கு வருகிறான் கூற்றுவன்.

முதல் மூன்றுக்கும் நாள், கோள், வினை என்று அடைமொழி எதுவும் இன்றிச் சொல்லி, நான்காமவனாகிய கூற்றுவனை, கொடுங்கூற்று என்று சொன்னார் அருணகிரியார். அப்படிச் சொன்னாலும் அந்தக் கொடும் என்ற சொல்லை முதல் மூன்றுக்கும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதை இலக்கணக்காரர்கள், ''இடைநிலைத் தீவகம்'' என்பர். கொடும் என்ற சொல் நடுவில் விளக்குப் போல நின்று நாள், வினை, கோள் என்று முன் உள்ளவற்றோடும், கூற்று என்று பின் உள்ளதோடும் இயைகிறது.

நாளிலும் கோளிலும் இருவகை உண்டு. நல்ல நாளும், பொல்லாத நாளும் நல்ல கோளும், பொல்லாத கோளும் உண்டு. அப்படியே வினையிலும் நல்ல வினையும், தீய வினையும் உண்டு. நாள் கோள் வினை ஆகியவற்றில் நல்லவற்றால் மனிதனுக்கு இன்பமே விளைகிறது. மனிதன் நல்ல நாளைக் கண்டு அஞ்சுவது இல்லை. நல்ல கோளையும், நல்ல வினையையும் கண்டும் அஞ்சுவது இல்லை. அவன் கொடிய நாளையும், கொடிய கோளையும், கொடிய வினையையும் கண்டு அஞ்சுகிறான். அதனால் கொடுங்கூற்று என்பதிலுள்ள கொடும் என்பதை மற்ற மூன்றுக்கும் கூட்டுவதே பொருத்தம்.

என்னை நாடிவந்த கோள் என் செயும்?

என்கிறார் அருணகிரியார். எல்லோருக்கும் பொதுவாகக் கிரகம் இருந்தாலும் அதனுடைய சாரம் ஜாதகனின் நாளுக்கு ஏற்றபடி இன்ப துன்பங்களைச் செய்கிறது. அந்தக் கிரகம் அவனை நாடி வந்து பயனைக் கொடுப்பது போலத் தோற்றுகிறது.

சோதிடத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. வானிலுள்ள கிரகங்களை வான சாஸ் திரத்தின் மூலமாகவும் விஞ்ஞானக் கருவிகளின் வாயிலாகவும் தெரிந்தவர்கள் கிரகங்களால் நமக்குப் பலன் உண்டாகின்றன என்பதை நம்புவது இல்லை. நாம் நம்புகிறோம். கிரகங்களால் வாழ்க்கையில் நன்மை தீமைகள் உண்டாகின்றன என்று நினைப் பதற்கே ஒரு வகை நம்பிக்கை வேண்டும். பூமியைப் போல உருண்டையாக இருக்கிற ஏதோ ஒன்றுக்கும் நமக்கும் என்ன

சம்பந்தம் என்று அறிவாளிகள் கேட்பார்கள். அப்படி இல்லாமல் சூரியன் முதலிய கிரகங்களால் நம்முடைய வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன என்று நம்பியே சோதிடத்தைப் பார்க்கிறோம். அந்த நம்பிக்கையைப் பின்னும் மிகுதியாக்கி, எம்பெருமான் திருவருள் இருந்தால் கிரகத்தினால் விளைகின்ற துன்பங்கள் நமக்கு வாரா என்று நினைத்துக் கொள்ளலாமே! அப்படி நினைப்பதைத்தான் அருணகிரியார் நமக்கு இந்தப் பாட்டில் கற்றுக் கொடுக்கிறார்.

சோதிடமும் உபாசனையும்

சோதிடம் சொல்பவர்களைக் கேட்டாலும் ஓர் உண்மை புலப்படும். சோதிட சாத்திரத்தில் நல்ல அறிவு உடையவர்களாக இருந்தாலும் ஒரு தெய்வத்தை உபாசனை செய்தால்தான் வாக்குப் பலிக்கும் என்று சொல்வார்கள். பெரும்பாலும் சோதிடம் கூறு பவர்கள் முருகன், பராசக்தி, ஆஞ்சநேயர் ஆகியவர்களில் ஒருவரை உபாசனை செய்கின்றவர்களாக இருப்பார்கள். அப்படி ஒரு கடவுளை உபாசனை செய்து அதன் மூலமாக நவக்கிரகங் களைப் பற்றித் தெரிந்து கொள்வாரிடம் சோதிடம் கேட்பதை விட நவக்கிரகங்களை மறந்து இறைவனையே வழிபட்டுச் செம்மாந்து இருக்கலாமே!

காலத்தைக் காட்டுவதற்குக் கடியாரம் இருக்கிறது. கடி யாரத்தின் முகத்தில் இரண்டு முட்கள் இருக்கின்றன. அதுமாதிரி வினை என்ற கடியாரத்தில் கோள் என்ற பெரிய முள்ளும், நாள் என்ற சிறிய முள்ளும் இருக்கின்றன. இறைவன் எல்லாக் காலத் திற்கும் பெரிய அளவு கருவியாகிய சூரியனைப்போல இருக் கிறான். சூரியனைப் பார்த்துத் தக்கபடி காலத்தைத் தெரிந்து கொள்பவர்களுக்கு கடியாரம் தாமதமாகப் போனாலும், விரை வாகப் போனாலும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. கடியாரத்திற்குச் சாவி கொடுக்க வேண்டுமே என்கிற கவலையும் இராது. இறைவனுடைய திருவருளால் நம்முடைய வாழ்வில் நலம் உண்டாகும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்தால் நாளும் கோளும் நமக்கு ஒன்றும் செய்யா. அவை நமக்கு அநுகூல மாகவே இருக்கும் என்பது பக்தர்கள் கண்ட துணிவு.

தியானம்

மனத்திண்மை இல்லாமல் மனம் போனபடி எல்லாம் பொறிகளைச் செல்லவிட்டு உலகியல் அநுபவத்தைப் பெறுகின்ற மனிதன், இறைவன் திருவருளைப் பெற வேண்டுமென்று விரும்பினால் பல காலம் முயற்சி செய்ய வேண்டும். இறைவனை நினைந்து உபாசனை பண்ண வேண்டும். மனம் அலைய அலையத் துன்பம் மிகுதியாகின்றது. பொறிகள் சிதறுண்டு செல்வதற்குக் காரணம் மனந்தான். அந்த மனத்தை ஒருமுகமாக நிறுத்துவதற்கு இறைவனுடைய திருக்கோலத் தியானம் அவசியம். முருகப் பெருமானுடைய திருக்கோலத்தை எண்ணி மனத்தை ஒருமுகப் படுத்தி வழிபடும் நிலை உண்டானால் மனத்திற்குத் திண்மை ஏற்படும். அந்தத் திண்மை, வாழ்க்கையில் உண்டாகின்ற துன்பங்களுக்கு அஞ்சாத நிலையை உண்டாக்கும்; நாளுக்கும், கோளுக்கும், வினைக்கும் சிறிதும் தளர்வு அடையாத நிலையை உண்டாக்கும்.

கோள் நல்லன ஆதல்

பாண்டி நாடு சமணர்களால் நிலைகுலைந்திருந்த காலத்தில் அந்த நாட்டை ஆண்ட கூன் பாண்டியன் சமணர் சமயச் சார்பிலே நின்றான். சமணர்கள் அரசனைக் கைவசப்படுத்தித் தங்கள் சமயத்தின் பெயரால் சைவ சமயத்தினருக்குத் துன்பத்தை உண்டாக்கி வந்தார்கள். கூன் பாண்டியனுடைய மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் ஞானசம்பந்தப் பெருமானைப் பாண்டி நாட்டுக்கு அழைத்து வரவேண்டுமென்று விரும்பினார்கள். திருமறைக்காட்டில் சம்பந்தப் பெருமான் எழுந்தருளியிருந்தபோது தூதுவர்களை அனுப்பித் தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஞான சம்பந்தப் பெருமான் புறப்படலாம் என்று கிளம்பியபோது நாளும் கோளும் சரியாக இல்லை. அதனை அறிந்து உடன் இருந்த அப்பர் சுவாமிகள் இப்போது போவது நலம் அன்று என்று சொன்னார். "சமணர்கள் மிகப் பொல்லாதவர்கள். அவர்கள் செய்த வஞ்சனையை நான் அறிவேன். அவர்களிடத்தில் அகப்படக்கூடாது. நாளும் சரியாக இல்லை" என்று அவர் வற்புறுத்தினார். இறைவனுடைய திருவருளைப் பெற்ற ஞானசம்பந்தப் பெருமான் அதற்குச் சிறிதும் அஞ்சவில்லை. "எம்பெருமானுடைய திருவருள் இருக்கும்

போது நாள்களும் கோள்களும் நமக்குத் துணை செய்யும். அவற்றால் நமக்கு எத்தகைய துன்பமும் வராது'' என்று ஒரு பதிகமே பாடினார். அதற்குக் **கோளறு திருப்பதிகம்** என்று பெயர்.

''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே''

என்று பாடினார். ''இறைவன் என்னுடைய உள்ளம் புகுந்த அதனால் எனக்குக் கோளினாலே எந்த விதத் துன்பமும் இல்லை'' என்று சொன்னார். இத்தகைய நிலை அடியார்களுக்கு உண்டாகும்.

''சேயவன் புந்தி பனிப்பானு
வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற
வேதரும் சேதமின்றே''

என்று கந்தர் அந்தாதியிலும் அருணகிரியார் முருகனை நம்பினவர்களுக்கு நவக்கிரகங்களால் வரும் துன்பம் இல்லை என்று பாடியிருக்கிறார்.

2

இத்தகைய மனத்திண்மை வரவேண்டுமானால் மனத்தை உலகியற் புயலுக்கு இடமாக்காமல் முருகப் பெருமானுடைய திருக்கோலத்தை நினைக்கின்ற இடமாக, அவன் எழுந்தருளி இருக்கும் சிங்காதனமாக ஆக்க வேண்டும். மனத்திலே அடிக்கடி நினைத்துப் பார்த்துப் பழகினால் அந்தத் தியானம் முறுகும்; பார்க்கும் இடங்களில் எல்லாம் அவன் தோற்றம் தோன்றும். இத்தகைய சிறந்த நிலை வந்தவர்களுக்கு வினையினால் வருகின்ற துன்பம் தெரியாமல் மரத்துப் போய்விடும்.

பரிகாரம்

குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

இதில் மூன்று பகுதிகள் உள்ளன. தாளும் தாளைச் சேர்ந்த அணிகளும் ஒரு பகுதி. சண்முகம் ஒரு பகுதி. தோளும் அதைச் சார்ந்த கடம்பும் ஒரு பகுதி. பிரபஞ்சச் சேற்றிலே அமிழ்ந்து கிடக்கும் ஆருயிர்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பது தாள். அந்தத் திருவடியில் அவன் சிலம்பும், சதங்கையும், தண்டையும் அணிந்திருக்கிறான். ஏதேனும் ஒன்றை மாத்திரம் அணியவில்லை. அந்தத் திருவடி அருள் செய்யப் புறப்பட்டு வருகிற கோலத்தை முன்கூட்டியே ஒலியினால் அடியார்கள் அறிந்து இன்புற வேண்டும் என்று அவற்றை எல்லாம் அணிந்திருக்கின்றான். திருவடியைக் காண்பதற்கு முன்னாலே அதில் அணிந்திருக்கும் சிலம்பு, சதங்கை, தண்டை ஆகியவற்றின் ஒலியைக் கேட்டே பக்தர்களுக்கு அவன் திருவடி நினைப்பு உண்டாகி விடுகிறது.

''தாளும், முகமும், தோளும் எனக்கு முன் வந்து தோன்றிடின் நாள் முதலாயின என்ன செய்யும்?'' என்று கேட்கிறார் அருண கிரியார். துன்பத்தைத் தருகின்ற பொருள்கள் நாள், கோள், வினை, கூற்று என்பன. இந்த நான்கில் முதல் மூன்றும் வாழ்க்கை நிகழும் போது வருவன. நான்காவதாகிய கூற்று வாழ்க்கை மாயும்போது வருவது.

குமரேசரின் இரண்டு தாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும் வாழும் காலத்தில் நமக்கு முன்னே வந்து தோன்றும் நிலை வந்தால் நாள் நம்மை ஒன்றும் செய்யாது.

நாள் என் செய்யும்?......................குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்......................
எனக்கு முன்னே வந்து தோன்றிடினே!

எம்பெருமானின் ஆறு முகத்தை நினைத்தால் வினை ஒன்றும் செய்யாது. நமக்குத் தீய வினைகளால் விளையும் துன்பத்தை எம்பெருமானுடைய ஆறுமுகங்களும் நீக்கிவிடும்.

வினைதான் என் செய்யும்?........குமரேசர்
....சண்முகமும்
எனக்கு முன்னே வந்து தோன்றிடினே!

அடுத்தபடி நமக்குத் துன்பத்தைத் தருவன கோள்கள். அவனுடைய பன்னிரு தோளும் அவற்றில் அணிந்துள்ள கடம்ப மாலையும் நம் முன்னே வந்து தோன்றினால் அந்தக் கோள் களினால் வரும் துன்பம் போய்விடும்.

கோள் என்செயும்
......................................குமரேசர்...
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே!

எல்லாத் துன்பங்களுக்கும் தலையாய துன்பமாக வாழ்வின் முடிவில் கூற்றுவன் வரும்போது அந்தத் துன்பத்தைப் போக்கு வதற்கு வழி என்ன? அப்போது குமரேசரின் தாளும், தோளும், சண்முகமும் முன்னே வந்து தோன்றும். அவனுடைய திருக் கோலம் முழுவதும் தோன்றினால் கூற்றுவனால் வருகிற துன்பம் இல்லையாகும்.

கொடுங் கூற்றென் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே?

எப்படித் தியானிப்பது?

இந்தப் பாட்டில் முருகப் பெருமானை எப்படித் தியானிப் பது என்பதை அருணகிரியார் சொல்கிறார். இத்தகைய பாடல் களைக் கேட்பதன் பயனே அதுதான். தியானம் நிலை பெற வேண்டு மானால் அந்தப் பெருமானுடைய திருவுருவத்தைத் தாரணை செய்து கொள்ள வேண்டும். ஆறுமுகப் பெருமானுடைய திரு வுருவத்தை மனத்திலே இருத்திக் கொள்வதற்காகவே திருவடியில் இருந்து மெல்ல மெல்ல அவனுடைய திருவுருவத்தை வருணித்துச் சொல்கிறார் அருணகிரியார். குருக்கள் தீபாராதனை காட்டுவது போல அமைந்திருக்கிறது பாட்டு. இந்தப் பாட்டைச் சொல்லும் போதே முருகப்பெருமானின் திருவுருவம் நம் மனக்கண்முன் வரவேண்டும். இறைவனைத் திருக்கோயிலில் கண்டு, அவனது தாளையும் தோளையும் சண்முகத்தையும் கண்ணாரத் தரிசித்து, பாட்டையும் பாடிப் பழக வேண்டும். பின்பு இறைவனுடைய

திருக்கோயிலை விட்டு வீட்டுக்கு வந்து அமைதியாக இருந்து பாட்டை மெல்லப் பாடினால் கோயிலில் கண்ட திருவுருவம் நினைவுக்கு வரும். வராவிட்டால் மறுபடியும் பார்த்து அமைத்துக் கொள்ள வேண்டும்.

பெயரும் பொருளும்

ஒருகால் கண்ட பொருளைப் பிற்காலத்தில் அதனுடைய பேரைச் சொல்லும்போது மனிதர்களுக்கு நினைக்க முடிகிறது. இது மனத்தினுடைய இயல்பு. சொல்லைக் கொண்டே பொருளைத் தெரிந்து கொள்வது வழக்கம். இறைவனுடைய திருநாம மாகிய சொல் அவனுடைய திருக்கோலமாகிய பொருளைக் காட்டும். அதற்காகத்தான் எம்பெருமான் பலபல வடிவங் களையும், திருநாமங்களையும் கொண்டிருக்கிறான். கண்ணாலே காணுகின்ற பொருளைக் காணாத காலத்தில், கருத்தினாலே காண்பதற்குத் தூண்டு கோலாக இருப்பது அதனுடைய பெயர். அவனுடைய திரு நாமங்களும் துதிகளும் அப்படியே இருக்கின்றன. அவனுடைய துதிகளைச் சொல்லிக் கொண்டு தன் கண்முன் இருக்கிற உருவை உள்ளக் கண்ணில் காண்பதற்குச் சற்றே பழக்கம் செய்ய வேண்டும். அப்பழக்கம் முறுகினால் கனவிலும் அவன் திருக்கோலத்தைக் காணலாம். இது மனத்தில் உண்டான பழக்கத்தைச் சார்ந்தது.

குழந்தையையும், மனைவியையும், வெளி மனிதர்களையும் கனவில் காண்பதற்கு நமக்குத் தகுதி இருக்கிறது. ஆனால் இறை வனைக் காண்பதற்கு அத்தகைய தகுதி உண்டாவதில்லை. யாரேனும் மிகவும் அன்பு உடையவர்கள் இறந்து போனால் அவர்களுடைய ஞாபகமாகவே இருக்கிறோம். அதனுடைய பயனாக நம்முடைய நனவிலும், கனவிலும் அவர்களுடைய உருவம் அடிக்கடி தோன்றுகிறது. இதற்குக் காரணம் அவர் களுக்கு நம்மிடத்திலுள்ள அன்பு என்று சொல்வார்கள். உண்மை யான காரணம் நமக்கு அவர்களிடத்தில் உள்ள அன்புதான். அந்த அன்பு எவ்வளவுக்கெவ்வளவு உரமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுடைய உருவம் நம்முடைய கனவில் வந்து நிற்கும். இது மனிதன் தன்னுடைய அநுபவத்தில் காண்பது.

இது போலவே எம்பெருமானுடைய திருக்கோலத்தைக் கண்ணாலே கண்டு, மீதூர்ந்த காதலினால் நெஞ்சத்தில் வைத்துத்

தியானம் பண்ணிப் பழகினால் கண்ணாலே காணாத காலத்தும் அக்கோலத்தோடு நினைவில் வந்து நிற்பான்; கனவிலும் வந்து நிற்பான். அவன் திருவுருவத்தைக் காணும் பேறு நமக்குக் கிடைக்கும். பழகப் பழக நெஞ்சிலே தோன்றும் உருவமே கண் முன்னாலும் தோன்றும். அந்தத் தோற்றத்தை உருவெளித் தோற்றம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். காதல் மிகுந்தவர்களுக்குத் தம்முடைய காதலுக்கு உரியவர்களை உருவெளியாகக் காணுகின்ற நிலை வரும் என்று இலக்கியங்களில் காண்கிறோம். இராமாயணத்தில் இப்படி ஒரு காட்சி வருகிறது.

உருவெளித் தோற்றம்

சூர்ப்பனகை இராமனைக் கண்டு ஆசை கொள்கிறாள். அவனை அணுகியபோது லட்சுமணனால் ஒறுக்கப்பெற்றுத் திரும்புகிறாள். இராவணனிடம் வந்து தன் மூக்கை இழந்ததற்குக் காரணம் கூறுகிறாள். பேரழகியாகிய சீதையைத் தூக்கிக் கொண்டு வந்து இராவணனுக்கு இன்பம் தரும் பொருளாக ஆக்க முயன்றதாகவும், அப்போது லட்சுமணன் தன்னை இந்தக் கோலம் செய்ததாகவும் கூறுகிறாள். சீதையைச் சூர்ப்பனகை பலபடியாக வருணிக்கக் கேட்ட இராவணனுக்கு அப்பெரு மாட்டியிடம் ஆசை உண்டாகிறது. அவளுடைய உருவத்தை அவன் கற்பனை செய்து கொள்கிறான். காம மிகுதியால் அவன் மிகவும் துன்பப் படுகிறான். அப்போது அவனுக்கு உருவெளித் தோற்றமாக ஒரு பெண்ணின் உருவம் தோன்றுகிறது. சீதையை அவன் முன்பு பார்த்தது இல்லை. ஆனாலும் முன்னால் தோற்றுகின்ற பெண்ணின் உருவம் மிக அழகாக இருக்கிறது. அதை அவன் கண்டபோது அவள்தான் சீதையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள உடனே சூர்ப்பனகையை அழைத்துவரச் சொல்கிறான். சீதை சீதை என்று எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தமையினால் அவனுக்குப் பார்க்கும் இடம் எங்கும் சீதையாகத் தோன்றும் நிலை வந்து விட்டது.

இராவணன் ஏவலின்படி சூர்ப்பனகை அங்கே வந்தாள். அவளோ இராமனிடத்தில் தீரா விருப்பம் கொண்டவள். அவள் இராவணனை அணுகியபோது, ''இதோ பார்: இவள்தானா நீ சொன்ன சீதை?'' என்று அவன் கேட்கிறான்.

''பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவன் நேருற நோக்கி நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயில்நின்றெ்றன வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொ லியம்பிய சீதை என்றான்.''

சூர்ப்பனகைக்கு எப்போதும் இராமனுடைய நினைவாகவே இருக்கிறது. இராவணனுக்குச் சீதையிடத்தில் உள்ள ஆசை எத்தனை வலியதோ, அத்தனை வலியது சூர்ப்பனகைக்கு இராமன்பால் உள்ள ஆசை. இராவணன் தான் கண்ட உருவெளித் தோற்றத்தைக் காட்டி, ''இவள்தானே சீதை?'' என்று கேட்டபோது சூர்ப்பனகை பார்க்கிறாள். அவளுக்கு அங்கே சீதை தோன்றவில்லை; இராமன்தான் தோன்றுகிறான். உடனே அவள் வியப்புமீதூர்ந்து, ''இவன்தான் அந்த வல்வில் இராமன்'' என்கிறாள்.

''செந்தா மரைக்கண்ணொடுஞ் செங்கனி வாயி னோடும்
சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைக ளோடும்
அந்தா ரகலத்தொடு மஞ்சனக் குன்ற மென்ன
வந்தா னிவனாகுமவ் வல்வில் இராம னென்றாள்.''

வெறும் காமிகளுக்கே மனக்கண்ணிலும் புறத்திலும் அவர்கள் நினைத்த உருவம் தோற்றுமானால், இறைவன்பால் எல்லை இல்லா அன்பு கொண்ட பக்தர்களுக்குத் தோற்றுவதற்குத் தடை என்ன? மனம் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். பக்தி உணர்ச்சி மிக்கவர்கள் இறைவனுடைய தியானத்தினால் அவன் திருக்கோலத்தை நினைத்த இடம் எல்லாம் காண்பதற்குரிய நிலையை அடைவார்கள்.

எங்கே நினைப்பினும்

''எங்கே நினைப்பினும் அங்கே வந்து என்முன் எதிர் நிற்பனே'' என்று பிறிதோர் இடத்தில் அருணகிரியார் பேசுகிறார். தேவி பக்தர் ஆகிய அபிராமிபட்டர்,

''பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே''

தோன்றும் என்று பாடுகிறார்.

குமரேசன் நம்முடைய கவனத்தை ஈர்க்கும் சிலம்பு முதலிய வற்றை அணிந்த தாள் உடையவனாக இருக்கிறான், அவற்றை நினைந்து நாளுக்கு அஞ்சாமல் பக்தர்கள் இருக்க வேண்டுமென் பதற்காக. ஆறு முகத் திருக்கோலம் கொள்கிறான், வினைக்கு அஞ்சாமல் இருக்க. பன்னிரு தோளும் கடம்பும் உடையவனாக விளங்குகிறான், கோளுக்கு அஞ்சாமல் இருக்க. தோளும், முகமும், தாளும் ஒருசேர விளங்கும் கோலம் கொண்டு வரு கிறான் கொடும் கூற்றுவனுக்கு அஞ்சாமல் இருக்க.

நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே,

இருபத்தேழு

இந்தப் பாட்டில் எனக்கு நயம் ஒன்று தோன்றுகிறது. இருபத்தேழு நட்சத்திரங்களில் எல்லா மனிதர்களும் பிறக்கிறார்கள். நட்சத்திரத்தைத் தெரிந்து கொண்டே கிரகங்களின் சஞ்சாரத்தை அறிந்து நல்லதையும், தீயதையும் சொல்வார்கள் சோதிடர்கள். இந்தப் பாட்டில் இருபத்தேழு பொருள்களைச் சொல்லியிருக் கிறார் அருணகிரியார், இரண்டு தாள், இரண்டு சிலம்பு, இரண்டு சதங்கை, இரண்டு தண்டை ஆகத் தாளுடன் சேர்ந்த பொருள் எட்டு. முகம் ஆறு. தோள்கள் பன்னிரண்டு. கடம்ப மாலை ஒன்று. ஆக இந்த இருபத்தேழு பொருள்களை நினைப்பாருக்கு இருபத் தேழு நட்சத்திரங்களால் வரும் தீங்கும், அவற்றினுடைய தொடர் பால் கிரகங்கள் விளைக்கும் தீமையும், அவற்றைக் கருவியாகக் கொண்டு வினையால் நேரும் விளைவும் அச்சத்தைத் தாரா. வினையைக் கொன்றுவிடலாம் என்று சொல்லவில்லை. இறை வனைத் தியானிப்பவர்களுக்கு வினையை வென்றுவிடும் நிலை உண்டாக்கும்



நாள்என் செயும்,வினை தான்என்
    செயும்,எனை நாடிவந்த
கோள்என் செயும்,கொடுங் கூற்றென்
    செயும்,கும ரேசர்இரு

தாளும் சிலம்பும் சதங்கையும்
　　தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
　　னேவந்து தோன்றிடினே?

(குமரேசருடைய இரண்டு திருவடிகளும் அவற்றில் புனைந்த சிலம்பும் சதங்கையும் தண்டையும், ஆறுமுகங்களும், தோள்களும், அவற்றில் அணிந்த கடம்பமலர் மாலையும் எனக்கு முன்னே வந்து தோன்றினால், கொடிய நாள் என்னை என்ன செய்யும்? தீய வினைதான் என்ன செய்யும்? என்னை நாடி வந்த கொடிய கிரகம் என்ன செய்யும்? கொடுமையான கூற்றுவன் என்ன செய்வான்?

தோன்றிடின் என் செயும் என்க. கோள் - கிரகம். கூற்று - யமன்.)

மயில் ஏறிய மாணிக்கம்

முகவுரை

முருகப் பெருமானுடைய திருவருளில் ஈடுபட்ட அருணகிரிநாதர், பக்தி பழுத்த மனத்திலிருந்து கனிந்து அமுதூறிய பாடல்களைப் பாடியருளினார். அந்தப் பாடல்களைப் பரிவுடனும் பக்தியுடனும் படிக்கும்போது அந்த அன்பு மலர்ந்து மணக்கும் அநுபவத்தைப் பெறுவார்கள். வெறும் புலமைத் திறத்தை மட்டும் காட்டும் பாடல்களில் இந்த மன நிறைவு இருப்பதில்லை. திருக்கோயிலில் அழகாக அலங்காரம் செய்த மூர்த்திக்கு விரிவான பூசை நடக்கும்பொழுது மனத்தை வேறு இடங்களில் அலைய விடாது, அந்தப் பூசையில் ஈடுபட்டு நெடுநேரம் இருந்து தரிசனம் செய்துவிட்டு வீட்டுக்கு வரும்போது ஒருவகையான கிளர்ச்சி நம் உள்ளத்தே உண்டாகிறது. வீட்டுக்கு வந்த பிறகும் நம்முடன் கோயிற் சூழ்நிலை சில நேரத்திற்கு இருந்து கொண்டே இருக்கிறது. அப்போது உண்டாகும் மன நிறைவிலே ஒரு பிசிர் இல்லாத இன்பம் இருக்கிறது.

அதுபோல, இன்னும் அதைக் காட்டிலும் மிகுதியாகவே, அருணகிரிநாதர் திருப்பாட்டைப் படிக்கையில் ஒருவகை இன்ப உணர்ச்சி உண்டாகிறது. வாய்விட்டுப் படித்தால் அப்போது அது நன்றாகத் தெரியும். மனப்பாடமாகித் தனியே இருந்து வாயாரப் பாடினால் அப்போது உண்டாகும் உருக்கம் தனியான சிறப்புடையது. யாரேனும் நன்றாகப் பாட அதைக் கேட்டால் உடம்பில் ஒரு கிளு கிளுப்பு ஏற்படுகிறது. இதை முருகன் அடியார்கள் உணர்ந்திருப்பார்கள்.

தாளம் வேண்டாமல் எளிதிலே பாடுவதற்கு ஏற்றவையாக இருப்பவை கந்தர் அலங்காரப் பாடல்கள். அவற்றின் பொருளை உணர்ந்து வாயாரப் பாடும் நமக்குச் சற்றே உடற்பாரம் குறைவதுபோல் இருக்கிறது. அந்தப் பாடல்களைப் பாடும் நமக்கே ஓரளவு இன்பம் பிறக்குமானால் அவற்றை இறைவன்

திருவருளிலே மிதந்து அருணகிரியார் பாடும்போது அவர் எத்துணை இன்பத்தை அடைந்திருப்பார்! அவர் பெருமிதத்தோடு முருகன் திருவருளாற் பெற்ற பேற்றைச் சொல்லும்போது அத்தனையும் உண்மை என்ற நினைவு நமக்கு உண்டாகிறது.

கந்தர் அலங்கார விளக்கச் சொற்பொழிவைக் கேட்ட அன்பர்கள் சில சமயங்களில் தம்முடைய உவகைப் பெருக்கை என்னிடம் வெளியிடுவதுண்டு. பல சமயங்களில் அவர்களுடைய கண் இமை ஈரம் அடைவதைக் கண்டிருக்கிறேன். அப்போ தெல்லாம் அருணகிரிநாதப் பெருமானுடைய பரோபகாரத்தை நினைந்து வாழ்த்துகிறேன்.

"இந்தப் பாடல்களில் என்ன இருக்கிறது? காவியச் சுவை உண்டா? கதை உண்டா?" என்று கேட்பவர்கள் இருக்கலாம். கவிஞன் தான் கொண்ட உணர்ச்சியைப் பிறரும் அடையும்படி செய்வதைக் காட்டிலும் உயர்ந்த ஆற்றல் வேறு இல்லை. அந்த உரைகல்லில் உரைத்துப் பார்த்தால் அருணகிரி நாதரின் பாடல்கள் உணர்ச்சி ஊட்டுபவை. அவர் முருகன் திருவருளால் பெற்ற நலங்களைப் பெருமிதத்தோடு சொல்லுகையில் நமக்கு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. "நான் இப்படித் துன்புறுகிறேனே! என்னை ஆட்கொள்ள மாட்டாயா?" என்று பாடும்போது நாமும் உருகுகிறோம். "இவ்வாறு என்னை ஆட்கொள்ள வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொள்ளும்போது அதே விண்ணப்பத்தை ஆண்டவனிடம் நாம் திருப்பிச் சொல்லவேண்டும் என்ற ஆர்வம் எழுகிறது. நம்மை நோக்கி உபதேசம் செய்வது போலப் பாடும் பொழுது அது தெளிவாக விளங்குகிறது.

இறையருள் அநுபவம் உள்ளவர்களின் வாக்கைப் படிக்கும் போது நாமும் நல்ல மனநிலையோடு இருந்து படிக்க வேண்டும். மென்மையும் தண்மையும் உடைய மலரில் அது குலையாமற் கலையாமல் தாதூதித் தேன் உண்ணும் வண்டைப்போல இத்தகைய பாடல்களுக்குள் உள்ளத்தைச் செலுத்த வேண்டும். சோதனை போடும் அறிவுக்கு இந்தப் பாடல்கள் ஓரளவுதான் சுவையை உண்டாக்கும். அங்கே உண்டாவது வெறும் இலக்கியச்

சுவைதான். அநுபூதிமான்களின் பாடலுக்குள் சோதனை செய்யும் கருத்தோடு புகுவதைவிட்டு அநுபவத்தைப் பெறும் பக்தி யோடும் பரிவோடும் புக வேண்டும். அப்போது அந்தப் பாடல் களைப் பாடின பெரியோர்கள் இன்ன நிலையிலிருந்து பாடியிருக்க வேண்டும் என்ற உணர்வு ஓரளவாவது உண்டாகும். நன்றாக ஈடுபடும் வாய்ப்புக் கிடைத்து விட்டால் இந்தப் பாடல்களிலேயே உள்ளம் உருகிக் கரைந்து புளகம் போர்ப்பக் கண்ணீர் வார நிற்கும் அற்புதமும் நிகழும். யாவும் நாம் அணுகும்போது உள்ள மனநிலையைப் பொறுத்தவை.

அருணகிரிநாதர் பாடல்களில் அப்படி ஆழங்காற்பட்டு மூழ்கி உருகும் இடங்கள் பல உண்டு. நம்முடைய உள்ளத்தின் நுட்ப மான அநுபவ இதழ்கள் மலர்ந்து மணம் பரவி நம்மை மறந்து நிற்கச் செய்யும் ஆற்றல் இப்பாடல்களுக்கு இருக்கிறது. தாயு மானவர் முதலிய அநுபவ ஞானிகள் அவ்வாறு அநுபவித்தவர்கள்.

அலங்காரம் நூறு பாடல்களை உடையது. மேலும் பொங்கி வழிந்தவைபோன்ற ஏழு பாடல்கள் இருக்கின்றன. அவற்றில் ஓரிடத்தில் வந்த கருத்தே வேறு சில இடங்களில் வந்திருக்கும். ஆனால் வெவ்வேறு உருவத்தில் அவை இருக்கும். சில செய்தி களை அருணகிரியார் நேரே சொல்லாமல் கற்பனை நயத்தோடு சொல்லுவார்.



இந்தப் புத்தகத்தில் கந்தர் அலங்காரம் 39-ஆவது பாடலி லிருந்து 44-ஆம் பாடல் வரையில் ஆறு பாடல்களுக்குரிய விளக்கம் இருக்கிறது. முதல் பாடலில், பிறந்து திரிந்து இறந்து வரும் நிலை மாறி இறைவனோடு ஒன்றுகின்ற முத்தியின்பம் வேண்டும் என்ற வேண்டுகோள் அமைந்திருக்கிறது. இரண்டா வது பாடல், முருகப் பெருமானுடைய திருவடிக்கு ஆளானபிறகு ஊழ்வினையின் உறைப்புப் போய்விட்டது என்ற கருத்தை அழகாகக் காட்டுகிறது. மூன்றாவது பாடல், பெண் மயலில் சிக்காமல் இறைவன் திருவடித் தாமரையைப் பற்றிக் கொள்ளும் நெறியைச் சொல்கிறது. நான்காவது பாடல் தலையினால் அவனை

வணங்க வேண்டும் என்பதையும் ஐந்தாம் பாடல் கைகளால் அவனைத் தொழ வேண்டும் என்பதையும், குறிப்பிக்கின்றன. ஆறாம் பாட்டு, இந்த உடம்பு அழியுமென்றும் இறைவன் திருவடியே அழியாத புகலிடமென்றும் புலப்படுத்துகிறது.

திருமால் முருகன், மயிலேறிய மாணிக்கம், மாமயிலோன், செவ் வேலவன், குருதேசிகன், குமாரன், சிவபிரான் மகன், முருகன், கிரிதுளைத்தோன் என்று முருகனைப் பாராட்டுகிறார் அருணகிரி நாதர்.

முருகன் திருவருள் கிடைக்குமானால் இவ்வுலகில் உதித்து உழன்று சாவது தீரும்; மனம் அழியும்; தலையெழுத்து அழியும்; வீடு எய்தலாம் என்ற உண்மைகளை இப்பாடல்களில் காணலாம்.

திருமாலின் பெருமை இரண்டு பாடல்களில் வருகின்றன. அவர் அமுதம் கடைந்ததை, "வெற்பு நட்டு உரகபதித் தாம்பு வாங்கி நின்று அம்பரம் பம்பரம் பட்டுழல மதித்தான்" என்று பாராட்டுகிறாதர். அவர் சேஷ சயனராக இருக்கும் கோலத்தை, "காலே மிக உண்டு காலே இலாத கணபணத்தின் மேலே துயில் கொள்ளும் மாலோன்" என்று காட்டுகிறார். இராமாவதாரத்தில் சேது பந்தனம் செய்ததை, "கவியாற் கடல் அடைத்தோன்" என்பதில் கூறுகிறார். சிவபெருமானை, "கணபணக்கட் செவியால் பணியணி கோமான்" என்கிறார்.

முருகன் கடல் சுவற வேலெறிந்ததையும் கிரவுஞ்ச மலையைத் துளைத்ததையும் சூரனைச் சங்கரித்ததையும் இந்தப் பாடல்களில் அருணை முனிவர் எடுத்துரைக்கிறார்.

பிறருடைய குறைகளைத் தம் குறையாகச் சொல்லிக் கொள்ளும் இயல்புடைய அவர் தாம் 'பாலனைய மொழியார் இன்பத்தைப்பற்றி மால்' கொண்டதாகவும், குமரன் பதாம்புயத்தை வணங்காத் தலை தமக்கு வாய்த்ததாகவும், முருகனைப் போற்றி அன்பிற் குவியாக் கரங்கள் தமக்குக் கூடியனவாகவும் கூறுகிறார். ஆனால் ஓரிடத்தில், "ஒரு வீடு எய்தி நிற்க நிற்கும் குணம் காட்டி ஆண்டவன்" என்ற உண்மையையும் வெளிப்படுத்தி விடுகிறார்.

''அவன் கால் பட்டு அழிந்தது என்தலைமேல் அயன் கை யெழுத்தே'' என்றும் தாம் பெற்ற நிலையைப் புலப்படுத்துகிறார்.



வழக்கம்போல இப்பாடல்களுக்கு விளக்கம் கூறும்போது வெறும் சொற்பொருளையோ, சிறப்புரையையோ கூறுவதோடு நான் நிறுத்துவதில்லை. சொற்பொழிவாதலின் அங்கங்கே வரும் கருத்துக்கு விளக்கமும், வரலாறுகளுக்கு விளக்கமும், உட் கருத்தும், பழைய மரபும் சொல்லி வருகிறேன். அருணகிரியாரின் பாடல்களில் இலக்கணப் பிழை உள்ளதென்று சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். அது சம்பந்தமான என் கருத்தை முதற்பாட்டின் விளக்கத்தில் காணலாம்; அதனைச் சொல்லாமலே பாடலை விளக்கியிருக்கலாம். நூலைப் பாடியவரைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொண்டால் நூலின்பால் மதிப்பு உண்டாகும் என்று ஆசிரியர்கள் கூறுவார்கள். அதனால் அத்தகைய கருத்துக்களை இடையிடையே சொல்லி வருகிறேன்.

சில கருத்துக்களை விளக்கப் பெரிய புராணம், கம்ப ராமாயணம், திருமந்திரம், தேவாரம், திருக்குறள் ஆகியவை உதவுகின்றன. அவற்றிலுள்ள கருத்துக்களையும் பாடல்களையும் சொல்லி விளக்கும்போது பாட்டிலுள்ள கருத்துக்கள் பின்னும் தெளிவடைகின்றன.

வழக்கம்போல அங்கங்கே சில உவமைகளையும், உவமைக் கதைகளையும் இப்புத்தகத்திலும் காணலாம். சில உரையாடல் களைக் கற்பனை செய்து அமைத்துக் கருத்தை விளக்க முயன் றிருக்கிறேன். சொற்பொழிவில் இவை கேட்பாருக்குச் சுவையை உண்டாக்கி ஆவலைத் தூண்டும் இயல்புடையவை.



எவ்வளவு பேசினாலும் அதனை அப்படியே சுருக்கெழுத்தில் வடித்துத் தர அன்பர் **ஸ்ரீ அனந்தன்** இருக்கிறார். முருகன் திரு வருள்தான் அவரை எனக்கு உதவிபுரிய அனுப்பியிருக்கிறதென்று எண்ணுகிறேன். தேனாம்பேட்டை முருகன் கோயிலைச் சமயச்

சொற்பொழிவு நிலையமாக்கிப் பக்தியை வளர்த்துவரும் அக்கோயில் தர்மகர்த்தர்கள் அன்பையும் முருகன் எனக்குக் கிடைக்கும்படி செய்திருக்கிறான்.

'புத்தக வரிசை நீளுகிறதே!' என்று எண்ணும்போதெல்லாம், ''அதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். எவ்வளவு வேண்டு மானாலும் நீளட்டும்'' என்று ஊக்கமூட்டும் அமுத நிலையத் தலைவரும் என் உழுவலன்பருமாகிய ஸ்ரீ **ரா.ஸ்ரீ. ஸ்ரீகண்டன்** அவர்களுடைய ஆர்வத்தையும் அன்பையும் எப்படி அளவிட்டுச் சொல்வது?

எல்லாம் முருகனுடைய திருவருளே.

கி.வா. ஜகந்நாதன்

01.01.1958

மயில் ஏறிய மாணிக்கம்

1

கந்தர் அலங்காரச் சொற்பொழிவு தொடங்கிச் சரியாக ஓர் ஆண்டு ஆயிற்று. ஒவ்வோர் ஆண்டின் வளர்ச்சியையும் கணக்குப் பார்க்கும்போது உலகத்து மக்கள் தம் வீட்டில் பிறந்த குழந்தைகள், வியாபாரத்தில் சேர்ந்த ரூபாய், கட்டிய வீடுகள், வாங்கிய நிலங்கள் இவற்றைக் கொண்டு பார்ப்பார்கள். ஆனால் இந்த அடியார்கள் கூட்டத்தில் நாம் பார்க்கிறது ஆண்டவனுடைய அலங்காரம் எவ்வளவு பார்த்திருக்கிறோம் என்கிற கணக்குத் தான். இன்றைக்கு 39—ஆவது பாட்டைப் பார்க்கப் போகிறோம். காப்புப் பாடலோடு 40 பாடல்கள் ஆகின்றன. ஐந்துக்கு இரண்டு பழுது இல்லை என்று பார்க்கிற இந்த உலகத்தில், 52 வாரங் களில் 40 பாட்டுப் பார்த்திருக்கிறோம் என்பது ஒன்றும் பழுது இல்லை அல்லவா? முருகப்பெருமானின் திருவருளினால் 40 பாடல்களாவது பார்க்க முடிந்ததே என்று மகிழ்ச்சி அடையலாம்.

பஞ்சாமிருதத்தை வெள்ளிப்பாத்திரத்தில் வைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். வெள்ளிப் பாத்திரம் இல்லை. பிறருக்கு ஈய ஒரு பாத்திரம் வேண்டும்; ஈயப்பாத்திரம் ஒன்று இருந்தால் போதும். அத்தகைய ஈயப் பாத்திரம் ஒன்று உங்களுக்குக் கிடைத் திருக்கிறது. ஈயப் பாத்திரத்தில் வைத்துக் கொடுத்தது என்பதனால் பஞ்சாமிருதம் சுவை குன்றிவிடுமா? பாத்திரம் நன்றாக இல்லா விட்டாலும் அருணகிரி நாத சுவாமிகள் தந்த கந்தர் அலங்காரப் பஞ்சாமிருதம் உங்களுக்குச் சுவை அளிக்கும். பஞ்சாமிருதம் என்பதற்கு ஐந்து பொருள்கள் கலந்த அமிருதம் என்று பொருள். ஆறுமுகப் பெருமானுக்குப் பஞ்சாமிருதம் விருப்பம். பழனியில் பஞ்சாமிருத அபிஷேகம் சிறப்பாக இருக்கும். அருணகிரி நாத சுவாமிகளும் தமிழ்ப் பஞ்சாமிருதம் செய்தார். ஐந்து இலக்கணங்கள் பொருந்தியது தமிழ் என்று சொல்வார்கள். ஆறுமுகநாதன் ஐந்து

வகையான பொருள்கள் சேர்ந்த இந்தப் பஞ்சாமிருதத்தையும் சுவைக்கிறான்.

தமிழ்ப் பஞ்சாமிருதம்

அருணகிரிநாத சுவாமிகள் செய்திருக்கும் தமிழ்ப் பஞ்சாமிருதம் பழப் பஞ்சாமிருதத்தைவிட ஒரு வகையில் சிறந்தது. அப் பஞ்சாமிருதம் அதிக நாள் இராது. வீட்டில் பண்ணுகிற பஞ்சாமிருதத்தைக் காட்டிலும் பழனியில் பண்ணுகிறது இன்னும் கொஞ்ச நாள் அதிகம் இருக்கும் என்று சொல்லலாம். ஆனால் அதற்கும் ஒரு கால எல்லை உண்டு. ஆனால் அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டிலே இந்தத் தமிழ்ப் பஞ்சாமிருதத்தைச் செய்தார். இப்போது நாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்கிறோம். கந்தர் அலங்காரம் தோன்றி 500 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. அதனாலே அது ஊசிப் போய்விட்டதா? இல்லை. அருணகிரியார் பாடிய பாட்டு 500 ஆண்டுகளாக இருக்கின்றன. இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இருக்கும் என்று சொல்ல முடியாது. நாள் ஆக ஆகத்தான் சில பொருள்களுக்கு உரம் ஏறும். அதிக நாள் வாழ்ந்த மரம் வைரம் ஏறியிருக்கும் என்பர். கந்தர் அலங்கார நூல் மக்கள் உள்ளத்தில் வளர வளர, அதன் உள்ளே இருக்கிற அநுபவ உணர்ச்சிகள் எல்லாம் மனத்தில் சேரச் சேர, அதிகமான இன்ப நலங்கள் உண்டாவதைப் பார்க்கிறோம்.

பக்தருக்கு வாய்த்த பெருமாள்

முருகனிடத்தில் ஈடுபடுகின்ற துடிப்பு இக்காலத்தில் மக்களிடத்திலே தோன்றியிருக்கிறது. கலியுகம் முற்ற முற்றக் கலியுகவரதனின் அருள் முற்றத்தானே வேண்டும்? வேதத்தை வேதியர்கள் விட்டார்கள்; வேள்வியை விட்டார்கள். யோகியர்கள் யோகத்தையும் விட்டார்கள். ஞானிகளைக் காண்பதும் அரிதாகி விட்டது. மற்ற மக்கள் எல்லாம் தினப்படி செய்ய வேண்டிய கடமைகள் யாவற்றையும் விட்டுவிட்டார்கள். நாட்டிலே பரவி விட்ட கோடி கோடி மாயா சக்திகள் கர்மம், யோகம், ஞானம் முதலிய பலவகையான நெறிகளில் சென்று ஈடுபட முடியாத அவல நிலையை ஏற்படுத்திவிட்டன. இப்படி நாட்டிலே கோளாறுகள் அதிகமாக இருந்தபோதிலும் ஒன்று மாத்திரம்

தலை நீட்டிக்கொண்டிருக்கிறது. அதுதான் பக்தி நெறி. வழுக்கி விழுபவனுக்கு உதவும் கைக்கோலைப் போன்றது பக்தி. குறை பாடுடைய மனிதர்களுக்கு ஏற்றது பக்தி நெறி. குறைபாடுடைய மனிதர்கள் அதிகமாக இருப்பதனாலே பக்தி நெறி இந்தக் காலத்தில் மிகச் சிறப்பாக இருக்கிறது. கண்ணனும் கந்தனும் எங்கே பார்த்தாலும் உலாவுகிறார்கள். போகும் இடந்தோறும் திருப்புகழ்ப் பஜனை; கண்ணன் பஜனை. இந்த இரு குழந்தை களும் விளையாடுகின்ற உலகத்தில் பக்தி யோகம் சிறந்து வளராமலா இருக்கும்?

"பக்திசித்தி காட்டி அத்தர்சித்தம் மீட்ட
பக்தருக்கு வாய்த்த பெருமாளே"

என்று அருணகிரியார் திருப்புகழில் முருகனைப் பாடுகிறார். 'பக்தியே சித்திக்கு வழிகாட்டி. பக்தி வழியிலே சென்றால் முடிவாகிய சித்தி கிடைக்கிறது' என்று புலவர்கள் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் அருணகிரியார் பக்தியே சித்தியாகி விடும் என்ற எளிய வழியைக் காட்டினவர். எப்போது இவ்வுலகத்தில் பக்தி நெறி விரிவாக இருக்குமோ, எப்போது பக்தர்களின் முயற்சி அதிகமாக இருக்குமோ, அப்போது முருகன் பெருமையும், அடி யார்களின் பெருமையும் அதிகமாகப் பரவும். பக்தி நெறியிலே கந்தனைப் பற்றிக்கொண்டால் அவனை நினைக்க நினைக்க வருவது இன்பம்; சொல்லச் சொல்லப் பெறுவது இன்பம்; தியானம் பண்ணப் பண்ணக் கூடுவது இன்பம்.

அறிவும் அநுபவமும்

உபநிஷத்து, சாஸ்திரம் முதலிய நூல்களை நன்றாகப் படித்து விட்டு, "ஆத்மா என்பது என்ன? ஆண்டவன் யார்? பரமேசுவர னுடைய குணங்கள் என்ன?" என்பவற்றைத் தெரிந்து கொள் வதும் அறிவுதான். இது எழுத்துக் கூட்டிப் படிக்கிற குழந்தை களின் அறிவைப் போன்றது. எழுத்துக் கூட்டிப் படித்துவிட்டாலும் குழந்தைக்கு அந்நூலின் சுவையைத் துய்க்க முடியாது. அநுபவம் கலந்த அறிவைப் பெற வேண்டுமானால் முயற்சி பண்ண வேண்டும். முயற்சி செய்ய முற்படும்போது நம் முன்னோர்கள் காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டும். அவ்வழிதான் பக்தி நெறி. அநுபவத்தைப் பெறுவதற்கு உரிய நம்பிக்கையை அளித்து,

அநுபவத்தை உண்டாக்கி, முயற்சி உள்ளவர்கள் அதனால் ஏற்படுகின்ற இன்பத்தைத் துய்க்கும்படி செய்வனவாகிய அரிய பாடல்களின் வரிசையில் அருணகிரியாரின் வாக்குகள் அமைந் திருக்கின்றன; மணிவாசகப் பெருமாள் பாடிய திருவாசகமும், அப்பர் சாமிகள் பாடிய தேவாரமும், அவை போன்ற பிறவும் அத்தகையனவே.

ஒருவன் அடைகிற இன்பத்தைப் பார்த்து, நாமும் அதை அடைய வேண்டுமென்று எல்லோரும் நினைக்கிறார்கள். இது மனித இயல்பு. ஒருவன் ஒரு செயலைச் செய்து துன்புற்றால் அச்செயலை நாம் செய்யக் கூடாது, செய்தால் நாமும் துன்புறும்படி நேரும் என்று அஞ்சுகிறோம்.

2

அருணகிரியார் பாடல்கள்

அருணகிரியார் தம்முடைய பாடல்களில் தமக்குத் கிடைத்த இன்ப அநுபவங்களை மாத்திரம் சொல்லியிருந்தாரானால் அவற்றைப் படிக்கும்போது நாம் வியப்படைவதோடு நிற்போம். அவருடைய அநுபவத்தை நாம் பெறாதவர்கள் ஆகையினாலே, ''அப்படி ஏற்படுமா? அது சாத்தியமா?'' என்று சில சமயம் யோசனை செய்வோம். ஆனால் அவர் தம்முடைய பாட்டிலே பலவிதமான குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, ''அப்படி இருந்த நான் இத்தகைய இன்பங்களைப் பெறும்படி செய்தாயே!'' என்று எம்பெருமானைப் பார்த்துச் சொல்லும்போது, நாமும் அவர் கூறியுள்ள குறைபாடுகள் எல்லாவற்றையும் உடையவர் களாக இருப்பதனால், ''அடடா, நாமும் அவர் முதலில் இருந்தது போலத்தானே இருக்கிறோம்? அவர் சொல்கிறபடி முருகனை வழிபட்டால் அவர் அநுபவித்த இன்ப நலங்களை நாமும் பெறலாமே!' என்கிற நம்பிக்கை நமக்கு எழுகிறது. முயற்சி செய்ய ஆவலும் எழுகிறது.

தோத்திர நூல்களில் இறைவன் புகழ் மாத்திரம் இராது. அர்ச்சனையும் இருக்கும். குறைபாடுகளைச் சொல்லி வருந்து வதும் இருக்கும். சாஸ்திர நூல்களில் இறைவனின் இயல்பும் தத்துவங்களின் இலக்கணமும் இருக்கும். கந்தர் அலங்காரத்திலே

உயர்ந்த நிலையில் இருப்பார்களுக்கு ஏற்ற பொருள்களும் இருக்கின்றன. மிகவும் இழிந்த நிலையில் உள்ளவர்களும் மேல் நிலைக்குப் போவதற்கான வழிகளும் இருக்கின்றன.

அருணகிரியாரின் பாடல்கள் அற்புதமான கண்ணாடியாக அமைந்திருக்கின்றன. அந்த கண்ணாடி ஒரே சமயத்தில் நமக்கு முருகப் பெருமானையும் காட்டுகிறது. நமது அலங்கோல வாழ்வையும் காட்டுகிறது. அருள் பெறாமல் அவல நிலையில் உழன்றுகொண்டிருக்கும் நம்மையும் காட்டி, அருள் வழங்கும் வள்ளற்பிரானாகிய முருகனையும் காட்டுகிற அருணகிரியாரின் தோத்திரப் பாடல்கள் சாஸ்திரத்தில் உள்ள உண்மையையும் நமக்குப் புலப்படுத்துகின்றன.

வெறும் சாஸ்திர அறிவு

வெறும் சாஸ்திரம் மாத்திரம் படித்தவன் பூகோள ஆசிரியரைப் போன்றவன். அமெரிக்காவுக்குப் போகாமலேயே அமெரிக்காக் கண்டத்தைப் பற்றியும், அதில் ஓடுகின்ற நதிகள், அங்குள்ள மலைகள் முதலியவற்றைப் பற்றியும் பூகோளப் புத்தகத்தில் படித்துவிட்டுப் பலருக்குச் சொல்லிக் கொடுக்கிறார் பூகோள ஆசிரியர். பூகோளம் கற்காமலேயே அமெரிக்காவிற்குச் சென்று அங்கே உள்ளவற்றை எல்லாம் நேரிலே பார்த்து வந்தவன் ஒருவன் பூகோள ஆசிரியரிடம், ''ஐயா, நான் அமெரிக் காவிலுள்ள வாஷிங்டன் நகரைப் பார்த்தேன். அமேசான் நதியைப் பார்த் தேன்'' என்று சொன்னால், ''ஆமாம், ஆமாம். அமெரிக்காவில் அவை இருப்பதாகத்தான் பூகோள புத்தகம் சொல்கிறது. நீ சொல்வது உண்மை. அவற்றை நீ நேரிலேயே பார்த்தாயா?'' என்று சொல் வார். அப்படி அருணகிரியாரின் வாக்குகளின் மூலம் புலனா கின்ற அநுபவ உண்மைகளினூடே சாத்திரக் கருத்துக்கள் இருக் கின்றன. அமெரிக்காவுக்குப் போகாத ஒருவனுக்குப் பூகோள புத்தகத்திலுள்ள அறிவு இருக்கும். ஆனால் அதில் இருக்கிற தப்பைத் திருத்த முடியாது. அமெரிக்காவுக்கு நேரிலே போய் வந்தவனோ பூகோள புத்தகத்தைப் பார்க்காமலேயே உண்மையை உணர முடியும். அதில் பிழை இருந்தாலும் திருத்த முடியும்.

வேத சாஸ்திரங்களைக் காட்டிலும், தமிழ் வேதமாகிய தோத்திரங்கள் சிறந்தவை என்று சொல்வதற்குக் காரணம் இது

தான். வேதம் சொல்லியிருப்பதை எல்லாம் தோத்திரம் சொல்கிறது. ஆனால் வேதத்தில் இல்லாத சில அநுபவ விஷயங்களும் தோத்திரத்தில் இருக்கின்றன. அந்தத் தோத்திரத்தை யாரிடத்திலிருந்து பெறுகிறோமோ அவர்களுடைய சொந்த அநுபவங்களுக்கு ஏற்ப அது பின்னும் உயர்ந்திருக்கிறது. அப்படி அருணகிரியாருடைய அநுபவத்தின் பொங்கலாக விளைந்தது தான் கந்தர் அலங்காரம்.

நல்ல புலமை உள்ளவர்கள் பல பாடல்களைப் பாடலாம். அநுபவம் இல்லாத வெறும் புலமை உடையவர்கள் பாடிய பாடல்களை நாம் பாடும்போது நம் மனம் குழையாது; கரையாது. புலமை இல்லாவிட்டாலும் அநுபவ முதிர்ச்சி பெற்ற ஞானவான்களின் வாயிலிருந்து வரும் பாடல்களில் மனத்தையே நெகிழ வைக்கும் தன்மை இருக்கும். அத்தகைய பாடல்களில் இலக்கண அமைதி இல்லாமலிருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

இலக்கண அமைதி

ஒரு தமிழ்ப் புலவருக்கு ஒரு சின்ன குழந்தை. அவர் வீட்டிற்குள் நுழையும்போது, "அப்பா, நாளைக்கு வந்தாரே ஒரு மாமா, அவர் நேற்று வருவாரா அப்பா?" என்று கேட்கிறது. "நாளைக்கு என்பது எதிர்காலம். நாளைக்கு வந்தாரே என்று இறந்த காலத்தில் சொல்வது பிழை. நேற்று என்பது இறந்த காலம். அதோடு வருவாரா என்று எதிர்கால வினை வருவது பிழை. ஏனடா பிழையாகச் சொன்னாய்?" என்று தம் குழந்தையின் கன்னத்தில் அடிப்பாரா அந்தப் புலவர்? அக்குழந்தை வாரித் தூக்கி முத்தமிட்டுக் கொள்வார். தம்முடைய குழந்தையின் இனிய சொற்களைக் கேட்கும்போது அவர் மனம் குழைகிறது; அன்பு பொங்குகிறது. அன்பு மீதூர்ந்து மனம் குழைந்துவிட்டால் குற்றமா தோன்றும்?

இப்படித்தான் ஞானிகள் தங்களுடைய அநுபவத்தைச் சொன்ன பாடலைப் பார்க்கும்போது அதிலுள்ள இலக்கணக் குறைபாடுகளை நீக்கிப் பார்த்தார்கள் பெரியோர்கள். சில புலவர்கள் அக்காலத்தில் அருணகிரியாரின் பாடல்களிலும் இலக்கணக் குறைகள் உள்ளன என்று சொன்னார்கள்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பற்றி நீங்கள் கேட்டிருப்பீர்கள். பக்தி மயமான பாட்டுக்கள் அவை. அவற்றைப் பாடியவர் கோபாலகிருஷ்ண பாரதியார். அவர் நல்ல சிவ பக்தர். சங்கீதத்தில் வல்லவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இருந்த காலத்தில் வாழ்ந்தவர் அவர்.

ஒரு சமயம் கோபால கிருஷ்ண பாரதியார் தாம் இயற்றிய நந்தனார் சரித்திரப் பாடல்களைக் காரைக்காலில் காலட்சேபம் செய்து வந்தார். ஒரே கூட்டம். இரவு எட்டு மணிக்குக் காலட்சேபம் ஆரம்பித்தால் மறுநாள் காலை ஐந்து மணிக்குத்தான் முடியும். அக்கூட்டத்திற்குப் பொது மக்கள், வியாபாரிகள் ஆகிய எல்லோரும் வருவார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வருவார்கள். இவர்கள் காலையில் பத்துமணிக்குக் காரியாலயங்களுக்குப் போனால் தலை சுற்றும். நந்தனார் சரித்திரத்தை, தங்களை மறந்து, இரவு முழுவதும் கேட்டவர்கள் அல்லவா? அவர்கள் தூங்கி வழிவதை வெள்ளைக்கார அதிகாரி பார்த்தார். யாராவது ஒருவன் தூங்கினால் அவனைத் திருத்தலாம். எல்லோரும் உறங்கும்போது என்ன செய்வது? அவர் அவர்களைக் கூப்பிட்டு, ''ஏன் தூங்குகிறீர்கள்? இரவு தூங்காமல் என்ன செய்தீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள், ''இங்கே பெரியவர் ஒருவர் வந்திருக்கிறார். இரவு முழுவதும் காலக்ஷேபம் பண்ணுகிறார். அதைக் கேட்டு வருகிறோம்'' என்று சொன்னார்களாம். ''போலீஸ்காரனை விட்டு அவரைத் துரத்து'' என்று சொல்லவில்லை அந்த அதிகாரி. ''அத்தனை பேரையும் மயக்குகின்ற அந்தச் சரித்திரம் என்ன?'' என்று கேட்டாராம்.

''ஒரு பஞ்சமன் எம்பெருமானிடத்தில் கொண்ட பக்தியினாலே அருள் பெற்ற வரலாறு அது. அதைப் பாடினவர் ஒரு பிராமணர்'' என்று சொன்னார்கள். ''அப்படியா? அதை அவசியம் நான் வந்து கேட்கவேண்டும்'' என்று சொல்லி அன்றைத் தினம் அவரும் அங்கே சென்றிருந்தாராம். பாரதியாரின் கதையை ஆயிரக்கணக்கான மக்கள் மிக்க சுவாரசியமாக ரசித்ததைப் பார்த்து, எல்லா மக்களையும் மயக்குகின்ற இது நிச்சயமாகச் சிறந்ததாக இருக்கவேண்டும் என்று கண்டு, ''அதை நானே

அச்சிட்டுத் தருகிறேன்'' என்று சொல்லி அச்சிட்டுக் கொடுத்தார் அந்த துரை. அவர் பெயர் சிஸே.

சிறப்புப் பாயிரம் பெற்றது

தாம் இயற்றிய நந்தனார் சரித்திரப் பாடல்களுக்குப் பல இடத்திலே சிறப்புப் பாயிரம் வாங்குவதற்குப் பதிலாக மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடத்தில் வாங்கிவிட்டால் போதும் என்று நினைத்தார் கோபாலகிருஷ்ண பாரதியார். அதற்காக அடிக்கடி பிள்ளையவர்களைச் சந்தித்துக் கேட்டு வந்தார். பிள்ளையவர்களுக்கு ஒரு நினைவு. 'வருகலாமோ'' என்பது போன்ற சொற்கள் பாரதியாரின் பாடல்களில் இருந்தன. 'வருக லாமோ என்ற சொல்லே தமிழில் இல்லையே. இலக்கணப் பிழை உள்ள பாடல்களுக்குச் சிறப்புப் பாயிரம் வழங்குவது சரியல்லவே' என்று எண்ணினார். ஆனால் அதை அவரிடம் சொல்லவில்லை. ''உங்கள் பாட்டுக்களை எவ்வளவு பேர் கேட்டு ரசிக்கிறார்கள்! அதற்குள்ள பெருமை எவ்வளவு! அதற்கு நான் சிறப்புப் பாயிரம் கொடுக்க வேண்டுமா?'' என்று சொல்லித் தட்டிக் கழித்து வந்தார். பாரதியாரும் விடாமல் அடிக்கடி சென்று வந்தார்.

ஒரு நாள் பகல் நேரத்தில் பிள்ளையவர்களைப் பார்க்கப் பாரதியார் சென்றார். எப்போதும் அப்புலவர் பெருமான் பிற்பக லில் சிறிது நேரம் உறங்குவது வழக்கம். அன்றைக்கும் அவர் உறங்கிக் கொண்டிருந்தார். அதனால் வீதித் திண்ணையிலே உட்கார்ந்திருந்தார். பாரதியார். சங்கீதம் தெரிந்தவர் சும்மா இருப்பாரா? தாம் இயற்றியுள்ள நந்தனார் சரித்திரப் பாடல்களை மெள்ள ராகம் போட்டுப் பாதியார் பாட ஆரம்பித்தார். குரல் கேட்ட மாத்திரத்திலேயே புலவர் விழித்துக் கொண்டார். ஆனாலும் கண்ணைத் திறக்காமலேயே அந்தப் பாடல்களைப் படுத்தபடியே கேட்கலானார். பக்தி வளம் நிரம்பிய அந்தப் பாட்டு அவரை உருக்கிவிட்டது. பாரதியார் மற்றொரு பாட்டுப் பாடினார். புலவர் தமிழை மறந்தார். மூன்றாவது பாட்டுப் பாடும்போது அவர் புலமையை மறந்தார். நான்காவது பாட்டுப் பாடி முடித்தார் பாரதியார். புலவர் திலகர் சட்டென்று எழுந் திருந்து திண்ணைக்கு வந்து, ''அதிக நேரம் உட்கார்ந்திருக்

கிறீர்கள் போலிருக்கிறது! மன்னிக்க வேண்டும். இதோ உங்கள் நூலுக்குச் சிறப்புப்பாயிரம் தருகிறேன்'' என்று சொல்லி உடனே ஒரு செய்யுள் பாடிக் கொடுத்துவிட்டார். பாரதியாரின் பாடலில் பெருமை குறைவாக இருக்கலாம். ஆனால் இறைவன் திருவருள் அநுபவம் இருந்ததாகையால் பிள்ளை அவர்களின் மனத்தையே நெகிழச் செய்து கவர்ந்துவிட்டது.

இலக்கியத்துக்கு இலக்கணம்

பக்திச் சுவை ததும்ப, அநுபவ முதிர்ச்சியை அள்ளிக் கொட்டும் பாடல்களில் புலமை குறைவாக இருப்பது தவறு ஆகாது. ''ஆரிஷம்'' என்று ஓர் இலக்கண விதி உண்டு. நல்ல அநுபவம் உடைய பெரியவர்கள் பாடியவை இலக்கண விதிகளோடு பொருந்தாமல் இருந்தாலும் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கனவே. ஆரிஷம் என்பது ரிஷிகளின் முறை என்ற பொருளுடையது. ''இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவது'' முறை.

இதைக் கொண்டு நாம் இலக்கணப் பிழையையுடைய பாட்டுக்களைப் பாடலாமா? நாமும் ரிஷிகளானால் பாடலாம்.

தேவாரம், சாஸ்திரம் இரண்டிலும் தேவாரம் சாஸ்திரத்தை யும்விடச் சிறந்தது எனக் கருதுவதற்குக் காரணம் தேவாரம் நம் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது. அதற்குக் காரணம் அதைப் பாடியவர்கள் சிறந்த அநுபவிகளாக இருந்தார்கள். அந்தப் பாடல்களைச் சொல்லும்போதே, 'நமக்கு அந்த நிலை வர வில்லையே!' என்னும் ஏக்கம் உண்டாகிறது. ஏங்குகிற இடத்தில் தான் நெகிழ்வு உண்டாகிறது. உருக்கம் அதற்கு அப்பால் உண்டாகும். ஏங்கத் தெரிந்தால் உருகத் தெரிந்து கொள்ளலாம். உருகத் தெரிந்தால் புலம்பத் தெரிந்து கொள்ளலாம். புலம்பத் தெரிந்தால் ஆண்டவன் அருள் கிடைக்கும்.

கடந்த ஓர் ஆண்டாக ஆண்டவனை நினைந்து நினைந்து, ஏங்கி உருகிப் புலம்புவதற்கு அடித்தளமாக அருணகிரியார் அமைத்துக் கொடுத்த அலங்காரப் பாடல்களில் நாற்பது பாட்டுக் களைப் பார்த்திருக்கிறோம் என்பதில் நம் எல்லோருக்கும் ஒரு பெருமிதம் உண்டாகிறது. அருணகிரியார்தாம் எம்பெருமானின் சிறப்பை எந்த எந்த வகைகளில் எல்லாம் எடுத்துக் கூறி நமது

மனம் அவனைப் பற்றுக்கோடாகக் கொண்டு உய்ய வழி காட்டு கிறார்! இன்று மாணிக்கம் போன்ற பாட்டைப் பார்க்கப் போகிறோம்.

3

மாணிக்கம் செக்கச் செவேல் என்று இருக்கும். உதய சூரிய னின் நிறம் எப்படி இருக்கிறது? அந்தச் சிவப்பு ஒளி நம்மை அதிகமாகக் கவர்வதற்குக் காரணம் நீலப் பெருங் கடலுக்கு மத்தியிலே, நீல வானின் அடி விளிம்பிலே தோன்றுவதால்தான். அப்படித் தோன்றுகிறான் முருகன். முருகன் மயிலின் மேலே வரும் காட்சி அவ்வாறு இருக்கிறது. வெறும் சிவப்பு ஓர் அழகு. பச்சைக்கு நடுவில் வைத்துப் பார்த்தால் பின்னும் அழகாக இருக்கும். பச்சை மயிலுக்கு நடுவிலே சிவந்த ஒளிப் பிழம் பாகிய முருகன் மாணிக்கமாகத் திகழ்கிறான் என்பதை இந்தப் பாட்டிலே அருணகிரியார் சொல்கிறார்.

அமுதம் கடைந்தது

தேவர்களுக்கு ஒரு நாள் ஓர் ஆசை தோன்றியது. 'உலகில் இருக்கிற மக்களும் சாகிறார்கள். நாமும் சாகிறோமே! சாவாமல் இருப்பதற்கு ஏதாவது மருந்து வேண்டும். மூலிகைகளை எல்லாம் கொண்டு வந்து கலுவத்தில் இட்டு அரைத்துச் சாப்பிடலாமா? அது நம் பெருமைக்கு அடுக்காது' என்று யோசனை பண்ணி னார்கள். 'வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறதே அமிருதம் என்ற ஒன்று, அதை எப்படி அடைகிறது?' என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தபோது பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமான் அவர்களுக்கு உபகாரம் செய்ய வந்தார். ''தேவர்களே, நான் பாற்கடல் பள்ளியை விட்டு எழுந்து விடுகிறேன். நீங்கள் இந்தப் பாற்கடலைக் கடைந்தால் அமிருதம் கிடைக்கும்'' என்று யோசனையும் சொல்லிக் கொடுத்தார்.

பாற்கடலைக் கடைவதானால் நல்ல மத்து வேண்டுமே! உலகத்திலேயே மிகப் பெரிய மலையாக இருப்பது மகாமேரு. அதில் உள்ள ஒரு சிகரம் மந்தரம். அதைக் கொண்டு வந்தார்கள். அதை மத்தாக வைத்துக் கொண்டார்கள். மத்து இருந்துவிட்டால் போதுமா? தூண் வேண்டுமே! அமிருதத்தைக் கடையும்போது

நல்ல பொருள் ஒன்று தூணாக இருந்தால்தான் அமிருதத்தின் சுவை கெட்டுப் போகாது. அமிருத மயமாக இருக்கிறவன் சந்திரன். ஆகவே சந்திரனே அதற்கு ஏற்ற தூண் என்று தேவர்கள் முடிவு செய்தார்கள். மத்தைச் சுற்றிக் கடைவதற்குக் கயிறு வேண்டும். நெளிவு சுளுவாக இருக்கக் கூடியதையே தேர்ந் தெடுக்க வேண்டும்; அது மந்தர மலையைச் சுற்றக் கூடியதாக வும் இருக்க வேண்டும். ஆகவே அதற்கு வாசுகி என்னும் பாம்பே சரியானது என்று முடிவு செய்தார்கள்.

மந்தரத்தை மத்தாகக் கொண்டு, சந்திரனைத் தூணாக வைத்து, வாசுகியைக் கயிறாக்கி, தேவர்கள் பாற்கடலைக் கடைந்தார்கள். கடையும்போது சட்டி சாயாமல் இருக்க வேண்டும். இங்கே பாற் கடலை அடைகல்லாகத் தாங்க வைகுண்டவாசியே கூர்மமாக உரு எடுத்தார். கடையும்போது தேவர்கள் கை சலித்துப் போய் விட்டது. திருமால் ஒரு கை கொடுத்தார். போதாததற்கு ஆலகால நஞ்சு வேறு எழுந்து விட்டது. தேவர்கள் இறைவனை முதலில் மதிக்காவிட்டாலும், ''பரமேசுவரா, இதை நீ சாப்பிட்டு எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று இப்போது போய்ச் சரணாகதி அடைந்தார்கள். பெருங்கருணை வடிவான பரமேசுவரன் நஞ்சை உண்டு அவர்களுக்கு வாழ்வு அளித்தான். மறுபடியும் அவர்கள் கடைந்தார்கள். அமிருதம் வந்தது. உடனே, ''எனக்கு உனக்கு'' என்று தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை மூண்டு விட்டது. திருமாலே அப்போதும் மோகினி உருவம் எடுத்துக் கொண்டு வந்து அமிருதம் பரிமாறினார். தேவர்களை ஒரு பக்கமாகவும், அசுரர்களை ஒரு பக்கமாகவும் உட்கார வைத்துத் தேவர்களின் வரிசையில் முதலில் படைக்க ஆரம்பித்தார். அசுரர்கள் அமிருதத்தை மறந்து மோகினியின் அழகிலே சொக்கிப் போனார்கள். அமிர்தம் முழுவதையும் தேவர்களுக்கு வழங்கி மறைந்தாள் மோகினி.

திருமாலின் உதவி

தேவர்கள் அமிருதத்தை உண்பதற்கு மூலகாரணமாக இருந்தவர் திருமால். இதை இந்துக்களாகிய நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும் சிலப்பதிகாரத்தில் சைனராகிய இளங்கோவடிகள் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய்! மாயமோ மருட்கைத்தே!"

"ஆண்டவனே, என்ன ஆச்சரியம்! தயிர் கடையும் பழைய கயிறு ஒன்றினாலே யசோதை உன் இரு கைகளையும் கட்டி விட்டாளே. அந்தக் கடை கயிற்றுக்குக் கட்டுப்பட்டவை பண்டொரு நாள் கடலைக் கலக்கினாயே, அந்தக் கைகளா? வடவரையாகிய மந்தரத்தை மத்தாகக் கொண்டு, வாசுகியைக் கயிறாகக் கொண்டு பாற்கடலைக் கலக்கிய கை இன்று யசோதையின் கடை கயிற்றுக்குக் கட்டுப்பட்டன என்றால் நம்ப முடியுமா? இது என்ன மாயமோ?" என்று வியப்பு அடைகிறார் இளங்கோவடி கள். சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியருடைய குரவைக் கூத்தை வருணிக்கும் வாயிலாக இந்தப் பாட்டு வெளிப்படுகிறது.

தேவர்கள் அமிருதத்தைச் சாப்பிட்டு விட்டதனாலே தங்களுக்கு இனி மரணம் இல்லை என்று தலை தருக்கி நின்றார்கள். அவர் களுடைய செருக்கு அதிகமாகிவிட்டது. அவர்கள் அமிருதம் சாப்பிட்டதால் பூர்ண ஆயுளோடு வாழ்ந்தார்களே தவிர, அழி வில்லாமல் நிலையாக இருக்கவில்லை. அவர்களை அழிக்கச் சூரன் தோன்றியவுடன் எத்தனைபேர் மாண்டிருக்கிறார்கள்! மிருத் என்றால் மரணம். அமிருதம் என்றால் மரணத்தை நீக்குவது என்று பொருள். அற்ப ஆயுசு இல்லாமல் பூரண ஆயுசோடு வாழவைக்கும் அமிருதத்தை தேவர்களுக்கு வழங்கினார் திருமால்.

வெற்பு நட்டுஉரக
பதித்தாம்பு வாங்கிநின்று அம்பரம் பம்பரம் பட்டுஉழல
மதித்தான்.

அருளமுதம்

திருமாலின் மருமகனாகிய முருகன் என்ன பண்ணுகிறான் தெரியுமா? அருளாகிய அமிருதத்தைத் தன் அடியார்களுக்கு வழங்குகிறான். திருமால் வழங்கிய அமிருதம் இடைக்காலத்தில் வருகின்ற மரணத்தைத்தான் நீக்கிற்று. ஆனால் அவருடைய மருகன் வழங்கும் அருளாகிய அமிருதம் கடைக் காலத்தில் வரு

கின்ற மரணத்தையும் நீக்கும் சக்தி உடையது. இதைச் சாப்பிட மனிதன் எப்படி இருப்பான்? சாவாமல் இருப்பான். பிறக்காதவன் சாக முடியாது; பிறந்தவன் சாகத்தான் வேண்டும். பிறப்பையே நீக்கும் அமிருதத்தை முருகன் வழங்குகிறான். பிறப்பு நம் முடைய தீய வினையினால் வருவது. வினை ஒரு நிலையில் கட்டுப்படாமல் திரிகின்ற மனத்தினால் விளைவது. ஒரு நிலைப் படாமல் திரிகின்ற மனத்தைக் கட்டுப்படுத்தியவன் மிகப் பெரியவன்.

"நிலையில் திரியா தடங்கியான் றோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்கிறார் வள்ளுவர். மலை கொஞ்சங்கூட அசையாமல் இருக் கிறது. அதைக் காட்டிலும் பெருமை உடையவன், ஆண்டவன் திருவருள் ஒன்றையே பற்றிக்கொண்டு மனம் ஆடாமல் ஓடாமல் அசங்காமல் இருக்கும் இயல்பைப் பெற்றவன்.

மனம் நிலைபெறுதல்

நின்ற இடத்திலேயே நிலைத்து இருக்கும் ஒன்று ஆடாமல் அசங்காமல் இருக்கிறது என்பது ஆச்சரியமா? ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து ஓர் இடத்தில் வைத்து விட்டால் நீர் அப்படியே அசங்காமல் இருக்கிறது. ஒருவன் தன் தலையில் நீர் நிரம்பிய பாத்திரத்தை வைத்துக் கொண்டு ஓடுகிறான். அந்தப் பாத்திரத் திலுள்ள நீர் அப்போது அசங்காமல் இருந்தால் அதுதான் ஆச்சரியம் அல்லவா? அப்படி ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கும் மலை சலிக்காமல் இருப்பதில் பெருமை என்ன? மற்ற மற்ற மக்களைப் போலவே ஒருவன் தினப்படி வேலை செய்கிறான்; மனைவி மக்களோடு வாழ்கிறான்; சாப்பிடுகிறான். ஆனால் அவன் உள்ளம் மலையைப்போலவே நிலைத்து இருக்குமானால் அவன் மலையையும்விடப் பெருமை உடையவன் அல்லவா?

அப்படி மலைபோல் நிலைத்து இருக்கும் மனம் இல்லாமல் எத்தனை மக்கள் திரிகிறார்கள்! திரியாமல் வீட்டில் ஒரே இடத்தில்தான் உட்கார்ந்திருக்கிறான் என்று வைத்துக் கொள் வோம். அப்போது அவன் உடம்பு திரியவில்லை. ஆனால் அவன் உள்ளம் அலைகிற அலைச்சலுக்கு முடிவே இல்லை. நோய்

வாய்ப்பட்டிருக்கும் ஒருவன் படுத்த படுக்கையாய்த்தான் கிடக்கிறான். ஆனால் அவன் மனம் எங்கு எங்கெல்லாம் சுற்றித் திரிகிறது! ஒரு நிலையில் நிலைத்து இருக்கிறதா? தூங்குகிறோம். உடம்பு கட்டையாகக் கிடக்கிறது. ஆனால் சொப்பனத்திலே எங்கெங்கோ நம் மனம் சுற்றிச் சுற்றித் திரிகிறது. ஆகவே உடம்பு அசையாமல் இருக்கிறவர்கள் எல்லாம் ஒரே நிலையில் இருப்பவர்கள் என்று சொல்ல முடியாது.

சதாசிவப் பிரம்மேந்திர சரஸ்வதிகள் பெரிய ஞானி. அவர் எங்கும் தங்காமல் சுற்றிக்கொண்டே இருந்தார். உடல் ஓடிக் கொண்டிருந்ததே தவிர அவர் உள்ளம் ஒரே நிலையில் இருந்தது. சரீரம் உட்கார்ந்திருந்தும் உள்ளம் நமக்கு ஓடிக்கொண்டிருக்க, அவருக்கு உடல் ஓடிக்கொண்டிருந்தும் உள்ளம் நிலைத்து இருந்தது. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அவருடைய உள்ளம் எம்பெருமானின் திருவடியிலேயே நிலைத்து இருந்தது. உலகம் முழுவதும் சுற்றிச் சுற்றி வந்தாலும் அத்தகையவர் களுடைய உள்ளத்தின் நிலை மாறுவது இல்லை.

உதித்து உழல்வது

பிறக்கலாம். பிறப்பது தவறு அன்று. பிறந்தவன் இறக்கத் தான் வேண்டும். ஆனால் பிறந்து திரிகிறானே, மனம் ஒரு நிலைப்படாதவாறு உழல்கிறானே, அவன் தவறு இழைக்கிறான். பலவிதமான அழுக்குக்களை பூசிக்கொள்கிறான். உடம்பில் சேர்த்துக் கொள்கிற அழுக்கை நீரினாலே போக்கிக் கொள்ளலாம். ஆனால் உள்ளத்திலே பூசிக் கொள்கின்ற அழுக்கைப் போக்க வழி இல்லை.

''துணி வெளுக்க மண்ணுண்டு எங்கள் முத்து மாரியம்மா
தோல் வெளுக்கச் சாம்பருண்டு எங்கள் முத்து மாரியம்மா
மணிவெளுக்கச் சாணை உண்டு எங்கள் முத்து மாரியம்மா
மனம் வெளுக்க வழியில்லை எங்கள் முத்து மாரியம்மா''

என்று பாரதியார் பாடினார். மனத்தில் உள்ள மாசுகள் எல்லாம் நீங்க வேண்டுமானால் மனத்திலே இறைவனைக் கொண்டு வந்து வைக்க வேண்டும். அப்போதுதான் இன்பம் பெருகும். எம் பெருமான் உள்ளத்தில் வந்து அமர வேண்டுமென்றால் உழன்று

உழன்று திரிகிற மனம் நிலைக்க வேண்டும். மனம் நிலைக்கின்ற தன்மையே நமக்கு வரவில்லையே!

மூன்று தொழில்

பிறக்கிறோம், உழல்கிறோம், சாகிறோம். பிறந்து பிறந்து உழன்று சாகிற நம்மைக் காப்பாற்ற வேண்டுமென்றே ஆண்டவன் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். நாம் செய்கிற பாவங்களினாலே பிறக்கிறோம். பிறந்து உழல்கிறோம். உழன்று உழன்று இறக்கிறோம். பிறந்து உழன்று இறக்கிற நம்மை ஒழுங்குபடுத்த அவன் மூன்று மூர்த்திகளை நியமித்திருக் கிறான். ஒரு ஜில்லாக் கலெக்டருக்குக் கீழே இரண்டு மூன்று டெபுடி கலெக்டர்கள் வேலைகளைப் பகிர்ந்துகொண்டு செய்வது இல்லையா? அப்படிப் பிறப்புக்களை ஒழுங்குபடுத்தப் பிரம்மா, உழல்வதை ஒழுங்குப்படுத்த விஷ்ணு, இறப்பதைச் சரிக்கட்ட ருத்திரன் ஆக மூன்று மூர்த்திகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமே நம்முடைய பாவங்கள் தாம்.

''நீ வேறு, நான் வேறு'' என்று வேறுபடுத்திப் பார்க்கும் வரையில் மனம் ஒரு நிலைப்படாமல் திரிந்து கொண்டே இருக் கிறது. என்றைக்கு, ''நீ வேறு அல்ல, நான் வேறு அல்ல'' என்னும் மனோபாவம் வருகிறதோ அப்போது மனம் ஒன்றுபடுகிறது. நம் மனம் எந்த நிலையில் நின்று ஒன்றுபட்டாலும் அந்த நிலைக்கு இறங்கி நமக்கு அருள் செய்ய எம்பெருமான் ஓடோடி யும் வருவான்.

இறைவன் இறங்கி வருதல்

நமக்குத் தனிப்பட்ட ஆற்றல் இருந்தால்தான் எம் பெருமான் இருக்கும் நிலையை அடையமுடியும். அது மிகவும் அரிது. இறைவனே பெருங்கருணையால் நாம் இருக்கும் நிலைக்கு இறங்கி வருகிறான்.

மதுரையில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதப் பெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால்கொடுத்தார் என்று ஒரு திருவிளை யாடல் உண்டு. பன்றி ஒன்று குட்டிகளை ஈன்று இறந்து விட்டது. தாயின் பிரிவைச் சகிக்க மாட்டாமல் கதறிய பன்றிக் குட்டி

களுக்கு எம்பெருமான் தாய்ப்பன்றியாக உருவெடுத்துப் பால் கொடுத்தான் என்பது அந்த வரலாறு. எம் பெருமானின் கருணை எந்தக் கடை நிலத்திற்கும் இறங்கி வரும் என்பதை இந்தக் கதையினால் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

எம்பெருமான் கீழே இறங்குவதால் அவனுக்கு மாசு ஏற்படாதா எனச் சிலர் கேட்கலாம். ஒருவன் கிணற்றில் விழுந்து விட்டான். மற்றொருவன் அவனைத் தூக்கக் கிணற்றிலே குதிக் கிறான். முன்னவன் விழுந்ததும், பின்னவன் விழுந்ததும் ஒன்றா குமா? முன்னவன் தற்கொலை செய்து கொள்ள வேண்டு மென்றோ, கிணறு இருக்கிறது என்று அறியாமையினாலோ விழுந்திருக்கலாம். பின்னவன் அவனைக் காப்பாற்ற வேண்டு மென்ற கருணையினால் விழுகிறான். அப்படி நாம் இருக்கும் கடை நிலைக்கு எம்பெருமான் இறங்கி வந்தாலும் நம்மைப் போல அவன் மாசுபட மாட்டான். தன்னுடைய கருணை மிகுதி யினாலே அவன் இறங்கி வருகிறான்.

நமக்காக உத்தியோகம் பார்க்கும் மூன்று மூர்த்திகளுக்கு வேலை இல்லாமல் போகக் கூடாதே என்றோ என்னவோ நாம் பலவிதமான பாவங்களைச் செய்து பிறந்து, உழன்று, செத்துக் கொண்டே வருகிறோம். முடிவில்லாப் பிறவிக் கடலில் ஆழ்ந்து, எல்லையில்லாத் துன்பத்தை அநுபவித்து வருகின்ற நமக்கு உய்வு அருளித் தேவர்களுக்குக் கிடைக்காத அமிருதத்தை ஊட்டி நம்மைப் பிறக்காமல், உழலாமல், சாகாமல் செய்கின்ற ஒருவன் இருக்கிறான். அவனுடைய செயல், தேவர்களுக்கு மாத்திரம் அமிருதம் கொடுத்த செயல் போன்றது அல்ல. ஏதோ ஒரு காலத் தில் கொடுப்பான் என்பதும் அன்று. நேற்றைக்கும் கொடுத்தான்; இன்றும் கொடுக்கிறான்; நாளைக்கும் கொடுப்பான். யாருக்கும் கொடுப்பான். ஆயிரம் பேராக வந்து, வரிசையாக உட்கார்ந்தால் தான் கொடுப்பேன் என்று பிகு பண்ணிக் கொள்பவன் அல்ல. ஒருவன் வந்தாலும் கொடுப்பான்; பலர் வந்தாலும் அருள்வான். வேண்டுகிற பேர்களுக்கு வேண்டிய வண்ணம் கொடுப்பான். தேவர்களுக்கு அமிருதம் கொடுத்துப் பழகிய மாமாவின் மருகன் ஆகிய அவன் உலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு நிரதிசய இன்பத்தை அளிக்கும் அருளாகிய அமிருதத்தை வேண்டும்போது கொடுக்கும் வள்ளலாக இருக்கிறான்.

காலம் உண்டோ?

''அப்பனே, இதோ கையை நீட்டுகிறேன். கொஞ்சம் பாரேன். நானும் பிறந்து, உழன்று, இறந்து கொண்டிருக்கும் இனத்தைச் சேர்ந்தவன்தான் அப்பா. உதித்து ஆங்கு உழல்வதும் சாவதும் தீர்த்து எல்லோரையும் ஆண்டு கொள்ளும் வள்ளலே, எனக்கு உன் அருள் கிடைக்குமா? கிடைக்குமானால் அது எந்தக் காலம் என்று கொஞ்சம் சொல்லமாட்டாயா?'' என்று கேட்பதைப் போல இந்தப் பாட்டிலே பாடுகிறார். மரத்தடியில் உட்கார்ந் திருக்கும் சோதிடனிடத்தில் கை நீட்டிப் பலன் கேட்பவரைப் போலக் கேட்கிறார்.

உதித்தாங்கு உழல்வதும் சாவதும் தீர்த்தெனை உன்னிலொன்று விதித்து ஆண்டு அருள் தரும் காலம் உண்டோ?

''நீ வந்து என்னை ஆண்டருள மாட்டாயா?'' எனக் கேட்க வில்லை. 'அவன் அருள் கிடைக்க வேண்டுமென்றால் நமக்கு நல்ல காலம் வரவேண்டுமே; மனப் பக்குவம் ஏற்பட வேண்டுமே' என்று எண்ணி, ''நீ வந்து ஆண்டருளும் காலம் எனக்கு உண்டா அப்பா?'' என்று கேட்கிறார்.

அவன் அருளாகிய அமிருதத்தை வழங்குவான் என்று அருணகிரிநாதருக்குத் தெரியும். காரணம் அவன் எந்தக் குடும்பத் தில் வந்திருக்கிறான்?

வெற்பு நட்டு உரக
பதித்தாம்பு வாங்கி நின்று அம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான்

ஆகிய திருமாலுக்கு மருகன் அவன்.

வெற்பு நட்டு.

மேருகிரியாகிய மலையைப் பாற்கடலுக்குள் நட்டு மத்தாக வைத்துக் கொண்டார்கள்.

உரகபதித் தாம்பு வாங்கி நின்று.

உரகபதி – நாகங்களுக்குத் தலைவன். ஆதிசேஷன் என்பாரும் உண்டு; வாசுகி என்பாரும் உண்டு. பாம்புகளுக்குத் தலை வனாகிய வாசுகியைக் கயிறாக வாங்கி இழுத்தார்கள்.

அம்பரம் பம்பரம் பட்டுழல.

ரெயில்வண்டி போகிற வேகத்திலே கீழே கிடக்கும் பொருள் கள் எல்லாம் பறக்கின்றன. அப்படி மேரு கிரியை மத்தாக வைத்து, உரகபதியாகிய வாசுகியைக் கயிறாகக் கொண்டு பாற் கடலைக் கடைந்த வேகத்திலே, அம்பரம் ஆகிய ஆகாசம் பம்பரம் போலச் சுழன்றது.

மதித்தான் திருமருகா!

மதித்தல் – கடைதல். அப்படிக் கடைந்தவன் திருமால். அவனுடைய அருமையான மருகன் முருகன். அவனைப் பார்த்து வேறு ஓர் அமுதத்தைக் கேட்கிறார். "அப்பனே, எனக்கு உன் னுடைய அருளாகிய அமிருதம் கிடைக்கும் காலம் உண்டா?" என்று கேட்கிறார்.

ஒட்ட வைத்தல்

பாற்கடலில் இருந்து வந்த அமிருதம் யாரையாவது ஒட்ட வைத்ததா? அமிருதம் வருவதற்கு முன்பும் சண்டைதான். அது வந்த பிறகும், "எனக்கு, உனக்கு?" என்ற சண்டைதான். அமிருதத்தை வழங்கும்போதாவது திருமால் அசுரர், தேவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரையும் சேர்த்து வைத்துக் கொடுத்தாரா? அசுரர்களையும் தேவர்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்துத் தேவர்களுக்கு வழங்கினார். அசுரர்களுக்கு அந்த அமிருதம் ஒட்டவில்லை. முருகன் வழங்குகின்ற அமிருதம் அப்படிப்பட்டது அன்று. "நீயும், நானும் ஒட்டிக் கொள்ளும்படி செய்யுமே, இந்த அமிருதம்" என்கிறார் அருணகிரியார்.

உதித்தாங்கு உழல்வதும் சாவதும் தீர்த்தெனை
உன்னில் ஒன்றாய்
விதித்து ஆண்டு அருள்தரும்.

உதித்து – பிறந்து. ஆங்கு உழல்வதும் – உலகத்திலே சதா உழன்று ஒரு நிலைப்பட்டு நில்லாமல் திரிவதும். சாவதும் – மரணம் அடைவதும். தீர்த்து – இல்லாமல் ஒழித்து. பிறப்பிப்பது பிரம்மாவின் தொழில். உழலச் செய்வது திருமாலின் செயல். சாகச் செய்வது ருத்திரன் வேலை. இந்த மூன்று மூர்த்திகளும் நம்பால் வேலை இல்லாமல் செய்வான்.

என்னை உன்னில் ஒன்றாய் விதித்து.

'நான் வேறு, நீ வேறு என்று வேறுபடுத்தாமல், என்னையே உன்னில் ஒன்றாகக் கலந்து, ஒன்றுபட விதிக்க வேண்டும்.'

ஆண்டு அருள் தரும் காலம் உண்டோ?

''அப்படி ஆண்டு, அருளாகிய அமிருதத்தைத் தருகின்ற காலம் உண்டா?'' என்கிறார் அருணகிரியார்.

பாற்கடலில் பிறந்த அமிருதம் தேவர்களையும் அசுரர்களையும் வேறு படுத்தியது போல் அல்லாமல் எம்பெருமான் வழங்கும் அருள் அமிர்தம், ''நான் வேறு, நீ வேறு'' என்ற வேறுபாட்டுணர்வையே போக்கிவிடும். இரண்டு என்பதே இல்லாமல் அவனுக்குள்ளே நாம் அடங்கிவிடுவோம். எம் பெருமானுக்குள் ஒன்றாகவே கலந்து விடுகின்ற தன்மை உண்டாகிவிடும்.

''இறவியொடு பிறவிஅற நீயும் நானுமாய்
ஏகபோகமாய் இறுகும்வகை பரமசுக மதனை அருள்''

என்று திருப்புகழில் சொல்வது போலவே, இங்கே,

உன்னில் ஒன்றா விதித்து ஆண்டு அருள் தரும்
காலம்உண்டோ?

என்று கேட்கிறார்.

எம்பெருமான் அருளென்னும் அமிருதத்தை வழங்கவே காத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே, ''தரமாட்டாயா?'' என்று கேட்கவில்லை. ''எனக்குக் கிடைக்கிற காலம் உண்டா?'' என்று கேட்கிறார். வினாவாகக் கேட்டாலும் இங்கே, ''கிடைக்கிற காலம் உண்டு'' என்கிற பொருளையே கொடுக்கும். நம் வீட்டிற்குள் வருகிற ஒருவர், ''என்ன ஐயா, இன்றைக்கு உங்கள் வீட்டில் சாப்பாடு உண்டா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தால், ''இல்லை'' என்றா சொல்லி அவரைப் போகச் செய்கிறோம்? அவர்தாம் போவாரா? ''உங்கள் வீட்டுக்கு வந்து விட்டேன்; சாப்பாடு போடுங்கள்'' என்கிற பொருளில் தானே, அவர், ''சாப்பாடு உண்டா?'' என்று கேட்கிறார்? அதுபோல, ''அருள் தரும் காலம் உண்டோ?'' என்று கேள்வியாக இருந்தாலும், ''அருள் தரும் காலம் உண்டு. நீ தரத்தான் வேண்டும். நான் பெறத்தான் வந்திருக்கிறேன்'' என்று பொருள்படும். அது

மாத்திரம் அல்ல. ''மேரு மலையை மத்தாகக் கொண்டு, வாசுகியைத் தாம்பாக வைத்து, அம்பரம் பம்பரம் பட்டுழலப் பாற்கடலைக் கடைந்தவனுடைய மருகன் நீ'' என்று சொல்லும் போதே, ''மாமாவைப் போல நீயும் எனக்கு அமிருதம் வழங்கத் தான் வேண்டும்; உன் அருளாகிய அமிருதத்தை வழங்கு'' என்று கேட்பதாகவே ஆகும்.

மாணிக்கம்

பாற்கடலைக் கடைந்த திருமாலுடைய மருகன் எப்படி இருக்கிறான்?

மயில் ஏறிய மாணிக்கமே!

சாவுக்குக் காரணமான விஷத்தைப் போக்க அமிருதத்தை உண்ண வேண்டும். விஷத்தைத் தருவது பாம்பு. அதற்கு விரோதி கருடனும், மயிலும். மயில் மேல் எழுந்தருளியிருக்கும் முருக வேளின் திருவுருவப் படங்களைப் பார்த்திருக்கிறீர்களே; அப் படங்களில் எம்பெருமான் வாகனமாகிய மயில் தன் காலின் கீழே பாம்பை மிதித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். நஞ்சு தரும் பாம்பை மயில் மிதித்துக் கொண்டிருக்கிறது. எம்பெரு மானின் திருவடி படவேண்டும் என்பதுகூட இல்லை. எம்பெரு மானின் வாகனமாகிய மயிலின் அடி பட்டாலே போதும்; நஞ்சு கக்கும் பாம்பு சுருண்டு தன் ஆற்றலை இழந்து விடுகிறது. ஐந்து தலைகளை உடையது அந்த நாகம். மனம் என்பதும் ஒரு நாகந்தான். ஐந்து பொறிகளாகிய தலைகளை உடையது அது. அது நஞ்சைக் கக்குகிறது. ஐந்து தலைகளாகிய ஐந்து இந்திரி யங்களை வைத்துக் கொண்டு இந்த நாகம் ஆகிய மனசு நஞ்சைக் கக்குகிறது. அதனால் துன்பம் உண்டாகிறது.

நாகமும் நஞ்சும்

நாகம் நஞ்சை மாத்திரம் கக்காது. மாணிக்கமும் அதனிடத் திலிருந்துதான் உண்டாகிறது. நாகம் நஞ்சைக் கக்காமல் நெடுங் காலம் பாதுகாத்து வைத்திருந்தால் அந்த நஞ்சே, இறுகி மாணிக்க மாகிறது என்று சொல்வார்கள். நமது மனமாகிய நாகமும், ஐந்து இந்திரியங்களின் வழியாக நஞ்சைக் கக்காமல் இருந்தால், நஞ்சே

மாணிக்கமாகிறது. நமது மனம் நமக்குத் தீங்கு விளைப்பதற்கு மாறாக நன்மையையே உண்டாக்கும். நஞ்சைக் கக்கும் நிலையில் இருந்தால் நெஞ்சு பொல்லாததாக இருக்கும். ஐந்து பொறி களாகிய வாயின் வழியே நஞ்சைக் கக்காமல், உள்ளே அதையே மாணிக்கமாக இறுக வைத்து விட்டால் நம் நெஞ்சே நமக்கு நல்லதாக இருக்கும். ஐந்து தலை நாகத்தை நஞ்சு கக்காமல் அமிழ்த்தி வைத்திருப்பது மயில். உலகத்தின் மாயையிலே சிக்கி, மையல்பட்டு, ஐந்து தலைகளாகிய ஐந்து பொறிகளின் வாயிலாக நஞ்சைக் கக்காமல் மனமான நாகம் அமிழ்ந்து கிடக்கும்படியாக எம்பெருமானின் மயில் வாகனம் நம் உள்ளத்திலே வந்து விட்டால் போதும். நஞ்சு கக்குகின்ற இடமாகிய மனத்திலேயே மாணிக்கமாகிய முருகன் வந்து விடுவான்.

மயில்

கீழே பார்க்க வேண்டாம். பார்த்தால் மயிலின் காலடியில் சிக்கிக் கிடக்கின்ற பாம்பின் படத்தைக் கண்டு பயம் தோன்றும். நிமிர்ந்து நேரே பார். நீலவண்ண மயில் தோன்றும். உன் பார்வை ஆரோகண கதியில் செல்லட்டும். மறுபடி மேலே பார். நீலவண்ணத்துக்கு மேலே செக்கச்செவேல் என்று ஒளிவிடுகின்ற மாணிக்கம் தோன்றும். பச்சை வண்ணத்துக்கு மேலே தெரிகின்ற மாணிக்கத்தின் பெருமையை, கருணை மிகுதியை, பச்சை வண்ண முடைய மயிலே உனக்குத் தெரிவிக்குமே! ''எம் பெருமானுக்கு விரோதியாகிய சூரனாக நான் இருந்தேன். எம்பெருமானை எதிர்த்தே போரிட்டேன். இருந்தும் அந்த மாணிக்கப் பெருமான் தன்னுடைய கருணை மிகுதியாலே என்னை ஆட்கொண்டு விளங்க வைத்தார்; என்னை அழிக்க வில்லை பார்'' என்று அது சொல்லுமே. அத்தகைய மயிலேறிய மாணிக்கத்தைப் பார்த்து, ''என்னை உன்னோடு சேர்த்துக் கொள்ளும் காலம் உண்டோ?'' என்று கேட்கிறார் அருணை முனிவர்.

உதித்தாங்கு உழல்வதும் சாவதும்
    தீர்த்தெனை உன்னில்ஒன்றா
விதித்துஆண்டு அருள்தரும் காலம்உண்
    டோவெற்பு நட்டுஉரக

பதித்தாம்பு வாங்கிநின்று அம்பரம்
பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு கா!மயில்
ஏறிய மாணிக்கமே!

(உலகில் பிறந்து அங்கே திரிவதையும் சாவதையும் போக்கி என்னை உனக்குள் கரைந்துவிடும் ஒன்றாக அமைத்து, ஆண்டு கொண்டு அருள் தரும் காலம் ஒன்று உண்டோ? மந்தர மலையை மத்தாக நட்டு, பாம்பரசனாகிய வாசுகியென்னும் கயிற்றை இழுத்து நின்று, ஆகாசம் பம்பரம் போன்ற நிலையை அடைந்து சுழலப் பாற்கடலைக் கடைந்த திருமாலின் அழகிய மருமகனே! மயில் மேல் எழுந்தருளிய மாணிக்கம் போன்றவனே!

ஆங்கு - அப்படியே என்றும் கொள்ளலாம். உன்னில் ஒன்றா விதித்து ஆண்டு அருள் தருதல் என்பது அத்வைத முத்தியை அருளுவதைக் குறித்தது. உரகபதி - அரவரசன். வாங்கி - இழுத்து. அம்பரம் - ஆகாசம். மதித்தான் - கடைந்தவன்.)

அழிந்த எழுத்து

இறைவனுடைய திருவருட் பெருமையை மக்கள் எல்லோரும் உணர்வதற்கு, அவனுக்கு அலங்காரம் செய்து எழுந்தருளச் செய்வது உலகினர் வழக்கம். உள்ளே இருக்கிற சிறிய மூர்த்திக்கு எவ்வளவு பெரிய கோயில்களை இந்த நாட்டில் கட்டியிருக்கிறார்கள்! வாகனம், தேர் முதலியவைகளின் மேல் ஆண்டவனுக்கு மிக்க அலங்காரம் பண்ணி ஊர்வலமாக எழுந்தருளச் செய்வதும் மக்களுடைய உள்ளத்தை அவன் பக்கம் ஈர்க்க வேண்டுமென்பதற்காகச் செய்யும் விளம்பரமே. பொருள் எத்தனை உயர்வுடையதாக இருந்தாலும் அதற்கும் விளம்பரம் வேண்டுமென்ற யுகத்தில் நாம் இன்று வாழ்கிறோம். பொல்லாத சரக்குகளுக்குக்கூடப் பெரிய விளம்பரங்கள் செய்து நம்மை மதி மயங்க அடித்து விடுகிறார்கள், இந்த இருபதாம் நூற்றாண்டில். ஆனால் பழங் காலத்தில் நல்ல பொருள்களுக்குத்தான் விளம்பரம் செய்தார்கள். எல்லோரும் அவற்றை நுகர வேண்டுமென்ற நினைப்பினால், ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று விளம்பரம் செய்தார்கள். இறைவனுக்கு உருவம் கொடுத்து, அவ்வுருவம் நம் மனதில் நன்றாகப் பதிய வேண்டுமென்ற கருத்தோடு அலங்காரம் செய்து காட்டினார்கள். தம் பெண்ணை நல்ல மாப்பிள்ளை கைக்கொள்ள வேண்டுமென்ற கருத்தால் நல்ல நல்ல அபரணங்களால் அலங்காரம் செய்து நிறுத்தும் தாயைப் போல, ஆண்டவனுடைய திருவருளினால் இன்ப அநுபவங்களைப் பெற்ற நம் நாட்டுப் பெரியோர்கள் மற்றவர்களும் அவனைப் பற்றுக் கோடாகக் கொண்டு இன்பங்களைத் துய்க்க வேண்டுமென்ற பேராவலோடு அவனுக்கு அலங்காரம் செய்தார்கள்.

பா அலங்காரம்

அப்படிப் பண்ணுகிற அலங்காரங்கள் சில காலமே இருக்கும். மலர், ஆடை, நகை முதலியவைகள் எல்லாம் ஒரு கால

எல்லைக்குள் அடங்கியவைகளே. பண்ணின அலங்காரம் மங்காமல், மறையாமல் ஒளி வீசிக் கொண்டிருக்க கூடிய வண்ணம் தமிழ்ச் சொல்லால் அலங்காரம் செய் என்று ஆண்டவனே அர்ச்சனை பண்ணுகின்ற ஒரு குருக்கள் ஐயாவினுடைய குழந்தையைப் பார்த்துக் கூறினான். பல மலர்களால் நாள்தோறும் பூசை செய்யும் கடமையை மேற்கொண்ட சுந்தர மூர்த்தி நாயனாரிடம், "அர்ச் சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" என்று சேக்கிழார் பாடுகிறார்.

சுந்தரருடைய திருவாக்கினாலே சூட்டப்படுகின்ற நல்ல சொல் மலர் மாலையை அணிந்து கொள்ள வேண்டுமென்று ஆண்டவன் விரும்பினான். அந்த மாலை அந்தக் காலத்தில் மட்டும் மணத்தைத் தருவதோடு நில்லாமல் எல்லாக் காலத்திலும் மணத்தைத் தரக்கூடியது. வேறு வேறு காலத்தில் வருகின்றவர்கள் யார் யார் படித்தாலும் அவர்கள் உள்ளம் நைந்து உருகச் செய்வது.

அருணகிரியார் செய்தது

ஆகையால் மலர் மாலைகளால் எம்பெருமானுக்கு அலங் காரம் செய்வதைவிடச் சொல் மாலைகளால் அலங்காரம் பண்ணி மக்களுடைய உள்ளத்தில் இறைவனது நினைவைப் பதியச் செய்யலாம் என்று நினைத்தார் அருணகிரிநாதப் பெருமானும். அந்த நினைவில் எழுந்த சொல்வளம் மிக்க மாலைதான் கந்தர் அலங்காரம். அந்தச் சொல் வளத்தையும் ஆண்டவன் அருளாலேயே அவர் பெற்றிருந்தார்.

"அருணதள பாத பத்மம் அதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா"

என்று திருப்புகழில் பாடுகிறார். ஐந்து இலக்கணங்களும் பொருந்திய அழகான தமிழை, தமிழுக்குத் தலைவனாக விளங்கும் முருகப் பெருமான் உலகத்திற்கு வழங்கினான். சிவபெருமானிடத்தி லிருந்து அகத்தியர் நேரே தமிழைக் கற்றாலும், அவருக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்தவன் குமார நாயகன். அது மாத்திரம் அன்று. சங்கத்திலே தலைமைப் புலவராக வீற்றிருந்த நக்கீரர் எழுதிய இறையனா ரகப்பொருள் உரையே சிறந்த உரை

என்பதை நீதிபதியாக இருந்து நிறுவினவன் முருகன். இப்படிப் பல வகையாலும் தமிழை ஒளிமிக்கதாக அவன் வளர்த்ததற்குக் காரணம் தன் அழகிய பாதத்தைத் தமிழிலே பாடவேண்டுமென் பதற்காகத்தான். ஆகையால் அருணகிரியார் அழகிய பெருமானை அழகான தமிழால் அலங்காரம் செய்தார். சொல்லாகிய வாடா மலர்களால் தொடுத்த அலங்கார மாலையைச் சூட்டி அப்பெரு மானின் திருவருள் எல்லார் உள்ளங்களிலும் பதிவு பெறும் வண்ணம் செய்தார்.

2

பிள்ளைத் தமிழ்

ஆண்டவனுக்குச் சொல் மாலைகளால் அலங்காரம் செய்யும் போது, தமிழில் எத்தனை வகையான அழகுகள் உண்டோ அத்தனை வகைகளாலும் அலங்காரம் பண்ணிக் களிப்பார்கள் புலவர்கள். பெரிய கடவுளையும் சிறு குழந்தையாகப் பாவித்து வர்ணித்துப் பாடுகின்ற சிறுநூலுக்குப் பிள்ளைத் தமிழ் என்று பெயர். முருகப் பெருமானைக் குழந்தையாகப் பாவிக்க வேண்டிய அவசியம் இல்லை. என்றென்றைக்கும் அவன் குழந்தைதானே? அவனுடைய திருமேனிக்கு அலங்காரம் பண்ணும்போது குழந்தை யின் திருவிளையாடல்கள் பலவற்றையும் பாடுகிறார். அத்தகைய பாடல்களை முன்னாலே பார்த்தோம். சரவணப் பூந்தொட்டிலில் ஏறிப் பாலுக்காக அறுவர் கொங்கை விரும்பி விம்மி விம்மி அழுகின்ற குழந்தையாகப் பார்த்தோம். அப்புறம் கிண்கிணி ஓசை படத் திடுக்கிட்டு அரக்கர் வெருவரத் திக்குச் செவிடுபட்டு எட்டு வெற்பும் கனகப் பருவரைக் குன்றும் அதிர அசைந்த அழகைப் பார்த்தோம். அதற்கு அப்பால் எம் பெருமான் எழுந்து உட்கார்ந்து கொண்டு பன்னிரண்டு கைகளையும் சேர்த்துச் சப்பாணி கொட்டும் ஷண்முகநாதனாக விளங்குவதைப் பார்த்தோம்.

சிற்றிற் பருவம்

இப்போது அவன் தளர் நடை போடுகிறான். அவனுடைய சின்னஞ்சிறு திருவடி பட்ட மாத்திரத்திலே என்ன அற்புதம் நிகழ்ந்தது என்பதை இந்தப் பாட்டிலே சொல்ல வருகிறார்.

பிள்ளைத் தமிழிலே ஆண்பாலைப் பற்றிச் சொல்லும் போது சிற்றில் பருவம் என்று ஒரு பருவம் வரும். கிராமங்களிலே உள்ள தெருக்களில், கார் வராத வீதியில், தார் போடாத திரு வீதியில், சின்னஞ்சிறு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கும். இளமைப் பருவத்தில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தை களும் சேர்ந்து விளையாடினாலும் அந்த விளையாட்டிலும், ஆணுக்கு ஆணின் இயல்பும், பெண்ணுக்குப் பெண்ணின் இயல்பும் வெளிப்படுவதைப் பார்க்கலாம். வீதியிலே கிடக்கும் மண்ணைப் பெண் குழந்தைகள் சிறு சிறு செப்புகளிலே எடுத்து வைத்துக் கொண்டு சோறு சமைப்பதாகவும், அந்தச் சோற்றைத் தன் கணவனுக்கும் குழந்தைக்கும் போடுவதாகவும் பாவித்து விளையாடும். இது பெண் குழந்தைகளுடைய இயற்கை. வீடு கட்டுவதும் அப்படித்தான். மண்ணைக் குவித்து வீடாகக் கட்டி அதற்குத் தன்னைத் தலைவியாகப் பாவித்துக் கொண்டு மணற் சோறு ஆக்கும். அக்குழந்தைக்குக் கணவனாக இருந்து விளையாடும் ஆண் பிள்ளை, பொருள் சேகரித்து வர வெளியே போகிறவனைப் போல அப்பால் சென்று நிற்பான். திடீர் என்று ஓடி வந்து தன்னுடைய காலினாலே அப்பெண் குழந்தை கட்டியிருக்கும் மணல் வீட்டைச் சிதைப்பான். ''டேய், டேய், இந்தச் சிற்றிலைச் சிதைக்காதேயடா'' என்று சொல்வாள் பெண் குழந்தை. அப்படிச் சொல்வது போன்ற பாவனையில், ''அடியேம் சிற்றில் சிதையேலே'' என்று பாடிச் சிற்றில் பருவத்தை அமைப்பார்கள்.

காலால் அழித்தல்

இந்தச் சிற்றிற் பருவம் அருணகிரியாருக்கு நினைவு வந்தது. மற்றக் குழந்தைகள் எல்லாம் பாதையில் இருக்கிற சிற்றிலைச் சிதைப்பார்கள். முருகப் பெருமானோ உயிருக்கு இல்லாகிய உடம்பை வராமல் செய்து பிறப்பையே அழித்து விடுகிறவன்.

அவன் ஒன்றை அழித்து விளையாடுகிறவன். எதை அழிக் கிறான்? மண்டை ஓட்டின் மேல் எழுதப்பட்ட எழுத்தை அழிக் கிறானாம். மற்றக் குழந்தைகள் பெண்களின் உள்ளத்திலே கவலை உண்டாக்குவது போல அவன் அழிக்கவில்லை. கவலைப் படுகிற மக்களின் துன்பங்களுக்குக் காரணமான தலை எழுத்தையே அழித்து, முத்தி இன்பத்தை வழங்குகிறான்.

அவன்
கால்பட்டு அழிந்ததுஇங்கு என்
தலைமேல் அயன் கையெழுத்தே

என்று பாடுகிறார்.

எழுதின பிள்ளை

தலையின்மேலே எழுதித் தொலைக்கின்ற அந்த அயன் யார்? திருமாலின் பிள்ளை. "திருமாலின் பிள்ளையாகிய அயன் என் தலைமேலே கையால் எழுதிய எழுத்தைச் சிவபெருமான் பிள்ளையாகிய முருகன் தன் காலால் அழித்து விட்டான். ஒரு பிள்ளை கையாலே எழுதிய எழுத்தை இந்தப் பிள்ளை காலாலே அழித்தான்" என்று சொல்கிறார் அருணகிரியார்.

ஒரு வைஷ்ணவப் பக்தர் திருமாலிருஞ் சோலைமலையில் உள்ள திருமாலிடத்தில் முறையிட்டுக் கொள்கிறார். "அழகா, உன் பிள்ளை பண்ணுகிற அக்கிரமம் சொல்லொணாதது. உன் குடும்பத்திலே ஒரு மகனாகப் பிறந்து, நாலு தலை படைத்திருக்கிறானே, அவனுக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்க வேண்டாமா? உன் குடும்பத்திலே பிறந்த மகிமையினாலே எல்லா வேதங்களையும் சொல்கிறான். இருந்தும் அவன் என்ன பண்ணுகிறான் தெரியுமா?" என்று சொல்ல ஆரம்பிக்கிறார்.

நம் வீட்டில் ஒரு குழந்தை இருக்கிறது. அது நன்றாகப் படிக்க வேண்டுமென்று பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்கிறோம். பலகை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பாடத்தைப் பலகையிலே எழுதினால் நமக்குக் குழந்தையிடம் ஆசை வளர்கிறது. ஆனால் அந்தக் குழந்தை கரித் துண்டை எடுத்துக் கொண்டு சுவரிலே எழுதினால் நமக்குக் கோபந்தான் வரும்.

அதைப் போலப் பிரமா என்ற குழந்தை இருக்கிறதாக அந்த பக்தர் அழகரிடம் முறையிடுகிறார். "அழகா, உன் பிள்ளை பண்ணுகிற அக்கிரமத்தைப் பார்த்தாயா? மென்மையான இடத்திலே அரி என்று எழுதத் தெரியவில்லை. வன்மையான இடத்தில் எது எதையோ கிறுக்கித் தள்ளுகிறானே. இது நியாயமா?" என்று கேட்கிறார்.

''மலைக்குமேல் மலைவிளக்காம் அழகா! வேத
வான்குதலை நான்குதலை மகனார் வாளா
தலைக்குமேல் எழுதுகின்றார்''.

''மலைக்குமேல் விளக்குப் போட்டாற்போல இருக்கும் அழகா, உன் பிள்ளையாண்டானைப் பற்றி என்ன சொவ்வது? அவன் உளறினாலும் அது வேதமாக இருக்கிறது. வேதத்தை மழலைப் பேச்சிலே சொல்கிறான். உன் பிள்ளையாகப் பிறந்ததனால் இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது.''

''வேத வான்குதலை நான்குதலை மகனார்''

என்று தொடங்குகிறார்.

ஒரு பெரிய உத்தியோகஸ்தர். அவருக்கு ஒரு சிறிய பிள்ளை; மிகவும் துஷ்டப் பிள்ளை. வீட்டு வேலைக்காரனைக் காலாலும் கையாலும் உதைக்கிறான். வேலைக்காரனுக்கு மிகக் கோபம் வருகிறது. வீட்டு எசமானரின் குழந்தையாகையால் அக்குழந் தையைத் திருப்பி அடிக்க மனம் துணியவில்லை. வேகமாகப் போய் எசமானரிடமே முறையிட்டுக் கொள்கிறான். ''சாமி, சின்ன எசமானார் காலாலும் கையாலும் என்னை உதைக்கிறார்'' என்று சொல்கிறான். அந்தக் குழந்தையிடம் அவனுக்குக் கோபம் இருந்தாலும், ''அவன் உதைக்கிறான்'' என்று சொல்லாமல், ''சின்ன எசமானர் உதைக்கிறார்'' என்று மரியாதையாகச் சொல் கிறான். அந்தக் குழந்தைக்காக இல்லாவிட்டாலும், அதைப் பெற்ற தன் எசமானருக்கு மரியாதை கொடுக்கத்தானே வேண்டும்?

அப்படி இந்தப் பக்தர் சோலைமலை அழகரிடம் ''உன் னுடைய மகனார் இன்னது செய்கிறார்'' என்று சொல்கிறார்.

''வாளா
தலைக்குமேல் எழுதுகின்றார் அரி என்று எங்கள்
தாலத்தின் மேல்எழுதச் சமர்த்தி லாரோ?''

உடம்புக்குள்ளேயே மிகவும் வன்மையான பொருள் மண்டை ஓடு. மிகவும் மென்மையானது நாக்கு. ''எல்லா வேதங்களையும் நன்கு தெரிந்து கொண்டிருக்கிற இந்தக் குழந்தை மிகவும் மென்மையான என் நாக்கிலே எழுதக் கூடாதா?'' என்று கேட் கிறார். தாலம் நாக்கு. தாலம் என்பதற்குப் பனை என்றும் ஒரு பொருள் உண்டு. ''ஓட்டிலே எழுதுகிறானே; அரி என்று

ஏட்டிலே எழுதக் கூடாதா?'' என்று வேறு ஒரு பொருள் தோன்று கிறது. ''ஓட்டிலே எழுதாமல், ஏட்டிலே அரி என்று அரிச்சுவடி எழுதக்கூட உன் பிள்ளைக்குச் சமர்த்து இல்லையே!'' என்று முறையிடுகிறார்.

''மலைக்குமேல் மலைவிளக்காம் அழகா வேத
வான்குதலை நான்குதலை மகனார் வாளா
தலைக்குமேல் எழுதுகின்றார் அரியென் றெங்கள்
தாலத்தின் மேல்எழுதச் சமர்த்தி லாரோ?''

வாளா என்பதற்கும் இரண்டு பொருள் உண்டு. சும்மா என்றும் வாளைப் போலத் துன்புறுத்த என்றும் இரண்டு பொருள் கொள்ளலாம். ''ஒரு பயனும் இல்லாமல் சும்மா தலையிலே எழுது கிறானே!'' என்பது ஒரு பொருள். ''வாளைப்போல எங்களுக்குத் துன்பத்தைத் தர எழுதுகிறானே!'' என்பது மற்றொரு பொருள்.

தலை எழுத்து என்கிற விவகாரம் எப்போது வருகிறது என்று பாருங்கள். நமக்கு ஆயிரம் ரூபாய் வருகிறது; அல்லது நம் குழந்தை பரீட்சையில் தேர்ச்சி பெறுகிறான். ''எல்லாம் என் தலை எழுத்து'' என்று யாராவது சொல்வார்களா? தேர்தலுக்கு நிற்கிறார். லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கிறார். தோற்றுப் போகிறார். என்ன சொல்கிறார்? ''எல்லாம் தலை எழுத்து'' என்கிறார். நல்லது, கெட்டது எல்லாமே தலை எழுத்தினால்தான் விளைகின்றன என்றாலும் தலை எழுத்தைச் சொல்லும்போது துன்பங்களையே நினைப்பது வழக்கமாகி விட்டது.

தலை எழுத்து அழிந்தது

எல்லாத் துன்பங்களும் தலை எழுத்தால்தான் உண்டா கின்றன. தலை எழுத்தையோ மாற்ற முடியாது என்று சொல் கிறார்கள். அந்தத் தலை எழுத்துக்கு உட்பட்ட மக்களால் மாற்ற முடியாது. ஆனால் தலையிலே எழுதுகிறவனுடைய தலையிலேயே ஒரு குட்டுக் குட்டி அடையாளம் பண்ணின ஆண்டவனுக்கா தலை எழுத்தை மாற்ற முடியாது? ''அவன் என் தலை எழுத்தை அழித்து விட்டான்'' என்கிறார் அருணகிரியார்.

''இங்கு, வன்மையான என்னுடைய தலைமேல் அயன் அழுத்தி எழுதிய கையெழுத்து என்ன ஆயிற்றுத் தெரியுமா? எம்

பெருமான் திருவடி என் தலைமேல் பட்டது; அவ்வளவு தான்; அழிந்து போய்விட்டது. அயன் கையால் எழுதியதை எம்பெரு மான் காலாலே அழித்து விட்டான்'' என அலங்காரமாகச் சொல்கிறார்.

அவன்
கால்பட்டு அழிந்ததுஇங்கு என்தலை மேல்அயன்
கையெழுத்தே.

இங்கு – இந்த உலகத்தில்.

அழகு படுத்துதல்

எம்பெருமானின் திருவடி பட்ட மாத்திரத்திலே பிறவி போகும் என்ற கருத்தைச் சொல்ல வந்தவர் அலங்காரமாகச் சொன்னார். அதற்கு மேலும் அலங்காரம் செய்திருக்கிறார். எத்தனைக்கு எத்தனை ஒரு கருத்தைச் சுற்றிப் பல கருத்துக்களை விரிக்கிறோமோ அத்தனைக்கு அத்தனை அழகு அதிகமாகும். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வைரக்கல் வாங்கினாலும் இரு பத்தைந்து ரூபாய் தங்கமாவது வாங்கி வைரத்தை அதன் நடுவில் வைத்துக் கட்டித்தானே போட்டுக் கொள்கிறார்கள் மக்கள்? இலைக்கு நடுவிலே வைக்கப்படுகிற சோறு கொஞ்சமாக இருந் தாலும் அதைச் சுற்றிக் கறி, கூட்டு, பச்சடி, பாயசம் போன்ற நிலைக்களப் பொருள்கள் அதிகமாக இருந்தால் தான் அதைப் பெரிய விருந்து என்று சொல்கிறோம். அப்படி ஆண்டவன் திரு வருளால் 'பிறவி இல்லை' என்று சொல்ல வந்தார் அருண கிரியார். அந்தக் கருத்தை மிகவும் அழகுபடப் பாடுகிறார்.

அவன்
கால்பட்டு அழிந்தது இங்கு என் தலைமேல்அயன்
கையெழுத்தே.

'அயன் என் தலையிலே எழுதிய எழுத்து அந்தச் சின்னக் குழந்தை தன்னுடைய திருவடியை என் தலைமேல் வைத்த போது அழிந்துவிட்டது' என்று அவர் சொல்லும் போதே, 'அவன் திருவடி படுகின்ற இடத்திலே நான் தலையை வைத்தேன்' என்கிற குறிப்பும் இருக்கிறது.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என வள்ளுவர் சொன்னாரே அதுபோல, 'நான் எம்பெருமான் தாள் தலையில் படும்படியாக அவன் முன்னர்ப் பணிந்து நின்றேன்' என்று சொல்லாமற் சொல்கிறார். 'அவன் தாள் படவேண்டுமானால் நம் சென்னி தாழ்ந்து கிடக்கத்தானே வேண்டும்? நிமிர்ந்து நின்றால் அவன் தாள் படாது. அவன் நடமாடுகின்ற தளமாக நம் தலையைத் தாழ்த்தி நின்றால் அவன் திருவடியை வைப்பான். அவன் திருவடி மலர் நம் தலைமேலே பட்டால், முன்னாலே அயன் எழுதி வைத்த தலை எழுத்து அழிந்து போகும்' என்ற உண்மையும் புலனாகிறது.

கடையில் அடியில் அப்பெருமான் அருளினாலே தமக்கு இனிப் பிறவி இல்லை என்கிற கருத்தை விளக்கினார். இந்தக் கருத்துக்கு நிலைக்களமாக முதல் மூன்று அடிகளை அமைக்கிறார். அழகான ஏழு நிலைக்கோபுரம் போல நிமிர்ந்து நிற்கிறது இந்தப் பாட்டு. நான்கு அடிப்பாட்டுக்குள்ளே திருச்செந்தூருக்கு நாட்டுப் படலம், நகரப்படலம் எல்லா வற்றையும் சொல்லிவிடுகிறார்.

3

அழிவும் ஆக்கமும்

"அவன் கால்பட்டு அழிந்தது எனச் சொல்கிறாரே; அழிவு இன்பத்தைக் கொடுக்குமா?" என்று கேட்கலாம். அழிவு, ஆக்கம் என்ற இரண்டில் அழிவு என்பது துன்பத்தை அளிப்பதாகவும், ஆக்கம் என்பது இன்பத்தைத் தருவதாகவும் கொள்கிறோம். ஆனால் அழிவு என்று சொன்னமாத்திரத்திலேயே துன்பம் ஆகாது. ஒருவனுக்கு நோய் வந்தது. மருந்தைக் கொடுத்து மருத்துவன் நோயை அழிக்கிறான். அதனால் சுகம் ஏற்படுகிறது. காரணம் என்ன? முதலிலே நோய் வந்து அவன் உடம்பின் சுகத்தை அழித்தது. மருத்துவன் மருந்தைக் கொடுத்து நோயை அழிக்கிறான். இரண்டு அழிவு சேர்ந்தால் நலந்தானே? உடலை அழித்து வந்த நோய், மருந்தால் அழிந்த போது நலம் உண்டா

கிறது. ஆகவே முன்னால் அழிவு செய்த ஒன்றை, மற்றொன்று அழிக்குமானால் இந்த அழிவு அழிவு ஆகாமல் ஆக்கம் ஆகிறது.

அப்படி நம் மண்டையோட்டின் மேல் அயன் எழுதிய எழுத்து இன்பத்தை எல்லாம் அழித்துவந்தது. இன்பங்களை அழிக்கும் தலை எழுத்தை எம்பெருமான் தன் திருவடியினாலே இப்போது அழித்தான் என்றால் இந்த அழிவு ஆக்கம் ஆயிற்று; பேரின்பத் திற்குக் காரணமாயிற்று. அழிவுக்கு அழிவு தேடி ஆக்கம் அளிக்கும் பெருமான் வாழ்கின்ற திருச்செந்தூர் எப்படி இருக் கிறது? நாட்டுப் படலமாக அது பாட்டின் முன்னடியில் விரிகிறது.

நாட்டுப் படலம்

திருச்செந்தூருக்குள் நுழையும்போதே வயலைப் பார்க்கலாம். சுற்றிச் சூழச் சோலைகளைப் பார்க்கலாம். நீர்நிலைகளைப் பார்க்கலாம். பார்த்த உடனேயே அவ்வூரின் நிலவளம், நீர்வளம் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாம். செங்கதிர்கள் தழையப் பயிர்கள் வளர்ந்து சாய்ந்து இருப்பதைப் பார்த்தவுடனேயே நிலவளம் தெரியாதா? நிலவளத்தைக் காட்டுகிறது? வயல்களில் வளர்ந்து தழைந்து இருக்கும் பயிர்கள். வயல், பொழில் எல்லாம் ஒரே பச்சைப் பசேல் என்று தெரிவதிலிருந்தே, நல்ல நீர்வள முள்ள பகுதி என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

வயல்களில் சேல் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன. கொழு கொழுவென்று வளர்ந்த அவை செந்தூரின் நீர் வளத்தை மட்டுமா காட்டுகின்றன? அங்கே வாழும் மக்களின் நீர்மை வளத்தையும் காட்டுகின்றன. அவற்றைப் பிடித்துப் பயன்படுத்து வார் யாரும் இல்லை. எல்லோரும் சைவர்கள்; உணவில். இப்படி வள வயல்களில் வளரும் மீன்கள் என்ன செய்கின்றன பாருங்கள்.

சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில்

பிடிப்பார் யாருமின்றி நல்ல வளப்பமாக வளரும் சேல் மீன்கள் சும்மா இருக்குமா? துள்ளிக் குதிக்கும். வயல்களுக்குப் பக்கத்தில் சோலைகள் இருக்கின்றன. அந்தச் சோலை மரங்களின் நிழல் வயலிலே விழுகின்றது. நிழல் விழுந்தால் பயிர் வளராது அல்லவா? வயல்களின் நிழல் விழச் செய்யும் மரங்களை யாராவது வெட்டுகிறார்களா? இல்லை. ஆனால் தம்மைக்

காப்பாற்றுகின்ற வயல்களைக் காப்பாற்ற வேண்டுமே என்று எண்ணியவை போலச் சேல் மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன. அப்படிக் குதிக்கும்போது வயலருகில் உள்ள பொழில்கள் அழிகின்றன. வயல்களுக்கு நிழல் தரும் பொழில் மரங்களைச் சேல் மீன்கள் சாடுகின்றதனால் அம்மரங்கள் அழிகின்றன. இந்த அழிவினால் நன்மையே விளைகின்றது. நிழல் தந்த மரங்கள் அழிந்ததனால் வயல் இன்னும் வளப்பமாகச் செழிக்கின்றது. தம்மை வளர்த்த வயலுக்கு வந்த இடையூற்றைச் சேல் மீன்கள் நினைத்துச் செய்யாமல் துள்ளி விளையாடுவதனாலே போக்கு கின்றன. இது நாட்டுப் படலம்.

அடுத்த அடியில் நகரப்படலம் வருகிறது.

நகரப்படலம்

ஊருக்குள் புகுந்து எல்லோரையும் வருணிக்க ஆரம்பித்தால் ஓர் அடி போதுமா? எத்தனை விதமான தொழில் புரிபவர்கள் இருக்கிறார்கள்! எத்தனை வகை மக்கள் இருக்கிறார்கள் இருக் கிறார்கள்! எல்லோரையும் வருணிக்க முடியாது. நாட்டைச் சொல்லிவிட்டு நகரைச் சொல்லாமல் விடலாமா? ஒரு நகரத்தில் பல வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வீடும் நாட்டின் ஓர் அங்கம். நகரத்தை வருணிக்க ஒரு வீட்டைச் சொன்னால் போதாதா? அப்படியே ஒரு வீட்டைச் சொல்லலாம் என்றாலும் ஒரு வீட்டில் பத்துப்பேர்கள் இருப்பார்களே! தாய், தந்தை, தம்பி, அண்ணன், தங்கை என்று பலபேர்கள் இருக்கின்றபோது எல்லோ ரையும் பற்றிச் சொல்ல முடியுமா? வீட்டுக்குத் தலைவரைப் பற்றிச் சொன்னால் போதும் என்றால் வீட்டுக்குத் தலைவர் யார்? ''வீட்டுக்காரர்தாம்'' என்று நாம் இப்போது சொல்வோம். ஆனால் பழங்காலத்தில் தமிழ்நாடு அப்படிச் சொன்னது இல்லை. 'இல்' என்றால் இல்லாள்தான் உண்டு. இல்லான் என்ற வழக்கு இல்லை. இல்லான் என்றால் இல்லத்தின் தலைவன் என்று பொருள்படாமல் ஒன்றும் இல்லாதவன் என்றே பொருள் படும். 'மனை' என்றால் மனைவி உண்டு, மனையாள் உண்டு. மனையான் என்று கிடையாது. நாட்டுக்கு நாயகன் ஆண்பால், வீட்டுக்கு நாயகி பெண்பால்தான். எல்லாவிதமான பொருளையும் வீட்டுக்குள் கொணர்ந்து சேர்க்கிற பொறுப்பு ஒன்று மட்டும்

ஆடவருக்கு உண்டு. அறம் பிறழாமல் அதை எடுத்துச் செல வழிக்கின்ற கடமை வீட்டுக்குச் சொந்தக்காரியான, இல்லுக்கு அரசியான, இல்லாளுக்குத்தான் உண்டு. ஆகவே இல் அரசியை வருணித்தால், ஒரு வீட்டையே வருணித்ததாக ஆகும், ஒரு வீட்டை வருணித்தால் ஒரு நகரத்தையே வருணித்தாக ஆகும் என்று நினைப்பவர் போல அருணகிரியார் வீட்டுக்கு விளக்காய், வாழ்வரசியராய் விளங்கும் பெண்களைச் சொல்வதுபோல அடுத்த அடியை அமைக்கிறார்.

தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி யார்மனம்.

(பூங்கொடியைப் போன்ற மெல்லியலையுடைய மகளிர்களின் மனம் முருகன் அணிந்த தேன் நிரம்பிய கடம்ப மலரின் மேல் உள்ள ஆசை பட்டு அழிந்தது)

திருச்செந்தூரிலே நிறையக் கடம்ப மரங்கள் இருக்கின்றன. அதிலே பூக்கின்ற பூக்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துத் திருச் செந்தூர் ஆண்டவனுக்கு எடுத்துச் செல்கிறார்கள். கோயிலுக்குள் மாலைகள் போவதைப் பார்க்கிறார்கள், பூங்கொடி போன்ற மகளிர்கள். ''உள்ளே போகின்ற மாலைகள் மீட்டும் வெளியே வர வில்லையே! ஆண்டவனுக்குச் சூட்டிய மாலைகள் எங்களுக்குப் பிரசாதமாகக் கிடைக்கவில்லையே!'' என்கிற தாபத்தினால் தேங்கடம்ப மாலைகளின் மீது மால் உண்டாகி, ஆசைப்பட்டுப் பூங்கொடியார் மனம் அழிந்தது.

பெண்கள் எம்பெருமானுக்கு அணியும் கடம்ப மலர் மாலை களுக்கு ஏங்கி நிற்கிறார்கள்; அதனாலேயே அவர்கள் மனம் அழிந்தது என்று பொருள்பட்டாலும், இதற்கு ஓர் உட்கருத்து உண்டு. பூங்கொடியார் என்பது உடம்பினாலே பெண்ணாகத் தோன்றுகிறவர்களை மட்டும் குறிப்பதாகக் கொள்ளக் கூடாது. நாம் உடம்பினாலே பெண் என்றும், ஆண் என்றும் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறோம். உயிரிலே ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லை.

பெண்கள் கல்லூரியில் நாடகம் போடுகிறார்கள். ஆண்களின் பாத்திரத்தையும் பெண்களே ஏற்று நடிக்கிறார்கள். நாயகனாகக் கோலம் புனைந்து கொண்டிருக்கும் பெண், நாயகியாக வேஷம்

போட்டுக் கொண்டிருப்பவளிடம், ''பிராண நாயகியே'' என்கிறாள். அவளும், ''என் பிராண நாதா'' என்கிறாள். நாடகம் முடிந்து இறங்கினால் யார் நாதன்? யார் நாயகி? எல்லோரும் பள்ளிக் கூடத்துப் பெண்கள்.

அப்படி உலகமாகிய மேடையிலே ஆண் வேஷம் தாங்கி யிருக்கும் ஆன்மாவும் பெண்தான். பெண்ணாக வேஷம் பூண்டுள்ள ஆன்மாவும் பெண்தான். உலகிலுள்ள ஆன்மாக்களாகிய பெண் களுக்கு உண்மையான புருஷன் யார்? அவன்தான் ஆண்டவன்.

ஓர் அரசன் கொஞ்ச காலம் தலை மறைவாக இருக்கிறான். அந்தச் சமயம் மந்திரியைப் பார்த்து, ''அரசனாக வேஷம் போட்டுக் கொண்டு அரசியலை நடத்தி வா'' என்று சொல்கிறான். வேஷம் போட்டுக் கொண்ட மந்திரி தன்னையே உண்மை அரசன் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டால் அவன் அதமனாகிவிடுகிறான். அதுமாதிரி, வேஷம் புனைந்து புருஷனாகத் தோற்றுகிற நாம் எல்லாம், ''நாமே புருஷர்'' என்று நினைத்துக் கொண்டிருந்தால் புருஷ அதமராகிறோம். புருஷ உத்தமனாகிய ஆண்டவன் அதைப் பார்த்து நகைக்கிறான். திருச்செந்தூரில் எழுந்தருளியிருக் கும் புருஷோத்தமனாகிய எம்பெருமானை அடைவதற்காக, தோற்றத்தால் ஆணாகவும் பெண்ணாகவும் வேஷம் தாங்கியிருந் தாலுங்கூட, எல்லா மக்களும் ஏங்கிப் பூங்கொடியார்களாகத் தவம் கிடக்கிறார்கள். ''இன்னும் மாலை மாற்றிக் கொள்ள வில்லையே! தனக்குச் சூட்டப்படுகின்ற கடம்ப மலர் மாலை களை எடுத்து ஆண்டவன் நம் கழுத்தில் சூட்டவில்லையே!'' என்று கடம்ப மலர் மாலைகளுக்கு ஆசைப்பட்டு, விரக தாபத் தினால் தவிக்கின்ற பூங்கொடியாராக இருக்கிறார்கள்.

அந்த விரக தாபமே ஓர் இன்பம். ஒரு பொருள் கைக்குக் கிடைத்து அதை நுகர்கின்ற காலத்திலே ஏற்படுகின்ற இன்பத்தை விட அந்தப் பொருள் கிடைக்கவில்லையே என்று ஏங்கி நிற்கும் காலத்தில்தான் இன்பம் மிக அதிகமாக இருக்கும்.

உலகிலுள்ள வேறு எத்தனையோ பொருள்களிடத்தில் மையல் கொண்டு அவை கிடைக்கவில்லையே என்று தாபப்படுகிறவர் களின் மனம் ஆயிரம் ஆயிரமாகச் சிதறிக் கணத்திற்குக் கணம் துணுக்குறுகிறது. ஆனால், ''ஆண்டவன் அருள் கிடைக்கவில்லையே!

அவனது அருள் பிரசாதமாக அவனுக்குச் சூட்டப்பட்ட கடம்ப மலர் மாலைகள் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லையே'' என்று அவனிடம் காதல் கொண்ட பூங்கொடி போன்ற மென்மையான உள்ளம் படைத்தவர்களுக்கு அந்த மனமே அழிந்து போயிற்று.

தேங்கடம்பின், மால்பட்டு அழிந்தது
பூங்கொடியார் மனம்.

பூங்கொடியார் மனம் செத்துப் போய்விட்டது. புருஷ உத்தமனாகிய ஷண்முகநாதனின் மேல் சூட்டப்பட்ட கடம்ப மாலைகளுக்கு ஆசைப்பட்டு, விரக தாபத்தினால் தவிக்கின்ற பூங்கொடியார் மனம், பிற பொருள்களின்பால் உள்ள மையல்களை எல்லாம் மாய்த்து, கடைசியில் தானும் மாய்ந்துவிட்டது. அதனால் விளைந்தது என்ன? மனமற்ற நிலை; அதுவே இன்பம்; அதுவே முத்தி. ''மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்'' என்பர் தாயுமானவர்.

பூங்கொடியார்

எம்பெருமானிடத்தில் பத்தி பண்ணினால் அவனால் படைக்கப்பட்ட உலகிலுள்ள உயிர்க்கூட்டங்களிடம் தயை பெருகும். அவர்களுடைய வாக்கிலே, செயலிலே அன்பு பெருகும். அவர்கள் நடையிலே மென்மை இருக்கும். மென்மையான உள்ளம் படைத்த பூங்கொடியார்களாகவே ஆகிவிடுவார்கள். அத்தகையவர்கள் மனமற்று நிற்கிறார்கள்.

அடுத்த அடியிலே புராணக் கதையை நினைப்பூட்டுகிறார் அருணகிரியார்.

சூரசங்காரம்

முருகப் பெருமான் சூரனைச் சங்காரம் செய்ய அவதரித்தான். சூரன் மலையைத் தனக்குக் கவசமாகப் பூண்டு கடலுக்குள் ஒளிந்து கொண்டான். முருகப் பெருமான் தன் கையிலுள்ள ஞான சக்தியாகிய வேலை விடுத்தான். அதனால் கடல் சுவறிவிட்டது. சூரனும், சூரனுக்குக் கவசம் போன்றிருந்த மலையும் அழிந்தன என்கிற வரலாறு நமக்குத் தெரியும்.

மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்.

வேலை–கடல். வெற்பு–மலை. மாமயிலை வாகனமாக உடைய எம்பெருமானது வேல் பட்டதனாலே, சமுத்திரமும் சூரனும், மலையும் அழிந்தனவாம்.

திருச்செந்தூரில் உள்ள வயல்களில் வளரும் சேல் மீன்களின் விளையாட்டினால் பொழில்கள் அழிந்தன என்று சொன்னார். அந்த அழிவினாலே உண்டானது ஆக்கம். வயலுக்கு நிழல் தந்து வந்த பொழில் அழிந்ததனால் வயல் செழித்து வளர்ந்தது என அறிந்தோம். அடுத்தபடி ஆண்டவனுக்குச் சூட்டுகின்ற கடம்ப மலர் மாலைகளின் மீது ஆசைப்பட்டுப் பூங்கொடியார்களின் மனம் அழிந்தது என்றார். இந்த அழிவினால் உண்மையில் உண்டான ஆக்கம் இன்பந்தான்; மனமற்ற தூய பரிசுத்த நிலையாகிய முத்தி இன்பம் விளைந்தது.

கந்தப் பெருமானின் வேல் பட்டு அழிந்தது வேலையும், சூரனும், வெற்பும் என்பதனாலே விளைந்தது என்ன? உண்மையில் சூரன் அழிந்தானா? சூரனின் சூரத்துவம் அழிந்தது; அசுரத்துவம் அழிந்தது. அவன் இப்போது எப்படி இருக்கிறான்? எம்பெருமானின் வாகனமாக அல்லவா இருக்கிறான்? பல பல அடியார்களுக்கு அருள் செய்ய முந்துகின்ற முருகப் பெருமானை, 'இதோ நான் தூக்கிப் போகிறேன்' என்று காத்துக் கொண்டல்லவா இருக்கிறான்? எம்பெருமான் சூரனைச் சங்காரம் பண்ணினான். அது அழிவு போலத் தோற்றலாம். ஆனால் அவனது அசுரத்துவத்தை அழித்து, அவனுக்கு உண்மையான அநுகூலம் பண்ணினான். அசுரத்துவம் அழிவது சுரத்துவம் வளர்வதற்காக அல்லவா? சூரன் மா மயிலானான். அதைப் நினைப்பூட்டவே,

மாமயிலோன் வேல்பட்டழிந்தது

என்றார். முருகன் மறக் கருணையால் சூரனை ஆட்கொண்டான்.

மயில் மேலே ஆண்டவன் வரும்போது அடியார்களின் உள்ளத்தில் காதல் மிகுகின்றது. "நாம் எப்படி இருந்தாலும் ஆண்டவன் ஆட்கொள்ளுவான். தனக்குப் பகையாய் இருந்த சூரனையே ஆட்கொண்டு, மயிலாக வைத்திருக்கிறானே. நம்மை ஆட்கொள்ளாது போவானா?" என்கிற நம்பிக்கையை அதிகப் படுத்துகிறது மயில்.

இப்படி நாட்டிலும் நகரிலும் அழிவு போன்ற ஆக்கம் நிகழ்ந் ததையும், பழைய காலத்தில் சூரசங்காரத்தின் போது அழிவு போன்ற ஆக்கம் நிகழ்ந்ததையும் சொல்லிவிட்டுத் தமக்குக் கிடைத்த அநுபவத்தைச் சொல்கிறார் அருணகிரிநாதர். அதுவும் அழிவு போன்ற ஆக்கந்தான்.

அவர் அநுபவம்

''ஆண்டவனுடைய வரவுக்காக நான் காத்துக் கிடந்தேன். அவன் நடமாடுகின்ற இடம் எங்கே எனத் தேடி அலைந்தேன். குழந்தைகளைப் பார்க்க வேண்டுமென்றால் அவர்கள் விளை யாடும் வீதியில்தான் பார்க்க முடியும். முருகக் குழந்தை எல்லா இடங்களிலும் விளையாடுகிறான் என்றாலும், அடியார்களுடைய கூட்டந்தான் அவனுக்கு அதிக உவப்பானது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு குதிக்கிறான். விளையாடுகிறான் அடியார்களின் கூட்டத்தில் நானும் சேர்ந்து நெஞ்சு உருகி, தலைதாழ்த்தி அவன் திருவடிபடாதா என வீழ்ந்து கிடந்தேன். அவன் திருவடி என் தலையிலேபட்டது. அதனாலே என்ன நிகழ்ந்தது தெரியுமா? என் தலைமேலே அயன் எழுதிய தலை எழுத்து அழிந்து போய் விட்டது. பிறவி ஒழிந்தது. பிறப் பற்ற சாசுவதமான இன்பத்தைப் பெற்றேன்'' என்று முடிக்கிறார்.

அவன்
கால்பட்டு அழிந்தது என் தலைமேல்
அயன் கையெழுத்தே.

அழிந்தது என்று சொன்னாலும் அவை துன்பம் விளைக்கும் அழிவுகள் அல்ல. ''சேல்பட்டுப் பொழில் அழிந்ததனாலே வயல் செழித்தது. பூங்கொடியார் மனம் விரகதாபத்தினால் அழிந்தத னாலே மனமற்ற தூய பரிசுத்த இன்பம் உண்டாயிற்று. வேலை யும் சூரனும் வெற்பும் வேல்பட்டு அழிந்தமையாலே சூரன் மா மயிலானான். தலைமேலுள்ள அயன் கையெழுத்து எம்பெரு மானின் கால்பட்டு அழிந்ததனாலே பிறவி அற்ற முத்தி இன்பம் விளைந்தது'' என்கிற கருத்துக்களை இப்பாட்டு மிக அழகாக விளக்குகிறது.

நம்முடைய பிறவி அழிய வேண்டுமானால் எம்பெருமானின் திருவடி எப்போது நம் தலையில் படும் என்று ஏங்கி உருகி

மனம் நெகிழ்ந்து, அவன் திருவடி மிக அதிகமாக நடமாடுகிற அடியார்களின் கூட்டத்திலே தலை வணங்கிக் கிடந்தால் நமக்கும் அந்தப் பாக்கியம் கிடைக்கும்.



சேல்பட்டு அழிந்தது செந்தூர்
வயற்பொழில்; தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி
யார்மனம்; மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையும்
சூரனும் வெற்பும்; அவன்
கால்பட்டு அழிந்ததுஇங்கு என்தலை
மேல்அயன் கையெழுத்தே.

(திருச்செந்தூரில் வயலை அடுத்த வளர்ந்த சோலை அந்த வயலில் வளர்ந்த சேல்கள் பட்டு அழிந்தது; தேன் நிரம்பிய கடம்ப மலர் மாலையின்மேல் ஆசை உண்டாகிப் பூங்கொடி போன்ற மகளிர் மனம் அழிந்தது; பெரிய மயிலையுடைய முருகனுடைய வேல்பட்டுக் கடலும் சூரனும் மலையும் அழிந்தன. அப்பெருமானுடைய திருவடி பட்டு இங்கே எளியேன் தலையின் மேல் பிரமன் கையால் எழுதிய எழுத்து அழிந்துவிட்டது.

தேங்கடம்பு – தேன் நிரம்பி கடம்ப மலர் மாலை; இது முருகன் திருமார்பில் அணிந்தது. மால் – ஆசை. வேலை – கடல்; சூரன் ஒளிந்திருந்த கடல். வெற்பு – கிரவுஞ்சமலை. வேல்பட்டு அழிந்தது; அழிந்தது: தொகுதி ஒருமை. அயன் – பிரமன்.)

அறமும் இன்பமும்

1

நேர்மையான நுகர்ச்சி

உலகில் வாழும் மக்கள் இறைவன் படைத்த பொருள்களை நுகர்ந்து வாழ்கிறார்கள். அப்படி நுகரும் போது நேர்மையான வழியில் நுகராமல் நேர்மையற்ற நெறியிலே செல்கிறவர்கள் பலர். எதனை எப்படி எந்த முறையில் நுகர வேண்டும் என்பதை நம்முன் வாழ்ந்த பெருமக்கள் தம்முடைய அநுபவத்தினாலும் பேரறிவினாலும் உணர்ந்து நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுரை எவ்வளவு உண்மையானது, பயனுள்ளது என்பதை நாமும் அநுபவத்தில் உணர்ந்து வருகிறோம். இருப் பினும் நாம் தீய நெறியிலே புகுந்து நுகரத் தலைப்படுகிறோம். இதையே மாயை என்றும் திரோதாயி என்றும் சொல்வார்கள். பாசி நிறைந்த குளத்தில் நீராடுவான் ஒருவன் அதைக் கையால் விலக்கிவிட்டு மூழ்குகிறான். ஆனால் அடுத்த கணமே மறுபடி யும் பாசி வந்து மூடிக் கொள்கிறது. அதுபோல இது செய்யத் தகாது என்ற அறிவு ஒரு கணம் நம்மிடம் தலைக்காட்டுகிறது; அடுத்த கணமே அதை மறந்து விடுகிறோம்.

பழமும் காயும்

இனிய பழம் இருக்கும்போது காயை நுகர்வார் உண்டா? இருக்க மாட்டார்கள் என்றுதான் முதலில் தோன்றுகிறது. ஆனால் ஆராய்ந்து பார்த்தால் பல திறங்களில் நாம் கனியிருக்கக் காயைத் தான் நுகர்கிறோம். நாம் வாயினால் இன்சொல் பேசும் இயல்பு படைத்திருக்கிறோம். இன்சொல்லால் இனிமை உண்டாவதை நாம் அநுபவத்தால் உணர்ந்திருக்கிறோம். ஆயினும் பெரும் பாலும் இன்சொல்லைப் பேசுவதில்லை. இது கனியிருக்கக் காய்

கவரும் செயலைப் போன்றதுதான். திருவள்ளுவர் அப்படியே சொல்கிறார்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று."

மூவாசை

நல்ல பகுதியை மறந்து தீயதை விழையும் மாயை நம்மை நன்றாகப் பற்றிக் கொண்டிருக்கிறது. மண், பொன், பெண் என்று பழங்காலத்தில் ஆசையை மூன்றாக வகுத்திருக்கிறார்கள். மண் என்றவுடன் நமக்கு நல்ல நினைவுகள் எழ வாய்ப்பு உண்டு. அதனைப் பொறுமைக்கு உவமையாகப் பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்; நாம் உதைத்தாலும் அகழ்ந்தாலும் நிலம் நம்மைத் தாங்குகிறது. நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைத்துத் தருகிறது. நீரைத் தாங்கி நிற்கிறது. தன் வயிற்றினிடையே தங்கம், இரும்பு, நிலக்கரி முதலிய பல அரும் பொருள்களை வைத்துப் பாதுகாத்து நமக்கு உதவுகிறது. அவரவர்கள் தம் தம் இடத்தில் நேர்மை தவறாமல் வாழலாம். ஆனால் தம் இடம் போதாதென்று கருதிப் பிறர் மண்ணையும் கொள்ள வேண்டுமென்று ஆசைப் படுகிறார்கள். நாடுபிடிக்கும் ஆசை இந்த விஞ்ஞான யுகத்தில் அதிகமாகியிருக்கிறதேயன்றிக் குறையவில்லை. மண் என்றவுடன் மண்ணாசைதான் நம் நினைவுக்கு வருகிறது. வாள் என்றவுடன் கொலை நினைவுக்கு வருகிறது. வாளால் முள்ளை வெட்டலாம்; புதரை அழிக்கலாம். அவை நினைவுக்கு வருவதில்லை. கொள் வதற்காகவே மனிதன் வாளைப் படைத்திருக்கிறான் என்று தோன்றுகிறது. அப்படியே ஆசைப்படவும், கிடைக்காவிட்டால் போரிட்டு வெட்டி மடிந்து சாகவுமே ஆண்டவன் மண்ணைப் படைத்திருக்கிறானோ என்ற ஐயம் தோன்றுகிறது.

அதுபோலவே பொன் பல நன்மைக்குக் கருவியாக இருந் தாலும் ஆசையை உண்டாக்கித் திருட்டு முதலிய தீய செயல் களை வளர்க்கக் காரணமாகிவிட்டது. பொன் காரணம் என்று சொல்வது முறையன்று. அதைக் காணும் மக்களிற் பெரும்பாலோர் ஆசையென்னும் பேயின் பிடிக்குள் அகப்பட்டுக் கிடப்பதால் பொன் என்றவுடனே அதை வஞ்சமாகக் கொள்ள வேண்டும் என்ற நினைப்புத் தோன்றுகிறது.

பெண்ணும் அவ்வாறே மனித மனத்தின் தீய உணர்ச்சியைத் தூண்டிவிடும் பொருளாக இருக்கிறாள். இந்தக் காரணத்தால் துறவியர் மண், பெண், பொன் என்னும் மூன்றையும் வெறுத்தார்கள். பெரும்பாலான மக்கள் இந்த மூன்றையும் நேர்மையான வழியில் அற நினைவோடு அணுகுவதில்லை. அதனால் அவற்றைச் சிந்திக்காமலே இருந்துவிடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள்.

மகளிர் உறவு

பெண் என்றால் உடனே மயல் என்ற நினைவுதான் நமக்கு உண்டாகிறது. உலகத்துப் பெண் குலத்தின் பெருமையை நாம் அறிந்திருந்தாலும் மறந்துவிடுகிறோம். பெண்ணை நான்கு வகையான உறவுகளில் வைத்துப் பார்க்கிறோம். தாயாகவும் மகளாகவும் சகோதரியாகவும் மனைவியாகவும் பெண் இருக்கிறாள். இந்த நான்கும் நேர்மையான உறவு. இறைவனுக்கும் இறைவிக்கும் உள்ள உறவு முறையைச் சொல்ல வந்த குமர குருபர முனிவர் இந்த நான்கையும் சொல்கிறார்.

''கனக மார்க வின்செய் மன்றில்
அனக நாட கற்கெம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள்.''

மனைவியின் நிலை

தாயின் நினைப்பிலே இணையற்ற அன்பு மீதூர்கிறது. தங்கை என்னும்போது சகோதர பாசம் பிணிக்கிறது. மகள் என்னும்போது வாத்ஸல்யம் பொங்குகிறது. மனைவி என்னும் உருவில் அறமும் இன்பமும் இணைந்து காட்சியளிக்கின்றன. பெண்ணினத்தின் உறவு முறையில் நான்கில் ஒரு பகுதி மனைவி என்ற உறவு. ஒரு பெண்ணை மனைவியாக ஒருவன்தான் கொள்ள லாம். ஆனால் தாயாகத் தங்கையாகப் பலர் கொள்ளலாம். மகளாகவும் கொள்ளலாம். இந்த நான்கு முறையையும் விட்டு வெறும் காம நுகர்ச்சி ஒன்றையே கருதிப் பெண்ணை நோக்கும் விலங்குணர்ச்சி மக்களிடம் நிரம்பியிருக்கிறது. மனைவியிடம் இன்பம் நுகரவில்லையா என்ற கேள்வி எழலாம். ஆம்; இன்பம் தருவதற்காக அமைந்தவள் மனைவி என்பது உண்மை. அறம் பொருள் இன்பம் வீடு என்று உறுதிப் பொருள்களை நான்காகப்

பகுப்பார்கள். இந்த நான்கும் வெவ்வெறாகத் தோன்றினாலும் நான்கிலும் அறம் உண்டு. அறம் இல்லாமல் பொருள் இல்லை; இன்பமும் இல்லை; வீடும் பெற இயலாது. அறத்தின் வழியே பெறும் இன்பம் மனைவியிடம் கிடைக்கிறது. பெண்ணின் இன்பத்தைப் பெற விழைபவன் அவ்வின்பத்தை அற நினைவோடு பெற வேண்டும். அறந்திறம்பிய முறையில் பெறுவது இன்பமாகாது; அது உடலின் தினவைத் தீர்க்கும் செயல்.

அறத்தோடு இணைந்தது காதல்; அல்லாதது காமம். மனைக்குத் தலைவியாக இருந்து இல்லறமென்னும் ஆட்சியை நடத்துகிறவள் மனைவி. அவள் அறத்தைக் காக்கும் கடமையை உடையவள். அறத்தை வளர்க்கும்பொருட்டே ஒருவன் மனையாட்டியைக் கொள்ள வேண்டும். அதனால் மனைவிக்குத் தர்ம பத்தினி என்ற பெயர் அமைந்தது. காமபத்தினி என்று சொல்லும் வழக்கு இல்லை. வெறும் காமவேட்கையைத் தணிப்பதற்காகப் பயன்படும் மகளிரைக் காமக் கிழத்தியர் என்று சொன்னார்கள். காமக் கிழத்தியருக்கு இல்வாழ்வில் பங்கு இல்லை. அறத்தை வளர்ப்பதற்காக வாழ வேண்டிய மனிதன், அதற்குத் துணையாக கொள்பவள் ஒருத்தி தான். மற்றப் பெண்கள் யாவரும் தாய், தங்கை, மகள் என்ற முறையில் அமைபவர்களே ஆவர்.

''அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணல்''

என்று ஒரு புலவர் பாடுகிறார். இறைவன் அம்பிகையைத் தன் பாகத்தில் வைத்திருக்கிறான். அப்பிராட்டி அறப்பெருஞ் செல்வி. திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்குத் தர்ம சம்வர்த்தனி என்றும் அறம் வளர்த்தாள் என்றும் திருநாமங்கள் வழங்கும்.

வீட்டுத் தலைவன் அறம் செய்வதற்காகத்தான் மனையாட்டியைப் பெறுகிறானேயன்றி வெறும் இன்பத்தைப் பெறுவதற்காக மட்டும் அன்று; அறமே தலைமையாக இருக்க வேண்டும். மனித சமுதாயம் பரம்பரை பரம்பரையாக வளர்ந்து அறத்தை வளர்க்க வேண்டும். இந்தப் பரம்பரையின் வளர்ச்சியை எண்ணியே இன்பம் அமைந்திருக்கிறது. மரம் வளர்வதற்காக, பரம்பரை பெருகுவதற்காக, விதையை இறைவன் உண்டாக்கியிருக்கிறான். ஆனாலும் அந்த வித்தை இனிய கனியினூடே வைத்திருக்கிறான்.

கனியைச் சுவைத்தவர்கள் வித்தைப் புதைத்து மரத்தை வளர்க்க வேண்டும். இந்தக் கடமைக்குக் கூலிபோலக் கனி இருக்கிறது. அறம் இடையீடின்றி நடைபெறப் பரம்பரை வளரவேண்டும். பரம்பரை விருத்தியாகும் பொருட்டு இன்பத்தை உடன் வைத் திருக்கிறான் இறைவன். அறம் வளர்க்க இன்பம் என்னும் கூலி கிடைக்கிறது. தர்மம் வளரவேண்டுமென்ற நினைவோடு மனிதன் மணம் புரிந்து கொள்ள வேண்டும்.

அற நினைவு

ஆகவே மனைவியைப் பார்த்தால் அறம் நினைவுக்கு வர வேண்டும். பெண்களைக் கண்டால் அறத்தை நினைக்க வேண்டும்; ''அறத்தை நினைக்காமல் வெறும் இன்பத்தை நினைந்து பெண்களைத் தேடி அலைந்துவிட்டேனே! பால் போன்ற இனிமையான மொழியை உடைய மங்கையரை நாடிச் சென்று மயல் பட்டுத் திரிகின்றேனே!'' என்றும், ''தர்மத்தின் வடிவமாகப் பார்க்க வேண்டியவளை, என்னுடய காமத் தீயை வளர்க்கும் விறகுக் கட்டையாகப் பார்த்து மயக்குமுற்றுத் திரிகின்றேனே!'' என்றும் ஒவ்வொருவனும் இரங்க வேண்டும். நமக்குப் பிரதி நிதியாக இருந்து அருணகிரியார் அந்தக் கருத்துக்களை இந்தப் பாட்டில் சொல்கிறார்.

பாலை அனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண்டு உய்யும் வகைஅறியேன்; மலர்த் தாள்தருவாய்;
காலே மிகஉண்டு, காலே இலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன் மருக!செவ் வேலவனே!

மயலுக்குக் காரணம்

பெண்ணை பார்த்தவுடன் உள்ளம் மயல் அடைவதற்குக் காரணம் நம்முடைய உள்ளம் மாசு உடையது என்பதுதான். பெண்ணின் மேல் குறை ஒன்றும் இல்லை. நல்ல பால் இருக் கிறது. அதை நல்ல பாத்திரத்தில் வைத்தால் கெட்டுப் போவ தில்லை. அழுக்குள்ள பாத்திரத்திலோ, ஆகாத பாத்திரத்திலோ வைத்தால் அது திரிந்துவிடும். திரிவதற்குக் காரணம் பாலின் குறை அன்று. அதை ஏற்றுக் கொண்ட பாத்திரத்தின் குறைதான். அப்படியே பெண்கள் கெட்டவர்கள் அல்ல. பால் போன்ற இனிமையான மொழியை உடையவர்கள் தாம்.

பாலே அனைய மொழியார்.

பாலைக் கெட்ட பாத்திரத்தில் வைத்தால் கெட்டுத்தானே போகும்? அப்படி நம்முடைய மனம் பக்குவம் இல்லாத காரணத்தினால் பாலே அனைய மொழியாரைப் பற்றும் போது புளித்துப் போகிறது.

பாலே அனைய மொழியாரைப் பற்றுவது தவறு அல்ல. எந்த நோக்கத்தைக் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டுமோ அதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். அறத்திற்காக அவர் களைப் பற்ற வேண்டும். அப்போது மயல் உண்டாகாது; பரம் பரையான தர்மம் வளரும். அதன் சார்பில் இன்பத்தையும் வீட்டையும் பெறலாம். ஆனால் மயல் உண்டாவதற்கும் மால் கொண்டு உய்யும் வழி தெரியாமல் திண்டாடுவதற்கும் காரணம் மங்கையரிடத்தில் அறத்தைக் கருதாமல் வெறும் இன்பத்தைக் கருதுவதுதான்.

பாலை அனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றி, என்றும்
மாலே கொண்டு

தர்மத்தின் வடிவமாக விளங்கும் பெண்களைத் தம்முடைய தாயாக, தங்கையாக, மகளாகப் பாவிக்க வேண்டும். தன்னுடைய சொந்த மனைவியை அறத்தை வளர்க்கும் துணையாகவும், அதற்குக் கூலியாகிய இன்பம் தருபவளாகவும் நினைக்க வேண்டும். அவ்வாறின்றி அறத்தை மறந்து, வீட்டு நெறிக்கு உரிய அறங்கள் செய்வதற்கு வேண்டிய துணை அவள் என்பதை மறந்து, அவளால் வரும் இன்பத்தைப் பெரிதாக நினைந்து பற்றினால் அதனுடைய பயன் மயல் அல்லது மயக்கந்தான்.

பிணத்தைத் தழுவுதல்

பெண்ணுக்கு உடம்பு, உள்ளம், உயிர் என்ற மூன்றும் இருக்கின்றன. உயிரால் பெண் ஆணோடு கலந்து உத்தமமான காதல் பண்ணுகிறாள். உள்ளத்தால் அவன் செய்யும் அறத்திற்குத் துணைவி ஆகிறாள். உடம்பால் அவனுக்கு இன்பம் தருகிறாள். உயிரையும் உள்ளத்தையும் புறக்கணித்துவிட்டு உடம்பை மாத்திரம் விரும்புகிறவன் ஊன்விலை வாணிகன் ஆகிறான். உயிர் அற்ற ஊன் பிணம். ஆதலால் பாலே அனைய மொழியார் தம் உயிரை

யும், உள்ளத்தையும் விலக்கி உடம்பினால் பெறுகின்ற பயனை மாத்திரம் அடைகிறவன் பிணத்தைக் கட்டிக் கொண்டு வாழ் கிறவன் ஆகிறான். அதனால்தான் விலைமகளை நாடுகின்றவர் களை,

''பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையுள்
ஏதில் பிணம்தழீஇ யற்று''

என்று வள்ளுவர் சொல்கிறார்.

இறைவன் செயல்

இறைவன் தட்சிணாமூர்த்தியாக மோனத்தில் இருந்தான். அந்த மோனம் கலைந்த பிறகு அறத்தின் வடிவமாகிய பார்வதியை மணம்செய்து கொண்டான். உலகத்தில் அறத்தை நன்கு நிலை நிறுத்தி வளரச் செய்ய வேண்டுமென்று கருதியே அறப்பெருஞ் செல்வியை மணந்தான். அந்தத் திருமணத்திற்குப் பின்பு முருகன் அவதரித்தான். முருகன் திருஅவதாரத்தினால் அறம் வளர்ந்தது; மறம் நலிவுற்றது.

காந்தியின் விளக்கம்

தவறான வழியில் சென்று குடி காமம் முதலியவற்றால் அலைப்புண்டு திரிந்த தம் மூத்த மகன் ஏன் அப்படி இருந்தான் என்பதற்கு மகாத்மா காந்தி விளக்கம் சொன்னார். ''நான் காம உணர்ச்சியோடு என் மனையாட்டியை நாடிய காலத்தில் பிறந்த வன் அவன். அதனால் இப்படி இருக்கிறான்'' என்று அவர் சொன்னார். அற நினைவு மாறி, இன்பம் ஒன்றையே குறியாகக் கொண்டு மனையாட்டியோடு சேர்ந்து வாழ்ந்தால் அது விலை மகளோடு வாழ்கின்ற வாழ்க்கை ஆகிவிடும்.

அறமும் இன்பமும்

இதனை நினைந்தே அருணகிரியார், ''பெண்களிடத்தில் அறத்தைக் கருதாமல் வெறும் இன்பத்தை மாத்திரம் எண்ணி மயக்கம் அடைந்து அதனால் உய்யும் வகையை இழந்தேன்'' என்று பேசுகின்றார்.

பாலை அனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண்டு உய்யும் வகை அறியேன்.

அறத்தைப் பற்றிக்கொண்டு அதனோடு நிழல்போல வருகின்ற இன்பத்தை நுகர்ந்து அதனால் வீடு அடைவதற்குரிய வழியில் நின்று வாழ்கின்ற வாழ்க்கை சிறந்த இல்வாழ்க்கை ஆகும். அந்த வாழ்க்கையில் மயக்கம் இல்லை; தெளிவு பிறக்கும். அப்போதைக்கப்போது கிடைக்கிற இன்பத்தோடு அறத்தினால் வருகின்ற பயனும் அந்த அறம் மேன்மேலும் வளர்ச்சிபெற்று வருவதற்கு உரிய பரம்பரை வளர்ச்சி ஆகிய மகப்பேறும் கிடைக்கும். இவற்றையெல்லாம் மறந்து வெறும் இன்பத்திற்கு மாத்திரம் மங்கையர்கள் இருக்கிறார்கள் என்று நினைப்பதைப் போன்ற பேதைமை வேறு இல்லை.

பரம்பரையின் இயல்வு

ஒரு மனிதனுடைய மனப் பண்பை அவனுடைய குழந்தைகளின் இயல்பு காட்டும் என்கிறார் திருவள்ளுவர்.

''தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்.''

ஒருவர் நாள்தொறும் கோயிலுக்குப் போய் ஆண்டவனுக்குப் பூசை செய்து வருகிறார். அவருக்குப் பிறக்கும் குழந்தை கடவுளே இல்லை என்று சொல்லித் திரிகிறான். இது ஏன் என்றால் கோயிலுக்கு அவர் உடம்பு சென்றது. உள்ளத்தில் வேறு ஏதோ நினைவு அவருக்கு இருந்திருக்கிறது. அதன் விளைவு இப்படி ஆயிற்று. அந்த உடம்பில் இராதது இந்த உடம்பில் வருகிறது. உள்ளத்தால் வாழ்கின்ற வாழ்வுதான் உண்மையான வாழ்வு. உள்ளத்தில் எத்தகைய இயல்பு சிறந்து இருக்கிறதோ அதுவே அவனுடைய குழந்தைகளிடத்திலும் வரும். அதனால் தான் அப்படி வள்ளுவர் பாடினார்.

தர்மத்துக்குத் துணையாக மனையாட்டியை நினைந்து அவளோடு அறத்தைச் செய்து இடையிடையில் இன்பத்தையும் நுகர்ந்து வாழ்ந்தால் அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் நல்ல குழந்தைகளாகப் பிறக்கும். அப்படியின்றி இன்பத்தை மாத்திரம் எண்ணி வாழ்ந்தால் அவருடைய வாழ்வும் பயனற்றுப் போய், பிற்காலத்துச் சந்ததியும் நல்ல வகையில் அமையாது.

இறைவன் தாள்

"என்னுடைய அறிவு அறத்தைப் பற்றிக் கொள்ளாமல் இன்பத்தைப் பற்றிக் கொண்டமையினால் வாழும் வகை தெரியாமல் மயக்கமுற்றுக் கிடக்கிறேனே! கொம்பு இல்லாமல் கொடி துவளுவது போல நான் துவளுகின்றேனே! இதற்கு நான் என்ன செய்வேன், ஆண்டவனே! உன் தாளைத் தேடிக் கொண்டு வரும் நிலைமையில் நான் இல்லை. அதனைப் பற்றிக் கொண்டால்தான் எனக்கு நன்மை உண்டாகும் என்று தெரிகிறது. என்னுடைய முயற்சியினால் அதனை அடைவதற்கு வகை இல்லாமல் இருக்கிறேன். நீயே உன்னுடைய பெருங் கருணையினால் தாமரை மலர்போன்ற திருத்தாளைத் தர வேண்டும்" என்கிறார் அருணகிரியார் .

உய்யும் வகை அறியேன் மலர்த்தாள் தருவாய்.

எம்பெருமானுடைய தாமரை போன்ற மலர்த்தாள் சுத்த ஞானத்தின் அடையாளம்.

"தொண்டர்கண்டு அண்டிமொண்டு உண்டு இருக்கும் சுத்த ஞானம்எனும்
தண்டையம் புண்டரிகம் தருவாய்"

என்று பிறிதோரிடத்தில் சொல்கிறார். இறைவனுடைய திருவடியைப் பற்றிக் கொள்வதாவது ஞானத்தைப் பெறுதல். ஞானம் உண்டானால் அறியாமை நீங்கும். மாயை நம்மிடத்தில் இடம் பெறாது.

பாலே யனைய மொழியார்தம் இன்பத்தைப் பற்றி, என்றும்
மாலேகொண்டு உய்யும் வகையறியேன்; மலர்த்தாள் தருவாய்.

எம்பெருமான் ஞான மயமானவன். அவனுடைய மலர்த் தாள் ஞானத்தின் பீடம். அதனைப் பற்றிக் கொள்கிறவனுக்கு ஞானம் உண்டாகும்; அஞ்ஞானம் போய்விடும். சோர்வு, துன்பம் ஆகியவை அகன்றுவிடும். அதனை நினைந்தே, "மயல்பட்டு, உய்யும் வகை தெரியாத எனக்கு ஞானமயமான உன் மலர்த் தாளைப் பற்றிக் கொள்ளும் வகையை அருளவேண்டும்" என்று அருணகிரியார் சொன்னார்.

இனி இந்தத் துதியை யாரை நோக்கிச் சொல்கிறாரோ அந்தப் பெருமானைப் பற்றிய செய்திகள் பின்பு வருகின்றன.

2

ஆதிசேடன்

முருகன் திருமாலுக்கு மருகன். அந்த உறவை எண்ணும் போது அருணகிரியார் திருமாலின் பெருமையையும் உடன் சொல்வதை நாம் பல இடங்களில் பார்த்திருக்கிறோம்.

திருமால் ஆதிசேடன்மேல் படுத்துக் கொண்டிருக்கிறார். ஆதிசேடனாகிய பாம்புக்குக் கால் இல்லை. பாம்பு காற்றையே உணவாகக் கொள்ளும் என்று சொல்வார்கள். ஆதிசேடன் என்னும் பாம்பு காற்றை மிகவும் உண்டு, காலே இல்லாத உருவோடு இருக்கிறது. ஆயிரம் தலையை உடையது அது. படத்திற்குப் பணம் என்று பெயர். ஒரே கூட்டமான பணத்தை உடைய ஆதிசேடன் மேல் திருமால் பள்ளி கொண்டிருக்கிறார். 'கால்' என்பதற்குக் காற்று என்றும், நடக்கும் கால் என்றும் இரண்டு பொருள் உண்டு. இதை வைத்துக் கொண்டு அருணகிரியார் இங்கே சமத்காரமாகப் பாடுகிறார்.

காலே மிகஉண்டு, காலே இலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன் மருக!

காலே மிக உண்டு என்று சொன்னார். பின்னர்க் காலே இலாத என்று மாறுபடுவது போலச் சொன்னார். முன்னால் உள்ள கால் என்பற்குக் காற்று என்று பொருள். பின்னாலே உள்ள கால் என்பதற்குப் பாதம் என்று பொருள். காற்றை மிகுதியாக உண்டு, காலே இல்லாத கூட்டமான படத்தை உடைய ஆதி சேடன் மேலே துயில் கொள்ளும் திருமால் என்று பொருள் கொள்ள வேண்டும்.

பாம்பு காற்றை மிகுதியாக உண்டு நல்ல படுக்கையாக அமைந்திருக்கிறது. காற்றை ஊதிய தலை அணையையும், படுக்கையையும் பிரயாணம் செய்கிறவர்கள் வைத்திருக்கிறார்கள், இக்காலத்தில். ஆதிசேடன் மூச்சு விடும் போது அதன் உடம்பு மேலும் கீழும் ஏறி இறங்கும். அது நல்ல வில்விசையுடைய மெத்தைபோல இருக்கும். அதில் படுத்து உறங்கினால் சுகமாகத் தூக்கம் வரும் அல்லவா? அது மாத்திரம் அன்று. பாம்பு குளிர்ச்சி யாக இருக்கும். மெத்தென்ற மெத்தை, தாழ்ந்து உயரும் சுகமான

மெத்தை, குளிர்ச்சியான மெத்தை - இப்படியாக அமைந்திருக் கிறது ஆதிசேடன். இதன் மேலே திருமால் துயில்கிறார்.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். ஒரு படத்தை உடைய நாகப்பாம்பைக் கண்டால் உலகமே அஞ்சி நடுங்குகிறது. ஆயிரம் தலையையுடைய ஆதிசேடன் மேல், அதையே படுக்கையாகக் கொண்டு அச்சம் இல்லாமல் தூங்கு கிறார் திருமால். தூங்குவது கவலையின்மையைக் காட்டுவதற்கு அறிகுறி. மற்ற எந்தக் கவலையும் இல்லா திருப்பதோடு, இந்தப் பாம்பு கடித்துவிடுமே என்கிற கவலையும் இல்லாமல் பாம்புப் படுக்கையின்மேல் திருமால் துயில்கிறார்.

கணபணத்தின் மேலே துயில்கொள்ளும்.

கணபணம் - பணங்களின் கூட்டம். அத்தகைய திரு மாலினுடைய மருகன் ஆகிய முருகனே என்ற விளித்து இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

மாலோன் மருகசெவ் வேலவனே!

நாகமும் பெண்களும்

நாம் உலகமாகிய மாயையில் சிக்கி, பெண்களிடத்தில் இன்பத்தைப் பற்றி நின்று அறத்தை மறந்து மயல் கொண்டு தவிக்கிறோம். இந்தக் காரணத்தால் பெண்களை எல்லாம் வெறுக்கலாமா? நல்ல பொருளாக இருப்பவற்றிலும் நம்முடைய அழுக்குச் சம்பந்தத்தால் அழுக்கைக் காண்கிறோம். நஞ்சை உடைய நாகத்தில் மாணிக்கம் இருக்கிறது. நஞ்சைக் கக்காமல் நாகத்தை அமிழ்த்தி வைத்திருக்கிறவனுக்கு அந்த மாணிக்கம் கிடைக்கும். பாலே அனைய மொழியாரிடத்தில் காமத்தைக் கருதாமல் அறத்தைக் கருதினால் நல்ல பயன் உண்டாகும். பாம்பை அடக்கும் வித்தையை நன்கு கற்றிருக்கும் குடும்பம் முருகப் பெருமானின் குடும்பம். அவனுடைய மாமா ஆதிசேட னின் ஆயிரம் படங்களையும் அமிழ்த்தி, அதனைத் தமக்குப் படுக்கையாகக் கொண்டு கவலை இல்லாமல் உறங்குகிறார்.

''எல்லோரும் அஞ்சுவதற்குரிய பொருளைக் கண்டும் அஞ்சாமல் அடக்கி வைக்கக் கூடிய திருமாலின் மருகன் நீ. அச்ச மின்றி அற நினைவோடு இன்பம் பெற்று வாழ்வதற்குரிய

துணையாகிய மகளிரிடத்தில் நான் நன்மை பெறாமல் தீமை பெறுகின்றேனே! இது நியாயமா?'' என்ற குறிப்பும் இந்தப் பாட்டில் தோன்றுகிறது.

வேலவன்

இங்கே முருகனை, ''செவ்வேலவனே'' என்று விளிக்கிறார். இறைவனுடைய திருக்கரத்தில் இருக்கிறது ஞானம் ஆகிய வேல். அஞ்ஞானம் ஆகிய அறியாமையினால் மகளிரிடத்தில் மால் கொண்டு துன்பப்படுகின்ற நமக்கு வேலைத் தன் திருக் கரத்தில் கொண்டு நிற்கின்ற முருகன் ஞானத்தை அருள்வான். அவன் நஞ்சுக்குப் பயப்படாத நாயகனுடைய மருமகன். ஆதலால் அவனைச் சார்ந்தவர்களுக்கு நஞ்சு போன்ற மாயையின் துன்பம் இராது. அறியாமை அகலும். இந்த நினைவை எல்லாம் எண்ணியே இந்த அருமையான பாட்டை அருணை முனிவர் பாடியிருக்கிறார்.



பாலே அனைய மொழியார் தம்
　　இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண்டு உய்யும் வகைஅறி
　　யேன்;மலர்த் தாள்தருவாய்;
காலே மிகஉண்டு காலே
　　இலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன்
　　மருக!செவ் வேலவனே!

(பால் போன்ற இனிய மொழியையுடைய மகளிரின் இன்பத்தைக் கைப்பற்றி எப்போதும் காம மயக்கத்தைக் கொண்டு, உய்யும் முறையை அறியாமல் இருக்கிறேன்; தாமரை மலரைப் போன்ற திருவடியைத் தருவாயாக; காற்றை மிக உண்டு கால்களே இல்லாத கூட்டமான படங்களையுடைய பாம்பின் மேலே கண் வளரும் திருமாலின் மருகனே! செம்மையான வேலை உடையவனே! மால் - காம மயக்கம். கால் - காற்று, பாதம். கணம் - கூட்டம். பணம் - படம்.)

வணங்காத் தலை

1

"இரும்பு பிடித்தவன் கையும், சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இரா" என்பது பழமொழி. இது மனத்திண்மை அற்றவனுக்கே பொருந்தும். மனத்திலே நடுநிலைமை வழுவாத ஞானிகளோ, கையிலே இரும்பு இருந்தாலும், சிரங்கு இருந்தாலும் கையை அசைக்க மாட்டார்கள். அவர்களுக்கு வாள் பிடித்திருக்கும் கை துருதுருப்பது இல்லையா? சிரங்கு பிடித்த கையில் அரிப்பு இருக்காதா? இருக்கும். ஆனால் அவர்கள் மனத்திலே திண்மை மிகுதியாக இருப்பதால் இவ்வுணர்ச்சிகள் செத்துப் போனாற் போல, மரத்துப்போனாற்போல, அடங்கிக் கிடக்கின்றன?

ரமணர் செயல்

முன்பே ஒரு முறை ரமண மகரிஷிகளைப் பற்றிச் சொல்லி யிருக்கிறேன். வண்டுக் கூட்டத்தின் நடுவிலே அவர் காலை வைக்க அவ்வண்டுகள் காலைக் கடித்தாலும், "ஏ, காலே, நீ ஏன் வண்டுக் கூட்டத்தைக் கலைத்து அவற்றுக்குத் துன்பத்தை விளை வித்தாய்? அதன் பலனை நீ அடையத்தான் வேண்டும்; படு, படு" என்று சொன்னாராம். வண்டுகளின் கடியை அவர் உடம்பு உணரவில்லை என்று சொல்ல இயலாது. அப்படித் தெரிந்த உணர்ச்சியினாலே அவர் மனம் கலங்கவில்லை. அவர் சரீரத் தோடு வாழும் போதே அதனினின்றும் வேறுபட்டு நின்றார் இது எல்லோருக்கும் முடியுமா என்று கேட்கலாம்.

கல்லுளி மங்கன் இயல்பு

கல்லுளிமங்கன் தன் கையைக் கீறிக் கொள்ளுகிறான். ஒழுகுகின்ற ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே மேலும் கீறிக்

கொண்டு பிச்சை கேட்கிறான். அந்தக் கோரக் காட்சியைப் பார்த்து எத்தனையோ பேர் காசைக் கொடுத்து விடுகிறார்கள். கையைக் கீறிக் காயமாவதனால் அவனுக்குத் துன்பம் இல்லையா? உண்டு. ஆனால் பிச்சைக் காசிலே அவனுக்கு இருக்கும் ஆசையின் வலிமை, கையைக் கீறிக் கொள்ளும்போது ஏற்படுகின்ற உணர்ச்சியை உணர்ந்தும் அதைப் பொருட்படுத்தாத திண்மையை அளிக்கிறது. இது வறுமையினால் உண்டாகும் மனத்திண்மை.

வீரன் நிலை

வீரத்தினால் எழுகின்ற மனத்திண்மையும் உண்டு. போர்க் களத்தில் ஒரு வீரன் தன்னைத் தாக்க வருகின்ற யானையை எதிர்த்தான். தன் கையிலுள்ள வேலை விட்டு யானையைக் கொன்றான். அந்த வேல் யானையின் உடலில் புகுந்து விட்டது. கையில் வேறு படை இல்லை. போர்க் கருவி எதுவுமின்றி, தன்னைத் தாக்க வருகின்ற பகைவரோடு போர் செய்ய என்ன ஆயுதம் கிடைக்கும் என்று சற்றே யோசித்தான். குனிந்தான், தன் மார்பிலே பகைவர்கள் வீசிய வேல் ஒன்று இருந்தது. அதைப் பறித்துக் கொண்டு போர் செய்தான்.

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்''

என்பது குறள். வேல் உடலில் தைத்த போதும் 'வலிக்கிறதே' என்று அவன் அழவில்லை. உடலில் பாய்ந்து நிற்கும் வேலை உருவிய போதும், ''நோகிறதே'' என்று அவன் கலங்கவில்லை. அவனுக்கு உணர்ச்சி இல்லாமலா போய்விட்டது? வலி உணர்ச்சி இருக்கும். வெற்றியின் மேல் உள்ள காதலின் வலிமை சரீர அபிமானத்தை மறக்கச் செய்தது. அந்த அளவுக்கு அவன் மனம் மரத்துவிட்டது.

பிச்சை வாங்கிப் பிழைக்கிற கல்லுளிமங்கன் காசினிடம் உள்ள பற்று மிகுதியால் கைகளைக் கீறிக் கொள்ளும்போது துன்பத்தை உணராத மனத்திண்மை உடையவனாக இருக்கிறான் என்றால், போர்க்களத்திலே அமர் செய்யும் வீர மகன் தன் மார்பிலே தாங்கி நிற்கும் வேலினால் ஏற்படும் நோவை உணராது வெற்றியின்மேற் கொண்ட காதலால் அதையே பறித்துக்

கொண்டு போராடும் அளவுக்கு மனத்திண்மை உடையவனாக இருக்கிறான் என்றால், அருளியலிலே வாழ்கின்ற மக்களுக்கு, எம்பெருமானின் தாளைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ் கின்ற மக்களுக்கு, மிகப் பெரிய உயர்ந்த லட்சியத்தை மனத் திடையே கொண்டு மக்களுக்கு, அதைவிடப் பன்மடங்கு மனத் திண்மை இல்லாமலா போகும்?

மெய்ப்பொருளார் வரலாறு

"மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" என்ற லட்சி யத்தைக் கொண்டு வாழ்ந்த அரசர் மெய்ப்பொருள் நாயனார். அவருடைய பகைவன் முத்திநாதன் எத்தனையோ தடவைகள் படை எடுத்து வந்து நாயனாரை வெல்ல முடியாமல் தோற்று ஓடிப் போனான். நேருக்கு நேர் நின்று அவரை வெல்லும் ஆற்றல் தனக்கு இல்லை என்பதை உணர்ந்து கொண்ட அவ்வஞ்சகன் எப்படியாவது அவரைக் கொன்றுவிட வேண்டுமென்று முடிவு கட்டினான்.

மெய்ப்பொருள் நாயனார் மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள் எனக் கொண்டு வாழ்பவர் என்பதை அவன் உணர்ந்தவனா கையால் சிவனடியார் வேடம் தாங்கிச் சென்றான். உடம்பெல் லாம் நீறு பூசிக் கையிலே ஒரு புத்தகக் கட்டுப்போன்ற ஒன்றை வைத்துக் கொண்டு அதில் மறைவாக ஒரு வாளைச் செருகிக் கொண்டு போனான். நேரே மெய்ப்பொருள் நாயனாரை அணுகி, "எங்கும் கிடைக்காத ஓர் ஆகம நூல் எனக்குக் கிடைத்திருக் கிறது. அதைஉனக்கு உபதேசிக்கலாம் என்று வந்தேன்" என்றான். நாயனார் அந்த உபதேசத்தைக் கேட்கப் பணிந்து நின்றபோது அந்த வஞ்சகன் வாளை உருவி அவரைக் குத்தி விட்டான். அப்பொழுது அவர் அவனை எதிர்க்கவில்லை. அவனைத் தொழுவதையும் நிறுத்தவில்லை. இதைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் சொல்கிறார்.

**"கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும்போழ்தில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்எனத் தொழுது வென்றார்"**

என்பது அவர் பாடல்.

வென்றவர் யார்?

முத்தி நாதன் மெய்ப்பொருள் நாயனாரைத் தொலைத்து விட வேண்டுமென்று வந்தவன். அவன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். அதுவரையில் பலமுறை போர் செய்து மெய்ப் பொருளாரை வெல்ல முடியாமல் தோல்வியுற்றே வந்தான். இப்போதோ சேனை இல்லாமலே ஒரு வாளைக் கொண்டே தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டான். ஆகவே, அவன்தான் வெற்றி அடைந்தான் என்று சொல்ல வேண்டும். மெய்ப் பொருளார் உயிர் விடும் நிலையில் இருக்கிறார். அவர் முத்திநாதனுக்கு வெற்றியை வழங்கிவிட்டார். இனி உயிரை வழங்கப் போகிறார். அப்படியிருக்கச் சேக்கிழார் இந்தப் பாட்டில் மெய்ப்பொருள் நாயனார் வென்றார் என்று சொல்லி யிருக்கிறார். அது பொருந்துமா?

சேக்கிழார் மாத்திரம் இப்படிச் சொல்லவில்லை. பெரிய புராணத்துக்கு ஆதாரமாகிய திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இப்படியே சொல்கிறார்.

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்"

என்று பாடுகிறார். இதைச் சற்றே ஆராய வேண்டும்.

மெய்ப்பொருள் நாயனாரும் முத்திநாதனும் சமமான நிலை யிலிருந்து ஒருவரை ஒருவர் எதிர்த்தால் அதைப் போரென்று சொல்லலாம். போரில் வெற்றி தோல்வி உண்டு. இன்னார் வென்றார், இன்னார் தோற்றார் என்று சொல்லலாம். இங்கே மெய்ப்பொருளார் உபதேசம் கேட்கப் பணிந்தார். முத்திநாதன் வாளெடுத்துக் குத்தினான். அவன் செய்தது போரன்று; அது கொலை. ஆகவே அவன் வெற்றி பெற்றான் என்று சொல்வது பிழை. அவன் நினைத்த எண்ணம் கைகூடியது என்று வேண்டு மானால் சொல்லலாம். அவனுக்கு வெற்றி இல்லை என்றால், மெய்ப்பொருளாருக்குத் தோல்வியும் இல்லை.

ஆனால், சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனார் வெற்றி பெற்றார் என்றல்லவா சொல்கிறார்? அது எவ்வாறு பொருந்தும்?

எது வென்றது?

முத்திநாதனுக்கும் மெய்ப்பொருள் நாயனாருக்கும் போர் நிகழவில்லை என்பது உண்மை. ஆனால் வேறு போர் அங்கே நிகழ்ந்தது. அது மிகவும் நுட்பமான போர். மெய்ப்பொருள் நாயனாருடைய கொள்கை, ''மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள்'' என்று தொழுவது. அந்தக் கொள்கையின்படி அவர் முத்திநாதனை வணங்கினார். அப்போது அந்தக் கொள்கையைத் தளரச் செய்ய ஒரு நிகழ்ச்சி நடந்தது. முத்திநாதன் வாளெடுத்துக் குத்தினான். மெய்ப்பொருள் நாயனாருடைய உடல் உயிரை இழக்கும் நிலையை அடைந்தது. உடம்பின் வேதனையும் உள்ளத்தின் கொள்கையும் எதிரெதிரே நின்று போராடின. சரீராபிமானம் வென்றதா, கொள்கை வென்றதா என்பதை நோக்க வேண்டும். அவர் தம் கொள்கையை விடாமல் தொழுதார். அதனால் அவர் வெற்றி பெற்றார்; அவர் லட்சியம் வென்றது.

முத்திநாதன் கத்தியால் குத்தியவுடனே மெய்ப்பொருள் நாயனார் இறந்துவிடவில்லை. கத்தி அவர் மார்பிலே இருக்கிறது. புற உடம்பு துடிக்கிறது. 'வஞ்சனைக்காரன் குத்திவிட்டான் பார்!' என்று துடிக்கிறது மனம். கத்தியால் முத்தி நாதன் குத்தியபோது புறத்திலே அவன் தாங்கி நின்ற சிவனடியாரின் தவவேடம் கலையவில்லை. அது அப்படியேதான் இருந்தது. மெய்ப்பொருள் நாயனார் கை கூப்பியது எதற்காக? அந்தத் தவ வேடத்திற்காகத் தான். அந்த வேடம் கலையாமல் அப்படியே இருக்கும்போது கூப்பிய அவரது கை, வாள் எடுத்து அவனோடு போராடலாமா? போராட வேண்டும் என்றது புறச் சரீர அபிமானம். ''கூடாது. மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று நீ வாழ்வதனால் தானே மெய்ப்பொருள் நாயனார் என்கிற புகழையும் பெற்றாய்? அத்தவவேடம் அப்படியே உள்ளது. ஆகவே கூப்பிய கை பிரியக் கூடாது'' என்றது பலகாலமாகக் கடைப்பிடித்து வரும் கொள்கை அபிமானம். இரண்டுக்கும் நடந்த போரின் முடிவு என்ன?

கொள்கையின் வெற்றி

மெய்ப்பொருள் நாயனார் முத்திநாதன் குத்திய செயலை மாத்திரம் பார்த்து, அவன் பூண்டிருக்கும் வேடத்தை மறக்க

வில்லை. கத்தி மார்பிலே பாய்ந்த போது அவருக்கு வலி இருந்திராதா? நிச்சயமாக இருந்திருக்கும். தம்மைக் கத்தியால் குத்தியவன் வஞ்சகன், சிவனடியார் வேடத்தைப் புனைந்து தன் முன் நிற்கிறான் என்பதை அவர் உணரவில்லையா? உணர்ந்தார். இருந்தும் அவன் சிவவேடம் கலையாமல் நின்றான். ஆகையால் அவனைத் தொழுதார்.

அவனை ஓடிவந்து தாக்கப் போன காவலாளியாகிய தத்தனிடம், ''தத்தா, இவர் நம்மவர்; இவருக்கு எவ்விதத் தீங்குமின்றி நீயே துணையாகச் சென்று வெளியே விட்டுவிட்டு வருவாயாக'' என்று பணித்துக் கீழே விழுந்தார். மெய்ப்பொருள் நாயனாரின் இருதயத்தில் ஊன்றி நின்ற கொள்கை அபிமானத்திற்கும், அவரது சரீர அபிமானத்திற்கும் நடந்த சண்டையில் சரீர அபிமானம் செத்தது; அவருடைய உடம்பு இறந்தே விட்டது. ஆயினும் அவர் லட்சியம் வென்றது. ''தங்கள் ஆணைப்படியே அவனை ஆபத்து இன்றி ஊருக்கு வெளியே கொண்டுபோய் விட்டு வந்தேன்'' என்று தத்தன் மீண்டு வந்து சொல்லும் அளவும் உயிரைத் தாங்கி நின்றார். அதனால் மெய்ப்பொருள் நாயனார் வென்றார். தொழுத கையைக் கடைசி வரையிலும் பிரிக்காது, தம் கொள்கையிலே கொண்ட முறுகிய காதலால் சரீர அபிமானம் செத்துப் போகச் செய்து மெய்ப்பொருள் நாயனார் வென்றார். ஆகவேதான்,

''மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுதுவென்றார்''

என்கிறார் சேக்கிழார்.

அவருக்குச் சரீர வேதனை இல்லாமற் போகவில்லை. ஆனால் அதனைப் புறக்கணித்தார். இந்த ஊன் நிறைந்த உடம்பை அவர் உறுதியினால் விட்டவரானார். இறைவன் திருவருளால் மனத் திண்மை பெறாத மக்கள் உடம்பாகிய கருவியைப் பொல்லாத வழியிலே பயன்படுத்திச் சொல்ல முடியாத தொல்லைகளை அநுபவிக்கிறார்கள். பிச்சைக் காசுக்கு ஆசைப்படும் மனம் புற உடம்பிலே விழுகின்ற கீறல் காயங்களை உணராமல் மரத்துப் போவது போல, வெற்றியிலே கொண்ட காதல் மனம் மார்பில் பாய்கின்ற வேலினால் உண்டாகும் துன்பத்தை உணராது மரத்துப் போவது போல, முத்திநாதனின் சிவவேடமே மெய்யெனக்

கொண்டு தொழுத மெய்ப்பொருள் நாயனார் அவன் தம்மைக் கத்தியால் குத்தியபோதும் வேடத்தைத் தொழுதபடியே நின்றார். அவர் மனம் கத்திக்குத்தின் துன்பத்தை அறியாமல் மரத்துப் போயிற்று; இது நடக்கும் என்று தோற்றவில்லையா? அவர்களுக்கு அவரவர்களுடைய அளவிலே சரீர அபிமானம் போய்விட்டது. கீறிய காயத்தைப் பொருட்படுத்தாமல் இருப்பது சாமானிய நிலை. மார்பிலே வேல்பட்ட நோவை உணராது இருப்பது அதையும் விடச் சிறந்த நிலை. வஞ்சகன் மார்பிலே கத்தியைச் செருகிய போதும் அவன் தவவேடம் கண்டு தொழுத கை பிரிக்காது நின்ற மெய்ப்பொருள் நாயனாரது நிலை மிகவும் உயர்ந்தது. இறைவன் திருவருளைச் சிந்தித்து வாழ்வார்களுக்கு இத்தகைய நிலை வரும்.

மெல்ல மெல்ல

அது மெல்ல மெல்லப் பழகிப் பழகி வரவேண்டும். பக்கத்தில் நிற்பவனுடைய கால் தவறிப்போய் நம்மேல் பட்டு விட்டால் நமக்குக் கடுமையான கோபம் வருகிறது. நம்முடைய வீட்டுக் குழந்தையின் கால் நம்மேல் பட்டால் கோபம் வரு கிறதா? குழந்தை உதைக்கிறது என்று சொல்லி அதன்மேல் ஆத்திரம் கொள்கிறோமா? பிறருடைய கால் நம் உடம்பின் மேல்படுவது இரண்டிடத்தும் பொதுவாக இருக்கிறது. அதை உதையாகவும் பார்க்கலாம்; ஸ்பரிசமாகவும் பார்க்கலாம். இந்த இரண்டு வகையில், நாம் பார்ப்பது நம்முடைய மனோ பாவத்தைப் பொறுத்திருக்கிறது. நம்முடைய பாவம் தவறாக இருந்தால் தவறாகத்தான் பார்ப்போம். நம்முடைய பாவத்திலே அபிமானம் நிறைந்து இருந்தால் அபிமானம் நிறைந்த தாய் உள்ளத்தோடு அன்பாகவே பார்ப்போம்.

இப்படியே உலக இயலில் எம்பெருமானிடத்தில் அபி மானம் வைத்துவிட்டால் எல்லாவற்றையும் நல்லனவாகவே உணருகின்ற நிலையும், எல்லோருக்கும் நல்லனவற்றையே செய் கின்ற ஆற்றலும் அடைந்துவிடலாம். பிறரிடத்தில் வைக்கும் அன்பு இறைவன்பால் உள்ள பக்தியால் வளரும். எல்லோரிட மும் அன்பு வைத்தால் நம் சரீர அபிமானம் மெல்ல மெல்லக் கழன்று போகும்.

எத்தனை வேகமாக நாம் இப்போது நடை போடுகிறோம்! ஆனால் குழந்தையாக இருக்கும்போது இந்த நடையைப் பயில எத்தனை முறை கீழே விழுந்திருப்போம்! நடைவண்டியைப் பிடித்துக் கொண்டும், தாயின் கையைப் பிடித்துக் கொண்டும் சுவரைப் பிடித்துக் கொண்டும் நடை பயின்றிருப்போம். சாமானிய நடைக்கே, உடம்பு நடக்கிற நடைக்கே அத்தனை பழக்கம் வேண்டுமானால் மனம் நல்ல பாதையில் செல்கிற நடைக்கு எத்தனை பழக்கம் வேண்டும்! உடம்பு நடக்கிற நடை மிகச் சாமானியமானது. உரை நடக்கும் நடையும் சாமானியந்தான். மனம் நடக்கிற நடைதான் மிகக் கடினமானது. மனம் நடக்கிற நடைக்குத்தான் ஒழுக்கம் என்று பெயர்.

''ஐயா என்ன, நல்ல நடை உடையவரா?'' என்று கேட்டால், ''அவர் நடையா? அவர் காலை விந்தி விந்தி நடப்பவராயிற்றே!'' என்றா பதில் சொல்கிறோம்? அப்படிச் சொன்னால் தமிழ் மரபு தெரியாதவர் ஆகிறோம். நடை என்பது அங்கே ஒழுக்கத்தைக் குறிக்கும். நல்ல ஒழுக்கம் உடையவனை, ''நல்ல நடை உடையவன்'' என்று சொல்வார்கள் தமிழர்கள். மனம் நடந்து செல்கிற வழிக்குத்தான் மார்க்கம் என்று பெயர். இந்த மார்க்கத்தைக் காட்டுபவர்களை, மன நடைக்கு, ஒழுக்க நெறிக்கு வழி காட்டுபவர்களை, மார்க்க தரிசிகள் என்றும், சமயாசாரியர்கள் என்றும் சொல்கிறோம். அவர்கள் காட்டுகின்ற மார்க்கம் மனத்தோடு பொருந்திய மார்க்கம். அதுதான் சமய நெறி ஆகும். அவ்வழியில் செல்ல வேண்டுமானால் மனம் மெல்ல மெல்ல அன்பு மயமாக வேண்டும்.

சமய நெறி

யாரிடமாவது போய் வழி கேட்டால் உடனே, ''அப்பா, நீ எங்கே போக வேண்டும்?'' என்று கேட்பார்கள். புறப்படுகிற இடத்திற்கும், சென்று சேருகிற இடத்திற்கும் இடையில் உள்ளது தான் வழி ஆகும். இந்த இரண்டும் இல்லாதபோது வழிக்கு இடம் இல்லை. நாம் இருக்கிற இடம் மாயப் பிரபஞ்சம், சென்று சேருகிற இடம் எது? எல்லா உயிர்களும் சென்று சேருகிற இடம் ஆண்டவனுடைய திருத்தாள்தான். நாம் இருக்கிற இடத்திலிருந்து இறைவனுடைய தாளைச் சென்று சேருகிறதற்கு இடையிலுள்ளது ஒரு நெடிய வழி. இந்தச் சமயமாகிற நெறி எல்லோருக்கும்

ஒன்றாக இருக்கும் என்றோ, இருக்க வேண்டுமென்றோ சொல்ல முடியாது. சேருகிற இடம் ஒன்றாக இருந்தாலும் அவரவர்கள் இருக்கிற இடம் வேறு பட்டிருப்பதால் அதற்குத் தக்கபடி வழியும் மாறும்.

மயிலாப்பூரில் உள்ளவன் மவுண்ட்ரோடு போக வடக்கே போகிறான். திருவொற்றியூரில் உள்ளவன் தெற்கேதான் வர வேண்டும். தெற்கே வருபவனுக்கும், வடக்கே வருபவனுக்கும் வழி வேறாக இருந்தாலும் இருவருக்கும் லட்சியமாகிய மவுண்ட் ரோடு வந்துவிட்டால் இருவரும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு விடுகிறார்கள். இப்படி வெளிவட்டத்தில் இருக்கும் போது பல பல சமய நெறிகளில் வேறுபாடு காண்கிறவர்கள் மையப்புள்ளியாகிய, லட்சியப் பொருளாகிய, ஆண்டவனுடைய திருத்தாள் அடியிலே வந்து சேர்ந்தவுடன் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்ட நிலையை அடைகிறார்கள். எந்த நாட்டைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த ஆசாரத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் ஆண்டவனுடைய திருத்தாளை அடைந்த ஞானிகளிடத்தில் எவ்வித வேற்றுமையையும் காண இயலாது. லட்சியத்திற்கு மாறான வழியில் செல்கிறவர்கள் வேறுபாட்டிலேதான் இருக்க வேண்டுமே தவிர, ஒன்று சேரவே இயலாது. உலக வாழ்க்கை யில் சரீர சம்பந்தமான சுகத்தையே நோக்கமாகக் கொண்டவர்கள் அந்த நோக்கத்தால், விருப்பு வெறுப்பு உடையவர்களாகிறார்கள்; அதனால் பலவிதமான தொல்லைகளைப் பெற்று அமைதியின்றி வாழ்கிறார்கள். கடவுள் என்ற லட்சியத்தை மையப் புள்ளியாகக் கொண்டு உலக வாழ்க்கையில் யாத்திரை செய்கிறவர்களுக்கோ நம்மைப் போல எத்தனையோ தொல்லைகள் இருந்தும் அமைதி யாக, எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். இதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு மையப் புள்ளி தெரிந்து விட்டது. இடை யிலுள்ள துன்பங்களை அவர்கள் மனம் உணர்ந்தும் உணராதது போன்று மரத்துப் போய்விடுகிறது.

குசேலர் பண்பு

நமக்கு இரண்டு குழந்தைகள் இருந்தாலேயே நாம் படு கின்ற தொல்லைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. குசேலருக்கு

இருபத்தேழு குழந்தைகள். இருப்பினும் அவர் ஏதாவது துன்பம் அடைந்தாரா? இன்னல் இல்லாமலா இருந்திருக்கும்? ஆனால் அவர் ஆண்டவன் என்ற லட்சியத்தைக் கொண்ட ஞானி; ஆதலால் அதிலே முறுகிய காதலை உடைய அவர் மனம் இவற்றை எல்லாம் உணராமல் மரத்துப் போய்விட்டது.

இப்படிச் சரீர அபிமானம் போக வேண்டுமானால் இறைவனுடைய திருவடியாகிய வீட்டை அடையும் ஆர்வம் மிக வேண்டும். முருகன் அத்தகைய பண்பை நல்ல வழியில் செல்லும் பான்மையை, நமக்கு அருள்வானாம். அப்படி அவன் பலருக்கு நற்பண்புகளைக் காட்டி ஆட்கொண்டிருக்கிறான். குருவாக உபதேசம் செய்து நல்ல குணங்களைக் காட்டி ஆட்கொண்டருளியிருக்கிறான்.

நிணம்காட்டும் கொட்டிலை விட்டுஒரு
வீடுஎய்தி நிற்கநிற்கும்
குணம்காட்டி ஆண்ட குருதேசிகன்.

2

உயிர் சுகமாக இருக்க வேண்டுமானால் நல்ல வீட்டில் அது வாழ வேண்டும். இப்போது அது இந்த உடம்பாகிய சிறு கொட்டிலில் வாழ்கிறது. உடம்பு வெறும் ஊன்குவை; நிணப் பிழம்பு. இது நிணங்காட்டும் கொட்டில். இதை விட மனம் இல்லாமல் இதைப் பற்றிக் கொண்டு அளவற்ற அபிமானம் வைத்து வாழ்கிறோம்.

உடம்பின்மேல் பற்று

உடம்புக்கு எந்தவிதமான கோளாறும் வரக்கூடாது என்று வேளை வேளையில் சாப்பிடுகிறோம்; நோய் வராமல் இருக்க மாத்திரைகளை விழுங்குகிறோம். தலை வலித்தால் போதும்; உடனே டாக்டரிடம் ஓடிக் காட்டுகிறோம்; அவர் ஊசியால் குத்தினாலும் சகித்துக் கொள்கிறோம்; கசப்பு மருந்தைக் கொடுத்தாலும் உட்கொள்கிறோம். இவையெல்லாம் எதற்காக? உடம்பிலுள்ள நிணத்தைக் காப்பதற்காக; பெருக்கிக் கொள்வதற்காக. நமக்கு உள்ள பொழுதில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது

பங்கை உடம்புக்காகவே செலவிடுகிறோம். இந்த உடம்பு, தனக்காக நம்மை எந்த எந்த வகைகளில் எல்லாம் ஆட்டி உருக் குலைக்கின்றது என்று கணக்கிட முடியுமா? அதனால்தான்,

"விதிகாணும் உடம்பை விடாவினையேன்"

என்று நொந்துகொள்கிறார் அருணகிரியார்.

நல்ல மாம்பழத்தைக் கண்டால் ஆண்டவனுக்கு நிவேதனம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் வருவதில்லை. வெடுக்கென்று கடித்துத் தின்னவேண்டு மென்ற ஆசை முந்துகிறது. நாக்கு ருசி, அந்த நினைப்பை வர வொட்டாமல் கெடுக்கிறது.

"இந்திரிய சுகம் ஒன்றே சுகம்" என்று கருதி உலகத்தில் வாழ்கிறோம். உடம்பின் சதை கொஞ்சம் குறையட்டும்; நம்மைப் பார்க்கிறவர்கள் கூட, "என்ன மிகவும் இளைத்துவிட்டதே! உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்கிறார்கள். நிணத்தை, மாமிசத்தை வளர்த்துக் கொள்வதில் அத்தனை அக்கறை!

நிணம் காட்டும் கொட்டிலை.

கொட்டிலும் மாடும்

மாமிசம் நிறைந்த கொட்டிலை நாம் வைத்துக் கொண்டிருக் கிறோம். மாடுகள் தங்கும் இடத்தைக் கொட்டில் என்பர். அங்கே ஒரே சாணம், மூத்திரந்தான் இருக்கும். கெட்ட நாற்றமாக இருக்கும். கொட்டிலில் மனிதன் வாழ முடியுமா?

நிணம் பொதிந்த உடம்பாகிய இந்தக் கொட்டிலில் மாடுகள் இருக்கின்றனவா? ஐந்து மாடுகள் இருக்கின்றன என்று திருமூலர் சொல்கிறார்.

இந்தக் கொட்டிலில் நாம் இருக்கிறோம் என்பது உண்மை தான். நம்மைத் தவிர வேறு ஐந்து பசுக்களும் இருக்கின்றன. பெரும்பான்மையாக இருப்பவை பசுக்கள். ஆதலால் இது நாம் இருக்கும் வீடு என்று சொல்ல முடியாது. பசுக்கள் வாழும் கொட்டில் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தக் கொட்டிலில் ஐந்து இந்திரியங்களாகிய பசுக்கள் வாழ்கின்றன. இந்த ஐந்தோடு ஆறாவதாக நாம் இருக்கிறோம். ஆகவே, உடம்பை நாம் வாழும் வீடு என்று சொல்வது தவறு.

இந்திரியமாகிய மாடுகள் வாழும் கொட்டில் என்பதுதான் சரி. திருமூலர் சொல்வதைப் பார்க்கலாம்.

திருமூலர் காட்டும் காட்சி

ஒரு பார்ப்பான், தான் வசிக்கும் ஒரு கொட்டிலை, ''என்னுடைய அகம்'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். அந்தப் பார்ப்பான் அகத்திலே அவனைத் தவிர ஐந்து பசுக்கள் இருக்கின்றன. பசுவின் பால் மிகவும் நல்லதாயிற்றே என்று எண்ணி அப்பசுக்களிடத்தில் அவன் பால் கறக்கப் போனால் அவை சீறுகின்றன. அவற்றைச் சரியாக அடக்கி மேய்க்கின்ற ஒருவன் இல்லாததனாலே அவை வெறித்துத் திரிகின்றன. தட்டிக் கொடுத்து அடக்கலாமென்று நெருங்கினால் கொம்புகளால் முட்டுகின்றன. வெறித்துக் கிடக்கின்ற கொண்டி மாடுகள் ஐந்தை வீட்டிலே வைத்துக் கொண்டு அரை ஆழாக்குப் பால் காசுக்கு வாங்கி ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்கிறான். பசுமாடுகள் ஒன்றுக்கு ஐந்தாக அவன் அகத்திலே இருந்தும் என்ன பயன்?

நல்ல மனிதர் ஒருவர் வந்து சேர்ந்தார். ''ஐந்து மாடுகளை வைத்துக் கொண்டு எதற்காகச் சுவாமி பால் வாங்குகிறீர்?'' என்று கேட்டார். ''ஐயையோ! அவை கொண்டி மாடுகள். அவற்றினிடம் போகவே நான் பயப்படுகிறேன். அருகிலே போனாலே முட்டுகின்றன; உதைக்கின்றன. நான் எப்படிப் பால் கறப்பேன்?'' என்று பார்ப்பான் அழுதான். வந்த மனிதர் சிரித்தார். ''ஐயா, பசுமாடுகள் இயல்பாகச் சாதுவானவை. உங்களுக்கு அவற்றை அடக்கத் தெரியவில்லை. எப்படி அடக்குகிறது என்று நான் சொல்லித் தருகிறேன், பாருங்கள். அப்புறம் அவை எவ்வளவு பால் கறக்கும் தெரியுமா?'' என்று சொல்லி அவற்றை அடக்கும் உபாயத்தைச் சொல்லிக் கொடுத்தார். ''மெள்ளத் தடவிக் கொடுங்கள். தேங்காயும் வெல்லமும் சேர்த்துக் கொடுங்கள். அப்புறம் மாடுகள் உங்கள் பின்னாலேயே வருகின்றனவா, இல்லையா, பாருங்கள். எதற்கும் ஓர் ஆளையும் போட்டுக் கொள்ளுங்கள்'' என்று தந்திரம் சொல்லிக் கொடுத்தார். அவன் அப்படியே செய்தான். மாடுகளின் வெறி அடங்கிவிட்டது. மேய்க்கிற ஆளும் கிடைத்தான். இந்தப் பார்ப்பான் குடத்தை எடுத்துக் கொண்டு மாடுகளுக்கு அடியில் போய் உட்கார வேண்டியது

தான். சுத்தமான பாலை, தண்ணீர் கலப்பில்லாத பாலைத் தாமே உவந்து உவந்து அவை சொரிந்தன.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன,
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே"

என்கிறார் திருமூலர். பார்ப்பான் யார்? அகத்திலே கண் கொண்டு பார்க்கின்றவன் பார்ப்பான். அவனுடைய உடம்பிலே பஞ்சேந் திரியங்களாகிய ஐந்து பசுக்கள் இருக்கின்றன. மேய்ப்பார் இல்லாமையினால் அவை வெறித்துத் திரிகின்றன. அவற்றை மேய்ப்பவனாகிய ஞானம் கிடைத்துவிட்டால் பார்ப்பானுடைய பசுக்கள் ஐந்தும் வெறி அடங்கிச் சாந்தமென்னும் பாலைச் சொரியும்.

அடங்காமல் திரிகிற ஐந்து மாடுகள் வாழும் கொட்டில் இந்த உடம்பு. நாற்றத்தில், கொசுக்கடியில் எத்தனை காலம் வாழ்வது? மாமிசம் நிரம்பிய இந்தக் கொட்டிலை விட்டுப் போகவேண்டும். எங்கே போவது? முத்தியாகிய வீட்டுக்குப் போக வேண்டும்.

வீடு

நம்முடைய விருப்பப்படி இருக்கிற இடம் வீடு. நாம் போகிற ஓர் ஊரில் ஒரு நண்பருடைய இல்லத்தில் எத்தனைதான் வசதிகள் இருந்தாலும் நமக்கு அங்கேயே நெடுநாள் இருப்புக் கொள்ளுவதில்லை. காரியாலயத்திற்குப் போகிறோம். நம் ஆணைக்குக் கைகட்டி நிற்க அங்கே சேவகர்கள் இருக்கிறார்கள். நல்ல அற்புதமான அறை நமக்காகவே இருக்கிறது. மின்விசிறி சுழலுகிறது. வீட்டில் விசிறி இல்லை. வேலையாட்கள் இல்லை. இருந்தாலும் மாலை ஐந்து மணிக்குமேல் ஒரு நிமிஷம்கூடக் காரியாலயத்தில் தங்க மனம் வருவதில்லை. வீட்டுக்கு வந்து உட்காரும்போது எத்தனை ஆறுதலோடு, "அப்பாடி!" சொல்லு கிறோம். காரணம் என்ன? காரியாலயத்தில் பிறருடைய கட்டுப் பாட்டுக்கு அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது. வீட்டிலே நம் மனம்போல இருக்க முடிகிறது. எத்தனை வசதிகள் இருந்தாலும் அடிமை நிலையில் இன்பம் வராது. சுதந்தரமாக இருக்கும்

வீட்டில் காணும் இன்பம் அது இல்லாத இடத்தில் இராது. உயிர் சுதந்தரமாக வாழும் இடமாகிய வீடு; முத்தி.

ஐந்து பசுமாடுகளுக்கு மத்தியிலே நிணத்தினால் கட்டப் பட்டுள்ள கொட்டிலில் ஆத்மாவுக்கு என்ன இன்பம் இருக்கும்? இதை ஞானிகள் உணர்ந்து, உடம்பினிடத்தில் அருவருப்புக் கொண்டார்கள்.

''ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றில் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்துவிட் டேன் இறை வாகச்சி ஏகம்பனே''

என்று பட்டினத்தடிகளார் பாடினார். உடம்பாகிய கொட்டிலை விட்டு, முத்தியாகிய வீட்டு இன்பத்தைப் பெற வேண்டுமென்று முயன்றார்கள் ஞானிகள். அதற்கு வேண்டிய அருளைச் செய்தான் முருகன் என்கிறார் அருணகிரி நாதர்.

நிணம்காட்டும் கொட்டிலை விட்டு ஒருவீடுஎய்தி
நிற்கநிற்கும்
குணம்காட்டி ஆண்ட குருதேசிகன்.

குருதேசிகன் – குருவுக்கும் குருவாகிய குருபரன். ''எல்லாக் குருக்களுக்கும் குருவாக விளங்கும் பரமேசுவரனுக்கே உபதேசம் செய்த சுவாமிநாதன், உபதேசம் பண்ணினான். மாமிசத்தினால் ஆன இந்த உடம்பாகிய கொட்டிலைவிட்டு, மோட்சமாகிய ஒரு வீட்டைப் பெற்று வாழும் மார்க்கத்தைக் காட்டி ஆண்டு கொண் டான்'' என்கிறார். யாரை ஆண்டுகொண்டான் என்று சொல்லா விட்டாலும் தம்மை ஆண்டுகொண்டதையே நினைத்துச் சொல்கிறார்.

'நிற்கும் குணம்' என்பது மனத்தின் நிலை. மனத்தின் வேறு பாடுகளைத்தான் குணம் என்று சொல்லுகிறோம். ''இன்ன வழி யிலே, இன்ன குணத்தோடு நிலைத்து நின்று, மாமிசத் தாலான கொட்டிலை விட்டு, என்றைக்கும் நிரதிசய ஆனந்தமாகிய ஒரு வீட்டைப் பெற்று விளங்குவாயாக'' என்று சொல்லி ஆண்டு கொண்டான் முருகன்.

இறைவன் அருள் இல்லாவிட்டால் சரீர அபிமானம் எளிதிலே விடாது.

3

இத்தகைய அரிய வழியைக் காட்டியவன் யார்?

அம் குறச்சிறுமான்
பணம்காட்டும் அல்குற்கு உருகும் குமாரன்

வள்ளிக்கு உருகியவன்

வள்ளி நாயகியினிடம் இன்பம் பெறுவதற்காக ஏங்கி உருகும் குமாரக் கடவுள் அந்த வழியைக் காட்டினானாம்.

உடம்பை அபிமானிக்காமல் மோட்ச வீட்டை அடைய வழி காட்டினவன், ஒரு பெண்ணிடத்தில் மயல் கொண்டு உருகினான் என்பது சரியாகத் தோன்றவில்லை. பெண் இன்பம் உடம்போடு சார்ந்தது. உடம்பின் அபிமானத்தை ஒழிக்காமல் அதற்கு இன்பம் தேடிய ஒருவனா சரீர அபிமானம் போக வழி காட்டினான்? இது முரணாக அல்லவோ இருக்கிறது? – இப்படிப் பல ஐயங்கள் சிலருக்கு எழலாம்.

முன்பே பல முறை, வள்ளி நாயகியை முருகன் திருமணம் செய்து கொண்டதன் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அவன் காதல் உடையவனைப் போலக் காட்டிக் கொண்டது, வள்ளியைத் தடுத்து ஆட்கொள்வதற்காகத்தான். ஆன்மாவாகிய வள்ளி நாயகியைப் பதியாகிய முருகன் கருணையினால் வலியச் சென்று ஆண்டு கொண்டான். வள்ளி நாயகியின் திருமணத்தில் முருகனுடைய பெருங்கருணை புலனாகிறது. அவன் கொண்ட காதல் காமத்தால் விளைந்ததன்று; கருணையின் வேறு உருவமே அது. இதனை நினைப்பூட்டவே இங்கே, ''உருகும் குமாரன்'' என்று சொன்னார். குமாரன் என்ற சொல்லுக்கு மாரனைக் குலைக்கும் பான்மையை உடையவன் என்று பொருள். முருகனுடைய அடியார்களிடத்திலேயே காமன் வாலாட்ட முடியாது என்றால் முருகனிடம் அவன் என்ன செய்ய முடியும்? முருகன் ஞானமூர்த்தி. அந்தப் பெரு நெருப்புக்கு முன் காமமாகிய ஈரம் நிற்குமா? முருகன் வள்ளியை ஆளவேண்டும் என்று உருகினான். ஆனால் அவன் போட்ட நாடகத்தில் அவளது இன்பத்தை விரும்பி உருகியவன் போல காட்டிக் கொண்டான். அப்படிக் காமத்தில் அகப்படுபவன் அல்ல அவன். மாரனைக் குலைக்கும் பான்மையையுடைய

குமாரன் அவன். இதனை நினைவுறுத்த வேண்டியே இந்த இடத்தில் குமாரன் என்ற திருநாமத்தை அமைத்தார்.

அருணகிரியாரின் இரக்கம்

அருணகிரி நாதர் தமக்கு வழி காட்டிய குரு தேசிகன் வள்ளிக்காக உருகுபவனைப் போல் வந்து ஆண்டவன் என்றார். பின்பு, அந்தப் பெருமானை வணங்கி உலகத்தில் பலர் பயன் அடையாமல் இருக்கிறார்களே என்ற இரக்கம் தோன்றியது. ''இப்படி வணங்காமல் வீணாகப் போகிறார்களே!'' என்று சொல்ல மனம் வராமல் அந்தக் குறையைத் தம் தலைமேல் போட்டுக் கொண்டார். ''என் தலை வணங்காமல் இருக்கிறதே!'' என்று கூறினார்.

முன்னாலே, ''வீடெய்தி நிற்க நிற்கும் குணம் காட்டி ஆண்ட குருதேசிகன்'' என்று சொன்னபோது, அவர் இறைவனை வணங்கி நல்ல வழியில் நின்று உடற்பற்றை விட்டு வீடு அடையும் தகுதியைப் பெற்றுவிட்டது தெரிகிறது. இப்போது நேர்மாறாக, ''ஐயோ! உன்னை வணங்காத தலை வந்து வாய்த்து விட்டதே!'' என்று வருந்துகிறார்.

முரண்பாடா?

''சுவாமி, முன்னாலே நீங்கள் பேறு பெற்றதைச் சொல்லி விட்டு, இப்போது இப்படிப் புலம்புகிறீர்களே! எது உண்மை?'' என்று அருணகிரிநாதரை நாம் கேட்கலாமா? அவர் இயல்பு நமக்குத் தெரியும். அவர் முருகன் திருவருளை முழுமையாகப் பெற்றவர். அவன் அருளின்பக்கடலில் திளைக்கிறவர். ஆனாலும் உலகில் துன்புறுகின்ற மக்களைக் கரையேற்ற வேண்டும் என்ற பெருங்கருணை கொண்டு வாயில்லாப் பூச்சிகளாகிய அவர்களுக்காகப் பல பாடல்களைப் பாடினார். அவர்கள் குறைகளைத் தம்முடையனவாகவே வைத்துப் பாடினார். குறைகளைச் சொல்லி வருந்தும் பாடல்கள் அவர் பெருங் கருணையைக் காட்டுவன; அநுபவத்தைக் கூறுபவை அவர் பெருமையைக் காட்டுவன. அவற்றைத் தனித்தனியே சொல்வதுதான் அவருக்குப் பெரும் பான்மையான வழக்கம். ஆனால் இங்கே இரண்டையும் ஒரே பாட்டில் வைத்துவிட்டார். முன் பகுதியில் தாம் பெற்ற

இன்பத்தைச் சொன்னார்; பின்பகுதியிலே அது பெறாதவன் நிலையிலே நின்று பாடினார். ஒரே நூலில் வெவ்வேறு பாட்டில் வெவ்வேறு நிலை பொருந்தும் என்றால், ஒரே பாட்டில் வெவ்வேறு பகுதியிலும் வெவ்வேறு பொருந்தும் என்று கொள்ளலாம் அல்லவா?

ஆனால் இதில் அருணகிரிநாதர் தப்புவதற்கு ஒரு வழி இருக்கிறது.

நிணம்காட்டும் கொட்டிலை விட்டொரு
 வீடெய்தி நிற்கநிற்கும்
குணம்காட்டி ஆண்ட குருதேசிகன்

என்பதில் இன்னாரை ஆண்ட என்று குறிக்கவில்லை. ''முன்பு இருந்த பல அன்பர்களை ஆண்டிருக்கிறான். அதை நினைந்து தான் சொன்னேன்'' என்று கூறி அவர் தப்பிக் கொள்ளலாம் அல்லவா?

இனி நமக்காக அவர் வருந்திக் கூறுவதைப் பார்க்கலாம்.

4

குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே
 எனக்கிங்ஙன் வாய்த்ததுவே?

முருகனுடைய திருவடி தாமரை போல இருக்கிறது. நல்ல பூவைத் தலையிலே சூட்டிக் கொள்வார்கள். முருகனுடைய பதாம்புயத்தை நாம் தலையிலே வைத்துக் கொள்ள வேண்டும். அது உள்ள இடம் தேடிச் சென்று அதன்மீது நம் தலை படும்படி வணங்க வேண்டும். நாம் அப்படிச் செய்வதில்லை.

உத்தமாங்கம்

இந்த உடம்புக்குள் எல்லா அங்கங்களையும்விட உயர்ந்த தாக விளங்குவது தலை. அதனால் உத்தமாங்கம் என்ற பெயர் அதற்கு வந்திருக்கிறது. அது இறைவனை வணங்கும் தன்மை உடையதாக இருந்தால் உத்தமாங்கந்தான். மூளை தலையிலே இருப்பதனாலே அது உயர்ந்து விடவில்லை. அந்த மூளையினால் தான் செருக்கு உண்டாகிறது. உடம்பில் உள்ள ஐந்து பொறிகளில்

நான்கு பொறிகள் தலையில் இருப்பதனாலே அது உயர்ந்து விடவில்லை. விலங்குகளுக்கும் அவ்வாறே இருக்கின்றன. பின் தலை உயர்வு பெறுவதற்குக் காரணம் அது எம்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆன்மாவுக்கு விடுதலை தேடித் தருவதே.

வணங்காத தலை

எம்பெருமான் சந்நிதானத்திலே வணங்காது நிமிர்ந்து நிற்கின்ற தலை என்ன பண்ணும்? இராமலிங்க சுவாமிகள் சொல்லுகிறார்.

''எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகு எடுக்கும் தலை''

விறகுக் கட்டைச் சுமக்கும் தலையாம் அது. விறகுக் கட்டையைத் தூக்கி வைத்துக் கொண்டவன் தலை வணங்க முடியாமல் நிமிர்ந்தே இருக்கும். எத்தகைய விறகு? இகழ் விறகு என்கிறார். கல்யாணத்திற்கு விறகு வேண்டும். தினப்படி உபயோகத்திற்கும் விறகு வேண்டியிருக்கிறது. ஆகையால் விறகு தூக்கி வருகிறவர்களைக் கண்டு யாரும் இகழ மாட்டார்கள்; அருவருப்படைய மாட்டார்கள். முருகன் திருவடியிலே தலை வணங்காது இருப்பவன் கல்யாணத்திற்கு விறகு வெட்டி வருகிறவனாகக்கூடப் பிறக்க மாட்டான். பிணத்தைச் சுடுவதற்குப் பயன்படும் விறகைச் சுமந்து வருபவனாகத்தான் பிறப்பான். அவன் எதிரே வரும்போது மக்கள் ஒதுங்கி நடப்பார்கள்; அருவருப்படைவார்கள். முருகனை வணங்காத தலை பிணத்துக்கு விறகு சுமக்கும் தலையாகி விடுமாம்.

''எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகு எடுக்கும் தலை.''

வணங்குகின்ற தலைதான் வளைந்த வில்போன்று வீரம் உடையதாக இருக்கும். நம் தலை எம்பெருமானின் சந்நிதானத்தில் வளைந்தால் பயன் உண்டு. வளையாது நிமிர்ந்திருக்கிறோம். முருகனுடைய பதாம்புயத்திலே வணங்காத தலை நமக்கு இருக்கிறது. இதை நாம் உணர்ந்து வருந்தத் தெரியாவிட்டாலும் நமக்காக அருணகிரியார் வருந்துகிறார். ''ஐயோ! ஆண்டவனுடைய சந்நிதானத்தில் வணங்காத இந்தத் தலை வந்து எனக்கு வாய்த்

திருக்கிறதே!'' என்று சொல்லித் தலையில் அடித்துக் கொள்வது போல இதைப் பாடுகிறார்.

குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலை வந்து இதுஎங்கே
எனக்கு இங்ஙன் வாய்த்ததுவே

''குமரேசனுடைய பாதத் தாமரைகளை வணங்க வேண்டும். அதுதான் தலையினால் உண்டான பயன்'' என்ற கருத்தை இதன் வாயிலாக அவர் உணர்த்துகிறார்.

பிறர் கருத்து

''கோள்இல் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்று வள்ளுவரும் கூறினார். ஆண்டவன் தாளும் அடியவர் தலையும் இணைய வேண்டும். தலை அதற்காகவே இருக்கிறது.

''வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து''

என்று மணிவாசகரும்,

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை''
''தலையே நீவணங்காய்''

என்று அப்ப முனிவரும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

★

நிணம்காட்டும் கொட்டிலை விட்டுஒரு
வீடுஎய்தி நிற்கநிற்கும்
குணம்காட்டி ஆண்ட குருதே
சிகன்,அம் குறச்சிறுமான்
பணம்காட்டும் அல்குற்கு உருகும்
குமரன் பதாம்புயத்தை
வணங்காத தலைவந்துஇது எங்கே
எனக்குஇங்ஙன் வாய்த்ததுவே?

(ஊனைக் காட்டுகிற மாட்டுக் கொட்டிலைப் போன்ற உடலை விட்டு ஒப்பற்ற மோட்சம் என்னும் வீட்டை அடைந்து அங்கே நிலையாக இருப்பதற்கு ஏற்றபடி நல்ல நெறியிலே நிற்கும் பண்பைக் காட்டி

ஆட்கொண்ட குருபரனும், அழகிய குறமகளாகிய சிறிய மானைப் போன்ற வள்ளியின் பாம்புப் படம் போன்ற இரகசிய உறுப்புக்காக உருகும் குமாரனுமாகிய முருகனுடைய திருவடியாகிய தாமரையை வணங்காத தலையாகிய இது எங்கே எனக்கு இப்படி வந்து வாய்த்தது?

நிணம் – ஊன். கொட்டில் – மாட்டுக் கொட்டகை. பணம் - பாம்பின் படம். வந்து என்பதை இங்ஙன் வந்து என்று கூட்டுக. பொருள் கருதாமல் வந்த சொல் என்றும் கொள்ளலாம். ''அங்கே வைத்துப் பார்த்தேன்'' என்ற வழக்கில் வைத்து என்ற சொல்லைப் போன்றது அது.)

குவியாக் கரங்கள்

1

உடம்பைப் பெற்றதன் பயன் உடம்பினுள் இருக்கிற ஆண்டவனை வணங்க வேண்டும் என்ற உணர்வு இல்லாமல் நாம் உலக இயலில் ஈடுபட்டிருக்கிறோம். இறைவனை வணங்க வில்லையே என்று நாம் வருந்துவதற்குப் பதிலாக,

"வணங்காத தலைவந்து இது எங்கே எனக்கு
இங்ஙன் வாய்த்ததுவே"

என்று அருணகிரிநாதர் நமக்காக வருந்தியதைப் போன பாட்டில் பார்த்தோம்.

தலைமாத்திரம் வணங்கவில்லையென்று சொன்னால் போதாது. மேலும் சில உறுப்புக்கள் இன்ன இன்ன காரியங்களைச் செய்ய வில்லை என்பதைத் தொடர்ந்து சொல்கிறார்.

கையின் சிறப்பு

கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் என்று சொல்லும் எல்லாவற்றாலும் இறைவனை வழிபடவேண்டும்; உடம்பில் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும் கை, கால், வாய், எருவாய், கருவாய் ஆகிய கர்மேந்திரி யங்கள் ஐந்தும் உள்ளன. ஞானேந்திரியங்களுக்குள் கண் சிறந்தது. கர்மேந்திரியங்களுக்குள் கை சிறந்தது. கை செய்கைக்கு அறி குறியாக இருக்கிறது. ஒரு காரியத்தை நன்கு செய்பவனைக் கையால் ஆகிறவன் என்றும், செய்ய முடியாதவனைக் கையால் ஆகாதவன் என்றும் சொல்கிறோம்.

ஐந்து பேர்கள் ஒரு மைல் தூரம் நடந்து போவது என்று தீர்மானித்துக் கொண்டு புறப்படுகிறார்கள். ஒருவன் இரண்டு பர்லாங்கு போவதற்குள், "அப்பா! என்னால் நடக்க முடியவில்லை"

என்று காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விடுகிறான். மற்றவர்கள் அவனைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். ''போடா காலால் ஆகாதவனே!'' என்றுதானே சொல்ல வேண்டும்? ஆனால், ''கையால் ஆகாதவனே!'' என்கிறார்கள். ''இரவு எத்தனை மணி நேரம் ஆனாலும் சரி, ஒரு புத்தகத்தைப் படித்து முடித்துவிடு கிறேன்'' என்று ஒருவன் சொல்கிறான். ஆனால் ஐம்பது பக்கங்கள்கூடப் படிக்காமல் படுத்துவிடுகிறான். அவனைப் பார்த்து, ''கையால் ஆகாதவன்; சொன்னபடி படிக்கவில்லை'' என்கிறோமே தவிர, ''கண்ணால் ஆகாதவன்'' என்று சொல்வது இல்லை. கை எல்லாக் கருமங்களுக்கும் முக்கியமானது ஆகை யால் எல்லா உறுப்புகளுக்கும் பிரதிநிதியாக அதை வைத்துச் சொல்வது வழக்கம்.

ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யும்போது இறைவனை நினைந்து சங்கற்பம் செய்து கொள்வது இந்த நாட்டு வழக்கம். நம்முடைய ஆற்றலை மாத்திரம் நம்பிச் செய்யாமல், இறைவன் திருவருளும் வேண்டும் என்று கருதியே இந்தச் சங்கற்பத்தைச் செய்து கொள்கிறார்கள். அப்படிச் செய்யும்போது இரண்டு கை களையும் சேர்த்துத் தொடையில் வைத்துக் கொண்டு ஆண்டவன் துணையை நாடுகிறோம். நாம் செய்கிற காரியங்களுக்குக் கை உதவும் கருவி; ஆதலால் சங்கற்ப முத்திரையைக் கையால் காட்டுகிறோம். இறைவனை வழிபடும் திறத்திலும் கை முக்கிய மாக இருக்கிறது. கை படைத்த பயன் இறைவனைத் தொழுவது.

வணக்க வகை

உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஒருவருக்கொருவர் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளச் சில அடையாளங்களைக் காட்டுகிறார்கள். கையை நெற்றியில் வைத்து வணங்கும் வழக்கம் பல நாடுகளில் இருக்கிறது. உள்ளங்கை பூமியைப் பார்க்க மார்பிலே வைத்துக் காட்டுவாரும் உண்டு. நாக்கை நீட்டி மரியாதை செய்வாரும் உண்டு.

நம்முடைய நாட்டில் நான்கு வகையில் வணக்கத்தை வெளிப் படுத்துகிறோம். வேகமாகப் போகும்போது கையைக் கூப்பிக் கும்பிடுகிறோம். சிறிதுநேரம் இருந்தால் கையைக் கூப்பும்போதே தலையைச் சிறிது குனிந்து வணங்குகிறோம். சற்றுப் பெரியவர்கள்

வீட்டுக்கு வந்தால் இரண்டு கைகளையும் பூமியில் வைத்து முழங்காலை மண்டியிட்டுக் கொண்டு நெற்றி நிலத்தில் படும் படியாக வணங்குவதும் உண்டு; இதற்குப் பஞ்சாங்க நமஸ்காரம் என்று பெயர். தலை, இரண்டு கை, இரண்டு கால் ஆகிய ஐந்து அங்கங்கள் பூமியில் படுவதால் பஞ்சாங்க நமஸ்காரம் என்று பெயர் வந்தது. பெண்கள் இப்படி வணங்குவது வழக்கம். ஆண்டவன் சந்நிதியில் வணங்கும்போது சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறோம். சாஷ்டாங்கம் என்பதற்கு எட்டு அங்கங்களுடன் செய்வது என்று பொருள். நெற்றி, இரண்டு கை, மார்பு, இரண்டு பாதம், இரண்டு முழங்கால் ஆகியவை நிலத்தில் படும்படியாக வணங்குவது சாஷ்டாங்க நமஸ்காரம்.

கீழே விழுந்து வணங்குவதைத் தண்டம் சமர்ப்பிப்பது என்றும் சொல்வார்கள். அதற்கு அபராதம் செலுத்துவது என்று பொருள் அல்ல. தண்டம் என்பது தடி. தடி சாய்ந்து விழுவது போல உடம்பு ஆண்டவன் சந்நிதானத்தில் கீழே விழுந்து வணங்கு வதனால், தண்டம் சமர்ப்பிப்பது என்று கூறுவர். 'தண்டாகரமாக விழுந்தேன்' என்று சொல்வது உண்டு. அது 'செய்யும் செயல் எல்லாவற்றையும் நான் விட்டு விட்டேன்' என்பதற்கு அறிகுறி. இறைவனுடைய சந்நிதானத்தில் இந்த உடம்பு கீழே கிடப்பதை அன்றி இதற்கு வேறு வேலை ஒன்றும் இல்லை.

இருட்டாக இருக்கும் இடத்தில் விளக்கு மிகவும் பிரகாசமாக ஒளி கொடுத்துக் கொண்டிருக்கிறது. கதிரவன் தோன்றிவிட்டால் அந்த விளக்குப் பயன் அற்றதாகப் போகிறது. அது அப்போது தன்னைக் காட்டிக் கொண்டு நிற்குமே தவிர வேறு பொருளைக் காட்டுகின்ற அவசியம் அதற்கு இல்லாமல் போகிறது. ஆண்ட வனை உணராத இடங்களில் எல்லாம் இந்த உடம்பு கால் களையும், கைகளையும் ஆட்டிப் பலவிதமான செயல்களைப் புரியும். ஆண்டவனுடைய சந்நிதானத்தில் இது செயலற்றுப் போகும். அப்படிப் போவதுதான் முறை. இறைவன் எங்கும் இருக்கிறான் என்பதை உணர்ந்தவர்களுக்கு உலகம் முழுவதுமே இறைவனுடைய சந்நிதானந்தான். ஆகையால் அவர்கள் எப் போதுமே செயல் ஒழிந்து நிற்கிறார்கள். அந்தச் செயல் மாண்ட நிலையை,

"கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்து ஆண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுஉள்ள வாசகம்மாண்டு என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ!"

என்று பாடுகிறார் மணிவாசகப் பெருமான். ஆகையால் இறைவன் சந்நிதானத்தில் தடிமாதிரியாக உடம்பைக் கீழே விழச்செய்து வணங்குகிறோம். அவனே எல்லாச் செயல்களுக்கும் மூலகாரணம் என்பதையும், இந்த உடம்பினாலே செய்கின்ற செயல் ஒன்றும் இல்லை என்பதையும் அந்த வணக்கம் காட்டுகிறது.

கும்பிடுவதன் கருத்து

அதுபோலவே கையைக் கூப்புவதும் செயல் ஒழிந்த நிலையைக் காட்டும். கையைக் கூப்புவதைத்தான் தொழுவது என்று சொல்வார்கள்.

"கைகாள் கூப்பித் தொழீர்"

என்று அப்பர் பாடுகிறார்.

"தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி"

என்பது மணிவாசகர் திருவாக்கு. கை குவிப்பதை அஞ்சலி என்று வடமொழியிலும், கும்பிடு என்று தமிழிலும் சொல்கிறோம். கும்பிடும்போது இரண்டு கைகளும் ஒன்று சேருகின்றன. இயற்கையாக நம்முடைய கைகள் விரிந்து பல பல செய்கைகளைச் செய்கின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் அந்தச் செய்கைகள் எல்லாம் ஒழிந்து ஒன்று சேர்ந்து குவிகின்றன. கைகளைக் குவிப்பதனால், "ஆண்டவனே, இனி என்னுடைய செயல் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்தேன். எல்லாம் உன்னுடைய அருட்செயலே" என்ற நினைப்பைக் காட்டுகிறோம். போலீஸ்காரர் ஒருவனைக் கைது செய்தால் கையைத் தூக்கும்படி சொல்வார்கள். அவன் கையை மேலே தூக்குவான். "என் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. நான் என் கைகளை உபயோகப்படுத்த மாட்டேன். உங்கள் வசம் ஆகிவிட்டேன்" என்பதற்கு அடையாளம் அது. அப்படியே இறைவனிடத்தில் அடிமை பூண்டு எல்லாம் அவன் செயல் என்ற உணர்ச்சி விஞ்சி, "ஆண்டவனே, இனி எனக்குச் செயல் இல்லை" என்று உணர்த்தும் அறிகுறியே கும்பிடு.

விரிதலும் குவிதலும்

கை நீளம் உடையவன் என்று திருட்டுக் குணம் உடையவனைச் சொல்கிறோம். கை விரிய விரிய உள்ளத்தில் ஆசை விரிகிறது. ஆகையால் முடிவு இல்லாத பிறப்பு இறப்பை உடைய வாழ்க்கை தொடர்ந்து வருகிறது. எத்தனைக்கு எத்தனை ஆசைகளையும் செயல்களையும் விரிவுபடுத்திக் கொள்கிறோமோ, அத்தனைக்கு அத்தனை துன்பமும் விரிந்து கொண்டு போகிறது. எத்தனை எத்தனை அவற்றைச் சுருக்கிக் கொள்கிறோமோ அத்தனைக்கு அத்தனை துன்பமும் சுருங்குகிறது.

பசு மாடு வைத்துக் கொள்ளவில்லை என்றால் உண்ணி எடுக்கும் வேலை இல்லை. புல் வாங்கிப் போடும் கவலை இல்லை. கொட்டில் அலம்பும் தொல்லை இல்லை. ஆள்காரனைத் தேடும் அவதி இல்லை. இப்படியே ஒவ்வொரு செயலிலும் பார்க்கலாம்.

''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்''

என்கிறார் வள்ளுவர். எந்த எந்தப் பொருளோடு தொடர்பு இல்லாமல் அறுத்துக் கொள்கிறானோ, எந்த எந்த நிகழ்ச்சிகளில் இருந்து விலகி இருக்கிறானோ அவ்வவ் வற்றிலிருந்து வருகின்ற துன்பம் அவனுக்கு இல்லை; தாபம் இல்லை. இந்தப் பாட்டை உடன்பாட்டு வாய்பாடாக மாற்றி,

''யாதனின் யாதனின் ஓங்கியான் நோதல்
அதனின் அதனின் உளன்''

என்று நாம் சொல்லலாம். எந்த எந்தப் பொருளோடு தொடர்பு வைத்துக் கொள்கிறானோ அந்த அந்தப் பொருளினால் துன்பம் உண்டு என்ற கருத்தை அந்தப் பாட்டுக் காட்டும். ஆகவே, கை விரிவதனால் நலம் இல்லை. கை குவிவதனாலே துன்பம் இல்லை. இதை நினைத்துக் கொண்டே,

''தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி''

என்றார் மாணிக்கவாசகர்.

2

கர்மேந்திரியங்களுக்குள் சிறந்தது கை. அது இறைவனை வணங்குவதில் ஈடுபடவில்லையே என்று அருணகிரிநாதர் வருந்து கிறார். "என்னுடைய கை நன்றாக இருக்கிறது. ஆனாலும் அது உன்னைக் கும்பிடவில்லை. அஞ்ஞானத்தினாலே உன்னைப் போற்றிக் குவியாத கரங்கள் எங்கே வந்து எனக்கு இப்படி வாய்த்தன!" என்று அவர் இரங்குகிறார். அதற்கு முன்பு அவர் சொல்லும் வரலாறுகள் அவரது சமரச மனோபாவத்தைக் காட்டு கின்றன.

அருணகிரிநாதரிடம் சென்று, "சுவாமி, வாழ்வில் உய்வு பெறுவதற்கு யாரோ ஒருவருடைய தாளில் வணங்கவேண்டும், அன்பால் கை கூப்பி அவரைப் போற்ற வேண்டும் என்று சொன்னீர்களே. அந்தப் பெருமான் யார்? அவரை எங்கே காண லாம்? அவரிடம் என்னை அழைத்துக் கொண்டு போகிறீர்களா?" என்று ஒருவன் கேட்பதாக வைத்துக் கொள்வோம்.

அருணகிரியார் அவனை அழைத்துக் கொண்டு முருகப் பெருமானுடைய திருமாளிகைக்குப் போகிறார். இனி நடப்ப வற்றைச் சற்றே கற்பனை செய்து பார்க்கலாம்.

கடல் அடைத்தோன்

குறிப்பிட்ட வீட்டிற்குள் நுழையும்போதே திண்ணையில் ஒருவர் படுத்துக் கொண்டிருக்கிறதைப் பார்க்கிறார்கள். உடன் வந்தவன் அவரே தாம் பார்க்கவந்த கடவுள் என்று எண்ணி விவரம் தெரிந்துகொள்ள அருணகிரியார் பக்கம் திரும்புகிறான். அப்போது அவர் சொல்கிறார்;

கவியால் கடல் அடைத்தோன்,

"முருகப் பெருமானுடைய மாமனாராகிய திருமால் அப்பா இவர். பத்து விதமான அவதாரங்கள் எடுத்துக் களைத்துப் போய் மாப்பிள்ளையின் வீட்டுத் திண்ணையில் வந்து படுத்திருக்கிறார். இவர் எடுத்த அவதாரங்களை ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் பிடிக்கும். ஒன்று மாத்திரம் சொல்கிறேன். இராமாவதாரத்தில் இவர் செய்த அற்புதத்தைச் சற்றுக் கேள். சீதா

பிராட்டியை இராவணன் தூக்கிச் சென்று இலங்கையில் சிறை வைத்துவிட்டான். இவர் நினைத்திருந்தால் பிராட்டியைத் தாம் இருந்த இடத்தில் இருந்தபடியே தம்மிடத்தில் அழைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. பிராட்டி சிறைப்பட்டிருந்த இலங்கை சென்றார். விபீஷணனுக்கு அருள் செய்ய வேண்டி அவன் இருந்த இடத்திற்கே போனார். அப்படிப் போகும்போது இடையிலுள்ள கடலுக்குப் பாலம் கட்டிச் சென்றார். அந்தப் பாலத்தை அவர் தாமாகக் கட்ட வில்லை. குரங்குகளைப் படையாகக் கொண்டு கடலை அடைத்துப் பாலம் கட்டச் செய்தார். அத்தகைய பெரியவராகிய இவருடைய மருகன் தான் நாம் பார்க்கப் போகிற பெருமான்'' என்று அருணகிரியார் இராமாவதாரத் திருமாலை அறிமுகம் செய்து வைக்கிறார்.

கவியால் கடல் அடைத்தோன் மருகோனை.

''குரங்குகளினால் கடலை அடைத்த திருமாலின் மாப்பிள்ளை யாகிய முருகனைப் பார்க்கலாம் வா'' என்று உள்ளே அழைத்துப் போகிறார்.

''உள்ளே இருக்கிற பெருமானுக்கு இவர்தான் மாமா. இவர் ஒரு குரங்காட்டி'' என்று சொல்வது போல அல்லவா கூறி அறிமுகம் செய்து வைத்தார்? இது மதிப்புடைய அறிமுகம் ஆகுமா? இதைச் சற்றே பார்க்கலாம்.

பயனுள்ள அறிமுகம்

நிரம்பப் படித்த ஒருவர் வேலை தேடி என்னிடத்தில் வரு கிறார். ''நான் எம்.ஏ, படித்து இருக்கிறேன். கிரிக்கெட் விளைய ாடுவேன். என்னைப் போல நீந்துபவர் யாரும் இல்லை. கல்லூரி யில் முதல் பரிசு பெற்றவன் நான்'' என்று பல வகையாகச் சொல்லிக் கொள்கிறார். அதனால் என்ன பயன்? அவை யாவும் உண்மையாக இருக்கலாம். பத்திரிகை ஆசிரியனான என்னிடத் தில் வேலை வேண்டுமானால், ''நான் கட்டுரை, கதை எல்லாம் எழுதுவேன். நன்றாக 'ப்ரூப்' திருத்துவேன்'' என்று சொன்னால் உடனே அவரால் நமக்கு உபயோகம் உண்டு என்று எண்ணுவேன்.

ஒரு நோயாளி தவிக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனை வைத்தியத்தில் மிகவும் கெட்டிக்காரரான ஒரு

டாக்டரிடம் அழைத்துப் போகிறோம். டாக்டருடைய வீட்டுக்குள் போனவுடன் நம்முடன் வந்திருக்கும் நோயாளிக்கு, ''இவர்தாம் டாக்டருடைய மைத்துனர். டாக்டருக்கு நான்கு பெண்கள் உண்டு. மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. இரண் டாவது பெண்ணுக்கு வரன் தேடுகிறார். இந்தக் கார் இப்போது தான் வாங்கினார்'' என்று அறிமுகம் செய்து வைத்தால் அவனுக்குச் சலிப்பு ஏற்படுமேயன்றி அதனால் அவனுக்கு என்ன பயன் உண்டாகும்? இவை எல்லாம் உண்மையே என்றாலும் எல்லா உண்மையையும் எல்லா இடங்களிலும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எந்த இடத்தில் எந்த உண்மையைச் சொன் னால் பயன் உண்டோ அதைச் சொல்லவேண்டும். நம்முடன் வருகிறவனோ நோயாளி. அவனிடம், ''போன மாதம் க்ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்ட ஒருவர் இவரிடம் வந்தார். ஒரே மாதத்தில் குணம் ஆகிவிட்டது. அதோ அந்த அம்மாளுக்கு இருதயமே கெட்டு இருந்தது. அதைச் சரிப்படுத்தினவர் இந்த டாக்டர்தாம்'' என்று சொன்னால் அவனுக்கு, 'இந்த டாக்டரால் நமக்கும் நன்மை உண்டாகும்' என்று எண்ணம் வளரும்.

அவ்வாறு திருமாலை அறிமுகம் செய்து வைக்க எத்தனையோ அடையாளங்கள் இருக்க அவற்றையெல்லாம் சொல்லாமல், ''இவர் குரங்காட்டி; குரங்குகளைக் கொண்டு கடலை அடைத் தவர்'' என்று சொல்கிறார். அதில் ஏதாவது சிறப்பு இருக்கிறதா என்று ஆராய வேண்டும். அருணகிரிநாதர் சிறந்த கருத்து அல்லா மல் அப்படிச் சொல்வாரா?

அவருடன் சென்றவன் குவியாத கரங்களையுடைய நோயாளி. கைகள் ஒரு விநாடிகூடக் கூடி அறியாதவன். அவனுக்கு அறி முகம் செய்து வைக்கும்போது அவனுக்கு ஏற்றபடியே சொல்ல வேண்டும். ''குரங்குகளினால் கடலை அடைத்தவர் அப்பா இவர்!'' என்றால் வியப்பு ஏற்படும். குரங்குகளின் இயல்பு நமக்குத் தெரியும். அவற்றுக்குக் கையால் கட்டத் தெரியாது; பிரிக்கத் தெரியும். கை கூப்பத் தெரியாது; விரிக்கத் தெரியும்.

குரங்கின் இயல்பு

குரங்கின் கை சும்மா இராது என்பார்கள். பூக்கட்டுகிற பண்டாரத்தின் கையும் சும்மா இராது. சிவாசாரியாரின் கையும்

சும்மா இராது. ஆனால் சிவாசாரியாரின் கை ஆண்டவன் திருத் தாளில் மலரை எடுத்து அர்ச்சித்துக் கொண்டிருக்கிறது. பண் டாரத்தின் கை நல்ல மண மலர்களை எடுத்து எடுத்து மாலை கட்டி ஒவ்வொரு கால பூஜைக்குள் ஆலயங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் குரங்குகளின் கை அப்படியா? கட்டின மாலையைப் பிரித்து, கிடைத்த பொருளைப் பிய்க்கிறது. அத்தகைய குரங்குகளை இராமன் ஆட்கொண்டான். பிரித்து எறிகிற குரங்குகளின் கையே பாலத்தைக் கட்டின. இராம சந்திர மூர்த்தி அவற்றை ஆட்கொண்டிராவிட்டால் அவற்றினிடம் குரங்குப் புத்திதான் இருக்கும்.

குரங்குப் புத்தி

குரங்குப் புத்தி எப்படி இருக்கும் என்பதைக் கம்பர் ஓர் இடத்தில் காட்டுகிறார். ஆஞ்சநேயன் சீதா பிராட்டியைத் தேடிக் கொண்டு இலங்கை வருகிறான். இலங்கை முழுவதும் தேடிப் பார்த்தும் அவள் இருக்கும் இடத்தைக் காண முடியவில்லை. 'இன்னும் எங்கே பார்க்கலாம்? நாம் என்ன செய்வது?' என்று மிக்க வேதனையுடன் இருக்கிறான்.

'நிச்சயமாக நான் சீதாபிராட்டியைக் கண்டுபிடித்து வருவேன் என்ற நம்பிக்கையால் அல்லவா இராமபிரான் நான் புறப்பட்டு வரும்போது தனியே அழைத்துச் சீதாதேவியின் அங்க அடை யாளங்களைச் சொல்லிக் கணையாழியையும் கொடுத்தார்? நானோ இந்த நிலையில் இருக்கிறேன். அவர் ஒவ்வொரு கணமும் நான் சீதா தேவியைக் கண்ட செய்தியோடு வருவேன் என்று எதிர் பார்த்துக் கொண்டு இருப்பாரே!' என்று எண்ணுகிறான்.

''கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தன்''

என்பது கம்பர் வாக்கு. உடனே ஆஞ்சநேயனுக்கு வேறு ஓர் எண்ணம் வருகிறது. 'எங்கள் அரசன் ஆகிய சுக்கிரீவன் தன் ஆணைக்கு அடங்கிய பலர் இருக்கவும், என்னை அழைத்துத் தெற்கே போ என்று சொன்னான். என்னிடம் அவனுக்கு எத்தனை நம்பிகை! சீதையை இராவணன் எங்கே ஒளித்து வைத்திருந் தாலும் நான் கண்டு பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்து விடுவேன் என்று அவன் நினைத்திருக்க வேண்டும். அவனும் என்னையும் சீதையையும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான்.'

"கவிகுலக்கோன் கொண்டுவரும் என்றிருக்கும்"

இப்படி இராமனும், சுக்கிரீவனும் நினைக்கின்ற நினைப்புகளில் வேறுபாடு இருக்கிறது. காகுத்தன் சீதையை ஆஞ்சநேயன் கண்டு வருவான் என்று எண்ணுகிறான். கவிகுலக்கோனாகிய சுக்கிரீவன் சீதையைக் கொண்டு வருவான் என்று எண்ணுகிறான். 'இலங்கை செல்லும் ஆஞ்சநேயன் சீதை இருக்கும் இடத்தைப் பார்ப்பான். கற்புடைய அப்பெருமாட்டி ஆஞ்சநேயனுடன் வரமாட்டாள். ஆகவே, கண்டு அந்தச் செய்தியைச் சொல்வதற்கு அவன் வருவான்' என்று இராமன் எண்ணுகிறான். சுக்கிரீவன் இராமனைப் போன்ற அறிவுச் சிறப்பு உடையவன் அல்ல. சீதையின் பெருமையையும் உணர்ந்தவன் அல்ல. அவன் கவி குலக்கோன்; குரங்கு அரசன். எதையும் லபக்கென்று பற்றிக் கொண்டு எடுத்து வருவது குரங்குகளின் இயல்பு. ஆஞ்சநேயன் சீதாபிராட்டியை ஏதோ ஒரு பண்டத்தைத் தூக்கிக் கொண்டு வருவதுபோலக் கொண்டு வந்து விடுவான் என்று அவன் நினைக்கிறான். எதையும் பற்றித் தூக்கிக் கொண்டு வருவது குரங்கினுடைய இயல்பு. குரங்கு அரசன் குரங்குக்கு ஏற்ற வகையில் நினைக்கிறான். சீதாதேவி அதற்குச் சம்மதிப்பாளா என்று யோசிக்கவில்லை. கற்புடைய மங்கையை ஆஞ்சநேயன் எடுத்துவர முடியுமா என்பதையும் கருதவில்லை. அவன் குரங்காக இருந்ததன்றி, ஆஞ்சநேயனையும் குரங்கு இயல்பினின்றும் மாறினவனாக எண்ணவில்லை. ஆகையால், "கவிகுலக்கோன் கொண்டுவரும் என்றிருக்கும்" என்று ஆஞ்சநேயன் நினைப்பதாகக் கம்பர் பாடுகிறார்.

குரங்குகள் அடைந்த மாற்றம்

குரங்கினுடைய இயல்பு பிரித்துத் தூக்கிக் கொண்டு வருகிறது என்பதற்கு இதைச் சொன்னேன். இராமனுடைய தொடர்பு பெற்ற பிறகு குரங்குகள் அற்புதமான மாற்றத்தை அடைந்தன. அவை இலங்கைக்குப் பாலம் கட்டின. அவை கட்டிய பாலம் எத்தகையது? கடல் நீரில் கட்டின. ஆழமான கடலுக்கு நீளமான பாலத்தைக் கட்டின. குரங்குகளிடத்தில் இருந்த அழிக்கும் சக்தி, பிரிக்கும் சக்தி, சிதற அடிக்கும் சக்தி இராமனுடைய தொடர்பினால் மாறிவிட்டது.

குரங்குப் பிடி

குரங்குகளிடத்தில் மற்றொரு சக்தியும் உண்டு. அதுதான் பிடிக்கிற சக்தி. குரங்குப்பிடி என்று சொல்வது உண்டு அல்லவா? குரங்கு பிடித்தால் லேசில் விடாது. குரங்குக்குப் பிரிக்கிறது எப்படி இயல்போ அப்படியே பிடிக்கிறதும் இயல்புதான். ஆனால் பிடிக்கும் இயல்பு மிகவும் அரிதாகவே காணப்படும். சமய நூல்களில் இறைவனைப் பற்றிக் கொள்ளும் திறத்தை இரண்டு வகையாகப் பிரிப்பார்கள். ஒன்று மார்ஜால நியாயம். மற்றொன்று மர்க்கட நியாயம். பூனைபோலப் பற்றுவது ஒன்று. குரங்கு போலப் பற்றுவது மற்றொன்று. தாய்ப்பூனை குட்டிகளை வாயால் கௌவிக் கொண்டு செல்லும். பூனைக் குட்டிகளுக்கு ஒரு வேலையும் இல்லை. இறைவன் தன்னைச் சார்ந்தவர்கள் சிலருக்கு ஒரு வேலையுமின்றி அவர்களுடைய இன்ப துன்பங் களை எல்லாம் தானே தன் பொறுப்பாக ஏற்றுக் கொண்டு காப்பாற்றுகிறான். இது மார்ஜால நியாயமாகும். மார்ஜாலம் பூனை. குரங்குகள் இயல்பு வேறு. குரங்கு குட்டியைப் பற்றிக் கொள்ளாது. குட்டியே தாய்க் குரங்கின் வயிற்றை இறுகப் பற்றிக் கொள்ளும். பிடியை விட்டால் குரங்குக் குட்டி கீழே விழ வேண்டியதுதான். அப்படி இறைவனைக் குரங்குக் குட்டிகளைப் போலப் பற்றிக் கொள்ள வேண்டும். அவனைச் சரணாகதி அடைந்துவிட்டால்தான் நமக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். இதுதான் மர்க்கட நியாயம் என்று சொல்வார்கள். மர்க்கடம் - குரங்கு.

குரங்குகளிடத்தில் பிடிக்கிற தன்மை எப்போதும் காணப்படுவ தில்லை. இராமனோடு சம்பந்தப்பட்ட அளவில் குரங்குகளுக்கு உள்ள பிய்க்கிற தன்மையும் பிரிக்கிற தன்மையும் மாறி, பிடிக்கிற தன்மை மேல் ஓங்கியது. அதனால் பாலத்தைக் கட்டி முடிக்கின்ற ஆற்றலைப் பெற்றன. அழிக்கும் சக்தி மாறி ஆக்கும் சக்தி உண்டாயிற்று.

உட்கருத்து

இதன் கருத்தை நாம் உணரவேண்டும், இராமாயணத்தை ஏதோ ஒரு காலத்தில் நிகழ்ந்த கதை என்று நினைக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது பழையதாகப் போய் இருக்கும். நமக்கு

அதனால் பயன் இல்லை. உட்கருத்தினால் இராமாயணம் நமக்கும் பயன்படுவது. நம் மனம் ஒரு குரங்கு. பரமாத்மாவாகிய இராமனோடு சேர்ந்திருக்க வேண்டிய ஆத்மாவாகிய சீதை இராமனிடம் இருந்து பிரிந்து தனியே இருக்கிறாள். சீதையாகிய ஆத்மாவைச் சிறை மீட்டால் பரமாத்வோடு போய்ச் சேருவாள். அவளைச் சிறை மீட்க வேண்டுமானால் மனம் ஆகிற குரங்குக்கு இறைவனுடைய தொடர்பு வேண்டும். எப்போதும் பிரிந்திருக் கிற மனம் என்னும் குரங்கை இராமன் தன்னுடைய அருளினால் ஆட்கொண்டான். பிரிக்கிற இயல்பு மாறிப் பிடிக்கிற இயல்பு வெளிப்பட்டது. இதுதான் பாலம் கட்டின கதையின் தத்துவம்.

''கூடாமல் பிரிந்திருக்கும் உன் கை எம்பெருமான் முரு கனுடைய அருளைப் பெற குவிய வேண்டும். அப்படிக் குவி வதற்கு உதவி செய்வான் திருமால்'' என்று உணர்த்துவாரைப் போல இங்கே அதற்கு ஏற்ற அடையாளத்தோடு திருமாலைக் காட்டுகிறார் அருணகிரியார்.

கவியால் கடல் அடைத்தோன் மருகோனை.

''குரங்குகளால் கடலை அடைத்தவன் ஆகிய இந்தப் பெருமானுடைய மாப்பிள்ளையை இனிமேல் உள்ளே போய்ப் பார்க்கலாம் வா'' என்று தம்முடன் அழைத்துப் போகிறார்.

பாம்பு அணிந்தவன்

கூடத்தில் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவர் உடம்பு எல்லாம் பாம்புகள் தொங்குகின்றன. அந்தப் பாம்புகளைக் கண்டவுடன் வந்தவனுக்கு அச்சம் உண்டாகிறது. கண்ணை மூடிக்கொண்டு, அருணகிரிநாதருடைய கையை இறுகப் பிடித்துக் கொள்கிறான். சில பாம்புகளுக்குப் பல படங்கள் இருக்கின்றன. எல்லாமே படமெடுத்து ஆடுகின்றன. ஒரே படங்களின் கூட்டம். படத்தை எடுத்துக் கொண்டு சீறி வரும் பாம்பைப் பார்த்து யார்தாம் அஞ்சமாட்டார்கள்? பாம்புக்குச் கட்செவி என்று ஒரு பெயர். அதற்குக் காது இல்லை. கண்ணே அதற்குக் காதாகவும் உதவுகிறது. ஒளியையயும் ஒலியையும் ஏற்றுக் கொள்ளும் கண்ணே செவியாக இருக்கிறது. அந்தப் பாம்புகளை அங்கே அமர்ந்திருக்கிற பெருமான் ஆபரணம் ஆக அணிந்திருக்கிறார். வீட்டிற்குள் நுழையும்போதே அருணகிரியார் ஒரு குரங்காட்டியைக்

காட்டினார். இப்போது ஒரு பாம்பாட்டியைக் காட்டுகிறார். "இந்தப் பாம்பாட்டியைக் கண்டு அஞ்சாதே. இவர்தாம் நாம் காண வந்திருக்கும் குழந்தைப் பெருமானாகிய முருகனுக்குத் தந்தை. இவருடைய பிள்ளையைத்தான் நாம் பார்க்க வேண்டும்" என்று தம்முடன் வந்திருப்பவனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

கணபணக் கட்செவியால் பணிஅணி கோமான் மகனை.

கணம் – கூட்டம். பணம் – படம். கூட்டமான படங்களை உடைய, கண்ணும் காதும் ஒன்றாக இருக்கிற கட்செவியாகிய பாம்பை ஆபரணமாக அணிந்து கொள்ளும் சிவபெருமானாகிய இந்தக் கோமான் மகனை நாம் காண வந்திருக்கிறோம் என்று அழைத்துப் போகிறார் அருணகிரியார்.

பாம்பும் சந்திரனும்

"திருமாலுக்கு எத்தனையோ அடையாளங்கள் இருந்தும் குரங்கைக் கொண்டு கடலை அடைத்தவர் என்று அறிமுகம் செய்து வைத்தீர்கள். அதற்குக் காரணத்தையும் தெரிவித்தீர்கள். பரமேசுவரருக்கு வேறு அடையாளங்கள் இல்லையா? இந்த அடையாளத்தோடு எனக்கு அறிமுகம் செய்து வைப்பதில் ஏதேனும் சிறப்பு உண்டா?" என்று கேட்கிறான் உடன் போனவன். அவர் விளக்குகிறார்.

பாம்புக்கும் சந்திரனுக்கும் பகை. நஞ்சு கக்கும் படங்கள் கூட்டமாக உடைய பாம்புக்குப் பக்கத்தில்தான் எம்பெருமான் ஜடாபாரத்தில் சந்திரன் இருக்கிறது. பாம்பு இருக்கிறதே என்று சந்திரன் அஞ்சுவது இல்லை. நமக்குப் பகையாகிய சந்திரன் இருக்கிறானே, அவனை விழுங்க வேண்டும் என்று பாம்பும் நினைப்பது இல்லை. பயத்தைக் கொள்ளாமல் சந்திரன் இருக் கிறான். சந்திரனை விழுங்கும் பகையாகிய பாம்புகளோ நஞ்சைக் கக்காமல் பகை உணர்ச்சியை விட்டுவிட்டுச் செயல் மாண்டு கிடக்கின்றன.

நம்முடைய மனம் என்னும் பாம்பு ஐந்து பொறிகளின் வாயிலாகப் பகையாகிய நஞ்சைக் கக்காமல் செயல் அற்று இருக்க வேண்டும். செயலற்று இருப்பதற்கு அறிகுறியாகத் தானே

கை குவிவது? நம்முடைய கரங்கள் குவியாமல் விரிந்திருக் கின்றன. அதனால் ஆசை மிகுந்து பல செயல்களைப் புரிந்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே சிவபெருமானை அறிமுகம் செய்து வைக்கும் அருணகிரியார், ''நஞ்சு கக்கும் நாகத்தைப் பகையுணர்ச்சி அடங்கி இருக்கும் படி ஆபரணமாகச் சூட்டிக் கொண்டவர் இவர்'' என்று அடையாளம் காட்டுகிறார்.

பகை நீங்குதல்

இறைவனுடைய திருவருள் இருக்கும் இடத்தில் பகையாக இருக்கும் பொருள்கள் எல்லாம் பகை நீங்கி ஒன்றுபட்டு வாழ்கின்றன. உலகில் எல்லா உயிர்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றால் எம்பெருமானுடைய திருவருள் நினைவு வேண்டும். புலியும், மானும் பகையுணர்ச்சி நீங்கி ஓர் இடத்தில் நீர் குடிக்கின்றன என்று நல்ல மன்னர்களுடைய ஆட்சிக்கு ஓர் அடையாளம் சொல்வார்கள். ஆண்டவன் திருவருளைப் பலமாகக் கொண்ட மன்னர்கள் அறத்தை வளர்த்தார்கள். அந்த அற ஆட்சியிலே விலங்கினங்களும் பகை தீர்ந்து வாழ்ந்தன.

''புலிபோன்ற உருவத்தையும், மான் போன்ற உருவத்தையும் பக்கத்தில் வைத்தால் புலியும் மானும் ஓர் இடத்தில் இருப்பது போலத் தோன்றும். அல்லது உயிர் அற்ற மானும், உயிர் அற்ற புலியும் ஓர் இடத்தில் இருக்கலாம். உயிரோடு இருக்கும்போது அவை இரண்டும் பக்கத்தில் பக்கத்தில் எப்படி நிற்கும்?'' என்று ஒரு கேள்வி எழலாம். பகைத் தன்மை உடைய விலங்குகள் பகை நீங்கி இருக்கின்ற செவ்வி பல உண்டு. இறைவனுடைய அருளி லேயே ஈடுபட்ட ஆனாய நாயனார் என்னும் பெரியவர் அத்தகைய அற்புதத்தைச் செய்தார். அது பெரிய புராணத்தில் வருகிறது.

ஆனாய நாயனார்

ஆனாய நாயனார் நீர்வளம், நில வளம் பொருந்திய சோழ நாட்டில் ஆயர் குலத்தில் தோன்றியவர், இறைவனிடத்தில் எல்லை இல்லாக் காதல் கொண்டு வாழ்ந்தவர். ஊரில் உள்ள கன்று காலிகளை ஓட்டிக் கொண்டு போய்த் தினந்தோறும் முல்லை நிலம் சென்று மேய்த்து வருவார். ஒவ்வொரு நாளும் அவர் மாடுகளை மேய்க்க அழைத்துச் செல்லும்போது அவ்விடத்

தில் புல்லாங்குழல் ஊதுவார். மாடுகள் காலார நடந்து மேய்ந்து கொண்டிருக்கும். அவர் தம் கையில் உள்ள புல்லாங்குழலை எடுத்துப் பஞ்சாட்சர மந்திரத்தை அதில் ஊதுவார். அவருடைய இன்னிசை காற்றில் பரவி அமுதம் புகுந்தது போல மக்கள் காதில் புகும். உயிர்க் கூட்டங்களின் காதில் புகுந்து அவற்றை வசம் ஆக்கும்.

அவர் மாடுகளை மேய்த்த காட்டில் பிறரை வருத்துகின்ற கொடிய விலங்குகள் இருந்தன. அவற்றால் துன்புறும் எளிய பிராணிகளும் இருந்தன. பாம்புகள் இருந்தன; பாம்பைக் கொத்தும் மயில்கள் இருந்தன. யானைகள் இருந்தன; யானை களை அடித்துக் கொல்லும் சிங்கங்களும் இருந்தன. மான்கள் இருந்தன; மான்களைத் தின்னும் புலிகளும் இருந்தன.

ஆனாய நாயனார் புல்லாங்குழலில் இருந்து வெளிப்படும் அந்த அமுத கீதநாதத்தைக் கேட்டு அவை யாவும் தம்முடைய இயல்பு மாறி ஒன்றுபட்டு நின்றன என்று சேக்கிழார் பாடுகிறார். அந்த விலங்கினங்களின் காதும் கருத்தும் கானத்திலே ஒன்று பட்டதனால் அவற்றின் இயல்பான பகை உணர்ச்சி மாய்ந்து போயிற்றாம்.

''நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றா நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயின்மீது மருண்டுவிழும்.''

வருத்துகின்ற வலியவர்களும், அவரால் துன்பத்தை அடை கின்ற எளியவர்களும் ஆனாயநாயனாரின் குழல் இசையைக் கேட்டு வேற்றுமை இல்லாமல் மனம் ஒருமைப் பட்டு லயித்து விட்டார்கள். அதனால் பாம்புகள் மயில்மீது மயங்கி விழுந்தன.

''சலியாத நிலையரியுந் தடங்கரியு முடன் சாரும்''

கெடாத வலிமையுடைய சிங்கங்களும், பெரிய யானைகளும் பகையுணர்ச்சி இல்லாமல் ஒன்றுபட்டுச் சேர்ந்து இருக்கும்.

''புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.''

புல்லை வாயில் வைத்துக் கொண்டிருக்கும் மான் அதனை நுகராமல் அப்படியே மயங்கி நிற்கும். அதன் அருகில் வாயைத் திறந்து கொண்டிருக்கும் புலி அந்தக் கீத நாதத்தில் தன்னை மறந்து நிற்கும். மான் புலி வாயில் போகாமல் அதன் பக்கத்தில்

நிற்கும். புல் மான் வாயில் போகாமல் அதன் வாயில் தொங்கும். மானுக்கும் புலிக்கும் உயிர் இல்லை என்று சொல்லலாமா? உயிர் இருந்தது. ஆனால் விலங்குணர்ச்சி இல்லை. அவற்றின் செவி வழியாகப் புகுந்த பஞ்சாட்சர கானம் மானின் கோழைத் தன்மையை மாற்றியது; புலியைக் கண்டு அஞ்சாமல் அதன் பக்கத்தில் நிற்கும்படி செய்தது. அப்படியே புலியினிடம் இருந்த புலித்தன்மையும் மாறிவிட்டது; அது, மானைக் கொன்று தின்ன வேண்டுமென்ற உணர்ச்சி இல்லாமல் திறந்த வாயை மூடாமல் நின்றது.

பகைமை இழந்த பாம்பு

இப்படியே பாம்பு தன் பாம்புத் தன்மையை இழக்கவும், சந்திரன் தன் கோழைத் தன்மையை இழக்கவும் இறைவனுடைய ஜடாபாரத்தில் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் செயல் அடங்கிக் கிடக்கின்றன. நஞ்சு கொப்புளிக்கும் நாகம் அவனுக்கு ஆபரணமாக விளங்குகிறது. ''பாம்புகளைச் செயல் அடங்கச் செய்து அணியாகச் சூட்டிக் கொண்டிருக்கிற பெருமான் இவர். இவருடைய பிள்ளையைத்தான் நாம் பார்க்கப் போகிறோம்'' என்கிறார் அருணகிரியார்.

உட்கருத்து

பாம்பு நஞ்சைக் கக்காமல் அணியாக மாறி இருப்பது போல ஐந்து பொறிகளாகிய படங்களை உடைய நம் மனம் என்னும் பாம்பு நஞ்சைக் கக்காமல் பரமேசுவரர் தாளைச் சார்ந்து அணியாகும் நிலையைப் பெறலாம். அதற்கு இந்தப் பெருமான் உதவி செய்வார் என்பது இதனால் புலனாகிறது.

பாம்பு அஞ்சுவதற்குரிய நஞ்சு உடையது ஆனாலும், அதை அடக்கிப் பாம்புத் தன்மையை மாற்றினால் அதுவே அணியாகி விடும். மனம் கெட்டதாக இருந்தால் அதன் விளைவும் கெடுதி யாக இருக்கும். அதை அடக்கி, அதன் கெட்ட தன்மையை மாற்றினால் அதுவே நமக்கு உதவியாக, ஆபரணமாக விளங்கும் என்ற கருத்து இங்கே புலப்படுகிறது.

கணபணக்கட் செவியால் பணியணி கோமான் மகனை.

''இத்தனை பெருமையுடைய மாமாவுக்கு மாப்பிள்ளை யாகவும், அப்பாவுக்குப் பிள்ளையாகவும் உள்ள அந்தக் குழந்தைப் பெருமான் எப்படி இருப்பார் சுவாமி? அவருக்கு என்று தனிப் பெருமை ஏதாவது உண்டா?'' என்று உடன் வந்தவன் அருணகிரி யாரைக் கேட்கிறான். அருணகிரியார் சொல்லத் தொடங்குகிறார்.

3

திறல் அரக்கர் புவியார்ப்பெழத்தொட்ட போர்வேல் முருகனை.

முருகப் பெருமானுடைய வீரத்தைச் சொல்கிறார், முருகப் பெருமான் தன் திருக்கரத்தில் வேல் தாங்கி இருக்கிறான். அந்த வேல் ஞானம்.

நல்லவற்றையும், நல்லவர்களையும் குலைப்பதையே தம் வேலையாகக் கொண்டவர் அசுரர். அவர்கள் முருகன் திரு அவதாரம் செய்த காலத்திலேயே, ''ஐயோ! இனி நாம் ஒழிந்து போவோம்!'' என்று அழ ஆரம்பித்துவிட்டார்கள்.

''கடல்அழக் குன்றுஅழச் சூர்அழ விம்மி அழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என்று ஓதும் குவலயமே''.

முருகப் பெருமான் குழந்தைப் பிராயத்தில் அறுவர் பாலுக்கு ஆசைப்பட்டு விம்மி அழுதான். அந்த அழுகை கேட்ட அசுரர்கள் அவன் எப்போது நம்மேல் போர் தொடுக்க வேலைத் தொடு வானோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் மெலிந்தவர்கள் அல்ல. மிக்க வீரம் பொருந் தியவர்கள்.

அசுரர் பலம்

திறல் அரக்கர்

நெஞ்சில் ஈரம் இல்லாத வீரம் உள்ள திறல் அரக்கர்; நன்மையைக் குலைக்கின்றவர்கள். நல்லவர்களுக்குத் துன்பம் விளைத்து, அவர்கள் அழக்கண்டு களிக்கும் இயல்பு உடையவர்கள். அவர்களைக் குலைப்பதற்கு முருகன் வேலைத் தொட்டான். தொடுதல் என்ற சொல்லுக்கு ஏவுதல் என்றும் உபயோகித்தல் என்றும் பொருள் உண்டு. ஆனால் இங்கே தீண்டுதல் என்று

பொருள் கொள்வது சிறப்பு. முருகன் வேலைக் கையில் தொட்ட மாத்திரத்தில் அதனுடைய எதிரொலியாக அச்சத்தால் நடுநடுங்கிக் கொண்டிருக்கும் அசுரக் கூட்டத்தில் பெரிய ஆரவாரம் எழுந்தது என்று பொருள் கொள்வது மிகவும் சிறப்பாகும். முருகப் பெருமான் போருக்கு வேலைத் தொட்டதைத் தேவர்கள் பார்த்தார்களோ இல்லையோ, சிவபெருமான் பார்த்தாரோ இல்லையோ, அல்லது எம் பெருமாட்டி பார்வதி பார்த்தாளோ இல்லையோ, வைத்த விழி வாங்காமல் முருகன் எங்கே போகி றான், என்ன செய்கிறான் என்று பார்த்து வந்த அசுரக்கூட்டங்கள் அவன் போர் வேலை எடுத்தவுடன் பார்த்து விட்டன. அது அசுரர்களுடைய உலகத்தில் எழும்பிய புலம்பல் ஒலியினால் நன்றாகத் தெரிகிறது. தவத்தினால் திறல் பெற்ற அசுரர்கள், படையினால் திறல் பெற்ற அசுரர்கள், உடம்பு வலிமையினால் திறல் பெற்ற அசுரர்கள் ஆகையால் திறல் அரக்கர் என்று சொல்கிறார் அருணகிரியார். அவர்களுடைய உலகத்தில் முருகன் போர்வேலைத் தொட்டவுடனேயே ஆர்ப்பு எழுந்தது. ''ஐயோ! நம்முடைய வைரி வேலை எடுத்துவிட்டானே! நம்மை அழிக்கப் பிறந்த குழந்தை தன் சிறு கையிலே வேலைத் தொட்டுவிட்டானே! இனி நாம் உய்ய முடியாது போல் இருக்கிறதே!'' என்ற புலம்பல் அசுரர் உலகத்தில் எழுந்துவிட்டது.

திறல் அரக்கர் புவிஆர்ப் பெழத்தொட்ட
போர்வேல் முருக்னை.

முருகன் வேலைப் பிரயோகம் பண்ணவேண்டுமென்பது இல்லை. வேலை எடுத்த மாத்திரத்தில் அசுரர்களுடைய உலகத்தில் துன்ப ஆரவாரம் எழுந்தது. விளக்கைக் கொண்டு வரும்போது இருள் ஓடுவதைப் போல ஞானம் தோற்றும்போது அஞ்ஞானம் குலைந்துபோகும். அசுர சம்பத்துகளாகிய தீய குணங்கள் ஞானம் தோன்றும்போது நிலைகுலைந்து கெட்டுவிடும். அப்படி எம் பெருமான் வேலைத் தொட்ட வுடனேயே அசுரர்கள் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது.

பயனற்ற கை

இப்படி அஞ்ஞானத்தைப் போக்கி, ஞானத்தையே வேலாகக் கைப்பற்றிய எம்பெருமானைப் போற்றித் தொழாவிட்டால்

நம்முடைய கை பயன் அற்ற கை ஆகிவிடும். அவன் கை, வேல் எடுக்கும் தன்மை உடையது. அஞ்ஞானத்தைப் போக்குவதற் குரிய திருவிளையாட்டைச் செய்வதையே தன் தொழிலாகக் கொண்டது. நம்முடைய கை செயல் ஒழிந்து அவன் முன்னால் குவிவதையே கடமையாகக் கொள்ள வேண்டும்.

''ஆண்டவனே, குரங்குகளின் பிய்க்கின்ற கையை, பிரிக்கின்ற கையை, மலைகளைத் தூக்கி வருகின்ற கையாகவும் கடலை அடைத்துப் பாலம் கட்டும் கையாகவும் செய்த உன் மாமாவின் பெருமை எனக்குத் தெரியும். நஞ்சைக் கக்குகிற பாம்புகளை அடக்கிச் சந்திரனிடம் அது கொண்ட பகையை மாற்றி, தம் அருகிலேயே ஆபரணமாக வைத்துச் சூட்டிக் கொண்டிருக்கிறார் உன் தந்தை. அவர் பெருமையும் எனக்குத் தெரியும். அந்தக் குடும்பத்தில் பிறந்தவன் நீ என்பதை நன்கு தெரிந்து கொண் டிருக்கிறேன். அவற்றோடு உன் பெருமையும் எனக்குத் தெரியும். எல்லா வகையாலும் திறம்படைத்த அரக்கர்களது உலகத்தில் வேதனை ஆரவாரம் எழும்படியாகப் போர் வேலைத் தொட்ட பெருமான் நீ. அஞ்ஞானத்தால் என் மனம் ஆகிய குரங்கு எதை யும் கட்டத் தெரியாமல் பிரித்துப் போட்டுக் கொண்டு சலித்து வருகிறது. பொறிகளாகிய படங்களை உடைய என்னுடைய மனமாகிய பாம்பு நஞ்சு போன்ற துன்பத்தை உண்டாக்குகிறது. அதனை அடக்கும் ஞான சக்தியாகிய வேல் உன்னிடத்தில் அல்லவா இருக்கிறது? ஞான வேலாயுதத்தை உடைய பெருமானே! உன்னை அணுகி, உன் திருச் சந்நிதானத்திலே அன்பால் குவியாத கரங்களை நான் படைத்திருக்கிறேனே! கை இருந்து என்ன பயன்? கர்மேந்திரியங்களுக்குள் மிகவும் சிறப்பான கையே எனக்குப் பயன்படாது போய்விட்டால் மற்றக் கருவிகள் எப்படிப் பயன்படும்?'' என்று நினைத்து, அந்த நினைப்பின் சாரமாக இந்தப் பாட்டை அருணகிரிநாதர் பாடுகிறார்.

முருகனைப் போற்றிஅன்பால்
குவியாக் கரங்கள்வந்து எங்கே எனக்குஇங்ஙன் கூடியவே?

அன்பாற் குவித்தல்

நம்முடைய கைகள் பல சமயங்களில் குவிகின்றன. தேர்தலில் எனக்கு வோட்டுப் போடுங்கள் என்று எத்தனையோ பேர்களுக்கு

முன்னால் போய் நின்று கையைக் குவிக்கிறார்கள். இறைவனுடைய சந்நிதானத்திலும் அவர்கள் கை குவிப்பது உண்டு; ''சுவாமி, என் பெட்டியில் நிறைய வோட்டுக்கள் விழ வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டு குவிக்கிறார்கள். விரிகிற கை குவிவதற்குக் காரணம் நெஞ்சிலே ஆண்டவன்பால் கொண்ட காதல் அல்ல; வேறு ஒன்றிடத்தில் கொண்ட ஆசைதான். அன்பு இல்லாமல் கரங்கள் குவிந்தாலும், குவியாமலே இருந்தாலும் ஒன்றுதான். ஆகவே நம்முடைய கை ஆண்டவனுடைய சந்நிதானத்திலே குவிவதற்கு முன்னாலே கருத்து அன்பினாலே குவியவேண்டும். அதனை நினைந்தே, 'அன்பால் குவியாக் கரங்கள்' என்றார் அருணகிரியார்.

கைகள் தாமே குவிதல்

பரஞ்சோதி முனிவர் கைகள் அன்பினாலே தொழும் முறையை அழகாகச் சொல்கிறார். மாணிக்கவாசகருக்குக் கைகள் குவிந்தன. 'அவர் குவிக்கவில்லை; தாமாகக் குவிந்தன' என்கிறார். அவர் மாணிக்கவாசகர் துதியைச் சொல்லும்போது இந்தக் கருத்தை வெளியிடுகிறார். மணிவாசகருக்கு வணக்கம் என்று அவர் சொல்லவில்லை. அவர் வீட்டில் ஒருவன் வேலை செய்து கொண்டிருக்கிறான். அவனுடைய வீடு தேடிச் சொன்று, ''அப்பா உனக்கு ஒரு கும்பிடு'' என்று அவன் காலில் விழுகிறார். ''சுவாமி, என் காலில் விழுவதற்கு நான் என்ன பெரியவனா?'' என்று அவன் நடுங்குகிறான். ''அப்படிச் சொல்லாதே. நீ யார் வீட்டில் வேலை செய்கிறாய் என்று எனக்குத் தெரியும். மணி வாசகர் வீட்டில் அல்லவா சேவகம் செய்கிறாய்? அவருக்குத் தொண்டு புரியும் பாக்கியம் பெற்ற நீ என்னைவிட எத்தனையோ உயர்ந்தவன் ஆயிற்றே!'' என்று அவர் காலைப் பற்றிக் கொள்கிறார்.

''தொழுதகை தலைமீ தேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்''

என்கிறார். மணிவாசகர் எப்படி உயர்ந்தவர் என்பதை இந்தப் பாட்டில் தெளிவாகச் சொல்கிறார். மறைகள் தேறா இறைவனை இரவும் பகலும் பூசித்து இன்புற்றவர் மணிவாசகர். இறை வனுடைய திருவருளிலேயே ஈடுபட்டு அவன்பால் கொண்ட அன்பினாலேயே அவர் கைகள் தாமாகக் குவிகின்றன.

"தொழுதகை தலைமீ தேற"

என்று பாடுகிறார் பரஞ்சோதியார். அவர் உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து க்ண்ணீர் ஆறாகப் பெருகி, தொழுத கைகள் அவரை அறியாமல் தலைமேல் ஏறுகின்றனவாம்.

அன்பு உள்ளத்தில் இல்லாவிட்டால் கைகள் குவிவது இல்லை. அன்பு இல்லாமல் கைகள் குவிவதால் அதற்குப் பயனும் இல்லை. அன்பினாலே நாம் கையைக் குவிக்கப் பழகிக் கொண் டோமானால் நம் நினைவு இல்லாமல் கைகள் தாமே குவியும் நிலைமை வந்துவிடும். இவற்றையெல்லாம் நினைந்து அருண கிரியார், "எம்பெருமானே! என்னுடைய கைகள் உண்மையான அன்பு காரணமாகக் குவியாமல் வீணாக இருக்கின்றனவே!" என்று பாடுகிறார்.



கவியால் கடல்அடைத் தோன்மரு
கோனைக் கணபணக்கட்
செவியால் பணிஅணி கோமான்
மகனைத் திறல்அரக்கர்
புவிஆர்ப் பெழத்தொட்ட போர்வேல்
முருகனைப் போற்றிஅன்பால்
குவியாக் கரங்கள்வந்து எங்கே
எனக்குஇங்ஙன் கூடியவே?

(குரங்குகளால் கடலை அடைத்த திருமாலின் மருமகனை, கூட்ட மாகிய படங்களை உடைய பாம்பால் ஆபரணம் அணிந்த பரமேசுவர னுடைய புதல்வனை, பலமுடைய அசுரர்களின் உலகத்தில் அச்சத்தால் ஆரவாரம் எழும்படி எடுத்த போருக்குரிய வேலை உடைய முருகனை, வழிபட்டு அன்பினாலே குவியாத கைகள் எங்கே எனக்கு இப்படி அமைந்தன?

கவி – குரங்கு. கணம் – கூட்டம். பணம் – படம். கட்செவி – பாம்பு. திறல் – வலிமை. அரக்கர் என்பது இராட்சதர்களுக்குரிய பெயராயினும் இங்கே அசுரர்களைக் குறித்தது. ஆர்ப்பு – ஆரவாரம் . இங்ஙன் – இவ்வாறு.)

இந்த வீடும் அந்த வீடும்

1

"இறைவனை வணங்காத தலை எனக்கு எங்கே வாய்த்தது? அவன்பால் அன்பு கொண்டு குவியாக் கரங்கள் வந்து எனக்கு எங்கே கூடின?" என்று சொன்னபிறகு அருணகிரியாருக்கு இந்த உடம்பைப் பற்றிய நினைப்பு வந்தது. இது எப்போதும் நிலையாக இருப்பது அன்று; ஆதலின் நிலையான ஒரு புகலிடம் வேண்டும் என்பதைச் சொல்கிறார்.

மூன்று உடம்புகள்

உயிருக்கு மூன்று உடம்புகள் உறைகளைப் போல் இருக்கின்றன. பனியன், ஷர்ட், கோட் என்று மூன்று சட்டைகளைச் சிலர் அணிந்து கொள்வது போன்றது இது. வெளியே தோற்றும் உடம்பு பருவுடல்; தூல சரீரம். அது உயிருக்கு வெளி உறையாக இருப்பது. இதனையன்றிக் காரண சரீரம், சூட்சும சரீரம் ஆகிய இரண்டு உட்சட்டைகள் வேறு இருக்கின்றன. நம் கண்ணுக்குத் தோன்றும் பருவுடல் மரணம் அடைந்தபின் அழிந்து போகிறது. தூல சரீரம் என்ற வெளிச் சட்டையை விட்டு உயிர் அகன்று விடுகிறது. ஆயினும் காரண சரீரம், சூட்சும சரீரம் ஆகிய இரண்டையும் அது விடுவது இல்லை. பிரளய காலத்தில் சூட்சும சரீரமும் போகிறது. அப்போதும் காரண சரீரம் அழிவது இல்லை. உயிர் எப்போதும் உடம்போடே இருக்கும் தன்மை வாய்ந்தது.

எல்லாக் காலத்தும் உயிர் ஒரு சரீரத்தோடு இருந்து இன்ப துன்ப அநுபவங்களைப் பெறுகிறது. உயிர் எந்தச் சரீரத்தின் தொடர்பும் இல்லாமல் நேரே அநுபவிக்கின்ற அநுபவம் முத்தி இன்பம் ஒன்றுதான். அது அல்லாத மற்ற இன்ப துன்ப அநுபவங்கள் எவற்றையும் உடலின் வாயிலாகத்தான் உயிர் அநுபவிக்க முடியும்.

இரும்பும் பாலும்

இரும்பைக் காய்ச்ச வேண்டுமென்றால் எரிந்து கொண்டிருக்கிற நெருப்பிலே அப்படியே தூக்கிப் போட்டு விடலாம். சிறிது நேரத்தில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்போடு இரும்பும் காய்ந்து தகதகவென ஒளி விடத் தொடங்கும். ஆனால் பாலைக் காய்ச்ச வேண்டுமானால் இரும்பைப் போட்டதுபோல அடுப்பிலே கொட்ட முடியாது. அப்படிக் கொட்டினால் பாலும் இராது, நெருப்பும் இராது. நெருப்பின் சூட்டை வாங்கி, அதனிடத்தில் சாரச் செய்கின்ற பாத்திரம் ஒன்று இடையில் வேண்டும்.

உடம்பும் அநுபவமும்

அவ்வாறே உயிர் நேரே அநுபவத்தைப் பெறுவது இறைவனுடன் இணைந்து முத்தியாகிய இன்பம் பெறும்போது தான்; இரும்பு நேரே சூட்டைப் பெறுவது போன்றது அது. அப்படியின்றி நல்வினை தீவினைகளின் பயனாகிய இன்ப துன்ப அநுபவத்தைப் பெறும்போது பாலுக்கும் தீக்கும் இடையிலுள்ள பாத்திரத்தைப் போன்று ஒரு சரீரம் வேண்டும். உலக அநுபவங்களாகிய இன்ப துன்பங்கள் சரீர சம்பந்தமாகவே வரும். உலகில் வாழும் போது இந்தத் தூல சரீரத்தின் சம்பந்தமாக அநுபவங்கள் வருகின்றன. உலகில் வாழ்ந்து, மரணம் அடைகிறவர்கள் நரகத் துன்பத்தையும், சொர்க்கலோக இன்பத்தையும் அநுபவிக்கிறார்கள். அந்த அநுபவம் எதைச் சார்ந்து வருகிறது? இந்த வெளி உடம்பு இல்லாவிட்டாலும் உள் உறையாக இருக்கிற சூட்சும சரீரத்தைச் சார்ந்து வருகிறது.

இத்தகைய மூன்று வகையான சரீரங்களில் எதுவுமே இல்லை என்றால் உயிர் நேரே இறைவனோடு ஒன்றி எல்லையில்லாத ஆனந்தத்தைப் பெறுகிறது. எனவே, உயிர் எப்போதும் தனித்து இராது. ஒன்று உடம்போடு ஒட்டி இருக்க வேண்டும்; அல்லது இறைவனைச் சார்ந்து இருக்க வேண்டும்.

உயிர் சரீரத்திற்கு உட்பட்டு இருப்பதே ஒரு வியப்புத் தரும் கட்டுப்பாடு. சரீரத்திற்குக் கட்டுப்பட்டு உயிர் இருக்கும் வரையில் பத்தன் என்றும், சரீரக் கட்டுப்பாட்டை விட்டபோது முத்தன் என்றும் சொல்வார்கள். கட்டுப்பட்டவன் பத்தன். விடுபட்டவன்

முத்தன். இறைவன் இயல்பாகவே முத்தனாக இருக்கிறான். அவனைச் சார்ந்த உயிர்களும் எல்லாவிதமான பந்தத்தினின்றும் விடுபடுகின்றன.

அற்புதமான உடம்பு

உலகில் வாழும்போது பல வகை நுகர்ச்சிகளையும் அடைகிற இந்தப் புற உடலை இறைவன் மிக அற்புதமாகவும் மிக நுட்பமாகவும் படைத்திருக்கிறான். இந்த இயந்திரத்துக் குள்ளே எத்தனையோ சிறிய சிறிய உறுப்புக்கள் இருக்கின்றன. புதிய புதிய இயந்திரங்களை விஞ்ஞானிகள் படைக்கும்போது கண்டு வியந்து போற்றும் நாம் உடலாகிய அற்புத யந்திரத்தைப் பார்த்து மிக்க வியப்பை அடைவதில்லை. எளிதில் நம் முயற்சி இல்லாமலேயே இது கிடைத்திருப்பதுதான் காரணம். எங்கே பார்த்தாலும் இருப்பதனால் இதன் அருமை தோன்றுவதில்லை. மிக நுட்பமான பொருளைக் காட்டும் 'மைக்ராஸ்கோப்'பைக் கண்டு வியக்கிறோம். தொலையிலுள்ள பொருளைக் காட்டு கின்ற 'டெலஸ்கோப்'பைக் கண்டு வாயைப் பிளக்கிறோம். நம் கண்ணின் பெருமையை எண்ணிப் பாருங்கள். இதற்கு நுண் பொருளைக் காட்டும் கருவியையோ, தொலை பொருளைக் காட்டும் கருவியையோ ஒப்பிடலாமா? கண்ணால் பிற பொருளைப் பார்க்கிறோம் என்பது மாத்திரம் அல்ல. எதிரே இருப்பவர் களுக்கு நம் இருதயக் கருத்தை எடுத்துக் காட்டும் கண்ணாடியாக வேறு இருக்கிறது. ''ஐயா கண் சிவந்து இருக்கிறது; கோபமாக இருக்கிறார்'' என்றும், ''நீர் வழிகிறது; துக்கம் போலிருக்கிறது'' என்றும் தான் காட்டுகின்ற அடையாளத்தைக் கொண்டே உள்ளத்தின் உணர்ச்சியை உணர்ந்து கொள்ளக் கருவியாக அது விளங்குகிறது. இப்படி எதிரே உள்ளதைக் காணவும் உள்ளத்தில் உள்ளதைக் காட்டவும் பயன்படும் கண் போன்ற வேறு ஓர் இயந்திரத்தை மனிதனால் ஆக்க முடியுமா?

அது கிடக்கட்டும். கைகளைப் பாருங்கள். நன்கு நீட்டவும் மடக்கவும் பொருள்களைப் பற்றி எடுக்கவும் விரல்கள் எத்தனை பொருத்தமாக அமைந்திருக்கின்றன! கைகளிலேயுள்ள ரேகைகள் சோதிடம் பார்ப்பதற்காக அமைந்தவை என்று சிலர் நினைக்க லாம். கை நன்றாக மடங்கி விரிய வேண்டுமானால் இடம்

வேண்டாமா? ரேகையில் மடங்கும்படி ஆண்டவன் அமைத்திருக் கிறான். இப்படிப் பற்பல வகைகளில் ஆச்சரியப்படும்படியாக, இறைவனுடைய திருவருள், உயிர் வாழ்வதற்கு உரிய வீடான இந்த உடம்பைக் கட்டிக் கொடுத்திருக்கிறது.

ஒரு வீட்டில் நாம் குடியிருக்கலாம். வீடு நமக்குச் சொந்தமானது அன்று. இருந்தாலும் நாம் அதில் வாழ்வதனாலே ஒட்டடை அடித்து வைத்துக் கொள்கிறோம். எங்காவது ஒழுகினால் ஓடு மாற்றிக் கொள்கிறோம். நம்முடைய வீடு அல்லவே; எதற்காக நாம் ஓடு மாற்றவேண்டும்? ஏன் ஒட்டடை அடித்துச் சுண்ணாம்பு அடித்து வைத்துக் கொள்ள வேண்டும்? நாம் அதில் வாழ வேண்டியிருக்கிறதே! பூச்சி, பொட்டுகள் விழும்; மழை பெய் தால் ஒழுகும். நாம் அங்கே வசிப்பதனாலே நமக்குத்தான் அவற்றால் துன்பம். வீட்டினால் வருகின்ற பொருள் ஊதியம் வீட்டுக்காரனுக்கு என்றாலும், அதனால் வருகின்ற துன்பங்கள் அங்கே இருப்போரைச் சார்கின்றன. அங்கே இருக்கும் காலம் வரையில் துன்பங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு நம்முடையதாகிறது.

உடம்பைப் பேணுதல்

அதுபோல உடம்பு நமக்குச் சொந்தமானது அல்ல என் றாலும், அதனால் வருகின்ற துன்பங்களைப் போக்கிக் கொண்டு அதை நன்றாக நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தைத் திருமூலர் சொல்கிறார்.

முதலில், "உடம்பு ஒரு மல பாண்டம். இழுக்குடையது. இதை எதற்காகப் பாதுகாக்க வேண்டும்?" என்றுதான் அவர் இருந்தாராம். பின்பு உடம்பினை நன்றாகப் பேணத் தொடங் கினார். எதற்காக? நன்றாகச் சதை வைக்க வேண்டும், ஊன் நன்றாக வளர வேண்டும் என்பதற்காக அன்று. உடம்புக்குள்ளே இறைவன் உறைகிறான் என்பதை உணர்ந்து கொண்டார். ஆண்ட வன் கோயிலாகிய இதை நன்றாகப் பாதுகாத்துக் கொள்வது முறையல்லவா? உடம்புக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டான் எனத் தெரிந்து கொண்டால், அவ்வுத்தமனைக் காண வேண்டு மென்று ஞானம் படைத்தவர்கள் உடம்பைப் பேணுவார்கள். ஆகவே,

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''

என்று சொல்கிறார் அவர்.

நாமும் உடம்பைப் பாதுகாத்துக் கொள்கிறோம். யோகிகளும் உடம்பை மிகவும் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறார்கள். இருவர் செயலும் ஒன்றாகுமா?

இரண்டு பேர் கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். தீட்டும் செயல் இரண்டு பேருக்கும் பொதுவானது. அதைப் பார்த்து, இரண்டு பேரும் கத்தி தீட்டுவது ஒரே காரணத்திற்காகத் தான் என்று சொல்ல இயலாது. இரண்டு பேரும் தீட்டிய கத்தியில் சுணை பார்க்கிறார்கள்; கூர் சரியாக ஏறியிருக்கிறதா என்று தொட்டுப் பார்க்கிறார்கள். தொட்டுப் பார்க்கும்போதே ஒருவன் கருத்தில், ''இந்தக் கத்தி சரியாக ஒரே வெட்டில் ஆட்டை வெட்டுமா?'' என்கிற எண்ணம் இருக்கிறது. மற்றொருவன் கருத்தில், ''ஆண்டவன் கோயில் கொண்டுள்ள ஆலயத்தின் பிராகாரத்திலுள்ள முள்ளை இக்கத்தி சரியாக வெட்டுமா?'' என்கிற கருத்து இருக்கிறது. கத்தியைத் தீட்டும் செய்கை ஒன்று தான். ஆனால் அச்செய்கைக்கு மூலகாரணமான எண்ணம் வேறுபடுகிறது. அதனால் விளைகின்ற விளைவுகளும் வேறுபடுகின்றன.

அப்படியே நாம் நம்முடைய உடம்பைப் பலவகையாலும் பேணும்போது உடம்பிலுள்ள இந்திரியங்களினால் வரும் இன்பத்தைக் கருத்தில் கொண்டு செய்கிறோம். ஞானிகளோ உடம்பினுள்ளே இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து, அவன் வாழ்கின்ற கோயிலாகிய வீட்டை நன்றாக வைத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தினால் ஓம்புகிறார்கள். இப்படிக் கருத்தில் வேற்றுமை இருப்பதனால் நாம் சாப்பிடுகிற சாப்பாட்டின் விளைவு வேறாகிறது. கண்ட கண்டபடி உணவுகளை உட்கொண்டு, நாம் உடம்பிலுள்ள இந்திரியங்கள் தருகிற இன்பத்தையே நுகர்ந்து அவை வன்மை இழந்த பிறகு வருந்திச் செத்துக் கொண்டிருக்கிறோம். மரணமில்லாப் பெருவாழ்வை

விரும்பும் ஞானியர்கள் அதை அடைவதற்குரிய கருவியாகிய உடம்பைப் பலவகையாலும் ஆராய்ச்சி செய்து அதை நல்ல வகையில் ஓம்பி லட்சிய சித்தி பெறுகிறார்கள்.

கால எல்லை

இந்த உடம்பாகிய கருவி நமக்கு எல்லாக் காலத்திலும் பயன்படுவதில்லை. இதற்குக் கால எல்லை உண்டு. அக்காலம் வரையில் உடம்பைப் பாதுகாக்க வேண்டியது இன்றியமை யாதது. எந்தக் காலத்தும் நாம் உடம்புக்கு அடிமை ஆகக் கூடாது. நமக்கு அடிமையாக இருக்க வேண்டிய அதனை, நமக்குத் தலைவனைப் போல மதித்து அதற்கு அடிமைப்பட்டு வாழ் கிறோம் நாம். உடம்பைக் கருவியாகக் கொண்டு, அதற்கு அடிமையாகாமல், அதை எந்தச் சமயத்திலும் உதறித் தள்ளும் நிலையில் வாழ்கிறார்கள் ஞானிகள்.

உடம்பாகிய இந்த வீட்டில் வாழும் நாம் உடம்பை விட்டு நீங்கினால் வேறு கட்டுப்பாடு இன்றி இறைவனுடைய திருத் தாளாகிய முத்தி இன்பம் ஒன்றையே பெறவேண்டும். அதுதான் நம் லட்சியம்; அப்படி இன்றி இந்த உடம்பை விட்டு வேறோர் உடம்பை எடுக்கும் நிலை வரக்கூடாது. நாம் இறந்து இறந்து பிறந்து கொண்டிருக்கிறோம். காரணம்: புற உடம்பு அழிகிறதே தவிர உயிருக்கு உட் சட்டையாக இருக்கிற சூட்சும காரண சரீரங்கள் அழிவில்லாமல் இருக்கின்றன. அவற்றை விட்டு உயிர் நீங்க வேண்டுமானால் அது சென்று சேருவதற்கு உரிய இறைவ னுடைய திருத்தாளைப் பெறும் முயற்சியைச் செய்ய வேண்டும். ''ஆண்டவனே! இந்த உடம்பை விட்டால் இனி எனக்குப் பிறவி கூடாது. உன் திருத்தாளாகிய வீட்டை நான் பெற வேண்டும்'' என்று சொல்ல வருகின்ற அருணகிரியார் இந்த உடம்பைப் பற்றி முதலில் சொல்கிறார். தெரு வீதியிலே படுத்து உறங்கும் ஏழையாக இருந்தாலும், மாட மாளிகையில் படுத்துக் களிக்கும் செல்வனாக இருந்தாலும் பிறக்கும்போது எவ்வித வேற்றுமையும் இல்லாமல் இறைவனால் கட்டிக் கொடுக்கப்பட்ட குடிசையோடுதான் வருகிறார்கள். இந்தக் குடிசை நமக்குச் சொந்தமானது அல்லவே என்று அலட்சியம் செய்யவும் முடியாது.

2

தோலால் சுவர்வைத்து, நாலாறு காலில் சுமத்திஇரு
காலால் எழுப்பி, வளைமுதுகு ஓட்டிக்கை நாற்றிநரம்
பால்ஆர்க்கை யிட்டுத் தசைகொண்டு வேய்ந்த

குடிசை இது.

இந்த அகம்

சின்ன குடிசை கட்டினாலும் நான்கு புறங்களிலும் சுவர் வைக்கிறோம். இந்த உடம்பாகிய சிறிய குடிசைக்குச் சுவராக இருப்பது தோல்.

தோலால் சுவர்வைத்து.

தோலாலே சுவர் வைத்து என்று மட்டும் சொல்கிறார் அருண கிரியார். யார் வைத்தார்கள் என்று சொல்லவில்லை, நாமே நம் உடம்பைப் படைத்துக் கொண்டோம் என்று சொல்லலாமா? நாம் பிறந்த பிறகு உடம்பு உண்டாகவில்லை. நமக்குத் தெரியாமலே உடம்போடு பிறக்கிறது உயிர். ஆகவே நாம் உடம்பைப் படைத்துக் கொண்டோம் என்று சொல்ல முடியாது. நம்முடைய தாய் தந்தையர்கள் படைத்தார்கள் என்று சொல்ல லாமா? அப்படியும் சொல்ல இயலாது. அவர்கள் படைத்தது என்றால் ஊனத்தையும், முடத்தையும் படைப்பார் களா? மனைவி யும் சிவப்பு, கணவனும் சிவப்பு. தங்களுடைய குழந்தையும் சிவப்பாகப் பிறக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள். கறுப்புக் குழந்தை பிறக்கிறது! அவர்கள் படைத்தால் அப்படிப் பிறக்குமா? ஆகவே உடம்பைப் படைப்பதற்கு நாமும், நம் பெற்றோர்களும் காரணம் அல்ல. படைப்பதற்கு மூலமான சக்தி ஒன்று தனித்திருக்கிறது. அந்தச் சக்திதான் இறைவன். அதை எப்படி அவன் படைத்திருக்கிறான்?

தச வாயுக்கள்

தோலால் சுவர் வைத்து நாலாறு காலில் சுமத்தி.

நான்கு புறங்களிலும் தோலால் சுவர் வைத்திருக்கிறான். வீட்டுக்கு நான்கு சுவர்கள் இருந்து விட்டால் மாத்திரம் போதா.

கால் நாட்ட வேண்டும்? இந்த வீட்டுக்கு ஆதாரமாக இருப்பவை நாலாறு கால்கள். நாலு ஆறு என்பதற்கு இங்கே பத்து என்று பொருள்கொள்ள வேண்டும். பத்துக் கால்களின் மேல் இந்த வீடு வைக்கப் பட்டிருக்கிறது.

பிரயாணத்திலே போடுகின்ற கூடாரம் போன்றது இந்த வீடு. எப்போதும் இது நிலையானது அன்று. இந்த வீடு பத்துக் கால்களிலே சுமத்தி இருக்கிறது என்கிறார் அருணகிரியார். அவர் ஒரு புலவர். கொஞ்சம் நயமாகச் சொல்கிறார். கால் என்றால் தூண் என்றும் சொல்லலாம்; காற்று என்றும் சொல்லலாம். இந்த உடம்பாகிய வீட்டைத் தாங்குபவை பத்துக் கால்கள்; பத்து வாயுக்கள்.

மூச்சுப் போய்விட்டால் பிணம் என்று உடம்பு அழைக்கப் படுகிறது. வாழ்கின்ற மனிதனின் உடம்பைத்தான் உடம்பு என்று சொல்கிறோம். வாழ்கின்ற மனிதனின் உடம்பிலே பல வகை யான நாடி, நரம்புகள் இருக்கின்றன. 72 ஆயிரம் நாடிகள் இருக்கின்றன எனச் சொல்வர்; ரத்த ஓட்டம் இருக்கிறது; கை காலை அசைக்கிறோம். இத்தனை செயல்களுக்கும் மூலமாக இருப்பது காற்று. அந்தக் காற்றைப் பத்து வகையாகப் பிரித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நமக்குப் பெரும்பாலும் ஐந்து காற்றுகள் தெரியும். அந்த ஐந்து மிகவும் முக்கியமானவை. மற்ற ஐந்து காற்றுகள் அவ்வளவு சிறப்பானவை அல்ல. இருந்தாலும் உடம்பின் இயக்கத்திற்குத் துணையாக இருப்பவை தச வாயுக்கள். நமக்கு நன்றாகத் தெரிந்த காற்று, பிராணவாயு. இருதயத்தை வீங்கி அமுங்கச் செய்கிற வாயு அது. உயிரைத் தரிக்க வைக்கிறதனால் அதற்குப் **பிராண வாயு** எனப் பெயர். உயிர்ப்பு என்று தமிழில் சுருக்கமாகச் சொல்வார்கள். அடுத்ததாக **அபானன்** என்னும் வாயுவும் நமக்குத் தெரியும். கீழே தள்ளுகிற சக்தி உடையது அது.

மோட்டார் வண்டிக்குள் கரி போடுகிறார்கள். போடுகின்ற வாய் மேல் பக்கம் இருக்கும். கரி எரிந்து சாம்பலும், தூளுமாக விழுகின்ற இடம் கீழே இருக்கும். கரி போட்ட வழியாகவே சாம்பலைத் தள்ளமாட்டார்கள். போடுகின்ற இடம் வேறு; தள்ளு கின்ற இடம் வேறு. அப்படியே உடம்பில் உணவு போடுகின்ற

இடம் வேறாகவும், கழிவுப் பொருளை வெளியேற்றுகின்ற இடம் வேறாகவும் இருக்கிறது. கழி பொருளை வெளியேற்றுவதற்கு மூலகாரணமாக இருக்கிற வாயு அபானன். அதோமுகமாக நோக்கும் வாயு அது.

சாப்பிடுகிறோம்; நான்கு மணிநேரத்தில் ஜீரணம் ஆகி விடுகிறது. அப்படிச் செரிப்பதற்குத் துணையாக இருப்பது உஷ்ணவாயு; அதற்குச் **சமானன்** என்று பெயர்.

பேசுகின்றோம்; பேசுகின்ற காற்றும், மூச்சு விடுகிற காற்றும் ஒன்று அல்ல. பேசுகிற காற்று உந்தியிலிருந்து வருகிறது. அந்த வாயுவுக்கு **உதானன்** என்று பெயர்.

நரம்பிலே ரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறது. இருதயத்தில் இருந்து புறப்பட்ட ரத்தம் நரம்புகளின் வழியே ஓடி, திரும்பவும் இருதயத்திற்கு வந்து சேரும் வண்ணம் இயக்கும் வாயுவுக்கு **வியானன்** என்று பெயர். பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்ற இந்த ஐந்து வாயுக்களும் முக்கிய மானவை. இவற்றைப் பஞ்சப் பிராணன் என்றும் சொல்வார்கள்.

இந்த ஐந்து வாயுக்கள் அல்லாத வேறு ஐந்து வாயுக்களும் இருக்கின்றன. கை காலை நீட்டுகிறோம்; மடக்குகிறோம். அப்படிச் செய்ய உதவும் வாயுவுக்கு **நாகன்** என்று பெயர். கண்ணை மூடி மூடித் திறக்கிறோம். ஆமை தன் உறுப்புகளை வெளியே நீட்டி உள்ளே இழுத்துக் கொள்வதுபோல இந்தக் காரியம் நடைபெறுவதனால் இந்தச் செய்கைக்குத் துணையாக உள்ள வாயுவுக்குக் **கூர்மன்** என்று பெயர். கோபம் வருகிறது. ஓடினால் இரைக்கிறது. தும்முகிறோம். இந்தச் செய்கைகளுக்கு மூலமாக இருக்கும் வாயுவுக்குக் **கிரிகரன்** என்று பெயர். வியர்க்கிறது; இதற்குக் காரணமாக இருக்கும் வாயுவுக்குத் **தேவதத்தன்** என்று பெயர். உயிர் போனபிறகும், பிணத்தைக் கொளுத்தும் போதும் சில செயல்கள் நிகழ்கின்றன. கை, கால் கள் விறைக்கும்; தலைவெடிக்கும். கடைசியாகத் தலைவெடித்து வெளியேறும் வாயுக்குத் **தனஞ்சயன்** என்று பெயர்.

இப்படி உடம்பிலே பல செயல்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருப்பவை பத்து வாயுக்கள் என்று சாஸ்திர நூல்கள் கூறு கின்றன. உடம்பாகிய இந்த வீடு, பத்துக் கால்களில் சுமத்தி

வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பத்துக் கால்கள் உடம்புக்கு ஆதாரமாக இருக்கின்றன. ஆகவே,

நாலாறு காலில் சுமத்தி

என்கிறார் அருணகிரியார்.

மற்ற அமைப்புகள்

நான்கு கால்களிலே நிற்கிற குடிசைகள், மாடுகள் போன்ற விலங்குகள். மனிதர்களுக்கு இரண்டு கால்களே உள்ளன. ஆகவே இந்தக் குடிசை இரு கால்களால் உயர்த்தி வைக்கப்பட்டிருக் கிறது.

இரு காலால் எழுப்பி.

இங்கே கால் என்பதற்குக் காற்று என்ற பொருள் இல்லை. முதலிலே காற்று என்ற பொருளில், ''நாலாறு காலில் சுமத்தி'' என்றார். இங்கே பாதம் என்ற பொருளில், ''இரு காலால் எழுப்பி'' என்கிறார். உடம்பாகிய குடிசை தோலால் சுவர் வைத்து, பத்துக் காற்றுகளை ஆதாரமாக வைத்து, அவற்றின் மேல் சுமத்தி, இரு கால் ஆகிய தூணில் நிற்கிறது.

தோலால் சுவர்வைத்து நாலாறு காலில் சுமத்திஇரு
காலால் எழுப்பி.

இரண்டு பக்கமும் சார்ப்பு இறக்குவதற்கு நடுவில் ஒரு விட்டம் வேண்டும் அல்லவா? அந்த விட்டம்போல இருப்பது முதுகு. அது வளையக்கூடிய சக்தி உடையது. வளைமுதுகை விட்டமாக வைத்து, இரண்டு பக்கமும் கையாகிய சட்டத்தை அமைத்திருக் கிறான் இறைவன்.

வளைமுதுகு ஓட்டிக்கை நாற்றி.

வளைகின்ற முதுகை நடுவிட்டமாக அமைத்து, இரண்டு பக்கமும் கையாகிய சட்டத்தைத் தொங்கவிட்டிருக்கிற குடிசை இது. இந்தக் குடிசைக்கு மேற் கூரை வேய வேண்டும். கீற்றி னாலும் வைக்கோலினாலும் கூரை மேய்வார்கள். அப்போது பன நாரையோ கயிற்றையோ ஆக்கையாகக் கொண்டு கட்டுவார்கள். இந்த உடம்பாகிய வீட்டுக்குக் கூரை தசையினால் வேய்ந்திருக் கிறது. நரம்பாகிய ஆக்கையினால் கட்டப்பட்டிருக்கிறது.

நரம்பால் ஆர்க்கையிட்டுத் தசைகொண்டு வேய்ந்த அகம்.

ஆர்க்கை என்பது கட்டுகின்ற கருவி.

இந்தக் குடிசையாகிய உடம்பு நிலையானது அன்று. எத்தனை காலம் இருக்கும் என்றும் சொல்ல முடியாது. சில குடிசைகள் ஆறு வருஷம் நிற்கும்; சில ஆறுமாதம் நிற்கும்; அறுபது வருஷம் நிற்கிற வீடுகளும் உண்டு. 'ஆறு நிமிஷம் இருக்கிற குடிசைதானே?' என்று ஆண்டவன் அலட்சியமாக அதை அமைக்கிறானோ? நூறு ஆண்டு வசிக்கப் போகிற உடம்பு என்பதற்காக நல்ல முறையில் அதைப் படைப்பதும், நூறுநாள் தாமே உலகில் வாழப்போகிறது என்பதற்காக மற்றோர் உடம்பை மட்டமாகப் படைப்பதும் இல்லை. எல்லாவற்றையும் ஒரே மாதிரியாக, தோலால் சுவர் வைத்து, நாலாறு காலில் சுமத்தி, இரு காலால் எழுப்பி, வளை முதுகு ஓட்டிக் கைநாற்றி, நரம்பால் ஆர்க்கையிட்டுத் தசை கொண்டு வேய்ந்து, படைக்கிறான்.

நீண்ட காலம் உயிர் இதில் இருக்கவேண்டும் என்பது அவன் நோக்கம் அன்று. தன்னுடைய திருவடி நிழலில் இருப்பதற்குத் தகுதியில்லா வண்ணம் வினைகளாகிய மாசுகளைப் பூசிக் கொண்டிருக்கிறார்களே; உலகமாகிய ஆற்றிலே போய் வினை களைக் கழுவிக் கொண்டு வரட்டும் என்று உடம்பாகிய இந்த வீட்டைக் கட்டிக் கொடுத்து அனுப்புகிறான்.

சொந்த வீடு

இது எவ்வளவுதான் அற்புதமான வீடாக இருந்தாலும் இதி லேயே இருந்துவிட முடியுமா? சென்று சேருகின்ற இடம் ஒன்று உண்டு என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாமா? பல இடங்களில் குடியிருந்தவன் சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கும் சமயம் ஒன்று வரும்.

''வீட்டுக்காரன் வீட்டைச் செப்பஞ் செய்வது இல்லை; சுண்ணாம்பு அடிப்பது இல்லை. வீட்டிலே எங்கே பார்த்தாலும் ஒழுகுகிறது. பூச்சி பொட்டுகள் நெளிகின்றன, ஒண்டுக் குடித் தனக்காரர்களின் சண்டையும் அதிகமாகி விட்டது'' என்ற நிலை வந்தால் அந்த வீட்டில் குடியிருக்க முடியாது. ''குடியிருந்து துன்பப்படும் நிலை நமக்கு வேண்டாம். சொந்தமாக வீடு கட்டிக்

கொள்ள வேண்டும்'' என்ற நினைப்புத் தோன்றுகிறது. அப்படி, இந்த உடம்பு நிலையானது, இந்திரிய சுகங்களே முக்கிய மானவை என்று எண்ணி வாழ்கின்ற மக்கள், இந்த உடம்பாகிய அகத்தை விரும்பாமல் நிலைத்த இன்ப வீட்டை, முத்தி வீட்டைப் பெறலாம் என்று நினைக்கும் பக்குவம் ஒன்று உண்டு. உடம்பிலுள்ள ஒவ்வொரு இந்திரியத்தையும் திருப்திப் படுத்த வேண்டுமென்று எண்ணிச் செய்த அத்தனை செய்கைகளும் தோற்றுப் போய், ஒவ்வொன்றின் ஆசைகளும் பன்மடங்காகப் பெருகி நிற்க, உடம்பு நலிந்து பல வகையாலும் துன்புறுகின்ற போது, ''உடம்பு பெற்றதே துன்பம்'' என்கிற உணர்வு வருகிறது. ''இந்த உடம்பு எங்கே போனாலும் துக்கந்தான். இதிலும் எந்த உறுப்புக் கெட்டுப் போனாலும் போனது போனது தான். விடுதிச் சாமான் வாங்கிப் போட்டு இளமையுடையதாக ஆக்க முடியாது. இந்த வீட்டில் இருக்கிறபோதே சொந்தமாக வேறு ஒரு பாதுகாப்பு உள்ள வீட்டைக் கட்டிக் கொண்டால்தான் இந்த வீடு அழியும் போது, துன்பம் இல்லாத நிலையான ஆனந்தத்தை அளிக்கும் இடத்துக்குப் போக முடியும்'' என்று உணர்ந்தார்கள் ஞானிகள்.

உடம்பாற் பயன்

விரைவில் அழிகின்ற பொருள்களை வாங்கக் கூடாது. நன்றாக உழைக்கும் பொருளை, அழிவில்லாத பொருளை வாங்க வேண்டும் என்று நினைக்கிறோம். கண்ணாடித் தம்ளர்களை வாங்குவதற்குப் பதிலாக 'எவர் சில்வர்' தம்ளர்களை வாங்கி னால் நலம் என்று நினைக்கிறோம். இன்பத்தைப் பல காலம் அநுபவிக்க வேண்டும் என்று விரும்புகிற மனிதன், அந்த இன்ப நுகர்ச்சிக்குக் கருவியாகிய உடம்பு பல காலம் வாழ வேண்டும் என்ற ஆசையைக் கொள்கிறான். உடம்பு நெடுங் காலம் இராது என்பது அவனுக்குத் தெரியும். இருந்தும் மயங்கி, நிலையாத உடம்பை நிலைக்கப் பண்ணக் காயகல்ப மருந்தை உண்ணு கிறான். சித்தி படைத்த சாமியார் என்று யார் யாரையோ தேடிச் சென்று காலில் விழுகிறான்.

''ஆசைக்கோர் அளவில்லை...நெடுநாள் இருந்த பேரும்
நிலையாக வேஇனும் காயகல் பந்தேடி நெஞ்சுபுண் ணாவர்''

என்று தாயுமானவர் பாடுகிறார்.

ஆகவே, உண்மை தெரிந்தவர்கள், உடம்பு இருக்கும் போதே, உயிர் உடம்பை விடும்போது சென்று சேர வேண்டிய லட்சியத்திலே குறியாக இருப்பார்கள். அந்த லட்சியத்திற்குத் தடையாக இருக்கிற உலக மாயையில் சிக்க மாட்டார்கள். உடம்பிலுள்ள பற்றை மாற்றி இறைவன் தாளிலே பற்று வைப்பார்கள்.

அவர்கள் உடம்பினால் வரும் இன்பத்தை எண்ணா விட்டாலும் தாம் பற்றுகின்ற பொருளை அடைவதற்கு இதனை ஒரு கருவியாக வைத்திருப்பார்கள். தாமரை வளர வேண்டு மானால் சேறுள்ள குளம் வேண்டும். சேற்றிலே முளைக்கின்ற தாமரை வேண்டுமென்பவன் குளத்தின் சேறு இழிந்த பொருளாக இருந்தாலும் அதைக் காப்பாற்றுவான்.

உடம்பு சேறு நிறைந்த இடமாக இருந்தாலும் முளைக்கின்ற தாமரை ஆகிய ஞானத்திற்காக, ஞானிகள் அதைக் காப்பாற்றினார்கள். உடம்பு நிலையற்றது என்பது தெரிந்தமையால் அது செய்துப் போவதற்குள், முத்தியின்பத்தைப் பெறுவதற்கு முயன்றார்கள்.

இந்திரிய சுகத்தை எண்ணியே நாம் உடம்பினிடத்தில் அபிமானம் கொள்கிறோம். ஞானிகளோ, ஞானத்தைப் பெறுவதற்கு, இறைவனின் தாளாகிய முத்தி வீட்டைப் பெறுவதற்கு உடம்பினிடத்தில் அபிமானம் கொண்டார்கள்.

மாணிக்கமும் துணியும்

அற்புதமான மாணிக்கத்தைப் பெற்றவன் ஒருவன் அழுக்கான கிழிசல் துணி கிடைத்ததனால் அதில் முடிந்து கொண்டு போகிறான். அழுக்குக் கிழிசல் துணியில் அவனுக்கு இருக்கும் அபிமானம் அதனுள் இருக்கும் மாணிக்கத்தைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதால் உண்டாகிறது. வீட்டுக்குச் சென்ற பிறகு மாணிக்கத்தைப் பெட்டியில் வைக்கிறான். பிறகு கிழிசல் துணியை எறிந்து விடுகிறான்; அதைப் பற்றிக் கவலைப் படமாட்டான்.

உயிராகிய மாணிக்கம் இறைவனது தாளாகிய பெட்டியை அடையும் வரைக்கும் அது பத்திரமாக இருக்க வேண்டுமென்று அது முடியப்பட்டிருக்கும் உடம்பாகிய அழுக்குக் கந்தையிடம் அபிமானம் வைத்திருப்பார்கள். நம்மைப் போலக் கண்டதைத்

தின்னும் அபிமானம் அன்று; ஒரு கட்டுப்பாட்டுக்குள் நின்று உடம்பைக் காப்பாற்றுவார்கள்.

குளிர் காய வேண்டும் என்றால் நெருப்பு வேண்டும். நெருப்பிடம் நெருங்கினால் சுட்டுவிடும். அப்பால் அகன்றால் குளிர் காய முடியாது. அதை விட்டு அகலாமலும் அதனிடத்தில் மிகவும் நெருங்காமலும் நின்று குளிர் காய்வதை ஒப்ப, உடம்பை விடாமலும், உடம்பினால் வருகின்ற சுகத்தையே கருதி அதனிடம் நெருங்காமலும் இருப்பார்கள் ஞானிகள். உடம்பினுள் உயிர் வாழ்கின்ற காலம் வரையில் இறைவனுடைய திருத்தாளைச் சென்று சேருவதற்கு உரிய முயற்சியில் ஈடுபட்டிருப்பார்கள்.

3

அவர்கள் உள்ளத்தில் லட்சியமாக இருப்பது இந்திரியசுகம் அல்ல. உயிராகிய மாணிக்கத்தைக் கொண்டு போய்ப் பெட்டியில் போட வேண்டும் என்ற லட்சியம் இருக்கிறது. அந்தப் பெட்டி தான் இறைவனுடைய திருத்தாளாகிய முத்தி வீடு.

முத்தி வீடு

இந்த வீட்டுக்குப் பலர் பலவிதமான அடையாளம் சொல்வதுண்டு. வெவ்வேறு திசையிலிருந்து பார்ப்பதனால் அப்படிச் சொல்கிறார்கள்.

''இன்னார் எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டால், ''மயிலாப்பூரில் இருக்கிறார்'' என்று ஒருவர் சொல்கிறார். ''மயிலாப்பூரில் மந்தைவெளியில் இருக்கிறார்'' என்று ஒருவர் சொல்கிறார். குறிப்பாக வீடு இருக்கும் தெரு அவருக்குத் தெரியவில்லை. அவர் இருக்கும் தெருப் பக்கமாகச் சென்றவர், ''மந்தைவெளியில் முதல் தெருவில் இருக்கிறார்'' என்கிறார். அவர் அந்தத் தெருவுக்குள் போனது இல்லை. அதனால் அவருக்கு வீட்டு எண் தெரியவில்லை. தெருவழியாகப் போனவர் சொல்கிறார்; ''மூன்றாம் எண்ணுடைய வீட்டில் இருக்கிறார். வீட்டு வாசலில் அவர் பெயர் இருக்கிறது. சக்தி விலாஸ் என்பது வீட்டின் பெயர்'' என்கிறார். வீட்டுக்குள் அவர் போனது இல்லையாதலால் வீட்டுக்குள்ளே இருக்கும் அடையாளம் சொல்ல

முடியவில்லை. வீட்டுக்குள்ளே போனவரோ, வீட்டின் எண், அவர் இருக்கும் தெரு, எல்லாம் சொல்வதோடு, ''வீட்டுக்குள் நுழைந்தவுடன் முன் கூடத்தில் தந்தத்தால் ஆன இரண்டு யானைகள் இருக்கும். பெரிய வள்ளுவரின் படம் இருக்கும்'' என்று அடையாளம் சொல்கிறார். இவர்கள் வெவ்வேறு அடையாளம் சொன்னாலும் எல்லோரும் சொன்ன பொதுவான அடையாளம் மயிலாப்பூர்.

அப்படி முத்தி வீடு என்பதற்குப் பலர் பலவிதமான அடையாளங்களை அவரவர்களுடைய தகுதி, தன்மை, நிலைக்கு ஏற்பச் சொன்னாலும், பொதுவாகச் சொல்லப்போனால் முத்தி வீடு என்பது இறைவனுடைய தாள்தான். இறைவன் திருவடி அடைந்தார் என்று முத்தி பெற்றவர்களைச் சொல்வது எல்லோருக்கும் வழக்கம்.

''புண்ட ரீகத்தினும், செக்கச் சிவந்த கழல்வீடு''

என்று அருணகிரிநாதரே சொல்கிறார்.

சர்க்கரை வேறு, இனிப்பு வேறு என்று வேறு பிரித்துக் காட்ட முடியாததைப் போல ஆண்டவனுடைய தாள் வேறு, அதை அடைந்தவுடன் கிடைக்கின்ற இன்பம் வேறு என்று வேறுபடுத்திச் சொல்ல முடியாது.

வேண்டுகோள் பலவிதம்

உலகத்தார் இறைவனிடம் வேண்டிக் கொள்ளும் வேண்டு கோள் பல வகை.''ஆண்டவனே! இந்தப் பிறவியில் என்னை ஊனமாகப் படைத்தாயே; அடுத்த பிறிவியிலாவது நல்ல உடம்பாகக் கொடுக்க வேண்டும்'' என்று வேண்டுவர் சிலர். ''அடுத்த பிறவியில் பணக்காரர் மாளிகையில் பிறக்கும்படி செய்ய வேண்டும்'' என்பவர் சிலர். ''தேவலோகத்தில் சுவர்க்க இன்பத்தைப் பெற வேண்டும்'' என்று விரும்புவார் சிலர். 'இந்திர பதவி வேண்டும்'' என்று வேண்டினவர்களும் உண்டு.

ஆனால் அருணகிரியார் சொல்வதைக் கேளுங்கள்; ''தோலினால் சுவர் வைத்து, தசவாயுக்களை ஆதாரமாக வைத்து, இரண்டு கால் வைத்து, வளைகின்ற முதுகாகிய விட்டம் அமைத்து, கைகளாகிய சட்டத்தைத் தொங்க விட்டு, நரம்பாகிய ஆர்க்கை

யினால் தசை கொண்டு வேய்ந்திருக்கும் இந்த அகம் பிரிந்தால் உயிர் சென்று சேரவேண்டிய இடம் ஒன்றுதான். அதுவே இறைவன் திருத்தாள்'' என்கிறார்.

கிரி துளைத்தோன்

தசைகொண்டு வேய்ந்த அகம் பிரிந்தால்
வேலால் கிரிதுளைத்தோன் இருதாள்
அன்றி வேறு இல்லையே!

முருகனுடைய தந்தையாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் இடம் கைலாசம். அது வெள்ளிமலை. 'பரமேசுவரன் இருக்கும் வெள்ளி மலையைப் போல நாம் இருந்தால், தன் அப்பா வாசம் செய்கிற இடம் என்று நம்மைக் கண்டு முருகன் ஏமாந்து போவான்' என்று எண்ணியவனைப் போலக் கிரௌஞ்சாசுரன் வெள்ளிமலை உருவத்தில் இருந்தான். அந்த மலைக்குள் சூரன் ஒளித்திருந்தான். தோற்றத்தினால் வெள்ளியாக இருந்தாலும் அம்மலை அசுர உருவமென்றும் அதனூடே அசுரர் தலைவன் இருக்கிறானென்றும் அறிந்த முருகன் தன் வேலை உருவி அதைத் துளைத்தான்.

''உடம்பை விட்டு நீங்குகின்ற உயிருக்கு மீட்டும் உடம்பு வராமல் இருக்க வேண்டுமென்றால் ஆண்டவனுடைய இரு தாள் அன்றி வேறு பாதுகாப்பான இடம் இல்லை. அந்தத் தாளைப் பெறுவதற்கு முயற்சி செய்யாமல், உயிராகிய மாணிக்கத்தை இறைவனுடைய தாளிலே சேர்க்கும் வரையில் பாதுகாக்கும் கருவியாக உடம்பை நினைக்காமல், இந்திரிய சுகமே பெரிது என்று வாழ்கிறீர்களே; இதனால் மீட்டும் பிறந்து இன்ப துன்பங்களுக்கு ஆளாகி இப்போது போலவே எப்போதும் அல்லலுற வேண்டுமே! பாசத்துக்குக் கட்டுப்பட்டு உடம்பெடுத்துப் பத்தனாக இருக்கிற உயிர், ஆண்டவனுடைய இரு தாளாகிய முத்தி வீட்டைப் பெற்று முத்தன் ஆகவேண்டும்; அதுதான் லட்சிய வாழ்வு'' என்ற கருத்தை இந்தப் பாட்டின் வாயிலாக நமக்கு உபதேசம் செய்கிறார் அருணகிரிநாதப் பெருமான்.



தோலால் சுவர் வைத்து, நாலாறு
காலில் சுமத்தி,இரு
காலால் எழுப்பி, வளைமுதுகு
ஓட்டிக்கைந் நாற்றி, நரம்
பால்ஆர்க்கை இட்டுத் தசைகொண்டு
வேய்ந்த அகம்பிரிந்தால்
வேலால் கிரிதுளைத் தோன்இரு
தாள்அன்றி வேறு இல்லையே.

(தோலைக் கொண்டு சுவர் வைத்து, பத்து வாயுக்களின் மேல் அமரச் செய்து, இரண்டு கால்களால் உயர்த்தி வைத்து, வளைந்த முதுகை நடுவே நீட்டி வைத்து, கைகளைத் தொங்கவிட்டு, நரம்பால் கட்டி, தசையைக் கொண்டு மூடிய இந்த உடம்பாகிய வீட்டை நாம் பிரிந்தால், வேலாயுதத்தால் கிரௌஞ்ச மலையைத் துளைத்த முருகனுடைய இரண்டு தாள்களாகிய முத்தியை அன்றி வேறு இன்பந் தரும் இடம் இல்லை.

நாலாறு – நாலும் ஆறும்; உம்மைத் தொகை. காலில் – காற்றின் மேல். இரு கால் – இரண்டு கால்கள். ஓட்டி – நீட்டிவிட்டு, நாற்றி – தொங்கவிட்டு. ஆர்க்கை – கட்டும் கயிறு; கட்டுதல் எனலும் ஆம். அகம் – வீடு. வேறு – அகம்)

அருணகிரிநாதர் அலங்காரத்தில் வேறு ஒரு பாட்டிலும் இந்த உடம்பைப் பற்றிச் சொல்கிறார்.

''ஐவர்க்கு இடம்பெறக் கால் இரண்டு
ஓட்டி அதில்இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே''

என்கிறார்.

அப்பர் சுவாமிகள்,

''கால்கொடுத் திருகை ஏற்றிக் கழிநிரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீரால் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்புடைத் தாவ மைத்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காடனாரே''

என்று பாடுவதும் இங்கே நினைவுக்கு வருகிறது.

தனி வீடு

முகவுரை

கந்தர் அலங்காரச் சொற்பொழிவு வரிசையில் ஒன்பதாவது புத்தகமாகிய இதில் ஐந்து பாடல்களுக்குரிய விளக்கங்கள் இருக்கின்றன. 45–அம் பாடல் முதல் 49 வரையிலுள்ள பாடல்களைப் பற்றிய சொற்பொழிவுகள் இவை.

முதல் பாடலில் சிவபெருமானுக்குக் குருவாக நின்று உபதேசம் செய்தவனாகிய வேலவன் தமக்குச் செய்த உபதேசம் இன்னதென்று அருணகிரியார் சொல்கிறார். ஐந்து பூதங்களால் அமைந்த இந்த உடம்பாகிய குடிலில் இராமல், யாரும் அறியாத சிறப்புடைய முத்தியென்னும் வீட்டில் உரையும் உணர்வும் அற்று இரு'' என்று குமரகுருபரன் உபதேசம் செய்தானாம். இவ்வாறு தமக்கு முருகன் உபதேசம் செய்ததாகத் திருப்புகழிலும் ஏனை நூல்களிலும் அருணகிரியார் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். இந்தப் பாடலுக்கு விளக்கம் கூறும்போது பூதவீடாகிய உடம்பைப் பற்றிய பல செய்திகளைச் சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது. இது ஐம்பூதத்தின் கலவையென்றும், நிலையாத வீடு என்றும், அடிக்கடி மாற்றும் வீடு என்றும் சொல்லிவிட்டு, நிலையான வீடு என்று ஒன்று உண்டு என்றும் இதன் இயல்பு இன்னதென்றும் சொல்லியிருக்கிறேன். அப்பால் முருகன் சிவபெருமானுக்குக் குருவாக அமைந்த வரலாற்றையும், அச்செய்தியில் அருண கிரியார்க்குள்ள ஈடுபாட்டையும் விரித்தேன். பிறகு கஜாசுரசங் காரத்தின் வரலாற்றையும் அதனுடைய உட்கருத்தையும் திரிபுர சங்காரத்தின் உள்ளுறையையும் விளக்கிவிட்டு, முன்னே அலங்காரத்தில் வந்த ''ஓர ஒட்டார்'' என்ற பாட்டுக்கும் இந்தப் பாட்டுக்கும் உள்ள பொருள் தொடர்பை எடுத்துரைத்தேன். இவ்வளவும் சேர்ந்து முதல் சொற்பொழிவாக அமைகின்றன. **தனிவீடு** என்னும் பெயரோடு அச்சொற்பொழிவை இப்புத்தகத் தில் முதலில் காணலாம்.

அடுத்தது **இருவகை விளையாட்டு** என்னும் சொற்பொழிவு. ஞான விநோதம், மாயா விநோதம் என்ற இரண்டையும் ஒரு பாட்டில் அருணகிரியார் சொல்லுகிறார். மாயா விளையாட்டு விளையாடும் ஆன்மாக்கள் எவ்வாறு மனத்திற்கு அடிமைப் படுகின்ற என்பதையும், விளையாட்டே வினையாகும் திறத்தையும், இந்த விளையாட்டை மாற்றி இறைவன் திருவருள் பெற முயலவேண்டும் என்பதையும் முதலில் விளக்கும் பகுதியை இதில் காணலாம். பின்பு காமத்தால் உண்டாகும் தீங்குகளும் ஞான விளையாட்டின் தன்மையும் வருகின்றன. ஊன நாடகம், ஞான நாடகம் என்னும் இரண்டையும் பற்றி மணிவாசகப் பெருமான் கூறியிருக்கும் பாட்டு இங்கே ஒப்புமையுடையதாக இருப்பதால் அதற்கும் ஓரளவு விளக்கம் பின்பு வருகிறது.

''பத்தித் திருமுகம்'' என்று தொடங்கும் அலங்காரப் பாடலின் விளக்கம் **ஆறுமுக அமுதம்** என்ற தலைப்போடு மூன்றாவது சொற்பொழிவாக உள்ளது. இன்பமும் துன்பமும் மனித வாழ்வில் உள்ளன என்றும், சிற்றின்பத்தை நுகர்பவர்கள் பேரின்பம் உண்டென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அவ்வின் பத்தைப் பெற்ற பெருமக்கள் தாம் பெற்ற அநுபவங்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றும், அவை முறையில் வேறு வேறாக இருந்தாலும் விளைவில் ஒன்றாகவே இருக்கு மென்றும், அருணகிரிநாதர் தாம் பெற்ற அநுபவத்தைச் சொல்கிறாரென்றும் கூறி, அவர் எவ்வாறு சொல்கிறார் என்பதை விளக்கத் தொடங்கினேன். புத்திக் கமலம் அன்பினால் விரியும் போது ஆனந்த ஊற்றுத் தோன்றுமென்றும், அது படிப்படியாகப் பரந்து பரமானந்தக் கடலாகுமென்றும், அதில் ஆறுமுக அமுதம் தோன்றுமென்றும் புலப்படுத்தினேன். நாம் கோயிலில் காணும் காட்சி எவ்வாறு உண்முகமாகும்போது தோன்றுமென்பதையும், அநுபவ நிலையில் அது எவ்வாறு தோன்றும் என்பதையும் ஒருவாறு விளக்கியிருக்கிறேன். ஆறு முகங்களைப் பற்றி நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் கூறு வனவற்றை இறுதியில் கூறி இச்சொற்பொழிவை முடித்தேன்.

வண்டும் மலரும் என்பது நான்காவது சொற்பொழிவு. முதலில் மனத்தை வண்டாகச் சொல்லும் மரபையும் இறைவனுடைய திருவடியாகிய தாமரையில் அவ்வண்டு சென்று ஊதவேண்டும் என்பதையும் எடுத்துரைத்து, மணிவாசகர் திருப்பாட்டு ஒன்றை மேற்கோள் காட்டி விளக்கினேன். பின்பு இறைவன் திருவடியில் நாட்டம் உள்ளவர்கள் அடியார் என்றும், திருக்குறளில் வள்ளுவர் யாவர்க்கும் பொதுவான முறையில் கடவுளின் அடியையே சொல்லியிருக்கிறார் என்றும், அவருக்கு உருவ வழிபாடு உடம்பாடே என்றும் சொல்லியுள்ளேன். இறைவன் திருவடியிலே உள்ளத்தைச் செலுத்துவதால் பெரும் பயன் உண்டென்பதற்கு எடுத்துக்காட்டாகச் சகாதேவன் வரலாற்றைக் கூறினேன். பின்பு அருணகிரியார் நமக்காகத் தாம் குறைபாடுடையவரைப் போலச் சொல்லிக் கொள்வதையும் முருகனை வேண்டிக் கொள்வதையும் விளக்கினேன்.

அடுத்தது **தொண்டர் பெருமை** என்னும் சொற்பொழிவு. உலகில் செல்வத்துக்கு உள்ள மதிப்பையும், அச்செல்வம் அமைதி தர மாட்டாமையையும், விரைவில் அழிவதையும் எடுத்துரைத்து, இறைவன் அருட்செல்வம் ஒன்றே அமைதி தரும் என்பதையும் அதனைப் பெற்ற தொண்டர்கள் மிகப் பெரியவர்கள் என்பதையும் விளக்கினேன். தொண்டர் பெருமையை ஒளவையார் திருப் பாடலைக் கொண்டும் பெரிய புராணத்தைக் கொண்டும் ஒருவாறு காட்டியிருக்கிறேன். தொண்டர் குழாத்தைச் சார்வதனால் குருவின் அருளும் இறைவன் திருவருளும் கிடைக்கும் என்ற கருத்தைப் பின்பு சொன்னேன். பதவி, பணம் என்னும் இரண்டினிடமும் ஆசை கொண்டவர்களுக்கு இன்பம் இல்லை. அவ்விரண்டின் வடிவாக விளங்கிய சூரனும் கிரௌஞ்சாசுரனும் ஞானவேலால் அழிந்தனர். முருகனுடைய தொண்டர்கள் பதவிக்கும் பணத்துக்கும் ஆசைப்படமாட்டார்கள். அவர்களைச் சார்வதனால் நமக்குத் தகுதி ஏறும். இக்கருத்துக்களையும் விளக்கிச் சொற்பொழிவை முடித்திருக்கிறேன்.

முருகன் திருவருளால் கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உடனுக்குடன் புத்தக உருவமாக்க இயலாவிட்டாலும் ஸ்ரீ அனந்தனுடைய உதவியால் தடையின்றி இவ்வரிசை மலர்ந்து வருகிறது. எல்லாம் முருகன் கருணை.

கி.வா. ஜகந்நாதன்
03.02.1958

தனி வீடு

1

பேய் பிடித்த வீடு

சில காலத்திற்கு முன்னால் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. ஒரு வீட்டில் கொடியில் உலர்த்தி இருந்த ஆடைகள் திடீரென்று எரிவதாகவும், கொடி மட்டும் எரியாமல் இருப்பதாக வும், யாரோ சூன்யம் வைத்தமையினால் அப்படி நடக்கிறதாக வும் அந்தச் செய்தி சொல்லியது. பேய், பிசாசு, பூதம் ஆகியவை ஒரு வீட்டில் இருந்தால் அந்த வீட்டில் உற்பாதங்கள் நிகழும் என்று சொல்வார்கள். ஒருவனைப் பேய் பிடித்தால் அவன் எத்தனை சாப்பிட்டாலும் அவ்வளவும் ஒரு நொடியில் பஸ்மீகரம் ஆகிவிடும். வீட்டிலானாலும் உடம்பிலானாலும் பேயோ பூதமோ புகுந்துகொண்டால் அங்கே நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்கும் அவற்றை உடையவர்களுக்கும் ஒரு சம்பந்தமும் இராது. அங்கே நிகழும் நிகழ்ச்சிகள் துன்பத்தைத் தருமே அல்லாமல் இன்பத்தைத் தருவது இல்லை.

இப்படி எங்கோ அருமையாக நடக்கும் நிகழ்ச்சியைக் காண் கிறோம். ஆனால் ஒவ்வொரு நாளும் இத்தகைய நிகழ்ச்சி எல்லோரிடத்திலும் நடக்கிறது. அதை நாம் தெரிந்து கொள்வது இல்லை. எங்கேனும் அருமையாக ஒன்று நடந்தால் அதுதான் கண்ணில் படுகிறது; காதில் விழுகிறது. எங்கும் ஒரே மாதிரி இருந்தால் அதைப் பற்றி நாம் நினைக்க மாட்டோம்.

எல்லோரும் காலால் நடக்கும்போது யாரும் காலால் நடக்கிறார்களே என்று வியப்போடு பார்ப்பது இல்லை. ஆனால் நடக்கும்போது ஒருவன் கீழே விழுந்துவிட்டாலும் ஒருவன் கால் இல்லாமல் நொண்டியாக இருந்தாலும் அவனை நாம் கவனிக் கிறோம்; கண்டு எள்ளி நகையாடுகிறோம்; அவனைப் பற்றிப்

பேசுகின்றோம். அந்தச் செயல்கள் அருமையாக இருப்பதனால் தான் நம் கவனம் அந்தத் திசையில் செல்கிறது.

அப்படியே எங்கேனும் அருமையாக ஒரு வீட்டில் பேய் இருந்தாலும் ஒருவனைப் பேய் பிடித்தாலும் அதனை நினைக் கிறோம். வேறு ஒரு வகையில் எல்லோருமே பூதம் பிடித்த வீட்டில் இருக்கிறார்கள். ஒரு பூதம், இரண்டு பூதம் அல்ல; ஐந்து பூதங்கள் தங்கி இருக்கிற வீட்டில்தான் யாவரும் குடி இருக்கிறார் கள். அதனால் அதைப் பற்றி நினைக்கிறதில்லை.

பூத வீடு

உலகத்திலுள்ள மக்கள் எல்லோருமே உடம்போடு பொருந்திய உயிர்கள். உடம்புகள் மக்கள் ஆவதில்லை. அவை உயிர்கள் குடி இருக்கும் வீடுகள். உடம்பு என்பது ஐந்து பூதங்களால் ஆனது. அதனால் இதனைப் பௌதிக சரீரம் என்று சொல்வார்கள்; பூத வீடு. இந்தப் பூத வீட்டில் நாம் செய்கிற காரியங்கள் எல்லாம் அந்தப் பூதங்களைச் சார்ந்து விடுகின்றன. ஆத்மாவுக்கு இன் பத்தைத் தரும் செயலாக இராமல் இந்திரியங்களுக்கு இன்பத்தைத் தரும் செயல்கள் யாவுமே பூதங்களைத் திருப்திப்படுத்துபவை என்று சொல்லலாம். பேய் பிடித்தவன் உண்ணுகின்ற உணவைப் பேய் உண்டுவிடுகிறதென்று சொல்வதுண்டு. அது போலவே இந்த உடம்பை வளர்ப்பதற்கே, இந்த உடம்பாக நிற்கின்ற ஐந்து பூதங்கள் வளம் பெறுவதற்கே, நாம் அநேகமாக எல்லாச் செயல் களையும் செய்கிறோம். அந்தக் காரணத்தால் நாம் உண்ணுகிற உணவு, பேசுகின்ற பேச்சு ஆகிய எல்லாவற்றையுமே பூதங்கள் தம்முடையன ஆக்கிக் கொள்கின்றன என்று சொன்னால் தவறு இல்லை.

நிலையாத வீடு

இந்தப் பூத வீட்டிற்குள் புகுந்து கொண்டு, பூதங்களின் செயலுக்கு அகப்படாமல் நின்று போரிட்டு, இந்த வீட்டை விட்டு நல்ல இடம் போகவேண்டும் என்ற உறுதியோடு, அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கிற மக்கள் சுதந்தரமான வீட்டைப் பெறுவார்கள். பெரும்பாலோருக்கு இந்த வீட்டில் பூதங்கள் இருக்கின்றன என்பதே தெரியாது. இயல்பாகவே நமக்கு

அமைந்த வீடு இது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நினைத்தாலும் ஏதேனும் ஒரு சமயத்தில் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டியதுதான். இந்த வீடு நமக்குச் சொந்தம் என்ற நினைப்பு மக்களுக்கு இருந்தாலும் இது நமக்குச் சொந்தம் ஆகிவிடாது என்பது தெரியும். தினந்தோறும் மனிதர்கள் மரணம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். இறந்து போனவனைப் பார்க்கும் போதும், நமக்குத் தெரிந்தவர் ஒருவர் இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்கும் போதும் இந்த வீடு நெடுங்காலம் நிலைத்து இராது என்ற நினைவு தோன்றுகிறது. ஆனால் அந்த நினைவு உடனே மறைந்து விடுகிறது. இதைத்தான் மயான வைராக்கியம் என்று சொல்வார்கள்.

இந்தப் பூத வீட்டில் இருப்பதால் துன்பமே அன்றி இன்பம் இல்லை. துன்பம் தருகின்ற வீட்டில் இருக்க வேண்டாம் என்று சொல்வது எளிது. ஆனால் குடியிருக்க வேறு வீடு வேண்டுமே!

மாற்றும் வீடு

எப்போதும் வாடகை கொடுத்துக் கொண்டு ஒரு வீட்டில் ஒருவன் இருக்கிறான். அது அவனுக்குப் பிடிக்கவில்லை என்றோ, வீட்டுக்காரனுக்கு அவனைப் பிடிக்கவில்லை என்றோ வேறு வீடு மாற்றுகிறான். இப்படி வீடுகளை மாற்றிக் கொண்டிருப் பதனால் அவனுக்கு நிலையான வாழ்க்கை இருப்பது இல்லை. ஒரு வீட்டில் சற்று விரிந்த கொல்லைப்புறம் இருக்கும். அங்கே நல்ல செடி கொடிகளைப் போடலாம் என்று சிறு தோட்டத்தை அமைப்பான். ஓர் ஆண்டு ஆன பிறகு அந்தச் செடிகொடிகள் நல்ல பயன் தரும் போது வீட்டுக்காரன் 'நோட்டீஸ்' கொடுத்து விடுவான். அந்தக் கொடிகளையும், செடி களையும் அப்படியே பிடுங்கிக் கொண்டு போக முடியுமா?

அந்த மாதிரியே எவ்வளவோ பேர்கள் தம்முடைய வாழ்க்கை யில் பல பல கோட்டைகளைக் கட்டுகிறார்கள். அவர் களுடைய முயற்சிகள் பயன் தரும்போது இறந்து போகிறார்கள். நல்ல புதல்வனைப் பெற்று அவனுக்குக் கல்வி கற்பித்து அவன் உத்தி யோகம் பண்ணும்போது தான் சுகமாக ஓய்வு பெற்று இருக்க வேண்டுமென்று கருகிறான் ஒருவன். குழந்தை பிறந்து தளர் நடை இடும்போதே அவன் இறந்து விடுகிறான். ஒருவன் ஒரு

பெரிய வியாபாரத்தைத் தொடங்கி, முதல் போட்டுச் செலவு செய்ய வேண்டிய வகை எல்லாம் நன்றாகச் செய்து ஒழுங்கு பண்ணுகிறான். அந்த வியாபாரத்தில் லாபம் எடுக்கிற தருணத்தில் அவன் திடீரென்று இறந்து போகிறான். இத்தகைய காட்சிகளை நாள்தோறும் உலகத்தில் பார்க்கிறோம். இதற்கும் செடிகொடி போட்டவன் கதைக்கும் வேறுபாடு அதிகம் இல்லை.

நிலையான வீடு

எப்போதுமே நிலையாக ஒரு வீட்டில் இருக்கும் வாழ்வு வருமானால் அவன் சுதந்தரமாக எந்தக் காரியமும் செய்து கொள்ளலாம். ஆனால் அத்தகைய வாழ்வு வாழும் வீடு இன்னது என்று மக்கள் தெரிந்து கொள்ளவில்லை. பெரியவர்கள் அப்படி ஒரு வீடு உண்டென்று சொல்கிறார்கள். அதற்குத்தான் வீடு என்றே பெயர் கொடுத்திருக்கிறார்கள். வீடு – முத்தி.

நிலை இல்லாத குடிசையாக இருக்கும் இந்த உடம்பை விட்டு உயிர் நீங்கினால் மறுபடியும் வேறு ஒரு குடிசைக்குத் தாவுகிறது. பிறவிதோறும் உயிர் விலாசம் மாறிக் கொண்டிருக் கிறது. எப்போதும் ஒரே விலாசம் போட்டுக் கொண்டு வாழ் வதற்கு வகை இல்லாமல் திண்டாடுகிறது. ஒரே விலாசமாக இருக்க வேண்டுமானால் நிலையான வீட்டைத் தேடிக் கொள்ள வேண்டும். அப்படித் தேடுகின்ற முயற்சியில் ஈடுபடுபவர்கள் யாரோ அவர்களையே பக்தர்கள் என்றும், ஞானிகள் என்றும் சொல்கிறார்கள்.

நாம் தேடிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. அந்த வீட்டுக்குச் சொந்தக்காரன் அதை நமக்குக் கொடுக்க வேண்டும். அப்படி ஒருவன் இருக்கிறான். அவன்தான் ஆண்டவன். அந்த வீட்டைத்தான் இருந்து வாழ்வதற்காக அவன் வைத்திருக்கவில்லை. தன்னுடைய குழந்தைகள் துன்புறாமல் சுதந்தரமாக வாழ வேண்டும் என்பதற்காகவே வைத்திருக்கிறான். இருந்தாலும் நல்ல குணம் இல்லாத பிள்ளைகளாக இருந்தால் அவர்களைக் கொஞ்சம் துன்பம் அநுபவிக்கச் செய்துவிட்டு, ஓட்டைக் குடிசை யில் இருக்கச் செய்து, அடிக்கடி கட்டிடங்களை மாற்றித் தந்து தண்டனை கொடுக்கிறான். "இப்படி வாழ்கின்ற நிலை போதும், அப்பா! இனிமேல் இத்தகைய வீடுகளில் நான் இருக்க மாட்டேன்.

நல்ல வீடாகத் தா'' என்று சொல்கின்ற நிலையைப் பெற்றால், ''உனக்குத்தான் நல்ல வீடு கட்டி வைத்திருக்கிறேன். அதைப் பற்றி நீ சிந்திக்காமல் பூதம் தங்கிய வீட்டில் மகிழ்ச்சி அடைந்து இருந்தாயே! வா அப்பா. சுகமாக இரு'' என்று அருள் கூர்ந்து அவன் வரவேற்கிறான்.

நம்முடைய நாட்டு நாடோடிப் பாடலில்கூட இந்த உடம்பை வெறுத்து நித்திய ஆனந்தத்தைத் தருகின்ற வீட்டைத் தேட வேண்டுமென்பதை அறிவுறுத்தும் பாடல்கள் உண்டு.

''எட்டடிக் குச்சுக்குள்ளே – முருகா
எத்தனை நாள் இருப்பேன் – ஒரு
மச்சுவீடு கட்டித்தாரும் – திருத்தணி
மலையில் வேலவனே!''

என்பது ஒரு பரதேசி பாட்டு. எண்சாண் உடம்பு என்பதை எட்டடிச் குச்சு என்றும், இறைவன் திருவருள் இன்பத்தை அடையும் முத்தியை மச்சு வீடு என்றும் பரதேசி சொல்கிறான்.

அருணகிரிநாதப் பெருமான் நாம் இப்போது இருக்கிற குடிசையைப் பற்றி நன்றாக உணர்ந்தவர். என்றும் மங்காத இன்பம் தருகின்ற மெய்யான வீட்டைப் பற்றியும் உணர்ந்தவர்.

ஐந்து பகைவர்

நாம் பெற்ற உடம்பாகிய இந்த வீட்டில் நாம் மாத்திரம் குடி இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதில் ஐந்து இந்திரியங்கள் ஆகிய பேய்களும் வாழ்கின்றன. அவற்றுடனே வாழ்கின்ற நமக்கு ஒரு கணமாவது அமைதி இருப்பதில்லை. நம்முடைய ஆத்மாவுக்குப் பயன் தருகின்ற செயலைச் செய்யப் புகுந்தால் இந்திரியங்கள் அந்தச் செயல்களை மாற்றுகின்றன; தங்களுக்கு ஆக்கிக் கொள்கின்றன. இதனை அருணகிரிநாதர் முன் ஒரு பாட்டில் சொன்னார்.

''ஓர ஒட்டார் ஒன்றை உன்ன ஒட்டார் மலர் இட்டு உனதாள்
சேர ஒட்டார் ஐவர்; செய்வதென் யான்?''

என்ற பாட்டில் நாம் செய்கின்ற செயல்களுக்குக் குறுக்கே நின்று ஐந்து பேர்கள் தடுக்கிறார்களே என்று புலம்பி இருக்கிறார். வேறு

ஒரு பாட்டில், 'இந்த வீட்டைக் கட்டி நான் குடியிருப்பதற்காக நீ கொடுத்திருந்தாலும் இந்த வீடு எனக்குச் சொந்தமாகாமல் ஐந்து இந்திரியங்கள் ஆகிய பகைவர்களுக்குச் சொந்தமாக இருக் கிறதே!' என்பதைத் தெரிவித்திருக்கிறார்.

"ஐவர்க்கு இடம்பெறக் கால்இரண்டு ஓட்டி, அதில் இரண்டு கைவைத்த வீடு"

என்று சொல்கிறார்.

இப்படி ஐந்து பொறிகளின் வயப்பட்டு மனம் செல்ல, அதன் வழிப்பட்டு நம்முடைய வாழ்வு அமைகிறது. ஐந்து பேர் களுக்கு நடுவில் வாழ்கின்ற வாழ்வு எப்போதும் துன்பந்தான். 'எலி வளையானாலும் தனி வளை வேண்டும்' என்பது ஒரு பழமொழி. தனியாக ஒரு வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்ற தாபம் எந்தக் குழந்தைக்கு இருக்கிறதோ அந்தக் குழந்தையின் ஆவலைப் போக்குவதற்கு எம்பெருமான் கருணை புரிவான். இந்தச் செய்திகளை எல்லாம் நினைந்து தம்முடைய அநுபவத்தை அருணகிரியார் சொல்கிறார்.

அந்த வீடு

"எங்கள் பெருமானாகிய முருகன் நான் பூதம் தங்கிய வீட்டில் குடியிருப்பதை அறிந்து கருணை செய்தான். அந்த வீட்டில் நான் இருக்கிறேனே என்று பல காலம் வருந்தினேன். அந்த வாழ்க்கையில் பெறுகின்ற துன்பம் மேன்மேலும் என்னை உறுத்தியது. அதனால் நைந்து அந்த வாழ்க்கையை மாற்றுவதற்கு எண்ணினேன். எம்பெருமானும், என்னுடைய கருணைத் தந்தையும் ஆகிய ஆண்டவனிடத்தில் முறையிட்டுக் கொண்டேன். அந்தப் பெருமான் என்னுடைய வேண்டுகோளைச் செவிமடுத்து, "நீ இந்தப் பூதவீட்டில் இருக்க வேண்டாம். ஒருவரும் அறியாத தனிவீட்டில் இருப்பாயாக. அங்கே சுகமாகத் தங்குவாயாக. எப்போதும் சளசளவென்று பேசுகின்ற இந்த வாழ்வைப் போல இராமல் ஒரு பேச்சும் இன்றி ஒரு சிந்தனையும் இன்றிச் சுகமாகத் தூங்கு என்று சொன்னான்" – இப்படி அருணகிரியார் தெரிவிக்கிறார்.

ஒரு பூதரும் அறியாத் தனி வீட்டில் உரை உணர்வு அற்று இரு, பூத வீட்டில் இராமல் என்றான்.

'ஒரு பூதரும் அறியா வீடு, தனி வீடு அது. அந்த வீட்டில் ஒரு பூதமும் அறியாமல் தனியாக நான் இருக்கும்படி, உரை அற்று, உணர்வு அற்று இருக்கும்படியாகச் செய்தான். இழிந்த வீட்டை மாற்றி உயர்ந்த திருமாளிகையில் என்னை வைத்தான்' என்று அலங்காரமாக அருணகிரியார் சொல்கிறார். அதன் கருத்து, பௌதிகமான சரீரத்தை விட்டு என்றும் மாறாத இன்பத்தைத் தருகின்ற முத்தி வீட்டை எனக்குக் கொடுத்தான் என்பதே.

இந்த உடம்பைப் பூத வீடு என்று சுட்டினார். ஐந்து பூதங்களால் அமைந்தது ஆகையால் இது பூத வீடு ஆயிற்று. இனி முத்தியைப் பற்றி, ''ஒரு பூதரும் அறியா வீடு; தனி வீடு; உரையற்ற வீடு; உணர்வற்ற வீடு'' என்று தெரிந்து கொள்ளும்படி பாட்டில் சொல்கிறார்.

பூதர் என்பது மனிதருக்குப் பெயர். உலகிலுள்ள மக்கள் யாரும் முத்தி இன்பத்தை உணர இயலாது. அவ்வின்பத்தில் கூட்டம் இல்லை. எல்லாம் ஒன்றாக இணைந்து இருக்கிற இடம் அது. இறைவன், ஆத்மா என்ற பிரிவுகூடத் தோற்றாமல் அத்து வித நிலையில், ''நீ வேறு எனாது இருக்க, நான் வேறு எனாது இருக்க'' என்றபடி இணைந்து குலவும் வீடு அது. உடல், உரை, மனம் ஆகிய மூன்று கரணங்களையும் தாண்டி அமைந்த இடம் அது. இந்த வீடு உடம்பு. இதனை விட்டு விடுகிறோம். அந்த வீட்டில் உரையும் நினைவும் இல்லை. மனத்திற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்ட இடம் ஆகையால் அது உரையும் உணர்வும் அற்ற இடம். பல பேச்சுக்களைப் பேசுவதனால் துன்புற்றுப் பலவகை யான கவலைகளினால் வாடி வதங்கி இன்னல் உறுகின்ற ஒருவரைப் பேச்சு இல்லாது, கவலைக்கு இடம் இல்லாது, கூட்டமே இல்லாது யாரும் வரமுடியாத தனியான சுதந்தர வீட்டில் வைத்துக் காப்பாற்றியது போன்ற ஒரு சித்திரத்தை அருணகிரிநாதர் தீட்டுகிறார்.

2

இனி இப்படித் தந்த பெருமான் யார் என்பதை விரிவாகச் சொல்கிறார். முருகப் பெருமானுடைய புகழ் அங்கே வருகிறது. 'அவன் சிவபெருமானுடைய குருநாதன்; வேலாயுதன்; சூரனை அழித்தவன்' என்று மூன்று நிலையைச் சொல்கிறார்.

குமரகுருபரன்

உலகத்திலுள்ள மக்களுக்கு எல்லாம் சாதுக்களாக இருக்கிறவர்கள் குருவாக அமைவார்கள். அவர்களுக்குத் துறவிகள் ஆசிரியர்களாக இருப்பார்கள். துறவிகளுடைய பரம்பரையைப் பார்த்தால் அவர்களுடைய மூல ஆசிரியர்கள் முனிபுங்கவர்களாக இருப்பார்கள். அந்த முனிபுங்கவர்களுள் சிறந்தவர்கள் சனகர் முதலிய நான்கு பேர்கள். அந்த நால்வருக்கும் குருவாக இருந்தவன் தென்முகக் கடவுளாகிய தட்சிணாமூர்த்தி. குரு என்று சொன்னால் அந்தச் சொல் சிறப்பாகத் தட்சிணாமூர்த்தியைக் குறிக்கும்.

எல்லோருக்கும் ஆதி குருவாக இருக்கின்ற தட்சிணா மூர்த்தியும் ஒரு சமயம் மாணாக்கனாக இருந்தான். குருவாக இருக்கிறவன் மாணாக்கனாகவும் இருப்பான். அவன், நன்கு கல்வி பயின்றவனாகையால் தன் குருவை நோக்க மாணாக்கனாகவும், பிறருக்குக் கல்வி பயிற்றுவிப்பவன் ஆகையால் மாணாக்கனை நோக்கக் குருவாகவும் இருப்பது இயல்பு. இந்த வகையில் பார்த்தால் உலகிலுள்ள அத்தனை குரு மூர்த்திகளும் மாணாக்கர்களாகவும் இருப்பார்கள். இந்த நிலை தட்சிணா மூர்த்திக்கும் உண்டு. தென்முகக் கடவுள் ஆகிய சிவ பெருமானுக்கும் ஒரு குரு அமைந்தான். அந்தக் குருவே முருகப் பெருமான். குருவுக்குள் சிறந்த குரு ஆகையால் அவனைக் குமர குருபரன் என்றும், சிவகுரு என்றும், சிவசாமி என்றும், தகப்பன் சாமி என்றும் பெரியவர்கள் கூறுவார்கள். பிறரிடம் இருந்து உபதேசம் பெறாமல் குருவாகவே நிற்கிறவன் முருகப் பெருமான். இப்படியே குரு சிஷ்ய பரம்பரையில் தனக்குப் பின்னாலே மாணாக்கன் இல்லாமல் ஒருவன் இருந்தால் அவன் மாணாக்கனாக மட்டும் நிற்கும் நிலை உடையவன். குருவாகவே நிற்கும் பெருமை உடைய பெருமான் ஞான பண்டித சாமியாகிய முருகன்.

முருகனுடைய பெருமைகள் பல. வள்ளி மணவாளன் என்று அவனைச் சிந்திக்கும்போது பக்தர்களுடைய மனம் உருகுகிறது. சூரனைச் சங்காரம் செய்தவன் என்று நினைக்கும்போது அடியார்களுக்குத் துணிவு பிறக்கிறது. சின்னஞ்சிறு குழந்தை என்று சொல்லும்போது யாரும் பயம் இல்லமல் அணுகுகின்ற அன்பு பிறக்கிறது. இப்படி அவன் பல வகையில் திருவிளை யாடலைச்

செய்தாலும் அவனுடைய சிறப்பு, குமரகுருபரன் ஆக இருப்பதில் விளங்குகிறது; அவன் தலைமை விளங்குகிறது. வள்ளி மண வாளனாக இருப்பதில் அவன் கருணை விளங்குகிறது.

முதல் திருப்புகழ்

அருணகிரிநாதப் பெருமான் குமரகுருபரனிடத்தில் ஈடுபாடு உடையவர். அவர் பதினாறாயிரம் திருப்புகழ் பாடினார். முதல் முதலாக அதனைப் பாடத் தொடங்கியபோது முருகப் பெரு மானுடைய திருவிளையாட்டில் பல திறங்கள் நினைவுக்கு வந்தன. அவற்றுள் முதலில் எதை வைப்பது என்று யோசித்தார். எந்தக் கோலத்தில் முருகனை முதலில் வைத்துச் சொல்வது என்ற ஆராய்ச்சி அவருக்குப் பிறந்தது. அவருடைய உள்ளத்தில் குமர குருபரனாகத் தோற்றம் அளித்தான் ஆண்டவன். அழகிய பீடத்தில் அவன் அமர்ந்து இருக்கச் சிவபெருமான் அவனுக்கு முன் நின்று அவன் புகழ் பேசி, உபதேசம் செய்ய வேண்டு மென்று கேட்க, இளையபிரான் உபதேசம் செய்வதாக ஒரு காட்சி அவருக்குத் தோன்றியது. உடனே பாடத் தொடங்கினார்.

''முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர – எனஓதும்
முக்கட்பர மர்க்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்து''

இந்த அலங்காரப் பாடலில் முருகனைப் பற்றிச் சொல்லும் போது, அவன் சிவபெருமானுக்குக் குருவாக இருந்தவன் என்று சொல்ல வருகிறார்.

சிவபிரான் புகழ்

சிவபெருமான் எத்தகையவன்? யானையை உரித்துப் போர்த்தவன். மூன்று புரங்களை எரித்தவன்.

இருகோட்டு ஒரு கைப்
பொரு பூதரம் உரித்து, ஏகாசம் இட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன், நிட்டூர சூர குலாந்தகனே.

இரண்டு கொம்புகளும் ஒரு கையும் உடைய, போர் செய் கின்ற மலை போன்ற யானையின் தோலை உரித்து, அந்தத்

தோலையே மேலே போர்வையாகப் போர்த்துக் கொண்டவன் அவன்; திரிபுரத்தை அழிததவன்.

சிவபெருமான் செய்த பல வீரச் செயல்களுக்குள் முக்கிய மானவை எட்டு. அந்த எட்டு வீரச் செயல்களையும் அவன் செய்ததை நினைப்பதற்குத் தமிழ் நாட்டில் எட்டுத் தலங்கள் இருக்கின்றன. வீரத்தைப் புலப்படுத்தும் அத்தலங்களுக்கு வீர ஸ்தானம் என்று பெயர். அதுவே பின்பு வீரட்டானம் என்றும் வீரட்டம் என்று மாறி வந்தது.

ஒவ்வொரு வீரட்டத்திலும் சிவபெருமான் செய்த ஒவ்வொரு வீரச் செயலின் நினைப்பை உண்டக்கும் அடையாளங்கள் இருக் கின்றன. அந்த எட்டு வீரட்டானங்கள் ஆவன. 1. திருக்கண்டியூர்: பிரமன் சிரங் கொய்தது. 2. திருக்கோவலூர்: அந்தகாசுரனைச் சங்கரித்தது. 3. திருஅதிகை: திரிபுரத்தை எரித்தது. 4. திருப்பறி யலூர்: தக்கன் சிரங் கொய்தது. 5. திருவிற்குடி: சலந்தராசுரனைச் சங்கரித்தது. 6. வழுவூர்: யானையை உரித்தது. 7. திருக்குறுக்கை: காமனை எரித்தது. 8. திருக்கடவூர்: யமனை உதைத்தது. இவற்றை அட்ட வீரட்டம் என்பர்.

"பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம்அதிகை
மாமன் பறியல்,சலந்தரன் விற்குடி, மாவழுவூர்
காமன் குறுக்கை, யமன்கட வூர்இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களுஞ் சூடிதன் சேவகமே"

என்பது அட்ட வீரட்டம் இன்னவை என்பதைச் சொல்கிறது. சிவபெருமான் புரிந்தருளிய எட்டு வீரச் செயல்களுக்குள் இரண்டு செயல்களை அருணகிரியார் இந்தப் பாட்டில் சொல்கிறார். கஜாசுர சங்காரம், திரிபுர சங்காரம் என்னும் இரண்டையும் நினைப்பூட்டுகிறார்.

இருகோட்டு ஒரு கைப்
பொரு பூதரம் உரித்து, ஏகாசம் இட்ட புராந்தகன்

கஜாசுர சங்காரம்

ஏகாசம் – போர்வை. கஜாசுரனை உரித்து, மேலே போர்வை யாகப் போர்த்திக் கொண்ட வீரச் செயலை முதலில் சொன்னார். இதனால் சிவபெருமானுக்குக் கிருத்திவாசன் என்ற பெயர்

உண்டாயிற்று. இந்த வீரச் செயலை நினைப்பூட்டும் இடம் வழுவூர். வழுவையூர் என்பதே அப்படித் திரிந்துவிட்டது என்று எங்கள் ஆசிரியப் பெருமான் சொல்வார். வழுவை – யானை.

யானை என்ற அறிகுறி நல்ல பொருளையும், கெட்ட பொருளையும் குறிக்கும். ஞானத்தை யானையாக உருவகிப்பது உண்டு. இது நல்ல பொருள். அகங்காரத்திற்கும் யானை அறிகுறி. இது கெட்ட பொருள்.

''ஆங்காரம் என்னும் மதயானை''

என்பது தாயுமானவர் பாடல். இறைவன் ஆணவம் இல்லாமல் இருப்பவன். ''ஆணவம் அகன்ற சுத்த அறிவல்லால் உருவம் இல்லாத் தாணு'' என்பது சாத்திரம். அவன் இருக்கும் இடத்தில் ஆணவத்திற்கு வேலை இல்லை. அவன் திருவருளினால் ஆணவம் ஒழியும். யானையை அவன் அழித்தான் என்பதன் உட்கருத்து, எம்பெருமான் ஆணவத்தை நீக்கி ஞானத்தைத் தருவான் என்பதே.

யானையை வென்றதோடு நில்லாமல் அதன் தோலை எம் பெருமான் போர்த்துக் கொண்டிருக்கிறான். மான், புலி, சிங்கம், முதலியவற்றை வேட்டை ஆடுகிறவர்கள் அந்த அந்த விலங்கின் உறுப்புகளைத் தம்முடைய வீட்டில் வைத்திருப்பது உலக வழக்கம். அவர்கள் வீட்டுக்குப் போனாலேயே அவர்கள் அந்த விலங்குகளை வேட்டையாடின வீரர் என்பது புலப்படும்.

அவ்வண்ணமே எம்பெருமான் ஆனைத் தோல் ஆடையை மேல் போட்டுக் கொண்டிருக்கிறான். தான் செய்த வீரச்செயலை எல்லோரும் பாராட்ட வேண்டும் என்று அதனைச் செய்ய வில்லை. ஆணவத்தால் துன்புறுகின்ற ஆருயிர்களுக்கு அந்த ஆணவத்தை போக்குவதற்குரிய திருவருள் இந்தப் பெரு மானிடத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை உண்டாக்கு வதற்காகவே அந்த அடையாளத்தை வைத்துக் கொண்டிருக்கிறான்.

எங்கேனும் விழா நடந்தாலும் வேறு வகையான கூட்டங்கள் நடந்தாலும் அங்கே தொண்டர்கள் வேலை செய்து கொண்டிருப் பார்கள். அந்தத் தொண்டர்களுக்குத் தலைவராக இருப்பவர் அவர்களை இயக்குவிப்பார். அவர்களுக்கெல்லாம் தம்முடைய சட்டையில் போட்டுக் கொள்வதற்குச் சில வகையான அடையாளச் சின்னங்களைத் தருவார்கள். அந்தச் சின்னங்களைக்

கொண்டு இவர்களால் இன்ன காரியத்தைச் செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் மக்களுக்கு வரும். அந்தத் தொண்டர்களை அழைத்துத் தமக்கு உதவி செய்யும் படி வேண்டிக் கொள்வார்கள். அந்த அடையாளச் சின்னங்கள், மற்றவர்கள் அவர்களை அணுகி உதவி கேட்பதற்குத் துணையாக இருப்பது போல, எம்பெருமான் போர்த்துக் கொண்ட யானைத் தோல் ஆணவம் நீங்குவதற்கு வேண்டிய திருவருளை இவன் வழங்குவான் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.

புராந்தகன்

அடுத்தபடியாகப் புராந்தகன் என்று சொல்கிறார். புரத்திற்கு அந்தகன் சிவபெருமான்; மூன்று புரங்களை அழித்தவன். மூன்று புரங்கள் என்பவை மூன்று மலங்களுக்கு அடையாளம். மூன்று மலங்களால் ஆன கோட்டைக்குள் அகப்பட்டு, கட்டுப்பட்டு, ஆன்மா வீடு அடையாமல் இருக்கிறது. வீட்டைப் பெறவேண்டு மானால் மூன்று மலங்களையும் போக்க வேண்டும். இறைவன் மூன்று மலங்களையும் தன்னுடைய திருவருளால் அழித்து உயிர்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்வான். இந்த அரிய கருத்தைத்தான் அவன் மூன்று புரங்களை அழித்த கதை தெரிவிக் கிறது. மூன்று புரஙகள், மூன்று மலங்கள். அவற்றில் இருந்த அசுரர்கள் ஆன்மாக்கள். இறைவன் மூன்று புரங்களை மாத்திரம் அழித்தானே அன்றி, புரங்களில் இருந்த அசுரர்களை அழிக்க வில்லை. புரங்களைச் சுட்டு எரித்த பிறகு அந்த மூவரையும் தன்னுடைய அணுக்கத் தொண்டர்களாக ஆக்கிக் கொண்டான். ஒருவனை மத்தளம் வாசிக்கும் தொண்டனாகவும், மற்ற இரு வரையும் வாயில் காவலராகவும் அமைத்துக் கொண்டான் என்று புராணம் சொல்கிறது. ஆன்மாக்களுக்குரிய மூன்று மலங்களை யும் அழித்து ஒழித்து அவ்வான்மாக்களை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் பேரருளாளன் என்பதைத் திரிபுராந்தகனாக இருந்து எம்பெருமான் காட்டுகிறான்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்;
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே"

என்று புரம் எரித்த செயலுக்கு உள்ளுறை கூறுவர் திருமூலர்.

எனவே, 'இருகோட்டு ஒரு கைப் பொரு பூதரம் உரித்து ஏகாசம் இட்ட புராந்தகன்'' என்று சிவபெருமானைச் சொன்ன மையினால் அவன் ஆணவத்தை அழிக்கும் திறல் பெற்றவன், மும்மலத்தைப் போக்கும் மூர்த்தி என்று சொன்னதாக முடியும். அத்தகைய பெருமானுக்குக் குருமூர்த்தியாக வந்தவன் முருகப் பெருமான்.

வேலவன்

குரு உருவத்தில் வந்தவன் வேலாயுதம் படைத்த பெருமான்.

இருகோட்டு ஒரு கைப்
பொரு பூதரம் உரித்து ஏகாசம் இட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன்.

ஆணவத்தை ஒழித்து, மலத்தை நீக்கும் எம்பெருமானுக்கு ஞானம் வரும்படியாகச் செய்தவன் முருகன் என்பது உயர்வு நவிற்சியாகத் தோற்றலாம். உலகுக்குத் தன் தகுதியைக் காட்டு வதற்காகச் செய்கின்ற திருவிளையாடல்கள் அவை.

திரிபுராந்தகனுக்குக் குரு உருவில் வந்தவன் வடிவேற் பெருமான் என்று சொன்னார் அருணகிரிநாதர். சிவபெருமானைப் பலவகையில் புகழ்ந்துவிட்டு அவனுக்குக் குருவாக இருக்கும் தகுதி முருகப் பெருமானுக்கு உண்டு என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார். 'முருகன் ஞானகுருவாக வந்தவன். அதற்கு அடையாளமாகத் திருக்கரத்தில் வேலை வைத்திருக்கிறான். அது ஞான சொரூபம். அவன் ஞான உபதேசம் செய்கின்ற தேசிகன் என்பதைக் காட்டுகிறது. ஆகையால் குருபூத **வேலவன்**' என்று அடையாளம் சொன்னார்.

சூரகுலாந்தகன்

ஞான உபதேசம் செய்பவனாகிய அவன் அஞ்ஞானம் முழுவதையும் அழிப்பான். அந்த ஆற்றலும் முருகப் பெருமா னிடத்தில் இருக்கிறதென்பதைப் புராணத்தைக் காட்டியே சொல்கிறார் அருணகிரிநாதர்.

குருபூத வேலவன் நிட்டூர சூர குலாந்தகனே.

நிட்டூரம் – கொடுமை. நல்லவர்களுக்குக் கொடுமை செய்வதையே தன்னுடைய தொழிலாகப் படைத்த சூரன் என்னும் தலைவனையும், அவனுடன் சேர்ந்த சுற்றத்தார்களையும் அடியோடு அழித்தவன் முருகன்; சூர குலத்திற்கு அந்தகன் ஆக நின்றவன். சிவபெருமான் புராந்தகன். இவன் சூர குலாந்தகன்.

முன்னாலே ஐந்து பேர்களாலே நான் வாடுகிறேன் என்று சொன்ன இடத்தும் எம்பெருமான் நிட்டூர சூரனுக்கு அழிவு செய்தவன் என்று சொன்னார்.

''ஓரஒ ட் டார்ஒன்றை உன்னஒட் டார்மலர் இட்டுஉனதாள்
சேரஒட் டார்ஐவர். செய்வதென் யான்? சென்று தேவர்உய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட்டு ஓர்இமைப் போதினில் கொன்றவனே.''

சூரனும் அவன் சுற்றத்தார்களும் அகங்காரத்திற்கும் மமகாரத் திற்கும் அறிகுறிகள். அசுரர்கள் அஞ்ஞானத்தின் வகையாகிய பல குணங்களுக்கு அடையாளம். அத்தகைய இழி குணங்களை அசுர சம்பத்து என்று கூறுவார்கள். அவற்றை எல்லாம் முருகப் பெருமான் அழித்தான்; ஞானத்தினால் அழித்தான். அவன் ஞான ஆக்கத்தையும் அஞ்ஞான நீக்கத்தையும் தருகிறவன் என்பதை வேலவன், நிட்டூர சூரகுலாந்தகன் என்ற இரண்டு பெயர்களால் தெரிவித்தார்.

''முருகப் பெருமான் சிறந்த ஞானாசிரியன்; அஞ்ஞானத்தைப் போக்குபவன். அவனிடததில் வந்து உபதேசம் பெற்ற மாணாக் கனோ ஆணவத்தை நீக்குபவன்; மும்மலத்தை அழிப்பவன். இப்படிப் பெரிய மாணாக்கனைப் பெற்ற பெரிய குரு என்னிடத்தில் பெருங்கருணை உடையவனாக வந்து, 'பூதம் நிரம்பிய வீட்டில் நீ இராமல் தனி வீட்டில் சுகமாக இரு' என்று சொன்னான்'' என்று தாம் பெற்ற பேற்றை வியப்புணர்ச்சியுடன் பேசுகின்றார் அருணகிரியார்.



ஒருபூ தரும்அறி யாத்தனி
 வீட்டில் உரைஉணர்வற்று
இருபூத வீட்டில் இராமல்என்
 றான்,இரு கோட்டுஒருகைப்

பொருபூ தரம் உரித்து, ஏகாசம்
இட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன், நிட்டூர
சூர குலாந்தகனே.

(இரண்டு கொம்புகளையும் ஒரு துதிக்கையையும் உடைய போரிடும் மலைபோன்ற கயாசுரனாகிய யானையை உரித்து அதன் தோலை மேற் பார்வையாக அணிந்து கொண்டவனும் திரிபுரத்தை அழித்தவனுமாகிய சிவபெருமானுக்குக் குருவடிவாக வந்தவனாகிய வேற்கைப் பெருமானும், கொடுமை புரியும் சூரனது குலமுழுவதற்கும் காலனாக நின்று அழித்தவனுமாகிய முருகன், ''நீ இந்த ஐம்பூதங்களால் அமைந்த வீட்டில் இராமல், ஒரு மனிதரும் அறியாத தனி வீட்டில் வாக்கின் செயலாகிய உரையும் மனத்தின் செயலாகிய உணர்வும் அற்று இருப்பாயாக'' என்று அருள் செய்தான்.

பூதர் – மனிதர். தனிவீடு – தனக்கு இணையற்ற முத்தி. பூத வீட்டில் – ஐம்பூதங்களின் பரிணாமமாக உள்ள உடம்பில். கோடு – கொம்பு. பூதரம் – மலை; இங்கே முன் உள்ள அடைகளால் யானையைக் குறித்தது. ஏகாசம் – போர்வை. புராந்தகன் – புரத்துக்கு யமனைப் போன்றவன். குருபூதம் – குருவடிவையுடைய. நிட்டூரம் – கொடுமை புரியும்.

இருவகை விளையாட்டு

1

பிரபஞ்சம் என்பது ஒரு விளையாட்டு மேடை. இந்த மேடையில் விளையாடும் உயிர்க் கூட்டங்கள் குழந்தைகள். குழந்தைகளுக்குத் தலைவனாக இருக்கும் குமர குருபரனும் குழந்தையே. குழந்தைகளுக்கு விளையாடுவது இயல்பு. நாம் செய்கின்ற விளையாட்டு ஒருவகை. முருகன் செய்கின்ற விளையாட்டு வேறுவகை.

விளையாட்டு வகை

உடம்பென்னும் ஊனக் குடிசையில் புகுந்து நாம் செய்யும் செயல்கள் மேன்மேலும் உடம்பை அடையும்படி செய்கின்றன. மனத்தினாலே நினைப்பது, வாயினாலே பேசுவது, உடம்பினால் செயல் செய்வது ஆகிய எல்லாச் செயல்களும் மீண்டும் பிறவி விளைவதற்கு விதைகள் ஆக இருக்கின்றன. இப்படி இருக்கும் இந்த விளையாட்டு ஒரு விதம்.

ஆண்டவனோ மாயா விளையாட்டு விளையாடும் குழந்தைகளுக்கு நடுவில் ஞான விளையாட்டு விளையாடுகிறான். அவன் ஞான விளையாடல் புரிவதால் ஊன விளையாடல் புரியும் சிலராவது அவன் திருவருளைப் பெறுகிறார்கள். சிலர், ''பெறவில்லையே!'' என்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர், ''பெறலாம்'' என்று நம்பிக்கையோடு இருக்கிறார்கள். சிறந்த சான்றோர்கள் ஊன நாடகம் ஆடும் உலகத்தவருக்கு ஞான நாடகம் ஆடுகின்ற நாயகன் இருக்கிறான் என்ற நினைப்பை ஊட்டுகிறார்கள்.

இவ்வாறு உலகமாகிய விளையாட்டு மேடையில் ஞான விளையாடல், ஊன விளையாடல் ஆகிய இரண்டும் நிகழ்கின்றன.

ஊனம் என்றால் உடம்பு. இந்த உடம்பு நாம் செய்த புண்ணிய பாவ வினைகளால் வந்தது. மாயா விளையாடல் காரணமாக வினைகள் உயிர்களைச் சாருகின்றன. உலகத்தில் நடைபெறும் ஊன விளையாட்டு அத்தனைக்கும் மாயை காரணம். அது உலகத்திலுள்ள மக்களை எல்லாம் இயக்குகிறது. இறைவன் திருவருள் அன்பர்களை இயக்குகிறது. அவன் திருவருளால் உண்டாகும் விளையாட்டு ஞானத் திருவிளையாட்டு. மாயை யினுடைய ஆற்றலால் விளைவது மாயை விளையாட்டு அல்லது ஊன் விளையாட்டு.

மாயையும் மனமும்

மாயை அகண்டமாக இருப்பது. வினைக்குக் காரணம் செயல்; செயல்களுக்கு மூலம் மனம். மனத்தின் செயலே பிறவியாக விளைகிறது. அந்த மனத்தைக் கண்டமான மாயை என்று சொல்ல லாம். மாயை என்ற தாய்க்கு மனம் என்பது ஒரு குழந்தை. கந்தபுராணம், மாயைக்குச் சூரன் பிள்ளையாகப் பிறந்தான் என்று கூறுகிறது. இந்த மனமும் சூரனைப் போன்றதே. பிழம்பாக இருப்பது, தனியாக இருப்பது என்று இரண்டு வகை உண்டு. பிழம்பைச் சமஷ்டி என்றும், தனியை வியஷ்டி என்றும் சொல்வார்கள். தோப்பு என்பது சமஷ்டி; மரம் என்பது வியஷ்டி. தோப்பு என்பது முழுமையும் குறிப்பது; தொகுதியைக் குறிப்பது. மரம் ஒன்றைக் குறிப்பது. தொகுதியாக உள்ள பிழம்பில் மரம் ஓர் உறுப்பு. மக்கள் என்பது சமஷ்டி; மனிதன் என்பது வியஷ்டி. அவ்வாறு மாயை என்பது பிழம்பு அல்லது சமஷ்டி; மனம் தனி அல்லது வியஷ்டி. மாயையின் குஞ்சு மனம். மனம் எங்கே இருக்கிறதோ அங்கே மாயையின் விலாசம் இருக்கும். மனம் மனமாக இருக்கும் வரையில் மாயையின் விலாசம் அங்கே இருக்கும்.

'மனம் மனமாக இல்லாமல் வேறு எப்படி இருக்கும்?' என்ற கேள்வி இங்கே எழலாம். சில பசுமாடுகள் உண்டு. ''அந்த வீட்டுக்குப் போனால் ஜாக்கிரதையாகப் போகவேண்டும். அங்கே இருப்பது பசு அல்ல; புலி; பக்கத்தில் போகாதீர்கள்'' என்று சொல்வார்கள். உண்மையில் அங்கே இருப்பது பசுமாடு

தான். பசுத்தோல் போர்த்த புலியும் அன்று. ஆனால் அருகில் போனால் துன்புறுத்தும். ஆகையால் பசுவாக அது தோற்றம் கொண்டிருந்தாலும் அதைப் புலி என்று சொல்கிறார்கள்.

ஒரு வீட்டில் நாய் இருக்கிறது. அதன் பக்கத்தில் போக அஞ்சுகிறோம்.அந்த வீட்டுக்காரர் அதைப் பசு என்று சொல்கிறார். நாயின் உருவம் இருந்தாலும் கடிக்கும் என்று அஞ்சுகிற மனிதனுக்கு அது பசுமாட்டைப் போலச் சாதுவாக இருக்கும் என்று காட்டவே அதனைப் பசு என்று சொல்கிறார்.

அது போலவே மனம் மனமாக இருக்கும் நிலை ஒன்று; திருவருள் இனமாக இருக்கும் நிலை ஒன்று. மனம் மாயையின் குஞ்சாக, மனமாக இருந்தால் நம்மை மீட்டும் பிறவிக்கு ஆளாக்கும். அது திருவருள் இனமாக இருந்து இறைவனை எழுந்தருளச் செய்யும் பீடமாக அமைந்தால் நம்முடைய பிறவியைப் போக்கத் துணையாக நிற்கும். ஐந்து தலை நாகம் நஞ்சைக் கக்குவதாக இருந்தால் துன்பத்தைத் தரும். அப்படிக் கக்காமல் இறுகிய மாணிக்கம் உடையதாய் இருந்தால் அதன்மேல் ரங்கநாதனைப் போலப் படுக்கலாம்.

மனம் ஞானத்திற்குரிய ஏணியாக இருக்குமானால் அத்தகைய மனம் வேண்டும். அத்தகைய மனம் கிடைப்பது அரிது.

மாயை உலகம் எங்கும் பரவி இருப்பினும் நம்மிடத்தில் மனத்தின் உருவாக இருக்கிறது. ஒரு பெண் தன் கணவனைத் தன் பிறந்த வீட்டுக்கு அழைத்து வந்து விடுகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அங்கு அவள் செய்யும் அதிகாரத்தைக் கேட்க வேண்டாம். அதுவும் அவளுடைய பிறந்தகம் பணக்கார வீடாக இருந்துவிட்டால் அவளுக்குத் தலைகால் தெரியாது. அவளுடைய கணவன் மாமியாருக்கு அடிமை; மாமனாருக்கு அடிமை; அந்த வீட்டிலுள்ள எல்லோருக்கும் அடிமையாகி விடுகிறான். அங்கே வேலைக்காரனாக வாழ்கிறான். இதற்கெல்லாம் காரணம் என்ன? மாமியாருக்கும் மாமனாருக்கும் அவன் அடிமையாக இருப்பதற்கு அவர்களிடத்தில் உண்டான நேர்த் தொடர்பு காரணம் அன்று. அவன் மனைவிக்கு முதலில் அடிமையாக இருக்கிறான். அதனால் மாமனார் மாமியாருக்கு அடிமை ஆகிறான். அப்படியே மனத்திற்கு

நாம் அடிமை ஆகிறபோது மாயைக்கும் அடிமையாகிவிடுகிறோம். மாயை என்ற பெரிய ஆற்றிலிருந்து வரும் கால்வாய் மனம்.

மனம் மூலமாக இருக்க நாம் விளையாடும் விளையாட்டை மன விளையாட்டு அல்லது மாயை விளையாட்டு என்று சொல்ல லாம். மாயை விளையாட்டு மாற வேண்டுமானால் மனத்தின் விளையாட்டு மாறவேண்டும்.

விளையாட்டும் வினையும்

நாம் இறைவனுடைய குழந்தைகளாக இருக்கிறோம். ஆனால் நம்மிடத்தில் குழந்தைத்தன்மை இல்லை. குழந்தைகள் செய்வது விளையாட்டு என்று பொதுவாகச் சொல்கிறோம். ஆனால் பொல்லாத குழந்தைகள் விளையாட்டை வினையாக்கி விடுகின்றன. தீபாவளியில் குழந்தைகள் வாணம் விட்டு விளை யாடுகிறார்கள்; பட்டாசு வெடிக்கிறார்கள்; அது விளையாட்டு. ஆனால் அந்த வாணத்தைக் கூரைக் குடிசையில் ஒரு குழந்தை செருகிவிட்டால் அது விளையாட்டு ஆகுமா? அதனால் பெரிய வினை உண்டாகிவிடுகிறது. இதற்குக் காரணம், அந்தக் குழந்தை யிடத்தில் குழந்தைத் தன்மை இல்லாமல் பொல்லாங்கு இருப் பதே. அத்தகைய குழந்தைகளைப் பெற்ற தாய் தந்தையர்கள் அவர்களை வெளியில் விடுவதற்கே அஞ்சுவார்கள். பைத்தியம் பிடித்த குழந்தை ஒன்று இருக்கிறது. அது செய்கிற காரியங்களை விளையாட்டு என்று சொல்லலாமா? கையில் எதை எடுத்தாலும் வீசுகிறது; அடித்துக் கொள்கிறது. அதனால் அதற்கும் தீங்கு உண்டாகிறது; மற்றவர்களுக்கும் உண்டாகிறது.

மனம் என்னும் குழந்தையும் நல்ல இயல்போடு இருந்தால் அது செய்வன விளையாட்டாக இருக்கும்; அதனால் நமக்குத் துன்பம் வராது. ஆனால் பெரும்பாலான மனக்குழந்தைகள் பொல்லாத குழந்தைகள்; பைத்தியம் பிடித்த குழந்தைகளாக இருக்கின்றன. அந்தக் குழந்தையின் கையில் ஐந்து கத்திகளைக் கொடுத்திருக்கிறான் ஆண்டவன். ஐந்து இந்திரியங்களான கத்திகளை வைத்துக் கொண்டு இந்த மனம் என்னும் குழந்தை பிரபஞ்ச மேடையில் விளையாடத் தொடங்கினால் அது எத்தனை பேரைக் கொலை செய்யும் என்று கணக்குச் சொல்ல

முடியாது. எவ்வளவோ பேருக்குக் காயத்தை உண்டாக்கும். எத்தனையோ பேர்களிடத்தில் அடி வாங்கும்.

ஆகவே, விளையாட்டாக இருந்தாலும் வினையாக முடிபவை சில. குழந்தை செய்வதால் விளையாட்டு என்று சொல்ல வேண்டுமே யொழிய, அந்தச் செயலால் நிகழும் துன்பங்களை எண்ணினால் அது விளையாட்டு ஆகாது. குழந்தை குரங்காகி விட்டால் விளையாட்டு வினையாகிவிடும்.

மாயை விளையாட்டு

பிரபஞ்ச நாடகம் ஆடும் உயிர்களுக்கு மனம் பொல்லாத குழந்தையாக இருக்கிறது. ஐந்து இந்திரியங்கள் என்னும் கத்தி களை வீசி விளையாடுகிற பொல்லாத குழந்தை அது. அது விளையாடுகிற விளையாட்டு வினை விளையாட்டு அல்லது மாயை விளையாட்டு. தீய விளையாட்டை விளையாடும் குழந்தை களைப் பெற்றவர்களுக்கு உலகத்தார் அபவாதம் உண்டாகிறது; அரசாங்கத்தில் தண்டனை கிடைக்கிறது. இந்த மாயை விளை யாட்டு விளையாடும் மனத்தைப் பெற்ற உயிர்களுக்கு மேன் மேலும் துன்பங்கள் விளைகின்றன; பிறவியாகிய தண்டனை கிடைக்கிறது. அதனால் அந்தக் குழந்தையே வேண்டாமென்று சொல்வதுபோலப் பெரியவர்கள் மனமே வேண்டாமென்று சொன்னார்கள்; மனம் இல்லாத நிலை வேண்டுமென்றும், மனம் செத்துப் போக வேண்டுமென்றும் வேண்டினார்கள்.

மனம் மாறுபட்ட விளையாட்டைச் செய்வதற்குக் காரணம் அதனிடத்தில் ஏதோ நோய் இருக்கிறது. அந்த நோய்க்கு அஞ் ஞானம் அல்லது அறியாமை என்று பெயர். பித்தம் ஏறி இருப்ப தனால் குழந்தை பொல்லாங்கான செயல்களைச் செய்கிறது என்று சொல்வது வழக்கம். அப்படியே இந்த மனமும் அஞ் ஞானம் என்ற நோயைப் பெற்று மாயை விளையாட்டை விளை யாடுகிறது. அதற்கு ஏதேனும் பரிகாரம் செய்தால் நல்ல விளையாட்டை விளையாடும். அஞ்ஞானம் என்ற நோய்க்குப் பரிகாரம் ஞானம் அல்லது நல்ல அறிவு. ஆண்டவனைப் பற்றி அறிந்து அவன் திருவருள் பெறும் ஆர்வத்தால் நல்ல முறையில் முயற்சி செய்து பேரின்பத்தை அடைய வேண்டுமென்ற அறிவை

மனம் கொள்ள வேண்டும். அதற்கு வழி செய்வது ஞானம். அஞ்ஞானத்தைப் போக்கும் முயற்சி தொடங்கும்போது ஞான நாடகம் தொடங்குகிறது.

மனிதக் குழந்தைகள் உலகில் வாழும்போது விளையாடும் விளையாட்டு, ஒன்று ஊன நாடகமாக இருக்கும்; அல்லது ஞான நாடகமாக இருக்கும். ஊன நாடகத்தை மாயை நாடகம் அல்லது அஞ்ஞான நாடகம் என்று சொல்லலாம். இந்த நாடகம் அல்லது விளையாட்டு மேன்மேலும் வினைகளை விளைத்துத் திரும்பத் திரும்பப் பிறந்து இறந்து துன்புறும்படி செய்கிறது.

சேறும் கரையும்

இந்த மாயை விளையாட்டுப் போகவேண்டுமானால் அதற்கு மாறாக ஞான விளையாட்டு விளையாட வேண்டும். அதற்குத் துணை இல்லாமல் நம்மால் முடியாது. சேற்றில் இருப்பவன் ஒருவன் அதில் இருந்து எழவேண்டுமானால் சேற்றுக்கு அப்பால் இருக்கும் ஒருவனது துணை வேண்டும். கால் புதைந்துவிட்டது என்று, அதனை விடுவிக்கக் கைகளையும் சேற்றில் புதைத்தால் கால் வெளியில் வாராது; கையும் சேர்ந்து புதைந்துவிடும். சேற்றில் இருக்கும் வேறு ஒருவனது உதவியை நாடினால் அவனாலும் நம்மை மீட்க முடியாது. தண்ணீருக்குள் மூழ்குகின்றவனைக் காப்பாற்றுவதற்காகக் கரையில் இருந்து தண்ணீரில் குதித்து விட்டால் இரண்டு பேரும் நீரில் மூழ்கி இறந்துவிடுவதைப் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். அது போலவே சேற்றில் விழுந்தவனைக் கரையேற்றுவதற்குச் சேற்றில் விழுந்த வேறு ஒருவனால் முடியாது. அப்படியின்றிச் சேற்றுக்கு அப்பால் கரையில் ஒருவன் இருந்தால் அவன் கரையேற்ற முடியும்; கரையில் உள்ளவன் கைகொடுத்தாலும் சரி, சேற்றில் இருப்பவன் கையை நீட்டிப் பற்றிக் கொண்டாலும் சரி, கரையேறிவிடலாம்.

அஞ்ஞான நாடகம் ஆடும் மனம் ஞானநாடகம் ஆடும் கரைக்குப் போக வேண்டும். அந்தக் கரையில் இருக்கின்றவன் எம்பெருமான். அவனுடைய திருவருள் கிடைத்தால் நன்மை உண்டாகும்.

முயற்சியும் இறைவன் கருணையும்

இறைவன் ஞானமே வடிவமாக உடையவன். ஞானத்திற்கு இருப்பிடம். அவன் தன்னுடைய குழந்தைகளாகிய மக்களுக்கு ஞானம் தருவதற்கு எப்போதும் சித்தமாக இருக்கிறான். ஆனால் முயற்சி இல்லாதவனுக்கு எத்தனை கொடுத்தாலும் அது பயன் அற்றதாகப் போய்விடும். அதன் பெருமை அவனுக்குத் தெரியாது. சீரணம் பண்ணிக் கொள்ள முடியாத ஒரு பொருளைக் குழந் தைக்குக் கொடுத்து, அதனை உண்டால், அது குழந்தையின் வயிற்றை நாசம் ஆக்கிவிடும். அப்படியின்றிச் சீரணிக்கும் ஆற்றல் உடைய குழந்தையானால் அந்தப் பொருளால் இன்பத்தைப் பெறலாம். அப்படியே முயற்சி செய்யும் மனிதனுக்கு ஆண்டவன் தன்னுடைய அருளைக் கொடுத்தால் அது பயனை உண்டாக்கும்.

இப்படிச் சொல்வதனால் இறைவன் நம்முடைய முயற்சியின் அளவைக் கொண்டு அதற்கு ஏற்றபடி அருள்கிறான் என்று கொள்ளக் கூடாது. முயற்சி எதுவும் இன்றிச் சும்மா இருந்தால் அவன் அருள் கிடைக்காது. நல்ல முயற்சி பண்ணத் தொடங் கினால் அவன் நம்மிடத்தில் பெருங்கருணை கொண்டு பெரிய பயனைத் தருவான்.

தாயின் கருணை

தாயினுடைய பெருமை அத்தகையது. குழந்தை ஏதேனும் ஒரு சிறிய முயற்சி செய்தால் அதனைப் பெரிதாகப் பாராட்டு கிறவள் அவள். அதுவும் செயல் செய்ய முயல்கிறதே என்பதனால் மிக்க மகிழ்ச்சி அடைகிறாள்.

சப்பாணியாக உட்கார்ந்து கொண்டிருக்கும் குழந்தை தளர் நடை பழகும்போது அதனுடைய தாய் அந்த நடையைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறாள். அதற்குக் காரணம் தளர்நடை அழகு என்பது அன்று. இனி நன்றாக நடக்கும் என்ற நம்பிக்கை அதனால் உண்டாகிறது. தளர் நடை நடக்கும் காலுக்குத் தண்டை அணிகிறாள்.

அவளுடைய வீட்டுக்கு ஒருவன் ஒரு மூட்டை அரிசி கொண்டு வருகிறான். அதை உள்ளே கொண்டுபோக வேண்டும்.

தாய் அதை எடுத்து உள்ளே போடுவதற்கு முயலும் போது சின்னஞ்சிறு குழந்தை, ''நானும் தூக்குகிறேன்'' என்று சேர்ந்து கொள்கிறது. குழந்தையினுடைய முயற்சியால் மூட்டை உள்ளே வந்துவிடவில்லை என்று தாய்க்குத் தெரியும். ஆனால், ''என் குழந்தை இந்த மூட்டையை உள்ளே போட்டது'' என்று சொல்லிக் கிளுகிளுப்பை அடைகிறாள். அந்த மூட்டையை அது தூக்கவில்லையானாலும் தூக்குவதற்கு முயன்றதே, அதைக் கண்டு அவளுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது.

அப்படியே இறைவனிடத்தில் நமக்கு அன்பு உதயமானால் போதும்; அதற்கு மகிழ்ந்து அவன் அருளை நமக்கு வழங்கத் தொடங்குகிறான். தன்னை நினைப்பதற்கு வேண்டிய கருவி களை எல்லாம் மக்களுக்குக் கொடுத்திருக்கிறான். தனு கரண புவன போகங்களைக் கொடுத்து, அவற்றைக் கருவியாக வைத்துக் கொண்டு தன் பேரருளைப் பெறுவதற்கு முயல்வார்கள் என்று அவன் எதிர்பார்க்கிறான். முயற்சி இல்லாமல் கொடுத் தால் கொடுக்கும் பொருளுக்கும் பயன் இராது; மதிப்பும் இராது. முயற்சி செய்வதனால் பெறுகின்ற பொருளுக்குப் பயன் உண்டு என்பதை அறிந்தே அவன் மக்களின் முயற்சியை எதிர்பார்க் கிறான். அந்த முயற்சியும் அவன் அருளுகிற பயனும் அளவி னால் ஒத்திருக்கும் என்று சொல்ல இயலாது. அவன் சிறு முயற்சிக்குப் பன்மடங்கு நன்மையை அருளுகிறான்.

இறைவன் பெருங்கருணை

'நாம் இறைவனைப் பூசை செய்கிறோம்; சகசிரநாம அருச்சனை செய்கிறோம். அதனால்தான் இத்தனை நன்மை கொடுத்திருக்கிறான்' என்று எண்ணுவது தவறு. ''ஒரு ரூபாய் கொடுத்தோம்; ஒரு வீசை மாவு தந்தார்'' என்று செட்டியாரைப் பற்றிச் சொல்வது போன்றது அது. நாம் செய்த காரியத்திற்கு ஏற்ற கூலிதான் கிடைக்கிறது என்றால், நாம் செய்யும் தப்பான காரியங்களுக்கும் உரிய கூலியை எதிர்பார்க்கவேண்டும். நாம் செய்த நன்மைகளைக் காட்டிலும் தீமைகளே அதிகம். நாம் எத்தனையோ பேரை உதைத்திருப்போம். எத்தனையோ அன்பர் களை வைதிருப்போம். எத்தனையோ பெரியவர்களுக்குத் தவறு

நினைத்திருப்போம். அப்படிச் செய்த தீங்குக்கு இறைவன் கூலி கொடுக்க வேண்டுமானால் உதைத்த கால் முடமாக வேண்டும். வைத வாய் ஊமையாக வேண்டும். பலவிதமாகப் பெரியவர் களை எண்ணிய மனம் பைத்தியமாகி இருக்க வேண்டும். ஆனால் இறைவன் அப்படிப் பண்ணவில்லை. அவனுக்கு நம்மிடத்தில் உள்ள பெருங்கருணை அத்தகையது.

அவனை நாம் சிறிதளவு நினைத்தால்போதும். நம்மை நினைத்தானே என்று மகிழ்ச்சி அடைவான். நாம் அவனுடைய அருளைப் பெறவேண்டுமென்று ஓர் அடி நடந்தால் அவன் பத்து அடி எதிர்கொண்டு அழைக்க வருகிறான். 'திருச்செந்தூரை நினைந்து வணங்கினால் புண்ணியம்; அந்தத் திசையில் திரும்பி னால் புண்ணியம்' என்று புராணங்கள் சொல்கின்றன. ஆண்ட வனுடைய பெருங்கருணையைப் புலப்படுத்துவதற்கு அப்படிச் சொல்வது ஒரு முறை. "என் பெயரைச் சொன்னால் போதும்; உடனே எல்லாம் செய்து கொடுப்பான்" என்று நாம் சொல் வதில்லையா?

நக்கீரர் சொல்வது

கருணை உள்ளவர்கள் முயற்சியின் தொடக்கத்திலேயே அதைப் பாராட்டுவார்கள். மிக்க முயற்சி செய்த பிறகு அவனுக்கு ஊக்கம் அளிக்கலாம் என்று காத்திருக்க மாட்டார்கள். திருமுரு காற்றுப்படையில் நக்கீரர் ஒரு புலவனுக்கு முருகனை அடைய வழி காட்டுவது போலப் பாடி இருக்கிறார். முருகன் எங்கே இருக்கிறான் என்று புலவன் கேட்ட கேள்விக்கு விடை சொல்லும் முறையில் பாட்டு அமைந்து இருக்கிறது. "நான் முருகனைப் பார்க்க வேண்டும்" என்று சொன்ன மாத்திரத்தில் வழிகாட்டும் புலவருக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. "அப்பா, நீ உடனே அவனைக் காண்பாய். ஊரை விட்டு, வீட்டை விட்டு அவனைக் காண வேண்டும் என்று நீ புறப்பட்டுவிட்டாயே. அதுவே பெரிய காரியம். எதை எதையோ ஆதாரமாகக் கருதி ஊன விளையாட்டை ஆடிக் கொண்டிருந்த நீ இறைவனைக் காணவேண்டுமென்று நேர் எதிர்த்திசையில் திரும்பினாயே; பெரிய காரியம். ஆண்டவன் திருவருள் உனக்குக் கிடைக்கும்.

இன்று கிடைக்கும் என்பது மாத்திரம் அல்ல; இப்பொழுதே கிடைக்கும்'' என்கிறார்.

''சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.''

''நீ தீட்சை பெறவில்லையே! மந்திர ஜபம் பண்ணவில்லையே! தலங்களைத் தரிசிக்கவில்லையே!'' என்று சொல்லிப் பயமுறுத்த வில்லை. இறைவனைக் காணவேண்டுமென்ற எண்ணத்தோடு முயற்சியைத் தொடங்கியதே பாராட்டுவதற்குரிய செயல் என்பது அவர் எண்ணம். இறைவனும் அன்பர்களிடத்தில் முயற்சியை எதிர்பார்க்கிறான்.

முயற்சி வேண்டும்

நல்ல முறையில் முயற்சி செய்ய ஆரம்பித்துவிட்டால் இறைவனுடைய திருவருள் நமக்குத் துணை நிற்கும். அவனுடைய அருளைப் பெறவேண்டுமென்று ஞான நாடகத்தைத் தொடங்கி விட்டால் அது நிறைவேறும் வரையில் நில்லாது. வேகமாக ஓடுகின்ற நதியில் ஒன்றைப் 'போட்டால் இடையில் சிறிது தடை இருந்தாலும் ஆற்றின் வேகத்தால் உந்தப் பட்டு எப்படியும் கடலில் போய்ச் சேர்ந்துவிடும். அப்படியே இறைவனுடைய திருவருளைப் பெறும் முயற்சியைப் பண்ணினால் என்றேனும் ஒருநாள் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேருவோம். எப்படியாவது முயற்சியைத் தொடங்கி விட வேண்டும். சிறிய முயற்சியானாலும் முயற்சி செய்கின்றதே என்ற எண்ணத்தால் குழந்தைகளைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகின்ற தாய்க்கு உள்ள அருட்பண்பு எம்பெருமானுக்கு இராதா?

விளையாட்டை மாற்றுதல்

நாம் இப்போது விளையாடிக் கொண்டிருக்கிறோம். இந்த விளையாட்டுக்குக் கருவியாக உடம்பும் உள்ளமும் உரையும் அமைந்திருக்கின்றன. இந்த விளையாட்டுக்கு இடமாக, விரிந்த

பிரபஞ்சம் இருக்கிறது. துணையாகப் பல மக்கள் இருக்கிறார்கள். நாம் புதிய இடம் தேடவேண்டாம். புதிய கருவிகளைத் தேட வேண்டாம். இந்த விளையாட்டை மாத்திரம் மாற்ற வேண்டும். இதுவரையிலும் ஆடிய மாயை விளையாட்டை மாற்றி, தீய விளையாட்டாகிய அஞ்ஞான விளையாட்டை மாற்றி, தூய விளையாட்டாகிய ஞான விளையாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படித் தொடங்கினால் மெல்ல மெல்ல முடிவான இன்பத்தை அடையலாம். அன்பு நெறியில் நடக்கத் தொடங்கி னால் அது முதலில் வழியாக இருந்து பின்பு அதுவே இன்பமய மாக முடியும்.

"அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்பது திருமூலர் வாக்கு. ஓர் ஏணி இருக்கிறது. அதையே மடித்துக் கட்டில் ஆக்கிவிடலாம் என்றால் அதைக் கொண்டு மாடியின் மீது ஏறலாம். ஏறி, அந்த ஏணியையே எடுத்துக் கட்டிலாகவும் மடித்துப் போட்டுக் கொண்டு படுக்கலாம். அத்தகையது அன்பு நெறி.

2

அருணகிரிநாதப் பெருமான் இந்த இரண்டு வகை விளை யாட்டையும் சொல்கிறார். ஒன்றை மாயை விளையாட்டு என்றும், மற்றொன்றை ஞானவிளையாட்டு என்றும் சொல்கிறார். விநோதம் என்ற சொல் விளையாட்டைக் குறிப்பது. ஞான விநோதம், மாயாவிநோதம் என்ற இரண்டையும் அவர் அலங்காரமாகப் பாட்டில் சொல்கிறார். நாம் இப்போது மாயா விநோதத்தில் ஈடுபட்டிருக்கிறோம்; ஞான விநோதத்தில் ஈடுபடவேண்டும்.

மாயா விநோதம்

மாயா விநோதத்திற்குக் காரணமாக இருப்பது மனம். அதனால் வருகின்ற விளைவு துக்கம். உலகத்தில் நமக்குத் துயரங் கள் பல காரணங்களால் வருகின்றன. அவற்றுள் தலைமையாய் உள்ளவை மூன்று என்று சொல்லலாம். நாம் நம்முடைய உறவினர் எவரையேனும் இழந்து விட்டால் துயர் அடைகிறோம். நமக்குரிய பொருளை இழந்துவிட்டால் துன்புறுகிறோம். நோய்

வந்தால் இன்னல் அடைகிறோம். உலக வாழ்க்கையில் இந்த மூன்று வகையாலும் துக்கம் உண்டாகிறது. ஆனால் இந்த மூன்றையும் போலவே வேறுவகையான மூன்றை நினைத்துப் பார்த்தால் அவை பற்றிய துக்கந்தான் பெரிதாக இருக்கவேண்டும். எல்லா உறவினர்களையும்விடப் பெரிய உறவினன் ஆகிய பரமேசுவரனை நாம் பிரிந்திருக்கிறோம்; அது எவ்வளவு பெரிய துயரத்தை உண்டாக்க வேண்டும்? நமக்கே உரிமையான முத்தி என்னும் செல்வம் நமக்குக் கிடைக்காமல் இருக்கிறது; அதனால் எத்தனை துக்கம் உண்டாக வேண்டும்? எல்லா நோய்களையும் விடக் கடுமையானது உடம்பு வரும் நோய் ஆகிய பிறவி. பல காலமாக அந்தப் பிணி நம்மைப் பற்றிக் கொண்டிருக்கிறது; அந்தப் பிணியை நினைந்து பார்த்தால் எல்லாவற்றையும்விடப் பெரிய துயரம் உண்டாகும். பிறவியாகிய பெரும் பிணியைப் பெற்றும் அதைப் பற்றி நாம் நினைப்பது இல்லை. இறைவன் ஆகிய பெரிய உறவைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இழந்து நின்றும் துன்புறுவது இல்லை. முத்திச் செல்வத்தைப் பெறாமல் உண்மையான வறுமையை அடைந்தும் நாம் புலம்புவது இல்லை.

இதற்குக் காரணம் நாம் மாயா விநோதத்தில் ஈடுபட்டிருப் பதுதான். 'நூறு ரூபாய் போய்விட்டதே!' என்று துக்கப்படத் தெரிகிறது. 'நமக்குரிய வீடு போய்விட்டதே!' என்று துன்புறத் தெரிகிறது. 'ஒருபூதரும் அறியாத் தனி வீட்டில் இருக்கவில்லையே!' என்று துன்புற வகை இல்லை. நம்மை வளர்த்து எடுத்துப் பாலூட்டிய தாய் மறைந்து போனால் புலம்புகிறோம்; வாடு கிறோம். ஆனால் இந்த உயிருக்குத் தாயாகிய ஆண்டவனைச் சிறிதேனும் நினைப்பது இல்லை; அவனைப் பிரிந்து வாழ் கிறோமே என்று வருத்தம் அடைவது இல்லை.

இப்படியெல்லாம் உண்மையான துக்கம் இல்லாமல் பொய் யான துக்கங்களை ஏறட்டுக் கொண்டு வாழ்வதற்குக் காரணம் இந்த மனமே; துக்கப்படுவதும் இதுதான். இந்த மனோ துக்கத் தில் நம் வாழ்நாளே கரைந்து போகிறது. இதுவே மாயா விநோதத்தின் பயன். மாயா விநோத மனோ துக்கத்தில் ஈடுபட்டு நம்முடைய வாழ்க்கை வீணாகிறது. மாயையோடு சேர்ந்த இருளில் உழல்கின்ற நமக்கு ஆண்டவன் அருள் கிட்டுவது இல்லை. இந்த

நிலை மாற வேண்டுமானால் இருள் இல்லாத மனத்தின் குறும்பு இல்லாத ஓர் இடத்தில் விளையாட வேண்டும். அது ஞான விளையாடல் புரியும் இடம். அந்த விளையாட்டை மனம் விளை யாடத் தொடங்கினால் இறைவனுடைய திருவருள் பெறும் நிலை வந்து விடும். அந்த நிலை இரண்டறக் கலக்கும் அத்துவித நிலை.

அருணகிரியார் வேண்டுகோள்

''முருகா, நான் ஞான விளையாட்டு விளையாட வேண்டுமே! மாயா விநோத மனோ துக்கத்தில் ஆழ்ந்திருக் கிறேனே! இந்த மாயை விளையாட்டிலே இருக்கும் எனக்கு ஞான விளை யாட்டை விளையாடும் நெறியை நீதான் காட்ட வேண்டும். ஏனென்றால் நீயே ஞான உருவம் ஆக இருக்கின்றவன்'' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார் அருணகிரிநாதர்.

நீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்?

''இப்போது ஞான விளையாட்டு என்னிடம் இல்லை. ஞானம் உன்னுடைய திருவருளால் வரவேண்டும். நீ அந்த ஞானத்தை ஊட்டினால் அன்றி என்பால் ஞான விளையாட்டு வராது. இப்போது அந்த விளையாட்டு இல்லை என்பது என்னுடைய அவல நிலையால் நன்கு தெரிகிறது. அந்த விளையாட்டு நிலை உன்னால்தான் வரவேண்டும். ஆகவே அதனை நீ அருள் புரிவாயாக'' என்று வேண்டுகிறார்.

இன்று நாம் இருக்கின்ற நிலை மாயா விநோத மனோ துக்க நிலை. இது மாய்ந்து போனால் நமக்கு இன்பம் உண்டாகும். இது மாய்வதற்கு ஞான விநோதமாகிய மருந்து வேண்டும்.

காமமும் துவட்சியும்

ஒருவனுக்கு நோய் வருகிறது. நோய் உடையவன் டாக்ட ரிடத்தில் போனால், அவர், ''என்ன செய்கிறது?'' என்று கேட்கிறார். அவனுக்கு எத்தனையோ நோய்கள் இருந்தாலும் எது மிகுதியாக இருக்கிறதோ அதைத்தான் சொல்வான். ஒருவனுக்கு வயிற்று வலி. அதோடு கண் எரிகிறது. கால் குடைச்சல்

ஏற்படுகிறது. இவ்வளவு இருந்தும் வயிற்றுவலிதான் பொறுக்க முடியாமல் மிகுதியாக இருக்கிறது. டாக்டர் என்ன பண்ணுகிறது என்று கேட்டவுடன், ''ஐயோ! வயிற்று வலி தாங்கமுடிய வில்லை'' என்று முதலில் சொல்வான். டாக்டர் விசாரித்தால் ஒவ்வொன்றாக மற்றச் சிறு வியாதிகளைச் சொல்வான். டாக்டர் கேளாமலேயே முதலில் அவன் சொல்வது வயிற்று வலியைத் தான். காரணம்: அவனிடத்தில் உள்ள நோய்களுக்குள் அதுதான் மிக்க துன்பத்தைத் தருவது.

''மாயா விநோத மனோ துக்கம் என்று சொல்கிறாயே! அந்த நோய் உனக்கு என்ன துன்பத்தைத் தருகிறது?'' என்று முருகன் கேட்கிறான். அருணகிரி நாதர் ஆகிய நோயாளி பல நோய்களை உடையரேனும் அவற்றுள் மிக்க துன்பத்தைத் தரும் ஒன்றை எடுத்துச் சொல்கிறார்.

சித்ர மாதர் அல்குல்
தோயா உருகிப் பருகிப் பெருகித் துவளும் இந்த
மாயா விநோத மனோதுக்கம்.

''மாதருடைய மயலில் நான் உருகுகிறேன். அந்த மயலைப் பருகுகிறேன். அது மேன்மேலும் பெருகுகிறது. அதனால் துவண்டு போகிறேன். ஏதேனும் நல்லது செய்யலாம் என்று நினைத்தால் எனக்கு உறுதி இருப்பது இல்லை. அந்த மயல் எனக்குத் துயரத்தைத் தந்து நேர்மையாக வாழவும், உறுதியோடு நிற்கவும் வலு இல்லா மல் செய்துவிடுகிறது; துவட்சியைத் தருகிறது. நான் என்ன செய்வேன்!'' என்று புலம்புகிறார்.

காமத்தால் பற்றப்பட்டவர்கள் துவண்டு வீழ்கிறார்கள். துவளுவது போல அறிவு மாறி வீழ்கிறார்கள். நல்லது செய்ய வேண்டுமென்ற நினைப்பு இருந்தாலும் அதனைச் செய்வதற்கு உடம்பு இடம் கொடுப்பது இல்லை. நல்லதைப் பேச முடிவது இல்லை.

காமத்தின் வலிமை

மனிதனுக்கு உண்டாகின்ற நோய்களுக்குள் மிகவும் கொடியது காம நோய். அதனை மாய்ப்பதற்கு மன வலிமை அதிகமாக

வேண்டும். காமம் என்ற சொல்லுக்கு ஆசை என்பதுதான் பொருள். மற்ற ஆசைகள் எல்லாவற்றையும்விட வலிதாகப் பெண் ஆசை இருப்பதனால் காமம் என்றவுடன் பெண் ஆசை என்ற நினைவே உண்டாகிறது. சில பொதுப் பெயர்கள் சிறப்பாக உள்ள பொருள் களைக் குறிப்பது உண்டு. ஈசுவரன் என்பது பொதுவான பேரானா லும் சிவ பெருமானைக் குறிக்க வழங்குகிறோம. பூ என்று தாமரைப் பூவைக் குறிப்பது உண்டு. இத்தகைய சொற்கள் பல பொருளுக்குப் பொதுவான பெயராக இருந்தாலும் அந்தப் பொருள் களுக்குள் சிறப்பானவற்றைக் குறிப்பிடுவது மரபு. அதுபோல் காமம் என்ற சொல் எல்லா ஆசைகளுக்கும் பொதுவான பெய ராக இருந்தாலும் அவைகளுக்குள் மிகவும் வலிய பெண்ணா சையைச் சிறப்பாகக் குறிக்கும். அப்படிக் குறிக்கும் வழக்கத்தினா லேயே காமத்தின் கடுமையும் வலிமையும் நன்கு விளங்கும்.

ஆகையால் அருணகிரியார் மாயா விநோத மனோ துக்கத்தின் விளைவாகப் பல இருந்தாலும் மங்கையர் ஆசையை எடுத்துச் சொன்னார். அப்படிச் சொன்னாலும் மற்ற ஆசைகளையும் நாம் கொள்ள வேண்டும். தலைமையாக உள்ள ஒன்றைச் சொல்லி அதனால் மற்றதைப் பெறுவதற்கு இலக்கணத்தில் ஒரு பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதை உபலட்சணம் என்று சொல்வார்கள். உபலட்சணத்தால், சித்ர மாதர் ஆசையைச் சொன்னாலும் மற்ற ஆசைகளையும் கொள்ள வேண்டும்.

சித்ர மாதர்

இங்கே அருணகிரியார் குறிக்கும் மாதர்கள் இல்லறத்திற்குத் துணையாக இருக்கும் தர்ம பத்தினிகள் அல்ல. சித்ரம்–அலங் காரம். பிறர் உள்ளத்தைக் கவர்வதற்கு விளம்பரம் செய்து கொள் வது போலத் தம்மை நாலுபேர் பார்க்கும்படியாக அலங்காரம் செய்து கொள்ளும் தீய மாதரைத்தான் சித்ர மாதர் என்று குறித் தார். அவர் காலத்தில் அத்தகையோர்கள் மிகுதியாக இருந்தார்கள் போலும்! அத்தகைய தீய மாதர்களுடைய வலையிலே பட்டு உருகிப் பெருகித் துவளும் மனோ துக்கத்தை அருணகிரியார் குறிக்கிறார்.

"எனக்கு என்று செயல் ஒன்றும் இல்லாமல் நான் துவண்டு போகிறேன். அதற்குக் காரணம் என் தலைக்கு ஏறிய பித்தம்.

அந்தப் பித்தம் மேன்மேலும் பெருகிக் கொண்டு வருகிறது. சித்திர மாதரால் வந்த பித்தம் அது. இப்படி எனக்குப் பித்தம் பிடிப் பதற்கு மூலகாரணமாக இருப்பது மனத்தினால் உண்டாகின்ற துக்கம். மனத்தின் போக்கில் சென்று மயலில் மூழ்கித் துவண்டு செயல் மறந்து இருப்பதற்கு அடிப்படையாக இருப்பது மாயா விளையாட்டு. இந்த மாயா விநோதத்தினால் வந்த துக்கம் மாய வேண்டும். மாயை விளையாட்டு மாய்வதற்கு ஞான விளையாட்டுத் தான் மருந்து. அதற்கு உன்னுடைய திருவருள் வேண்டும்'' என்பது அருணகிரியார் பிரார்த்தனை.

ஞானம்

நீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்?

'**நீ**யான ஞான விநோதம்' என்றார். முருகப் பெருமான் ஞானமே திருவுருவாக இருப்பவன். ''ப்ரக்ஞானம் ப்ரம்மம்'' என்பது மகாவாக்கியம். கடவுளை அறிவது என்றாலும் ஞானத்தை அறிவது என்றாலும் ஒன்றுதான்.

''அறிவை அறிவது பொருளென அருளிய பெருமானே''

என்று திருப்புகழில் அருணகிரியார் அருளியிருக்கிறார்.

''நீயே அந்த ஞான மயமாக இருக்கிறாய். நீ என் உள்ளத்தில் வந்துவிட்டால் என் மனம் ஞான வாசனை வீசும். அதிலிருந்து விளையும் விளையாட்டு ஞான விளையாட்டு ஆகிவிடும். அதனை நீ அருள் செய்யவேண்டும். நீ எப்போது அப்பா அருள்வதற்கு நினைத்திருக்கிறாய்?'' என்று அருணகிரியார் முருகப் பெரு மானைப் பார்த்துக் கேட்கிறார்.

ஞானக் குழந்தை

சேயான வேல் கந்தனே!

என்று முருகனை விளிக்கிறார். சேய் என்பதற்குச் சிவந்த நிறம் உடைய முருகன் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் இங்கே குழந்தை என்று பொருள் கொள்வது சிறப்பாகும். விளையாட்டைச் சொல்லும்போது குழந்தை என்று சொல்வதுதான் பொருத்தம்.

ஞான விளையாடல் செய்கின்ற எம்பெருமான் நம்மையும் அந்த விளையாட்டில் குழந்தையாகக் கூட்டிக் கொள்வான். ஆகவே சேயான என்பதற்குக் குழந்தைத் தெய்வமாக நிலவுகின்ற என்று பொருள் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

ஞான விளையாடலைச் செய்யும் அன்பர்களுக்கு எல்லாம் தலைவனாகிய ஞானக் குழந்தை தன்னுடைய கையிலேயே அந்த விளையாட்டுக்குரிய கருவியை வைத்திருக்கிறான். பொல்லாத குழந்தை கையில் கத்தியையும் கோலையும் வைத்திருக்கும். நல்ல குழந்தைகள் பந்தும் பொம்மையும் வைத்திருக்கும். கல்லையும் கத்தியையும் கொண்ட அந்தக் குழந்தை தீங்கு செய்யுமே என்று பெரியவர்கள் அஞ்சுவார்கள். பந்தையும், பொம்மையையும் உடைய குழந்தையைக் கண்டால் பிற குழந்தைகள் நாடி ஓடி விளையாட வருவார்கள். ஞான விநோதம் நடத்தும் பெருமானாகிய முருகன் தன்னுடைய அன்பர்களையும் ஞானத் திரு விளையாட்டில் பயிலும்படி அருள் பாலிப்பான். அவன் தன்னுடைய கையில் ஞானத்தையே வேலாக வைத்துக் கொண்டிருக்கிறான்.

ஆறுமுகமும் பன்னிரண்டு கரங்களும் உடைய இளங் குழந்தையாகப் பார்வதி தேவியால் ஒன்றுபட்டபோது அவனுக்குக் கந்தன் என்ற திருநாமம் வந்தது. ஆகவே கந்தன் என்ற பெயரும் அவனுடைய குழந்தைப் பிராயத்தை நினைப் பூட்டுகிறது. அவன் குழந்தை; ஞான விளையாட்டுக் குழந்தை; அதற்கு ஏற்ற ஞான வேலைத் திருக்கரத்தில் கொண்டிருக்கிறான்; சரவணப் பூம்பொய்கையில் விளையாடும் குழந்தை என்ற கருத்துக்கள் நினைவுக்கு வரும்படியாக,

சேயான வேல் கந்தனே!

என்ற பாடினார்.

அத்தகைய குழந்தை திருச்செந்தூரில் இருக்கிறானாம். உயிர்கள் விளையாடும் இடத்திற்கு வந்து விளையாடுகின்ற குழந்தை அவன். ஏதோ கந்த லோகத்திலும், சரவணப் பூம் பொய்கையிலும் மாத்திரம் விளையாடிக் கொண்டிருந்தால் நாம் அவனோடு சேர்ந்து விளையாட இயலாது. அவனோ மிகவும் கருணை

உடைய குழந்தையாதலின் நாம் மாயா விளையாட்டு விளையாடு கிற உலகத்திற்கே வந்து திருச்செந்தூரில் இருக்கிறான்.

சேயான வேல் கந்தனே! செந்திலாய்!

இந்தப் பாட்டில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, ''நீ எனக்கு இதனை அருள வேண்டும்'' என்று கேட்பது. இரண்டு, முருகப் பெருமானின் பெருமையைச் சொல்வது. மூன்று, ''நான் இந்த நிலையில் இருக்கிறேன்'' என்று சொல்வது. முதலில் எது வேண்டுமோ அதைச் சொன்னார். பசியினால் துடிக்கிறவன் சோறு சோறு என்று கத்துவான். தீப்பற்றினால் தண்ணீர் தண்ணீர் என்று கத்துவார்கள். அப்படி முதலில்,

நீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்!

என்று கதறுகிறார்.

பின்பு, ''நீ நல்ல மருத்துவன் ஆயிற்றே. உன்னால் என் னுடைய வியாதி தீருமே. நீ விளையாடல் புரியும் சின்னஞ்சிறு குழந்தை அல்லவா?'' என்று சொல்வது போல, **''சேயான வேல் கந்தனே!''** என்றார். அதன் பிறகு தமக்கு வந்த வியாதியைச் சொல்கிறார்.

டாக்டர் வேறு, மருந்து வேறு என்பது உலகியல் மருத்துவம். இங்கே மருந்தான ஞானமும், அதைத் தருபவனாகிய ஆண்ட வனும் ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம். ''நீயான ஞானம்'' என்று பேசுகின்றார். அதில் கலந்து கொண்ட ஆத்மாவும் ஒன்றாகி விடுகிறது. இதுதான் அத்துவித நிலை. அவனை அணுகி அணுகி அவனோடு ஒன்றுபடும் முடிவான இன்பத்தைத் தருகின்ற விளையாட்டு, ஞானவிளையாட்டு.

விளையாட்டின் இயல்பு

விளையாட்டு என்பதற்கும் வினை என்பதற்கும் வேறுபாடு உண்டு. வினையில் ஒரு கட்சி இன்னொரு கட்சிக்குப் பகையாக இருக்கும். விளையாட்டில் இரு வேறு கட்சி இருந்தாலும் விருப்பு வெறுப்பு இல்லாமல் பகை நட்பு இல்லாமல் விளை யாட்டு நடக்கும். விளையாட்டு முடிந்தவுடன் இரண்டு கட்சி களும் சேர்ந்து மகிழ்ச்சி அடையும்.

ஒரு கட்சி வெற்றி, மற்றொரு கட்சி தோல்வி என்பது விளையாடும்போது இருந்தாலும் இன்பம் அநுபவிக்கும் போது இல்லை. அதுதான் விளையாட்டின் பெருமை. விளையாட்டின் முடிவு இன்பந்தான். மாயா விளையாட்டைக் குழந்தை செய்வ தனால் விளையாட்டு என்று சொல்கிறோமே யொழிய அதன் பயன் வினையாக ஏற்படுகிறது. ஆகவே அதன் விளைவு துன்பந் தான். இன்பம் நல்குகின்ற விளையாட்டை நாம் விளையாடாமல் துன்பம் நல்குகின்ற மாயா விளையாட்டை, வினை விளை யாட்டை, மேற்கொண்டு வாழ்கிறோம். நாம் இதை நினைத்து வருந்துவதற்கு இந்தப் பாட்டினால் கற்பிக்கிறார் அருணகிரியார்.

மணிவாசகர் வாக்கு

மணிவாசகப் பெருமானும், ஞான நாடகம், ஊன நாடகம் என்ற இரண்டையும் சொல்கிறார்.

''வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறும்முன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொணாதநீ
என்னை இன்னிதா ஆண்டு கொண்டவா!
ஊனை நாடகம் ஆடு வித்தவா!
உருகி நான்உனைப் பருக வைத்தவா!
ஞான நாடகம் ஆடு வித்தவா!
நைய வையகத் துடைய இச்சையே.

அமரலோகத்தில் இருக்கும் தேவர்களும் இந்த உலகத்தில் அங்கங்கே இருக்கும் மக்களும் இன்னார் என்று தெரிவிக்க முடியாத பெரிய கடவுள் இறைவன்; வான நாடரும் அறியொணாத வன். அவனை வேதமே இன்னும் தெரிந்து உணரவில்லை. அத்தகைய பெருமான் மாணிக்கவாசகருக்கு ஓடி வந்து அருள் செய்தான். முதலில் தன்னுடைய திருவருளைப் பெறாமல் உலகத்தில் அலைய வைத்தவன் அவன்தான். உலக்கத்தில் அலைய வைத்தவன் அவன்தான். உலகத்தில் ஆசையைப் பெருக்கி ஊனைக் கொண்டு நாடகம் ஆடும்படி அவரைச் செய்தவன் அவனே. பின்பு அந்த ஆசை மாய, ஞான நாடகம் ஆடச் செய்தவனும் அவனே.

"ஊனை நாடகம் ஆடுவித்தவா!
உருகி நான்உனைப் பருகவைத்தவா!

"இதற்கு முன்னால் இந்த ஊனாகிய உடம்பை நீ விளையாடச் செய்தாய்; நாடகம் ஆடுவித்தாய். நான் அப்போது ஆடினேன். புண்ணிய பாவங்களைக் காரணமாக வைத்து அவற்றிற்குரிய பிறவியை எனக்குக் கொடுத்து இன்பதுன்பங்களை அடையும் படியாக நீ செய்தாய். அந்த ஆட்டத்திலேயே நான் பற்றுக் கொண்டிருந்தேன். இப்போது திருவருளால் அந்த நாடகத்தை மாற்றினாய். உன்னை நினைக்கச் செய்து உன்னையே நான் பருகும்படியாகத் திருவருள் பாலித்தாய். இது என்ன வியப்பு! நீ ஆனந்த மயமானவன். நான் உருகி அந்த ஆனந்தத்தைப் பருகு கிறேன். அதற்குக் காரணமாக ஞான நாடகத்தை ஆடும் படியாகச் செய்தாய். ஊன நாடகம் ஆடும்போது வளர்ந்து வந்த வைய ஆசை, ஞான நாடகம் ஆடும்போது நைந்து போயிற்று" என்கிறார்.

மாயாவிநோத மனோ துக்கத்தில் துன்புற்ற அருணகிரி நாதரும் சித்ர மாதரிடத்தில் ஆசை வளர்ந்து உருகினார். சிற்றின்பம் பருகினார். அந்த ஆசை பெருகியது. மணிவாசகர் சொல்லும் ஞான நாடகமாகிய இன்ப விளையாட்டிலும் உருக்கம் இருக்கிறது; பெருக்கம் இருக்கிறது. மணிவாசகர் சொல்கிற ஊன நாடகமே, மாயா விநோதமாகிய மாயை விளையாட்டு. அவர் சொல்கிற ஞான நாடகமே ஞான விநோதமாகிய ஞான விளையாட்டு.

"ஊன நாடகம் ஆடிக் கொண்டிருக்கும்போதே ஆண்டவனுடைய நினைப்பைப் பெற்று, அவனுடைய அருளைப் பெற வேண்டுமென்று உருகி, அந்த உருக்கத்தின் மிகுதியாலே அவனுடைய வடிவாகிய ஞானத்தோடு தொடர்பு பெற்று அதனையே பெருக்கி ஞான விளையாடல் புரியும் நிலை வந்தால், என்றும் மாறாத இன்ப வாழ்வைப் பெறலாம்" என்பதை மணிவாசகர் ஒருவகையில் சொன்னார்; அது எனக்குக் கிடைத்தது என்றார். அருணகிரியார் வேறு வகையில், அது கிடைக்க வேண்டும் என்று கேட்கிறார்.

★

நீயான ஞான விநோதந்
தனை என்று நீ அருள்வாய்,
சேயான வேல்கந்த னே!செந்தி
லாய்!சித்ர மாதர் அல்குல்
தோயா உருகிப் பருகிப்
பெருகித் துவளும்இந்த
மாயா விநோத மனோதுக்க
மானது மாய்வதற்கே?

(குழந்தைத் திருக்கோலங் கொண்டவனாகிய வேலாயுதத்தைப் பிடித்த கந்தவேளே! திருச்செந்தூரில் எழுந்தருளியிருப்பவனே! தம்மைப் பிறர் காணும் பொருட்டு அலங்காரம் பண்ணிக் கொள்ளும் ஒழுக்கம் கெட்ட மாதர்களுடைய உறுப்பில் தோய்ந்து உருகிச் சிற்றின்பத்தைப் பருகி அதனால் மயல் பெருகிச் செயலற்று வாட்டம் அடையும் இந்த மாயை விளையாட்டில் வரும் மனத்துயரம் மாயும்பொருட்டு, நீயன்றி வேறு அல்லாத ஞான விளையாட்டை எப்போது நீ அடியேனுக்கு அருள் செய்வாய்?

விநோதம் – விளையாட்டு. சேய் – குழந்தை. சித்ரம் – அலங்காரம்; வியப்பை ஊட்டும் என்றும் சொல்லலாம். அல்குல் – பெண் அடையாளம். துவளும் – வாடும்.)

ஆறுமுக அமுதம்

1

மாயா விளையாட்டாகிய நம்முடைய வாழ்க்கையில் மயல் அடைந்து உருகிப் பருகிப் பெருகும் நிலையைப் போன பாட்டிலே பார்த்தோம். மணிவாசகப் பெருமான் உருகிப் பெருகும் இன்ப நிலையைச் சொன்னதையும் பார்த்தோம். உருகிப் பருகிப் பெருகும் இந்த மாயாவிநோத மனோதுக்கம் மாய வேண்டுமென்று முருகனிடத்தில் விண்ணப்பம் செய்து கொண்ட அருணகிரிநாதர் அடுத்த பாட்டிலேயே தம்முடைய உண்மை நிலையை வெளிப்படுத்தி விடுகிறார். ''மாயா விநோத மனோ துக்கம் மாய்வதற்கு நின் அருளை எப்போதும் தருவாய்?'' என்று கேட்ட கையோடு இந்தப் பாட்டைப் பாடுகிறார். மாதர் மயலில் உருகிப் பருகித் துக்கம் பெருகியதே என்று அங்கே சொன்னார். இங்கே அவர் பெற்ற ஆனந்த நிலையைச் சொல்லும் போது உருகிப் பெருகும் மற்றொரு நிலையைச் சொல்கிறார். இதுதான் அவருக்குரிய இயல்பான நிலை. 'புத்திக் கமலத்து உருகிப் பெருகிப் புவனம் எற்றும் பரமானந்த சாகரத்'தைப் பற்றி இப்போது சொல்ல வருகிறார்.

இன்பமும் துன்பமும்

மனிதன் உலகத்தில் வாழும்போது இன்பத்தை வேண்டுகிறான்; துன்பத்தை வேண்டுவது இல்லை. ஆனால் எல்லோரும் இன்பம் அடைகிறார்களா என்று பார்த்தால் அதுதான் இல்லை. சின்னஞ்சிறு குழந்தை கண்ணுக்கு அழகாக இருக்கிறதென்று எண்ணிக் கண்ணாடியை எடுத்து விளையாடுகிறது. கையிலே கீறிக் கொண்டு ரத்தம் வந்து கத்துகிறது. அதனை முதலில் எடுக்கும்போது அதனால் துன்பம் உண்டாகுமென்று தெரிந்து கொள்வதில்லை. முன் அநுபவமும் அறிவும் இல்லாமையினால்

உடைந்த கண்ணாடியை எடுத்துக் கீறிக்கொண்டு துன்பம் அடைகிறது. துன்பம் அடையவேண்டும் என்பது அதன் நோக்கம் அன்று. துன்பம் அடையும் வகையில் அதன் அறியாமை அதனைச் செலுத்துகிறது. அதுபோலவே மனிதன் துன்பத்தை அடைய வேண்டுமென்று விரும்புவது இல்லை; அவன் எப்போதும் இன்பமே வேண்டுமென்று விரும்புகிறான். ஆனால் அது எங்கே கிடைக்குமென்று அறியாமையினால் துன்புறுகின்றான். இன்பம் கிடைக்குமென்று எதை எதையோ நினைந்து எண்ணி ஏமாந்து, தான் நினைத்தபடி முடியாமல் துன்பம் உண்டாவதைக் காண்கிறான். அவன் செய்கிற முயற்சிகள் எல்லாம் பெரும்பாலும் துன்பமாகவே முடிகின்றன.

உண்ணும்போது சில பண்டங்கள் இனிப்பாக இருக்கும். ஆனால் உடம்புக்கு ஆவதில்லை. நாக்குக்கு இன்பமாக இருந்தது உடம்புக்குக் கோளாறு தரும். ஐந்து இந்திரியங்களால் உண்டாகின்ற இன்பம் எல்லாம் அப்போதைக்கு இன்பம் என்று தோன்றினாலும் அவற்றால் விளைகின்ற துன்பம் மிகப் பெரிது. மனிதன் இந்திரியங்களால் உண்டாகின்ற இன்பத்தை உண்மை இன்பம் என்று கருதி ஏமாந்து போகிறான். அதனால் அந்த இந்திரியங்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்கே உலக வாழ்க்கை முழுவதையும் வீணடிக்கிறான். அது அப்போதைக்குப் போலி இன்பமாகத் தோன்றி, பின்பு அடுத்தடுத்து வருகின்ற பிறவிப் பெருந்துன்பத்தைக் கொடுக்கிறது.

சிற்றின்பமும் பேரின்பமும்

அப்போதைக்கு இன்பமாகத் தோன்றுவனவற்றைச் சிற்றின்பம் என்று சொல்வார்கள். ஐந்து பொறிகளின் வாயிலாகக் கிடைக்கின்ற எல்லா இன்பங்களுமே சிற்றின்பந்தான். சிற்றின்பம் என்ற பெயர் இருந்தாலும் அதனை இன்பம் என்று சொல்வதற்கு இல்லை. ஏதோ விவகாரத்திற்காகச் சிற்றின்பம் என்று சொல்கிறார்கள்.

சிற்றின்பம் என்ற பெயரே பேரின்பம் என்று மற்றொன்று இருப்பதை உணர்த்தும். ஒரு வீட்டில் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு பிள்ளை பள்ளிக்கூடம் போய் இருக்கிறான்; மற்றொருவன் விளையாடுகிறான். ''விளையாடிக் கொண்டிருக்கிற

பிள்ளை சிறிய பையன்'' என்றால் பெரிய பையன் ஒருவன் இருக்கிறான் என்று தெரிகிறது. அதுபோல, சிற்றின்பம் என்ற தொடர் பேரின்பம் என்ற ஒன்று இருக்கிறதை உணர்த்துகிறது. அறிவினாலும் ஆற்றலினாலும் சிறியவர்களாக இருக்கும் நாம் சிற்றின்பத்தை நாடிச் செல்கிறோம். பெரியவர்கள் பேரின்பத்தை நாடுகிறார்கள். நாம் செய்கிற முயற்சிகள் யாவுமே சிறிய முயற்சி களே. 'நெடுங்காலம் செலவிட்டும் பெரிய முயற்சிகளைச் செய்தும் இந்த இன்பத்தை அடைகிறோமே; இது எப்படிச் சிறிய இன்பம் ஆகும்?'' என்று தோன்றும். நெடு நாளைக்கு இந்த இன்பம் நில்லாமல் பின்னாலே துன்பம் தரும் வகையில் அமைந் திருப்பதனால் இது சிற்றின்பம் ஆகியது. இந்த இன்பம் பொய் யான இன்பம்; போலி இன்பம். மெய்யான இன்பம் என்பது மாறாமல், குறையாமல், நிறைவாக இருக்கிற பேரின்பமே. உண்மையில் அதுதான் இன்பம் என்று சொல்லவண்டும்.

நம்பிக்கை இல்லை

அத்தகைய இன்பத்தை அடைவது எப்படி என்பதுதான் மனிதனுடைய வாழ்க்கையில் பெரிய கேள்வி. பேரின்பம் என்ற ஒன்று இருக்கிறது என்று யாரேனும் சொன்னால் அதைக் காதாலே மாத்திரம் கேட்கிறோம். மனம் நம்புவது இல்லை. நமக்கு உறுதிப்பாடு இல்லாமல் ஐயம் பிறக்கிறது. ''இறைவன் இருக்கிறான். அவன் திருவருள் செய்வான். அந்தத் திருவருளால் பேரின்பம் பெறலாம்'' என்ற கருத்தை ஒருவர் அல்ல, இருவர் அல்ல, ஆயிரக்கணக்கான பேர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஒரு சமயம் அல்ல, இரண்டு சமயம் அல்ல. எல்லாச் சமயங்களும் அதை வற்புறுத்திக் கூறுகின்றன. ஏதோ ஒரு காலத்தில் சொன் னார்கள் என்பதும் இல்லை. பல காலமாக இந்தக் கருத்தைப் பெரியவர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இப்போது உள்ளவர்களும் சொல்வதை நாம் நேரில் கேட்கிறோம். முன்னாலே இருந்த பெரியவர்கள் தாம் இயற்றிய நூல்களில் சொல்லி இருக் கிறார்கள். உலகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் இறைவனுடைய திருவருளில் ஈடுபட்டு அதனால் கிடைத்த இன்பத்தை நுகர்ந்து, நீங்களும் இத்தகைய இன்பத்தைப் பெறலாம் என்று சொன்ன பெரியவர்கள் பலர். இன்ன சாதி, இன்ன சமயம், இன்ன மொழி,

இன்ன நாடு என்ற வரையறை இல்லாமல் எல்லா இடத்தும் அத்தகைய பெரியவர்கள் தோன்றியிருக்கிறார்கள்; இன்னும் தோன்றுவார்கள்.

இப்படிப் பலகாலமாகப் பல பெருமக்கள் பேரின்பத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தாலும் நமக்கு நம்பிக்கை உண்டாவது இல்லை. மதிப்பைக் கருதிப் பேச்சளவில் நாம் நம்புவதாகக் காட்டுகிறோம். ''அப்படி ஒன்று இருக்குமா? நமக்குக் கிடைக்குமா?'' என்று ஐயமே நம்முடைய உள்ளத்தில் அலை வீசுகிறது. இதற்கு முக்கியமான காரணம் என்ன? அதைத்தான் மாயை என்றும் திரோதம் என்றும் சொல்வார்கள்.

நாம் நுகர்கின்ற சிற்றின்பம் கை கண்டதாகத் தோற்றுகிறது. அந்த இன்பத்திற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும் போதே பல சமயங்களில் அது கைகூடுவது இல்லை. அதனால் ஏமாற்றம் அடைகிறோம். இந்த ஏமாற்றத்தால், 'பேரின்பம் என்ற ஒன்று நம் முயற்சினால் கிடைப்பது சந்தேகம்' என்ற நினைவு தோன்றி விடுகிறது. மிகவும் படித்தவர்கள்கூடப் பேரின்பம் என்பது வெறும் கற்பனை என்று தம்முடைய மனசில் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பேரின்பத்தைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் பிறருக்கு விரிவாக எடுத்து உரைக்கும் பலர் தம்முடைய சொந்த வாழ்க்கையில் அவற்றில் நம்பிக்கை வைத்திருப்பவர்களாகத் தோற்றுவது இல்லை. சொல்வது ஒன்று, அநுபவிப்பது ஒன்றாக அவர்களுடைய வாழ்க்கை நடை பெறுகிறது. ஏட்டுச்சுரைக்காய் போலப் பிறருக்கு உபதேசம் செய்யும் வகையில் அவர்கள் பெரியவர்கள் எழுதிய நூலை எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளத்தில் அவற்றில் சிறிதும் நம்பிக்கை இருப்பதில்லை. மெத்தப் படித்தவர்களே நம்பிக்கை கொள்ளாமல் இருப்பார்களானால், அவர்களை அப்படி ஆக்கும் மாயா சக்திக்கு எவ்வளவு ஆற்றல் இருக்க வேண்டுமென்பதை நினைந்து பாருங்கள். அவர்களுக்கு நம்பிக்கை வராததற்குக் காரணம் இறைவனுடைய திருவருள் கிடையாமையே.

'கண்டறியாதன கண்டேன்'

பல பல முயற்சி செய்து இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டுமென்று வருந்திய பலர் இந்த நாட்டில் இருந்

திருக்கிறார்கள். தம்முடைய முயற்சியினாலே பேரின்பத்தைப் பெற்றதாகச் சொல்லாமல், ''அவனுடைய திருவருளால் பெற்றேன்'' என்று சொன்ன பெருமக்களே பலர். நம்மைப் போல வாழும் காலத்தில் அவர்கள் கண்டு அறியாத தனி இன்பத்தை இறைவன் திருவருளைப் பெற்ற பிறகு அடைகிறார்கள். அப்போது அவர்களுக்கு உண்டாகும் வியப்பு அளவிட முடியாது.

''கண்டறியாதன கண்டேன்''

என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார்.

''தேடிக் கண்டுகொண்டேன்''

என்று பெருமகிழ்ச்சியோடு கூறுகிறார்.

காணுதலாவது அநுபவித்தல். கண் முதலிய ஐந்து புலன்களாலும் அநுபவிக்கின்ற அநுபவங்களைக் காணுதல் என்று சொல்வது வழக்கம். இந்திரியங்களின் நுகர்ச்சிக்கு உட்பட்ட அநுபவத்தைப் பிரத்தியட்சப் பிரமாணம் என்று சாஸ்திரம் கூறும். அதையே கண்கூடு என்று தமிழில் சொல்வார்கள். ''காற்றுக் குளிர்ச்சியாக இருப்பதைக் கண்டேன்'' என்று குளிர்ச்சியாக வீசும்போது நுகர்ந்த நுகர்ச்சியைச் சொல்வதுண்டு. அப்படி நாவுக்கரசர், ''கண்டு கொண்டேன்'' என்று வீறுடன் பேசுகின்றார். இறைவனை அவர் அநுபவித்தாராம். ''எப்படிக் கண்டார்?'' என்ற கேள்விகள் எழும். அந்தக் கேள்விக்கு அவர் விடை சொல்லவில்லை. ஆனால் பல இடங்களில் அவர் கூறியிருக்கும் அநுபவச் செய்திகளை எல்லாம் தொகுத்துப் பார்த்தால் இவை போன்ற பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும். நமக்குக் கேள்வி கேட்கத் தெரிகிறதே யொழிய அதற்கு விடை எங்கே இருக்கிறதென்று கண்டு பிடிக்கும் ஆர்வம் இல்லை. அந்த ஆர்வம் இருந்து, நாமும் இந்த இன்பத்தைப் பெற வேண்டுமென்ற பசியும் இருந்தால் நிச்சயமாக ஆண்டவன் அருள் பெற்ற பெரியவர்களுடைய திருவாக்கிலே நம்முடைய கேள்விக்கும் ஐயத்திற்கும் உரிய விடைகளைக் காணலாம்.

முறைகள் பல

இறைவனுடைய திருவருள் பெற்ற பெருமக்கள் பலரும் தாம் பெற்ற அநுபவத்தை விம்மிதத்தோடு பேசி இருக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சொல்லி இருக்கிறார்கள். இப்படி வெவ்வேறு வகையில் சொல்வதனால் அது உண்மையா என்ற ஐயம் நமக்கு உண்டாகி விடுகிறது. எல்லோரும் ஒன்றே சொன்னால் அது நிச்சயம் என்று தெளிந்து கொள்ளலாம். ஒருவன் ஒரு பொருளைத் திருடிக்கொண்டு ஓடுகிறான். அவனை ஆயிரம் பேர் பார்த்தார்கள். அவ்வளவு பேரும், ''இவன்தான் திருடினான்'' என்று ஒருவனைச் சுட்டிக் காட்டுவார்கள். அப்போது அவன் திருடியது உண்மை என்று தெரிந்து கொள்ளலாம். அப்படி இல்லாமல் பொய்ச் சாட்சி சொல்வதாக இருந்தால் ஆயிரம் பேரும் ஆயிரம் விதமாகச் சொல்வார்கள். இந்தச் சாட்சி மாறுபாட்டினால் அவர்கள் சொல்வன எல்லாம் பொய் என்று தெரிந்து கொள்ளலாம். அத்தனை பேரும் சொல்கிற சாட்சியில் எது உண்மை என்று தெரிந்து கொள்ள முடியாது. அப்படி, இறைவனுடைய திருவருளினால் நான் பெற்ற இன்பம் இத்தகை யது என்று ஒவ்வொருவரும் சொல்லும்போது இறைவனைப் பற்றி வெவ்வேறு வகையில் பேசுகிறார்கள்.

ஒருவர், ''நான் ஜடாதரனாகக் கண்டேன்; சந்திரசேகரனாகக் கண்டேன்'' என்று சொல்கிறார். மற்றொருவர், ''ஆறுமுக நாத னாகக் கண்டேன்'' என்று சொல்கிறார். வேறு ஒருவர், ''ஆனை முகம் கொண்டவனாக இறைவன் எனக்குக் காட்சி அளித்தான்'' என்றும், மற்றொருவர், ''கையில் கோதண்டத்தை ஏந்தியவனாக, சீதா லக்ஷ்மண பரத சத்துருக்னரோடு எழுந் தருளினான்'' என்றும் சொல்கிறார். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் தத்தமக்குத் தோற்றிய அநுபவங்களை, கண்ட காட்சிகளைச் சொல்லி இருக்கிறார்கள். ''இவ்வளவும் உண்மை ஆகுமா? உண்மை பலவகையாக இருக்க முடியுமா? எல்லாமே பொய்யா? அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றுதான் உண்மையா? இவ்வளவு பேர் சொல்கின்ற வகையில் நாம் எந்த முறையை பின்பற்று வது?'' – இத்தகைய சந்தேகங்கள் பல எழுவது இயல்பே.

அநுபவம் ஒன்றே

அவர்கள் வெவ்வேறு வகையில் இறைவனுடைய திருவருளைப் பெற்றாலும் அவர்கள் பெற்ற இன்ப உணர்ச்சி பொதுவானது; அது ஒன்றே. இதற்கு ஓர் உதாரணம் சொல்லிப் பார்க்கலாம்.

நம்முடைய வீட்டில் தித்திப்பான பண்டத்தைப் பலகாரத்திற் காகப் பண்ணியிருக்கிறார்கள். 'இன்றைக்கு முருகனுடைய விரதம்; சஷ்டி. எல்லோரும் பலகாரம் பண்ண வேண்டும்'' என்று சொல்லி ஏதோ இனிப்பான பண்டத்தைச் செய்திருக்கிறார் கள். முருகனுடைய அடியார்கள் வீட்டில் அன்று பலர் இனித்த பலகாரத்தைச் செய்கிறார்கள். நூறு வீட்டில் நூறு விதமாகச் செய்கிறார்கள். ஒரு வீட்டில் செய்த பலகாரம் மற்றொருவர் வீட்டில் இல்லை. ஒரு வீட்டில் ஜிலேபி; மற்றொருவர் வீட்டில் ஹல்வா; பின் ஒரு வீட்டில் லட்டு என்று பலவகையாகச் செய் தார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் ஒவ்வொரு வரும் வெவ்வேறு உருவத்தில் இனிப்புப் பண்டத்தை உண் டாலும் அவர்கள் அறிந்த சுவை இனிமை என்பதுதான். அது போல, இறைவனுடைய திருவருளைப் பெறும் வழி வெவ்வே றாக இருந்தாலும், இறைவனைச் சந்தித்த முறை வெவ்வேறாக இருந்தாலும், அவர்கள் திருவருளை உணர்ந்து பெற்ற இன்பம் ஒன்றுதான். அவரவர்களுடைய உபாசனை முறைக்கும், குருவின் உபதேச வகைக்கும், சாதனத்தின் தன்மைக்கும் ஏற்ப அவர் களுக்கு அநுபவம் வருகிறது; வழி அமைகிறது. வெவ்வேறு உருவங்களை வழிபட்டாலும் முடிந்த முடிவான அநுபவம் எல்லோருக்கும் ஒன்றுதான். எத்தகைய உணவை உண்டாலும் பசி தீருகிற அநுபவம் எப்படி ஒன்றோ, அதுபோலவே எந்த வகையில் உபாசனை செய்தாலும் தியானம் பண்ணினாலும் இறைவன் திருவருளால் பெறுகின்ற இன்பம் ஒன்றுதான்.

இத்தகைய இன்பத்தைத்தான் பேரின்பம் என்று பொதுவாக யாவரும் குறித்தார்கள். அந்தப் பேரின்பம் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் அதைப் பெற்றவர்கள் சொன்ன செய்திகளை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

உலகத்திலுள்ள ஆணும் பெண்ணும் பல உருவமாகப் பல வகை வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும், ஒவ்வொருவரும் ஒவ்வொருத்தியை மனைவியாகப் பெற்று வாழ்ந்தாலும், எல்லோ ரும் பெறுகின்ற சிற்றின்பம் பொதுவகையில் ஒன்றுதான். அவர் களுடைய மனைவிகள் வெவ்வேறு உருவமும் வெவ்வேறு எழிலும் உடையவர்கள். ஆனால் ஆண் பெண் உறவில் உண்டா கின்ற இன்பத்தில் வேறுபாடு இல்லை; ஒன்றே. வெவ்வேறு

உருவத்தில் கடவுளை வழிபட்டு, வெவ்வேறு மந்திரங்களை ஜபம்செய்து, வெவ்வேறு இடத்தில் உபாசனை செய்தவர்கள் வெவ்வேறு காலத்தில் இன்பத்தை அடைந்தாலும் எல்லா இன்ப மும் ஒன்றே. அந்த இன்பத்தைப் பிறர் பெறவேண்டுமானால், முன்னாலே பெற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்து கொண்டு அந்த வழியில் நடக்க வேண்டும்.

சம்பிரதாயம்

எந்த வழியானாலும் முன்னாலே ஒருவர் சென்று பயன் பெற்ற வழியாக இருக்க வேண்டும். இதைத்தான் சம்பிரதாயம் என்றும், பத்ததி என்றும், மரபு என்றும், சமயம் என்றும், மார்க்கம் என்றும் பெரியவர்கள் வெவ்வேறு பெயராலே சொல் கிறார்கள். எந்த வழியில் சென்றாலும் இறைவனுடைய திரு வருளைப் பெறலாம். முருகனை ஒருவன் கும்பிடுகிறான். கும் பிடுகிற முறையைப் பெரியவர்களிடத்தில் கற்றுக் கொள்கிறான். அவனுடைய திருவுருவத்தைக் கண்டு வழி படுகிறான். அவனுக்கு ஆண்டவன் உருவோடு தோன்றினால், மயில் வாகனப் பெரு மானாகத் தோன்றுவான். அவனிடத்தில் வேல் தோன்றும். கோழி தோன்றும். விநாயகரை உபாசனை பண்ணுகிறவர்களுக்கு ஆனை முகப் பெருமானாக ஆண்டவன் தோன்றுவான். அம்பிகையைப் பூஜை செய்பவனுக்குத் திரிபுரசுந்தரியாக எம்பெருமாட்டி தோன்றுவாள்.

நம்முடைய உள்ளத்தில் எந்த மூர்த்தியாகிய விதையைப் புதைக்கிறோமோ அதுவே பின்னால் விளைகிறது. வித்து என்பது மரம் தோன்றாத நிலையில் இருப்பது. விக்கிரகத்தை வைத்து உபாசனை பண்ணுவது வித்தைப் புதைக்கிற மாதிரி. ஆனால் வித்தைப் புதைத்தவன் சும்மா இருந்தால் அது விளையாது. அதற்கு நீர் விட்டு, உரமிட்டு, பல காலம் பாதுகாத்து வந்தால் அந்த வித்துப் பெரியதாக விளைந்து மரமாவதைக் காணலாம். அப்படியே கோயில்களில் உள்ள மூர்த்தியைப் பார்த்து, பார்த்த படியே நின்றுவிட்டால் ஒன்றும் பயன் இல்லை. அந்த மூர்த்தியை நம்முடைய உள்ளத்தில் புதைத்துத் தியானம் பண்ணி அன்புநீர் வார்த்து, வைராக்கியம் என்ற உரம் இட வேண்டும். அப்போது கோயிலில் கண்ட மூர்த்தி, இன்பம் மிக்க பெரிய உருவம் எடுத்துச் சோதி வடிவமாகத் தோன்றுவார்.

விதையும் விளைவும்

பெரியவர்கள் நமக்கு அளித்துள்ள உபதேச முறைப்படி நாம் வழிபடும்போது வழிகாட்டியாக விக்கிரகத்தை அல்லது படத்தை நாம் வைத்துக் கொண்டு உபாசனை செய்கிறோம். அவர்கள் சொல்லித் தந்த தோத்திரங்களைப் பாடுகிறோம். இவை யாவும் வித்துப் போன்றவை. அவர்களிடம் இருந்து நாம் பெற்றுக் கொண்டவுடனே பயன் உண்டாகுமென்று எதிர்பார்க்க முடியாது. வித்துக்கள் தாமே விளைவதில்லை. கடலை விதையை நமக்கு ஒருவர் கொடுத்தால் அதை நட்டுப் பயிர் செய்யவும் செய்யலாம்; மாவாக அரைத்துப் பலகாரமும் செய்யலாம்; சுண்டலாகவும் செய்து சாப்பிடலாம். அது போலவே கடவுளுடைய படங்களை அழகுக்காக மாட்டி வைக்கலாம். எத்தனையோ பேர் இப்போது நடராஜ விக்கிரகங்களைக் கொண்டு வந்து தம்முடைய அறையில் வைத்திருக்கிறார்கள்; நாய்ப்பொம்மை, புலியின் பொம்மை, மனிதன் பொம்மை முதலியவற்றைப் போலவே அதையும் வைத்திருக்கிறார்கள். கடலை விதையைச் சுண்டலாகச் சாப்பிடு வது போன்ற செயல் அது. அப்படி இல்லாமல் கடலையை நட்டு வளர்த்தால் ஒன்றுக்குப் பத்து மடங்கு விளையும். நெல்லில்கூடச் சாப்பாட்டு நெல் என்றும், விதை நெல் என்றும் வேறு பிரித்து வைக்கிறார்கள். விதை நெல் என்று சேமித்து வைத்திருந்தால் அதற்கு மதிப்பு அதிகம். குடியானவனுக்கு அந்த நெல்லினிடத் தில் அதிக அன்பு இருக்கும். பஞ்சம் வந்தாலும் விதை நெல்லைச் சமையல் செய்து சாப்பிடமாட்டான். விதையைச் சமையல் செய்ய முடியாது என்பது அல்ல; அதனால் விளைகின்ற பெரும் பயன் ஒன்று இருக்கவும், அதை விட்டு விட்டுச் சிறு பயனுக்காக அதனை உபயோகப்படுத்தக் கூடாது என்ற கருத்து வேளாள னுக்கு இருக்கிறது. விதையை நல்லபடி பயன்படுத்திக் கொள் ளாதவன் அறிவிலி.

இறைவனுடைய திருக்கோயிலுக்குச் சென்று நாம் காணு கின்ற திருவுருவம் கண்ணுக்கு அழகாக இருக்கிறதென்றும், அது போல நம் வீட்டில் ஒன்று வைத்துக் கொள்ளலாம் என்றும் நினைத்து அந்த அளவில் நிற்கிறவர்களைச் சிறந்த அறிவுடை யவர்கள் என்று சொல்ல முடியாது. அந்தத் திருவுருவத்தை வித்தாகக் கொண்டு அன்புநீர் பாய்ச்சிப் பல சாதனைகளால்

உரமிட்டு இறைவனுடைய திருவருட் கனி பழுக்கும்படி செய்வதுதான் நல்ல பயனைப் பெறும் வழி.

இவ்வாறு பெற்றவர்கள் பலர் நமக்குத் தாம் பெற்ற இன்பத்தைச் சொல்கிறார்கள். ''நான் கோயில் சென்று இறைவனைக் கண்டேன். திருச்செந்தூர் போய் முருகப் பெருமானை வழிபட்டேன். அவன் இத்தகைய இன்பம் தந்தான்'' என்று சொல்லிக் கொள்கிறார்கள். எந்த விதை யானாலும் மரம் முளைக்கும். எந்த மரம் ஆனாலும் நிழல் உண்டாகும். அந்த அந்த மரத்திற்கு ஏற்ற நிழலாக அமையும். ஆனால் எல்லாம் நிழல்கள். பெரியவர்களுடைய தொடர்பினால் நல்ல உபதேசம் பெற்று எந்த மூர்த்தியை உபாசனை பண்ணினாலும் அந்த உபாசனையின் பயன் நமக்கு நிழல் போன்ற அருளைக் கிடைக்கும்படி செய்யும்.

திருநாவுக்கரசர் அநுபவம்

திருநாவுக்கரசர் கண்ட இன்பமும், அருணகிரிநாதர் கண்ட இன்பமும், நம்மாழ்வார், இராமலிங்க சுவாமிகள் முதலியோர் கண்ட இன்பமும் இன்பந்தான். அப்பர் சுவாமிகள், ''தேடிக் கண்டு கொண்டேன்'' என்று சொல்லும்போது அவருடைய உள்ளத்தில் எதை நினைக்கிறார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் தாம் பெற்ற பேரின்பத்தை நினைத்துக் கொண்டுதான் அவர் அப்படிப் பேசி இருக்க வேண்டும். ''குற்றாலப் பெருமானைக் கண்டு ஆனந்தம் அடைந்தேன்'' என்று அவர் பாடுகிறார். அவனை என் உள்ளத்தில் கண்டுகொண்டேன்'' என்கிறார்.

''தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்''

என்பது அவர் பாட்டு. ''இது வரைக்கும் நான் இந்த அநுபவத்தைப் பெற்றது இல்லை. பெறவில்லையே என்று வேதனைப் பட்டுக் கிடந்தேன். நான் மாத்திரமா அப்படி இருந்தேன்? இந்த இன்பத்திற்கு உறைவிடமாகிய இறைவனை மிகப் பெரியவர்களாகிய திருமாலும், நான்முகனும் தேடிக் காணவில்லை. அவர்கள் காணவேண்டுமென்ற ஆசை உடையவர்களாக இருக்கிறார்கள்.

அதனால் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். அப்படித் தேடியும் தேடொணாத பெருமான் அவன். அவனை நானும் சில காலம் தேடினேன். கடைசியில் என்னுடைய உள்ளத்திற்குள் கண்டு கொண்டேன்'' என்கிறார்.

''மற்றவர்கள் எல்லாம் வெளியில் தேட நான் அப்படித் தேடும்போது அவனைக் காணவில்லை. பின்பு என்னுடைய நோக்கத்தை உள்முகமாக்கி என் உள்ளே தேடினேன். அவன் எனக்கு மிகவும் நெருக்கமாக என்னைக் காட்டிலும் எனக்கு இனியன் ஆக இருக்கிறான் என்று அப்போது கண்டேன்'' என்று நினைக்கும்படியாக அந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

2

தித்தித்திருக்கும் அமுது

அருணகிரிநாத சுவாமிகள் தாம் தேடிக் கண்டு கொண்டதை இந்தப் பாட்டில் சொல்கிறார். ''பேரின்பத்தைக் கண்டு கொண்டேன்; இதுவரைக்கும் நான் அநுபவித்து அறியாத பரமானந்த சாகரத்தைக் கண்டு கொண்டேன்'' என்று துள்ளிக் குதிக்கிறார். எதைக் கண்டுகொண்டார் என்பதை அடையாளம் காட்டிச் சொல்கிறார். ஆறுமுகம் படைத்த ஒரு பெரிய அமுதை, தித்தித்திருக்கும் அமுதைக் கண்டு இன்புற்றேன் என்று அவர் சொல்கிறார்.

பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித்திருக்கும் அமுது கண்டேன்.

அமுதம் எளிதில் விளைவது அன்று என்பது நமக்குத் தெரியும். முப்பத்து முக்கோடி தேவர்களும், பலகோடி அசுரர்களும் சேர்ந்து கடைந்தார்கள். திருமால் மிகவும் உதவி செய்தார். இவ்வளவு பெரிய முயற்சியின் பயனாகவே தேவாமுதம் கிடைத்தது. அது கிடைப்பதற்கு முன்னாலே எத்தனையோ தடைகள் உண்டாயின. பெரிய தடையாக ஆலகால விடம் தோன்றியது. அப்படிக் கடைந்த தேவாமுதமும் மிகச் சிறந்தது என்று சொல்வதற்கு இல்லை. அதனை உண்டவர்கள் நெடுங் காலம் வாழ்கிறார்களே அன்றிச் சிரஞ்சீவியாக இருக்கவில்லை. அது மாத்திரம் அன்று; தமக்கு அமுதம் கிடைத்துவிட்டது என்ற அகங்காரம் வேறு அவர்களுக்கு உண்டாகிவிட்டது.

அத்தகைய அமுதத்தையா அருணகிரிநாதர் கண்டார்? அவர் கண்டது பிறவியை மாய்க்கின்ற பேரமுதம். பேரின்பம், சிற்றின் பம் என்று வகைபிரித்துச் சொல்வதுபோலத் தேவா முதத்தைச் சிறிய அமுதம் என்றும், ஆண்டவன் அருளால் வருகின்ற இன்ப அமுதத்தைப் பெரிய அமுதம் என்றும் சொல்லலாம். சிறிய அமுதத்திற்கு அவர்கள் அத்தனை முயற்சி செய்தார்கள் என்றால் பெரிய அமுதத்திற்கு எவ்வளவு முயற்சி செய்ய வேண்டும்!

தாம் நுகர்ந்த அமுதம் ஒரு பெரிய கடலிலே உண்டாயிற்று என்று சொல்ல வருகிறார் அருணகிரியார். அந்தக் கடல் இன்ப மயமான கடல்; ஆனந்த சாகரம்; தனக்கு மிஞ்சி எதுவும் இல்லாத மிகச் சிறந்த பரமானந்தக் கடல் அது.

அப்பர் சுவாமிகள், "என் உள்ளே தேடிக் கண்டு கொண் டேன்" என்று சொன்னது போலவே இவரும் சொல்கிறார். இத்தகைய வாசகங்கள் இரண்டு பேரும் பெற்ற இன்பம் ஒன்றே என்பதைத் தெளியச் செய்யும் அடையாளங்கள். இனி அருணகிரி யார் சொல்வதைப் பார்க்கலாம்.

அந்தப் பரமானந்த சாகரம் எங்கே இருக்கிறது என்பதைச் சொல்கிறார்.

புத்திக் கமலம்

செயல் மாண்டு அடங்கப்
புத்திக் கமலத்து உருகிப் பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே.

அருணகிரியார் சொல்லும் பரமானந்தக் கடல் மிக்க வியப் பானது. அது ஊற்றாகத் தோன்றிக் கடலாக விரிந்ததாம். மலை யில் இருந்து உண்டாகும் ஊற்று வரவர ஆறாக மாறுவதைக் காண்கிறோம். ஆனால் கடலில் ஊற்று இருக்கிறதா என்பதை நாம் அறியமுடியாது. கடலிலே தண்ணீர் இருப்பதனால்தான் மற்ற இடங்களிலும் ஊற்றுப் புறப்படுகிறது என்று நிலநூல் வல்லார்கள் சொல்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருக்கிற கடலுக்கு ஊற்று இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. அருணகிரிநாதர் சொல்லுகிற பரமானந்தக் கடல் முதலில் ஒரு சிறிய ஊற்றாகப் புறப்பட்டது. மலையிலிருந்து ஓர்

ஊற்றுக் கிளம்பிப் பின்பு சற்றே பெரிதாகிக் கால்வாய் ஆகி, அது பின்பு ஆறு ஆகி அதுவே ஓர் இடத்தில் தங்கிப் பெரிய கடலாகிவிடுகிறதென்று வைத்துக் கொள்ளலாம்; அந்தக் கடலைப் போல அது இருக்கிறது.

ஊற்றும் கடலும்

பரமானந்தக் கடலின் மூல ஊற்று எங்கே புறப்பட்டது என்பதை அருணகிரிநாதர் சொல்கிறார்.

புத்திக் கமலத்து உருகிப் பெருகிப் புவனம் எற்றித்
தத்திக் கரை புரளும் பரமானந்த சாகரத்தே.

புத்தியாகிய தாமரையில் இருந்து உருகிப் பெருகி இந்தக் கடல் விரிந்து நிற்கிறதாம். உள்ளக் கமலத்தில் ஊற்று எடுக்கும் என்றால், நமக்கும் உள்ளக் கமலம் இல்லையா? நம்முடைய உள்ளத்தில் அந்த ஊற்றுப் புறப்படக்கூடாதா? உள்ளக் கமலத்தில் ஊற்றுப் புறப்படவேண்டுமானால் அதற்குமுன் ஒன்று நிகழ வேண்டும். நம்முடைய உள்ளக் கமலம் குவிந்திருக்கிறது. குவிந்த கமலத்தில் மணமும் இராது; தேனும் தோன்றாது.

தாமரை எப்போது குவிந்திருக்கும்? சூரியன் இல்லாத போது, இரவு நேரத்தில், இருட்டில் குவிந்திருக்கும். நாம் அஞ்ஞான அந்தகாரத்தில் வாழ்கிறோம். இந்த இருளில், நம்முடைய புத்தியாகிய கமலம் குவிந்திருக்கிறது. இது முதலில் திறக்க வேண்டும்; பின்பு உள்ளே இருந்து தேன் ஊற்றுக் கிளம்பும். கமலம் விரிய வேண்டுமானால் கதிரவன் வானத்தில் தோன்ற வேண்டும். கதிரவன் ஒளி பட்டாலன்றித் தாமரை மலராது. நம்முடைய உள்ளமாகிய கமலம், ஞான சூரியனாகிய முருகப் பெருமானுடைய அருள் பட்டால்தான் விரியும். பிரபஞ்சத்தின் நிழல் பட்டுப் பட்டுக் குவிந்திருக்கின்ற கமலம் ஆண்டவன் அருள் பட்டுப் பட்டு விரியும்.

அக இருள்

நாம் இருட்டில் விவகாரம் நடத்துகிறோம். கண்ணுக்குத் தோன்றுகின்ற இருட்டுத்தான் இருட்டு என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அகக்கண் தெரியாமல் செய்கிற அஞ்ஞானத்தைப்

போன்ற பேரிருள் வேறு இல்லை. நாமும் ஒரு வகையில் குருடர்களே. உலகம் முழுவதும் இருள் நிரம்பி இருக்கிறது. அதனால் ''மா இருள் ஞாலம்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். நாம் வாழ்கிற வாழ்க்கை இருட்டு வாழ்க்கை. இருட்டுக் காரியம் திருட்டுக் காரியம். நாம் செய்கின்ற காரியம் அத்தனையும் திருட்டுக் காரியங்களே. இறைவனுடைய திருவருளாகிய செல்வத்தைப் பெறுவதற்குரிய முயற்சிகள் நேர்மையான காரியங்கள். அப்படி அல்லாதன யாவும் அஞ்ஞான இருளில் செய்கிற திருட்டுக் காரியங்களே.

கமலம் விரிதல்

இருட்டிலும் ஒளி இருக்குமானால் பல காரியங்களைச் செய்யலாம். ஆனால் தாமரை மலராது. இரவு நேரத்தில் மின்சார விளக்குப் போட்டுக் கொண்டு வேலை செய்கிறோம். நிலா, அக்கினி முதலியவை வந்து ஒளி வீசினாலும் தாமரை மலராது. அதுபோலவே சூரியன் முதலிய பெரிய ஒளிகள் ஒளியை வீசினாலும் நமக்கு, அக இருட்டுப் போகாது. அந்த இருட்டைப் போக்குவதற்கு ஞான பானுவாகிய முருகப் பெருமானுடைய திருவருட் கதிர் வீச வேண்டும்.

இறைவன் திருவருள் ஒளியிலே அடியார்களின் உள்ளக் கமலங்கள் மலரும்; உள்ளத்தில் இருக்கிற கட்டுப் போய்விடும்.

இப்போது சில சமயங்களில் நமக்கு இறைவனுடைய நினைவு மின்னல்போல வருகிறது. அவன் திருவருளைச் சில சமயம் நினைக்கிறோம். மின்னல் கீற்றைச் சூரியஒளி ஆக்கிக் கொள்ள முடியுமா? சில சமயம் எம்பெருமானை நினைந்து ஒரு துளி கண்ணீர் விடுகிறோம். கொஞ்சம் மனத்தில் அமைதி பெறுகிறோம். இந்த அமைதிதான் அருணகிரியார் சொல்கிற இன்பம் என்று நினைத்து ஏமாந்து போகக் கூடாது.

இறைவனுடைய திருவருள் ஒளி உள்ளக் கமலத்தில் பட வேண்டுமானால் நாம் அந்தப் பெருமானை நினைத்து நம்முடைய செயல் ஒன்றும் இல்லை என்று இருக்க வேண்டும். 'நான், எனது' எனற் கட்டை விட்டுவிட்டு, 'நான் செய்கிறேன்' என்று நினைப்பதை விட்டுவிட்டால் இறைவனுடைய அருள் ஒளி பாயும். செயல்மாண்டு அடங்கத் தொடங்கினால் உள்ளக் கமலம் மலர்ந்து அதிலிருந்து இன்ப ஊற்றுப் புறப்படும்.

சுகத்துக்குக் காரணம்

செயல் இல்லாமல் இருப்பது சுகத்தைத் தரும். நன்றாகத் தூங்குபவர்கள், ''நான் சுகமாகத் தூங்கினேன்'' என்று சொல்வார்கள். கையும் காலும் அசையாமல் தூங்கினாலும் தூக்கத்தில் சொப்பனம் கண்டால் அது நல்ல தூக்கம் ஆகாது. தூக்கத்தில் பிதற்றுபவர்கள் இருக்கிறார்கள். சிலர் சொற்பொழிவு கூடச் செய்வார்கள். தூக்கத்தில் எழுந்து நடமாடுகிற வியாதி ஒன்று உண்டு. அதை 'ஸோம்னாம்பாலிஸம்' (Somnombolism) என்று சொல்வார்கள். கையும் காலும் அசையாமல் படுத்துக் கொண்டுவிட்டால், ''செயல் அடங்கிப்படுத்திருக்கிறான்'' என்று சொல்வதற்கு இல்லை. மனம் வேலை செய்யாமல் அடங்கி நின்றால் அப்போது ஒரு வகையான சுகம் உண்டாகிறது. நாம் தூக்கத்தில் செயல் இழந்திருக்கும்போது இந்த இன்பம் உண்டாகிறது என்பதைப் பிரத்தியட்சத்தில் பார்க்கிறோம். அதுபோலவே உண்மையாக எல்லாச் செயல்களும் அடங்கி மனம் அலையாமல் இருந்தால் அவனுக்கு இன்பம் தோன்றுகிறது.

நாம் இப்போது இருக்கிற விழிப்பு நிலைக்குச் சாக்கிரா வஸ்தை என்று பெயர். படுத்துக் கொண்டு தூங்கும் போது கனவு காண்கிறோம். இது சொப்பனாவஸ்தை. கனவு காணாமல் இருக்கும் நிலை சுழுத்தி அவஸ்தை. அந்தச் சுழுத்திதான் இன்பத்தைத் தருவது. கையையும் காலையும் அசைத்து வெளியில் நடமாடு வதைவிடப் படுத்துக் கொண்டிருப்பது கொஞ்சம் சுகத்தைத் தரும். படுத்துக் கொண்டிருப்பதிலும் கொஞ்சம் கண்ணை மூடிக் கொண்டு தூங்கினால் அப்போது உண்டாகும் சுகம் அதிகம். அதிலும் கனவு இல்லாமல் தூங்கினால் அந்தச் சுகம் மிகவும் அதிகம்.

இளைப்பாறுதல் என்று சொல்வதற்கே செயல் இல்லாமல் இருத்தல் என்று பொருள். தினந்தோறும் காரியாலயம் சென்று உத்தியோகம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தச் செயல்தான் நமக்கு ஊதியம் தருகிறது. ஆனால் சாயங்காலம் எப்போது வரு கிறதென்று எதிர்பார்க்கிறோம். அந்தச் செயலை விட்டுவிட்டு ஓய்வு பெறவேண்டுமென்பது நம்முடைய ஆசை. மற்றவர்களை விடத் தொழிலாளர்கள்தாம் எப்போது வீட்டுக்குப் போவோம்

என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் காரியாலயம் விடுகிற நேரத்தையே தொழிலாளி எதிர் பார்க்கிறான். நாமும் எதிர்பார்க்கிறோம். ஒரு வாரத்தில் ஞாயிற்றுக் கிழமை எப்போது வருகிறதென்று பார்க்கிறோம். இவ்வாறு எதிர்பார்ப்பதற்குக் காரணம் அந்த வேளைகளிலும், அந்த நாட்களிலும் சும்மா இருக்கலாம் என்பது தான். தினந் தோறும் செய்கின்ற காரியத்தை விட்டுவிட்டு ஓய்வாக இருப்பதை நாம் சும்மா இருப்பது என்று சொல்கிறோம். ஒரு நாளைக்குச் சும்மா இருக்க நமக்கு இரவு கிடைத்திருக்கிறது. ஒரு வாரத்திற்குச் சும்மா இருக்க ஞாயிற்றுக்கிழமை வருகிறது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு வருஷத்தின் முடிவில் கோடை விடுமுறை கிடைக்கிறது. இடையிலும் சில விடுமுறைகள் உண்டு. அப்பொழுதெல்லாம் வழக்கமாகச் செய்கிற வேலைகளை விட்டுவிட்டுச் சும்மா இருக்கிறார்கள். அப்படி இருப்பதால் ஏதோ சுகம் இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

மனிதனுக்கு இரவில் தூக்கத்தைக் கொடுத்திருப்பது உடம்பின் அலுப்பைப் போக்கிக் கொள்வதற்காக. மனம்கூட அப்போது தூங்குகிறது. எதை எதையோ நினைந்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பவனும், யார் யாரிடமோ பகை உணர்ச்சி கொண்டவனும் தூங்கும்போது அந்த நிலை மாறி ஓய்வு எடுத்துக் கொள்கிறான். அமைதியையும் இன்பத்தையும் அவன் அப்போது அநுபவிக்கிறான். உடம்பு மாத்திரம் கட்டை மாதிரி இருந்தால் போதாது. மனம் தூங்கவேண்டும். அதுதான் செயல் அற்ற நிலை என்பது.

யாருக்கு மனத்தில் கவலை இல்லையோ, யார் நல்ல முறையில் உள்ளவர்களோ அவர்கள் உடம்பும் தூங்கும்; உள்ளமும் தூங்கும். குழந்தை நன்றாகத் தூங்குகிறது. அதனுடைய உள்ளத்தில் மாசு இல்லை. மற்ற எல்லோரையும்விடக் குழந்தைக்கு அதிக நேரம் தூக்கம் கிடைக்கிறது. அப்படித் தூங்குவதற்கு உரிமையும் ஆற்றலும் அதற்கு உண்டு. தூங்கி எழுந்தவுடன் அது மிக்க மலர்ச்சியோடு இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சம் இருந்த தொல்லை எல்லாம் நீங்கி ஓய்வு பெற்றுத் தூங்கும்போது அது வளர்கிறது. அதனால்தான் தமிழில் தூங்குதல் என்ற பொருளில் வளருதல் என்ற சொல் வழங்குகிறது.

நாமும் குழந்தைபோல இருந்தால் தூக்கத்தை நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்போதுகூட முதல் நாள் உழைத்துவிட்டு இரவு தூங்கினோமானால் மறுநாள் எழும்போது சுறுசுறுப்பாய் இருக்கிறது. முதல் நாள் நினைத்த நினைப்புகளை மாற்றிக் கொண்டு, கவலைப்படாமல் தூங்கிவிட்டால், மறுநாள் ஒரு பங்குக்கு இரு பங்கு வேலை செய்ய முடிகிறது. இப்படிச் சாதாரண வாழ்க்கையில் இருக்கிறவன் ஒழுங்காக வேலை செய்து ஓய்வு எடுத்துக் கொண்டு சும்மா இருந்தாலும் தூங்கினாலும் அதற்குப் பிறகு நல்ல சுறுசுறுப்பும் இன்பமும் உண்டாகின்றன என்பதைப் பார்க்கிறோம். உண்மையாகவே, எல்லாச் செயலும் ஒழிந்து, நினைவு ஒழிந்திருந்தால் அப்போது எத்தனை சுகம் உண்டாகும்! அப்படி இருக்கின்ற நிலைதான் மிகச் சிறந்த நிலை. சுத்தாவஸ்தையில் அதைச் சுஷுப்தி என்று சொல்வார்கள். அத்தகைய இன்பத்தை அடைந்தவர்கள் விழித்திருந்தாலும் அவர்கள் தூங்குபவர்கள் போன்றவர்கள். அவர்கள் மனம் வேலை செய்யாமல் இருக்கும்.

குருடர்கள்

விழித்துக் கொண்டே தூங்குகிறவர்களைச் சகஜ நிலை உடையவர்கள் என்று சொல்வார்கள். அது ஒருவகைச் சமாதி; சகஜ சமாதி என்று பெயர். அத்தகையவர்களை,

"விழித்த கண்குரு டாத்திரி வீரர்"

என்று திருவிளையாடல் புராணம் சொல்கிறது. கண்ணை விழித்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் குருடர்களாக இருக்கிறார்களாம். நாம் கண்ணை விழித்துக் கொண்டு பார்க்கிற பொருளை அவர்களும் பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் காணுகின்ற காட்சி வேறு; நாம் காணுகின்ற காட்சி வேறு. நமக்கு அவர்கள் குருடர்கள்; நாம் காணுகின்ற பொருள்களின் இயல்பை அவர்கள், நாம் காண்பது போலக் கண்டுகொள்வது இல்லை. அவர்களுக்கு நாம் குருடர்கள். நாம் இருட்டில் உலவுகிறோம். அவர்கள் ஒளியில் உலவுகிறார்கள். தமக்கு என்று செயல் இல்லாமல் இருக்கின்ற அவர்களைச் செயல் மாண்ட பெரியவர்கள் என்று சொல்வார்கள். கர்த்திருத்துவம், போக்திருத்துவமாகிய செய்யும் தன்மை, நுகரும் தன்மை என்னும் இரண்டும் அவர்களுக்கு இல்லை.

துன்பம் இல்லாப் பயணம்

அவர்கள் செய்கிற வினை ஒன்றும் இல்லை. அதனால் புதிதாக வருகின்ற புண்ணிய பாவங்களும் இல்லை. இறைவனுடைய திருவருளாகிய வண்டியில் ஏறிக்கொண்டு அவர்கள் பிரயாணம் செய்கிறார்கள். வண்டியில் ஒருவன் போகிறான். காலால் நடக்கிறவனும் பிரயாணம் செய்கிறான். இரண்டு பேரும் குறிப்பிட்ட ஒரே ஊருக்குப் போகிறார்கள். ஆனால் நடந்தவனுக்குப் பயணத்தினால் உண்டான அலுப்பு இருக்கும். வண்டியிலே உட்கார்ந்தவனுக்கு அந்தத் துன்பம் இல்லை. அவன் எத்தனை தூரத்தைக் கடந்து சென்றாலும் தன்னுடைய செயலால் கடக்கவில்லை. ஆகவே அவனுக்குப் பயணத்தினால் உண்டாகிற துன்பம் இராது.

இறைவனுடைய திருவருளை ஆதாரமாகக் கொண்டு தம்முடைய செயலை இழந்தவர்கள் தோற்றத்தில் பல காரியங்களைச் செய்கிறவர்களைப் போல இருந்தாலும் அவர்கள் செய்யாதவர்களே. அவர்கள் அடைவது இன்பந்தான். கட்டை வண்டியிலும் குதிரை வண்டியிலும் செல்கிறவர்கள், நடந்து செல்கிறவர்களைப் போல நெடுந்தூரம் சென்றாலும் துன்பம் இராது. ரெயிலில் போகிறவர்களிலும் மூன்றாம் வகுப்பில் போகிறவர்கள் தூங்குவது இல்லை. ஒருகால் தூங்க முயன்றாலும் நன்றாகத் தூங்க முடியாது. முதல் வகுப்பில் போனவர்களோ ஏறினவுடன் படுத்துக் கொள்கிறார்கள். இறங்குகிற இடம் வந்தால் விழித்துக் கொள்கிறார்கள். தம்முடைய வீட்டிலே மெத்தையில் படுத்துத் தூங்குவதுபோல அவர்கள் வண்டியிலும் தூங்குகிறார்கள். அப்படியே இந்த உலகப் பிரயாணத்தில் எம்பெருமானுடைய திருவருளில் ஈடுபட்டுப் பசு கரணங்கள் எல்லாம் மாறிப் பதி கரணங்களாகப் பெற்றவர்கள் ஜீவ யாத்திரையில் மற்றவர்களைப் போலவே தோற்றினாலும் அவர்கள் மோட்ச வீட்டில் இருந்து இன்பத்தைப் பெறுபவர்களாகவே நிற்கிறார்கள். ஆனால் அதற்கும் இதற்கும் ஒரே ஒரு வேறுபாடு. இங்கே சரீரம் இருக்கிறது. அங்கே சரீரம் இல்லை. அதனால் இந்த நிலைக்கு ஜீவன் முத்தி நிலை என்று பெயர் தந்திருக்கிறார்கள்.

ஜீவன் முத்தன் பரமானந்தக் கடலிலே துளையம் ஆடுவான். அவனுக்கு அப்போது செயல் என்பது ஒன்றும் இல்லை;

செயல்கள் குறைந்து கொண்டு வரவர உள்ளக் கமலம் விரிந்து வரும். இறைவனுடைய திருவருள் இன்பம் மெல்ல மெல்லத் தலைப்படும்; புத்திக் கமலத்தில் உருக்கம் உண்டாகி ஆனந்த ஊற்று எழும் என்று அருணகிரி நாதர் சொல்கிறார்.

அறிவும் அருளும்

பொதுவாக மனம் என்பது அந்தக்கரணம் என்ற பெயரால் குறிக்கப்படும். அந்தக்கரணம் நான்கு பகுதியாக அமைந்தது. முன்பும் இது பற்றிச் சொல்லியிருக்கிறேன். மனம், சித்தம், அகங் காரம், புத்தி என்பனவே அவை. ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றி ஆசைப்படுவது மனம். எப்போதும் நம்முடைய உணர்வோடு இருப்பது அகங்காரம். ஒன்றைக் கடைப்பிடித்துத் திண்ணமாக இருப்பது சித்தம். இது இத்தகையது என்று வேறு பிரித்துப் பார்ப்பது புத்தி. மனம் நல்லதாக இருந்தால் சித்தப் பகுதி வன்மை பெறும். அதைத்தான் "Will Power" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். நல்லது இன்னது என்று புத்தியினால் தெரிந்து கொண்டு அதனிடத்தில் நிலைத்து நிற்கச் சித்தம் உதவும்.

அறிவு விகாசம் அடைவதைப் புத்திக் கமலம் விரிவதாகச் சொல்லலாம். அறியாமை என்றும் இருள் போனால் அறிவு மலரும்; அறிவு மலர்ந்தால் ஆனந்த ஊற்று அங்கிருந்து எழும்.

இங்கே அறிவு என்று சொல்வது, வெறும் பொருளை உணர் கிற அறிவு அன்று. ஞானம் என்ற பெயரால் நம்முடைய பெரி யோர்கள் குறிப்பிட்டது இறைவனுடைய திருவருள் இன்ப அநுபவத்தைப் பெறுவதற்குக் காரணமான ஞானத்தையே. அந்த ஞானத்தோடு அருள் கலந்து வரும். அந்த ஞானத்தோடு பக்தியும் கலந்திருக்கும். இறைவனுடைய திருவருள் நினைவின்றி வருகிற அறிவு பயன் இல்லாத அறிவு; மணம் இல்லாத மலர்; ஈரம் இல்லாத வறண்ட பொருள்.

மனம் விரிந்தால் உள்ளத்தில் இருக்கிற பொருள் வெளிப் படுகிறது. புத்திக் கமலம் விரியும்போது அங்கே எம்பெருமான் இருப்பது புலனாகிறது. புத்தியாகிய கமலத்தில் தேன் உருகிப் பெருகவேண்டும். அந்த உருக்கத்திற்கு மூலமானது அன்பு. இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டுமென்று ஆசைப்

பட்டு, எம்பெருமானிடத்தில் இடையீடில்லாத அன்பு வைத்து, அந்த அன்பின் பயனாக அவனுடைய அருள் ஒளி கிடைக்கு மானால், அப்போது உள்ளக் கமலம் விரிகிறது; விரியும்போது அவன் தன்னுடைய காட்சியைக் காட்டுகிறான். அப்போது மெல்ல மெல்ல நம்முடைய செயல் மாண்டு வருகிறது. அதற்குப் பயனாக இன்ப ஊற்று மெல்ல மெல்லப் பெருகுகிறது.

ஊற்றும் மறைதல்

இன்பம் ஊற்றாக எழுந்தது. எப்போதும் ஊற்றாக ஓடிக் கொண்டிருக்கவில்லை. அது பெரிய கடல் ஆயிற்றாம். சிறிய விதை ஒன்றை நடுகிறோம். அந்த விதை இரண்டு இலை விடுகிறது. அதோடு நிற்பது இல்லை. அது மரமாகிறது. அது இலை விடும் போது தன்னை மாய்த்துக் கொள்கிறது. வித்து மாய்ந்து மரம் ஆகிறது. ஒரு தேங்காய் நடுகிறோம். நட்ட பிறகு நாம் தேங்காயை எடுக்கலாம். ஆனால் நட்ட தேங்காயை எடுக்க இயலாது. ஒரு தேங்காய் நட்டால் ஆயிரம் தேங்காய் வரும்; நட்ட தேங்காய் வராது. அது தன்னை மாய்த்துக் கொண்டு பல தேங்காயைத் தருகிறது. அப்படியே இங்கே புத்திக் கமலம் விரிகிறது. அதிலிருந்து ஊற்று ஊறுகிறது. புறப்பட்டு வெள்ள மாகப் பெருகுகிறது. நான்கு புறமும் பெருகிக் கரை காணாமல் நிற்கிறது. வெள்ளம் பெருகப் பெருக அது செல்லும் இடங்களில் உள்ள பொருள்கள் மறையத் தொடங்குகின்றன. புறப்பட்ட இடமே மறைந்து போகிறது. புறப்பட்ட ஊற்றுக் கண்ணை மறைத்து, கரைகளை எல்லாம் மறைத்து, கரைகளுக்கு அப்பா லுள்ள மேடுகளை மறைத்து, மேடுபள்ளம் என்ற வேறுபாடு தெரியாமல் செய்து எங்கும் ஒரே வெள்ள மயமாக நிற்கிறது. வெறும் ஊற்றாக இருக்கும்போது ஊற்றுக் கண் தெரிந்தது; மற்ற இடங்களும் தெரிந்தன; கரைகளும் தெரிந்தன; மேடுபள்ளம் எல்லாம் தெரிந்தன. ஆனால் ஊற்று, கடலான பிறகு ஒன்றுமே தெரியவில்லை. அப்படியே ஆனந்தத்தேன் ஊற்று எடுக்கும் போது மேடுபள்ளம் என்ற வேறுபாடு சற்றே தோற்றலாம். ஆனந்தம் வெள்ளமாகப் பெருகிப் பரமானந்தக் கடலான பிறகு முன்னாலே கண்ட கரை மேடு பள்ளங்களில் ஒன்றும் தெரியாது.

வரவரப் பெருகுதல்

இறைவனுடைய திருவருளால் அவனுடைய திருவுருவத்தை உள்ளத்தில் பதித்து அறிவுப் பக்குவம் பெற்று அன்போடு கலந்து சாதனை செய்வோமானால் ஆனந்த ஊற்றுத் தோன்றும்; மேலும்மேலும் பெருகும். அப்படிப் பெருகி வரும்போது மெல்ல மெல்லப் பேத புத்தி மாய்ந்து வரும். அருகில் இருக்கிற கரைகள் உடைந்து போகும்; பள்ளமும் போய்விடும். முன்பு என் மனைவி மக்கள், என் சொத்து என்று சொல்லிக் கொண்டிருந்தவன் 'என்' என்பதை மறந்துவிடுவான். 'என்' என்பது 'எம்' ஆகிவிடும். வீட்டை நினைப்பதை மாற்றி ஊரை நினைப்பான். பின்பு ஊரையும் மறந்து நாட்டை நினைப்பான். அதனையும் மறந்து உலகத்தையே நினைப்பான். அதற்குப் பிறகு உலகம் என்ற நினைவு போய்விடும்; அண்டத்தை நினைப்பான். அண்டத்தையும் விட்ட பிறகு உயிர்க் கூட்டத்தை நினைப்பான். எல்லாவற்றையும் கடந்த ஒன்றைக் கடைசியில் நினைப்பான். பின்பு அந்த நினைப்பும் தானே மறைந்துவிடும்.

எப்போதும் எல்லாமாய் இருக்கின்ற ஒன்றை நினைப்பது தான் ஒன்றையும் நினைக்காத நினைப்பு, நினைப்பிலா நினைப்பு. ஆனந்த வெள்ளம் பெருகி நிற்கும்போது எல்லை எல்லாம் உடைந்துவிடுகிறது. 'நான், எனது' என்ற இரண்டும் இருக்கிற வரைக்கும் எல்லை உண்டு. அவை போய்ச் செயல் மாண்டு ஒழிந்தால் எல்லை இல்லாத நிலை வந்துவிடும்.

அகண்ட பாவனை

எல்லாமாய் அல்லதுமாய் இருக்கும் பரம்பொருளின் நினைவினால் அகண்ட பாவனை வரும்போது நாம் வேறு என்ற நினைவே எழாது. பரமானந்த வெள்ளம் படர்ந்திருக்கும்போது அந்த அகண்ட பாவனை உண்டாகும். ஆற்றில் தண்ணீர் இல்லாத போது நடந்தால் மிகவும் விழிப்புடன் நடக்க வேண்டும். முள் இருக்கிறதா என்றும் அசுத்தப் பொருள் இருக்கிறதா என்றும் பள்ளம் இருக்கிறதா என்றும் பார்த்து நடக்க வேண்டும். வெள்ளம் வந்து விடுகிறது. அந்த வெள்ளத்தின்மீது மிதக்கும் ஓடத்தில் ஏறிக்கொள்கிறோம். அப்போது எந்த இடத்தில் முள் இருக்குமோ, பள்ளம் இருக்குமோ என்று பார்க்க வேண்டியது

இல்லை. எந்த இடத்திலே கண்ணாடித்துண்டு காலில் குத்துமோ என்று பயம் வேண்டியதில்லை. தண்ணீர் இல்லாதபோது ஒவ்வோர் இடத்திலும் யோசனை பண்ணி அஞ்சி நடந்து கொண்டிருந்த நாம் வெள்ளம் வந்த பிறகு அதே இடத்தின்மேல் பாகையில் அந்தக் கவலைகளுக்கு இடமே இல்லாமல் சுகமாகப் போகிறோம். காரணம் அப்போது மேடு பள்ளமற்ற சமமான வெள்ளம் பரந்ததுதான்.

உள்ளக் கமலம் விரிந்து அதனூடே ஆனந்தத் தேன் ஊற்றாகத் தோன்றி மேலே பெருகிப் பரவும்போது அதற்கு முன்னாலே வெவ்வேறாகக் கண்ட நிறங்களும், உருவங்களும் ஒன்றாகி விடும். புலன் நுகர்ச்சி எல்லாம் மேடு பள்ளம் இல்லாமல் மட்டமாகிவிடும். அவன் எல்லாவற்றுக்கும் மேலே மிதப்பான். அந்த இடத்தை விட்டுப் போய்விடுவான் என்பது அல்ல. சரீரம் இருக்கும் மட்டும் இந்த உலகத்தில் இருக்கத்தான் வேண்டும். கரைக்குச் சென்றவனும் ஆற்றுப் படுகையில் இருக்கிற கண்ணாடி, முள் முதலியவற்றுக்கு அஞ்சமாட்டான். ஆற்றில் வெள்ளத்தின் மேல் இருக்கிறவனும் அஞ்சமாட்டான். அப்படியே பிரபஞ்சத்தில் இருந்தாலும் செயல் மாண்டு ஒழிந்து பரமானந்தத்தில் மிதந்தால் அவனுக்கு ஏனையவர்கள் காணும் இன்ப துன்ப வேறுபாடுகள் இருப்பது இல்லை. அந்த ஆனந்த வெள்ளம் புவனத்தை எற்றிவிடுகிறது. பிரபஞ்ச வாசனை அத்தனையும் அற்று நிற்கிற நிலை அது.

புவனம் எற்றுதல்

புவனம் எற்றித் தத்திக் கரை புரளும்
பரமானந்த சாகரத்தே.

சாலைகளில் நிழலுக்கு செடி நடுவதை நாம் பார்த்திருக்கிறோம். செடி நடும்போது ஆடுகள் கடிக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகச் சுற்றிலும் இரும்பினாலேயோ, முள்ளாலேயோ வேலி அமைப்பார்கள். நட்ட செடி பெரிய மரமாகி வளர்ந்து விடுகிறது. அப்போது அங்கே வேலி இருக்குமா? அது அற்றுப் போய் விடும். அது போலவே இந்த உள்ளக் கமலத்தில் தோன்றிய ஊற்று உள்ளத்தை அழித்து விடுகிறது; அல்லது உள்ளமே அதில் கரைந்து இல்லாமல் போய்விடுகிறது.

புவனம் எற்றுதலாவது, அவனளவிலே புவனத்தின் நினைப்பே இல்லாமல் போய்விடுவது. அவன் அடைகிற ஆனந்தம் இட எல்லைக்கு அப்பாற்பட்டது. புவனங்களை எற்றிப் பரந்து நிற்பது. பிரபஞ்சத்தில் வாழ்ந்தாலும் அதனைக் கடந்து நிற்கிறான். இதைத்தான், 'புவனம் எற்றி' என்று சொல்கிறார்.

3

அடையாளம்

இனிமேல் சொல்வதுதான் சற்று விசித்திரமாகத் தோற்றும். எல்லாம் போய்ப் பிரபஞ்சத்தை எற்றிவிட்ட பிற்பாடு அந்தப் பரமானந்த வெள்ளத்தின்மேல் ஓர் அமுதம் தோன்றியது என்று சொல்ல வருகிறார்.

> பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
> தித்தித்திருக்கும் அமுது கண்டேன்.

''கோயிலில் நான் ஆறுமுகமும், பன்னிரண்டு தோள்களும் உடைய பெருமானாகக் கண்டேனே! அந்தப் பெருமானை அங்கே கண்டேன்'' என்கிறார். இது வியப்பதற்குரிய செய்தி. கோயிலில் கண்ட அந்தத் திருவுருவத்தையே அங்கே காண வில்லை. அது போன்ற ஒன்றைக் கண்டார். ஒருவன் விதை விதைத்து ஆல மரத்தைக் கண்டான். அந்த ஆலமரத்தில் மீட்டும் விதையைக் கண்டான் என்று சொல்வது பொருத்தமாக இருக்கிறது. நமக்கு விளங்குகிறது. பூமியில் விதைத்த விதை வேறு. அதிலிருந்து வளர்ந்த விதை வேறு. இரண்டும் ஆலம் விதைதான். ஆனால் அது இது ஆகாது. ஆறுமுகமும், பன்னிரண்டு தோளும் உடைய ஆண்டவனை ஒவ்வொரு நாளும் திருக்கோயிலில் தரிசனம் செய்து உள்ளத்தில் பதித்துக் கொண்டார். பின்பு செயல் மாண்டது. ஆனந்த ஊற்றுப் பெருகியது; பரமானந்தக் கடலாகப் பெருகி விட்டது. பெருகின போது மறுபடியும் அங்கே அந்த ஆறு முகத்தைக் கண்டார். சிறிய விதையிலிருந்து மிகப் படர்ந்து சென்ற மரத்தில் மறுபடியும் விதையைக் கண்டேன் என்று சொல்வது போல இருக்கிறது இது. இரண்டு விதைகளும் ஒன்று ஆகா. இந்த விதையினுடைய விளைவு அது. இந்த விதையைப்

பார்க்கிறவன் மரமாகி வளர்ந்த பிற்பாடு வரும் விதையை ஒருவிதமாக ஊகிக்கலாமே தவிர நேரே பார்க்க இயலாது. பார்க்க வேண்டுமானால் அவ்வளவு காலம் காத்து நின்று வளர்கிற வரைக்கும் முயற்சியைச் செய்து வரவேண்டும்.

அப்படி, ''பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு தோள் களுமாய்த் தித்தித்திருக்கும் அமுது கண்டேன்'' என்று அருண கிரியார் சொல்வதை நாம் இப்போது திருக்கோயிலில் பார்க்கிற உருவத்தைச் சொல்வதாக எண்ணக் கூடாது. அது எப்படி இருந்தது என்று அடையாளம் சொல்வதற்காக நமது அருண கிரிநாதர் இந்த வகையில் சொன்னார். அவர் கண்டபடி நாம் காண வேண்டுமானால் அவரைப்போல நாம் செயல் மாண்டு அடங்கி நிற்க வேண்டும்.

இங்கே அருணகிரிநாதப் பெருமான் நமக்குப் பயன்படுகிற ஒரு செய்தியைச் சொல்கிறார். கோயிலுக்குள் நாம் காண்கிற உருவமே வித்தாக நின்று பின்னாலே வேறு வகையில் அநுபவ நிலையில் தோன்றும் என்பதை அவர் புலப்படுத்துகிறார். புவனத் திற்கு நாம் அடங்கி நிற்கும்போது ஆறுமுகநாதனைப் பார்க் கிறோம். அருணகிரியாரும் அவனைப் பார்த்தார். புவனத்தை அடக்கி நிற்கின்ற அந்தச் சமயத்திலும் ஆறுமுக நாதனை நாம் காணலாம். இங்கே கண்ட ஆறுமுகநாதன் அங்கேயும் வந்து நிற்கிறான், வேறு வகையில்.

படமும் ஆளும்

இன்னும் இதைச் சற்றுத் தெளிவாகப் பார்க்கலாம். நம் முடைய வீட்டில் ஒரு படம் மாட்டி இருக்கிறார்கள். நம்முடைய உறவினர் அவர். மிகவும் நல்லவர் என்று தாய் தந்தையர்கள் சொல்கிறார்கள். நாம் அவரைப் பார்த்ததில்லை. அவர் எங்கே இருக்கிறார் என்று கேட்கிறோம். ''அவர் எங்கோ பம்பாய்க்குப் போனார். அங்கே தங்கிவிட்டார். அவரை நான் கண்டு பல காலம் ஆயிற்று!'' என்று தந்தையார் சொல்கிறார். நாம் தினந் தோறும் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறோம். ஒரு சமயத்தில் பம்பாய்க்குப் போகிறோம். போகிற போது அந்தப் படத்திலுள்ள மனிதரைக் காண்கிற வாய்ப்புக் கிடைக்கிறது. கண்டவுடன் நம்முடைய வீட்டுப் படம் நினைவுக்கு வருகிறது.

அடையாளம் கண்டு கொள்கிறோம். உடனே அவரோடு கலந்து பேசி அவருடைய அன்புக்குப் பாத்திரமாகிறோம். ஊருக்கு வந்தவுடன் நம்முடைய தாய் தந்தையர்களிடம், ''இதோ இந்த அறையில் இருக்கிறாரே, அவரை நான் பம்பாயில் பார்த்தேன்'' என்று சொல்கிறோம். ''இந்தப் படத்தில் உள்ளவரை நான் பார்த்தேன்'' என்று சொன்னால் இந்தப் படத்திலேயே கை காலுடன் இருக்கிறார் என்று பொருள் அல்ல. இங்கே வெறும் அடையாளமாத்திரமாகக் கண்ட திருவுருவத்தை அங்கே அநு பவிக்கும் வண்ணம் பார்த்ததாகக் கொள்ள வேண்டும்.

அதுபோலவே நாம் நாள்தோறும் கோயிலில் காண்கின்ற விக்கிரகம் பின்னாலே நாம் அநுபவிக்கின்ற அநுபவத்திற்கு அடையாளம். இந்த அடையாளத்தை உள்ளத்தடத்தில் நட்டு அன்புநீர் பாய்ச்சி வளர்க்கின்ற அடியார்கள் அந்தப் பெருமானை நேரில் கண்டு இன்பத்தை நுகரலாம்.

இப்போதும் அப்போதும்

'இப்போது அறிகுறியாகக் காணும் ஒன்று அப்போது அநுபவப் பொருளாக நிற்கும். இப்போது சர்க்கரை என்று எழுதி வைக்கிற பெயர் அப்போது நாவினாலே சுவைப்பதாய் இருக்கும். இப்போது பொம்மையாகப் பார்க்கிற ஒன்று அப்போது உயிருள்ள உருவமாக இருக்கும். இப்போது வெறும் கட்டையாக இருக்கிறது அப்போது ஒளிவடிவமாகத் தோன்றும்' என்று மேன்மேலும் வருணித்துக் கொண்டு போகலாம். எம்பெருமானுடைய ஆறுமுகத் திருக்கோலம் நாம் வழிபடத் தொடங்கும் போது நம் கண் முன்னால் திருக்கோயிலில் வடிவமாக நிற்கிறது. செயல் இழந்த அநுபவ நிலையில் நிற்கும்போது வேறு ஒருவகையில் அமுதமாக நிற்கிறது.

ஆதியிலே தோன்றிய ஆறுமுகம் அந்தத்திலும் தோற்றும். இதனை அருணகிரியார் திருப்புகழில்,

''ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்
ஆறு முகம்என்று தெளியேனே'

என்று சொல்லியிருக்கிறார்.

விளக்கும் சோதியும்

ஒரு சிறிய விளக்கை வீட்டில் வைத்திருக்கிறோம். அந்த விளக்கு ஓர் எல்லைக்குள் ஒளியைப் பரப்பிச் சில பொருள்களை விளக்குகிறது. சூரியன் தோன்றினால் எல்லா வீடுகளும் நமக்குத் தெரிகின்றன; கண்ணுக்கு எட்டும் தூரம் வரைக்கும் நம்முடைய பார்வை விரிகிறது. அப்போதும் நமக்குப் பல பொருள்கள் தெரிவது இல்லை. சுவருக்கு அந்தப் பக்கம் உள்ள பொருள்கள் தெரிவது இல்லை. அந்தப் பேரொளியினால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருந்தாலும், அடுத்து நின்ற சுவர்களும், மறைப்புகளும் அப்பாலுள்ளதை நம் கண்ணுக்குப் புலப்படாமல் செய்கின்றன. சிறிய விளக்கின் ஒளியில் எந்தத் தடையும் இல்லாவிட்டாலும் நெடுந்தூரத்திலுள்ள பொருள் தெரிவது இல்லை. பெரிய சோதிப் பிழம்பாகிய கதிரவன் ஒளிக்கு எல்லாப் பொருளையும் விளக்கும் ஆற்றல் இருந்தாலும் தடுத்து நிற்கிற மறைப்புகளினால் நமக்குப் பொருள் புலப் படுவது இல்லை. அப்படியே மனம், உணர்வு ஆகிய தடை இருக்கும்போது இறைவனுடைய பேரருள் நமக்குப் பயன் படுவது இல்லை. சிறிய விளக்கை ஏற்றிப் பின்பு அந்த விளக்கே சோதியானால் நம் பார்வை விரியும். அதோடு அடைபட்ட மறைப்புகள் எல்லாம் அழிந்து ஒழியுமானால் மிக விரிந்த பரப்பில் நம்முடைய பார்வை போகும். சிறிய விளக்கு வைத்து வீட்டிலேயே வளைய வருவது போல நாம் திருக்கோயிலில் எம்பெருமான் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து பார்க்கி றோம். அந்தச் சிறிய விளக்கே அநுபவத்தில் எல்லை இல்லாத சோதிப் பிழம்பாகத் தோன்றுகிறது. கண்டத்திற்குள் காணுகின்ற ஆறுமுகநாதனைக் கோயிலில் காண்கிறோம். அகண்ட பரமானந்த வெள்ளத்தில் அகண்டமாக இருக்கிற ஆறுமுக நாதனைக் காணலாம். இப்போது நம்முடைய கண்ணுக்கு இனிமையாக இருக்கிற உருவம் அப்போது நம்முடைய உயிருக்கு இனிமை யாக இருக்கும்.

இந்த ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் உடைய எம் பெருமானுடைய தரிசனத்தில் நாம் உள்ளக் கிளுகிளுப்பு அடைகிறோம். ஆனால் அகண்டக் காட்சியிலே அருணகிரிநாதர் கண்ட ஆறுமுகநாதன் உயிருக்குள்ளே இன்பம் பாய்ச்சினான்.

சாவாத நிலை தந்தான். அதனால் அந்தத் திருவுருவத்தை அமுதம் என்று சொன்னார்.

தித்தித்திருக்கும் அமுது கண்டேன்.

அமுதம் என்பது மரணத்தை ஒழிப்பது. முன்னாலே சொன்னது போல தேவர்கள் உண்ட அமுதம் போன்றது அன்று இது. எந்தக் காலத்திலும் மாறாத இன்பத்தைத் தந்து, இனிப் பிறவி மரணம் ஆகிய இரண்டும் வராமல் செய்கின்ற அரு மருந்து, இனிய மருந்து இது.

தேனும் அமுதமும்

தேன் ஊற்றாகத் தோன்றிப் பின்பு கடலாக மாறி அந்தத் தேன் கடலில் அமுதம் எழுந்ததாய்ச் சொல்கிறார். இனியது என்று சொல்லவேண்டுமானால் அதனைத் தேன் என்று சொல்வது ஒரு வாய்பாடு. பாட்டு இனிமையாக இருந்தது என்பதை உணர்த்த, தேன்போல இருந்தது என்று சொல்வது வழக்கம். மருந்துக்குத் தேன் இல்லை என்று யாராவது சொன்னால் அந்தப் பாட்டைக் கொண்டு வந்து இழையுங்கள் என்றா சொல்வது? அமுதம் என்பதும் அப்படித்தான். தேனைவிடச் சிறந்தது அமுதம். புத்திக் கமலத்தில் உருகி ஊற்றானபோது தேனாக இருந்தது. அந்த ஊற்றுக் கடலானபோது அதில் அமுது விளைந்தது.

அநுபவ நிலையிலிருந்து இறங்கி வந்துள்ள அருணகிரிநாதர் சொல் இறந்த இன்பத்தைச் சொல்லுக்குள்ளாக்கிச் சொல்கிறார். அப்படிச் சொல்கிறவர் கேட்கிறவர்களுக்கு விளங்கும் வண்ணம் சொல்லவேண்டும். விளக்க முடியாததை விளங்கும் வண்ணம் சொல்ல வேண்டுமானால் அதற்குச் சில உத்திகள் உண்டு. அமுதம் என்று சொல்வது அத்தகையது; உயிருக்கே இனிமை தருகின்ற, மரணத்தை மாற்றுகின்ற பொருள் அது என்று சொல்வதற்குப் பதிலாக அது தித்திக்கின்ற அமுதம் என்று சொன்னார். தித்திப்பு என்பது நாவின் சுவை. இங்கே மனம் கடந்த நிலையில் உள்ள இன்ப நிலையைச் சொல்லும்போது அப்படிச் சொல்லலாமா என்று கேட்கக்கூடாது. அப்படிச் சொல் வதனால் சொன்னவர் கருத்தை நாம் ஒருவாறு உணர்ந்து கொள் கிறோம். நம்முடைய மொழியில் சொன்னால்தான் விளங்கும் என்பதற்காக அப்படிச் சொல்கிறார்.

எம்பெருமானுடைய உருவத்தைக் கண்டு கண்டு, தியானம் பண்ணி அன்பினால் உருகி நின்றால் சோதி மயமான திருவுருவக் காட்சி கிடைக்கும். கண்டமாய் இருக்கிற இந்த உருவமே எல்லை இல்லாத சோதிப் பிழம்பாகக் காண்பதற்கு மூலமாக இருக்கும். இத்தகைய அநுபவத்தை ராமகிருஷ்ண பரமஹம்சர் முதலியவர்கள் கண்டிருக்கிறார்கள். அருணகிரிநாத சுவாமிகள் சொல்கிறது ஏதோ கற்பனை என்று நினைக்கக் கூடாது.

வளர்ச்சி முறை

செயல் மாண்டு அடங்குதலும் புத்திக் கமலத்தில் உருகிப் பெருகுவதும் சிறிது சிறிதாக நிகழ்கின்ற வேலைகள்; செயல் முழுவதும் அடங்கின பிறகு புத்திக் கமலத்தில் ஊற்று எடுக்கிற தென்று கொள்ளக் கூடாது. செயல் அடங்கிக் கொண்டு வரவர, புத்திக் கமலத்தில் இன்ப ஊற்று எழும்; செயல் முற்றும் மாளும் போது பேரமுதக் காட்சி கிடைக்கிறது. செயல் சிறிது சிறிதாக அடங்கி வரும் போது இன்பம் சிறிது சிறிதாக ஏறிக் கொண்டு வரும். அப்போது முன்னாலே எந்தப் பொருளில் இன்பம் இருக்கிறதென்றும், எந்த எந்த முயற்சி சிறப்பு உடையதென்றும் நினைத்தோமோ அவற்றில் கண்ட சுவை எல்லாம் மாறிவிடும். முன் நிலைக்கும் பின் நிலைக்கும் உள்ள வேறுபாடு நன்கு தெரியும். பிறர் நம்முடைய பக்குவத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்பது இல்லை. நம்மிடத்தில் முன்னாலே இருந்த அழுக்குச் சிறிது சிறிதாகக் குறைந்து வருவதும் மெல்ல மெல்ல வெள்ளம் ஏறுவதும் நமக்கே தெரியும். அறிவு இல்லாத காலத்தில் சின்னஞ்சிறு குழந்தையாக இருக்கும் போது மண்ணையும் மலத்தையும் அப்பிக் கொண்டிருக்கிறோம். எறிய வேண்டிய பொருளை வாயில்போட்டுக் கொண்டோம். குழந்தைப் பருவம் மாறியபிறகு முன்னாலே செய்தது இயற்கை என்று நினைக்க மாட்டோம். குழந்தையாக இருக்கையில் செய்யும் செயல்கள் தவறு என்ற நினைவு அப்போது வருவது இல்லை. அந்தப் பருவம் மாறின பிறகு, இப்படியெல்லாம் பைத்தியக்காரத் தனமாகச் செய்தோமே என்ற நினைவினால் நாமே சிரித்துக் கொள்கிறோம். அந்த வகையில், செயல் மாண்டு அடங்கிவரவர, இன்ப ஊற்றுப் பெருகி வர வர, முன்னை இருள் நிலையை எண்ணி எண்ணி நாம் உள்ளே நகைத்துக் கொண்டிருப்போம்.

அநுபவம் ஏறுதல்

ஆகையால் இப்போதுள்ள நிலையே இயற்கை என்று நினைக்கக் கூடாது. நாம் இப்போது காணுகின்ற திருஉருவங்கள் இப்படித்தான் இருக்கும் என்றும் எண்ணக் கூடாது. அநுபவம் ஏற ஏற இப்போது காணுகின்ற உருவங்கள் எல்லாம் எந்த வகை யில் பயன் தருகின்றன என்பது அப்போது விளங்கும். இப்போது சொன்னாலும் விளங்காது. அறிவுக்கு அகப்படுகிறதாய் இருந்தால் காரண காரியங்களைக் கொண்டும் ஊகத்தைக் கொண்டும் நிரூ பித்துவிடலாம். இதுவோ அறிவுக்கும் எட்டாத தாக இருக்கிறது. அதனால் அறிவுக்குத் தெளியும்படியாக எந்த வகையான பிரமாணத்தைக் காட்டியும் நிரூபிக்க முடியாது.

> ''அவ்வா றறிவார் அறிகின் றதலால்
> எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே''

என்று அருணகிரியார் அநுபூதியில் சொல்கிறார். முன்னாலே நாம் செய்த செயல்களை அப்போது நன்மை என்றே செய்திருக்கிறோம். இப்போது நாம் செய்கின்ற செயல்கள் இப்போது நன்மையாகத் தோன்றுகின்றன. முன் நாம் செய்த செயல் இழுக்கு என்று இப்போது தெளிவாகிறது. இழுக்கான செயல்களை நாம் செய்ய லாகாது என்று நமக்கு அப்போதே தெளிவு பிறந்திருக்குமானால் அவற்றைச் செய்திருக்கமாட்டோம். படிப்படியாக இந்தத் தெளிவு உண்டாகிறது. படிப் படியாக நம் உள்ளத்தில் வாசனைப் படலம் ஏறிக்கொண்டு வந்திருக்கிறது. வினைகளும் மெல்ல மெல்ல நம் மிடத்தில் குவிந்திருக்கின்றன. அவற்றைப் போக்க வேண்டுமானால் மெல்ல மெல்லத்தான் போக்க வேண்டும். செயல்கள் மெல்ல மெல்ல அடங்கி வரும்போது அதன் பயனாக இன்பம் மெல்ல மெல்ல ஊறிப் பின்பு பரமானந்த சாகரமாக மாறும்.

அருணகிரிநாதப் பெருமான், செயல்கள் எல்லாம் அடங்கி நிற்க ஜீவபோதம் அற்று இறைவனோடு ஒன்றுபடுகின்ற ஆனந்த நிலையை இந்தப் பாட்டில் சொல்கிறார். நமக்கும் இதற்கும் என்ன தொடர்பும் என்றும், எட்டாத இடத்தில் இருக்கிற ஒன்றை நாம் பார்த்துக் கொட்டாவி விடுகிறோம் என்றும் நினைக்கக் கூடாது. நாம் அநுபவிப்பதற்கு ஒத்து வருகின்ற பழக்கத்தையும் இந்தப் பாட்டில் சொல்கிறார்.

'செயல் மாண்டு அடங்க' என்பதற்கு அடங்கிவர என்று பொருள் கொள்ள வேண்டும். முற்றும் அடங்கிய நிலையில் ஊற்றுத் தோன்றிய புத்திக் கமலம் மறைந்து எல்லாவற்றையும் ஒன்றாக்கிக் கொண்டு பரமானந்த வெள்ளம் தோற்றும். செயல் ஒவ்வொன்றாக மாளத் தொடங்கவே, இன்ப ஊற்றுப் பெருகி வரும். ஒன்று தேய்ந்து கொண்டு வருவதும், ஒன்று ஓங்கிக் கொண்டு வருவதும் சேர்ந்தே நிகழும். நாம் தொடக்க நிலையில் இருக்கிறோம். நம்முடைய செயல் தேய்ந்து வரவேண்டும். செயல் தேய்வது செயலைச் செய்யாமல் இருப்பது அன்று. பிறவிப் பிணிக்குக் காரணமான செயல்கள் அடங்கவேண்டு மானால் அதற்கு மாற்றான செயலைச் செய்யவேண்டும். நல்ல செயல்களைச் செய்யத் தொடங்கிப் பின்பு மெல்ல மெல்லச் செயல்களை ஒழிக்க வேண்டும். அப்போது இறைவனுடைய திருவருளால் புத்திக் கமலம் விரிந்து அங்கிருந்து இன்ப ஊற்றுப் புறப்பட்டுப் பெரும் கடலாகும். அந்தக் கடலில் ஆறுமுக அமுது தோன்றும்.

இப்போது நாம் காணும் ஆறுமுகம் புத்திக் கமலத்தில் இன்ப ஊற்றுத் தோன்றச் செய்யும். அப்போது காணும் ஆறுமுகம் பரமானந்தப் பெரும் கடலில் அமுதாகத் தோற்றும். அதற்கு இது வாயில்.

4

ஆறுமுகம்

ஆறுமுகமும் பன்னிரண்டு தோள்களும் உடைய பெருமானைக் கோயிலில் பார்க்கிறோம். பூவாலும் அணியாலும் அலங்காரம் செய்து நம் உள்ளம் கவரும்படி செய்கிறார்கள். அந்த அலங்காரங்கள் திருமுகங்களையும், திருந்தோளையும் நம்முடைய கண்ணுக்கு அழகாகக் காட்டுகின்றன. இறைவனுடைய திருவருளில் ஈடுபட்ட பெருமக்கள் இந்த ஆறுமுகத்தைப் பற்றியும், பன்னிரண்டு திருத்தோள்களைப் பற்றியும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். முருகப் பெருமான் ஆறுமுகத்தையும் பன்னிரண்டு திருத்தோளையும் கொண்டு செய்கின்ற பல திருவிளையாடல்களை விரிவாகத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரரும், திருவகுப்பில் அருணகிரியாரும் சொல்கிறார்கள்.

வரிசையான ஆறுமுகத்தை நாம் கண்ணாலே கண்டு பின்பு கருத்தாலும் காண வேண்டும். கண்ணாலே காண்பதற்குக் கற் கோயில்கள் பயன்படுகின்றன; கருத்தாலே காண்பதற்குச் சொற் கோயில் பயன்படும். ஆறுமுகநாதனின் எல்லா அலங்காரங் களையும் பார்த்தால்தான் நம் மனம் அந்த திருவுருவத்தில் கவியும். அப்படியே ஆறுமுகத்தைப் பற்றிச் சொல்கிற பாடல்களையும், புகழ்களையும் தெரிந்து கொண்டால் பின்னும் நன்றாகக் கவிந்து அந்தத் திருவுருவத்தைப் பதித்துக் கொள்ளும் நிலை வரும்.

நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் எம்பெருமானுடைய ஆறுமுகங்களும் இன்ன இன்ன செயல்களைச் செய்கின்றன என்று தெரிவிக்கிறார்.

கதிர் விரிக்கும் முகம்

முருகப் பெருமானுடைய ஆறு திருமுகங்களும் ஆறு வேறு காரியங்களைச் செய்கின்றன. ஒரு முகம் உலகம் எங்கும் பரந் திருக்கின்ற இருளை எல்லாம் போக்கி ஒளி தருகிறது. கதிரவன், திங்கள், தீ என்னும் மூன்றும் உலகிலுள்ள இருளைப் போக்கும் மூன்று சுடர்கள். அந்தச் சுடர்களுக்கும் ஒளி உதவி இருளைப் போக்க உதவும் முகம் ஒன்று.

“மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்.”

வரம் கொடுக்கும் முகம்

அடுத்த முகம் தன்பால் அன்பு செய்பவருடைய விருப்பத்தை நிறைவேற்றுகின்றது.

“ஒருமுகம்
“ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே.”

ஆர்வலர் – பக்தர்கள்.

வேள்வி காக்கும் முகம்

மறை வழியே நின்று வேள்விகளைச் செய்யும் அந்தணர்கள் உலகத்திற்கு வரும் தீங்குகளைத் தம்முடைய செயலால் ஒழிக்

கின்றார்கள். ஆதலின் உலகம் நன்றாக நடைபெற வேண்டி அவர்களுடைய வேள்விக்கு ஆக்கம் தேடுவது ஒரு முகம்

"ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே."

மயக்கம் நீக்கும் முகம்

எம்பெருமான் ஞானபண்டித சாமி. உலகில் பலர் அறிவு பெற்றிருந்தாலும் அவர்களுடைய அறிவு எல்லாம் ஒருவகையில் குறைவு உடையனவே. ஒருவரை நோக்க மற்றவருடைய அறிவு சிறந்திருந்தாலும் அவர் பின்னும் ஒருவருடைய அறிவை எதிர்பார்க்கும் குறைவு உடையவர் ஆவர். அறியாமை குறைந்து வரவர, அறிவு மிகுந்து வரும். அறியாமை சிறிதும் இல்லாமல் அறிவே தன்னுடைய உருவமாக இருக்கிற எம்பெருமான் மிகச் சிறந்தவர்களுக்குத் தோன்றுகின்ற ஐயங்களைப் போக்கித் தெளிவிப்பான். அப்படித் தெளிவாக்கும் செயலைச் செய்கின்றது ஒரு முகம்.

"ஒருமுகம்
எஞ்சிய பொருளை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே."

வெல்லும் முகம்

இன்பத்தைச் செய்கின்ற முருகப் பெருமான் நல்லவர்களுக்கு வரும் துன்பத்தையும் போக்குகிறான். தேவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்கள் தேவர்களை மாத்திரம் துன்புறுத்துவது இல்லை. உலகத்திலுள்ள நல்லவர்களுக்கும் துன்பத்தைத் தருகிறார்கள். அவர்களை அடியோடு அழித்துப் போர்க்களத்தில் வெற்றி கொள்ளும் திறல் உடையவன் முருகன். இந்த வீரச் செயலை ஒரு திருமுகம் செய்கின்றது.

"ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமோடு களம்வேட் டன்றே."

மகிழும் முகம்

இனி ஆறாவது முகம் இன்பத்தை வழங்குகிறது. ஆன்மாக் களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற வள்ளியெம் பெருமாட்டிக்கு எம்பெருமான் இன்பம் வழங்கினான். அந்தச் செயலைச் செய்வது ஒரு முகம்.

"ஒரு முகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே."

முருகன் இருளைப் போக்கி ஒளிகாட்டுவான் என்றும், உலகத்திற்குப் பொதுவாக ஒளி கொடுத்தாலும் சிறப்பாகத் தன்னை அண்டி அன்பு செய்வாருக்கு இன்பம் தருவான் என்றும், உலகத்தில் பிறருக்கு நலம் செய்கின்ற மக்களைக் காப்பாற்று வான் என்றும், அறியாமையை நீக்குவான் என்றும், தீங்கு விளை விப்பார்களை அடக்குவான் என்றும், ஆன்மாக்களுக்கு இன்பம் தருவான் என்றும் கொள்ளும்படியாக இந்த முகங்களின் செயல் கள் அமைந்திருக்கின்றன. ஒளி படைத்த உலகத்தில் அன்பர்கள் வந்து அவனை வழிபட்டுத் தமக்கு வேண்டிய வரங்களைப் பெற, ஒருபால் அந்தணர்கள் வேள்வியைச் செய்ய, பின்னும் ஒருபால் ஞானிகள் உபதேசம் பெற, வேறு ஒருபால் அசுரர்கள் ஒழிய, பின்னும் ஒருபால் வள்ளியெம் பெருமாட்டி இன்பத்தைப் பெறுகிறாள்.

இந்த ஆறுமுகங்களையும் வரிசையாகப் பெற்றிருக்கிறான் முருகன். நக்கீரர் சொல்கின்ற முறையில் அழகான வரிசை அமைந் திருக்கிறது. சூரியன் உதயம் ஆகி எல்லோருக்கும் இன்பத்தைத் தருவதுபோல இங்கே முதல் முகம் உதயமாகி இருளைப் போக்கு கிறது; கடைசி முகம் வள்ளியெம்பெரு மாட்டிக்கு இன்பம் தருகிறது.

மூன்று நிலை

இப்படி அழகாக அமைந்த ஆறு முகங்களையும் திருமுரு காற்றுப் படையில் பார்க்கிறோம். அதைப் படித்து நம் உள்ளத்தில் வைத்துக் கொண்டால், கோயிலில் உள்ள முருகப் பெருமானுடைய திருவுருவத்தைக் காணும்போது அந்தச்

செய்திகள் நம்முடைய நினைவுக்கு வரும். அந்தத் திருமுகங்களின் மூலமாக இந்த உயர்ந்த கருத்துக்கள் நம் உள்ளத்தில் படம் போலத் தோன்றும். தோன்றாவிட்டாலும் தோன்றும்படியாக நினைத்துப் பார்க்கவேண்டும். பக்தர்களுக்குக் கோயிலில் காணும் முகங்கள் மலராலும், அணியாலும் அலங்காரம் பண்ணப் பெற்றனவாக இருக்கும். திருமுருகாற்றுப் படையைப் படித்த பிறகு அந்த அலங்காரங்களைக் கண்ணாலே காணுவதோடு நில்லாமல் அவற்றின் செயல்களையும் நினைத்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. இது இரண்டாவது நிலை. அது போல் மூன்றாவது நிலை ஒன்று உண்டு. அதுதான் பரமானந்த சாகரத் தில் அமுத மயமாக இந்த ஆறு முகங்களையும் காணும் நிலை.

இதனை அருணகிரிநாதப் பெருமான் அநுபவத்தில் உணர்ந்தார். இந்தப் பாட்டில் அதைச் சொல்கிறார்.



பத்தித் திருமுகம் ஆறுடன்
    பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
    டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப்
    பெருகிப் புவனம்எற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
    மானந்த சாகரத்தே

(செயல்கள் ஒடுங்கி கரணங்கள் அடங்கிக்கொண்டுவரப் புத்தியாகிய கமலத்தில் உருகிப் பெருக்கெடுத்துப் புவனங்களைத் தகர்த்தெறிந்து மேலே பொங்கிக் கரைபுரளும் பரமானந்தக் கடலில் வரிசையாகிய திருமுகம் ஆறுடனும் பன்னிரு தோள்களுமாக இனித்திருக்கும் அமுதத்தைக் கண்டேன். பத்தி - வரிசை. எற்றி - தகர்த்து)

வண்டும் மலரும்

1

நாம் திருக்கோயிலில் காணும் இறைவனுடைய அற்புதமான விக்கிரகத்தை வித்தாக மனத்தில் பதித்துத் தியானம் செய்து, பக்தி ஏற ஏற அந்தத் திருவுருவமே ஆனந்தக் கடலில் அமுதம் போலத் தோற்றும் என்பதைப் போன பாட்டில் அருணகிரிநாதர் சொன்னார். மறுபடியும் அடுத்த பாட்டில் எம் பெருமான் திருவருளைப் பெறுவதற்கு எளிய வழி ஒன்றைச் சொல்கிறார்.

நல்ல மலர்களில் மணமும் தேனும் இருக்கும்; மென்மையும் இருக்கும். அந்த மலர் வாடி வதங்கி மாய்ந்து போனாலும், மணம் அதனோடு போய்விட்டாலும் அதில் உள்ள தேனை நாம் பெறலாம். அந்தத் தேனை நமக்காகச் சேமித்து வைக்கிறது வண்டு. வண்டு மலர்களில் உள்ள தேனைச் சேமித்துத் தானும் உண்டு, பிறருக்கும் பயன்படச் செய்யும் இயல்பு உடையது.

வண்டுகளின் வகை

வண்டுகள் என்று சொன்னவுடன் நமக்குத் தேனைத் தொகுக்கும் வண்டு நினைவுக்கு வருகிறது. உலகில் பல வகையான வண்டுகள் உண்டு. இழி பொருள்களை உருட்டுகிற வண்டுகளையும் நாம் பார்த்திருக்கிறோம். தேனை உண்ணும் வண்டுகளிலும் பலவகை உண்டு. சிறு சிறு மலர்களிலிருந்து தேனைச் சேகரித்து மிகத் தாழ்ந்த இடத்தில் கூடு கட்டி வைக்கும் வண்டுகள் ஒருவகை. தாமரை முதலிய மலர்களிலிருந்து தேனைத் தொகுத்து மிக உயர்ந்த மரங்களில் மலையின்மேல் தேன்கூடு கட்டும் வண்டுகள் இருக்கின்றன. பிறருடைய கையும் கண்ணும் படாமல் தேனை வைக்க வேண்டுமென்பது அந்த வண்டுகளின் நோக்கம் போலும். நாம் உண்ணுகிற பொருள் பிறருடைய கையும் கண்ணும் படாமல் இருந்தால் நல்லது என்று

பெரியவர்கள் சொல்வார்கள். பிறர் காணாமல் உண்ணுவதும், பிறர் கை படாமல் உண்ணுவதும் தூய்மைக்கு அடையாளம் என்று பழைய காலத்து ஆசார சீலர்கள் கருதினார்கள். இப்போது கண்படாமல் உண்ணுவதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் நம்முடைய கை படாமலேயே சாப்பிடவேண்டுமென்று கரண்டி முதலியவைகளை நாகரிக மக்கள் பயன்படுத்துகிறார்கள். உயர்ந்த வகையிலுள்ள வண்டும் பிறருடைய கைக்கு எட்டாதபடி. பிறருடைய கண் படாதபடி, மலையின் உச்சியின்மேல் இருக்கும் மரக் கொம்புகளில் தேனைச் சேகரித்து வைக்கின்றது. அத்தகைய வண்டுக்குத் தும்பி என்று பெயர். தும்பிகளுக்குள் சிறந்த தும்பியைக் கோத்தும்பி என்று சொல்வார்கள். மரத்தின் உயர்ந்த கொம்பில் தேனை வைப்பதால் கோல்தும்பி என்று சொல்வதும் உண்டு. தாமரையில் உள்ள தாதை ஊதி அதிலுள்ள தேனைக் கொண்டுபோய் மலையின் மேல் இருக்கும் சந்தன மரத்தில் அடை வைக்கும் வண்டு ஒன்றைப் பற்றி நற்றிணை என்ற சங்க காலத்து நூல் பேசுகிறது.

> **''தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
> **சாந்தில் தொடுத்த தீந்தேன் போல.''**

இவ்வாறு வண்டுகளில் அழுக்கை உருட்டும் வண்டு, மலரில் உள்ள சிறு தேனைத் தொகுத்துக் கீழே அடை வைக்கும் வண்டு, உயர்ந்த மரத்தில் தேன் கூடு கட்டும் வண்டு, மலையின் மேலே அடை வைக்கும் வண்டு என்று பல வகைகளைப் பார்க்கிறோம். மனிதர்களுடைய மனம் வண்டு போன்றது. வண்டுகளில் சில சாதி உண்டு. மனங்களிலோ பலபல சாதி உண்டு. இந்த மனம் அழுக்கை உருட்டும். அழகுப் பொருள்களையும் உருட்டும். எங்கெங்கே தேன் உண்டோ அங்கெல்லாம் நாடிச் சென்று மலர்களைக் கண்டு தேனைத் தொகுப்பதே வண்டினுடைய வாழ்வு. சோமசுந்தரக் கடவுள் பாடியதாக உள்ள ஒரு பாட்டில்.

> **''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி''**

என்று வருகிறது. கொங்கு - தேன். அழகிய சிறகைப் பெற்ற வண்டு எங்கே தேன் உள்ளது என்று தேடிப் பறந்து திரியும் இயல்பு உடையது. அப்படித் தேடித் தொகுத்த தேனைத் தான் உண்பதோடு அன்றி உலகமே உண்ணும்படி கொடுக்கிறது. இறைவனுக்கும் அபிஷேகம் செய்ய அத்தேன் உதவுகிறது.

மனமும் வண்டும்

தேனைத் தொகுக்கும் வண்டைப்போல நல்ல எண்ணங் களைத் தொகுத்து வைத்திருக்கும் மனம் சிலருக்கு உண்டு. ஆனால் பெரும்பாலருடைய மனம் உயர்ந்த தேனை நாடாமல் பிறரால் கழிக்கப்படும் பொருள்களை உருட்டுகின்ற வண்டைப் போல இருக்கின்றன. தாமரையில் உள்ள தேனைத் தொகுக்கும் வண்டைச் சிறந்த வண்டாகக் கொள்வது இயல்பு. மிகச் சிறந்த வர்களுடைய மனம் தண்டாமரைத் தேனைத் தொகுக்கும் வண்டைப் போன்றது. மனத்திற்கு வண்டை உவமையாகச் சொல்வது மரபு. மனம் வண்டானால் அது சென்று தேனைச் சேகரிக்கும் தாமரை ஒன்று இருக்க வேண்டும். அந்தத் தாமரையைத்தான் அருணகிரி நாதர் இந்தப் பாட்டில் சொல்கிறார்.

திருவடித் தாமரை

இறைவனுடைய திருவடியைத் தாமரை போன்றது என்று சொல்வார்கள். பாதாம்புயம், பாதபத்மம் என்று பெரியவர்கள் தம்முடைய துதியில் சொல்வது வழக்கம். இந்தப் பாட்டில் அருணகிரியார் பாதாம்புயம் என்று சொல்கிறார்.

இறைவனுடைய திருவடி தாமரையைப் போல இருக்கிறது. இரண்டுக்கும் உள்ள பொதுத் தன்மைகள் பல. தாமரை மெத் தென்று இருப்பது போல இறைவனுடைய திருவடியும் மெத் தென்று இருக்கிறது. இறைவனுடைய திருவடி தாமரையைப் போலச் சிவப்பாய் இருக்கிறது. அருணதள பாதபத்மத்தைத் திருப்புகழில் அருணகிரியார் சொல்கிறார். தாமரை மலர் தூயது; இறைவன் அடியும் தூயது. தாமரை மலர் மங்களம் பொருந் தியது; இறைவன் திருவடியும் அத்தகையதே. தாமரை மலர் குளிர்ச்சியாக இருக்கும் நீரில் முளைப்பது; அப்படியே இறை வனுடைய திருவடி அன்பு நிறைந்த பெரியவர்கள் உள்ளத்தில் முளைப்பது. தாமரைவிரிவாக இருப்பது; இறைவன் திருவடியும் விரிந்திருப்பது. தாமரை மலர் பொய்கையில் எவ்வளவு நீர் இருக்கிறதோ அதற்குக்தக்கபடி உயர்ந்து கொண்டே வரும்; அப்படியே அடியார்களுடைய உள்ளம் எவ்வளவுக்கு எவ்வளவு அன்பு நிறைந்து இருக்கிறதோ, அதற்கு ஏற்றபடி இறைவன் திருவடி உயர்ந்து பயனைத் தந்து கொண்டே வரும். இவ்வாறு

தாமரைக்கும் இறைவன் திருத்தாளுக்கும் உள்ள ஒப்புமையை எடுத்துச் சொல்லலாம். இவற்றுக்கு மேலே மற்றொன்று சொல்லவேண்டும். இறைவனுடைய தாளையே முத்தி என்று முன்பு சொன்னேன். பேரின்பத் தேன் இறைவன் தாளில் இருக்கிறது. அந்தத் தேனை உண்ணுகின்ற வண்டுகள் பெரியவர்களுடைய உள்ளங்கள்.

திருக்கோத்தும்பி

புத்தியை வண்டாகவும், இறைவனுடைய திருத்தாளைத் தேன் சொரியும் தாமரையாகவும் சொல்வது பல பெரியோர்களுக்கு இயல்பு. மணிவாசகப்பெருமான் திருக்கோதும்பி என்று ஒரு பதிகம் பாடி இருக்கிறார். ''கோத்தும்பியே, நீ இறைவனுடைய திருவடிக் கமலத்தில் போய் ஊது'' என்று சொல்வதாக அமைந்த பாடல்கள் அப்பதிகத்தில் இருக்கும். அங்கே தும்பி என்று விளித்தது மனத்தையே.

உலகத்தில் உள்ள மயக்கம் தரும் பொருள்களாகிய மலத்தில் மொய்த்து விழுவதை விட்டுவிட்டு இறைவனுடைய மலர் அடியில் மொய்த்து இன்பம் பெற வேண்டுமென்ற கருத்தை அப்பாடல்களில் சொல்கிறார்.

> **''தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே**
> **நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும்**
> **அனைத்தெலும்பு உள்நெக, ஆனந்தத் தேன்சொரியும்**
> **குனிப்புடை யானுக்கே சென்றூதாய், கோத்தும்பி.''**

சிறிய தேனும் பெரிய தேனும்

வண்டு உலகிலுள்ள பூக்களில் இருக்கும் தேனை உண்ணுகிறது. அது மிகச் சிறிய அளவில் உள்ள தேன். அதனை உண்பதற்கு நாள்தோறும் பறந்து சென்று அலைகிறது வண்டு. அப்படி அலைந்தாலும் தான் சென்று சேருகிற மலரில் தேன் குலைந்து இருக்கலாம். பிற வண்டு உண்டதால் கலைந்தும் இருக்கலாம். அவ்வாறின்றி அங்கே தேன் இருந்தாலும் அந்த மலரில் உள்ள தேன்மாத்திரம் அதற்குப் போதாது. பல பல மலர்களிடம் சென்று சிறிய சிறிய அளவில் தேனைத் தொகுத்து அடையில் கொண்டு போய் வைக்கிறது. அப்படி வைத்தாலும் அந்தத் தேனைப் பிறர்

கொண்டுபோய் விடுகிறார்கள். ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வோர் இந்திரியத்திற்கு இன்பத்தைத் தேடி அதனால் நிறைவு பெறாமல் மேலும் தேடிக் கொண்டிருக்கிறது மனம். அப்படித் தேடுகின்ற இன்பமும் அடுத்த நாள் வரைக்கும் கூட இருப்பது இல்லை. ஒரு கணத்தில் மாயும் இன்பத்திற்கு வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவழிக்கும் இயல்பு அந்த மனத்திற்கு இருக்கிறது.

சின்ன பூவில் உள்ள சிறிய தேனை உண்ணுகின்ற வண்டை நோக்கி, ''நான் ஆனந்தமாகிய தேனைச் சொரியும் ஒரு மலரைச் சொல்கிறேன். அங்கே போய் நீ ஊதுவாயாக'' என்று மணிவாசகர் சொல்கிறார். ''சிறகை அடித்துப் பறந்துபோய்க் கொஞ்சம் கொஞ்சம் தேன் தரும் பூவை நாடுவதை விட்டு அந்தத் தேனை நாடினால் அதைக் காணும்போது இன்பம் கிடைக்கும். அதைப் பற்றிப் பேசும் போது இன்பம் கிடைக்கும். நினைக்கும்போதே இன்பம் கிடைக்கும். எப்போதுமே அந்த தேனின் இன்பத்தைப் பெறலாம்'' என்று சொல்கிறார்.

மலரில் உள்ள தேன் உடம்புக்குள் மிக மெல்லிதாக இருக்கும் நாவின் நுனியை மாத்திரம் சுவைக்கச் செய்யும். ஆனால் அம்பலத்தில் ஆடுகிற ஆண்டவனின் திருவடியாகிய மலரில் உள்ள தேன் உடம்புக்குள் மிக்க வலியனவாகிய எலும்புகள் முழுவதும் உள் நெகிழும்படி செய்யும். எலும்பை உருக்குகின்ற நோய் அன்று. புறத்தே தோன்றாத வகையில் உள்ளுக்குள்ளே உருகி இன்ப உணர்ச்சி பெறும்படியாக அந்தத் தேன் செய்யுமாம். மனத்தை வண்டாக வைத்து மணிவாசகர் பேசுகிறார். ஆனந்தத்தேன் சொரியும் குனிப்பு உடையான் என்று நடராஜப் பெருமானைச் சொல்கிறார். மலரில் உள்ள தேனை வண்டுகள் போய்க் கிண்டி உண்ணவேண்டும். இங்கேயோ தேன் உள்ள பூ ஆடிக் கொண்டிருக்கிறது. அதனால் ஆனந்தத் தேன் சொரிந்து கொண்டே இருக்கிறதாம். ஏதேனும் வண்டு வந்தால் இங்கே தேன் உண்டோ, இல்லையோ என்று ஐயம் அடையாமல், வருவதற்கு முன்னாலேயே தேன் தாரை ஒழுக வேண்டுமென்று கருதி மலர் ஆடிக் கொண்டிருப்பது போல, ஆண்டவன் தன் திருவடியை அசைத்து ஆடிக்கொண்டிருக்கிறான்.

உலகில் உள்ள சிற்றின்பத்தை நினைந்து தன் வாழ்க்கைத் தொழில் முழுவதையும் அதற்காக அமைத்துக் கொண்டு வாழும்

இயல்புள்ள மக்களின் மனத்தை வண்டாக வைத்து, இறைவனுடைய திருவடியைத் தியானம் செய்து இன்பத்தைப் பெறவேண்டு மென்று சொல்லும் உபதேசமே மணிவாசகர் பாட்டு.

2

அருணகிரி நாதரும் தம்முடைய புத்தியாகிய வண்டு இறைவனுடைய பாதாம்புயத்தில் சென்று சேர வேண்டுமென்று நினைக்கிறார்.

புத்தியை வாங்கி நின் பாதாம்புயத்தில் புகட்டி, அன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றிலேன்.

வேற்றுமையில் ஒற்றுமை

நம்முடைய மனத்தில் இறைவனுடைய பாதாம்புயத்தை வைத்துத் தியானம் பண்ணவேண்டும் என்பதையே அப்படிச் சொன்னார். எம்பெருமான் பல பல திருவுருவங்களிலே மக்களுக்கு அருள் செய்கிறான். அந்தத் திருவுருவங்களின் ஒற்றுமை வேற்று மையையும், உயர்வு தாழ்வையும் அறியப் புகுந்து இது உயர்ந் தது, இது தாழ்ந்தது என்று முடிவுகட்டும் அறிவு நமக்கு இல்லை. தோற்றத்தில் பல பல வேற்றுமைகள் இருந்தாலும் அத்தனை வேற்றுமைகளுக்குமிடையே ஓர் ஒற்றுமை இருக்கிறது. திருவடி களைப் பற்றும் இயல்பு வந்தால் அந்த ஒற்றுமை தெளிவாகும்.

பல உருவம்

நம் நாட்டில் உள்ளவர்கள் ஓர் உருவத்தை மட்டும் கொண் டாடுவது இல்லை. பல பல மூர்த்திகளை வழிபடுகிறார்கள். அந்தக் கடவுளுக்குப் பலவிதமான உருவங்கள் அமைத்திருக் கிறார்கள். எதைப் பார்த்தாலும் வேறுபாடு. முருகன் என்று சொன்னால் அவனுக்குப் பல பல உருவங்கள். மொட்டை அடித்த தலையும், இரண்டு கையும், ஒரு முகமும், கையில் தண்டமும் கொண்ட தண்டபாணியைப் பழனியில் கொண்டாடு கிறார்கள். இன்னும் சில இடங்களில் வள்ளி தேவசேனை சமேதனாக மயில் வாகனத்தில் அமர்ந்து அருள் வழங்கும் உருவத்தில் வழிபடுகிறார்கள். பின்னும் சில இடங்களில்

ஆறுமுகமும் பன்னிரண்டு கரங்களும் உடையவனாக வைத்து வழிபடுகிறார்கள். இப்படி ஒரே தெய்வத்திற்குப் பல உருவங் களும், அவற்றுக்குப் பல மந்திர தந்திரங்களுமாக வைத்துக் கொண்டு வழிபடும் முறையைக் காண்கிறோம்.

திருவள்ளுவர் கருத்து

இவற்றில் பொதுவான பகுதி ஒன்றுமே இல்லையா என்று சிலர் கேட்பது உண்டு. இந்தக் கேள்வி மிகப் பழங்காலத்தில் திருவள்ளுவருக்கு எழுந்தது. அவர் உலகத்தில் பல பல வகையான வாழ்க்கை முறை இருந்தாலும், பலவகை இயல் புள்ள மக்கள் இருந்தாலும், எல்லோருக்கும் பொதுவாக ஒரு நூல் இயற்றவேண்டுமென்று விரும்பினார். எல்லாக் காலத்துக்கும், எல்லாச் சாதியினருக்கும் எல்லா நாட்டவருக்கும் பொதுவான அந்த நூலின் தொடக்கத்தில் கடவுளை வழிபட வேண்டும் என்பதை வற்புறுத்தப் புகுந்தார்.

"அகரம் முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று தொடங்கினார். இறைவனை வணங்கவேண்டுமென்று சொல்ல வந்தவர் அந்த இறைவனைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும் அல்லவா? மனதாலும், வாக்காலும், உடம்பாலும் வழிபாடு செய்ய வேண்டுமென்பதைக் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் சொல்கிறார். உடம்பினாலே வணங்குவதற்குத் திருவுருவம் வேண்டும். மனத்தினாலே நினைப்பதற்கும் வேண்டும். ஆகையால் இறைவனுடைய திருவுரும் இப்படி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியம் நேர்ந்தது.

அவனுடைய திருவுருவத்தை எப்படிச் சொல்வது? இறை வனை வழிபடும் நிலைக்கு ஏற்ற உருவங்கள் இல்லை என்ற சங்கடம் இல்லை. பல உருவங்கள் இருப்பதனால் எதைச் சொல் வது என்ற சங்கடந்தான் எழுந்தது. சிங்கமுகம் உடையவன் என்று சொன்னால் திருமாலைக் குறிக்கும். கொன்றையும் பிறையும் சூடிய கோலத்தைச் சொன்னால் சிவனைக் குறிக்கும். வேலை யும் சேவலையும் சொன்னால் முருகனைக் குறிக்கும். ஆனை முகன் என்றால் விநாயகனைக் குறிக்கும். நான்கு முகம், ஐந்து

முகம் என்று சொல்லிக் கொண்டு போனால் வெவ்வேறு கடவுள் என்பார்கள். இப்படிப் பலவகை உருவங்கள் இறைவனுக்கு இருப்பதாக அன்பர்கள் போற்றி வணங்கும்போது, இவற்றி னிடையே பொதுவாக உள்ளதைச் சொன்னால் எல்லாவற்றையும் சொன்னதாக ஆகிவிடும். பொதுமையில் அமைந்தது எது என்று வள்ளுவர் ஆராய்ந்தார்.

இந்தச் சங்கடத்தில் கடவுளுக்கு உருவமே இல்லை என்று சொல்லிவிடலாம் என்று தோன்றி இருக்கலாம். கண்ணும் மன மும் படைத்த மனிதன் வணங்குவதற்குப் பெயரும் உருவமும் அவசியம் வேண்டுமென்ற தத்துவம் தெரிந்தவர் அவர். கடவு ளுக்கு உருவம் உண்டு என்றும், அந்த உருவத்தை வணங்க வேண்டும் என்றும் சொல்ல எண்ணினார். எந்த உருவத்தைச் சொல்வது என்பதில்தான் சங்கடம் உண்டாயிற்று.

பொதுவான அடிகள்

முகமும் வடிவும் வெவ்வேறாக இருந்தாலும் எல்லா உருவங்களுக்கும் பொதுவாக இரண்டு அடிகள் இருக்கின்றன. முகம் எப்படி இருக்கிறதோ அதற்கு ஏற்றபடி கரங்கள் இருக்கும். நான்கு முகத்திற்கு எட்டுக் கரங்கள், ஆறுமுகத்திற்குப் பன்னிரண்டு கரங்கள், ஐந்து முகத்திற்குப் பத்துக் கரங்கள் என்ற வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு அடிகளைப் பொறுத்த வரையில் இல்லை. முகமும், உடம்பும், திருத்தோள்களும் வெவ்வேறாக இருந்தாலும் இறைவனுடைய வடிவங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவாக அமைந்தவை இரண்டு திருவடிகள்.

வேடிக்கையாகக் குழந்தைகளுக்குச் சில கணக்குக் கேள்விகளைப் போடுவது பெரியவர்கள் வழக்கம். அப்படி ஒரு குழந்தையிடம் போய், "ஒரு முகத்திற்கு இரண்டு கை, இரண்டு கால்; ஆறு முகத்திற்கு எத்தனை கைகள், எத்தனை கால்கள்," என்று கேட்க, அந்தக் குழந்தை யோசிக்காமல் விடை சொன்னால், "பன்னிரண்டு கைகள், பன்னிரண்டு கால்கள்" என்று சொல்லும். யோசித்துச் சொன்னால். "பன்னிரண்டு கைகள், இரண்டு கால்கள்" என்று சொல்லும். இங்கே பெருக்கல் வாய்பாட்டுக்கு வேலை இல்லை. எத்தனை முகங்களானாலும், எத்தனை கரங்களானாலும் அடிகள் மாத்திரம் இரண்டே.

திருவிடைக்கழிப் பிள்ளைத்தமிழ்

இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் ஆசிரியருக்கு ஆசிரியராகிய மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் திருவிடைக் கழிப் பிள்ளைத் தமிழில் பாடி இருக்கும் ஒரு பாட்டு நினைவுக்கு வருகிறது. திருவிடைக் கழி என்பது சோழ நாட்டில் முருகன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களில் ஒன்று. திருவிடைக்கழி முருகன்மேல் மகாவித்துவான் அவர்கள் ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார். அதில் சிற்றில் பருவத்தில் ஒரு பாட்டு வருகிறது. சின்னஞ்சிறு குழந்தையாகிய எம்பெருமான், பெண் பிள்ளைகள் கட்டிய வீடுகளைக் காலால் சிதைக்கிறான். அதைக் கண்டு அந்தக் குழந்தைகள் எம்பெருமானிடம், ''எங்கள் சிற்றிலைச் சிதைக்கவேண்டாம்'' என்று சொல்கிறார்கள். ''சிறியேம் சிற்றில் சிதையேலே'' என்று முடியும் பாடல்கள் அந்தப் பருவத்தில் உள்ளன. அந்தக் குழந்தைகள் சொல்வதாக ஓர் அழகான கற் பனையைப் பிள்ளையவர்கள் அமைத்திருக்கிறார்கள்.

முருகனைப் பார்த்து அந்தக் குழந்தைகள் சொல்கிறார்கள். ''எம்பெருமானே, உன்னுடைய தாயாகிய பார்வதி தேவி எங்களைப் போன்ற பெண். ஆகையால் முன் காலத்தில் எங்களுக்கு ஒரு நன்மையைச் செய்திருக்கிறாள். சரவணப்பூம் பொய்கையில் முதல் முதலாக உன்னைக் காணும் பொருட்டுச சிவபெருமான் பார்வதியுடன் வந்தான். அம்மை உன்னைக் கண்டவுடன் அன்பு மிகுந்து ஆறு குழந்தைகளாக இருந்த உன்னை அப்படியே எடுத்து அணைத்தாள். தாமரைப் பூக்களில் தனித்தனிக் குழந்தையாக ஆறு உருவம் எடுத்து நீ விளையாடிக் கொண்டிருந்தாய். அந்தப் பெருமாட்டி சேர்த்து ஓர் உருவாக்கிய தால் கந்தன் என்ற திருநாமத்தை நீ பெற்றாய். அப்போது ஆறு குழந்தைகளும் ஒன்றாகிய திருவுருவத்தில் நீ காட்சி அளித்தாய். அந்தக் கோலத்தில் ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளும் அமைந் தன. எம்பெருமாட்டி முகம் ஆறினுக்கு ஏற்பக் கை ஆறிரண்டு செய்தது போலக் கால் ஆறிரண்டையும் அப்படியே வைக்க வில்லை. இரண்டு கால்களே இருக்கும்படி அருள் பாலித்தாள். இப்படிப் பார்வதி தேவி செய்ததற்குக் காரணம், நாங்கள் சிற்றில் இழைத்தால் பன்னிரண்டு கால்களும் துன்புறுத்தும் என்பதை எண்ணித்தான் இருக்கவேண்டும். உண்மையில் இப்போது

இரண்டு கால்கள் இருந்துங்கூட அவை பண்ணுகின்ற குறும்பு பொறுக்க முடியாமல் இருக்கிறதே!'' என்று அவர்கள் சொல்வதாக அந்தப் பெரும் புலவர் பாடியிருக்கிறார்.

**''நையா நின்ற சிறுமருங்குல் நங்கை உமையாள் பரமனொடும்
நறுநீர்ப் பொய்கைத் தடங்கரைவாய் நண்ணிமுகமா றினுக்கேற்பக்
கையா றிரண்டு செய்ததுபோல காலா றிரண்டு புரியாமல்
கருதி இரண்டே புரிந்தனள்முற் கடையேம் செய்த நல்வினையால்
மெய்யாயிரண்டா யிருந்துமவை விளைக்கும் குறும்பு பொறுக்கரிதா
விளைந்த தினியாம் செயலென்னே வீதி தோறும் விடாதமர்ந்து
செய்யாள் மகிழும் இடைக்கழிவாழ் செல்வா! சிற்றில் சிதையேலே!
சிந்திப் பவர்உள் ளூறமுதத் தெளிவே, சிற்றில் சிதையேலே,''**

இந்தப் பாட்டில் முருகப் பெருமானுக்கு ஆறுமுகங்களும் அந்த முகங்களுக்கு ஏற்பப் பன்னிரண்டு திருக்கரங்களும் இருந்தாலும், பெருக்கல் வாய்பாட்டு முறையில் பன்னிரண்டு கால்கள் அமையவில்லை, இரண்டு கால்களே உள்ளன என்ற கருத்து அமைந்திருக்கிறது.

**''முகமா றினுக்கேற்பக்
கையா றிரண்டு செய்ததுபோல் காலா றிரண்டு புரியாமல்
கருதி இரண்டே புரிந்தனள்.''**

இப்படித்தான், முகம் எப்படி இருந்தாலும், கைகள் எப்படி இருந்தாலும், இறைவனுடைய திருவுருவங்களில் கால்கள் எப்போதும் இரண்டாகவே அமைந்திருக்கின்றன. முகம் முதலியவற்றில் வேறுபாடு இருந்தாலும் திருத்தாள் தாமரை போல ஒரே மாதிரி இருக்கிறது.

வள்ளுவர் கண்ட வழி

இந்த உண்மையை வள்ளுவர் உணர்ந்தார். 'நாம் கடவுளுடைய உருவத்தைப் பற்றிச் சொல்லவேண்டும். ஆனால் வேறுபாடுள்ள உருவங்களைச் சொல்லக் கூடாது. எல்லா வற்றுக்கும் பொதுவாக இருக்கும் பகுதியைச் சொன்னால் போதும் என்று எண்ணினார். அடியார்களுக்குப் புகல் இடமாக நிற்பது திருவடியே. திருவடியைச் சொன்னால் ஆண்டவனின் உருவம் முழுவதையும் சொன்னதாக ஆகும்.

"கோள்இல் பொறியிற் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்றார். அந்தத் திருவடியைச் சேர்ந்தவர்கள் பிறவிப் பெருங் கடலிலே நீந்துவர் என்றும் சொன்னார்.

அன்பர்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பவை ஆண்டவனுடைய திருவடிகள். எம்பெருமான் திருவருள் நெறியில் செல்பவரைத் தோளார், கையார் என்று சொல்லாமல் அடியார் என்று சொல்வதற்குக் காரணமே அவர்களுக்கு மற்றப் பகுதியைக் காட்டிலும் திருவடியில் நோக்கம் அதிகம் என்று காட்டுவது தான். இறைவனுடைய பாதாம்புயத்தில் அடியார்களுடைய உள்ளமாகிய வண்டுகள் உலவும். அடியார்களுடைய உள்ளம் இறைவனுடைய திருவடியைப் பற்றிக் கொண்டால் அவர்களுக்கு வேண்டின எல்லாம் கிடைக்கும். இந்த நுட்பத்தைத் தெரிந்து கொள்ளாமல் பலர் திண்டாடுகிறார்கள்.

இதனைப் பாரதத்தில் வருகின்ற வரலாறு ஒன்று தெரிவிக் கிறது.

பாரத நிகழ்ச்சி

பஞ்சபாண்டவர்கள் காட்டு வாழ்க்கையை முடித்துக் கொண்டு ஓர் ஆண்டு தலைமறைவாக இருந்துவிட்டு வெளி வந்தார்கள். பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தங்களுக்கு உரிய நாட்டை மீட்டும் தங்களுக்குக் கொடுக்கும் படியாகக் கேட்டு வரும்படி தருமபுத்திரர் ஒரு முனிவரைத் துரியோதன னிடம் தூது அனுப்பினார். அப்போது துரியோதனன் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. திருதராஷ்டிரன் அந்த முனிவரைப் பார்த்து, "என் பிள்ளைகள் பொல்லாதவர்கள். தருமன் நல்லவன் ஆயிற்றே. அவன் எங்கே வாழ்ந்தாலும் அதுதான் அஸ்தினாபுரம். இத்தனை ஆண்டுகளாகக் காட்டில் வாழ்ந்து பழகினவர்களுக்கு அங்கேயே இருப்பதில் துன்பம் ஒன்றும் இல்லை. எதற்காக மறுபடியும் இந்தப் பொல்லாத பிள்ளைகளோடு சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்?" என்று சொல்லி அனுப்பினான். அதனைக் கேட்ட தருமபுத்திரர், "பெரியப்பா சொல்வது நியாயந்தானே? நாம் உறவினர்களோடு சண்டை போட்டுக் கொண்டு அவர்களை அழித்து விட்டு ஏன் நாட்டில் வாழவேண்டும்? காட்டில் வாழ்ந்தால் நல்லதுதான்" என்று கூறினார்.

கண்ணபிரான் அவருடைய பேச்சைக் கேட்டான். ''நீ சொல்வது சரிதான். ஆனால் உன்னுடைய தம்பிமார்கள் என்ன சொல்வார்களோ? அன்று திரௌபதியின் துகிலைத் துச்சாதனன் உரிந்தபோது அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சபதம் செய்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் முற்றுப் பெற வேண்டும். திரௌபதி தன் கூந்தலை விரித்துக்கொண்டு நிற்கிறாள். அந்தக் கூந்தலை அவள் முடித்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்யாமல் நீங்கள் மீட்டும் காட்டுக்குப் போய் விட்டால் உலகத்தில் உள்ளவர்கள் ஏசமாட்டார்களா?'' என்று கேட்டான். தருமபுத்திரர் யோசித்து, ''அப்படியானால் நீ ஒரு முறை தூது போய்விட்டு வா. அவர்கள் பாதி நாடு தரட்டும். இல்லாவிட்டால் ஐந்து ஊர் தரட்டும். அவையும் இல்லாவிட்டால் ஐந்து வீடுகள் தரட்டும். ஒன்றும் இல்லை என்று மறுத்தால் போர் செய்வோம் என்று சொல்லிவிட்டு வா'' என்றார்.

கண்ணன் தருமபுத்திரருடைய தம்பிகளின் கருத்தைக் கேட்கத் தொடங்கினான். வீமனைக் கேட்டபோது அவன் மிகவும் சினந்து, ''என்னைத் தூது அனுப்புங்கள். எல்லோரையும் என் கதைக்கு இரையாக்கி வருகிறேன்'' என்று கோபத்தோடு சொன்னான். அருச்சுனனும் மிக்க வீறுடன் பேசினன். நகுலனும் சினந்து அப்படியே சொன்னான். பிறகு சகாதேவனிடம் வந்து, ''உன் கருத்து என்ன அப்பா?'' என்று கேட்டான் கண்ணன்.

சகாதேவன் கூற்று

சகாதேவன் சிறந்த ஆத்ம ஞானி. மற்றவர்கள், 'நம்முடைய ராஜ்யம், அவர்களுடைய ராஜ்யம்' என்று வேறுபடுத்திப் பார்க்கின்ற அறிவும், அதனால் கோபமும், பகையும் கொண்டிருந்தார்கள். சகாதேவன் சத்தியத்தை உணர்ந்தவன்; அவன் சொன்னான்; ''கோபாலா, இனி என்ன நடக்கும் என்பது உனக்குத் தெரியாதா? உன் எண்ணம் எதுவோ அதுதான் என்னுடைய எண்ணம்'' என்று சொன்னான். இதைக் கேட்ட கண்ணன், 'எல்லோரையும் போல இவன் பேசவில்லையே! இவனிடம் ஏதோ நுட்பமான கருத்து இருக்கிறது. அதை இரகசியமாகத் தெரிந்து கொள்ளவேண்டும்' என்று எண்ணி அவனைத் தனியே அழைத்துச் சென்றான்.

சென்று அவன் கருத்தைக் கேட்டபோது, ''கண்ணா, உன்னுடைய கருத்து எனக்குத் தெரியும். துரியோதனனுக்கு வெற்றி வருவதோ, பாண்டவர்களுக்கு வெற்றி வருவதோ உன்னுடைய நோக்கம் அன்று. பல காலத்திற்கு முன்னாலேயே நிலமகள் உன்னிடம் வந்து அழுதாள். சுமை தாங்கவில்லை என்று அவள் முறையிட்டதைக் கேட்டு நீ பூபாரம் தீர்க்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறாய். அந்த உண்மை எனக்குத் தெரியும்'' என்றான்.

"நீபா ரதவமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா!!"

இதனைக் கண்ணன் கேட்டவுடன், ''பாரதப்போர் வராமல் ஏதாவது வழி இருந்தால் சொல்'' என்று கேட்டான். அதற்குச் சகாதேவன் சொன்னான்.

"பாராளக் கன்னன்இகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலில் தளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபா ரதமென்றான்."

''துரியோதனனோ, தருமனோ அரசாள்வது என்று இல்லாமல் கர்ணன் அரசாள வேண்டும். அதற்கு முன்பு, அவன் அருச்சுனனைக் கொல்லவேண்டும். திரௌபதியின் கூந்தலை முடிப்பதா, விரிப்பதா என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் அவளது குழலைக் களையவேண்டும். பின்பு நான் உன்னைக் கட்டவேண்டும். இவை நடைபெற்றால் பாரதப் போர் வராமல் காக்கலாம்'' என்றான்.

இப்படி வேறு யாராவது சொல்லி இருந்தால், நாக்கில் நரம்பு இல்லாமல் பேசுகிறானே என்று தோன்றும். தமையன், மனைவி என்ற பற்றுக்களை விட்ட ஞானி சகாதேவன் ஒருவனால்தான் இப்படிப் பேசமுடியும். அவனுடைய உயர்ந்த நிலையைக் கண்ணபிரான் தெரிந்து கொண்டுதானே அவனைத் தனியே அழைத்துக் கேட்டான்?

சகாதேவன் சொன்னதைக் கேட்ட கண்ணன் சிரித்துக் கொண்டான்; ''நீ சொன்னது எல்லாம் சரி. ஒருகால் முன் சொன்ன எல்லாம் நடந்தாலும் நடக்கலாம். என்னை நீ எப்படிக் கட்டுவாய்?'' என்று கேட்டான். சகாதேவன் உடனே விடை சொன்னான்.

''மற்ற எல்லாம் தெரிந்து கொண்ட மாதிரி உன்னை நீ தெரிந்து கொள்ளவில்லையே, கண்ணா! யசோதையால் உன்னைக் கட்ட முடியாமல் போயிற்று என்பதை யோசித்து இப்படிப் பேசுகின் றாய் போலும்! நீ கண்ணனாக எழுந்தருளி இருக்கும் இந்த உருவம் மாத்திரம் அன்று. உன்னுடைய இயல்பான உருவத்தை யும் எனக்குக் காட்டு. நான் கட்டி விடுகிறேன்'' என்றான். கண்ணன் சகாதேவனுடைய மன வலிமையைத் தெரிந்து கொள்ளும் பொருட்டுப் பல பல வடிவங்களைக் கொண்டு நின்றான்.

''மாயவனும் அன்பன் மனமறிவான் கட்டுகஎன்
றாய வடிவுபதி னாறா யிரங்கொண்டான்.''

கண்ணபிரான் பல பல உருவங்களிலும் தோற்றம் அளித்தான். சகாதேவன் அந்த வடிவங்களை எல்லாம் கண்டு, 'நாம் தெரியாமல் சொல்லிவிட்டோமே! எப்படிக் கட்டுவது?' என்று மயங்கவில்லை.

சகாதேவன் செயல்

ஆலமரம் நெடுந்தூரம் தழைத்துப் பரவிக் கிளை விட்டிருந் தாலும் அதன் அடிமரத்தில் கோடரியால் போட்டால் மரமே பட்டுவிடும். அப்படி அத்தனை உருவங்களுக்கும் மூலமாக உள்ள தோற்றம் எது என்பதைச் சகாதேவன் நன்கு உணர்ந்தவன். அதுமாத்திரம் அன்று, எங்கே கட்ட வேண்டுமென்பதையும் தெரிந்து கொண்டிருந்தான். மூலமாகிய தோற்றத்தை உள்ளத்தில் வைத்து அந்தப் பெருமானுடைய திருவடிகளைத் தன்னுடைய கருத்தினால் பிணைத்துவிட்டான்.

''தூயவனும் மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகும்
தாய அடியிணைகள் தன்கருத்தி னாற்பிணித்தான்.''

இப்போது கண்ணன் கட்டுண்டு கிடந்தான். மற்றப் பெரிய வர்களுடைய தந்திரத்தினாலே கட்டுப்படாத ஆண்டவன், யசோதை கட்டிய கயிற்றுக்கு அகப்படாத ஆயன், வேதங் களினாலும் சாஸ்திரங்களினாலும் காண முடியாத கண்ணன், இப்போது மிக எளிதில் சகாதேவனால் கட்டுண்டான். கண்ணனுக்கே வியப்பு உண்டாகிவிட்டது. நெடுநாள் காணமுடியாமல் கண்ட ஒருவர் தம்முடைய அன்பனை இறுக்கிப் பிணித்து அணைத்துக்கொண்

டால் அந்த அணைப்பு ஒரு வகையில் இன்பமாக இருக்கும்; மற்றொரு வகையில் மூச்சுத் திணற அடிக்கும். இந்த நிலையில் கண்ணபிரான் இருந்தான். "சகாதேவா, என்னை அன்பினாலே நன்கு அறிந்து எப்படிக் கட்டவேண்டுமென்ற உண்மையைத் தெரிந்து என்னுடைய காலைக் கட்டிவிட்டாயே! நீ கட்டினது மிகவும் நல்லது. நீ நல்லவன். நான் இப்போது அஸ்தினா புரத்திற்குத் தூது போக வேண்டும். கட்டின காலை விடு அப்பா" என்று கெஞ்சினான்.

"அன்பாலின் றென்னை அறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னை இனிவிடுக என்றுஉரைப்ப."

அவன் பெற்ற வரம்

சகாதேவன் மிகச் சிறந்த தந்திரசாலி. கையிலே அகப்பட்டுக் கொண்ட பொருளைப் பயன்படுத்தாமல் விடுவானா? "கண்ணா, இப்போது நீ எனக்கு ஒரு வரம் தரவேண்டும். பாரதப் போரில் எல்லோரையும் அழித்துப் பூபாரம் தீர்க்கத் திருவுள்ளம் கொண் டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். இப்போது நான் கேட்கும் வரம் ஒன்று உண்டு. உன் திருவுள்ளக் கருத்தில் சற்றே நெகிழ்ச்சி கொள்ள வேண்டும். உன்னையே சரண் என்று அடைந்திருக்கிற எங்கள் ஐந்து பேரை மாத்திரம் உன்னுடைய கடைக் கண்ணால் காப்பாற்றி அருளவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

"வன்பா ரதப்போரில் வந்தடைந்தேம் ஐவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டும் நெடுமாலே."

யாருக்கும் கட்டுப்படாத கண்ணபிரானை உள்ளத்தில் தோன்றிய மெய்யன்பினாலே பிணைத்து அவன் திருவடியைக் கட்டி, அந்தச் சமயத்தில் வரம் கேட்டு வாங்கிக் கொண்டான் சகாதேவன். பின்னால் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் பதினெட்டு நாள் பெரிய போர் நடந்தது. மிகக் கடுமையாக நடந்த அந்தப் போரில் ஒவ்வொருவருடைய வீரமும் வெளியா யிற்று. போர் நடந்து அதில் அருச்சுனன் முதலியவர்கள் தம்முடைய வீரத்தை வெளிப்படுத்த, அதனால் பஞ்ச பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது என்றுதான் பாரதத்தைப் படிக்கையில் தோன்று கிறது. ஆனால் அந்தப் போர் நடப்பதற்கு முன்னாலேயே பாரதப்

போரின் முடிவு ஒரு சிறிய அறையில் தீர்மானம் ஆயிற்று. கண்ணபிரானுடைய இரண்டு திருவடிகளைத் தன் கருத்தினாலே பிணைத்த சகாதேவன் அந்தப் பெருமானிடம் கேட்டுக் கொண்ட வரந்தான் பாரதப் போரில் பஞ்சபாண்டவர் களுக்கு வெற்றியை வாங்கித் தந்தது. அவன் அப்போது விண்ணப்பித்த விண்ணப்பமே பிறகு போர்க்களத்தில் அருச்சுனனின் காண்டீபத்திற்கும், தருமனின் அறத்திற்கும் வலிமை தந்தது. திரைக்கு மறைவில் பச்சைப் பசுங்கொண்டலைச் சகாதேவன் பிணித்து அவன் திருவடியைப் பற்றிக் கொண்டு அன்பின் வலிமையைக் காட்டிய செயல்தான் அந்த வெற்றிக்கு மூலம். தூயவனாகிய சகாதேவ னுக்குத்தான் அந்தப் பெருமானுடைய மூலம் எங்கே இருக்கிற தென்று தெரிந்தது. எத்தனை ஆயிரம் திருவுருவங்கள் எடுத் தாலும் அவை எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பன இரண்டு திருவடிகள் என்பதை ஞானியும், அன்பனுமான சகாதேவன் நன்கு உணர்ந்து தன் கருத்தைச் செலுத்திக் கட்டினான். புத்தியை வாங்கி இறைவனுடைய பாதாம்புயத்தில் புகட்டி அன்பால் கட்டும் ஆற்றல் சகாதேவனைப் போன்ற பெரியவர்களுக்கு உண்டு.

வள்ளுவர்க்கும் உடம்பாடு

ஆகவே, கடவுள் பலபல உருவங்களில் இருந்தாலும், அந்த உருவங்களில் பலபல வேறுபாடுகள் இருந்தாலும் எல்லாவற்றுக் கும் மூலமாகவும், பொதுவாகவும் இருப்பவை அவனுடைய திருவடி மலர்கள். அதனால் மற்றவற்றைச் சொல்லாமல் திரு வள்ளுவரைப் போல இந்தப் பாட்டில் அருணகிரியார், "பாதாம் புயத்திற்கு புகட்டி" என்று சொன்னார்.

திருவள்ளுவர் அடியைச் சொன்னதனால் அவருக்கு உருவம் உடம்பாடு என்று தெரிகிறது. திரைக்குப் பின் இரண்டு அடிகள் தெரிகின்றன என்றால் முன்னால் இருப்பவர்களுக்கு அந்த அடிகளைக் கண்ட மாத்திரத்தில் யாரோ உள்ளே இருக்கிறார் என்பது தெரியும். மற்ற அங்கங்கள் தெரியவில்லையே என்று சந்தேகப்படமாட்டார்கள். அப்படியே திருவள்ளுவர் தம்முடைய கடவுள் வாழ்த்தில் இறைவனுடைய இரண்டு அடிகளைச் சொன்னாலும் மற்ற உறுப்புகளும் உண்டென்பது அவருக்கு உடம்பாடு என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மனம் தூங்கும் இடம்

மனம் இப்போது உலகத்தில் ஈடுபட்டுக் கிடக்கிறது. துன்பத்திற்குக் காரணமாகிய சிற்றின்பத்தைத் தரும் பொருள்களில் தூங்கி அவற்றில் கிடைக்கும் துளித் துளி இன்பத்தைப் பெற்று அதில் மயங்கி மீட்டும் பிறவிக்கு ஆதாரமாகிய செயல்களைச் செய்ய முயல்கிறது. அப்படியின்றி இறைவனுடைய திருவடித் தாமரையில் புகுந்து அங்கே தூங்கவேண்டும். அப்போது அதற்கு வேலை இல்லாமல் போய்விடும். நிறைந்த தேனை உண்ட வண்டு அந்தச் சுவையினால் மயங்கிப் போய், பறப்பதும் ஊதுவதும் இல்லாமல், அப்படியே தூங்குவது போல, மனம் இறைவனுடைய பாதாம்புயத்தில் தூங்கவேண்டும். அப்படித் தூங்கினால் செயல் மாண்டு அடங்கிவிடும். செயல் மாண்டு அடங்குவதில் உண்டாகிற இன்பம் பேரின்பம். அதுதான் முத்தி.

புத்தியை வாங்கி நின் பாதாம்புயத்தில் புகட்டி அன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றிலேன்.

இறைவனுடைய திருவடிகளைப் பாதாம்புயம் என்று சொன்னமையினால் அதன்கண்ணே புகுத்தும் புத்தியை வண்டு என்று கொள்ளவேண்டும். இப்படிக் கொள்வதை ஏகதேச உருவகம் என்று இலக்கணத்தில் சொல்வார்கள். புத்தியாகிய வண்டை முருகனுடைய பாதமாகிய தாமரையில் புகும்படி செய்ய வேண்டுமென்பதே அருணகிரிநாதருடைய கருத்து.

3

முத்தி நிலை

முத்தி அல்லது மோட்சம் என்பது சீட்டு வாங்கிக் கொண்டு பிரயாணம் செய்கிற இடம் என்று நினைக்கக் கூடாது. அது ஒரு வகை நிலை. மாயாவிநோத மனோதுக்க வாழ்வில் சிக்கித் திணறு மனிதன் அஞ்ஞானத்தின் விளைவாகிய செயல்களை விடுத்து, ஞான நெறியில் நிற்கவேண்டும். அந்த நெறியில் நன்றாக நடந்து சென்று இந்திரியங்களை அடக்கவேண்டும். இந்திரியங்களுக்குத் தான் அடிமையாகிவிடாமல் அவற்றைத் தனக்கு அடிமையாகக் கொண்டு ஒருமுகப்பட்டு நிற்கவேண்டும். இன்ப துன்பங்கள்

என்ற வேறுபாடின்றி, மேடுபள்ளம் என்ற வேற்றுமை இல்லாத நிலையை அடையவேண்டும். அத்தகைய நிலையில் அவன் நின்றால், பசை யாவும் அற்று நின்றால், அப்போது அவனுக்கு முத்தி சித்திக்கும். அந்த இடத்தில் வீடு கிடைக்கும். அந்த நிலையை,

> **''நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்து**
> **ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து**
> **சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்**
> **அன்றே அப்போ தேவீ டதுவே வீடு வீடாமே''**

என்று நம்மாழ்வார் சொல்கிறார். ''அற்றது பற்றெனில் உற்றது வீடு'' என்றும் சொல்கிறார். முத்தி என்பது ஒரு நிலைவகையே யொழிய இடவகை அன்று. மனம் அழுக்கெல்லாம் போய்த் தானே முதலில் தூயதாகி அப்பால் தானே அழிகின்ற சமயத்தில் கிடைக்கின்ற இன்ப நிலையே முத்தி.

இந்தப் பாட்டில், ஒரு பொருளைக் கொடுத்துவிட்டு ஒரு பொருளை வாங்கவேண்டுமென்று சொல்வது போல அருண கிரியார் முருகனிடம் விண்ணபித்துக் கொள்கிறார். 'இன்ன கடையில் இவ்வளவு பணத்தைக் கொடுத்து விட்டு இன்ன சரக்கை வாங்கிக் கொள்ளும் சக்தி எனக்கு இல்லையே!' என்று கூறுவது போலச் சொல்லியிருக்கிறார்.

அன்பும் அறிவும்

''உன்னுடைய பாதாம்புயத்திற்கு என்னுடைய மனத்தை அனுப்பி அங்கே அன்பைக் கொடுத்து முத்தி என்ற பொருளை வாங்குவதற்கு நான் தெரிந்து கொள்ளவில்லையே!'' என்பது அவர் கூறுவது. அன்பினால்தான் இறைவனுடைய திருவருளை வாங்கிக் கொள்ளலாம்.

> **''அருள்என்னும்அன்பீன் குழவி''**

என உலக இயலை நினைந்து வள்ளுவர் சொல்கிறார். இறைவனுடைய அருளைப் பெறுவதற்கும் அது பொருந்தும். நம்மிடத்தில் அன்பு உண்டானால் இறைவன் நமக்கு அருளைப் பாலிப்பான். நம் அறிவு வெறும் அறிவாக நில்லாமல் அன்பு மயமாக

மாறவேண்டும். அதனை எண்ணியே புத்தி இறைவனுடைய திருவடியைச் சார்ந்து அன்பு மயமாக வேண்டுமென்று இந்தப் பாட்டில் சொல்கிறார்.

புத்தியை வாங்கி நின் பாதாம்புயத்திற் புகட்டி அன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றிலேன்.

வெறும் அறிவினாலே இன்பத்தைப் பெற இயலாது. அதற்கு எல்லை உண்டு. இறைவனுடைய திருவடி ஒன்றுதான் நமக்குப் புகல் இடம் என்று அறிவினால் தெரிந்து, அதனைச் சார்ந்து பின்பு அங்கே ஒட்டிக் கொள்ளவேண்டும். சாரும் மட்டும் அறிவுக்கு வேலை உண்டு. ஒட்டிக் கொள்வதற்கு அன்பினால் தான் முடியும்.

இப்போது நம்முடைய அறிவு உலகிலுள்ள பொருள்களை ஆராய்ந்து அவற்றைச் சிறந்தனவாகக் கருதுகின்றது. பின்பு அவற்றோடு ஒட்டிக் கொள்கிறது. இது பற்றிய அறிவும் பற்றும் மேன்மேலும் பிறவியை எடுப்பதற்குக் காரணம் ஆகின்றன. அப்படியின்றி அந்த அறிவு வேறு எங்கெங்கோ போகும் போக்கை மாற்றி அதனை நம்முடைய கையில் வாங்கிக் கொண்டு இறைவனுடைய பாதாரவிந்தத்திலேயே செலுத்த வேண்டும்.

வேலின் பெருமை

''நான் புத்தியை அது போகும் போக்கிலிருந்தும் இழுத்து வாங்குவதற்குரிய வழியைத் தெரிந்து கொள்ளாமல் திண்டாடுகிறேன். தவறான காரியத்தைச் செய்கிறேன். இதனை மாற்ற வேண்டும். என்னால் மாற்ற முடியவில்லை. என்னைத் தண்டித்து ஆட்கொள்ள மாட்டாயா?'' என்று முறையிடத் தொடங்கினார் அருணகிரிநாதர்.

''தண்டிப்பதற்குரிய அருமையான வேல் உன் திருக்கரத்தில் இருக்கிறதே! அதைக் கொண்டு தண்டித்து என்னைத் திருத்த வேண்டும்'' என்று முதலில் சொல்ல எண்ணினார். ஆனால் பிறகு அப்படிச் சொல்வது தவறு என்று தோன்றியது. ''உன்னுடைய வேல் மிகப் பெரிய தடையை நீக்குவதற்கு வேண்டும். அதைப் பிரயோகம் பண்ணுவதற்கு ஏற்ற தகுதி மிகப் பெரிய அசுரர்களுக்குத்தான் உண்டு. என் புத்தியைத் திருத்துவதென்று நீ நினைத்தால் மிக எளிதில் ஆகிவிடும். இதற்கு உன்னுடைய

வேலைப் பிரயோகம் செய்ய வேண்டுமென்று கேட்பது தகுதி யன்று. மிக்க பழைய சூரன் நடுங்கும்படியாக நீ வைத்திருக்கும் அந்த வேலை வாங்குவதற்கு என் புத்தி தகுதி உடையதா?'' என்று கேட்கிறார்.

முது சூர் நடுங்கு அச்
சத்தியை வாங்கத் தரமோ?

''என் புத்தியை வசப்படுத்தி உன் பாதத் தாமரையிலே புகட்டி அன்பாய் முத்தியை வாங்கத் தெரியாத என் நிலையை மாற்றி ஒறுத்து ஆட்கொள்வதற்காக, உன் கையிலுள்ள சத்தியாகிய வேலை விடு அப்பா என்று நான் சொல்வேன். நீயும் என்னுடைய விண்ணப்பத்திற்காக வேலை விடுக்கத் தயங்க மாட்டாய். ஆனால் அது நியாயமான காரியம் ஆகுமா? சிறு முள்ளால் களைவதைக் கோடரியைக் கொண்டு களைவது முறையாகாது. அதனால் எனக்கு நன்மை உண்டானாலும் வேலுக்குப் பெருமை குறைந்துவிடும். அது சாமானிய வேலாயுதமா? அதன் பெயரைக் கேட்டாலே சூரபன்மன் நடுங்கினான். அதனுடைய பெருமையைக் கந்தபுராணம் முதலிய நூல்கள் எவ்வளவு சிறப்பாகக் கூறு கின்றன! அத்தகைய பெரிய படையை எனக்கு உதவியாகவிட வேண்டுமென்று கேட்பது முறை அன்று'' என்கிறார்.

அவன் திருவுள்ளம்

ஆனால் திருந்த வேண்டுமே, என்ன செய்வது, மலை தவிடு படும்படியாகக் குத்தியவன் முருகன்; சூரனைக் குத்தவும் கிரௌஞ்ச மலையைக் குத்தவும் பயன்படுத்திய வேலை உடையவன். அதற்கு இப்போது வேலை வைக்கக் கூடாது. பின்னே என்ன செய்வது என்ற எண்ணம் அருணகிரிநாதருக்குத் தோன்றியது. 'எம்பெருமான் என்னை ஆட்கொள்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. திருந்த வேண்டும் என்று எனக்கு உள்ள ஆவலைக் காட்டிலும் அவனுக்குள்ள ஆவல் மிகுதி யானது. என்னைத் திருத்து என்று நான் விண்ணபித்துக் கொண் டாலே போதும். இப்படித் திருத்து என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நோயாளி எனக்கு இன்ன மருந்து கொள் என்று கேட்பது நியாயம் ஆகாது. இவனுக்கு இன்ன மருந்து கொடுக்கவேண்டுமென்பது மருத்துவனுக்குத் தெரியும். அதுபோல்

ஆண்டவன் என்னைத் திருத்துவதற்கு ஒரு வழி வைத்திருப்பான். அதை அவனுடைய திருவுள்ளத்திற்கு விட்டுவிட வேண்டும்' என்ற நினைவு பிறகு வந்தது. 'முருகா, என்னைத் திருத்துவதற்கு என்ன வழி நீ நினைத்திருக்கிறாய்?'' என்று கேட்கிறார்.

குவடு தவிடுபடக்
குத்திய காங்கேயனே! வினையேற்கு என் குறித்தனையே?

இறைவனிடம் இன்னது வேண்டுமென்று அறிவிக்கும் இயல்பு பக்தர்களுக்கு இல்லை; ''எனக்கு இன்னது வேண்டு மென்பது உனக்கே தெரியும். நீ என்ன செய்கிறாயோ அதுவே எனக்கு இன்பம்'' என்பது அவர்களது மனோபாவம்.

''வேண்டத் தக்கது அறிவோய்நீ''

என்று மணிவாசகப் பெருமான் பேசுகின்றார். 'கேளாமல் கொடுக் கின்ற பெரும் கொடையாளன் முருகன். அத்தகைய பெருமானிடம் நீ இது செய் என்று நான் சொல்வது மிகை. அவனுடைய திரு வுள்ளம் ஏதோ?' என்று அருணகிரிநாதர் எண்ணுகிறார்.

''முருகா, நீ மலை தவிடு படும்படி குத்திய பெரிய வீரன். கங்கையின் மகன். அடியார்களை இன்னபடி ஆட்கொள்ள வேண்டும் என்று நீ திருவுள்ளத்தில் கொண்டிருப்பாய். அந்த வகையில் அடியேனுக்கும் ஒரு வழி வைத்திருப்பாய். உன் திருவுள்ளம் யாதென்று அறியேன். நீ என்ன எண்ணி இருக்கிறாய்? நான் என்னுடைய முயற்சியினால் நன்மை பெற வேண்டுமென்பது தெரியாமல் அலைகிறேன். என்னுடைய அறிவை அது போகிற போக்கில் விடாமல் மாற்றி, உன்னுடைய திருவடி மலரில் புகுத்தி அன்பு மயமாக்கி அதனால் முத்தியைப் பெறுவதற்கு உரிய வழியை நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் செய்கிற பிழைக்குத் தண்டனையாக உன்னுடைய வேலை நீ பிரயோகம் பண்ணவேண்டுமென்று கேட்கத் தோன்றுகிறது. ஆனால் அது முறை அன்று. மிக்க பழைய சூரன் நடுங்கும்படியாக விட்ட வேல் அது. அத்தகைய வேலுக்குத் தக்க இலக்கு அன்று இது. அதனை வாங்க இது தகுதி ஆகுமா? உன் திருவுள்ளம் யாதோ அதன்படி நடக்கட்டும்'' என்று அருணகிரிநாதர் இந்தப் பாட்டில் விண்ணப்பித்துக் கொள்கிறார்.



புத்தியை வாங்கிநின் பாதாம்
புயத்திற் புகட்டிஅன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி
லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ?
குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னே!வினை
யேற்கென் குறித்தனையே?

(கிரௌஞ்சமலை தவிடு போலப் பொடியாகும்படி வேலால் துளைத்த காங்கேயனே! என் புத்தியை அது போகும் போக்கில் விடாமல் மாற்றி உன்னுடைய திருவடிகளாகிய தாமரையிலே செலுத்தி அன்பு மயமாகி முத்தியை உன்னிடமிருந்து பெற நான் அறிந்திலேன்; பழைய சூரன் நடுங்குவதற்குக் காரணமான அந்த வேற்படையை நீ விடுவதற்கு என் புத்தி தகுதி உடையதோ? பாவம் உள்ளவனாகிய என்னைத் திருத்த நீ என்ன வழியைத் திருவுள்ளத்தில் கொண்டிருக்கிறாய்?

வாங்குதல் - கைப்பற்றுதல்; போக்கை மாற்றி வளைத்தல். பாதாம்புயம் என்றதனால் புத்தியை வண்டாகக் கொள்ள வேண்டும். அன்பாய் - அன்பு மயமாகி. பழைய காலத்தில் இருந்தவனாதலின் முது சூர் என்றார். நடுங்கு அச்சத்தியை என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். சத்தி - வேல். வாங்க - விட; பிரயோகம் செய்ய. தரமோ - புத்தி தகுதியுடையதா? குவடு - மலை; இங்கே கிரௌஞ்ச கிரி. காங்கேயன் - கங்கையின் மகன். முருகனைக் கங்கை தாங்கி வந்தமையின் இப்பெயர் உண்டாயிற்று; ''ஆயிரமுகத்து நதி பாலனும்'' என்பது திருவகுப்பு. வினை என்பது இரண்டு வினைகளையும் குறித்ததாயினும் இங்கே வினையேன் என்றது பாவி என்றபடி. வினையேற்கு - பாவியாகிய எனக்கு; என்னைத் திருத்துவதற்கு என்பது பொருள். என் - என்ன தந்திரத்தை. குறித்தனை - திருவுள்ளத்தில் கொண்டாய்)

தொண்டர் பெருமை

1

வேலாயுதத்தால் சூரனையும், கிரௌஞ்சமாகிய குவட்டையும் முருகன் குத்திய திருவிளையாடல் அருணகிரி நாதருக்கு மீண்டும் நினைவு வருகிறது. சென்ற பாட்டில் அந்த விளையாட்டை நினைந்தவர் அடுத்த பாட்டிலும் அதனைப் பாடுகிறார். 'சூரனையும் கிரௌஞ்ச மலையையும் வேலினால் அழித்த முருகப் பெருமானுடைய தொண்டர்களைச் சார்ந்தால் தான் நமக்குக் கதி உண்டு' என்ற கருத்தை வைத்துப் பாடுகிறார். தம்முடைய நெஞ்சைப் பார்த்து, ''பாவி நெடு நெஞ்சமே!'' என்று விளிக்கிறார். அவர் சொன்னதை நாம் ஒவ்வொருவரும் சொல்லி நம்முடைய நெஞ்சுக்கு அறிவுறுத்த வேண்டும்.

செல்வமும் வாழ்வும்

மனிதன் எல்லாப் பொருளையும் மதிப்பது இல்லை. பெரும்பாலான மக்கள் மதிப்பது பொருட்செல்வம் ஒன்றைத் தான். ஆனால் இறைவனுடன் தொடர்பு வைத்துக் கொண்டு அவன் திருவருளுக்காக ஏங்கி நிற்பவர்கள் மதிப்பதோ அருட் செல்வம். நாம் நம்முடைய புறக் கண்ணைக் கொண்டு பார்த்து அந்தக் காட்சியை மதிக்கிறவர்கள். இந்தக் கண் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கித்தான் பார்க்கும். காலத்திற்கும் இடத்திற்கும் கட்டுப்பட்டிருக்கும் நாம் அந்த எல்லைக்குள் அடங்கினவற்றையே பார்க்க முடியும். 'இப்போது சோறு வேண்டும்; நாளைக்குச் சோற்றுக்குப் பணம் வேண்டும்' என்று நம்மால் நினைக்க முடிகிறது. நாள்தோறும் சோறு உண்டு நல்ல வீட்டில் வாழ்ந்து ஆடை அணிகளைப் புனைந்து கருவிப் பொருள்களைப் பெற்று வாழ வேண்டுமென்று நினைக்கிறோம். தொடர்ந்து வாழ்க்கை நடைபெறுவதற்குப் பயன்படும் கருவியாவது பொருள் என்று

நமக்குத் தெரிகிறது. அதனால் பணத்தைச் சேமித்து வைக்கிறோம். பணம் சோற்றை உண்ணுகிறார்கள். முதல் நாள் ஆக்கிய சோற்றை நீரில் போட்டு வைத்திருந்து மறுநாளும் உண்பவர்கள் வறியவர்கள். அவர்களும் அந்தச் சோற்றை இரண்டு மூன்று நாளைக்கு வைத்துக் கொள்ள முடியுமேயொழிய நெடுநாள் வைத்திருக்க முடியாது. அப்படி வைத்திருந்தால் சோறு வீணாகி விடும்.

ஆகவே, அவர்கள் பலநாளைக்குப் பயன்படும் அரிசியை வாங்கவேண்டியிருக்கிறது. பிச்சைக்காரனோ ஒவ்வொரு நாளைக்கும் பிச்சைச் சோறு வாங்கி உண்கிறான். அவனைவிட ஒரு வேளை சோறாக்கி அதனை மூன்று வேளைக்குச் சாப்பிடுகிறவன் பணக்காரன். ஒவ்வொரு வேளையும் சூடாகச் சோறாக்கி உண்ணுகிறவன் அவனையும்விடப் பணக்காரன். அந்த அந்த வேளைக்குச் சில்லறையாக அரிசி வாங்குபவனை விட ஒரு மாசத்திற்கு மொத்தமாக மூட்டை அரிசி வாங்கிச் சாப்பிடுகிறவன் இன்னும் பணக்காரன். அதுபோலவே ஆண்டுக்கு வேண்டிய அரிசிக்கு நெல்லாகக் குதிரில் கொட்டி வைக்கிறவன் பெரிய பணக்காரன். நெல்கூடச் சில ஆண்டுகளுக்கே இருக்கும். பல காலத்திற்கும் நெல் விளைந்து பயன்படும் என்று நிலமாக வாங்கிப் போட்டிருப்பவன் எல்லோரையும்விடப் பணக்காரன். அன்றன்று உண்ண வேண்டிய சோற்றுக்கு நெல் அவசியம் ஆதலினால் அந்த நெல்லை விளைக்கின்ற நிலத்தையே பழைய காலத்தில் மக்கள் வாங்கிச் சேர்த்தார்கள். இந்த நாட்டில் பெரிய பணக்காரன் என்று பரந்த நிலத்தை உடையவனுக்குத்தான் பெயராக இருந்தது. நிலங்களைச் சேர்க்க வேண்டுமென்று நினைப்பது மண்ணாசை. அரசர்கள் தம்முடைய நாட்டைப் பெருக்க வேண்டுமென்று நினைப்பதும் மண்ணாசைதான். இந்தக் காலத்தில் அரசர்களுக்கு மாத்திரம் மண்ணாசை இருக்கிறது. மற்றவர்களுக்கு மண்ணில் அத்தனை ஆசை இல்லை. பணமாகச் சேர்த்துப் பாங்கியில் போடவேண்டுமென்ற நிலை இப்போது வந்திருக்கிறது.

ஒரு வேளை சோறு உண்டவனுடைய முயற்சி நீளுமானால் மறுவேளைக்குச் சோறு கிடைக்கிறது. அந்த முயற்சி பின்னும் நீளுமாயின் மாதம் முழுவதும் தட்டு இல்லாமல் சோறு உண்ணும் வசதி கிடைக்கிறது. மனிதனுடைய முயற்சிக்கு ஏற்ற செல்வம்

உண்டாகிறது. செல்வம் அதிகமாக இருந்தால் பல காலத்திற்கு நன்றாக வாழலாம் என்ற எண்ணத்தினால்தான் மனிதன் பணத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறான். உலகத்தில் நன்றாக வாழ்கிறவர் கள் என்று பணம் படைத்தவர்களைச் சொல்கிறார்கள். பணம் இல்லாதவர்களை வாழத் தெரியாதவர்கள் என்று சொல்கிறார்கள்.

கல்வியும் செல்வமும்

பணம், கல்வி ஆகிய இரண்டிலும் கல்வியைச் சிறந்ததாகப் பெரியவர்களும் அறிவாளிகளும் சொல்கிறார்கள். ஆனாலும் உலகத்தில் பெரும்பாலான மக்களுக்குப் பணத்தினிடமே மதிப்பு உண்டாகிறது. கல்வி பெரியது என்று வாயால் சொல்வார்களே யொழியச் சரியான சந்தர்ப்பத்தில் அதற்கு மதிப்புக் கொடுக்கா மல் செல்வத்திற்கே மதிப்புக் கொடுப்பார்கள். "பணம் பந்தி யிலே குலம் குப்பையிலே" என்று பழமொழி பணத்திற்கு இருக்கும் மதிப்பை விளக்குகிறது. ஒரு பெரிய விருந்து நடக்கிறது. நூல் ஆயிரம் படித்த பெரியவன் ஒருவன் அந்த விருந்துக்குப் போகிறான். ஒன்றுமே படிக்காத அறிவிலி ஒருவன் வருகிறான். புலவன் சிறிய மேல் துண்டும் சாதாரண வேட்டியும் அணிந்து கொண்டு நடந்து வந்து உள்ளே நுழைகிறான். அவன் ஏழை. ஆனால் அறிவிலியாக இருப்பவன் பணம் படைத்தவன்; நல்ல ஆடை அணிகளைப் புனைந்து கொண்டு காரில் போய் இறங்கு கிறான். விருந்துக்கு வருகிறவர்களை வரவேற்பதற்காக அங்கே நிற்பவர்கள் யாருக்கு அதிகமாக வரவேற்பு அளிப்பார்கள்? 'எல்லாம் படித்த புலவனாயிற்றே; ஒழுக்கத்தில் சிறந்தவன் ஆயிற்றே' என்று எண்ணி நல்ல மேலாடை இல்லாவிட்டாலும், புலவனுக்கு மரியாதை செய்வார்களா? அப்படி இன்னும் இந்த உலகம் வளரவில்லை. கார் வந்து நின்றவுடன் அதில் வந்து இறங்கிய கற்றறியா மூடனுக்குக் கைலாகு கொடுத்து வரவேற் பார்கள். பன்னீரைத் தெளிப்பார்கள். பூச்செண்டைச் செருகி மூன்று நான்கு பேர்களாக உள்ளே அழைத்துப் போவார்கள். படிப்பு, ஒழுக்கம் ஆகியவற்றைவிடப் பணமே உலகில் மதிப்பைப் பெறுகிறதென்பதற்கு இது அடையாளம் அல்லவா? பணக்காரன் தன்னிடத்தில் உள்ள பணத்தை விளம்பரப்படுத்திக் கொள்வதற்குப் படாடோபமான ஆடைகளை அணிகிறான்.

ஒழுக்கத்தில் தளர்ந்தவனாக இருந்தாலும், அறிவிலே குறைந்த வனாக இருந்தாலும் அவன் தன்னிடத்திலுள்ள பணத்தை ஆடை யாலும் அணியாலும் ஆடம்பரத்தாலும் விளம்பரம் செய்து கொள்வதைக் கண்டு உலகம் மயங்குகிறது.

இதை நினைந்து ஒரு புலவர் வேடிக்கையாக ஒரு பாட்டுப் பாடுகிறார். உலகிலுள்ள மனிதர்கள் மாத்திரமா மயங்கு கிறார்கள்? எங்கேயும் இத்தகைய இழிநிலை காணப்படுகிறது. பாற்கடல் இத்தகைய காரியம் ஒன்றைச் செய்தது என்று அவர் பாடுகிறார். ''எவ்வளவு ஆயிரம் நூல்களைப் படித்த புலவனா னாலும் இவ்வுலகம் அவனை மதிக்காது. நல்ல மேலாடை அணியாமல் வந்த புலவனை மதிப்பவர் அதிகமாக இருக்க மாட்டார்கள்'' என்கிறார்.

பெரிய பிரசங்கிகள்கூடத் துப்பட்டா, சால்வை முதலியன போர்த்துக் கொண்டு வருவதற்கு காரணம், சபையினர் தம்மை மதிக்கவேண்டும் என்பதுதான். அவர்கள் தம்முடைய மதிப்பைப் பேச்சினால் புலப்படுத்தலாம். அதற்கு முன்பு அவர்கள் சபையில் போகவேண்டும் அல்லவா? அதற்குச் சால்வை முதலியன விளரம்பரமாக உதவுகின்றன.

''மேலாடை இன்றிச் சபைபுகுந் தால்இந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலும்எண் ணார்.''

இப்படி அந்தப் புலவர் சொல்லிவிட்டு இதற்கு உதாரணம் சொல்கிறார். இது இந்த உலகத்தில் மாத்திரம் நடப்பது அல்ல. தேவலோகச் செய்தியும் அப்படித்தான். திருப்பாற்கடல் என்ன செய்தது தெரியுமா?

''நுவல் பாற்கடலோ
மாலோன் அணிந்தபொன் னாடையைக் கண்டு மகளைத்தந்தே.''

பட்டுப் பீதாம்பரங்களை அணிந்து கொண்டு வந்தார் திருமால். அவரது ஆடம்பரத்தைக் கண்டு மயங்கி அவருக்குத் தான் பெற்ற திருமகளைத் தந்ததாம். திருமாலைப் பாற்கடல் மருமகன் ஆக்கிக் கொண்டது. ஆனால் திருப்பாற்கடலைக் கடையும்போது சிவ பெருமானும் வந்தான். அந்தப் பரமேசுவரன் எதைப் பெற்றான் தெரியுமா? பாற்கடல் தன்னிடத்தில் உண்டான ஆலகால விடத்தைக்

கொடுத்தது. திருமாலுக்குத் தன் மகளையும் சிவபெருமானுக்கு நஞ்சையும் கொடுத்ததற்குக் காரணம் என்ன? சிவபெருமான் அந்தச் சபைக்கு வரும்போது பட்டுப் பீதாம்பரம் உடுத்துக் கொண்டு வரவில்லை. பொன்னாடை வேண்டாம்; சாதாரண நூல் ஆடையேனும் கட்டிக் கொண்டு வந்தானா? அதுவும் இல்லை. தோல் ஆடையைப் புனைந்திருந்தான். அதையாவது நாகரிகமாக அணிந்து கொண்டு வந்தானா? அதுவும் இல்லை. சும்மா சுற்றிக் கொண்டு வந்திருந்தான். ஆகையால் அது நஞ்சைக் கொடுத்ததில் வியப்பு ஒன்றும் இல்லை.

''ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்றனக்கே''

என்று புலவர் பாடுகிறார். தோல் ஆடை சுற்றி வந்த சிவ பெருமானைப் பார்த்த பாற்கடல், 'இந்தப் பைத்தியம் உலகத்தில் இருந்தால் என்ன? செத்துப் போனால் என்ன?' என்று நினைத்ததோ என்னவோ, ஆலகால விடத்தை அளித்து விட்டதாம்.

செல்வத்தின் மதிப்பு

நல்ல மேலாடையும், பொன்னாடையும் இல்லை என்றால் இந்த உலகத்தினர் அந்த மனிதனை மதிப்பது இல்லை. பணம் இருந்தால் போதும்; எல்லா வகையான சுகபோகங்களையும் தேடிக் கொள்ளலாம்; பதவியும், பெருமையும், மதிப்பும் அவர்களைத் தேடிக் கொண்டு வரும். இது எல்லாக் காலத்திலும் உண்டு. இப்போது மிகுதியாகிவிட்டது. அதனால் பொருட் செல்வத்தைக் குவித்துக் கொள்ளும் ஆசை இந்தக் காலத்தில் மிகவும் விரிந்திருக்கிறது. உலகமே காஞ்சனத்திற்கு அடைக்கலம் ஆகிவிட்டது. இன்று பிச்சைக்காரனுக்கு ஒரு பிடி அரிசி போட்டால் அவன் மதிப்பது இல்லை. ஓர் அணாக் கொடுத்தால் அப்படிக் கொடுத்தவனுக்கு ஒன்பது கும்பிடு போடுகிறான். ஏழைகளுக்கே பணத்தாசை இருக்கிறதென்றால பணக்காரனைப் பற்றி என்ன சொல்வது? ஓர் ஏழைக்கு ஒரு ரூபாய் கிடைக்கிறது. தன் உண்டியில் 99 ரூபாய் சேர்த்து வைத்திருப்பவன் இருக்கிறான்; அவனுக்கும் ஒரு ரூபாய் கிடைக்கிறது. ஏழையோ கிடைத்த ஒரு ரூபாயை உடனே செலவழித்துவிடுவான். 99 ரூபாய் சேர்த்து வைத்திருப்பவனோ இந்த ஒரு ரூபாயையும்

சேர்த்து நூறு ரூபாயாகச் செய்யலாம் என்று செலவழிக்காமல் வைத்திருப்பான். இப்படியே பணம் படைத்தவனுக்குத் தன்னிடம் இருக்கும் பணம் போதும் என்ற மன நிறைவு இல்லாமல் பின்னும் பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறான். தன்னிடம் உள்ள பணத்திற்கு மேற்பட்ட தொகையை மனத்தில் எண்ணி அதை எட்டவேண்டுமென்று ஆசைப்படுகிறான். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அதையே லட்சியமாக வைத்து அதையே சேர்த்துக் கொண்டிருக்கிறான்.

அரசர் செல்வம்

பணம் மிகுதி ஆக ஆக ஒருவனுடைய பலமும் பதவியும் உயர்கின்றன. அவனைப் பல மக்கள் சேர்ந்து வழிபடுகிறார்கள். பழங்காலத்தில் மிகுதியான செல்வத்தை வைத்திருந்தவர்கள் அரசர்கள். மண், பெண், பொன் ஆகிய மூன்று ஆசைகளிலும் அவர்கள் எல்லோரையும் மிஞ்சி இருந்தார்கள். அதனால்தான், ராஜபோகம் என்று சொல்லும் பழமொழி வந்தது. அரசர்கள் இல்லாத இந்தக் காலத்திலும்கூட, ''அவனுக்கு என்ன பெரிய ராஜா; சுகமாக இருக்கிறான்!'' என்று சொல்லும் வழக்கம் மாத்திரம் போகவில்லை.

அரசர்கள் காலாலே நடக்கமாட்டார்கள். பணம் படைத்தவர்கள் இப்போதுகூடத் தம் காலை அதிகமாகப் பயன்படுத்துவது இல்லையே! வாகன வசதி செய்து கொள்வது பணத்திற்கு ஓர் அடையாளம். இந்தக் காலத்தில் ஒருவனுடைய செல்வத்தை அவனிடத்திலுள்ள காரினால் அளக்கலாம். பெரிய பணக்காரன் தனக்கு ஒன்று, தன் மனைவிக்கு ஒன்று, தன் பிள்ளைகளுக்கு சில என்று கார் வசதிகளை அதிகமாக்கிக் கொள்கிறான். பழங் காலத்தில் கார் என்ற வாகனம் இல்லாவிட்டாலும் தேர் இருந்தது; யானை இருந்தது; குதிரை இருந்தது. குதிரையில் செல்பவன் சிறிய பணக்காரன். யானையில் செல்கிறவன் பெரிய பணக்காரன். தேரில் செல்கிறவன் எல்லோரையும்விடப் பெரிய பணக்காரன். தேர், யானை, குதிரை என்று மூன்று வாகனங்களையும் பழங்காலத்தில் சிறந்தனவாகப் போற்றினார்கள். அரசர்களிடம் இந்த வாகனங்கள் இருந்தன.

இந்த வாகனங்களைச் சுகமாக வாழ்வதற்கு வைத்திருந்த தோடு பிறருடைய நாட்டைப் பற்றிக் கொள்வதற்கும், தம்மேல் பகைவர்கள் படை எடுத்தால் எதிர்ப்பதற்கும் உரிய படை களாகவும் வைத்திருந்தார்கள். தேர், குதிரை, யானை, காலாட் படை என்னும் நான்கையும் சதுரங்க சேனை என்பார்கள். யானை முதலிய படைகள் யாரிடம் மிகுதியாக இருக்கின்றனவோ அவர்களைப் பெரிய அரசர்கள் என்று மக்கள் மதித்தார்கள். இன்று பணம் படைத்த மேலை நாடுகள் பணத்தைக் கொண்டு பலத்தை அதிகப்படுத்திக் கொள்வதைப் பார்க்கிறோம். பல பல புதிய படைக்கருவிகளைப் பெருக்கிக் கொள்கின்றனர். அந்தக் காலத்தில் தேர் முதலியவற்றைப் பெருக்கிக் கொண்டார்கள். இந்தக் காலத்தில் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு முதலிய வற்றைப் பெருக்கிக் கொள்கிறார்கள். தம்மிடத்தில் உள்ள செல்வம் போதாது என்று பிறருடைய செல்வத்தை அடித்துக் கொள்ளும் பொருட்டுப் படைகளை மிகுதியாக்குவது ஆசை உடையவர்களுடைய செயல். பிற நாடுகளையும் வென்று அவற் றுக்கும் தாம் தலைவராக வேண்டுமென்று மன்னர்கள் நினைத் தார்கள். படை பெருகுவதற்குக் காரணம் இந்தப் பேராசையே. வேறு ஒருவன் தன் நாட்டைக் கைக்கொள்வான் என்ற பயத்திலும் படையைப் பெருக்கிக் கொள்வது உண்டு. இவ்வாறு இரு திறத்தாலும் படைகள் மிகுதியாயின.

படையைப் பெருக்குதல்

உலகைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப் பெரிய வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு அணுகுண்டுகளையும், பிற விஞ்ஞான அற்புத விளைவான படைக்கலன்களையும் உற்பத்தி செய்கின்றன, இந்தக் காலத்தில். பழங்காலத்தில் தேர், கரி, பரி ஆகியவற்றை மிகுதியாகச் சேர்த்துக் கொண்டார்கள். சேர்த்துக் கொண்டு வாழ்ந்தார்கள் என்று சொல்லலாமா? அவர்கள் மனத்தில் அமைதி இராமல் இருந்தது. இன்று அமெரிக்காவும், ரஷ்யாவும் படைக்கலங்களைப் பெருக்கிக் கொண்டதனால் ஒரு கணமும் அமைதியில்லாமல் வாழ்கின்றன. அவர்களுடைய உள்ளத் தில் மனக்கலக்கம் எழுந்திருக்கிறது. இதைத்தான் 'கெடுபிடி யுத்தம்' (Cold War) என்று சொல்கிறார்கள்.

தேரையும் கரியையும் பரியையும் சேர்த்துப் படையைப் பெருக்கியவன் சும்மா இருக்கமாட்டான். இரும்பு பிடித்தவன் கையும், சிரங்கு பிடித்தவன் கையும் சும்மா இரா என்பார்கள். இரும்பு என்பது படைக்கலத்தைக் குறிப்பது. படையை வைத்துக் கொண்டிருக்கிறவன் அமைதியாக வீட்டில் இருக்கமாட்டான். ஊரைச் சுற்றி வீட்டைச் சுற்றியுள்ள எல்லோரையும் அடிமைப் படுத்த வேண்டுமென்று திரிவான். அவனை யார் எதிர்ப்பட்டாலும் அவருக்குத் தீங்கு உண்டாகும். பிறருக்குத் தீங்கை விளைவிக்கும் மனிதன் தனக்கும் தீங்கை விளைத்துக் கொள்கிறான்.

2

இத்தகைய அரச பதவியையும், செல்வத்தையும் நிலையாதன என்று அறியாமல் நீளும் பணத்தாசை பிடித்து அலைகிறாயே, பாவி நெடுநெஞ்சமே!' என்று அருணகிரியார் சொல்கிறார்.

தண்டு தாவடி போய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வம் எல்லாம்
நீரில் பொறி என்று அறியாத பாவி நெடுநெஞ்சமே!

நெடுநெஞ்சம்

நாம் செய்கிற காரியங்கள் எல்லாவற்றுக்கும் மூல காரண மாக இருப்பது நெஞ்சு. நாம் செய்வன யாருக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நெஞ்சுக்குத் தெரியாமல் இராது. ''தன் நெஞ்சு அறிவது பொய்யற்க'' என்பார் திருவள்ளுவர். அதனால் வேறு ஒன்றைப் பார்த்துச் சொல்வதைவிட மூலக் கருவியாகிய நெஞ்சையே பார்த்து அருணகிரியார் சொல்கிறார்.

நெடு நெஞ்சமே!

''நெஞ்சமே, நீ என்னுடன் நீண்ட காலமாக வாழ்கிறாய். இந்த உடம்போடு வந்தாய் என்பது மட்டுமன்று. நான் எடுக்கும் பிறவிகளில் எல்லாம் துணையாகவும், சாட்சியாகவும் தொடர்ந்து வருகிறாய். இந்த நீண்ட நட்பு எனக்கும் உனக்கும் இருக்கிறது'' என்று எண்ணியே நெடு நெஞ்சமே என்றார். இதற்கு மற்றொரு பொருளும் சொல்லலாம். நமக்கு உடம்பு, வாக்கு, நெஞ்சு ஆகிய மூன்று கரணங்கள் இருக்கின்றன. இந்த மூன்றில் நம்முடைய

உடம்பு ஓர் எல்லைக்குள்தான் இயங்கும். நம்முடைய கை ஓர் எல்லைக்குள்தான் எட்டும். நான் இந்த இடத்தில் இருந்து பேசுகின்றேன். இதே சமயத்தில் என் வீட்டில் இருக்க முடியாது. இந்த உடம்பு ஓர் எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கிறது. ஆனால் உடம்பினால் எட்ட முடியாத எல்லையை வாக்கினால் எட்ட முடியும். அதற்கும் ஓர் எல்லை உண்டு. ஒருவனிடம் பேசிக் கொண்டிருக்கும். ''என் நெஞ்சில் இருக்கிறது; சொல்ல வர மாட்டேன் என்கிறதே'' என்று சில சமயங்களில் சொல்கிறோம். அப்போது வாக்குக்கு எட்டாத ஒன்று உண்டென்று தெரிகிறது. தித்திப்பு என்பது என்ன என்று கேட்டால் சர்க்கரை மாதிரி இருக்கும் என்று சொல்லலாம். தித்திப்பு என்பது இதுதான் என்று வாக்கினாலே சுட்டிக் காட்ட முடியாது. வாக்குக்கு எட்டாத எல்லையில் அநுபவம் இருக்கிறது. வாக்கினது எல்லையையும் கடந்து நெஞ்சு செல்லும். இங்கிருந்தபடியே நெடுந்தூரத்தில் இருக்கிற ஒரு பொருளை நெஞ்சு நினைக்கும். உடம்பு நீளுவதை விட வாக்கு நீளும்; வாக்கு நீளுவதைவிட மிக அதிகமாக நெஞ்சு நீளும். அதனாலே, ''நெடு நெஞ்சமே'' என்று சொன்னார் என்றும் கொள்ளலாம்.

வாமனராகக் குறுகிய உருவம் தாங்கி வந்த திருமால் மூன்று உலகங்களையும் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டார். அவர் திரிவிக்கிரம அவதாரம் எடுத்துக் கொண்டு தம்முடைய இரண்டு அடியினால் மூன்று உலகங்களையும் அளந்தார். அதைக் கேட்டு நாம் வியக்கிறோம். ஆனால் நம்முடைய நெஞ்சமோ இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிறது. ஆயினும் ஒரே விநாடியில் மூன்று உலகங்களையும் அளந்துவிடும் வகையில் அது நீளுகிறது. அதன்பால் உண்டாகிற ஆசை எல்லை இல்லாமல் விரிகிறது. ஆசை என்னும் காலால் மூன்று உலகத்திற்கும் மேலேகூட அளக்கும் ஆற்றல் நம் நெஞ்சுக்கு இருக்கிறது.

எல்லையற்று விரிந்துகொண்டு போகும் ஆசையை அழித்து, பற்றை அழித்து, திருவருளை அளக்கிற நெஞ்சங்களே நல்ல நெஞ்சங்கள். நம்முடைய நெஞ்சமோ உலகத்திலுள்ள சொத்துக் களை நாம் பெறவேண்டுமென்று அளந்து கொண்டிருக்கிறது. தேரும், கரியும், பரியும் கொண்டு போருக்குச் சென்று செல் வத்தைப் பலவகையிலும் சேர்த்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து அவர்களுடைய செல்வம் நீரில் எழுத்துப் போல அழிந்து

விடும் என்று அறியாமல, நாம் அவர்களைப் போல ஆக வேண்டுமென்று நீண்டு கொண்டிருக்கிறது. இது புண்ணியமான காரியமா? இந்த நெஞ்சம் நெடு நெஞ்சம்; பாவி நெடு நெஞ்சம். ஆதலால் இதைப் பார்த்து,

பாவி நெடு நெஞ்சமே!

என்று அருணகிரியார் சொல்கிறார்.

அறியாத நெஞ்சம்

நாம் சொல்லவேண்டியதை அவர் சொல்கிறார். பொருட் செல்வத்தை ஈட்டிக் கொள்வதில் நோக்கம் வைத்து நாள்தோறும் எட்ட முடியாததை எட்டிப் பிடிக்கத் தாவுகிறது இந்த நெஞ்சம். எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதைத் தெரிந்து கொள் வது இல்லை. நமக்கு வேண்டாதவற்றை எல்லாம், நம்முடைய துன்பத்தை மிகுதியாக்கக் காரணமானவற்றை எல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறது. 'எது உயிருக்கு இன்பத்தை அளிக்கிறது? அமைதியைத் தருகிறது?' என்று தெரிந்து கொள்வது இல்லை. அமைதியைக் குலைப்பதற்குக் காரணமான பொருள் முதலிய வற்றையே நாடி நாடி அலைந்து ஏங்கி நிற்கிறது.

தண்டு தாவடி போய்த்
தேரில் கரியில் பரியில் திரிபவர் செல்வம் எல்லாம்
நீரில் பொறிஎன்று அறியாத பாவி நெடுநெஞ்சமே!

தண்டு என்பது சேனை. தாவடி போதல் – காலை வீசி நடத்தல்; தாவித் தாவிச் செல்லுதல். வீரர்கள் போர்க்களத்தில் நடக்கும் நடையைத் தாவடி போதல் என்று சொல்வார்கள். அடி வைத்துத் தாவிச் செல்பவர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். நீரில் பொறி – நீரில் எழுதும் எழுத்து. தேர், யானை, குதிரை ஆகிய படைகளோடு சண்டைக்குப் போய்த் திரிகின்ற அரசர்களுடைய செல்வம் எல்லாம் நீரில் எழுதிய எழுத்துப் போன்றவை என்பதை அறியாத பாவி நெடு நெஞ்சம் நம் நெஞ்சம்.

அமைதி தரும் செல்வம்

அவை உண்மையான செல்வமாக இருந்தால் மனத்திற்கு அமைதியும், மகிழ்ச்சியும் கொடுக்க வேண்டும். நன்றாக வாழ்

வதற்குச் செல்வம் வேண்டுமென்ற நினைப்பிலே அதனை நிறையச் சேமித்துக் கொண்டிருக்கிறவர்கள் நன்றாக வாழ்கிறார்களா என்று சற்று ஆராய்ச்சி செய்தால் உண்மை விளங்கும். செல்வத்தைப் பெற்றவர்களுக்குத் திருப்தி உண்டாவதில்லை என்று முன்னரே சொன்னேன். அதனால் குமருகுருபர முனிவர் ''செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'' என்றும், ''அல்கா நல்குரவு அவா எனப்படுமே'' என்றும் கூறினார்.

மனத்தில் உண்டாகிற திருப்திதான் செல்வம், மேலும் மேலும் வேண்டுமென்ற ஆசையே வறுமை என்று அவர் சொல்கிறார். எத்தனை செல்வம் இருந்தாலும் அவன் செல்வனாக வாழாமல், ''இன்னும் நமக்குப் போத வில்லையே!'' என்று ஏழையாகவே வாழ்கிறான். உலகம் ஏழை என்று நினைத்திருந்தாலும், ''நமக்குக் கிடைத்தது போதும். இறைவன் இந்த அளவுக்கு நம்மை வைத் திருக்கிறானே'' என்று திருப்தியாக வாழ்கிறவர்களே மனத்தில் செல்வர்களாக ஆகிறார்கள். செல்வம் சேரச் சேர அவர்களுக்குக் கவலைகளும் சேர்ந்து விடுகின்றன. மனத்தில் அமைதி குலை கிறது. பொருட்செல்வம் மனத்தில் அமைதியைத் தராது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட பெரியவர்கள் அதைத் தருகின்ற வேறு செல்வம் எது என்று ஆராய்ந்தார்கள். இறைவனது திரு வருட்செல்வம் உலக வாழ்க்கையிலும் சிறந்த இன்பத்தைத் தரும் என்று கண்டு கொண்டார்கள். அதனைக் கண்டு கொண்டவரிலே அருணகிரியாரும் ஒருவர். எது மன அமைதியைத் தரும் என்பதை இந்தப் பாட்டில் சொல்கிறார்.

3

உலகத்துப் பொருட் செல்வத்தை மதிக்காத அருட் செல்வர் கள் தாம் அமைதியைப் பெறுவதோடு பிறருக்கும் அமைதியைத் தருகின்ற ஆற்றல் படைத்தவர்கள். அமைதி இல்லாத மக்கள் அமைதியைப் பெறவேண்டுமானால் தாமாகப் பெற்றுக் கொள்ள முடியாது. அமைதியைப் பெற்ற தொண்டர்களுடைய கூட்டத்தில் சேருவதால் பெறமுடியும். அருட்செல்வம் பெற்ற தொண்டர் களைச் சார்ந்தால்தான் கதி உண்டு என்பதை அருணகிரியார் வற்புறுத்துகிறார்.

தொண்டர்குழாம்
சாரில் கதியன்றி வேறு இலை, காண்.

தொண்டர்களின் நிலை

தொண்டர்களுக்கு முத்தியைப் பெற்ற பிறகுதான் இன்பம் உண்டு என்பது இல்லை. அவர்கள் இந்த உலகத்திலேயே இன்பத்தைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு கணமும் அமைதியோடு வாழ்கிறார்கள். வறுமை, நோய், கவலை என்பவற்றைக் கண்டு பயப்படுவது இல்லை. அவர்கள் உள்ளம் எப்போதும் நோய் அற்றதாக, வறுமை அற்றதாக, கவலை அற்றதாக விளங்குகிறது. இறைவனுடைய திருவருள் நிச்சயமாக நமக்குத் துணை இருக்கிறதென்ற நினைவு எப்போதும் சுருதி போடுவதால் அவர்களிடம பயம் என்பதே தலைகாட்டுவது இல்லை.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை"

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். அவர்களைப் பார்த்தால் ஏழை போல இருப்பார்கள். இடையில் கந்தையும், கோவணமும் இருப்பினும் அவர்கள் உள்ளத்தில் உறுதி வைரம் போலப் பாய்ந் திருக்கிறது. அவர்களைப் போன்ற வீரர்கள் யாரும் இல்லை.

**"ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே;
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலர்;
ஈர அன்பினர்; யாதும் குறைவிலார்;
வீரம் என்னால் விளம்பும் தகையதோ!"**

என்று பெரியபுராணக்காரர் வியந்து பாடுகிறார்.

தொண்டர் பெருமை

ஆண்டவனைச் சார்ந்து அவனுடைய அருட் செல்வத்தைப் பெறுவது நல்லது என்று சொல்வதைவிட்டு, தொண்டர் குழாத்தைச் சாருவதுதான் கதி என்று அருணகிரியார் சொல்கிறாரே என்ற கேள்வி எழலாம்.

இறைவன் திருவருளை நேரே பெறுவது என்பது அரிய காரியம். அந்த அருளைப் பெறுவதற்கு எத்தனையோ தகுதி வேண்டும். செல்வத்தையும், செல்வம் படைத்தவர்களையும்

கண்டு மயங்கி அவர்களைப் போல நாமும் இருக்க வேண்டு மென்று ஒவ்வொரு கணமும் கவலைப்பட்டு, முயற்சி பண்ணி, அது பலித்தால் மேலும் செல்வத்தை ஈட்டவேண்டுமென்று நினைத்து, ஐயோ ஆசை நிறைவேறவில்லையே என்று துன்புற்று வாழ்கிற வாழ்க்கையைப் போன்ற அவலம் வேறு இல்லை. இந்த அவல வாழ்க்கையில் பற்றுக் கொண்டவர்களுக்குத் திடீ ரென்று இறைவன் சார்பு கிடைத்துவிடாது. ஆனால் தொண்டர் களுடைய குழாத்தில் சேர்ந்து கொண்டார்களானால் அவர் களுடைய சேர்க்கைச் சிறப்பால் தெளிவு பெறுவார்கள். மெல்ல மெல்லச் செல்வத்தின்பாலும், செல்வர்களின்பாலும் உள்ள பற்று நழுவிவிடும். இறைவன் திருவருள் இன்பம் ஏறும். இறைவன் நமக்கு நேரே இன்பத்தைத் தருவதைக் காட்டிலும் தன் தொண்டர்கள் மூலமாகத் தருகிற இன்பம் பெரிது. காவேரி நீர் நேரே பாயாது; கால்வாய் மூலமாகவும், மடையின் மூலமாகவும் பாய்ந்தால்தான் வயல்களுக்குப் பயன் உண்டே அன்றி நேரே பாய்ந்தால் தாங்குவதற்கு ஆற்றல் இல்லை. அப்படி, தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறும்படியாகச் செய்கிறவர்கள் தொண் டர்கள். இறைவனைக் காட்டிலும் தொண்டர்கள் மிக்க பயனைத் தருவார்கள். அவனைவிடத் தொண்டர்கள் பெரியவர்கள். இதனை ஔவைப் பிராட்டி சொல்கிறாள்.

ஔவை வாக்கு

நாம் வாழ்கிற இந்த உலகம் மிகப் பெரியது. பெரிய பொருளுக்கு உவமை சொல்ல வேண்டுமானால் இந்த நிலத்தைச் சொல்வார்கள்.

"நிலத்தினும் பெரிதே"

என்பது குறுந்தொகைப் பாட்டு. இவ்வளவு பரப்பும், விரிவும் உடைய இந்த நிலம் நாம் கண்ட பொருள்களுக்குள் பெரியது. ஆனால் இதனைப் படைத்த நான்முகன் இதைவிடப் பெரிய வனாக இருக்க வேண்டும். புவனம் பெரியதானால் இதைப் படைத்த பிரமன் இதைவிடப் பெரியவன். அந்த நான்முகனும் வேறு ஒருவனுடைய படைப்பு. கரிய திருமாலின் உந்திப் பூவிலே தோன்றியவன் அவன். ஆகவே அந்த நான்முகனைக் காட்டிலும் கரிய திருமால் பெரியவன். அவ்வளவு பெரிய

வனாகிய திருமால் பாற்கடலில் துயில் கொள்கிறான். ஆகையால் அவனைக் காட்டிலும் பாற்கடல் பெரியது. கடல் பெரிதாக இருந்தாலும் அகத்திய முனிவர் அந்தக் கடலைத் தம்முடைய கையில் எடுத்து ஆசமனீயம் பண்ணிவிட்டார். எனவே கடலை விடக் குறுமுனி பெரியவர். அவர் கலசத்தில் பிறந்தவர். அதனால் குடமுனி என்ற பெயரைப் பெற்றார். ஆகையால் குறுமுனியைவிடக் குடம் பெரியது என்று சொல்ல வேண்டும். அந்தக் கலசமோ மண்ணால் ஆனது. கலசத்தின் தாயாகிய மண் மிகப் பெரியது. அந்த மண்ணோ ஆதிசேடனுக்கு ஒரு தலைச் சுமையாக இருக்கிறது. ஆகவே மண்ணைச் சுமக்கும் ஆதிசேடன் பின்னும் பெரியவன். அந்த ஆதிசேடனை எம் பெருமாட்டி உமாதேவி தன் சிறுவிரலில் மோதிரமாகப் பூட்டிக் கொண்டிருக் கிறாள். அந்தப் பெருமாட்டி பின்னும் பெரியவள். அந்தப் பெரு மாட்டியைத் தன்னுடைய ஒரு பாகத்தில் அடக்கிக் கொண் டிருக்கிற பரமேசுவரன் எல்லோரையும்விடப் பெரியவன். அவ்வளவு பெரியவனைத் தொண்டர்கள் தம்முடைய உள்ளக் கமலத்திற்குள் அடக்கி வைத்திருக்கிறார்கள். ஆகையால் தொண்டர்களுடைய பெருமை மிக மிகப் பெரிது. அது சொல்வதற்கு அரிது. – இந்தக் கருத்தை ஔவை சொல்கிறாள். முருகப் பெருமான் எது பெரியது என்று கேட்டபோது, 'தொண்டர்களுடைய பெருமை பெரியது' என்பதை அந்தப் பாட்டி சொல்லப் புகுந்தாள். சும்மா பெரியது என்று சொன்னால் அதன் அளவு புலப்படாது என்று கருதி, புவனத்தில் இருந்து தொடங்கி மெல்ல மெல்லப் படியேறிக் கோபுரத்தின் உச்சியில் நின்று தொண்டர்களுடைய பெருமை மிகப் பெரிது என்று சொல்பவளைப்போல அடுக்கிக் கொண்டு போகிறாள்.

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்;
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்;
கலசமோ புவியிற் சிறுமண்

புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்;
இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!''

ஔவையாருடைய கருத்தைக் கொண்டு பார்த்தால் எல்லா வற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருக்கிற பரமேசுவரனைத் தம்முடைய உள்ளத் தாமரையில் அடக்கிக் கொண்டமையினால் தொண்டர்கள் பெரியவர்கள் என்று தெரிகிறது. ஒரு பெட்டிக்குள் ஏதேனும் ஒரு பொருள் அடங்கியிருந்தால் அந்தப் பொருளைக் காட்டிலும் பெட்டி பெரிது என்று சொல்ல வேண்டியது இல்லை. அப்படியே இறைவனைத் தம் உள்ளே அடக்கிக் கொண்ட பெரிய பெட்டியாகிய தொண்டர்கள் பெரியவர்கள் என்று சொல்வது ஒருவகையில் பொருத்தமாக இருக்கிறது. இனி வேறு ஒரு வகையில் தொண்டர்களின் பெருமையை நாம் உணரலாம்.

பெரிய புராணம்

புராணங்கள் பதினெட்டு என்று சொல்வார்கள். அவற்றை மகாபுராணங்கள் என்பது வழக்கம். அவை அல்லாமல் உப புராணங்கள் பல உண்டு. புராணங்கள் யாவுமே இறைவனுடைய பெருமையை விரிவாக எடுத்துச் சொல்வன. இறைவனுடைய திருவிளையாடல்களையும், அடியார்களுக்கு அருள் செய்த திறத்தையும் பல படியாக, வரலாறுகளாக எடுத்துச் சொல்வன அவை. இந்தப் புராணங்களையும், உப புராணங்களையும் அன்றி அந்த அந்தத் தலங்களுக்குத் தனித்தனியே புராணங்கள் உண்டு. அவை தல புராணங்கள். தமிழ்நாட்டில் தலங்கள் மிகுதி. ஆகையால் தமிழிலுள்ள தல புராணங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. சில தலங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புராணங்கள் உண்டு. கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் சிதம்பரத் திற்கு நான்கைந்து புராணங்கள் இருக்கின்றன. அப்படியே மதுரைத் தலத்திற்கு நான்கு புராணங்கள் இருக்கின்றன என்று எனக்கு நினைவு. இப்படிப் புராணம் என்ற பெயரிலே மூன்று வகையாக அமைந்த நூல்கள் யாவும் இறைவனுடைய பெரும் புகழை விரிவாகச் சொல்கின்றன. இந்தப் புராணப் பெருங்

கூட்டத்திற்கு நடுவிலே புதிதாக ஒரு புராணம் தோன்றியது. அந்தப் புராணம் தோன்றுவதற்கு முன்னாலே மற்றப் புராணங்கள் எல்லாம் சிறந்தனவாக, பெரிய புராணங்களாக இருந்தன. இந்தப் புதிய புராணம் தோன்றிய பிறகு அவைகள் எல்லாம் சிறியவை ஆகி விட்டன. ஏன்? புதிதாக வந்த புராணம் பெரியபுராணம் என்ற பெருங்கீர்த்தியைப் பெற்றது. ஒன்று பெரியதானால் அது அல்லாத மற்றவை சிறியனவாகத்தான் இருக்கவேண்டும். ''ஒரு வெளியில் பையன்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப் போது ஒரு பெரிய பையன் வந்தான்'' என்று சொன்னால் புதிதாக வந்து சேர்ந்த பெரிய பையன் மற்ற எல்லாப் பையன்களையும் சிறியவர்களாக்கி விட்டான் என்பது விளங்குகிறது அல்லவா? அப்படியே முன்னால் இறைவனைப் பற்றிய புராணங்கள் பெரியனவாக இருந்தன. பெரிய புராணம் வந்த பிறகு அவை சிறிய புராணங்கள் ஆயின. பெரிய புராணம் யாரைப் பற்றிச் சொல்வது? அது தொண்டர்களைப் பற்றிச் சொல்கிற புராணம். அதற்கு அதனுடைய ஆசிரியராகிய சேக்கிழார் சுவாமிகள் வைத்த பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதுதான். தொண்டர்களுடைய பெருமையைச் சொல்கிற அந்தப் புராணம் பெரிய புராணம் ஆகி விட்டது. காரணம்: அந்தப் புராணத்தில் வருகிறவர்கள் யாவரும் இறைவனைக் காட்டிலும் பெரியவர்கள்.

அடியார்க்கு எளியன்

இறைவனைக் காட்டிலும் அடியார்கள் பெரியவர்கள் என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. தொண்டர்களால் சிறியவன் ஆகிவிட்ட ஆண்டவனே தான் அடியார்களினும் எளியவன் என்று சொல்லிக் கொள்கிறான். பெற்றான் சாம்பான் என்ற ஹரிஜன் ஒருவன் இறைவனிடத்தில் மிக்க பக்தி செய்து வாழ்ந்து வந்தான். அவனுக்குத் திருவருள் செய்ய வேண்டு மென்று இறைவன் நினைத்தான். எதையும் மரபோடு செய்ய வேண்டும். நல்ல குருநாதன் மூலமாக அவனுக்கு நற்கதி கொடுக்க வேண்டும் என்று இறைவன் நினைத்தான். சிவ தீட்சை பெற்றுக் கொண்ட பிறகு அவனை ஆட்கொள்ள வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம். உமாபதி சிவாசாரியார் என்று ஒருவர் இருந்தார். அந்தப் பெரியாரிடத்தில் பெற்றான் சாம்பான்

தீட்சை பெற்றுக் கொள்வது நல்லது என்று இறைவன் எண்ணி னான். அதனால் இவனுக்குத் தீட்சை செய்ய வேண்டு மென்று அந்தச் சிவாசாரியாருக்கு ஒரு வேண்டுகோளை இறைவனே விடுத்தான். அது ஒரு பாட்டாக இருக்கிறது.

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு – படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

என்ற பாடலை எழுதிய ஓலையைப் பெற்றான் சாம்பான் மூலமாக அனுப்பினான். உமாபதி சிவாசாரியார் அவனுக்குத் தீட்சை செய்தார் என்பது வரலாறு.

நாம் யாருக்கேனும் கடிதம் எழுதினால் இன்னார் எழுதுவது என்று சொல்லிக் கொள்கிறோம். கடிதத்தின் தலைப்பில் நம்முடைய பட்டங்களை எல்லாம் போட்டு நம் விலாசத்தை அச்சிட்டு வைத்துக் கொள்கிறோம். அப்படி இறைவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். இறைவனுக்கு எத்தனையோ விலாசங்கள் உண்டு. அவன் பெருமைகள் அளவிடற்கரியன. அவற்றுள் அவனாக விரும்புவது எது என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியாது. அந்தப் பெருமானே தன்னுடைய கடிதத்தில் தான் விரும்பிய ஒரு விலாசத்தைப் போட்டுக் கொண்டான். இந்தப் பாட்டில் அது தெளிவாகிறது. அவன் தனக்குத் தானே கொடுத்துக் கொண்ட பட்டம், **"அடியார்க்கு எளியன்"** என்பது. இறைவனே அடியார்க்கு எளியன் என்றால் அடியார் அவனிலும் பெரியவர்கள் என்றுதானே கொள்ளவேண்டும்?

பெரியபுராணத்தில் வரும் தொண்டர்கள் பெரியவர்கள். இறைவனைக் காட்டிலும் அவர்கள் பெரியவர்கள் என்பதைத் திருக்கூட்டச் சிறப்பு என்னும் பகுதியில் குறிப்பாகச் சேக்கிழார் புலப்படுத்துகிறார். அதை இங்கே சற்று ஆராய்வது உபயோகமாக இருக்கும்.

பெரியோர்

சின்ன குழந்தைக்கு ஒழுக்கத்தை ஊட்ட வந்த ஔவை சிறியவர் யார், பெரியவர் யார் என்பதைச் சொல்கிறார். மேல்

சாதி, கீழ்சாதி என்று வேறு பிரிப்பதை அவள் சொல்லவில்லை. ஆயினும் இரண்டு சாதிகளைச் சொல்கிறாள். ஆண் சாதி, பெண் சாதி என்பதையும் அவர் சொல்லவில்லை.

''சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்,
பட்டாங்கில் உள்ள படி''

இந்த உலகத்தில் தம்மிடம் உள்ள பொருளை யார் பிறருக்குக் கொடுக்கிறார்களோ அவர்களே பெரியவர்கள்; அப்படிக் கொடுக்காமல் இருக்கிறவர்கள் சிறியவர்கள் என்று அந்தப் பாட்டி சொல்கிறாள். தமிழ்நாட்டில் ஈகையின் பெருமையைப் பல புலவர்கள் மிகச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். திருவள்ளுவர் அதை மிகச் சிறப்பித்துப் பேசுகின்றார். ஈபவனுக்கு வாங்குகிறவன் இருந்தால்தான் பெருமை. ஈதலினால் ஒருவனுக்கு இன்பம் வரவேண்டுமானால் அவனிடத்தில் ஏற்றுக் கொள்வான் ஒருவன் இருக்க வேண்டும். ஆகையால் ஒரு வகையில் பார்த்தால் ஈதலும் ஏற்றலும் ஒன்றாகவே நிகழ்வன என்று தெரியும்.

ஈதலும் இரத்தலும்

புறநானூற்றில் ஓர் இடத்தில் ஈதலையும் இரத்தலையும் பற்றி ஒரு புலவர் பேசுகிறார். இழிந்ததிலும் இழிந்தது இன்னது, உயர்ந்ததிலும் உயர்ந்தது இன்னது என்கிறார். நமக்கு இறைவன் உடம்பையும், அறிவையும், பிற வசதியையும் கொடுத்திருப்பதால் அவற்றைப் பயன்படுத்தி முயற்சி செய்து நல்ல வகையில் வாழவேண்டும். அப்படியின்றி முயற்சி செய்யாமல் சோம்பேறியாகத் திரிந்து, பொருள் ஈட்டாமல் பிறரிடத்தில் சென்று பல்லைக் காட்டிக் கொண்டு ஈ என்று சொல்லுதல் மிகவும் இழிந்த செயல்.

''ஈயென இரத்தல் இழிந்தன்று.''

அப்படி ஒருவன் மானத்தை விட்டுப் பிறர் இழிவுபடுத்துவதற்குரிய நிலையில் பல்லைக் காட்டி இரக்கும்போது செல்வம் உள்ளவன் ஈதலே முறை. அப்படியின்றி இல்லை என்று சொல்

கிறானே அவன் மிகவும் இழிந்தவன். அவனுடைய குணம் இழிந்த குணம்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று.

இப்படி இழிவையும் அதனினும் இழிவையும் சொன்ன புலவர், உயர்வையும் அதனினும் உயர்வையும் சொல்ல வரு கிறார். பிறருடைய குறைபாட்டைக் குறிப்பினால் தெரிந்து கொண்டு தமக்கு இறைவன் அருளிய செல்வம் பிறருடைய வறுமையை நீக்குவதற்கு என்று அறிந்து, தாமே வலிந்து சென்று, "இந்தா, இதைப் பெற்றுக்கொள்" என்று கொடுப்பது மிக உயர்ந்த இயல்பு.

"கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று."

இனி இந்த உயர்ந்த இயல்புக்கு மேல் மற்றோர் இயல்பைப் புலவர் பேசுகின்றார். கொள் என ஒருவன் கொடுக்கும் போது, "நான் இதனைப் பெற்றுக் கொள்ள மாட்டேன்" என்று மறுக் கிறானே, அவன் கொடுக்கும் உயர்ந்த குணம் படைத்தவனை விடச் சிறந்தவன்.

"கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்கிறார் அந்தப் புலவர். கொள் என்று கொடுப்பவனுக்கு முன்னாலே நின்று, கொள்ளமாட்டேன் என்று சொல்வதற்கு மனத்திண்மை வேண்டும். நம்பிக்கை வேண்டும். இறைவன் திருவருள் நமக்கும் ஒரு வழி காட்டும் என்ற உறுதி வேண்டும்.

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை
யாண்டும் அஃதொப்பது இல்"

என்று வள்ளுவர் சொல்கிறார். கொடுப்பதை வேண்டாம் என்று சொல்கிறவன் ஒரு வகையில் செல்வனாக விளங்குகிறான். நம்மிடம் பணம் இருந்தாலேயே மேலும் ஒருவன் கொடுத்தால் பணத்தின்மேல் பணத்தைச் சேர்த்துக் கொள்வதற்காக வாங்கு கிறோம். அப்படி இருக்க, நம்முடைய வறுமை தெரிந்து ஒருவன் கொடுக்கிறான் என்றால் அதனை மறுப்பது சாமானிய மனம் படைத்தவனாலே இயலாது. அதற்கு ஒரு தனி மனத் துணிவு

வேண்டும். ஆகையால் கொள் என்பதற்கு எதிரே கொள்ளேன் என்று சொல்வது மிகச் சிறந்த பண்பு என்று புலவர் சொன்னார்.

தொண்டர் பெரியர்

இனித் தொண்டர்களைக் கவனிக்கலாம். அவர்களுக்கு அருட்செல்வம் நிரம்பியிருக்கிறது. பொருட் செல்வத்தை உடையவர்கள் பிறருக்கு ஈந்தாலும் தமக்கே செலவழித்துக் கொண்டாலும் அந்தச் செல்வம் குறைந்துவிடும். மேலும் ஈட்டி நிரப்பிக் கொள்வார்கள். லாபநஷ்டக் கணக்குப் பார்ப்பதற்குரியது அவர்களிடத்திலுள்ள செல்வம். ஆனால் தொண்டர்களுடைய அருட் செல்வத்திற்குக் கேடு இல்லை; ஆக்கம் ஆகிய வருமானமும் இல்லை. அவர்கள் லாபநஷ்டம் இல்லாத செல்வர்கள்.

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்''

அருட் செல்வத்தினால் வரும் பாக்கியம் அது. அதனைப் பெற்ற தொண்டர்களிடத்தில் ஒரு பெரிய சக்கரவர்த்தி நேரில் நின்று, ''உமக்கு வேண்டுவனவற்றைக் கேளும். தருகிறேன். பொன் வேண்டுமா? அரசு வேண்டுமா?'' என்று சொன்னால் அவர்கள் எதுவும் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள்.

திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்யும்போது பொன்னும் மணியும் அங்கே கிடந்தன. அவற்றையெல்லாம் கல்லையும் மண்ணையும் போல அவர் ஒதுக்கிவிட்டார். இந்த உலகச் செல்வம் தொண்டர்களுக்குக் கவர்ச்சியைத் தருவது இல்லை. ஆதலின் பொருளாளன் ஒருவன் எத்தனை மிகுதியான பொருளை அவர்களுக்குக் கொடுக்க முற்பட்டாலும் அவர்கள் சற்றும் ஆசைப்படமாட்டார்கள்.

இது கிடக்கட்டும். அவர்கள் பிறவாமையில்லா முத்தியை அடையவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் ஆயிற்றே; அந்தத் தொண்டர்களிடத்தில் பரமேசுவரனே எதிரில் வந்து, ''இந்தா, மோட்சத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இந்த உலகத்தில் ஏன் இருக்கிறீர்கள்?'' என்று சொன்னால், மிகவும் அரிதிற் பெறுவதற்குரிய அந்த மோட்சமாகிய செல்வமும் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களாம். ''நாங்கள் எப்போதும் உன்னுடைய திருவடியைக் கும்பிட்டுக் கொண்டு அதனால் வருகின்ற

இன்பத்தை இப்பொழுதே அடைந்து கொண்டிருக்கிறோமே! இதைவிடப் பெரிய இன்பம் மோட்சத்தில் உண்டா? அது எங்களுக்கு வேண்டியதில்லை'' என்று சொல்கிற விறல் அவர்களுக்கு உண்டாம்.

''வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

என்று தொண்டர்களின் பெருமையைச் சேக்கிழார் சொல்கிறார். வீட்டைக் கொடுக்கிறவன் பரம தாதாவாகிய இறைவன். அவன் கொள் எனக் கொடுக்கிறபோது, கொள்ளேன் என்று சொல்கிற மன இயல்வு உடையவர்கள் கொடுக்கிறவனையும்விடப் பெரிய வர்கள் அல்லவா?

''கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று''

என்ற புலவருடைய வாக்கைக் கொண்டு பார்த்தால் இறைவன் பெரியவன் என்று புலப்படும், வீட்டை யாவருக்கும் கொடுப்ப தனாலே. ஆனால் அந்த வீட்டையும் கொள்ளேன் என்று சொல் கிற தொண்டர்கள் அவனைவிடப் பெரியவர்கள் என்றுதானே சொல்லவேண்டும்?

அடியார்களுக்குத் தங்களுடைய அன்பையும் நெஞ்சையும் ஆண்டவனுக்குக் கொடுக்கத் தெரியும். அவனிடத்தில் இருந்து இது தா என்று கேட்டு வாங்கத் தெரியாது. உண்மையில் இறைவன் அவர்களுக்கு ஏதேனும் அநுபவம் வழங்குகிறான் என்றால் அவர் களை அறியாமல் அவர்களிடத்தில் அது சேருகிறது. அவர்கள் நினைப்பின்றி அந்த இன்ப அனுபவம் நிகழ்கிறது. அநுபவத்தைத் தருகிறவன், அநுபவிக்கின்றவன், அநுபவம் என்று மூன்றையும் கடந்த நிலையில் அந்த அநுபவம் நேருகிறது. ஆகையால அந்த அநுபவ நிலையில் கொடுப்பார், வாங்குவார் ஆகிய வேற்றுமை இல்லை. திரிபுடியற்ற நிலை என்று சாஸ்திரம் இதனைக் கூறும்.

இத்தகைய தொண்டர்களிடையே சார்ந்தால் நாம் பெற வேண்டிய கதி கிடைக்கும் என்று அருணகிரியார் சொல்வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தம்மிடம் இருப்பது போதாமல் வேண்டும் வேண்டும் என்று மேலும் பிறரிடம் உள்ள செல்வத்தை இரந்து ஈட்டியும், தம்மிடத்துள்ள பொருளைக் கரந்து வைத்துக்

கொடுக்காமல் பாதுகாத்தும் சுற்றித் திரியும் மனிதர்களுடைய இயல்பைப் பார்த்து ஏமாந்து போகிற நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார்.

நிறைவுபெறாச் செல்வம்

ஆசை உண்டாகிவிட்டால் எவ்வளவு செல்வத்தைக் குவித்தாலும் திருப்தி உண்டாகாது. திருப்தி உண்டாகி விட்டால் எவ்வளவு சிறிய அளவில் பெற்றாலும் அதுவே போதும் என்ற மன அமைதி உண்டாகிவிடும். அந்த அமைதியை உண்டாக்கிக் கொள்வதற்குச் செல்வம் காரணம் ஆகமாட்டாது. அவ்வமைதியைக் குலைப்பற்கு வறுமையும் காரணம் ஆக மாட்டாது. இறைவன் திருவருள் பெற்றவர்களுக்கு வறுமை, செல்வம் ஆகிய இரண்டிலும் மன அமைதி இருக்கும். ஆகவே, ''தேர், கரி, பரி ஆகிய செல்வத்தைக் கண்டு ஏமாந்து போகிற நெஞ்சமே! அவைகள் எல்லாம் நீரில் எழுத்துப் போல மாய்ந்துவிடுமே! இதனை நீ உணர்ந்திலையே! உண்மையான அருட் செல்வத்தைப் பெற்றவர்கள் கூட்டமாகக் கூடுவார்கள். அவர்களைச் சார்ந்தால் மன நிறைவு பெறலாம். வேறு யாரைச் சார்ந்தாலும் அந்த நிறைவு கிடைக்காது. தொண்டர் குழாத்தைச் சாரின் அன்றி வேறு கதியே இல்லை'' என்று அருணகிரியார் உபதேசம் செய்கிறார்.

சார்பினால் வரும் சிறப்பு

ஒரு மனிதனுடைய குணத்தை அவனுடைய சார்பை உணர்ந்து தெரிந்து கொள்ளலாம். ''உன்னுடைய நண்பர் இன்னார் என்று சொல். உன் இயல்பைச் சொல்கிறேன்'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நாமாக முயற்சி செய்து நன்மை பெறாவிட்டாலும் சார்பின் வலிமையினால் பெறலாம். அதுபோல் நல்ல குடியில் பிறந்து, நல்ல பழக்கம் உள்ள மக்களோடு வாழ்பவன் மாறிப் போய்த் தீயவர்களோடு பழகினால் தீமையும் அவன் விரும்பாமல் அவனைச் சார்ந்து விடுகிறது.

தேரும், கரியும், பரியும் கொண்டு நாட்டை விரிக்க வேண்டுமென்றும், பொருளை விரித்துக் கொள்ளவேண்டுமென்றும் எப்போதும் திரிந்து கொண்டிருக்கிற அரசர்களைச் சார்ந்தால் நமக்கும் நம்முடைய பதவியையும்,செல்வத்தையும் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற நினைவே உண்டாகிறது. அரசன் வேறு

ஓர் அரசனோடு பகை கொண்டால் நாம் நம்மைப் போன்ற வேறு ஒரு மனிதனோடு பகை கொள்ள வேண்டுமென்ற நினைவு உண்டாகி விடுகிறது. அவன் ஒரு நாட்டைக் கைப்பற்ற வேண்டு மென்று நினைத்தால் நாம் ஒரு வீட்டைக் கைப்பற்ற வேண்டு மென்று நினைக்கிறோம். அவனும் தன் எண்ணம் கைகூட வில்லையே என்ற கவலையினால் தூங்காமல் இருக்கிறான். நாமும் அப்படியே இருந்துவிடுகிறோம். கடைசியில் அவர்கள் ஈட்டுகின்ற செல்வம் நீரில் எழுதிய எழுத்துப் போல மறைந்து விடுகிறது. நாம் ஈட்டிய செல்வமும் அப்படியே மறைந்துவிடு கிறது. நீரில் பெரிதாக எழுதலாம்; சிறிதாக எழுதலாம். இரண்டும் அழிந்து போகின்றன. அரசன் ரதகஜதுரக தாதிகளைக் கொண்டு பெரும்போர் செய்து சேர்த்துக் கொள்கிற செல்வம் ஒரு கணத்தில் போய்விடும். அவன் நாட்டை இழக்கின்ற அந்தக் கணத்தில் தன்னுடையது என்று சிறிதும் இல்லாமல் அவன் வறியவன் ஆகிவிடுகிறான்.

"குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

என்பது அரிய உண்மை. அப்படியே செல்வத்தைச் சேர்த்து வாழ்ந் தாலும் அந்தச் செல்வத்தை நுகர்கின்ற நாம் இந்த உடம்போடு இருக்கப் போவதில்லை. செல்வம் நிலையாதது என்பது மட்டும் அன்று. இந்த வாழ்க்கை நிலைக்குமா? அதுவும் நிலையாமல் இருப்பதே. செல்வம் எல்லாமே நிலையாதன; செல்லும் தன்மை உடையன. ஒருகால் நம்மை விட்டு நீங்காமல் இருப்பதாக இருந்தாலும் நாம் அந்தச் செல்வத்தை விட்டுப் போகின்ற நிலை வந்து விடும். இறந்து பட்டால் நம் வீடு, நம்முடைய நாடு, நம்முடைய செல்வம் எல்லாம் பிறருடையவை ஆகிவிடுகின்றன. விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவற்றைவிட்டு நாம் செல்ல வேண்டும்.

அருட் செல்வம்

ஆதலின் எல்லாக் காலத்தும் உதவுகின்ற, உயிரோடு ஒட்டி வருகின்ற, செல்வமாகிய அருட் செல்வத்தைச் சேர்த்துக் கொண் டால் எல்லாக் காலத்தும் குறைவின்றி நிறைவான இன்பத்தைத் தரும். அந்தச் செல்வத்தைத் தம்முடைய காணியாக்கிக் கொண்ட

வர்கள் தொண்டர்கள். அவர்களைச் சார்ந்தால் எல்லா இடத்திலும் எந்தப் பிறவியிலும் கவலையில்லாமல் வாழ இயலும். இதனை எண்ணியே, 'தொண்டர் குழாம் சாரில் கதியன்றி வேறிலை காண்' என்று அருணகிரியார் சொன்னார்.

4

இனி, யாருடைய தொண்டர் என்ற வினாவுக்கு விடை சொல்கிறார்.

> **சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன் தொண்டர்குழாம்**
> **சாரில் கதியன்றி வேறு இலை காண்.**

பதவியும் பணமும்

'சூரபன்பன் மேலும், கிரெளஞ்ச மலையின் மேலும் ஒளிவிடுகின்ற வேலை எறிந்தவன்' என்று முருகப் பெருமானை அடையாளம் காட்டுகிறார். நோயாளியினுடைய நோயை நன்கு அறிந்து, ''உனக்கு இதுதான் மருந்து. இதைத் தவிர வேறு பரிகாரம் இல்லை'' என்று சொல்லும் மருத்துவரைப் போல இந்தத் தொண்டர் குழாத்தைச் சாரில் கதியின்றி வேறு இல்லை என்று அடித்துப் பேசுகிறார்.

நம்முடைய பாவி நெடு நெஞ்சத்திற்கு வந்த நோய் என்ன? பதவி ஆசையும், பணத்தாசையும் கொண்டு தேரிலும், கரியிலும், பரியிலும் தண்டு தாவடி போய்த் திரிகின்றவர்களுடைய செல்வம் சிறந்தது என்று நினைந்து ஏமாந்து போகிறது இது. அவை நீரில் பொறி என்று அறிவதில்லை. பதவியையும், பணத்தையும் பெரியன என்று கருதுகிறது. இந்த நோய்க்கு மருந்து வேண்டாமை என்பது தான். அந்த மருந்தை வைத்திருக்கிறவர்கள் தொண்டர்கள். அது எப்படித் தெரிகிறது? அந்தத் தொண்டர் குழாம் போற்றுகின்ற மருத்துவத் தலைவன் இந்த நோயைத் தீர்ப்பதில் மிகவும் வல்லவன். சூரனையும் கிரெளஞ்ச மலையையும் தன்னுடைய கதிர்வேலால் எறிந்தவன்.

ஆயிரக்கணக்கான அண்டங்களை ஆண்டுகொண்டிருந்தான் சூரன். அத்தனை அண்டங்களுக்கும் ஏகபோக சக்கரவர்த்தியாக வாழ்வதில் அவனுக்கு ஒரு பெருமை இருந்தது. அந்த நிலை

போதாது என்று கருதி அமராவதியையும் ஆளவேண்டும், இந்திர பதவியையும் தான் பெறவேண்டும் என்று விரும்பினான். அதனால் தேவலோகத்தின் மேல் படையெடுத்து அமராவதியைத் தன் கீழ் அடக்கிக் கொண்டு, இந்திரனையும் அவன் பதவியிலிருந்து விலக்கி விட்டான். சுரேந்திரனை வென்று தான் அசுர சுரேந்திரனாக வேண்டும் என்று விரும்பினான். அவனிடம் எல்லாவிதமான பொருள்களும் குவிந்திருந்தன. நாம் பணத்தை மலை போலக் குவிக்க வேண்டுமென்று சொல்கிறோம். சிறந்த செல்வர்களைப் பற்றிப் பேசும்போது மலை மலையாய் ரூபாயைக் குவித்து வைத்திருக்கிறார் என்று சொல்வது உண்டு. அப்படி ஒரு செல்வன் எத்தனை சேர்த்துக் கொண்டாலும் சூரனைப் போல யாரும் சேர்த்துக் கொள்ள முடியாது. அவன் ஒரு வெள்ளி மலையையே துணையாக வைத்திருந்தான். அந்த வெள்ளி மலைதான் கிரௌஞ்சாசுரன். சூரனுடைய பதவியும், வெள்ளி மலையும் நல்லவர்களுக்கு மாறாக இருந்தன. அந்த இரண்டினாலும் அசுரலோகம் இன்பத்தை அடைந்தது; தேவ லோகம் துன்பத்தை அடைந்தது. பதவி ஆசையே உருவமாகிய சூரனும், பணத்தாசையே உருவாகிய கிரௌஞ்சனும் ஞானமே உருவமாகிய வேலினால் பொடிப்பட்டுப் போயினர்.

சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன்

முருகன்.

அருணகிரியார் இங்கே கதிர்வேலை எறிந்து பொடி யாக்கி னான் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவன் எறிந்தால் அவை நிச்சயமாக அழியும் என்பது தெளிந்த உண்மை. முருகன் வேலை எறிந்தான் என்றால் வேறு ஏது நிகழ முடியும்?

மூன்று வகைப் பக்தி

பக்தியில் மூன்று வகை உண்டு. குரு பக்தி, லிங்க பக்தி, சங்கம பக்தி என்று சொல்வார்கள். ஞானாசிரியனை அடுத்துப் பக்தி செய்வது குரு பக்தி. இறைவனிடத்தில் அன்பு செய்வது லிங்க பக்தி அல்லது சிவபக்தி. அடியார்களிடத்தில் அன்பு வைத்து ஒழுகுவது சங்கம பக்தி என்று சொல்வார்கள். சங்கமர்கள் –

தொண்டர்கள். அடியார்களுடைய கூட்டத்தில் வாழ்வதில் நமக்கு ஒரு லாபம் இருக்கிறது. அந்தக் கூட்டத்தில் வாழ்ந்தால் நமக்கு ஒரு குரு கிடைப்பான். குருவின் திருவருள் கிடைத்தால் இறைவன் திருவருள் பின்பு கிடைக்கும். எடுத்தவுடன் குரு நமக்குக் கிடைப்பதில்லை.

குருவை அடைய வேண்டுமானால் அதற்குச் சில பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவம் நம்மிடத்தில் உண்டாவதற்கு அடியார்கள் கூட்டத்தில் பழக வேண்டும். அதனால் நல்ல காரியம் செய்வதற்குரிய நிலை நம்மிடம் உண்டாகிறது. பிறருக்கு அந்த நிலை உண்டாவது இல்லை. கோபத்தினால் வீதியில் நின்று நூறு பேர் கேட்க யாரோ ஒருவரைத் திட்டுகிறோம். ஆனால் இறைவன் திருநாமத்தைப் பிறர் காது கேட்கும்படி சொல்வதற்கு நாணமாக இருக்கிறது. பழங்காலத்தில் நாணம் இருந்ததோ இல்லையோ, இப்போழுது நிச்சயமாக இருக்கிறது. நெற்றியில் திருநீறு அணிவதற்கு நாணம், ருத்திராட்சம் அணிந்து கொள் வதற்கு நாணம், கை தட்டிப் பஜனை செய்வதில் நாணம். இப்படி நம்முடைய நாணம் நல்ல செயல்களில்தான் உண்டா கிறது. இந்த நாணம் போகவேண்டுமானால் அடியார்களுடைய கூட்டத்தில் பழக வேண்டும். அப்படிப் பழகினால் அவர் களுடைய கூட்டுறவால் நாணம் கழன்று போய் நாமும் அவர் களைப் போல இறைவனைத் துதிக்கத் தொடங்குவோம்.

நம்முடைய குரல் நன்றாக இல்லையே என்று நாணம் உண்டாவது இயற்கை. தனியே பாடினால் நம்முடைய குரலின் குறைப்பாட்டைத் தெரிந்து கொள்கிறார்களே என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் இருபது பேர் சேர்ந்து பாடுகிற கூட்டத் தில் நாமும் சேர்ந்து மெல்ல மெல்லப் பாடினால் நம் குரலை யாரும் அறியமாட்டார்கள். தொண்டர் கூட்டத்தில் கலந்து கொண்டு பஜனை செய்யும் போது நம்மை அறியாமல் வாய் முணு முணுக்கிறது; பாடுகிறது. அதனால்தான், 'கூட்டத்தில் கோவிந்தா போடுவது' என்கிற பழமொழி வந்தது. நாணத்தைப் போக்குவதற்கும், சோம்பலைப் போக்குவதற்கும் அடியார்களுடைய தொடர்பு மிக அவசியம். அந்தத் தொடர்பு முறுக முறுகக் குருநாதனைத் தேடுகின்ற ஆர்வம் உண்டாகும். குருவினுடைய திருவருள் கிடைத்தால் ஆண்டவனது பேரருள் கிடைக்கும்.

கோயிலும் கும்பமும்

கோயில் கோபுரத்தின் மேல் ஒரு கும்பம் உச்சியில் இருக்கிறது. வெறும் கும்பத்தைத் தனியே நிறுத்த முடியாது. கும்பத்தைத் தாங்கக் கோபுரம் இருக்கிறது. அந்தக் கோபுரத்தைத் தாங்குகிற கட்டிடத்தைக் கட்டுவதற்கு அஸ்திவாரம் அவசியம். கும்பத்தைவிட அகன்றது கோபுரம். கோபுரத்தைவிட அகன்றது கட்டிடம். கட்டிடத்தைவிட அகன்றது அஸ்திவாரம்.

அஸ்திவாரம் இல்லாமல் கட்டிடம் எழும்போது, கட்டிடம் இன்றிக் கும்பமும் இல்லை. கும்பத்தைப் போல இருப்பது லிங்க பக்தி. கோபுரத்தைப் போல இருப்பது குரு பக்தி. அஸ்திவாரத்தைப் போல இருப்பது தொண்டர்களுடைய பக்தி. தொண்டரிடத்தில் பக்தியாகிய அஸ்திவாரம் நன்றாக அமையு மானால் குரு பக்தி, லிங்க பக்தியாகிய கட்டிடமும், கும்பமும் நன்றாக எழும். முந்திய இரண்டும் நல்லவகையில் அமைந்து விட்டால் நிச்சயமாக இறைவனுடைய பக்தியாகிய கும்பம் பிரகாசிக்கும். அதனால் திருவருள் கிடைக்கும்.

''அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே''

என்று தாயுமானவர் பாடுகின்றார்.

கங்கை இமாசலத்தில் தொடங்குகிறது. கடலில் போய்ச் சேருகிறது. கங்கையிலே போட்ட பொருள் கடலில் போய்ச் சேருவது போலத் தொண்டர் குழாத்துடன் சேர்ந்தால் மெல்ல மெல்லக் குருவின் திருவடியை அண்டி, இறைவன் அடியைச் சாரலாம். எப்படியாவது கங்கையின் தலைப்பைச் சார்ந்துவிட வேண்டும்.

''எங்கெங்கோ மயங்கிப் பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப் பட்டு அவற்றின் நிலையாமையை உணராத பாவி நெஞ்சமே! பல காலமாக எனக்கு அருகில் நின்று நெடுந்தூரம் ஆசை என்றும் கையை நீட்டிவிடுகின்ற நெடு நெஞ்சமே! பணமும் பதவியும் நீரில் எழுத்துக்கு நிகராகும். அவற்றைப் பெரியனவாக மதித்த அசுரர்களை ஞான வேலால் அழித்த எம்பெருமானுடைய தொண்டர்களைச் சார்ந்தாலன்றி உனக்கு ஒரு கதியும் இல்லை.

ஆகவே அவர்களைச் சார்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய் வாயாக'' என்று அருணகிரியார் இந்தப் பாட்டில் அறிவுறுத்துகிறார்.



சூரில் கிரியில் கதிர்வேல்
    எறிந்தவன் தொண்டர்குழாம்
சாரில் கதியன்றி வேறிலை
    காண்; தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில்
    திரிபவர் செல்வம் எல்லாம்
நீரில் பொறிஎன்று அறியாத
    பாவி நெடுநெஞ்சமே!

(சேனைகளோடு தாவி நடைபோட்டுச் சென்று தேரிலும் யானை யிலும் குதிரையிலும் திரிபவர் செல்வம் யாவும் நீரில் எழும் எழுத்துப் போன்றது என்று அறியாத பாவியாகிய நீண்ட நெஞ்சமே! சூரன்மேலும் கிரௌஞ்ச மலையின் மேலும் சுடர்விடும் வேலை வீசியவனாகிய முருகனுடைய தொண்டர் கூட்டத்தை சார்ந்தால் நல்ல கதி உண்டாகுமே யன்றி, வேறு சார்பு இல்லை.

சூர் – சூரன். கிரி – மலை; கிரௌஞ்சாசுரன். வேறு –வேறு புகலிடம். தண்டு – படை. தாவடி போதல் – தாவி அடியிட்டு நடத்தல். பொறி – எழுத்து.)

சொல்லின் செல்வன் பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

1. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை I
2. வாரியர் சொற்பொழிவில் கேட்டவை II
3. அஷ்டாவக்ரர் உபதேசங்கள்
4. விதுர நீதி
5. பர்த்ருஹரியின் நீதி சதகம்
6. சனத்குமாரரின் உபதேசங்கள்
7. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்
8. விபூதி, ருத்ராட்சம் மகிமை
9. மன உறுதியுடன் வாழ வைராக்கிய சதகம்
10. சித்தர்கள் சரித்திரம்
11. யட்சப் பிரச்னம் & பிரச்னோத்ர ரத்னமாலிகா
12. துணுக் துணுக்குகள்
13. சித்ரகுப்தன் கதைகள்
14. அருணகிரிநாதரின் ராமாயணம்
15. ஊருக்கு நல்லது சொல்வேன்
16. மஹா ஸ்வாமிகள் அருளிய ஆதிசங்கரர் வரலாறு
17. மனோபோதை
18. அர்த்தமுள்ள கண்ணதாசன் பாடல்கள் I
19. ஸ்ருங்கார சதகம்
20. நீதிக் கதைகள் பாகம் 1
21. நீதிக் கதைகள் பாகம் 2
22. அம்மன் சந்நதி அற்புதங்கள்

(மேலும் ஆசிகள் நம்மைத் தேடி வரும்)

‘தமிழ்க்கவி பூஷணம்’
‘திருமுருகாற்றுப்படை அரசு’
‘வாகீச கலாநிதி’

கி.வா. ஜகந்நாதன்

எழுதிய

அனைத்து நூல்களும் -

அவரது பேச்சுக்களின்

ஒலி நாடா

மற்றும்

குருந்தகடுகள் (பல)

வெளிவர

உள்ளது

என்பதை

மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்

கொள்கிறோம்

- பதிப்பகத்தார்

கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுயை தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிலளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.